# லெனின்



В. Ульянов (Ленин)

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின்

# தொழிலாளர் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதத்துக்கும் செக்டேரியனிஸத்துக்கும் எதிராக

கட்டுரைகள், சொற்பொழிவுகளின்
திரட்டு

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

**В. И. Ленин**

ПРОТИВ ДОГМАТИЗМА И СЕКТАНТСТВА
В РАБОЧЕМ ДВИЖЕНИИ

*на тамильском языке*

**V. I. Lenin**

AGAINST DOGMATISM AND SECTARIANISM
IN THE WORKERS MOVEMENT

*in Tamil*

முதல் பதிப்பு 1968
இரண்டாவது பதிப்பு 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-205}{014(01)-86}$ 342—86

## பொருளடக்கம்


'''இடதுசாரிக்' கம்யூனிஸம் ஒரு பிள்ளைப் பிராயத்துக் கோளாறு'' என்கிற நூலிலிருந்து . . . . 7

I. ருஷ்யப் புரட்சியின் உலகரீதியான குறி பொருளைப்பற்றி எந்த அர்த்தத்தில் நாம் பேச முடியும்? . . . . . . . . . 7

II. போல்ஷெவிக்குகளின் வெற்றிக்குரிய அடிப் படையான நிபந்தனைகளில் ஒன்று . . . 11

III. போல்ஷெவிஸத்தின் வரலாற்றில் முதன்மை யான கட்டங்கள் . . . . . . . . 15

IV. தொழிலாளர் இயக்கத்தினுள்ளே எந்த விரோதிகளை எதிர்த்து நடந்த போராட்டத் தில் போல்ஷெவிஸம் பலப்பட்டது, உருக்குப் பதம் பெற்றது? . . . . . . . . . 23

VIII. சமரசங்களே கூடாதா? . . . . . . 35

''புரட்சிகரமான துர்ச்சாகசவாதம்'' என்கிற கட்டுரை யிலிருந்து . . . . . . . . . . . 54

'''பூந்த்' ஸ்தாபனத்தினது தேசீயவாதத்தின் கடைசி வார்த்தை'' என்கிற கட்டுரையிலிருந்து . . . 71

''1904, ஜனவரி 15 (28)ல், ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியின் கவுன்சி லில் பிரேரிக்கப்பட்ட, கட்சிக்குள் அமைதியை மீண்டும் நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் பற்றிய தீர்மான மசோதா'' என்பதிலிருந்து . . . . 72

''கொரில்லாப் போர்'' என்கிற கட்டுரையிலிருந்து 74

''யோ. பி. பெக்கர், யோ. டித்ஸ்கேன், பி. எங்கெல்ஸ்,

கா. மார்க்ஸ் ஆகியோரும் மற்றவர்களும் ஸோர் கேக்கும் மற்றவர்களுக்கும் எழுதிய கடிதங்கள்'' என்ற நூலின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு வரைந்த முகவுரை என்பதிலிருந்து . . . . . . . . 76

''பகிஷ்காரத்தை எதிர்த்து'' என்கிற கட்டுரையிலிருந்து (ஒரு சோஷல்-டெமாக்ராட் பிரசாரகரின் குறிப்புக் களிலிருந்து) . . . . . . . . . . . 80

''மார்க்ஸீயமும் திரிபுவாதமும்'' என்கிற கட்டுரை யிலிருந்து . . . . . . . . . . . 83

'''புரொலித்தாரிய்' என்கிற பத்திரிகையின் விரிவான ஆசிரியர் குழுவினது மாநாட்டின் தீர்மானங்கள்'' என்பதிலிருந்து . . . . . . . . . . 85

I ஒட்ஸொவிஸம் பற்றியும் இறுதி எச்சரிக்கை வாதம் பற்றியும் . . . . . . . . 85

ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள கருத்து வேற்றுமைகள் . . . . . . . . . . 92

''தொழிலாளி வர்க்க ஒற்றுமை'' என்கிற கட்டுரை யிலிருந்து . . . . . . . . . . . . 101

''ஒற்றுமை'' என்கிற கட்டுரையிலிருந்து . . . . . 102

பி. கியெவ்ஸ்கிய்க்கு (யூ. பியாத்தக்கோவுக்கு) பதில் 103

''செயல்தந்திரங்கள் பற்றிய கடிதங்கள்'' என்கிற சிறு நூலிலிருந்து . . . . . . . . . . . 113

முதற்கடிதம். இன்றைய நிலைமை பற்றிய மதிப் பீடு . . . . . . . . . . . . . . 113

சமரசங்கள் பற்றி . . . . . . . . . . . 119

புரட்சிகரமான வாய்ச்சொல் . . . . . . . . 129

விநோதமானதும் உருமுரணானதும் . . . . . . 145

''இடதுசாரிச்'' சிறுபிள்ளைத்தனமும் குட்டிபூர்ஷ்வா மனோபாவமும் . . . . . . . . . . 158

''1919, நவம்பர் 22ல், கிழக்கத்திய மக்களினங்களினது கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களின் இரண்டாம் அகில

ருஷ்ய காங்கிரஸில் ஆற்றிய உரை'' என்பதிலிருந்து . . . . . . . . . . . . . . 204

தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுரைகளின் தொடக்க மசோதா. கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸுக்கு . . . . . . 211

''1920, ஜுலை 19ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸில் ஆற்றிய சர்வதேச நிலைமையும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் அடிப்படையான கடமைகளும் பற்றிய உரை'' என்பதிலிருந்து . . . . . . . . . . . 222

1920, ஜுலை 26ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸில் தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய குழுவின் அறிக்கை . . . . . 226

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம் . . . . . 235

ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது பத்தாம் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்ட கட்சி ஒற்றுமை பற்றிய தீர்மானத்தின் தொடக்க மசோதா . . . . . 240

ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது பத்தாம் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்ட நம் கட்சியில் சிண்டிகலிஸ்ட், அராஜகவாதத் திரிபைப் பற்றிய தீர்மானத்தின் தொடக்க மசோதா . . . . . . . . 246

1921, மே 28ல், ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் பத்தாம் அகில ருஷ்ய மாநாட்டின் முடிவில் ஆற்றிய உரை. . . . . . . . 252

1921, ஜுலை 1ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றும் காங்கிரஸில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் செயல்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு . . . . . . . . . . . . . 255

1921, ஜுலை 11ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றும் காங்கிரஸில் பங்கெடுத்த ஜெர்மனி, போலந்து, செகோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிக்

குழுக்களின் உறுப்பினர்களைக் கொண்ட மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் . . . . . 271

''அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டுவிழா'' என்பதிலிருந்து . . . . . . . . . . . . . 278

''தற்சமயத்திலும் சோஷலிஸத்தின் முழு வெற்றிக்குப் பிறகும் தங்கம் வகிக்கும் முக்கியத்துவம்'' என்பதிலிருந்து . . . . . . . . . . . . . 282

நி. இ. புகாரினுக்கும் கி. யெ. ஸினோவியேவுக்கும் எழுதிய கடிதம். . . . . . . . . . . 285

நாம் அதிக விலை கொடுத்துவிட்டோம் . . . . . 288

கி. யெ. ஸினோவியேவுக்கு எழுதிய கடிதம். என்பதிலிருந்து . . . . . . . . . . . . . 295

''பிராவ்தாவின்'' பத்தாம் ஆண்டுவிழா . . . . . 296

நமது புரட்சி. நி. ஸுகானவின் குறிப்புக்கள் சம்பந்தமாக . . . . . . . . . . . . . . 302

குறிப்புக்கள் . . . . . . . . . . . . . 308

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . . . 347

## "இடதுசாரிக்" கம்யூனிஸம்
## ஒரு பிள்ளைப் பிராயத்துக் கோளாறு

### என்கிற நூலிலிருந்து[1]

### I

### ருஷ்யப் புரட்சியின் உலகரீதியான குறிபொருளைப் பற்றி எந்த அர்த்தத்தில் நாம் பேச முடியும்?

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைவசமாக்கிக் கொண்ட (1917, அக்டோபர் 25 [நவம்பர் 7]) முதற் சில மாதங்களில், பிற்பட்ட நிலையிலுள்ள ருஷ்யாவுக்கும் மேலைய ஐரோப்பாவைச் சேர்ந்த முன்னேறிய நிலையிலுள்ள நாடுகளுக்கும் இடையேயுள்ள மாபெரும் வேறுபாடு, இந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியோடு சிறிதேனும் ஒத்திருக்காதபடி செய்து விடும் என்று தோன்றியிருக்கக் கூடும். இப்பொழுது, நமக்கு ஏற்கெனவே மிகக் கணிசமான அளவுக்குச் சர்வதேச ரீதியான அனுபவம் கிடைத்திருக்கிறது. நமது புரட்சியின் சில அடிப்படையான குணம்சங்கள் உள்நாட்டுக் குரியதான, ஒருதினுசாகத் தேசிய ரீதியான, ருஷ்யாவுக்கு மட்டுமே உரித்தான குறிபொருள் கொண்டவையல்ல, அவை சர்வதேச ரீதியான குறிபொருள் படைத்தவை என்று அது திட்டவட்டமாகக் காட்டுகிறது. சர்வதேச ரீதியான குறிபொருள் என்கிறபோது இந்தச் சொற்றொடரின் விரிவான அர்த்தத்தில் நான் பேசவில்லை—நமது புரட்சி எல்லா நாடுகளின் மீதும் பாதிப்பு செய்திருக்கிறது என்கிற அர்த்தத்திலே நமது புரட்சியின் அடிப்படையான குணம்சங்களில் ஒருசில மட்டுமின்றி, அனைத்தும், அதன் இரண்டாந்தரமான குணம்சங்களில் பலவும், சர்வதேச ரீதியான குறிபொருள் கொண்டவை. இந்தச் சொற்றொடரை அதன் மிகக் குறுகிய அர்த்தத்தில் எடுத்துக்கொண்டால், நமது நாட்டில் நிகழ்ந்துள்ளது சர்வதேச அளவிலே திரும்ப நிகழ்

வதன் சர்வதேச ரீதியான செல்லுபடித்தன்மை அல்லது வரலாற்று ரீதியான தவிர்க்கவியலாத்தன்மை என்பதே சர்வ தேச ரீதியான குறிபொருள் என்பதன் அர்த்தம் என்று வைத்துப் பார்த்தால், நமது புரட்சியின் சில அடிப்படை யான குணும்சங்களுக்கு இந்தக் குறிபொருள் கட்டாயம் உண்டு என்று ஒத்துக்கொண்டு திர வேண்டும்.

இந்த உண்மையை மிகைப்படுத்திச் சொல்வதும், அதை நம் புரட்சியின் சில அடிப்படையான குணும்சங்களுக்கு மட்டு மின்றிப் பொருத்துவதும் மிகப் பெரிய தவருகும் என்பது நிச்சயம். முன்னேறிய நாடுகளில் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்ற தற்குப் பிறகு விவகாரங்கள் அனேகமாக ஒரு கூரிய திருப்பம் கொள்ளும்—அதாவது, அதன் பிறகு ருஷ்யா விரைவில் முன்மாதிரியான நாடாக இருந்து வருவது போய் மீண்டும் ஒரு பிற்பட்ட (''சோவியத்'' அர்த்தத்தில், சோஷலிஸ்ட் அர்த்தத்தில் பிற்பட்ட) நாடாகிவிடும்—என்கிற விஷயத் தைப் பார்க்காமலிருப்பதும் தவருகும்.

எனினும், வரலாற்றில் இத்தருணத்தில் நிலவுகிற விவ ாரங்களின்படி, இந்த ருஷ்ய முன்மாதிரியானது எல்லா ாடுகளுக்கும் அவற்றின் நெருங்கிய தவிர்க்கவியலாத எதிர் ாலத்தைப் பற்றி ஒன்றை, மிக இன்றியமையாத ஒன்றை வெளிக்காட்டுகிறது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள முன்னேறிய தொழிலாளர்கள் வெகுகாலமாக இதைப் புரிந்து கொண் டிருக்கிருர்கள்; அவர்கள் புரிந்து கொண்டிருக்கிருர்கள் என் பதைவிடப் புரட்சிகரமான வர்க்க உள்ளுணர்வால் உணர்ந்து கிரகித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதே பெரும்பாலும் உண்மை. இதிலேதான், சோவியத் ஆட்சியின், போல்ஷெவிக் தத்துவத்தின், செயல்தந்திரங்களின்[2] சர்வதேச ரீதியான ''குறிபொருள்'' (அந்தச் சொல்லின் குறுகிய அர்த்தத்திலே) அடங்கியிருக்கிறது. ஜெர்மனியைச் சேர்ந்த காவுத்ஸ்கி, ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஆட்டோ பௌவர், பிரீட்ரிஹ் ஆட்லெர் போன்ற இரண்டாவது இன்டர்நேஷனலின்[3] ''புரட்சிகரமான'' தலைவர்கள் இதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்; எனவே, அவர்கள் பிற்போக்காளர்களாக வும் படுமோசமான சந்தர்ப்பவாதத்தையும் சோஷல்-துரோ கத்தையும் ஆதரித்துப் பேசுபவர்களாகவும் நிரூபித்துக்

கொண்டார்கள். இடையூடாகக் குறித்தால், 1919ம் ஆண்டில் வியென்னு நகரில் வெளியிட்ட (*Sozialistiche Bücherei*, Heft 11; Ignaz Brand*) ''உலகப் புரட்சி'' ("Weltrevolution") என்ற தலைப்பிட்ட அனுமதேயச் சிறு நூல் அவர்களுடைய சிந்தனைப் போக்கு முழுவதையும், அவர்களுடைய கருத்துக்களின் விரிவு முழுவதையும், சரியாகச் சொல்வதென்ருல் அவர்களுடைய மடமை, சடங்குப்பற்று, கயமை, தொழிலாளி வர்க்க நலன்களைக் காட்டிக் கொடுக்கும் துரோகம் ஆகியவற்றின் முழு ஆழத்தையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது; ''உலகப் புரட்சி'' என்கிற கருத்தைப் ''பாதுகாத்தல்'' என்கிற வேஷத்திலே இது நடக்கிறது.

எனினும், வேறொரு சமயத்தில்தான் நாம் இந்தப் புத்தகத்தைப் பற்றி மேலும் விபாரமாக விவாதிக்க வேண்டியிருக்கும். இங்கே இன்னும் ஒரேயொரு விஷயத்தை மட்டும் நாம் குறிப்பிடுவோம். வெகுகாலத்திற்கு முன், காவுத்ஸ்கி கட்சி மாறி ஆகாமல் மார்க்ஸீய வாதியாக இருந்த காலத்தில், இந்தப் பிரச்சினையை ஒரு வரலாற்ருசிரியர் என்கிற நிலையில் அணுகி, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சித் தன்மையானது மேற்கு ஐரோப்பாவுக்கு ஒரு முன்மாதிரியாகப் பயன்படக்கூடிய ஒரு நிலைமை எழுவதற்குரிய சாத்தியப்பாட்டை முன்கூட்டியறிந்திருந்தார். இது 1902ல் கண்டது; அப்போது காவுத்ஸ்கி புரட்சிகரமான ''இஸ்க்ரா''[4] பத்திரிகைக்கு ''ஸ்லாவ் மக்களும் புரட்சியும்'' என்கிற தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதினர். அந்தக் கட்டுரையில் அவர் எழுதியது இதுதான்:

''இன்றைய நாளில்'' (1848ன் நிலைமைக்கு மாருக) ''ஸ்லாவ் மக்கள் புரட்சிகரமான தேசங்களின் அணிவரிசையில் சேர்ந்து கொண்டதோடல்லாமல், புரட்சிகரமான சிந்தனையின், புரட்சிகரமான செய்கையின் மையம் மேலும் மேலும் ஸ்லாவ் மக்களின் தரப்புக்கு நிலைமாறிச் சென்று கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. புரட்சி மையம் மேற்கிலிருந்து கிழக்குக்கு நிலைமாறிச் செல்கிறது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் முதற்பாதியில் அது பிரான்சிலும்,

---

*—சோஷலிஸ்ட் நூலகம், பிரசுரம் 11; இக்னுத்ஸ் பிராண்ட்.—(ப-ர்.)

சில சமயங்களில் இங்கிலாந்திலும் இருந்தது. 1848ல் புரட்சிகரமான தேசங்களின் அணிவரிசையில் ஜெர்மனி சேர்ந்து கொண்டது... புரட்சியின் மையம் மேலும் நிலைமாறிச் செல்லும், அதாவது ருஷ்யாவுக்கு மாறிச் செல்லும், நிலைமையை நாம் நெருங்கி வருகிறோம் என்கிற கருத்தை உணர்த்தும்படி அமைந்த நிகழ்ச்சிகளோடு புதிய நூற்றாண்டு துவங்குகிறது.... மேற்கிலிருந்து எவ்வளவோ புரட்சி முன்முயற்சியை இரவலாகப் பெற்றுக் கொண்ட ருஷ்யா, ஒருக்கால் இன்று தானே புரட்சி ஆற்றலின் ஊற்றுக்கண்ணாக மேலைய ஐரோப்பாவுக்குப் பயன்படத் தயாராகிவிட்டது போலும். இன்று சுடர் விட்டெழுகிற ருஷ்யப் புரட்சி இயக்கம், நம்மிடையே பரவத் தொடங்கியிருக்கும் தொளதொளத்த பிலிஸ்டைன்வாதம், மிதவாத அரசியல் என்கிற பேயை விரட்டுவதற்கு வாய்த்த மிகச் சக்தி பெற்ற சாதனமாக ஒருவேளை நிரூபணமாகக் கூடும்; போராட்டத்துக்குரிய வேட்கையும் நமது மகத்தான இலட்சியங்கள்பால் உணர்ச்சி ததும்பும் பக்தியும் மீண்டும் ஒளிவீசிக் கொழுந்து விட்டெரியுமாறு அது செய்யவும் கூடும். வெறுமே மேலைய ஐரோப்பாவுக்கு ஒரு பிற்போக்கின், வரம்பிலா முடியாட்சி முறையின் அரணாக மட்டுமே ருஷ்யா இருந்துவந்த நிலைமாறி வெகுநாட்களாகிவிட்டது. இன்று விவகாரம் நேர் எதிராக மாறியிருக்கிறது என்று சொல்லக் கூடும். மேலைய ஐரோப்பா ருஷ்யாவில் ஒரு பிற்போக்கின், வரம்பிலா முடியாட்சி முறையின், அரண் ஆகிவருகிறது.... ஜார் மன்னனோடு சேர்த்து அவனுடைய நேச சக்தியாகிய ஐரோப்பிய மூலதனத்தையும் ஒரே சமயத்தில் எதிர்த்துத் தீர வேண்டிய கட்டாயம் இராதிருந்தால் ருஷ்யப் புரட்சிக்காரர்கள் ஜார் மன்னனை என்றோ வென்று தீர்த்திருப்பார்கள். இந்தத் தடவையாவது அவர்கள் இரண்டு எதிரிகளையும் முறியடிப்பதில் வெற்றி பெறுவார்கள் என்று நம்புவோமாக, இந்தப் புதிய ''புனிதக் கூட்டணி'' தனக்கு முந்தியிருந்தவற்றைவிட வேகமாக நொறுங்கிவிழும் என்று நம்புவோமாக. ஆனால், ருஷ்யாவில் இன்று நடந்துவரும் போராட்டம் எவ்வகையில் முடிந்த போதிலும் தியாகிகளின்—துர்ப்பாக்கிய வசமாக இவர்களை அது மட்டுமீறிப் பெருத்த எண்ணிக்கையில் உற்பத்தி செய்யும்—இரத்தமும் துன்பமும் வீணாகிவிடாது. சமுதாயப் புரட்சியின் துளிர்களுக்கு ஊட்டமளித்து முன்னைவிடச் செழுமையாகவும் வேகமாகவும் வளரச் செய்யும். மக்களின் வசந்தகால மலர்களை அழித்தொழிக்கும் ஒரு கொடிய பனிக்காற்று போல் 1848ல் ஸ்லாவ் மக்கள் இருந்தனர். இன்றோ பிற்போக்கு எனும் உறைபனியை உடைத்துத் தேசங்களுக்கு ஒரு புதிய இன்பகரமான வசந்தத்தைத் தன்னோடு தடுக்க முடியாதவாறு கொண்டுவரும் புயலாகும் படியான தலைவிதி அவர்களுக்கு ஒருவேளை வாய்த்துள்ளது

போலும்''. (கார்ல் காவுத்ஸ்கி. ''ஸ்லாவ் மக்களும் புரட்சியும்'', ''இஸ்க்ரா'' என்கிற ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டிக் பத்திரிகை, இதழ் 18, 1902, மார்ச் 10.)

பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் காவுத்ஸ்கி நேர்த்தியாக எழுதினர்!

## II

### போல்ஷெவிக்குகளின் வெற்றிக்குரிய அடிப்படையான நிபந்தனைகளில் ஒன்று

நமது கட்சியில் ஆகமிகக் கண்டிப்பான, உண்மையிலேயே எஃகுப் போன்ற கட்டுப்பாடு நிலவாதிருந்தால், நமது கட்சிக்குத் தொழிலாளி வர்க்கத்தின் மக்கள்திரள் முழுவதும், அதாவது பிற்பட்ட நிலையிலிருக்கிற பகுதிகளுக்குத் தலைமை தாங்கவோ உடன் அழைத்துச் செல்லவோ திறனுள்ள அதன் சிந்தனை புரிகிற, நேர்மையான, தியாக உணர்வுள்ள, செல்வாக்குள்ள எல்லா நபர்களும் தங்களுடைய முழுமையான தன்னலங்கருதாத ஆதரவை நல்கியிராவிட்டால், இரண்டரை ஆண்டுகளென்ன, இரண்டரை மாதங்களுக்குக்கூட போல்ஷெவிக்குகள் அதிகாரத்தை வகித்திருக்க முடிந்திராது என்பதை இப்போது அனேகமாக எல்லோரும் பெரும்பாலும் புரிந்து கொண்டிருக்கிறுர்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது புதிய வர்க்கட தன்னைவிட மேலான பலம் பொருந்திய பகைவனுகிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கெதிராக நடத்தும் ஒரு மிகமிகத் திண்மையான, மிகமிக ஈவிரக்கமற்ற யுத்தமேயாகும்; அந்த பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பு, அதிகார பீடத்திலிருந்து அது தூக்கியெறியப்பட்ட பிறகு (ஒரே ஒரு நாட்டில் நடந்திருந்த போதிலும்) பத்துமடங்கு அதிகமாகிறது; அதன் சக்தி உலக மூலதனத்தின் பலத்திலே மட்டும் அடங்கியதல்ல, அதன் சர்வதேசத் தொடர்புகளின் பலத்திலேயும் உறுதிப்பாட்டிலேயும் மட்டும் அடங்கியதல்ல, பழக்கவழக்கத்தின் பலத்திலேயும் சிறு அளவு உற்பத்தி முறையின் பலத்திலேயும் அது அடங்கியிருக்கிறது. ஏனெனில், துரதிர்ஷ்டவசமாக, உலகத்தில் சிறு அளவு உற்பத்திமுறை மிகமிக விரிவாக இன்னமும் பரவிக் கிடக்கிறது; இந்தச் சிறு அளவு உற்பத்தி முறை இடையருது, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், தன்னியல்பாக,

வெகுஜன அளவிலே, முதலாளித்துவத்தையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் தோற்றுவிக்கிறது. இக்காரணங்கள் அனைத்தும் பற்றித்தான், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாதது; விடாமுயற்சியும் கட்டுப்பாடும் உறுதியும் விட்டுக்கொடாமையும் சித்தத்தின் ஒற்றுமையும் காட்டத் தேவைப்படுகிற ஒரு நீண்ட, பிடிவாதமான, எதற்கும் துணிந்த, ஜீவமரணப் போராட்டம் இல்லாமல் பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்தி வெற்றிபெறுவது சாத்தியமில்லை.

மீண்டும் சொல்கிறேன்: பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது வெற்றி பெறுவதற்குரிய அடிப்படையான நிபந்தனைகளில் பாட்டாளி வர்க்கத்தின் முழுமையான மத்தியத்துவப்படுத்திய நிலையும் மிகமிகக் கண்டிப்பான கட்டுப்பாடும் ஒன்றாகும் என்பதை ருஷ்யாவில் வெற்றிபெற்ற பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவம் சிந்திக்க இயலாமல் போய்விட்டவர்களுக்குக்கூட, இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்பமற்றுப் போனவர்களுக்குங்கூட தெளிவாகக் காட்டியிருக்கிறது.

இது அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. என்றாலும், இதன் பொருள் என்ன, எந்த நிலைமைகளில் இது சாத்தியப்படும் என்கிற விஷயத்தில் போதுமான அளவுக்குச் சிந்தனை செலுத்தப்படுவதில்லை. சோவியத் ஆட்சியையும் போல்ஷெவிக்குகளையும் மதித்து அனுப்பப்பெறும் வாழ்த்துரைகளோடுகூடவே, புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவைப்படுகிற கட்டுப்பாட்டை அமைத்துக் கொள்ள போல்ஷெவிக்குகளுக்கு முடிந்தது ஏன் என்பதற்குரிய காரணங்களைப் பற்றி இன்னமும் அதிகமாக அடிக்கடி ஆழ்ந்த பகுப்பாராய்ச்சியும் நடத்துவது மேலாயிருக்கும் அல்லவா?

அரசியல் கருத்தின் ஒரு போக்கு என்கிற ரீதியிலும், ஒரு அரசியல் கட்சி என்கிற ரீதியிலும், 1903ம் ஆண்டிலிருந்து போல்ஷெவிஸம் இருந்து வருகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குத் தேவையான எஃகு போன்ற கட்டுப்பாட்டை மிகமிகக் கடினமான நிலைமைகளில் அது நிர்மாணித்து நிலை நிறுத்த முடிந்தது ஏன் என்பதை இருந்து வருகிற காலம் முழுவதையும் பற்றிய போல்ஷெவிஸத்தின் வரலாறு ஒன்று தான் திருப்திகரமாக விளக்க முடியும்.

மேலும், முதன்முதலாக இந்தக் கேள்வி எழுகிறது:

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தினது கட்சியின் கட்டுப் பாடு எவ்வாறு நிலைநிறுத்தப் பெறுகிறது? எவ்வாறு சோதிக்கப் பெறுகிறது? எவ்வாறு பலப்படுத்தப் பெறுகிறது? முதலாவதாக, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையின் வர்க்க உணர்வால், புரட்சியின்பால் அதற்குள்ள பக்தியினுல், அதன் விடாமுயற்சியால், தன்னலமறுப்பான தியாகத்தால், வீரத்தால். இரண்டாவதாக, உழைப்பாளி மக்களின் மிக விரிவான திரள்களுடன்—முதன்மையாகப் பாட்டாளி வர்க்கத்தோடு என்றபோதிலும் பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்களுடனுங்கூட— தன்னை இணைத்துக்கொள்கிற, நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற, சொல்ல விரும்பினுல் ஓரளவுக்குக் கலந்துவிடுகிற ஆற்றல் அது பெற்றிருப்பதினுல். மூன்ருவதாக, இந்த முன்னணிப்படை செயல்படுத்தும் அரசி யல் தலைமை சரியாயிருப்பதினுல், அதன் அரசியல் போர்த் தந்திரமும் செயல்தந்திரமும் சரியாயிருப்பதினுல்—அதற்கு முன்தேவையாக மிக விரிந்த மக்கள் திரள்கள் தமது சொந்த அனுபவத்தைக் கொண்டே அவை சரிதான் என்று ஒத்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த நிலைமைகள் இன்றி, பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்தி சமுதாயம் முழுவதையும் மாற்றி யமைக்கும் பணியை வகிக்கிற முன்னணி வர்க்கத்தின் கட்சி யாக உண்மையிலேயே இருக்கத் திறன்பெற்ற ஒரு புரட்சி கரமான கட்சியிலே கட்டுப்பாடு சாதிக்க முடியாது. இந்த நிலைமைகள் இன்றி, கட்டுப்பாட்டை நிலைநிறுத்த எடுக்கப் படும் எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போகின்றன, வெறும் வாய்ச்சொல்வீச்சாகவும் விகட வேடிக்கையாகவும் முடி கின்றன. மற்றெரு புறத்தில் பார்த்தால், இந்த நிலைமை கள் திடீரென்று ஒரே கணத்தில் தோன்றிவிடவும் முடியாது. நீண்ட முயற்சியாலும் கஷ்டப்பட்டுப் பெற்ற அனுபவத் தாலும் மட்டுமே அவை படைக்கப் பெறுகின்றன. அவற்றின் படைப்புக்கு ஒரு சரியான புரட்சிகரமான தத்துவம் வசதி செய்து கொடுக்கிறது; அந்தப் புரட்சிகரமான தத்துவமும், தன் முறைக்கு, ஒரு வறட்டுச்சூத்திரமல்ல; உண்மையிலேயே வெகுஜனரீதியான, உண்மையிலேயே புரட்சிகரமான ஒரு இயக்கத்தின் நடைமுறை நடவடிக்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு மட்டுமே அது இறுதியான வடிவம் பெறுகிறது.

1917-20 ஆண்டுகளில், முன்பென்றும் கண்டிராத கஷ்டமான நிலைமைகளில் போல்ஷெவிஸம் மிகமிகக் கண்டிப்பான மத்தியத்துவ நிலையையும் எஃகுக் கட்டுப்பாட்டையும் நிர்மாணித்து வெற்றிகரமாக நிலைநிறுத்த முடிந்தது என்றால் அதற்குக் காரணம் ருஷ்யாவின் வரலாற்றுரீதியான பல தனிச் சிறப்புக்களேயாகும்.

ஒரு புறத்தில், மார்க்ஸீயத் தத்துவம் என்கிற மிக உறுதியான அடிப்படையில் போல்ஷெவிஸம் 1903ம் ஆண்டில் தோன்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதின் உலக அனுபவம் மட்டுமன்றி, குறிப்பாக ருஷ்யாவின் புரட்சிகரமான சிந்தனையின் சுற்றித் திரிதல்கள், ஊசலாட்டங்கள், தவறுகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றின் அனுபவம் இந்தத் தத்துவம்தான், இந்த ஒரேயொரு தத்துவம்தான் சரி என்று நிரூபித்துள்ளது. ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக—சென்ற நூற்றாண்டில் சுமார் 1840களிலிருந்து 1890கள் வரை—ருஷ்யாவில் முன்னேறிய நிலையிலிருந்த சிந்தனை, என்றுமே கண்டிராத காட்டுமிரண்டித்தனமான, பிற்போக்கான ஜாராட்சி முறையால் ஒடுக்கப்பட்ட நிலையில், ஒரு சரியான புரட்சித் தத்துவத்தை ஆர்வத்தோடு தேடிவந்தது; இந்தத் துறையில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வெளிவந்த ''கடைசி வார்த்தை'' ஒவ்வொன்றையும் அற்புதமான சுறுசுறுப்புடனும் செவ்வியுடனும் பின்பற்றிச் சென்றது. உண்மையான துன்பத்தின் வழியேதான், அரை நூற்றாண்டு காலமாக முன்னென்றும் அனுபவித்தறியாத வேதனைகள், தியாகங்கள், முன்னென்றும் கண்டிராத புரட்சிகரமான வீரம், நம்பவொண்ணா ஆற்றல், பக்தி சிரத்தை மிகுந்த ஆராய்ச்சி, பயிற்சி, நடைமுறைச் சோதனை ஏமாற்றம், ஐரோப்பிய அனுபவத்தோடு சரிபார்த்து ஒப்பு நோக்குதல் ஆகியவற்றின் வழியேதான், மார்க்ஸீயம் என்கிற ஒரேயொரு சரியான புரட்சித் தத்துவத்திற்கு ருஷ்யா வந்துசேர்ந்தது. ஜாராட்சி விளைத்த நிர்ப்பந்தமான நாடு கடத்தல் காரணமாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலே ருஷ்யா வளமிக்க சர்வதேசத் தொடர்புகளையும் புரட்சி இயக்கத்தின் உலக வடிவங்கள், தத்துவங்கள் பற்றி மிக நேர்த்தியான செய்திகளையும் பெற்றது; இதற்கொப்பாக உலகில் வேறெந்த நாடும் பெற்றிருக்கவில்லை.

மற்றொரு புறத்தில், கருங்கற்பாறைபோன்ற இந்தத் தத்துவ அடிப்படையில் நிர்மாணிக்கப்பெற்று போல்ஷெவிஸம் பதினைந்து ஆண்டுகளினூடே (1903—1917) நடைமுறை வரலாற்றைக் கடந்து சென்றது. அனுபவ வளத்தில் அதற்கு இணையாக உலகில் வேறெங்கும் கிடையாது. ஏனெனில், இந்தப் பதினைந்தாண்டுக் காலத்தில் இந்தப் புரட்சி அனுபவத்திற்கு ஏறத்தாழ சமதையாக, இயக்கத்தின் பல்வேறு வடிவங்களின்—சட்டபூரவமானதும் சட்டவிரோதமானதும், அமைதியானதும் புயல்போன்றதும், தலைமறைவானதும் பகிரங்கமானதும், குறுகிய குழுக்களாகவும் வெகுஜன இயக்கமாகவும், பாராளுமன்ற ரீதியானதும் பயங்கரவாத ரீதியானதுமான வடிவங்களின்—துரிதமான, மாறுபாடான தொடர் நிகழ்ச்சிக்கு ஏறத்தாழச் சமதையாக வேறெந்த நாடும் எதையும் பெற்றிருக்கவில்லை. இவ்வளவு குறுகிய காலப்பகுதியில் நவீன சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களினதும் போராட்ட வடிவங்கள், சாயல்கள், முறைகள் ஆகியவற்றின் இத்துணை வளம் வேறெந்த நாட்டிலும் குவிக்கப் பெற்றதில்லை. மேலும், நாட்டின் பிற்பட்ட நிலையாலும் ஜாராட்சி நுகத்தடியின் கொடுமையாலும் இந்தப் போராட்டம் அசாதாரணமான வேகத்துடன் முதிர்ந்தது, அமெரிக்க, ஐரோப்பிய அரசியல் அனுபவத்தில் பொருத்தமாகக் கண்ட ''கடைசி வார்த்தையை'' மிகமிக ஆர்வத்துடனும் வெற்றிகரமாகவும் சிரணித்துக் கொண்டது.

## III

### போல்ஷெவிஸத்தின் வரலாற்றில் முதன்மையான கட்டங்கள்

புரட்சியின் தயாரிப்புக்குரிய ஆண்டுகள் (1903-05). ஒரு மாபெரும் சூறாவளி நெருங்கிக் கொண்டிருப்பது எங்கும் உணரப்படுகிறது. எல்லா வர்க்கங்களும் சூடேறிக் கொப்பளித்த நிலையிலும் தயாரிப்புச் செய்து கொள்ளும் நிலையிலும் இருக்கின்றன. நாட்டுக்கு வெளியே, அரசியலுக்காக நாடு கடந்தவர்களின் பத்திரிகைகள் புரட்சியின் எல்லா அடிப்படையான பிரச்சினைகளினுடையவும் தத்துவ அம்சங்களை விவாதிக்கின்றன. மூன்று முக்கியமான வர்க்கங்களின்,

மூன்று முதன்மையான அரசியல் போக்குகளின், அதாவது மிதவாத-பூர்ஷ்வாப் போக்கு, குட்டிபூர்ஷ்வா ஜனநாயகப் போக்கு (''சமூக-ஜனநாயகம்'', ''சமூகப்-புரட்சி'' என்கிற பெயர்களில் ஒளிக்கப்பட்டிருப்பவை), பாட்டாளி வர்க்க-புரட்சிப் போக்கு என்கிற போக்குகளின் பிரதிநிதிகள் வேலைத்திட்டம், செயல்தந்திரம் பற்றிய கருத்துக்கள் மீது மிகமிகக் கடுமையான போராட்டம் நடத்துவதின் மூலமாக நெருங்கிக் கொண்டிருக்கும் பகிரங்கமான வர்க்கப் போராட்டத்தை முன்னறிந்து ஆயத்தம் செய்கின்றனர். 1905-07லும், 1917-20லும் எந்தப் பிரச்சினைகள் மீது மக்கள் ஆயுதமேந்திய போராட்டம் நடத்தினார்களோ அந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் கரு வடிவத்தில் அந்தக் காலத்தியப் பத்திரிகைகளிலே பயில முடியும் (பயில வேண்டும்). இந்த முதன்மையான போக்குகளுக்கிடையே பலப்பல இடைநிலைப்பட்ட, மாற்ற நிலையிலுள்ள, பாதிவழிவந்த வடிவங்களும் நிச்சயமாக உண்டு. அல்லது, இன்னமும் சரியாகச் சொல்வதானால், உண்மையிலே வர்க்கப் போக்குகளாயுள்ள எல்லாத் தத்துவார்த்த-அரசியல் போக்குகளும், பத்திரிகைகளுக்கிடையிலும் கட்சிகளுக்கிடையிலும் பிரிவுகளுக்கிடையிலும் குழுக்களுக்கிடையிலும் நடக்கும் போராட்டத்தில் கெட்டியாகச் சமைந்து உருக்கொள்கின்றன; நிகழவிருக்கும் போராட்டங்களுக்குத் தேவையான தத்துவார்த்த-அரசியல் போர்க்கலங்களை இந்த வர்க்கங்கள் தயாரிக்கின்றன.

புரட்சி நிலவிய ஆண்டுகள் (1905-07)[5]. எல்லா வர்க்கங்களும் பகிரங்கத்தில் செயலாற்றத் தொடங்குகின்றன. எல்லா வேலைத் திட்ட, செயல் தந்திரக் கருத்துக்களும் மக்களின் நடவடிக்கையின் வழியே சோதிக்கப்பெறுகின்றன. வேலைநிறுத்தப் போராட்டம் அளவிலும் தீவிரத்திலும் உலகத்திலேயே எங்கும் நிகரற்றிருக்கிறது. பொருளாதார வேலைநிறுத்தம் அரசியல் வேலைநிறுத்தமாக வளர்கிறது. அரசியல் வேலைநிறுத்தம் புரட்சியெழுச்சியாக வளர்கிறது. தலைவன் என்கிற ரீதியில் பாட்டாளி வர்க்கத்துக்கும் வழிசெலுத்தப் பெற்றவன் என்கிற ரீதியிலே ஊசலாடும், நிலையற்ற விவசாயி மக்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் நடைமுறையிலே சோதிக்கப்படுகின்றன. போராட்டத்தில் தன்னியல்பான வளர்ச்சியிலே அமைப்பான சோவியத் வடிவம் பிறக்

கிறது. சோவியத்துக்களின் குறிபொருள் பற்றிய அக்காலத்திய சர்ச்சைகள் 1917-20ன் மகத்தான போராட்டத்தை முன் கூட்டியுணர்த்துகின்றன. பாராளுமன்ற ரீதியான போராட்ட வடிவங்களும் பாராளுமன்றத்திற்கப்பாற்பட்ட போராட்ட வடிவங்களும் மாறிமாறி வந்ததும், பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் செயல்தந்திரமும் பாராளுமன்றத்தில் பங்கு கொள்கிற செயல்தந்திரமும் மாறிமாறி வந்ததும், சட்டபூர்வமான போராட்ட வடிவங்களும் சட்டவிரோதமான போராட்ட வடிவங்களும் மாறிமாறி வந்ததும், அதே போல் அவற்றிடையே உள்ள பரஸ்பர உறவுகளும் தொடர்புகளும்—இவை யாவும் ஒரு வியக்கத்தக்க உள்ளடக்க வளத்தால் சிறப்புற்றுத் திகழ்கின்றன. அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகளை—மக்களுக்கும் தலைவர்களுக்கும், வர்க்கங்களுக்கும் கட்சிகளுக்கும்—கற்றுக் கொடுப்பதைப் பொறுத்த மட்டில் இந்தக் காலப்பகுதியைச் சேர்ந்த ஒரு மாதம் என்பது ''சமாதான பூர்வமான'', ''சட்டபூர்வமான'' வளர்ச்சியின் ஓராண்டு முழுமைக்குச் சமமாக இருந்தது. 1905ம் ஆண்டின் ''ஒத்திகை'' இன்றி 1917ன் அக்டோபர் புரட்சியின் வெற்றி சாத்தியமாயிராது.

பிற்போக்கு நிலவிய ஆண்டுகள் (1907-10). ஜாராட்சி வெற்றி பெறுகிறது. புரட்சிகரமான எல்லாக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. அரசியலுக்குப் பதிலாக மனச் சோர்வும் உறுதிக்குலைவும் பிளவுகளும் பூசலும் கட்சிமாறித் தனமும் இழிபொருள் போக்கும் வந்தடைகின்றன. தத்துவரீதியான ஆன்மீகவாதத்தின் பக்கம் சாய்தல் அதிகமாகிறது; புரட்சி எதிர்ப்பு உணர்ச்சிகளுக்கு ஒரு வேஷம் என்ற முறையில் மாயாவாதம் பயன்படுகிறது. எனினும் அதே சமயத்தில் இந்த மாபெரும் தோல்வியேதான் புரட்சிக் கட்சிகளுக்கும் புரட்சிகரமான வர்க்கத்துக்கும் ஒரு உண்மையான, மிகப்பயனுள்ள பாடத்தை, வரலாற்று ரீதியான இயக்க இயலில் ஒரு பாடத்தை, அரசியல் போராட்டத்தைப் புரிந்து கொள்வதிலும் அதை நடத்துவதற்குரிய திறமையிலும் கலையிலும் ஒரு பாடத்தை, போதிக்கிறது. கஷ்ட காலத்திலேதான் ஒருவனுடைய நண்பர்களை ஒருவன் அறிந்து கொள்கிறான். தோல்வியுற்ற படைகள் நன்கு கற்றுக் கொள்கின்றன.

வெற்றிபெற்ற ஜாராட்சி, ருஷ்யாவில் இருந்த பூர்ஷ்வா முறைக்கு முந்திய, பழைமைப் பிடிப்புள்ள வாழ்க்கை அமைப்புமுறையின் மீதமிச்சங்களை அழிப்பதைத் துரிதப் படுத்தும்படி கட்டாயப்படுத்தப் பெறுகிறது. பூர்ஷ்வாப் பாதையிலே நாட்டின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வேகத்தில் நடக்கிறது. முதலாளித்துவத்தைத் தவிர்ப்பதின் சாத்தியப் பாடு பற்றிய, வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட, வர்க்கத்தை விலக்கிய, பிரமைகள் பொடியாகிப்போகின்றன. வர்க்கப் போராட்டம் ஒரு புதிய, மேலும் துல்லியமான வடிவத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

புரட்சிகரமான கட்சிகள் தம்முடைய கல்வியை முழுமை யாக்கி முடித்துக் கொள்ள வேண்டும். அவை தாக்கக் கற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது, இந்த அறிவோடு, எப்படி ஒழுங்காகப் பின்வாங்குவது என்கிற அறிவையும் இணைத்துக் கொள்ள வேண்டும். முறையாகத் தாக்குவது எப்படி, முறை யாகப் பின்வாங்குவது எப்படி என்று அவை கற்றுக் கொண் டிராவிட்டால் வெற்றி சாத்தியமே இல்லை என்பதை அவை புரிந்துகொண்டு தீர வேண்டும்—புரட்சிகரமான வர்க்கத் துக்கு அதன் கசப்பான சொந்த அனுபவமே அதைப் புரிந்து கொள்ளுமாறு கற்றுக் கொடுக்கிறது. தோற்கடிக்கப்பட்ட எதிர்க்கட்சிகள், புரட்சிகரமான கட்சிகள், எல்லாவற்றை யும்விட போல்ஷெவிக்குகளே மிகமிக ஒழுங்காகப் பின்வாங் கினர்; மற்றவற்றைவிட தம் ''இராணுவத்திற்கு'' மிகக் கொஞ்சமான சேதத்துடனும், அதன் மையப்பகுதி மிக நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டும், (ஆழ்ந்த தன்மை, தீர்க்க முடியாத் தன்மை என்கிற விஷயத்தில்) மிகச் சொற்பமான குறிபொருள் உள்ள பிளவுகளோடும், மிகச் சொற்பமான உறுதிக் குலைவுடனும், மிகமிக விரிந்த அளவில், மிகமிகச் சரியான, தீவிரமான முறையிலே மீண்டும் வேலையைத் துவக்க மிக நல்ல நிலையிலும் இருக்கும் வகையில், மிக ஒழுங் காகப் பின்வாங்கினர். பின்வாங்கித் தீர வேண்டியிருப்பதைப் புரிந்துகொள்ளவோ, எப்படிப் பின்வாங்குவது என்பதை அறிந்து தீர வேண்டியிருப்பதைப் புரிந்துகொள்ளவோ, மிகமிகப் பிற்போக்கான பாராளுமன்றத்திலேயும் மிகமிகப் பிற்போக்கான தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவுச் சங்கங் களிலும் இன்ஷூரன்ஸ் ஸ்தாபனங்களிலும் அவைபோன்ற

பிற ஸ்தாபனங்களிலும் எப்படிச் சட்டபூர்வமாக வேலை செய்வது என்பதைக் கற்றுக்கொண்டு தீர வேண்டும் என் பதைப் புரிந்துகொள்ளவோ, மறுத்த புரட்சி வாய்வீச்சுக் காரர்களை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்திக் கட்சியிலிருந்து வெளியேற்றிய ஒரே காரணத்தால் தான் போல்ஷெவிக்கு கள் இதைச் சாதித்தார்கள்.

எழுச்சி நிலவிய ஆண்டுகள் (1910-14). முதலில் அது நம்பவொண்ணாத அளவுக்கு மெதுவாக இருந்தது; பிறகு, 1912ல் நடந்த வேனா நிகழ்ச்சிகளைத்[6] தொடர்ந்து, அது முன்னைவிடக் கொஞ்சம் வேகமாக இருந்தது. முன்பென்றும் கண்டிராத கஷ்டங்களைச் சமாளித்து வென்று போல்ஷெ விக்குகள் மென்ஷெவிக்குகளை — இவர்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் வகித்த பூர்ஷ்வா ஏஜெண்டுகள் என்கிற பாத்திரத்தை பூர்ஷ்வா வர்க்கம் முழுவதும் 1905க்குப் பிறகு முற்றாகப் புரிந்துகொண்டுவிட்டது; எனவே போல்ஷெவிக்கு களுக்கு எதிராக இவர்களை பூர்ஷ்வாக்கள் ஆயிரம் வழி களிலே ஆதரித்தார்கள்—பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள். எனினும், சட்டவிரோதமான வேலையோடு ''சட்டபூர்வமா யுள்ள சாத்தியப்பாடுகளைப்'' பயன்படுத்துவதையும் (இதை போல்ஷெவிக்குகள் கட்டாயமாக்கினர்) இணைத்துச் செயல் படும் சரியான செயல்தந்திரத்தை போல்ஷெவிக்குகள் பின் பற்றிச் சென்றிராவிட்டால் அவர்கள் இதைச் செய்வதில் என்றைக்கும் வெற்றி பெற்றிருக்க முடியாது. மிகப் பிற் போக்கான டூமாவுக்கு நடந்த தேர்தல்களில் போல்ஷெ விக்குகள் தொழிலாளர் தொகுதிகளின் முழு ஆதரவைப் பெற்றனர்.

முதலாவது ஏகாதிபத்திய உலக யுத்தம் (1914-17). மிகவும் பிற்போக்காயுள்ள ''பாராளுமன்றத்தோடு'' கூடிய சட்டபூர்வமான பாராளுமன்றவாதம் புரட்சிகரமான வர்க் கத்தின் கட்சியாகிய போல்ஷெவிக்குகளுக்கு மிகப் பயனுள்ள சேவை புரிகிறது. போல்ஷெவிக் சட்டமன்ற உறுப்பினர் கள் சைபீரியாவுக்கு அனுப்பப்படுகின்றனர்.[7] வெளிநாடு களில் சென்று தங்கியிருப்பவர்களின் பத்திரிகைகளில் எல் லாச் சாயல்களும் கொண்ட சோஷல்-ஏகாதிபத்தியமும், சோஷல்-இனவெறியும், சோஷல்-தேசபக்தியும், ஒத்தியைவு அற்றதும் ஒத்தியைவு உள்ளதுமான சர்வதேசீயவாதமும்,

சமாதானவாதமும், சமாதானவாதப் பிரமைகளைப் புரட்சிகரமாக நிராகரித்தலும், முழுமையாக வெளியிடப் பெறுகின்றன. இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த படித்த முட்டாள்களும் கிழவிகளும், ருஷ்ய சோஷலிஸ்ட் இயக்கத்தில் ''பிரிவுகள்'' மிகுதியாயிருப்பது பற்றியும் அவற்றிடையே நேர்ந்த கடுமையான சண்டையைப் பற்றியும் அகந்தையோடு இகழ்வாகப் பேசிப் பெருமை பாராட்டிக் கொண்டார்களே, அவர்கள்—எல்லா முன்னேறிய நாடுகளிலும் அவர்கள் பீற்றிக் கொண்ட ''சட்டபூர்வநிலைமைகள்'' அவர்களிடமிருந்து யுத்தத்தால் பறிக்கப்பட்டு விட்டபொழுது—ஸ்விட்ஸர்லாந்திலும் பிற பல நாடுகளிலும் ருஷ்யப் புரட்சிக்காரர்கள் சுதந்திரமாக (சட்டவிரோத நிலைமைகளில்) கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டதற்கும், சரியான கருத்துக்களைச் சுதந்திரமாக (சட்டவிரோத நிலைமைகளில்) வகுத்துக் கொண்டதற்கும்[8] ஏறத்தாழ சமமாகக்கூடச் செய்துகொள்ள முடியாமற்போயினர். இதனாலேதான் எல்லா நாடுகளையும் சேர்ந்த வெளிப்படையான சோஷல்-தேசபக்தர்களும் ''காவுத்ஸ்கிவாதிகளும்'' ஒருங்கே பாட்டாளி வர்க்கத்தின் படுமோசமான துரோகிகளாக நிரூபித்துக் கொண்டார்கள்[9]. 1917-20ல் போல்ஷெவிஸம் வெற்றிபெற முடிந்ததற்குரிய முதன்மையான காரணங்களில் ஒன்று, 1914ம் ஆண்டின் முடிவு தொடங்கி அது சோஷல்-இனவெறியினுடையவும் ''காவுத்ஸ்கிவாதத்தினுடையவும்'' கருத்துக்களின் (இத்துடன் பிரான்சில் லொங்கேவாதமும்[10], இங்கிலாந்தில் சுயேச்சையான தொழிற்கட்சியின் தலைவர்கள், ஃபேபியன்களின் தலைவர்கள்[11], இத்தாலியில் டுராட்டி முதலானோரின் கருத்துக்களும் பொருந்துகின்றன) புலைமையையும் வெறுக்கத்தக்க தன்மையையும் இழிதகைமையையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி வந்ததும்; பின்னால் மக்கள் திரள் தங்களுடைய சொந்த அனுபவத்தின் வழியாக போல்ஷெவிக் கருத்துக்கள் சரியே என்று மேலும் மேலும் ஏற்றுக் கொண்டதுமேயாகும்.

ருஷ்யாவில் இரண்டாம் புரட்சி (1917 பிப்ரவரியிலிருந்து அக்டோபர் வரை). ஜாராட்சியின் நம்பவொண்ணாத கிழட்டுத்தனமும் காலாவதியாகிவிட்ட தன்மையும் (துன்பமிக்க ஒரு யுத்தம் கொடுத்த அடிகளும் கஷ்டங்களும் துணை

வர) ஜாராட்சிக்கு எதிராக ஒரு நம்பவொண்ணுத அழிவுச் சக்தியைப் படைத்துவிட்டது. ஒரு சில நாட்களில், உலகில் வேறெந்த நாட்டையும்விட—யுத்த நிலைமைகளில்—அதிக சுதந்திரமான ஒரு ஜனநாயக பூர்ஷ்வாக் குடியரசாக ருஷ்யா மாறி விட்டது. மிகவும் ''கறுரான பாராளுமன்ற வகைப் பட்ட'' குடியரசுகளில் செய்வது போலவே, எதிர்க்கட்சித் தலைவர்கள், புரட்சிக் கட்சிகளின் தலைவர்கள், ஒரு அரசாங் கத்தை அமைக்கத் தொடங்கினர்; பாராளுமன்றத்தில்— ஒரு மிகமிகப் பிற்போக்கான பாராளுமன்றத்திலும்கூட— ஒருவன் எதிர்க்கட்சிக்குத் தலைவனுக இருந்தான் என்கிற விஷயம், பிற்காலத்தில், புரட்சியின் தலைவன் என்கிற பாத் திரத்தை வகிப்பதை அவனுக்கு எளிதாக்கியது.

ஒருசில வாரங்களில் மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் இரண்டாம் இன்டர்நேஷனலைச் சேர்ந்த ஐரோப்பிய வீரர்களின், மந்திரிப் பதவியேற்பு வாதிகளின்[12], பிற சந்தர்ப்பவாதக் கழிசடைகளின் எல்லாச் செயல்முறை களையும் நடத்தைப் பாங்குகளையும் வாதங்களையும் குதர்க்க வாதங்களையும் உட்கொண்டு விட்டார்கள். ஷீடெமன் போன்றவர்கள், நோஸ்கே போன்றவர்கள், காவுத்ஸ்கி, ஹில் பெர்டிங், ரென்னர், ஆஸ்டெர்லிட்ஸ், ஆட்டோ பௌவர், பிரிட்ஸ் ஆட்லெர், டுராட்டி, லொங்கே, இங்கிலாந்தின் ஃபேபியன்கள், சுயேச்சையான தொழிற்கட்சித் தலைவர்கள் ஆகியோரைப் பற்றி நாம் படிக்கிறவையாவும்—இவையனைத் தும் ஒரு பழைய பழக்கப்பட்டுப்போன பல்லவியைச் சுவை யின்றித் திரும்பப் பாடுவதாகவே, திரும்ப எடுத்துக்கொடுப் பதாகவே நமக்குத் தோன்றுகிறது (அதுவே உண்மையுங் கூட). இவையெல்லாம் நாம் ஏற்கெனவே மென்ஷெவிக்கு கள் விஷயத்தில் பார்த்துவிட்டவைதாம். வரலாறு ஒரு வேடிக்கை செய்து, ஒரு பிற்பட்ட நிலையிலுள்ள நாட்டைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளைக் கொண்டு பின்னுல் வரப் போகிற பல முன்னேறிய நாடுகளைச் சேர்ந்த சந்தர்ப்பவாதி களை முன்கூட்டிச் சுட்டிக்காட்டிவிட்டது.

சோவியத்துக்கள், சோவியத் ஆட்சி ஆகியவற்றின் பாத்திரம், குறிபொருள் பற்றிய பிரச்சினையில் இரண்டாம் இன்டர்நேஷனலின் வீரர்கள் எல்லோரும் திவாலாகி அவ மானப்பட்டுப் போய்விட்டார்களென்ருல், இரண்டாம் இன்

டர்நேஷனலை விட்டு இப்போது விலகிவிட்ட மூன்று மிக முக்கியமான கட்சிகளின் (அதாவது, ஜெர்மன் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக்[13], பிரெஞ்சு லொங்கேவாதிகள், பிரிட்டிஷ் சுயேச்சையான தொழிற்கட்சி) தலைவர்கள் இந்தப் பிரச்சினையில் தெற்றெனப் புலப்படும் வகையில் தம்மைத்தாமே அவமானப்படுத்திக்கொண்டு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறார்களென்றால் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகத்தின் விருப்புவெறுப்புகளுக்கு (''சோஷல்-டெமாக்ராட்டுகள்'' என்று தம்மை அழைத்துக் கொண்ட 1848ன் குட்டிபூர்ஷ்வாக்களின் உணர்ச்சிக்கு முற்றிலும் ஒத்தவாறு) அடிமைகளே என்று புலப்படுத்திக் கொண்டு விட்டார்களென்றால்—இவையனைத்தையும் நாங்கள் ஏற்கெனவே மென்ஷெவிக்குகள் விஷயத்தில் பார்த்து விட்டோம். வரலாறு ஒரு வேடிக்கை பண்ணிவிட்டது; ருஷ்யாவில், 1905ல், சோவியத்துக்கள் பிறந்தன; 1917 பிப்ரவரியிலிருந்து அக்டோபர் வரை சோவியத்துக்களின் பாத்திரத்தையும், அவற்றின் குறிபொருளையும் புரிந்துகொள்ள முடியாமல் திவாலாகிப் போன மென்ஷெவிக்குகள் அவற்றை மோசமான காரியத்துக்குப் பயன்படுத்தினர்; இப்போது சோவியத் ஆட்சி என்கிற கருத்து உலகம் முழுவதிலும் உருக்கொண்டு, எல்லா நாடுகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கத்திடையே அசாதாரணமான வேகத்தோடு பரவிவருகிறது. அதோடு, மென்ஷெவிக்குகளைப் போலவே இரண்டாம் இன்டர்நேஷனலின் பழைய வீரர்கள் எல்லாவிடங்களிலும் திவாலாகிக் கொண்டு வருகிறார்கள்—காரணம், சோவியத்துக்களின் பாத்திரத்தையும் குறி பொருளையும் அவர்கள் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சில முக்கியமான பிரச்சினைகளில் எல்லா நாடுகளுமே ருஷ்யா செய்ததையே தாமும் தவிர்க்க முடியாதபடி செய்து தீர வேண்டியிருக்கும் என்பதை அனுபவம் நிரூபித்துள்ளது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அடிக்கடி சந்திக்கிற கருத்துக்களுக்கு மாறாக, போல்ஷெவிக்குகள் பாராளுமன்ற (உண்மையிலே) பூர்ஷ்வா குடியரசை எதிர்த்துத் தங்களுடைய வெற்றிகரமான போராட்டத்தை மிக எச்சரிக்கையோடுதான் தொடங்கினார்கள், அதற்காக அவர்கள் செய்த தயாரிப்புகள் எவ்வகையிலும் சாமானியமானவையல்ல.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின் தொடக்கத்தில் நாம் அரசாங்கத்தை வீழ்த்துமாறு அறைகூவல் விடவில்லை: ஆனால், முதலில் சோவியத்துக்களின் உறுப்பினர் அமைப்பையும் உணர்ச்சிகளையும் மாற்றாமல் அதைத் தூக்கியெறிவது சாத்தியமேயில்லை என்று நாம் விளக்கிச் சொன்னோம். பூர்ஷ்வா பாராளுமன்றமாகிய அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று நாம் பிரகடனம் செய்யவில்லை. ஆனால், நாம் சொன்னது—ஏப்ரில் (1917) கட்சி மாநாடு முதற்கொண்டு கட்சியின் பெயரால் நாம் அதிகாரபூர்வமாகச் சொன்னது—அரசியல் நிர்ணய சபை இல்லாத பூர்ஷ்வாக் குடியரசைவிட அரசியல் நிர்ணய சபை இருக்கும் பூர்ஷ்வாக் குடியரசு மேல் என்றும், எனினும் எந்த பூர்ஷ்வா-ஜனநாயக, பாராளுமன்றக் குடியரசையும் விட, ''தொழிலாளர்கள், விவசாயிகளின்'' குடியரசு, சோவியத் குடியரசு, மேல் என்றும் தான். இப்படிப்பட்ட கவனமுள்ள, முழுமையான, எச்சரிக்கையான, நீடித்த தயாரிப்புகள் இன்றி நாம் 1917ம் ஆண்டு அக்டோபரில் வெற்றிபெற்றிருக்க முடியாது, அந்த வெற்றியை நிலைநிறுத்தியிருக்கவும் முடியாது.

## IV

### தொழிலாளர் இயக்கத்தினுள்ளே எந்த விரோதிகளை எதிர்த்து நடந்த போராட்டத்தில் போல்ஷெவிஸம் பலப்பட்டது, உருக்குப் பதம் பெற்றது?

முதலாவதாகவும் பிரதானமாகவும், சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நடந்த போராட்டத்திலே, 1914ல் இது திண்ணமாக சோஷல்-இனவெறியாக மாறித் திண்ணமாகப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து கொண்டது. இயல்பாகவே இது தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளே போல்ஷெவிஸத்தின் பிரதானமான எதிரியாக இருந்தது. சர்வதேச ரீதியிலே இதுவே இன்னமும் பிரதானமான எதிரியாக இருந்துவருகிறது. இந்த எதிரிமீது போல்ஷெவிக்குகள் அதிகமான கவனத்தைச் செலுத்தினார்கள், தொடர்ந்து செலுத்திவருகிறார்கள். போல்ஷெவிக் நடவடிக்கைகளின் இந்த அம்சம் இப்போது வெளிநாடுகளிலும்கூட ஓரளவுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

எனினும், தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளே

இருக்கிற போல்ஷெவிஸத்தின் மற்ெருரு எதிரியைப் பற்றி வேருக ஒன்று சொல்லித் தீர வேண்டும். அராஜகவாதத்தின் வாடை தாங்கிய, அல்லது அராஜகவாதத்திடமிருந்து கொஞ்சம் இரவல் வாங்கிக் கொண்ட, எந்த முக்கியமான அம்சத்திலாயினும் ஒரு முரணற்ற தொழிலாளி வர்க்கப் போராட்டத்திற்குரிய தலைமைகளுக்கும் தேவைகளுக்கும் பற்ருக்குறையாகப் போகிற குட்டிபூர்ஷ்வாப் புரட்சித் தன்மையை எதிர்த்து நீடித்த பல ஆண்டுக் காலத்தியபோராட்டத்தில் எவ்வாறு போல்ஷெவிஸம் வளர்ந்து, உருக்கொண்டு, உருக்குப்பதம் பெற்றது என்பது பற்றி வெளிநாடுகளில் போதிய அளவுக்கு இன்னமும் தெரிந்திருக்கவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் என்றைக்கும் ஒடுக்கப்பட்டும், தனது வாழ்க்கை நிலைமைகளில் மிக அடிக்கடி, நம்பவொண்ணுத விதத்தில் கடுமையான, வேகமான, நலிவும் நசிவும் அனுபவித்தும் உருகிற சிறு சொத்துடைமையாளன், சிறு எஜமானன் (அவன் பல ஐரோப்பிய நாடுகளில் மிக விரிவான, வெகுஜனரீதியான அளவிலே பிரதிநிதித்துவங்கொண்டுள்ள ஒரு சமுதாய வகை) எளிதாக அதீதமான புரட்சிகர நிலைகளுக்குப் போகிருன், ஆனல் விடாமுயற்சிக்கோ, ஒழுங்குத் தன்மைக்கோ, கட்டுப்பாட்டுக்கோ, உறுதியான நிலைக்கோ அவனுக்கு வல்லமையில்லை என்பதை மார்க்ஸீயம் தத்துவ ரீதியிலே நிலைநாட்டியிருக்கிறது; எல்லா ஐரோப்பியப் புரட்சிகளின், புரட்சி இயக்கங்களின் அனுபவமும் அதை முற்ருக உறுதிப்படுத்தியிருக்கிறது. முதலாளித்துவத்தின் பயங்கரங்களால் ''வெறிபிடித்த'' குட்டிபூர்ஷ்வா ஒரு சமுதாயத் தோற்றமே; அராஜகவாதம் போலவே அதுவும்எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் பண்புக்குறியாயுள்ளது. இப்படிப்பட்ட புரட்சிகர மனப்போக்கின் நிலையற்றதன்மை, அதன் மலட்டுத்தனம், திடீரென்று சரணுகதியடையும் நிலைக்கும் மாறிவிடும் அதன் இயல்பு, அக்கறையற்றுப் போவது, மனேராஜ்யத்தில் இறங்குவது, ஏதாவதொரு ''நாகரீகமான'' பூர்ஷ்வாப் போக்கை ''வெறியோடு'' மோகித்துத் திரிவது—இவையனைத்தும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனல் தத்துவரீதியாக, சூட்சுமமாக இந்த உண்மைகளை ஒத்துக்கொள்வதால் மட்டுமே புரட்சிக் கட்சிகள் பழைய தவறுகளிலிருந்து விடுபட்டு விடுகிறதில்லை, அந்தத் தவறுகள்

எதிர்பாராத தருணங்களில், கொஞ்சம் புதிய வடிவத்தில், இதுவரை அறிந்திராத வேஷங்களில் அல்லது சூழ்நிலைமை களில், தனிவகை—ஓரளவு தனிவகை—நிலைமையில் எப் போதும் தலைதூக்குகின்றன.

தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சந்தர்ப்பவாதரீதி யான பாபங்களுக்கு ஒரு வகையான தண்டனையாகவே அரா ஜகவாதம் அடிக்கடி இருந்தது. அந்த இரண்டு விகிருதிகளும் ஒன்றுடொன்று சார்ந்து பொருந்தி இருந்தன. ஐரோப்பிய நாடுகளில் நிலவுவதைவிட ருஷ்யாவில் மக்களுக்கிடையே அதிகக் குட்டிபூர்ஷ்வாத்தன்மை கொண்டிருந்த போதிலும் ருஷ்யாவில் இரண்டு புரட்சிகளின் (1905லும் 1917லும் நடந்தவை) தயாரிப்புகளிலும் சரி, அந்தப் புரட்சிகளின் போதும் சரி, அராஜகவாதம் வகித்த செல்வாக்கு ஒப்பு நோக்கில் அற்பமாகவேயிருந்ததில் அராஜகவாதத்தை எதிர்த்து ஈவிரக்கமின்றி, சமரசமின்றி, எப்போதும் போரா டிவந்திருக்கிற போல்ஷெவிஸத்துக்கு ஓரளவு பெருமை உண்டு. ''ஓரளவுக்கு'' என்று நான் செல்வதற்குக் காரணம், ருஷ்யாவில் அராஜகவாதத்தின் செல்வாக்கைப் பலவீனப் படுத்துவதில் அதை விட முக்கியமாக இருந்த காரணம், சென்ற காலத்தில் (பத்தொன்பதாம் நூற்றுண்டின் எழுபது களில்) அது அசாதாரணமான செழுமையுடன் வளரவும், முற்றிலும் பொய்யானதென்றும் தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்டும் தத்துவமாகப் பயன்பட முற்றிலும் தகுதி யற்றது என்றும் தன்னைக் காட்டிக் கொள்ளவும் அதற்கு வாய்ப்பு இருந்தது, என்பதே.

1903ல் போல்ஷெவிஸம் தோன்றிய காலத்தில், குட்டி பூர்ஷ்வா, அரை-அராஜகவாத (அல்லது அராஜகவாதத்துடன் சரசமாட வல்ல) புரட்சிவாதத்தை எதிர்த்து ஈவிரக்கமற்ற போராட்டம் நடத்தும் பரம்பரையை—இந்தப் பரம்பரை புரட்சிகரமான சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் எப்போதுமே இருந்துவந்துள்ளது; அது 1900-03ம் ஆண்டு களில், ருஷ்யாவில் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் ஒரு வெகுஜனக் கட்சிக்குரிய அடிப்படைகளை அமைத்து வந்த காலத்தில், குறிப்பாகப் பலமாயிருந்தது—அது மேற் கொண்டது. மற்றெல்லாக் கட்சிகளையும்விட குட்டிபூர்ஷ்வா புரட்சித்தன்மையை மேலாக வெளிப்படுத்திய கட்சியை,

அதாவது ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின்'' கட்சியை[14] எதிர்த்து நடந்த போராட்டத்தை போல்ஷெவிஸம் தன் கையில் எடுத்துக்கொண்டு தொடர்ந்து நடத்தியது. இந்தப் போராட்டத்தை அது மூன்று முக்கியமான விஷயங்கள்மீது நடத்தியது. முதலாவதாக, இந்தக் கட்சி மார்க்ஸீயத்தை நிராகரித்துவிட்டு, எந்த அரசியல் நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வதற்கு முன்பாக வர்க்கச் சக்திகளையும் அவற்றிடையேயுள்ள பரஸ்பர உறவுகளையும் பற்றி ஒரு கறாரான புறநிலை மதிப்பீடு செய்துகொள்வதின் தேவையைப் புரிந்துகொள்ளப் பிடிவாதமாக மறுத்தது (சக்தியற்றிருந்தது என்று சொல்வது அதைவிடச் சரியாயிருக்கும்). இரண்டாவதாக, இந்தக் கட்சி தன்னைத் தனிச்சிறப்பான ''புரட்சித்தன்மை கொண்டதாக'', அல்லது ''இடதுசாரித் தன்மை கொண்டதாகக்'' கருதிக்கொண்டது; காரணம், அது தனிநபர் பயங்கரவாதத்தையும், படுகொலையையும் அங்கீகரித்ததனுலாம்; இதை மார்க்ஸீயவாதிகளாகிய நாம் உறுதியாக நிராகரித்தோம். சந்தர்ப்பத்தகுதியின் அடிப்படையில் மட்டுமே நாம் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரித்தோம் என்பது உண்மை; ஆனல் மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் பயங்கரத்தையோ, அல்லது, பொதுப்படையிலே, வெற்றி பெற்ற புரட்சிகரமான கட்சி உலக முழுவதிலுமுள்ள முதலாளி வர்க்கத்தால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலைமையில் பயன்படுத்தும் பயங்கரத்தையோ, ''கோட்பாட்டு ரீதியிலே'' கண்டிக்க வல்ல நபர்களை, 1900-03ல் பிளெகானவ், அவர் ஒரு மார்க்ஸீயவாதியாக, புரட்சிக்காரராக இருந்த காலத்தில், கேலி செய்து எள்ளிநகையாடச் செய்துவிட்டார். மூன்ருவதாக, ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின், ஒப்புநோக்கில் அற்பமான, சந்தர்ப்பவாதப் பாபங்களை நகையாடுவது மிகவும் ''இடதுசாரித் தன்மைக் கொத்தது'' என்று சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் கருதினுர்கள் என்ற போதிலும் அவர்களேதான், உதாரணத்திற்குச் சொல்லப் போனல், நிலம் பற்றிய பிரச்சினை அல்லது பாட்டாளி வர்க்கசர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையில் அதே ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியைச் சேர்ந்த அதிதீவிர சந்தர்ப்பவாதிகளைக் காப்பியடித்தார்கள்.

நிற்க, புரட்சிகரமான ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸி

யானது (1900-03 காலத்திலேயே அந்தக் கட்சியிலிருந்து பேர்ன்ஷ்டைன் வெளியேற்றப்பட வேண்டுமென்று பிளெகானவ் கோரினர் என்பதையும், இந்த மரபை, எப்போதும் தொடர்ந்து பின்பற்றிய போல்ஷெவிக்குகள் லெனின் முற்றிய கயமையையும் இழிதகைமையையும் துரோகத்தையும் 1913ல் அம்பலப்படுத்தினர்கள் என்பதையும் குறித்துக் கொள்க)—புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் வெற்றிபெறுவதற்குத் தேவையான கட்சியாக அமையும் தகுதிக்கு மிகமிகச் சமீபத்தில் இருந்தது என்ற, நாம் எப்போதும் முன்வைத்து வந்துள்ள அபிப்பிராயத்தை வரலாறு இப்போது விரிவான, உலகு பரவிய அளவில் உறுதிப்படுத்திவிட்டது. இப்போது, 1920ல், யுத்தக் காலத்தையும் ஆரம்ப யுத்தபிற்காலத்தையும் சேர்ந்த மானக்கேடான தோல்விகள் நெருக்கடிகள் அனைத்திற்கும் பிறகு, எல்லா மேற்கத்தியக் கட்சிகளுக்குள்ளேயும் ஜெர்மன், புரட்சிகர சோஷல்-டெமாக்ரஸிதான் மிகச் சிறந்த தலைவர்களைத் தோற்றுவித்ததையும், மற்றவற்றைவிட வேகமாக மீட்சி பெற்று, குணமடைந்து, புதிய பலம் பெற்றதையும் யாவரும் தெளிவாகக் காண முடியும். ஸ்பார்ட்டாக்கிஸ்டுகள்[15] விஷயத்திலாயினும் சரி; காவுத்ஸ்கி, ஹில்பெர்டிங், லெடிபூர், கிரிஸ்பின் வகையருக்களின் சந்தர்ப்பவாதத்தையும் முதுகெலும்பற்ற தனத்தையும் எதிர்த்து இடையருது போராட்டம் நடத்திவரும் ஜெர்மன் சுயேச்சையான சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் இடது சாரி, பாட்டாளி வர்க்கப் பகுதி விஷயத்திலாயினும் சரி; இரண்டிலும் ஒருங்கே இதைக் காண முடியும். முழுமை பெற்று முடிந்த ஒரு வரலாற்றுக் காலப்பகுதிமேல், அதாவது பாரிஸ் கம்யூனிலிருந்து முதலாவது சோஷலிஸ்ட் சோவியத் குடியரசு வரையுள்ள காலப் பகுதிமேல், பொதுவாகக் கண்ணேட்டம் விட்டால், பொதுவானரீதியிலே அராஜகவாதத்தைப் பற்றிய மார்க்ஸீயத்தின் கருத்தோட்டம் மிகமிகத் திண்மையாகவும் தெளிவாகவும் தலைதூக்கித் தெரிகிறது. கடைசிப் பகுப்பாய்வின் முடிவாக, மார்க்ஸீயமே சரி என்று நிரூபிக்கப்பட்டது; பெரும்பாலான சோஷலிஸ்ட் கட்சிகளில் அரசு பற்றி நிலவிய சந்தர்ப்பவாதக் கருத்துக்களை அராஜகவாதிகள் சரியாகத்தான் எடுத்துக்காட்டினர்கள் என்ருலும், முதலாவதாக, இந்த

சந்தர்ப்பவாதம் அரசு பற்றிய மார்க்ஸின் கருத்துக்கள் திரித்துக் காட்டப்பட்டதோடு, ஏன் அமுக்கி மறைக்கப் பட்டதோடு கூடத்தான், சம்பந்தப்பட்டிருந்தது (அரசு பற்றிய வழக்கமான சோஷல்-டெமாக்ராட்டிக் கருத்தோட்டங் களின் சந்தர்ப்பவாதத்தை மிகத் துல்லியமாகவும் கூராக வும் பட்டவர்த்தனமாகவும் தெளிவாகவும் அம்பலப்படுத்தி எழுதிய எங்கெல்ஸின் கடிதத்தை பெபெல் முப்பத்தாறு ஆண்டுகள், 1875லிருந்து 1911 வரை மறைத்துவைத்திருந் தார் என்பதை ''அரசும் புரட்சியும்'' என்கிற என்னுடைய நூலில் எடுத்துக்காட்டினேன்); இரண்டாவதாக, ஐரோப்பா விலும் அமெரிக்காவிலும் உள்ள சோஷலிஸ்ட் கட்சி களிடையே மிகவும் மார்க்ஸீயத் தன்மை பெற்ற போக்கு களிடையேதான் இந்தச் சந்தர்ப்பவாதக் கருத்துக்களைத் திருத்திக் கொள்வதும், சோவியத் ஆட்சி பூர்ஷ்வா பாராளு மன்றக் குடியரசைவிட மேலானது என்கிற நிலையை அங்கீ கரிப்பதும் மிகத் துரிதமாகவும் விரிவாகவும் நடைபெற்றன என்று சொல்லித் தீர வேண்டும்.

இரண்டு சந்தர்ப்பங்களில், போல்ஷெவிஸம் தன் கட்சிக் குள்ளேயே ''இடதுசாரித்'' திரிபுகளை எதிர்த்து நடத்தி வந்த போராட்டம் குறிப்பிடத்தக்கவாறு பெருமளவில் இருந்தது: 1908ம் ஆண்டில், ஒரு மிகமிகப் பிற்போக்கான ''பாராளுமன்றத்திலும்'', மிகமிகப் பிற்போக்கான சட்டங் களால் குறுக்கப்பட்டு வந்த சட்டபூர்வமான தொழிலாளர் சங்கங்களிலும் பங்கெடுத்துக்கொள்வதா கூடாதா என்கிற பிரச்சினை மீது; மீண்டும் 1918ல் (பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தம்), எந்த ஒரு ''சமரசமும்''[16] செய்துகொள்ள அனுமதிக்க முடியுமா முடியதா என்கிற பிரச்சினை மீது.

1908ல் ''இடதுசாரி'' போல்ஷெவிக்குகள் ஒரு மிகமிகப் பிற்போக்கான ''பாராளுமன்றத்தில்'' பங்கெடுப்பதின் அவ சியத்தைப் புரிந்துகொள்ளப் பிடிவாதமாக மறுத்ததற்காக நமது கட்சியிலிருந்து வெளியே தள்ளப்பட்டனர். ''இடது சாரிகள்''—இவர்களிலே பல நேர்த்தியான புரட்சிக்காரர் கள் இருந்தனர், பின்னால் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்கிற பட்டத்தைச் சிறப்போடு தாங்கினர் (இன்றுங்கூடத் தாங்கி வருகின்றனர்)—குறிப்பாக 1905ல் பகிஷ்காரத்தின் வெற்றிகரமான அனுபவத்தைத் தங்களுக்கு ஆதாரமாகக்

கொண்டார்கள். 1905 ஆகஸ்டில், ஒரு ஆலோசக அந்தஸ்து கொண்ட ''பாராளுமன்றத்தைக்''[17] கூட்டு வதை ஜார் மன்னன் அறிவித்தபோது, எல்லா எதிர்க்கட்சிகளினதும் மென்ஷெவிக்குகளினதும் எதிர்ப்புக்கிடையே பகிஷ்காரம் செய்யக் கோரி போல்ஷெவிக்குகள் அறைகூவல் விடுத்தனர்; உண்மையிலே அந்தப் ''பாராளுமன்றம்'' 1905 அக்டோபர் புரட்சியால்[18] அடித்துச் செல்லப்பட்டுப் போயிற்று. அந்தச் சமயத்தில் பகிஷ்காரம் செய்தது சரி என்று நிரூபணமாயிற்று; காரணம், பிற்போக்கான பாராளுமன்றங்களிலே பங்கெடுக்காமலிருப்பது பொதுவாகவே சரி என்பதனாலல்ல; வெகுஜன வேலை நிறுத்தங்கள் ஒரு அரசியல் வேலைநிறுத்தமாகவும் அரசியல் வேலைநிறுத்தம் புரட்சிகரமான வேலை நிறுத்தமாகவும், பிறகு ஒரு புரட்சி எழுச்சியாகவும் வேகமாக மாறிக் கொண்டு சென்ற புறநிலைமையை நாம் சரியாக அளந்து அறிந்திருந்ததினாலேதான். மேலும், அந்தச் சமயத்தில், முதன்முதலாக வரும் பிரதிநிதித்துவமுள்ள அரசியல் சபையைக் கூட்டுவதை ஜார்மன்னனிடம் விட்டுவிடுவதா, அன்றி அதைக் கூட்டுவதைப் பழைய ஆட்சியிடம் இருந்து பறித்துக்கொள்ள முயல்வதா என்கிற பிரச்சினையைக் குறித்துத்தான் போராட்டம் நடந்தது. புறநிலைமை அதே போன்று இருக்கும் என்று எந்தவிதமான நிச்சயமும் இல்லாதபோது, இருக்க முடியாமலிருக்கும்போது, அதே போன்ற ஒரு போக்கும் வளர்ச்சி வேகமும் இருக்கும் என்பதற்கு நிச்சயம் ஏதும் இல்லாத போது, பகிஷ்காரம் சரியல்ல என்றாகிவிட்டது.

1905ல் போல்ஷெவிக்குகள் ''பராளுமன்றத்தைப்'' பகிஷ்கரித்தது புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கு உயர்வான மதிப்புள்ள அரசியல் அனுபவத்தை வழங்கி வளங் கூட்டித் தந்தது, சட்டபூர்வமான போராட்ட வடிவங்களோடு சட்டவிரோதமான போராட்ட வடிவங்களையும், பாராளுமன்றப் போராட்ட வடிவங்களோடு பாராளுமன்றத்திற்கப்பாற்பட்ட போராட்ட வடிவங்களையும் இணைப்பதிலே சில சமயங்களில் பாராளுமன்ற வடிவங்களை நிராகரிப்பதும் பயனுள்ளது, அவசியமானதுங்கூட என்று புலப்படுத்தியது. ஆனால் இந்த அனுபவத்தைக் குருட்டுத்தனமாக, காப்பியடித்தமாதிரி, விமர்சனாலோசனையின்றி, பிற சூழ்நிலைகளுக்குப் பிற நிலைமைகளுக்கும் பொருத்திச் செயல்

படுத்துவது உண்மையிலே ஒரு மிகப்பெரிய தவருகும். எனினும், 1906ல் போல்ஷெவிக்குகள் டூமாவைப் பகிஷ்கரித்தது ஒரு தவறுதான்; சிறியது, சுலபமாகத் திருத்திக் கொள்ளத் தக்கது என்ருலும் அது ஒரு தவறுதான்*. 1907லும், 1908லும், அதன் பின்வந்த ஆண்டுகளிலும் டூமாவைப் பகிஷ்காரம் செய்தது ஒரு பிரமாதமான தவருகும், திருத்துவதற்குக் கஷ்டமான தவறுமாகும். காரணம், ஒரு புறத்தில், புரட்சியின் எழுச்சியலை மிகவேகமாக உயரும், அது ஒரு புரட்சியெழுச்சியாக மாறும் என்று எதிர்பார்க்க முடியவில்லை என்பதோடு, மற்ருெரு புறத்தில், பூர்ஷ்வாக்கள் முடியாட்சியைப் புதுப்பிப்பதையொட்டி வந்த வரலாற்றுக் காலப்பகுதி முழுவதிலும் சட்டபூர்வமான நடவடிக்கைகளோடு சட்டவிரோதமான நடவடிக்கைகளை இணைப்பது அவசியமாயிற்று. இன்று, இந்த முடிவுற்ற வரலாற்றுக் காலப்பகுதியை நாம் திரும்பிப் பார்க்கையில்—பின்வந்த காலப்பகுதிகளோடு அதற்குள்ள தொடர்பு இப்போது தெட்டத் தெளிவாகியிருக்கையில்—, சட்டபூர்வமானதும் சட்டவிரோதமானதுமான போராட்ட வடிவங்களை இணைப்பது கட்டாயக் கடமையாகும், ஒரு மிகவும் பிற்போக்கான பாராளுமன்றத்திலும் பிற்போக்கான சட்டங்களால் குறுக்கப்பட்ட பிற பல ஸ்தாபனங்களிலும் (நோய் நிவாரண சங்கங்கள் முதலியன) பங்கெடுத்துக் கொள்வது கட்டாயக் கடமையாகும் என்கிற கருத்தை போல்ஷெவிக்குகள் மிகக் கடுமையான போராட்டத்தில் நிலைநிறுத்தியிருந்திராவிட்டால் 1908-14ல் போல்ஷெவிக்குகள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான கட்சியின் உறுதியான வைரப் பகுதியை (பலப்படுத்துவதோ, வளர்ப்பதோ, புதுபலம் கூட்டுவதோ ஒரு பக்கம் இருக்க) பாதுகாத்திருக்கவே முடிந்திராது.

1918ல் விஷயங்கள் ஒரு பிளவுவரை செல்லவில்லை.

---

* தனிநபர்களுக்குப் பொருந்தக்கூடியது அரசியலுக்கும் கட்சிகளுக்கும்—தக்க மாற்றங்களுடன்—பொருந்தும். தவறே செய்யாதவனே விவேகி என்பதல்ல. அப்படிப்பட்ட மனிதர்கள் இல்லை, இருக்கவும் முடியாது. மிகவும் பிரமாதமான தவறுகளைச் செய்யாமலும், அவற்றைச் சுலுவாகவும் துரிதமாகவும் திருத்திக் கொள்ளத் தெரிந்தும் உள்ளவனே விவேகியாவான்.

அந்தச் சமயத்தில் ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் நம் கட்சிக்குள்ளே ஒரு தனித்த குழுவை அல்லது ''பிரிவை'' மட்டுமே அமைத்தார்கள்; அதுவும் வெகுநாளைக்கு இல்லை. அதே ஆண்டாகிய 1918ல் ''இடதுசாரிக் கம்யூனிஸத்தின்'' மிகப் பிரபலமான பிரதிநிதிகள், உதாரணமாக ராதேக்கும் புகாரினும், தங்களுடைய தவற்றைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்கள். பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தம் ஏகாதிபத்திய வாதிகளுடன் செய்துகொண்ட ஒரு சமரசம், கோட்பாடு ரீதியிலே அது அனுமதிக்கவொண்ணாதது, புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்குத் தீங்கானது என்று அவர்களுக்குத் தோன்றியது. உண்மையிலே அது ஏகாதிபத்தியவாதிகளோடு செய்துகொண்ட ஒரு சமரசம் தான்; ஆனால், அது அந்தச் சூழ்நிலைமைகளில், செய்து தீர வேண்டியதாயிருந்த ஒரு சமரசமாகும்.

இன்று, பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட காலத்திய நமது செயல்தந்திரங்களை சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் (உதாரணத்துக்குச் சொல்கிறேன்) தாக்கிப் பேசுவதை நான் கேட்கும்போதோ, என்னோடு தோழர் லான்ஸ்பரி பேசிக் கொண்டிருக்கும்போது, ''போல்ஷெவிக்குகள் சமரசம் செய்துகொள்வது அனுமதிக்கத் தக்கதே என்றால் நாங்கள் சமரசம் செய்து கொள்வதும் அனுமதிக்கத் தக்கதேயாகும் என்று எங்களுடைய பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்கிறார்கள்'' என்று அவர் சொல்கிறபோதோ, முதலில் ஒரு எளிமையான, ''ஜனரஞ்சகமான'' உதாரணத்தைக் கொடுத்துவிட்டு நான் வழக்கமாகப் பதிலளிப்பேன்:

உங்களுடைய மோட்டார் காரை ஆயுதந்தரித்த திருடர்கள் வழிமறித்துக் கொண்டனர் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களிடம் உங்களிடமுள்ள பணத்தையும், அடையாளச் சீட்டு, ரிவால்வர், கார் ஆகியவற்றையும் நீங்கள் கொடுத்துவிடுகிறீர்கள். அதற்குப் பிரதியாகத் திருடர்களிடமிருந்து உங்களுக்கு மீட்சி கிடைக்கிறது. இது சந்தேகமின்றிச் சமரசம். "Do ut des"* (அமைதியாக விலகிப்போவதற்கு எனக்கு வாய்ப்பு ''நீ கொடுப்பாய்'' என்பதற்காக

* ''நீ கொடுத்தால் நான் கொடுப்பேன்''.—(ப-ர்.)

உனக்குப் பணமும் ரிவால்வரும் காரும் ''நான் கொடுக்கிறேன்''). இப்படிப்பட்ட ஒரு சமரசம் ''கோட்பாடு ரீதியிலே அனுமதிக்கவொண்ணுதது'' என்று சொல்லக்கூடிய, அல்லது சமரசம் செய்து கொள்கிறவனைத் திருடர்களுக்கு உடந்தையான கூட்டாளி (திருடர்கள் காரையும் ரிவால்வரையும் மேற்கொண்டு நடத்தும் திருட்டுகளுக்குப் பயன்படுத்தக்கூடும் என்ருலும்) என்று சொல்லக்கூடிய புத்தி சுவாதீனமுள்ள ஒரு மனிதனைக் கண்டுகொள்வது கஷ்டமே. ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களுடன் நாம் செய்து கொண்ட சமரசம் இவ்வகைப்பட்ட ஒரு சமரசமேயாகும்.

ஆனால், ருஷ்யாவிலுள்ள மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும், ஜெர்மனியிலுள்ள ஷீடெமன் (பெருமளவுக்குக் காவுத்ஸ்கி) வகையருக்களும், ஆஸ்திரியாவிலுள்ள ஆட்டோ பௌவரும் பிரீட்ரிஹ் ஆட்லெரும் (ரென்னர் கூட்டத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை), பிரான்சிலுள்ள ரெனெடேல்-லொங்கே கூட்டமும், இங்கிலாந்திலுள்ள பேபியன்கள், சுயேச்சையாளர்கள், தொழிற்கட்சியினர்கள் (லேபரைட்டுகள்[19]) ஆகியோரும் 1914-18லும், 1918-20லும், தங்களுடைய சொந்த நாட்டின் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகத் தங்களுடைய சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கக் கொள்ளைக்காரர்களுடனும், சிலசமயம் ''நேசநாடுகளின்'' பூர்ஷ்வா வர்க்கக் கொள்ளைக்காரர்களுடனும் சமரசங்கள் செய்து கொண்ட போது, இந்தக் கனவான்கள் அனைவரும் நிச்சயமாகக் கொள்ளையடிக்கும் தொழிலுக்கு உடந்தையாயிருப்பவர்களாக நடந்து கொண்டார்கள்.

முடிவு தெளிவானதுதான்: ''கோட்பாடு ரீதியிலே'' சமரசங்களை நிராகரிப்பது, எவ்வகைப் பட்டவை என்று பாராமல் பொதுப்படையாகச் சமரசங்களின் ஏற்புத் தன்மையை நிராகரிப்பது, சிறுபிள்ளைத்தனமாகும்; அதை ஒரு பொருட்டாக மதிப்பது கடினமே. ஸ்தூலமான வழக்குகளில் சமரசங்கள் அனுமதிக்கவொண்ணுதவையாக இருக்கும் போது, அவை சந்தர்ப்பவாதத்தையும் துரோகத்தையும் வெளியிடுபவையாயிருக்கும் போது, அப்படிப்பட்ட ஸ்தூலமான சமரசங்களை இனங்கண்டு கொள்வது எப்படி என்றும், அவற்றிற்கு எதிராக விமர்சனத்தின் முழுச் சக்தி

யையும், ஈவிரக்கமற்ற அம்பலப்படுத்தலின் முழுத் தீவிரத்தையும், விட்டுக்கொடாத போராட்டத்தையும் எப்படித் திருப்பிச் செலுத்துவது என்றும், புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்துக்குப் பயனுள்ளவனாக இருக்க விரும்பும் ஒரு அரசியல் தலைவன் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்; ''நடைமுறைக்கொத்த'' சோஷலிஸம் பேசுவதில் சமர்த்தர்களும் பாராளுமன்றக் குதர்க்க வாதிகளும் ''பொதுப்படையிலே சமரசங்கள்'' பற்றி வாத வியாக்கியானங்கள் செய்வதின் வழியே பொறுப்பிலிருந்து தப்பிக்கவோ நழுவிச் செல்லவோ அவன் அனுமதிக்கவே கூடாது. குறிப்பாக இவ்வழியேதான் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் ''தலைவர்களும்'', பேபியன் ஸ்தாபனத்தின் ''தலைவர்களும்'', ''சுயேச்சையான'' தொழிற் கட்சியின் ''தலைவர்களும்'', அவர்கள் இழைத்துள்ள துரோகத்தின் பொறுப்பிலிருந்து, படுமோசமான சந்தர்ப்ப வாதம், துரோகம், வஞ்சகம் என்று உண்மையிலே அமைந்த இத்தகைய சமரசத்தைச் செய்து கொண்டதின் பொறுப்பில்ருந்து தப்பிக்கின்றனர்.

சமரசங்களில் வகைகள் உண்டு. ஒவ்வொரு நிலைமையையும், ஒவ்வொரு சமரசத்தின், ஒவ்வொரு சமரசத்தின் ஒவ்வொரு வகையின், ஸ்தூலமான சூழ்நிலைமைகளையும் பகுத்தாராய ஒருவனுக்குத் திறனிருக்க வேண்டும். திருடர்களால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் குறைக்கவும் அவர்களைப் பிடித்துத் தூக்கிலிடுவதைச் சுலுவாக்கவும் அவர்களிடம் பணத்தையும் துப்பாக்கியையும் கொடுத்துவிட்டவனையும், திருடர்களின் கொள்ளையிலே பங்கு பெறுவதற்காக அவர்களுக்குப் பணமும் துப்பாக்கியும் கொடுக்கிறவனையும் வேறுபடுத்தி இனங்கண்டு கொள்ள ஒருவன் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த மிக எளிய உதாரணத்தில் முடிந்ததுபோல் அரசியலில் அது எப்போதும் அவ்வளவு சுலுவாகச் செய்யக் கூடியதல்ல. ஆனால், வாழ்க்கையின் எல்லா வழக்குகளுக்கும் முன்கூட்டியே தயார்நிலையில் தீர்வுகள் தரக்கூடிய ஒரு பரிகாரத்தைப் புனைய முனைகிறவனும் அல்லது புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கொள்கை என்றைக்கும் கஷ்டமான அல்லது சிக்கலான நிலைமைகளை எதிர்கொள்ளாது என்று வாக்குறுதியளிக்கிறவனும் போலி வைத்தியனே தவிர வேறில்லை.

ஐயந்திரிபுக்கு இடமளிக்காமலிருப்பதற்காக, ஸ்தூல

மான சமரசங்களைப் பகுத்தாராய்ந்தறிய ஒரு சில அடிப்படை விதிகளை, மிகச் சுருக்கமாகவேயிருந்தாலும், வரையறை செய்து காட்ட முயல்கிறேன்.

ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுச் சமரசம் செய்து கொண்ட கட்சியானது 1914ம் ஆண்டின் இறுதி முதலாகத் தன்னுடைய சர்வதேசியத்தை நடைமுறையிலே உருவாக்கிக் கொண்டிருந்தது. ஜார் முடியாட்சி முறையைத் தோற்கடிக்கு மாறு அறைகூவியழைக்க அது பயப்படவில்லை; இரண்டு ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களிடையே நடக்கும் யுத்தத்தில் ''தந்தையர் நாட்டுப் பாதுகாப்பைக்'' கண்டிக்கப் பயப்படவில்லை. இந்தக் கட்சியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஒரு பூர்ஷ்வா அரசாங்கத்தில் மந்திரிப் பதவி வகிக்கும் பாதையில் போவதற்குப் பதிலாக சைபீரியாவுக்குக்கொண்டு செல்லும் பாதையைப் பின்பற்றினார்கள். ஜாராட்சி முறையைத் தூக்கி எறிந்து ஒரு ஜனநாயகக் குடியரசை நிலைநாட்டிய புரட்சி இந்தக் கட்சியை ஒரு புதிய, மாபெரும் சோதனைக்குள்ளாக்கியது. இந்தக் கட்சி தனது ''சொந்த'' ஏகாதிபத்தியவாதிகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவில்லை. மாறாக அவர்களின் வீழ்ச்சிக்குத் தயார் செய்து சாதித்தது. அரசியல் அதிகாரத்தை எடுத்துக்கொண்ட பிறகு, இந்தக் கட்சி நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சொத்தில் மீதமிச்சம் எதுவும் இல்லாதபடிச் செய்துவிட்டது. ஏகாதிபத்தியவாதிகளின் இரகசிய ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்தி நிராகரித்துவிட்ட பிறகு, இந்தக் கட்சி எல்லா தேசங்களுக்கும் சமாதானப் பிரேரணை விடுத்தது. பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் சமாதானம் ஏற்படுத்திக் கொள்வதை முறித்த பிறகுதான், ஜெர்மனியிலும் பிற நாடுகளிலும் புரட்சியைத் துரிதப்படுத்த போல்ஷெவிக்குகள் மனிதசக்தியாலானது அனைத்தையும் செய்து பார்த்த பிறகுதான், பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் கொள்ளைக்காரர்களின் பலாத்காரத்துக்கு விட்டுக் கொடுத்தனர். இப்படிப்பட்ட நிலைமையில் இப்படிப்பட்ட கட்சியால் செய்து கொள்ளப்பட்ட இப்படிப்பட்ட சமரசம் முற்றும் சரியே என்கிற விஷயம் ஒவ்வொரு நாளும் யாவருக்கும் மேலும் மேலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் புரிகிறது.

ருஷ்யாவில் மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகளும் (1914-20ல் உலகமெங்கும் இரண்டாம் இன்டர் நேஷனலைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும் செய்த மாதிரியே) ''தந்தையர் நாட்டின் பாதுகாப்பை'' நேரடியாகவோ மறைமுகமாகவோ நியாயப்படுத்துவதிலிருந்து—அதாவது, தம்முடைய சொந்தக் கொள்ளைக்கார பூர்ஷ்வா வர்க்கத்தைப் பாதுகாப்பதை நியாயப்படுத்துவதிலிருந்து—துரோகத்தைத் தொடங்கினார்கள். தம் சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துடன் கூட்டணி அமைத்துக் கொள்வதின் மூலமாகவும் தம் சொந்த பூர்ஷ்வா வர்க்கத்துடன் சேர்ந்து நின்று தம் சொந்த நாட்டுப் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதின் மூலமாகவும் தங்கள் துரோகத்தைத் தொடர்ந்து செய்தார்கள். ருஷ்யாவில் முதலில் கேரென்ஸ்கியுடனும் காடெட்டுகளுடனும்[20], பிறகு கோல்ச்சாக்குடனும் தெனீக்கினுடனும் அவர்கள் அமைத்த கூட்டணி என்பது — அவர்களின் வெளிநாட்டு நண்பர்கள் முறையே தத்தம் நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தோடு ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி மாதிரியே—பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டு அதற்கு எதிராக பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கம் சென்றுவிட்ட ஓட்டம்தான். முதலிலிருந்து கடைசிவரை, ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களோடு அவர்கள் செய்து கொண்ட சமரசம் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரத் தனத்தில் தங்களையும் உடந்தையாக்கிக் கொண்ட ஒரு சமரசமேயாகும்.

## VIII

### சமரசங்களே கூடாதா?

பிராங்பர்ட் சிறு நூலிலிருந்து[21] கொடுக்கப்பட்ட மேற்கோளிலிருந்து ''இடதுசாரிகள்'' இந்தக் கோஷத்தை எவ்வளவு அழுத்தந்திருத்தமாக வைக்கிறார்கள் என்று கண்டோம். சந்தேகமின்றித் தங்களை மார்க்ஸீயவாதிகள் என்று கருதிக்கொண்டவர்களும் மார்க்ஸீயவாதிகளாக இருக்க விரும்புகிறவர்களும் மார்க்ஸீயத்தின் அடிப்படை உண்மைகளை மறப்பதைப் பார்க்க வருத்தமாயிருக்கிறது. பிளாங்கீயவாதிகளாகிய முப்பத்து மூன்று கம்யூன்காரர்கள் வெளியிட்ட

வேலைத்திட்ட அறிக்கைக்கு[22] எதிராக 1874ல் எங்கெல்ஸ் —தங்களுடைய ஒவ்வொரு மகத்தான நூலிலுமுள்ள ஒவ்வொரு வாக்கியமும் குறிப்பிடத்தக்க ஆழம் உள்ள பொருள் அடங்கியிருக்கும்படியாக எழுதும் மிகமிக அரிய நூலாசிரியர்களில், மார்க்ஸைப்போல், எங்கெல்ஸும் ஒருவராவார் —எழுதியது பின்வருமாறு:

"'நாங்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்கக் காரணம் இடைநிலைப்பட்ட கட்டங்களில் நின்றுவிடாமல், வெற்றி நாளைத் தள்ளிப்போட்டு அடிமைப்பட்டிருக்கும் காலத்தை நீளச் செய்கிறவையாக மட்டுமேயுள்ள சமரசங்கள் எதுவும் இல்லாமல், எங்கள் குறிக்கோளை எட்ட விரும்புவதே' என்று பிளாங்கியவாதிகளாகிய கம்யூன்காரர்கள் தம்முடைய வேலைத்திட்ட அறிக்கையில் எழுதினர்கள்."

"ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளாக இருக்கக் காரணம், தாங்கள் சிருஷ்டிக்காத, பதிலாகச் சரித்திர வளர்ச்சிப் போக்கினல் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா இடைக்கால கட்டங்கள், எல்லா சமரசங்கள் மூலமாக இறுதி இலட்சியத்தை—வர்க்கங்களை ஒழிப்பது, நிலம் அல்லது உற்பத்திச் சாதனங்களின்மீது தனியுடைமை இனிமேல் இராத ஒரு சமுதாயத்தைப் படைப்பது என்கிற இலட்சியத்தை—தெளிவாகக் கண்டுகொண்டு நிரந்தரமாகப் பின்தொடர்ந்து செல்வதே. முப்பத்துமூன்று பிளாங்கியவாதிகள் கம்யூனிஸ்டுகளாக இருக்கக் காரணம், தாங்கள் இடைக்கால கட்டங்களையும் சமரசங்களையும் தாவிக் கடக்க விரும்புகிருர்கள் என்கிற ஒரே காரணத்தை வைத்து அந்த விஷயம் அத்துடன் தீர்ந்துவிட்டது என்று கற்பனை செய்வதும்; மேலும், அடுத்த சில நாட்களில் 'அது தொடங்கினல்' (தொடங்கும் என்பது அவர்களின் திடமான நிம்பிக்கை), தாங்கள் தலைமைக்கு வந்தால் அந்த நாளைக்கு மறுநாளே 'கம்யூனிஸம் புகுத்தப் படும்' என்றும் அவர்கள் கற்பனை செய்வதும்தான். அது உடனடியாகச் சாத்தியப்படாவிட்டால், அவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல.

"தத்துவரீதியிலே ஏற்கச் செய்யக்கூடிய ஒரு வாதமாகப் பொறுமையின்மையை வைப்பது எவ்வளவு சிறுபிள்ளைத் தனமான பேதைமை!" (பி. எங்கெல்ஸ். "பிளாங்கியவாதக் கம்யூன்காரர்களின் வேலைத்திட்டம்"; ஜெர்மன் சோஷல்-

டெமாக்ராட்டிக் செய்தித்தாளாகிய "*Volksstaat*", 1874, இதழ் 73லிருந்து எடுக்கப்பட்டது; இது பெத்ரோகிராதில், 1919ல், வெளியான ''கட்டுரைகள், 1871-75'' என்கிற நூலின் ருஷ்ய மொழிபெயர்ப்பில் 52-53ம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.)

அதே கட்டுரையில் வேயானைப் பற்றிய தமது ஆழ்ந்த மதிப்பை எங்கெல்ஸ் வெளியிடுகிறார்; வேயானுடைய ''மறுக்க முடியாத நல்ல அம்சங்களைப்'' பற்றிப் பேசுகிறார் (கேட் போலவே, வேயானும் 1914 ஆகஸ்ட் வரை சர்வதேச சோஷலிஸத்தின் முக்கியமான தலைவராக இருந்தவர்; 1914 ஆகஸ்டில் அவர்கள் இருவரும் சோஷலிஸத்துக்குத் துரோகிகளாக மாறிவிட்டனர்). எனினும் வெளிப்படையாகத் தெரியும் ஒரு தவறு விபரமான பகுப்பாய்வின்றி தப்பிச் செல்ல எங்கெல்ஸ் அனுமதிக்கிறதில்லை. மிகவும் இளைஞர்களாயும் அனுபவக் குறைவுள்ளவர்களாயும் இருக்கிற புரட்சிக்காரர்களுக்கும், மதிக்கத்தக்க வயதும் மிக்க அனுபவமும் உள்ள குட்டி பூர்ஷ்வாப் புரட்சிக்காரர்களுக்கும், ''சமரசங்களை அனுமதிப்பது'' மிகவும் ''ஆபத்தானதாகவும்'', புரிந்துகொள்ள முடியாததாகவும், பிசகாகவும் தோன்றுகிறது என்பது உண்மை. மேலும், பல குதர்க்கவாதிகள் (அசாதாரணமான அல்லது மிகையான ''அனுபவமுள்ள'' அரசியல்வாதிகளாக இருப்பதினால்) தோழர் லான்ஸ்பரி குறிப்பிட்ட பிரிட்டிஷ் சந்தர்ப்பவாதத் தலைவர்களைப் போலவே, ''போல்ஷெவிக்குகள் ஒரு குறிப்பிட்ட சமரசம் செய்து கொள்கிறார்கள் என்றால் நாங்களும் ஏன் ஏதாவதொரு வகையான சமரசம் செய்து கொள்ளலாகாது?'' என்று வாதிக்கிறார்கள். பல வேலைநிறுத்தங்களில் (வர்க்கப் போராட்டத்தின் இந்த வெளிப்பாட்டை மட்டுமே எடுத்துக்கொண்டு பார்த்தாலுங்கூட) பயிற்சி பெற்ற பாட்டாளிகள் எங்கெல்ஸ் விளக்கி வைத்த மிக ஆழ்ந்த (தத்துவரீதியான, வரலாற்றுரீதியான, அரசியல் ரீதியான, உளவியல் ரீதியான) உண்மையை வழக்கமாகவே நன்கு புரிந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு பாட்டாளியும் வேலை நிறுத்தம் நடத்தியிருக்கிறான், வெறுக்கத்தக்க அடக்குமுறையாளர்களுடனும் சுறண்டுவோருடனும் ''சமரசங்கள்'' செய்து கொள்ளும் அனுபவத்தைப் பெற்றிருக்கிறான்—இந்தச் சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் ஒன்றுமே பெறுமல்

அல்லது தங்கள் கோரிக்கைகள் ஓரளவு மட்டுமே நிறைவேற்றப்படுவதற்கு இணங்கி வேலைக்குத் திரும்ப நேர்ந்தது. ஒவ்வொரு பாட்டாளியும்—வெகுஜனப் போராட்டத்தின் நிலைமைகளின் காரணத்தாலும், வர்க்க முரண்பாடுகள் கூராகத் தீவிரப்பட்டு வருவதினிடையே அவன் வாழ்கிற காரணத்தாலும், புறநிலைமைகளினால் (வேலை நிறுத்த நிதி அற்றுப்போவது, வெளி ஆதரவு அற்றுப்போவது, கொடிய பசி, களைப்பு போன்றவை) கட்டாயப்படுத்தப்பட்டுச் செய்துகொண்ட ஒரு சமரசத்துக்கும்—இந்தச் சமரசத்துக்கு ஒத்துக்கொண்ட தொழிலாளர்களின் புரட்சிகரமான பக்தியையும் மேலும் போராடுவதற்குத் தயாராயுள்ள தன்மையையும் எவ்விதத்திலும் குறைக்காத ஒரு சமரசத்துக்கும்—தங்களுடைய சுய நலத்துக்கும் (வேலை நிறுத்தத்தை உடைப்பவர்களும் ''சமரசம்'' செய்துகொள்கிறார்களல்லவா!) பயங்கொள்ளித்தனத்துக்கும் முதலாளிகளின் அடிவருடும் விருப்பத்துக்கும் முதலாளிகளின் பயமுறுத்தலுக்கோ, சில சமயங்களில் வேண்டுதலுக்கோ, சில சமயங்களில் அற்பச் சலுகைகளுக்கோ, சில சமயங்களில் முகஸ்துதிக்கோ இணங்கி விடத் தயாராயுள்ள தன்மைக்கும் புறநிலைக் காரணங்களைக் கற்பிக்க முயல்கிற துரோகிகள் செய்துகொள்கிற சமரசத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பார்க்கிறான். (பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர்கள் செய்துகொண்ட இப்படிப்பட்ட நயவஞ்சகமான சமரசங்களுக்குப் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் பல வழக்குகள் உண்டு; எனினும், ஏதாவதொரு வடிவத்தில், எல்லா நாடுகளிலுமுள்ள அநேகமாக எல்லாத் தொழிலாளர்களுமே இதே மாதிரியான விஷயத்தைப் பார்த்திருக்கிறார்கள்.)

ஏதாவதொரு ''சமரசத்தின்'' உண்மையான தன்மையை மிகவும் கஷ்டப்பட்டுத்தான் சரியாக நிர்ணயிக்க முடியும் என்றிருக்கிற அசாதாரணமான கடினமும் சிக்கலும் உள்ள தனிப்பட்ட வழக்குகள் இருப்பது இயல்புதான்; கொலை வழக்கில் கொலை செய்தது முற்றிலும் நியாயந்தானா, அவசியந்தானா (உதாரணமாக, நியாயமான தற்காப்புக்காக நடந்ததா) என்றோ, அல்லது மன்னிக்க முடியாத அசிரத்தையால் நடந்ததா அல்லது அது தந்திரமாக நிறைவேற்றிய நயவஞ்சகமான ஒரு திட்டமா என்று எவ்வகையிலும் சுலபமாகத்

தீர்மானிக்க இயலாத கொலை வழக்குகள் இருப்பது போல். அரசியலிலே, சில சமயங்களில் அது வர்க்கங்களிடையேயும் கட்சிகளிடையேயும் உள்ள சிக்கலான—சர்வதேச, தேச ரீதியான—உறவுகள் பற்றிய விவகாரமாக இருப்பதினுலோ, ஒரு வேலைநிறுத்தத்தில் செய்யும் நியாயமான ''சமரசம்'' அல்லது வேலைநிறுத்தத்தை உடைப்பவன், துரோகத்தன மான தலைவன், முதலானோர் செய்யும் நயவஞ்சகமான ''சமரசம்'' போன்ற பிரச்சினைகளைவிட மிகவும் கடினமான பலப்பல வழக்குகள் எழும் என்பது இயல்பு. எல்லா வழக்கு களுக்கும் பயன்படும்படியாக ஒரு பரிகாரத்தை அல்லது பொது விதியை (''சமரசங்களே கூடாது!'' என்பது) வரை யறுப்பது அபத்தமாயிருக்கும். ஒவ்வொரு குறிப்பிட்ட வழக்கிலும் சொந்த மூளையைப் பயன்படுத்தி தன் நிலையைக் கண்டுகொள்ள ஒவ்வொருவரும் திறமைபெற்றிருக்க வேண் டும். உண்மையிலே, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின்* சிந்தனை செய்கிற எல்லாப் பிரதிநிதிகளின் நீடித்த, விடாப்பிடியான, பலவகைப்பட்ட, முழுமையான முயற்சிகளின் மூலமாக, சிக்கலான அரசியல் பிரச்சினைகளை வேகமாகவும் சரியாகவும் தீர்க்கத் தேவையான அறிவையும், அனுபவத்தையும்—அறி வோடும் அனுபவத்தோடும் கூடுதலாக—அரசியல் உள்ளு ணர்வையும் தேடிப்பெறுவது ஒரு கட்சி ஸ்தாபனத்தின் வேலைகளில் ஒன்ருகும், கட்சித் தலைவர்கள் என்கிற பட்டத் துக்குத் தகுதியுள்ளவர்களின் வேலைகளில் ஒன்ருகும்.

பொதுப்படையாகச் சமரசங்களை அனுமதிப்பதை ஒத்துக்

---

* மிகமிக விஷயந்தெரிந்த நாடுகளில் நிலவும் நிலைமை களிலுங்கூட, மிகமிக முன்னேறிய வர்க்கத்திற்குள்ளேயுங் கூட, ஒரு குறிப்பிட்ட தருணத்தின் சூழ்நிலைமைகள் அதன் ஆன் மீகச் சக்திகள் அனைத்தையும் அசாதாரணமான அளவுக்கு விழிப்புறச் செய்கிற காலத்திலேயுங்கூட, அந்த வர்க்கத்தின் சிந்திக்காத, சிந்திக்கத் திறனற்ற பிரதிநிதிகள் எப்பொழு தும் இருந்து கொண்டேயிருக்கிருர்கள்—வர்க்கங்கள் இருக் கிற வரை, வர்க்கங்களில்லாத சமுதாயம் தன்னை முற்ருக நிலைநாட்டிக்கொண்டு திடப்படுத்திக் கொள்ளாதவரை, தன் சொந்த அடிப்படையில் அது வளர்ச்சி கொண்டிராத வரை, தவிர்க்க இயலாதவகையில், இருந்து கொண்டேயிருப் பார்கள். அப்படியில்லாவிட்டால், மக்களை ஒடுக்குவோனுக முதலாளித்துவம் இருந்துவராது.

கொண்டால், அதுவே நாம் எதிர்த்துப் போராடிவருகிற, போராடித்தீர வேண்டியிருக்கிற சந்தர்ப்பவாதத்துக்கும் புரட்சிகரமான மார்க்ஸீயத்துக்கும் அல்லது கம்யூனிஸத்துக்கும் இடையேயுள்ள வேறுபடுத்திக் காட்டும் கோட்டை அழிக்கப் போதுமானது என்று பேதைமையுள்ள, சிறிதேனும் அனுபவமில்லாத நபர்கள் கற்பித்துக் கொள்கிறார்கள். ஆனால், இயற்கையிலும் சமுதாயத்திலுமுள்ள எல்லா வேறுபடுத்திக்காட்டும் கோடுகளும் நிலைமாறிக் கொண்டிருக்கிறதையும், அவை ஓரளவுக்குச் சம்பிரதாயமாகவே இருப்பதையும் அவர்கள் இன்னமும்கூட அறியாதிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஒரு நீடித்த பயிற்சி, கல்வி, அறிவொளி யூட்டல் மூலமாகவும் அரசியல் அனுபவம், அன்றாட அனுபவம் மூலமாகவும் உதவி அளிப்பதன்றி அவர்களுக்கு உதவவேறு வழியில்லை. ஒவ்வொரு தனித்தனி அல்லது குறிப்பான வரலாற்றுத் தருணத்தின் அரசியலின் நடைமுறைப் பிரச்சினைகளிலிருந்து, அனுமதிக்கவொண்ணாத, நயவஞ்சகமான சமரசங்களை, புரட்சிகரமான வர்க்கத்துக்கு மரணபத்தான சந்தர்ப்பவாதத்தை உருக்கொண்டுள்ள சமரசங்களை, தனியே பிரித்தெடுத்துக் கொள்வதும் அவற்றை விளக்கி, எதிர்த்துப் போராட எல்லா முயற்சிகளும் செய்வதும் இன்றியமையாததாகும். கொள்ளைக்காரத்தனமும் பேராசையும் சம அளவிலே கொண்ட இரண்டு குழுக்களைச் சேர்ந்த நாடுகளிடையே 1914-18ல் நடந்த ஏகாதிபத்திய யுத்தத்தின்போது சந்தர்ப்பவாதத்தின் முதன்மையான, அடிப்படையான ரகமாக விளங்கியது சோஷல்-இனவெறியே, அதாவது ''தந்தையர் நாட்டுப் பாதுகாப்புக்கு'' ஆதரவளிப்பது என்பதே—அது, அப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில், உண்மையிலேயே தங்களுடைய ''சொந்த'' பூர்ஷ்வா வர்க்கத்தின் கொள்ளைக்கார நலன்களைப் பாதுகாப்பதற்குச் சமமாகும். யுத்தம் முடிந்த பிறகு, கொள்ளைத்தன்மை கொண்ட ''சர்வதேசச் சங்கத்தை''[23] ஆதரிப்பது; புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கும் ''சோவியத்''இயக்கத்துக்கும் எதிராகத் தன்னுடைய சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துடன் செய்து கொண்ட நேரடியான, அல்லது மறைமுகமான கூட்டணிகளை ஆதரிப்பது; ''சோவியத் ஆட்சிக்கு'' எதிராக பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் பூர்ஷ்வாப் பாராளுமன்ற முறையையும் ஆதரிப்பது

என்பது அனுமதிக்கவொண்ணு, நம்பிக்கைத் துரோகம் உள்ள சமரசங்களின் முதன்மையான வெளிப்பாடுகளாயிற்று; இந்தச் சமரசங்களின் மொத்தத் தொகையே புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் இலட்சியத்துக்கும் மரணபத்தாயிருக்கும் சந்தர்ப்பவாதமாக அமைந்தது.

> ''...பிற கட்சிகளுடன் எல்லாச் சமரசங்களையும் அழுத்தமாக நிராகரித்துவிட வேண்டும்... தந்திரோபாயம், ஒப்பந்தம் ஆகியவற்றைக் கொண்ட கொள்கையனைத்தையும் நிராகரித்துவிட வேண்டும்''—

என்று பிராங்புர்ட் சிறுநூலிலே ஜெர்மன் இடதுசாரிகள் எழுதுகிருர்கள்.

இப்படிப்பட்ட கருத்துக்களை வைத்துக்கொண்டு இந்த இடதுசாரிகள் போல்ஷெவிஸத்தை வன்மையாகக் கண்டிக்காமலிருப்பது ஒரு விந்தைதான்! ஏனெனில், நவம்பர் புரட்சிக்கு முன்பும் சரி பின்பும் சரி, போல்ஷெவிஸத்தின் வரலாறு முழுவதும் தந்திரோபாயங்களுக்கும், பூர்ஷ்வா கட்சிகள் உட்பட பிற கட்சிகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொண்டதற்கும் சமரசம் செய்து கொண்டதற்கும் உதாரணங்கள் நிறைந்து உள்ளது! ஜெர்மன் இடதுசாரிகள் அதைப் பற்றி அறியாமலிருக்க முடியாது.

தந்திரோபாயங்களைக் கையாள மாட்டோம், எதிரிகளிடையே நலன்பற்றி எழும் முரண்பாட்டை (தாற்காலிகமானவையாக இருந்தாலும்) உபயோகித்துக் கொள்ள மாட்டோம் என்று முன்கூட்டியே மறுத்துவிட்டு, சாத்தியப்பாடுள்ள நேச சக்திகளோடு (தாற்காலிகமான, நிலையற்ற, ஊசலாட்டமுள்ள, நிபந்தனைக்குட்பட்ட, நேச சக்திகளாக இருந்தபோதிலும்) ஒப்பந்தம், சமரசம் செய்துகொள்ள மறுத்துவிட்டு, உலக முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவதற்குரிய ஒரு யுத்தத்தை—அரசுகளிடையே நடக்கும் சாதாரணமான யுத்தங்களில் மிகமிகப் பிடிவாதமான யுத்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகக் கஷ்டமானதும் நீடித்ததும் சிக்கலானதுமான ஒரு யுத்தத்தை—நடத்திவருவது என்ருல் அது மிகமிக நகைப்புக்கிடமான விஷயமல்லவா? இதுவரை கண்டறியாத, இதுவரை எட்டிப்பிடிக்காத ஒரு மலையின் மேல்

கஷ்டப்பட்டு ஏற முனைந்து, அதற்கு முன்கூட்டியே கோணல் பாதைகளில் செல்ல மாட்டோம், வந்த வழியே திரும்ப மாட்டோம், ஒருதரம் தேர்ந்து கொண்டபின் அந்தப் பாதையைக் கைவிட்டு வேறு பாதைகளில் போக முயற்சி செய்ய மாட்டோம் என்று மறுப்பதுபோல் இல்லையா இது? இருந்தபோதிலும் இவ்வளவு முதிர்ச்சியற்றவர்களுக்கு, அனுபவமற்றவர்களுக்கு (இளமைதான் காரணம் என்று விளக்கம் தந்தால் அது அவ்வளவு மோசமாயிராது; இளைஞர்கள் ஒரு காலப்பகுதி வரைக்கும் இப்படிப்பட்ட அபத்தத்தைப் பேசலாம் என்று கடவுளே விதித்திருக்கிறார்) ஹாலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் சில உறுப்பினர்களின் ஆதரவு—நேரடியானதா, மறைமுகமானதா, பகிரங்கமானதா, ரகசியமானதா, முழுமையானதா, அரைகுறையானதா, எப்படியிருப்பினும் பரவாயில்லை—கிடைக்கிறது!

பாட்டாளி வர்க்கத்தின் முதல் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு, ஒரு நாட்டில் முதலாளி வர்க்கம் வீழ்த்தப்பட்ட பிறகு, அந்த நாட்டின் பாட்டாளி வர்க்கம் வெகுகாலம் வரைக்கும் பூர்ஷ்வா வர்க்கத்தைவிட பலவீனமாக இருந்து வருகிறது; காரணம், பூர்ஷ்வா வர்க்கத்திற்கு விரிவான சர்வதேசத் தொடர்புகள் இருப்பதேயாகும்; மேலும், மற்றொரு காரணம், பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்திய நாட்டின் சிறு பண்ட உற்பத்தியாளர்களால் முதலாளித்துவம், பூர்ஷ்வாக்கள் தன்னியல்பாகவும் இடையறுமலும் மீட்சியும் மறுவுயிர்ப்பும் பெற்றுவருவதுமாகும். ஆனமட்டும் முயற்சி செய்வதின் மூலமும், எதிரிகளிடையேயுள்ள ஒவ்வொரு மிகச்சிறிய ''விரிசலையும்'' பல்வேறு நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கங்களுக்கு இடையேயுள்ள நலன் பற்றிய ஒவ்வொரு எதிர்நிலையையும், பல்வேறு நாடுகளில் ஒவ்வொன்றுக்குள்ளும் இருக்கிற பூர்ஷ்வா வர்க்கத்திற்குள் இருக்கிற பல்வேறு குழுக்கள் அல்லது வகைகளுக்கிடையேயுள்ள நலன் பற்றிய ஒவ்வொரு பகைமையையும், மிகமிக முழுமையாக, எச்சரிக்கையாக, கவனமாக, சாதுர்யமாக, கட்டாயக் கடமையாக, உபயோகப் படுத்திக் கொள்வதின் மூலமும், மேலும் ஒரு வெகுஜனச் செல்வாக்குள்ள நேச சக்தியை—அது தாற்காலிகமானதாகவும் ஊசலாட்டமுள்ளதாகவும் நிலையற்றதாகவும் நம்பத்தகாததாகவும் நிபந்தனைக்குட்பட்டதாகவும் இருந்த

போதிலும்—பெறுவதற்குரிய ஒவ்வொரு வாய்ப்பையும் மிகச் சிறியதாயிருப்பினும், பயன்படுத்திக் கொள்வதின் மூலமும் மட்டுமே தன்னைவிட அதிக பலமுள்ள எதிரியை முறியடிக்க முடியும். இதைப் புரிந்துகொள்ளத் தவறுகிறவர்கள் மார்க்ஸீயத்தின், அல்லது பொதுப்படையான ரீதியிலே விஞ்ஞான பூர்வமான, நவீன சோஷலிஸத்தின், ஒரு துளியைக் கூடப் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள். ஓரளவுக்குக் கணிசமான ஒரு காலப்பகுதியில், ஓரளவுக்குப் பலவகைப் பட்ட அரசியல் நிலைமைகளில், இந்த உண்மையை நடைமுறையில் செயலாக்கும் திறமையைச் செயல்களின் மூலமாக நிரூபித்துக் காட்டாதவர்கள் சுரண்டுவோரிடமிருந்து உழைக்கும் மனிதகுலம் முழுவதையும் விடுவிக்கப் போராடிவரும் புரட்சிகரமான வர்க்கத்துக்கு உதவி செய்ய இன்னமும் கற்றுக்கொள்ளவில்லைதான். பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வெல்வதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, இது சமமாகப் பொருந்தும்.

நமது தத்துவம் ஒரு வறட்டுச் சூத்திரமல்ல, அது செயலுக்கு ஒரு வழிகாட்டி என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் சொன்னார்கள். கார்ல் காவுத்ஸ்கி, ஆட்டோ பௌவர், முதலான ''பட்டம்பெற்ற'' மார்க்ஸீயவாதிகள் இதைப் புரிந்துகொள்ளவில்லை, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தீர்மானமான தருணங்களில் அதைச் செயல்படுத்த சக்தியற்றுப் போனார்கள் என்பது அவர்களின் ஆகமிகப் பெரிய தவறும் குற்றமுமாகும். ''அரசியல் நடவடிக்கை என்பது நெவ்ஸ்கிய் நெடுஞ்சாலையின் நடைபாதையல்ல'' (இது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஒரே நேராயுள்ள முக்கியமான தெருவின் சுத்தமான, அகலமான, சமமட்டமான நடைபாதையாகும்) என்று மார்க்ஸுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்த மாபெரும் ருஷ்ய சோஷலிஸ்டாகிய நி. க. செர்னிஷேவ்ஸ்கிய் சொல்வது வழக்கம். செர்னிஷேவ்ஸ்கிய் காலத்திற்குப் பிறகு, இந்த உண்மையைப் புறக்கணித்ததாலோ, மறந்ததாலோ, ருஷ்யப் புரட்சிக்காரர்களுக்கு எண்ணிலா நஷ்டங்கள் ஏற்பட்டன. இந்த உண்மையைச் சீரணித்துக் கொள்வதற்குப் பிற்பட்ட நிலையிலிருந்த ருஷ்யர்கள் கொடுத்த அதே அதிக விலையைப் போல் தொழிலாளி வர்க்கத்திடம் ஈடுபாடுள்ள இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்,

மேற்கு ஐரோப்பிய, அமெரிக்கப் புரட்சிக்காரர்களும்கொடுக்காதவாறு தடுக்க நாம் எவ்வகையிலேனும் முயன்று தீர வேண்டும்.

ஜாராட்சிமுறையின் வீழ்ச்சிக்குமுன், ருஷ்யாவின் புரட்சிகர சோஷல்-டெமாக்ராட்டுகள் பூர்ஷ்வா மிதவாதிகளின் சேவைகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திவந்தார்கள்; அதாவது, அவர்களுடன் பல நடைமுறைக்குரிய சமரசங்கள் செய்துகொண்டார்கள். மேலும், 1901-02ல், போல்ஷெவிஸம் தோன்றுவதற்கு முன்புங்கூட, ''இஸ்க்ராவின்'' பழைய ஆசிரியர் குழு (இதில் பிளெகானவ், அக்ஸெல்ரோத், ஸஸூலிச், மார்த்தவ், பத்ரேஸாவ், ஆகியோரும் நானும் உறுப்பினர்களாக இருந்தோம்) பூர்ஷ்வா மிதவாதத்தின் அரசியல் தலைவராகிய ஸ்துரூவேயுடன் ஒரு சம்பிரதாயபூர்வமான அரசியல் உடன்படிக்கையை (அது வெகு காலத்திற்கு நீடிக்கவில்லை என்பது உண்மையே) செய்துகொண்டது. அதே நேரத்தில், பூர்ஷ்வா மிதவாதத்தை எதிர்த்தும், அற்ப அளவுக்கேனும் அதன் செல்வாக்கு தொழிலாளி வர்க்க இயக்கத்தில் வெளிப்படுவதை எதிர்த்தும் ஒரு விட்டுக்கொடாத, அறவே ஈவிரக்கமற்ற தத்துவார்த்த, அரசியல் போராட்டத்தை எங்களால் நடத்த முடிந்தது. இந்தக் கொள்கையை போல்ஷெவிக்குகள் எப்போதும் பின்பற்றி வந்துள்ளனர். 1905லிருந்து தொடங்கி, மிதவாத பூர்ஷ்வாக்களுக்கும் ஜாராட்சிமுறைக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி மக்களுக்கும் இடையே உடன்பாடு வேண்டுமென்று இடைவிடாது சொல்லிவந்திருக்கிறார்கள்; என்றபோதிலும், ஜாராட்சிமுறையை எதிர்த்து மிதவாத பூர்ஷ்வாக்களை ஆதரிக்க அவர்கள் என்றைக்கும் மறுத்ததுமில்லை (எடுத்துக்காட்டாக, தேர்தல்களின் இரண்டாவது கட்டத்தில் அல்லது மறுவோட்டின் போது); பூர்ஷ்வா-புரட்சிகரமான விவசாயிக் கட்சியாகிய சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளை, சோஷலிஸ்டுகள் என்று தம்மைப் பொய்யாக வர்ணித்துக் கொள்கிற குட்டிபூர்ஷ்வா ஜனநாயகவாதிகள் என்று அம்பலப்படுத்தியவாறு அவர்களை எதிர்த்துத் தங்களுடைய விட்டுக்கொடாத தத்துவார்த்த, அரசியல் போராட்டத்தை என்றைக்கும் அவர்கள் நிறுத்திக் கொண்டதுமில்லை. 1907ல் டூமா தேர்தல்களின்போது, போல்ஷெ

விக்குகள் கொஞ்ச காலத்துக்கு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளோடு ஒரு சம்பிரதாய பூர்வமான அரசியல் கூட்டணியில் சேர்ந்தார்கள். 1903க்கும் 1912க்கும் இடையே ஒரே சோஷல்-டெமாக்ராடிக் கட்சியில் மென்ஷெவிக்குகளுடன் நாம் சம்பிரதாயபூர்வமாக ஒன்று பட்டிருந்த அனேக ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிகள் உண்டு; ஆனல் , அவர்கள் சந்தர்ப்பவாதிகள், பாட்டாளி வர்க்கத்திடையே பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்கைக் கொண்டு செல்கிற வாகனங்கள் என்று அவர்களை எதிர்த்து நமது தத்துவார்த்த, அரசியல் போராட்டத்தை நாம் என்றைக்கும் நிறுத்தியதில்லை. யுத்தத்தின்போது காவுத்ஸ்கிவாதிகளுடனும், இடதுசாரி மென்ஷெவிக்குகளுடனும் (மார்த்தவ்), சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளில் ஒரு பகுதியுடனும் (செர்னேவ், நத்தன்ஸோன்) ஒருவகையான சமரசங்களை நாம் செய்துகொண்டோம்; ஸிம்மர்வால்டிலும் கின்டாலிலும்[24] நாம் அவர்களுடன் இருந்தோம், கூட்டு அறிக்கைகளையும் வெளியிட்டோம். எனினும், காவுத்ஸ்கிவாதிகளையும் மார்த்தவையும் செர்னேவையும் (நத்தன்ஸோன் 1919ல் இறந்துபோனர்; அவர் ஒரு ''புரட்சிகரமான கம்யூனிஸ்ட்''-நரோத்னிக்[25], நமக்கு மிக நெருங்கி இருந்தார், அநேகமாக நம்முடன் உடன்பட்டு இருந்தார்) எதிர்த்து நமது தத்துவ, அரசியல் போராட்டத்தை நாம் என்றைக்கும் நிறுத்திக் கொண்டதுமில்லை, தணியவிட்டதுமில்லை. அக்டோபர் புரட்சி வெடித்த அதே தருணத்திலே நாம் சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் விவசாய வேலைத்திட்டத்தை அப்படியே முழுவதாக, ஒரு திருத்தங்கூட இல்லாமல், எடுத்தாண்டதின் மூலமாகக் குட்டிபூர்ஷ்வா விவசாயிப் பகுதிகளுடன் ஒரு சம்பிரதாய ரீதியில்லாத, ஆனல் மிக முக்கியமான (மிக வெற்றிகரமானதுங்கூட) அரசியல் கூட்டணியைச் செய்து கொண்டோம்; அதாவது, விவசாயிகளை நாம் ''பலவந்தமாக முன்தள்ளிச் செல்ல'' விரும்பவில்லை என்றும் அவர்களுடன் உடன்பாடு காணத்தான் விரும்புகிறோம் என்றும் விவசாயிகளுக்கு நிரூபிப்பதற்காக நாம் கேள்விக்கிடமற்ற ஒரு சமரசத்தைச் செய்துகொண்டோம். அதே சமயத்தில், அரசாங்கத்தில் பங்குகொள்வதை உள்ளிட்ட ஒரு சம்பிரதாய பூர்வமான அரசியல் கூட்டணியை ''இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளிடம்''[26] பிரேரே

பித்தோம் (விரைவிலே பின்னல் அமைத்துக்கொண்டோம்); பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தம் செய்து முடிந்தபிறகு அவர்கள் இந்தக் கூட்டணியைக் கலைத்துவிட்டார்கள்; பிறகு, 1918 ஜூலை மாதத்தில் நம்மை எதிர்த்து ஆயுதமேந்திய கலகமும் அதற்குப் பின்னல் ஆயுதமேந்திய போராட்டமும் நடத்தும் அளவுக்குச் சென்றனர்.

எனவே, ''சுயேச்சையாளர்களோடு'' (''ஜெர்மன் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி'', காவுத்ஸ்கி-வாதிகள்) ஒரு கூட்டணி வகுக்க யோசித்துக் கொண்டிருக்கும் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிமீது ஜெர்மன் இடதுசாரிகள் நடத்தும் தாக்குதல்கள் முற்றும் யோசனையற்றவை, ''இடதுசாரிகள்'' **தவறு** செய்கிருர்கள் என்பதற்கு ஒரு தெளிவான சான்றுமாகும் என எங்களுக்குப் படுவது புரிந்துகொள்ளத் தக்கதே. ஜெர்மன் ஷீடெமன் வகையருக்களுக்குப் பொருத்தமாக ருஷ்யாவில் எங்களிடமும் வலதுசாரி மென்ஷெவிக்குகள் (கேரென்ஸ்கியின் அரசாங்கத்தில் பங்குகொண்டிருந்தவர்கள்) இருந்தார்கள், ஜெர்மன் காவுத்ஸ்கிவாதிகளுக்குப் பொருத்தமாக, அந்த வலதுசாரி மென்ஷெவிக்குகளை எதிர்த்துக் கொண்டிருந்த இடதுசாரி மென்ஷெவிக்குகளும் (மார்த்தவ்) இருந்தார்கள். தொழிலாளர் திரள்களிடையே மென்ஷெவிக்குகளை விட்டு போல்ஷெவிக்குகள் பக்கம் படிப்படியாக வரும் நிலைமாற்றப் போக்கு 1917ல் தெளிவாகப் புலப்பட்டது. 1917 ஜூன் மாதத்தில் நடந்த சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் கூட்டத்தில் 13 சதவீத வோட்டுகள் தான் நமக்கு இருந்தன. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் மென்ஷெவிக்குகளுக்கும் பெரும்பான்மை இருந்தது. சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் கூட்டத்தில் (பழைய முறைப்படி 1917, அக்டோபர் 25ல் இது நடந்தது) நமக்கு 51 சதவிகித வோட்டுக்கள் இருந்தன. ஜெர்மனியில் தொழிலாளர்கள் வலதுசாரியிலிருந்து இடது சாரிக்குச் சென்ற இதே மாதிரியான, முற்றிலும் ஒன்றுபோலிருந்த போக்கு உடனடியாகக் கம்யூனிஸ்டுகளைப் பலப்படுத்தாமல், இடைநிலையிலிருந்த ''சுயேச்சையாளர்களை''—இந்தக் கட்சிக்கு என்றைக்கும் சுயேச்சையான அரசியல் கருத்துக்களோ சுயேச்சையான கொள்கையோ இல்லாமல் ஷீடெமன் வகை

யருக்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் நடுவே ஊசலாடிக் கொண்டிருந்த போதிலும்—முதலில் பலப்படுத்தியது ஏன்?

இதற்குரிய காரணங்களில் ஒன்று, ஜெர்மன் கம்யூனிஸ்டு களின் தவருன செயல்தந்திரங்கள் என்பது வெளிப்படை; இந்தத் தவற்றை அவர்கள் தைரியமாகவும் நேர்மையாகவும் ஒப்புக்கொண்டு அதைத் திருத்தக் கற்றுக் கொள்ள வேண் டும். பிற்போக்கான பூர்ஷ்வாப் பாராளுமன்றத்திலும் பிற் போக்கான தொழிற்சங்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதின் தேவையை அவர்கள் மறுத்ததிலேதான் தவறு இருக்கிறது. இப்பொழுது நன்ருக பகிரங்கத்துக்கு வந்து அதன் விளைவாக இன்னும் முழுவதாக, இன்னும் வேகமாக, ஸ்தாபனத்துக்கு இன்னும் நன்மைதரக்கூடிய வகையிலே, குணப்படுத்தப்படக் கூடியதாயுள்ள அந்த ''இடதுசாரிப்'' பிள்ளைப் பிராயத்துக் கோளாற்றின் பல வெளிப்பாடு களிலேதான் தவறு இருக்கிறது.

ஜெர்மன் ''சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி'' ஒரே தன்மையுள்ள ஸ்தாபனம் அல்ல என்பது வெள்ளிடை மலை; பழைய சந்தர்ப்பவாதத் தலைவர்களுக்குப் பக்கத் திலேயே (காவுத்ஸ்கி, ஹில்பெர்டிங், மற்றும் கணிசமான அளவுக்கு என்று சொல்லத் தோன்றுகிற வகையிலே, கிரிஸ் பின், லெடிபூர், மற்றவர்கள்)—சோவியத் அதிகாரத்தின், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் குறிபொருளைப் புரிந்து கொள்ளவும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திச் செல்ல வும் தங்களுக்குத் திறனில்லை என்பதை இவர்கள் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிருர்கள்—இந்தக் கட்சியில் ஒரு இடது சாரி, பாட்டாளி வர்க்கத்தன்மை பெற்ற பகுதி தோன்றி யிருக்கிறது; அது குறிப்பிடத்தக்க வேகத்தில் வளர்ந்தும் வருகிறது. இந்தக் கட்சியின் (இதில் சுமார் ஏழரை லட்சம் உறுப்பினர்கள் இருக்கிருர்கள் என்று தெரிகிறது) பல்லா யிரக்கணக்கான உறுப்பினர்கள் ஷீடெமனை விட்டுவிலகிக் கம்யூனிஸத்தை நோக்கி வேகமாக வந்துகொண்டிருக்கும் பாட்டாளிகள். இந்தப் பாட்டாளி வர்க்கத்தன்மைகொண்ட பகுதி ஏற்கெனவே—(1919) லைப்ஸிக் நகரில் நடந்த ''சுயேச் சையாளர்களின்'' காங்கிரஸ் கூட்டத்தில்—மூன்ருவது இன் டர்நேஷனலுடன்[27] உடனடியாக, நிபந்தனையின்றி இணைத்

துக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்துள்ளது. அக்கட்சியின் இந்தப் பகுதியோடு ''சமரசம்'' செய்துகொள்ள பயப்படுவது நிச்சயமாக நகைக்கத்தக்கதேயாகும். அதற்கு மாருக, அவர்களோடு செய்துகொள்ளத்தக்க சமரசத்திற்குரிய ஒரு பொருத்தமான வடிவத்தை—ஒருபுறத்தில் இந்தப் பகுதியோடு அவசியப்பட்டுள்ள ஒன்றுகலத்தலுக்கு வசதி செய்கிறதாயும் துரிதப்படுத்துகிறதாயும், மறுபுறத்தில் ''சுயேச்சையாளர்களின்'' சந்தர்ப்பவாத வலதுசாரிப் பகுதியுடன் தாங்கள் நடத்தி வருகிற தத்துவார்த்த, அரசியல் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளே எந்த விதத்திலும் தடங்கல் செய்யாததாயும் இருக்கும்படியான ஒரு சமரசத்தை—தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது கம்யூனிஸ்டுகளின் கடமையாகும். ஒரு பொருத்தமான சமரச வடிவத்தை உருவாக்குவது ஒருவேளை சுலபமாய் இராது. எனினும் ஒரு போலி வைத்தியன்தான் வெற்றிக்குரிய ''சுலபமான'' பாதையை ஜெர்மன் தொழிலாளர்களுக்கு வாக்களிக்க முடியும்.

பாட்டாளிக்கும் அரைப் பாட்டாளிக்கும் (வாழ்வதற்கு வேண்டிய ஊதியத்தில் ஒரு பகுதியைத் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்றுச் சம்பாதிப்பவன்) இடைநிலையிலேயும், அரைப்பாட்டாளிக்கும் சிறியவிவசாயிக்கும் (அதோடு சிறு கைவினைஞனுக்கும் கைத் தொழில் செய்யும் தொழிலாளிக்கும் பொதுவாகவே சிறு எஜமானனுக்கும்) இடைநிலையிலேயும், சிறு விவசாயிக்கும் நடுத்தர விவசாயிக்கும் இடைநிலையிலேயும், என்றவாறு பெருந்தொகையில் உள்ள மிகவும் பலதரப்பட்ட ரகங்களைச் சேர்ந்தவர்கள் ''சுத்தமான'' பாட்டாளி வர்க்கத்தைச் சூழ்ந்திராதிருந்தால், பாட்டாளி வர்க்கமே தன்னுள் அதிக வளர்ச்சி பெற்ற பகுதியாகவும் குறைவான வளர்ச்சி பெற்ற பகுதியாகவும் பிரியாதிருந்தால், அது பிரதேசப் பிறப்பிடம், தொழில், சில சமயங்களில் மதம் என்றபடி பிரியாதிருந்தால், முதலாளித்துவம் முதலாளித்துவமாக இருந்திராது. இவையனைத்தினின்றும் தொடர்கிற நிர்ப்பந்தத் தேவை, பரம நிர்ப்பந்தத் தேவை என்னவெனில், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை, அதன் வர்க்க உணர்வுள்ள பகுதி, கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளிகளின் பல்வேறு குழுக்களுடனும், தொழிலாளர்களினுடையவும் சிறு எஜமானர்களினுடையவும் பல்வேறு கட்சி

களுடனும், தந்திரோபாயங்கள், உடன்பாடுகள், சமரசங் கள் செய்துகொள்வதைக் கையாள வேண்டும் என்பதே. பாட்டாளி வர்க்கத்தினரின் வர்க்க உணர்வின் பொதுவான தரத்தையும் புரட்சித் தன்மையையும் போராடி வெற்றி பெறும் திறனையும் தாழ்த்துவதற்கு மாருக உயர்த்துவதற்குரிய வகையில் இந்தச் செயல்தந்திரங்களைச் செயல்படுத்து வது எப்படி என்று அறிவதே முழு விஷயம். இடையிலே, 1917 அக்டோபர் புரட்சிக்கு முன்பு மட்டுமின்றிப் பின்னரும் கூட மென்ஷெவிக்குகள் மீது போல்ஷெவிக்குகள் வெற்றி பெறுவதற்குத் தந்திரோபாயங்களும் உடன்பாடுகளும் சமரசங்களும் கொண்ட இந்தச் செயல்தந்திரத்தைச் செயல் படுத்துவது அவசியமாயிருந்தது என்பதை இங்குக் குறித்துக் கொண்டாக வேண்டும்; ஆனல் இந்தத் தந்திரோபாயங் களும் சமரசங்களும் மென்ஷெவிக்குகளுக்குப் பாதகமாக போல்ஷெவிக்குகளுக்கு உதவக் கூடியவையாகவும் பலப் படுத்தக் கூடியவையாகவும் இருந்தன என்பது உண்மை. குட்டிபூர்ஷ்வா ஜனநாயகவாதிகள் (மென்ஷெவிக்குகள் உட்பட) தவிர்க்க முடியாதவாறு பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையேயும், பூர்ஷ்வா ஜன நாயகத்துக்கும் சோவியத் அமைப்பு முறைக்கும் இடையே யும், சீர்திருத்தவாதத்திற்கும் புரட்சிவாதத்திற்கும் இடை யேயும், தொழிலாளர் மீதுள்ள பற்றுக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மீதுள்ள பயத்துக்கும் இடையேயும் என்றபடி ஊசலாடுகின்றனர். இந்த ஊசலாட்டங்களைப் புறக்கணிப்பது என்பதின்றிப் பயன்படுத்திக் கொள்வதே கம்யூனிஸ்டுகளுக்குரிய முறையான செயல்தந்திரமாயிருக்க வேண்டும்; அப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னல் முதலாளி வர்க்கத்தின் பக்கம் திரும்பிக் கொள்கிறவர்களோடு போராடுவதுடன் கூடுதலாக, பாட் டாளி வர்க்கத்தின் பக்கம் திரும்பிவந்து கொண்டிருக்கும் நபர்களுக்கு—பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் அவர்கள் எப்பொழுது திரும்பி வருகிருர்களோ அப்பொழுது, எந்த அளவுக்குத் திரும்பிவருகிருர்களோ அந்த அளவுக்கு—சலு கைகள் கொடுப்பது அவசியமாகிறது. செவ்வையான செயல் தந்திரங்களைச் செயல்படுத்தியதின் விளைவு என்னவெனில், மென்ஷெவிஸம் நம் நாட்டில் உடையத் தொடங்கியது,

மேலும் உடைந்துவருகிறது, பிடிவாதமாகச் சந்தர்ப்ப வாதத்தைப் பின்பற்றும் தலைவர்கள் தனிமைப்படுத்தப் பட்டுவருகின்றனர், தொழிலாளர்களில் மிகமிகச் சிறந்தவர்களும் குட்டிபூர்ஷ்வா ஜனநாயகவாதிகளில் மிகமிகச் சிறந்த நபர்களும் நமது முகாமுக்குக் கொண்டுவரப்படுகிறார்கள் என்பதே. இது ஒரு நீண்ட நிகழ்ச்சிப் போக்காகும்; ''சமரசங்கள் கூடாது, தந்திரோபாயங்கள் கூடாது'' என்கிற அவசரக் குடுக்கையான ''முடிவு'' புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கைப் பலப்படுத்தும், அதன் சக்திகளை விரிவுபடுத்தும் வேலைக்குத் தீங்குதான் விளைக்க முடியும்.

கடைசியாக, ஜெர்மனியில் ''இடதுசாரிகள்'' செய்கிற சந்தேகமற்ற தவறுகளில் ஒன்று, வெர்ஸேய் ஒப்பந்தத்தை[28] அங்கீகரிக்கக் கூடாது என்று பட்டவர்த்தனமாக வற்புறுத்துவதாகும். எவ்வளவுக்கெவ்வளவு ''கனத்துடனும்'' ''பகட்டுடனும்'' ''அழுத்தத்துடனும்'' கண்டிப்புடனும் இந்தக் கருத்து வரையறுக்கப்படுகிறதோ—எடுத்துக்காட்டாக, ஹோர்னர் அப்படிச் செய்கிறார்—அவ்வளவுக்கவ்வளவு அது அறிவுக்குறைவானதாகத் தோன்றுகிறது. ஆந்தாந்நுக்கு[29] எதிராக யுத்தம் செய்வதற்காக ஜெர்மன் பூர்ஷ்வா ர்க்கத்தோடு கூட்டாணி வேண்டுமென்று கோரிப் பேசுகிற ளவுக்குச் செல்கிற ''தேசிய போல்ஷெவிஸத்தின்'' (லௌ பன்பர்கும் பிறரும்) விபரீதமான அபத்தங்களை மறுத்தால் மட்டும், இன்றைய சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நிலைமைகளில், போதாது. ஒரு சோவியத் ஜெர்மனி (துரிதமாக ஒரு ஜெர்மன் சோவியத் குடியரசு தோன்றுமேயானால்) கொஞ்சகாலத்துக்கு வெர்ஸேய் ஒப்பந்தத்தை அங்கீகரித்து அதற்குக் கீழ்ப்பணிந்திருக்க வேண்டிய கட்டாய நிலையை ஒப்புக்கொள்ளாத செயல்தந்திரங்கள் அடிப்படையிலேயே தவறானவையாகும் என்று புரிந்துகொண்டு தீர வேண்டும். இதிலிருந்து, ''சுயேச்சையாளர்கள்''—அரசாங்கத்தில் ஷீடெமன் வகையறாக்கள் இருந்த நேரத்தில், ஹங்கேரியில் சோவியத் ஆட்சி[30] இன்னமும் வீழ்த்தப்படாதிருக்கும் பொழுது, வியென்னாவில் ஏற்படும் ஒரு சோவியத் புரட்சி[31] சோவியத் ஹங்கேரியை ஆதரிக்கக்கூடிய சாத்தியப்பாடு இன்னமும் இருந்து வந்த பொழுது—வெர்ஸேய் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமென்று, அந்த நிலைமை

களின் கீழ், கோரிக்கையை முன்வைத்தது சரி என்று ஆகி விடாது. அந்தச் சமயத்தில் ''சுயேச்சையாளர்கள்'' மிகவும் சாமர்த்தியக் குறைவாக நடந்து கொண்டு தந்திரோபாயங் களைக் கையாண்டார்கள்; ஏனெனில், ஷீடெமன் துரோகி களுக்கு இவர்கள் ஏறக்குறையப் பொறுப்பு எடுத்துக் கொண் டார்கள், ஷீடெமன் வகையறுவை எதிர்த்து ஈவிரக்கமற்ற (மிகக் கல்நெஞ்சுடைய) வர்க்கப் போராட்டத்தை நடத்தக் கோரும் நிலையிலிருந்து ஒரு ''வர்க்கமற்ற'' அல்லது ''வர்க் கத்திற்கு அப்பாற்பட்ட'' கருத்து நிலைக்கு ஏறத்தாழ இழிந்து விட்டார்கள்.

ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் தங்கள் கையைக் கட்டிப் போட்டுக்கொண்டு கம்யூனிஸம் வெற்றிபெறுமேயானல் வெர்ஸேய் ஒப்பந்தத்தை நிச்சயமாகவும் கண்டிப்பாகவும் மறுத்து விடுவோம் என்று வாக்குறுதியளிக்கக் கூடாது என்கிற வெளிப்படையான நிலைமை இப்போதுள்ளது. அது முட்டாள்தனமானதாயிருக்கும். அவர்கள் இவ்வாறு சொல்ல வேண்டும்: சோவியத் ருஷ்யாவுடனும் சோவியத் ஹங்கேரி யுடனும் ஒரு கூட்டணி அமைப்பதற்குரிய வாய்ப்புக்களைத் தடுத்த (ஒரு அளவுக்கு நேரடியாகக் கெடுத்த) பல துரோகத் தனமான செய்கைகளை ஷீடெமன் வகையறுவும் காவுத்ஸ்கி வகையறுவும் புரிந்துள்ளனர். அப்படிப்பட்ட ஒரு கூட்டணி அமைவதற்கு வசதிசெய்வதற்கும் பாதையைச் செப்பனிடுவதற்கும் கம்யூனிஸ்டுகளாகிய நாம் நம்மால் முடிந்ததனைத்தையும் செய்வோம்; மேலும், என்ன நேரிட்டாலும் சரி, வெர்ஸேய் ஒப்பந்தத்தை மறுக்கும் கட்டாயம் நமக்கு எவ்விதத்திலும் இல்லை, அதிலும் உடனடியாக மறுக்கும் கட்டாயம் நமக்கு எவ்விதத்திலும் இல்லை. அதை வெற்றிகரமாக மறுதளிக்கும் சாத்தியக்கூறு ஜெர்மன் சோவியத் இயக்கத்தின் வெற்றிகளை மட்டுமின்றி சர்வதேச சோவியத் இயக்கத்தின் வெற்றிகளை யும் பொறுத்திருக்கும். ஷீடெமன் வகையறுவும் காவுத்ஸ்கி வாதிகளும் இந்த இயக்கத்துக்குத் தடங்கல் செய்தனர்; நாம் உதவிசெய்து வருகிறேம். அதுதான் விஷயத்தின் சாராம்சப்பொருள், அதுதான் அடிப்படையான வேறுபாடு. மேலும், நமது வர்க்கப் பகைவர்களாகிய சுரண்டுபவர் களும், அவர்களின் ஏவலாட்களாகிய ஷீடெமன் வகையறு வும் காவுத்ஸ்கிவாதிகளும் ஜெர்மன் சோவியத் இயக்கத்தை

யும் சர்வதேச சோவியத் இயக்கத்தையும், ஜெர்மன் சோவியத் புரட்சியையும் சர்வதேச சோவியத் புரட்சியையும் ஒருங்கே பலப்படுத்தும் பல வாய்ப்புக்களைத் தவற விட்டுவிட்டார்களென்றால் அந்தப் பழி அவர்களைச் சேர்ந்ததேயாகும். ஜெர்மனியில் சோவியத் புரட்சி சர்வதேச சோவியத் இயக்கத்தைப் பலப்படுத்தும்; அந்த இயக்கமே வெர்ஸேய் ஒப்பந்தத்திற்கு எதிரான, பொதுவாகவே சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, ஆக மிகப் பலம் வாய்ந்த அரணாகும் (அது ஒன்றே நம்பகமான, வெல்ல முடியாத, உலகரீதியான அரணுமாகும்). வெர்ஸேய் ஒப்பந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு முற்றாக, கறாராக, உடனடியாக முதலிடம் தருவது, ஏகாதிபத்தியத்தால் நசுக்கப்படும் பிற நாடுகளை ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலையடையச் செய்யும் பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளி இதற்கு முதலிடம் தருவது, பிலிஸ்டைன் தேசியவாதமாகும்(காவுத்ஸ்கிவாதிகள், ஹில்பெர்டிங்கு வகையறுக்கள், ஆட்டோ பௌவர் கூட்டத்தினர் ஆகியோருக்கு லாயக்கானதே அது), புரட்சிகரமான சர்வதேசியமல்ல. ஜெர்மனி உட்படப் பெரிய ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்றில் பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூக்கியெறிதல் என்பது சர்வதேசப் புரட்சிக்கு ஆதாயமாகும், அதன்பொருட்டு வெர்ஸேய் ஒப்பந்தம் இன்னமும் அதிக காலம் நீடிப்பதைச் சகித்துக் கொள்ள முடியும், தேவைப்பட்டால் சகித்துக்கொள்ள வேண்டும் என்கிற அளவுக்கு அது ஒரு ஆதாயமாகும். ருஷ்யா தன்னந் தனியாக, புரட்சிக்குச் சாதகமாகப் பல மாதங்கள் பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தைச் சகித்துக் கொண்டு இருக்க முடிந்ததென்றால், சோவியத் ருஷ்யாவுடன் நேச உடன்பாடு கொண்டுள்ள சோவியத் ஜெர்மனி புரட்சிக்குச் சாதகமாக அதைவிட அதிகக் காலத்துக்கு வெர்ஸேய் ஒப்பந்தம் நீடித்திருப்பதைச் சகித்துக் கொண்டு இருப்பது அசாத்தியமேயல்ல.

பிரான்ஸ், இங்கிலாந்து, முதலியவற்றின் ஏகாதிபத்தியவாதிகள் ''வெர்ஸேய் ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம் என்று சொல்லிப் பாருங்கள், பார்ப்போம்!'' என்று ஜெர்மன் கம்யூனிஸ்டுகளை ஆத்திரமூட்ட முயல்கின்றனர், ஒரு வலை விரிக்க முயல்கின்றனர். இடதுசாரிக் கம்யூனிஸ்டு

களோவெனில், தந்திரமுள்ள, இந்தத் தருணத்தில் அதிக பலமுள்ள பகைவனை எதிர்த்துச் சாதுர்யமாகத் தந்திரோபாயங்களைக் கையாளுவதற்கு மாருக, ''இப்போது வெர்ஸேய் ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்திடுகிறேம்'' என்று கூறுவதற்கு மாருக, தங்களுக்கு விரித்துள்ள வலையிலே சிறுபிள்ளைத்தனமாகப் போய்விழுகிருர்கள். முன்கூட்டியே நமது கைகளைக் கட்டிப்போட்டுக் கொள்வது, இன்று நம்மைவிட மேலான ஆயுதபாணியாயிருக்கும் பகைவனிடம் நாம் சண்டையிடப் போகிறேமா, எப்பொழுது சண்டையிடப் போகிறேம் என்றெல்லாம் பகிரங்கமாகக் கூறுவது, முட்டாள்தனமேயன்றிப் புரட்சித்தன்மையல்ல. எதிரிக்குத்தான் சாதகம், நமக்கல்ல என்று வெளிப்படையாகத் தெரிகிற நேரத்தில் போருக்கு ஒத்துக்கொள்வது ஒரு குற்றமேயாகும்; வெளிப்படையாகப் பாதகமென்று தெரிகிற ஒரு போரைத் தவிர்த்துத் தப்பிக்க வேண்டி ''தந்திரோபாயங்களைக் கையாளவும், உடன்பாடு காணவும், சமரசம் செய்யவும்'' திறனற்று இருக்கிற புரட்சிகரமான வர்க்கத்தின் அரசியல் தலைவன் தம்பிடிக்குப் பிரயோஜனமில்லாதவனே.

நூல்திரட்டு, தொகுதி 41

*1920, ஏப்ரில்-மே மாதங்களில்*
*எழுதப்பட்டது*

*1920, ஜூலை, பெத்ரோகிராதில்,*
*அரசாங்கப் பதிப்பகத்தாரால்*
*சிறுநூலாகப் பதிப்பிக்கப்பட்டது*

# புரட்சிகரமான துர்ச்சாகசவாதம்

என்கிற கட்டுரையிலிருந்து

I

ருஷ்ய வரலாறு வாயுவேக மனோ வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் படியான, அமைதியான பல பத்தாண்டுக்காலப் பகுதிகளைவிட ஒரு ஆண்டு சில சமயங்களில் அதிக பொருட்குறிப்புள்ளதாயிருக்கும் படியான புயல் வீசியடிக்கும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சீர்திருத்தத்திற்குப் பிந்திய அரைநூற்றாண்டுக் காலப்பகுதியின் விளைவுகள் தொகுக்கப் பெற்று வருகின்றன, வரப் போகின்ற பல ஆண்டுகளுக்கு நாடு முழுவதின் தலைவிதியை நிர்ணயிக்கும் சமுதாய, அரசியல் கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு வருகிறது. புரட்சி இயக்கம் வியக்கத்தக்க வேகத்துடன் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், ''நமது போக்குகள்'' அசாதாரணமான வேகத்தில் முதிர்ந்தும் (காய்ந்து கருகியும்) வருகின்றன. இவ்வளவு வேகமாக வளர்ந்து வரும் ருஷ்யா போன்ற ஒரு முதலாளித்துவ நாட்டின் வர்க்க அமைப்பில் உறுதியாக வேர் கொண்டுள்ள போக்குகள் அநேகமாக உடனுக்குடன் ''தம்முடைய சொந்த மட்டத்தை'' எட்டுகின்றன, தடம் தடவிச்சென்று தாம் சம்பந்தப்பட்டுள்ள வர்க்கங்களுடன் சேர்கின்றன. திரு. ஸ்துரூவே அவர்களின் பரிணாமம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்; ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்புதான் தன்னை மார்க்ஸீயவாதி என்று சொல்லிக் கொண்ட இவருடைய ''முகமூடியைக் கிழித்தெறிவதென்று'' புரட்சிகரமான தொழிலாளர்கள் உத்தேசித்திருந்தார்கள்; மிதவாத நிலப்பிரபுக்களின்—தாங்கள் ருஷ்ய மண்ணில் ஊறியவர்கள் என்பது பற்றியும் தங்கள் நிதானப்புத்தி பற்றியும் பெருமைப்பட்டுக் கொள்கிறவர்களின்—தலைவனாக (அல்லது ஏவலாளாகவா?) அவர் தானாகவே முகமூடியின்றி இப்போது வெளிவந்திருக்கிறார். மற்றொரு புறத்தில், படிப்பாளிப்

பகுதியைச் சேர்ந்த இடைநிலைப்பட்ட, வரையறையற்ற மக்கள் பகுதிகளின் கருத்துக்களின் சம்பிரதாய ஸ்திர மின்மையை வெளிப்படுத்தும் போக்குகள் திட்டவட்டமான வர்க்கங்களோடு உடன்பட்டுப்போவதற்குப் பதிலாக படா டோபமான பிரகடனங்கள் செய்கின்றன; நிகழ்ச்சிகளின் இடியோசை பலமாகப் பலமாக, இந்தப் பிரகடனங்களின் இரைச்சலும் அதிகமாகிறது. ''பேயிரைச்சலாவது போடு கிறோமே நாங்கள்''—இதுவே நிகழ்ச்சிகளின் சுழலில் சிக்கிச் சுழல்கிற, தத்துவக் கோட்பாடுகளோ சமுதாய வேர்களோ இல்லாத, புரட்சி மனோபாவங்கொண்ட பல நபர்களின் கோஷம்.

''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும்'' இந்த ''இரைச்சல் போடும்'' போக்குகளைச் சேர்ந்தவர்களே; அவர்களின் முகத் தோற்றம் மேலும் மேலும் தெளிவாக வெளிப்பட்டு வரு கிறது. இந்த முகத்தோற்றத்தை இன்னும் நன்றாக ஒரு பார்வை பார்க்கவும், சமுதாயத்தின் உண்மையான புரட்சி கர வர்க்கத்துடன் நெருங்கிய பிணைப்புகள் இன்றித் தாங்கள் ஒரு தனித்த போக்காக இருக்க முடியாது என்று அவர் களுக்குப் புலப்படப் புலப்படத் தொழிலாளி வர்க்கத்தின் நட்பைப் பெற முயலும் இந்தப் பேர்வழிகளின் உண்மை யான இயல்பைப் பற்றி ஒரு தெளிவான கருத்தை உரு வாக்கிக் கொள்ளவும் தொழிலாளி வர்க்கத்துக்கு நேரம் வந்து விட்டது.

சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் உண்மையான முகத் தைத் திறந்து காட்ட மூன்று சந்தர்ப்பங்கள் உதவி செய் துள்ளன. அவை பின்வருமாறு: முதலாவதாக, புரட்சிகர மான சோஷல்-டெமாக்ராட்டுகளுக்கும், ''மார்க்ஸீயத்திற்கு விமர்சனம்'' என்கிற பதாகையின்கீழ் தலைதூக்கிவரும் சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிளவு. இரண்டாவதாக, பால்மாஷோவ் ஸிப்யாகினைக் கொலை செய்ததும், பயங்கரவாதத்தின் பக்கம் ஒரு புதிய திருப்பம் சில புரட்சிக்காரர்களின் உணர்ச்சிகளிலே ஏற்பட்டிருப்பது மாகும். மூன்றாவதாக, பிரதானமானதாக, விவசாயி மக் களிடையே இன்று கடைசியாக ஏற்பட்டுள்ள இயக்கம்; இரண்டுங்கெட்டான் நிலையில் இருப்பதை, எந்த ஒரு வேலைத் திட்டமுமில்லாதிருப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறவர்

களை, post factum*, வேலைத்திட்டம்போல் வெளித் தோற்றம் கொண்ட ஒன்றை வெளியிடும்படி கட்டாயப்படுத்தியிருக்கிறது. இந்த மூன்று சந்தர்ப்பங்களையும் ஆராய முற்படுவோம்; ஆனால் இதற்கு ஒரு நிபந்தனை உண்டு—ஒரு செய்தித்தாள் கட்டுரையில் விவாதத்திலுள்ள பிரதான அம்சங்களைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்புரை மட்டுமே கொடுக்க இயலும்; மேலும் ஒரு பத்திரிகைக் கட்டுரையிலோ, சிறு புத்தகத்திலோ இந்த விஷயத்தை நான் மீண்டும் எடுத்துக்கொண்டு இன்னும் அதிக விபரமாக விளக்கப்பெரும்பாலும் நேரிடலாம்.

''வேஸ்த்னிக் ரூஸ்கோய் ரெவலூத்ஸியி''** என்ற பத்திரிகையின் இரண்டாம் இதழில்தான், ''உலக முன்னேற்றமும் சோஷலிஸத்தின் நெருக்கடியும்'' என்கிற தலைப்பிட்ட, கையெழுத்திடாத தலையங்கத்திலே, கோட்பாடு பற்றிய தத்துவார்த்த அறிக்கையை வெளியிடுவதென்று சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் இறுதியாகத் தீர்மானித்தனர். தத்துவார்த்த விவகாரங்களில் பச்சையான கோட்பாடின்மை ஊசலாட்டம் (அத்துடன் அலங்காரச் சொற்பெருக்கின் பின்னே இதை மறைத்துவிடுகிற கலை) பற்றி ஒரு தெளிவான கருத்துப்பெற விரும்பும் அனைவருக்கும் இந்தக் கட்டுரையைப் பலமாக சிபார்சு செய்கிறோம். மிகவும் கவனிப்புக்குரிய இந்தக் கட்டுரையின் முழு உள்ளடக்கத்தையும் ஒரு சில சொற்களில் வெளியிடக்கூடும். சோஷலிஸம் ஒரு உலக சக்தியாக வளர்ந்துவிட்டது, புரட்சிக்காரர்கள் (''மரபு விரும்பிகள்'') சந்தர்ப்பவாதிகளை (''விமர்சகர்கள்'') எதிர்த்து நடத்தும் யுத்தத்தின் விளைவாக சோஷலிசம் (அதாவது மார்க்ஸீயம்) பிளவுண்டு வருகிறது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளாகிய நாங்கள் ''நிச்சயமாக'' என்றைக்கும் சந்தர்ப்பவாதத்திடம் அனுதாபம் கொண்டதில்லை; ஆனால் இந்த ''விமர்சனத்தால்'' நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம், அது நம்மை ஒரு வறட்டுச் சூத்திரத்திலிருந்து விடுவித்திருக்கிறது; இந்த வறட்டுச் சூத்திரத்தைத் திருத்தியமைக்க நாங்களும்கூடத்தான் பாடுபட்டுவருகிறோம்;—

* காரியம் நடந்து முடிந்தபிறகு (லத்தீன்).—(மொ-ர்.)
** ''ருஷ்யப் புரட்சியின் கட்டியக்காரன்''.—(மொ-ர்.)

விமர்சனம் என்று காட்டுவதற்கு (பூர்ஷ்வா-சந்தர்ப்பவாத விமர்சனம் தவிர) எங்களிடம் இதுவரை ஏதுமில்லை என்ற போதிலும், எதையும் இதுவரை நாங்கள் திருத்தியமைக்க வில்லை என்ற போதிலும், தத்துவத்திலிருந்து விடுவித்துக் கொண்ட சுதந்திரத்தின் பெருமை எங்களைச் சாரும். இன்னும் அதிகமாக அந்தப் பெருமை எங்களுக்குத்தான் என்பதற்குக் காரணம், தத்துவத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் என்கிற வகையில் நாங்கள் பொதுவான ஒற்றுமைக்கு உறுதியாக நிற்கிறோம், மேலும் கோட்பாடு ரீதியான எல்லாத் தத்து வார்த்தச் சண்டைகளையும் கடுமையாகக் கண்டிக்கிறோம். ''ஒரு ஆழ்ந்த போக்குள்ள புரட்சி ஸ்தாபனம் சமுதாயத் தத்துவம் பற்றிய எப்போதும் வேற்றுமை உண்டாக்கும் சர்ச் சைக்குரிய பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியைக் கைவிடும்; எனினும் இது தத்துவாசிரியர்கள் அவற்றின் தீர்வைத் தேடிச் செல்வதை நிச்சயமாகத் தடங்கல் செய்யலாகாது'' என்று ''வேஸ்த்னிக் ரூஸ்கோய் ரெவலூத்ஸியி'' (இதழ் 2, பக்கம் 127) ஆழ்ந்த முறையில் நமக்கு உறுதிமொழி சொல்கிறது,—அல்லது, இன்னமும் பட்டவர்த்தனமாகச் சொல்வதென்றால், எழுதுகிறவர்கள் எழுதிக் கொண்டிருக் கட்டும், வாசிக்கிறவர்கள் வாசித்துக் கொண்டிருக்கட்டும், இதற்கிடையே, அவர்கள் தம் காரியத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கையில், எஞ்சிநிற்கும் சூன்யத்தைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி கொண்டாடுவோம் என்பதேயாகும்.

சோஷலிஸத்திலிருந்து திரிந்து செல்கிற இந்தத் தத்து வத்தை (உண்மையில் சர்ச்சைகள் ஏற்படுமேயானால்) சிரத் தையோடு பகுத்தாராயத் தேவையில்லை என்பது நிச்சயம். நமது அபிப்பிராயத்தில், சோஷலிஸத்தின் நெருக்கடி கொஞ் சத்துக்குக் கொஞ்சமேனும் காரியப்பற்றுள்ள எந்த சோஷ லிஸ்டுகளையும் தத்துவத்தின்பால் இரட்டிப்புக் கவனம் செலுத்துமாறு—ஒரு கறாராக வரையறுத்த நிலையை மேலும் உறுதியோடு மேற்கொள்ளுமாறு,—தமக்கும் தயங்குகிற, நம்ப முடியாத பேர்வழிகளுக்கும் இடையே மேலும் கூராக வேறுபாடு குறிக்கும் எல்லைக்கோட்டைக் கிழிக்குமாறு—கட்டாயப்படுத்துகிறது. ஆனால், சோஷலிஸ்ட்-புரட்சிவாதி களின் அபிப்பிராயத்திலோ, குழப்பம், பிளவுகள் போன்ற விவகாரங்கள் ''ஜெர்மானியர்களிடையேகூட'' சாத்திய

மானல் ருஷ்யர்களாகிய நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது பற்றிய நமது அறியாமையைக் குறித்து நாம் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டியது கடவுளின் சித்தமேயாகும். நமது அபிப்பிராயத்தில், தத்துவமற்ற நிலை ஒரு புரட்சிகரமான போக்கை வாழ உரிமையற்றதாக ஆக்கி விடுகிறது, விரைவாகவோ தாமதித்தோ அதை அரசியல் திவாலான நிலைக்குத் தவிர்க்க முடியாதபடி தண்டித்துவிடுகிறது. ஆனல் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் அபிப்பிராயத்திலோ, தத்துவமற்ற நிலை ஒரு மிக நேர்த்தியான விஷயம், ''ஒற்றுமைக்கு'' மிகச் சாதகமான விஷயமாகும். அவர்களோடு நாம் உடன்பாடு காண முடியாது என்று புலப்படுகிறது; ஏனெனில் நாம் பேசுகிற மொழிகூட வேறு பட்டிருக்கிறது என்பதே உண்மை. ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஒருவேளை அவர்களைத் திரு. ஸ்துரூவே நியாயத்தைப் பார்க்கச் செய்யலாம்; அவரும் (இன்னும் அதிகச் சிரத்தையுடன்) வறட்டுச் சூத்திரத்தை ஒழிப்பது பற்றிப் பேசுகிருர், நமது ''வேலை'' (பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டுகோள் விடுகிற எந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் உள்ள வேலையைப்போல) வேறுபடுவது அல்ல, ஒன்றுபடுவதேயாகும் என்று சொல்கிருர். ஒற்றுமைக்காக சோஷலிஸத்திலிருந்து விடுதலை பெறுதல், சோஷலிஸத்தினின்று விடுதலை பெறுகிற சந்தர்ப்பத்தில் ஒற்றுமை என்கிற தமது நிலை உண்மையாகக் குறிக்கும் பொருளைத் திரு. ஸ்துரூவேயின் உதவியைக் கொண்டு, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் என்றைக்கும் பார்க்கவே மாட்டார்களா?

இரண்டாவது விஷயத்துக்கு, பயங்கரவாதம் என்கிற பிரச்சினைக்கு, வருவோம்.

பயங்கரவாதத்தைத் தாங்கிப் பாதுகாப்பதில்—இது பயனற்றது என்று ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் அனுபவம் எவ்வளவோ தெளிவாக நிரூபித்திருக்கிறது—மக்களிடையே வேலை செய்வதோடு தொடர்புபடுத்தித்தான் தாங்கள் பயங்கரவாதத்தை அங்கீகரிப்பதாகவும், ஆகவே இந்தப் போராட்ட முறையின் பயனுள்ள தன்மையை மறுக்க (வெகு காலத்துக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது என்பது என்னவோ உண்மைதான்) ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டுகள் பயன்படுத்தும் வாதங்கள் எங்களுக்குப் பொருந்தா என்றும் வலி

யுறுத்தி முகமெல்லாம் நீலம் பாரித்துப் போகுமளவுக்கு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் பேசுகிறுர்கள். ''விமர்சனம்'' பற்றிய அவர்களுக்குள்ள அதே கண்ணேட்டத்தைப் போன்ற தொரு கண்ணேட்டம் இங்கேயும் திரும்பத் தெரிகிறது. நாங்கள் சந்தர்ப்பவாதிகளல்ல என்று சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகள் கூக்குரலிடுகின்றனர்; அதே நேரத்தில் வேறெந்தக் காரணத்திற்காகவுமின்றிப் பச்சையான சந்தர்ப்பவாத விமர் சனத்திற்கென்றே பாட்டாளி வர்க்க சோஷலிஸம் என்கிற வறட்டுச் சூத்திரத்தை அவர்கள் மூலையிலெடுத்துப் போடுகிறுர்கள். நாங்கள் பயங்கரவாதிகளின் தவறுகளைத் திரும்பச் செய்யவில்லை, மக்களிடையே வேலைசெய்வதினின்று கவனத்தைஅப்பால் திருப்பவில்லை என்று சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகள் நமக்கு உறுதி கூறுகிறுர்கள்; அதே நேரத்தில் ஸிப் யாகினை பால்மாஷோவ் கொலைசெய்தது போன்ற செயல் களை—இந்தச்செயலுக்கும் மக்களுக்கும் எந்த விதத்திலும் சம் பந்தமில்லை என்றும் அதைச் செய்து முடித்த முறையிலிருந்தே அதற்கும் மக்களுக்கும் சம்பந்தம் இருந்திருக்க முடியாது என்றும் இந்தப் பயங்கரவாதச் செயலைப் புரிந்த நபர்கள் மக்களிடமிருந்து எந்தத் திட்டமான நடவடிக்கையையோ ஆதரவையோ நம்பியிருக்கவுமில்லை, எதிர்பார்க்கவும் இல்லை என்றும் எல்லோரும் தெளிவாகத் தெரிந்தும் கண்டும் இருந் துங்கூட—உற்சாகத்தோடு கட்சிக்கு சிபார்சு செய்கிறுர்கள். தன் வர்க்கப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் புரட்சிகரமான வர்க்கத்தின் கட்சி ஆவதற்கு முயற்சிகூடச் செய்யாமல் தொடக்கத்திலிருந்தே சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தினின்று எப்போதும் தூரவிலகி நின்றனர், இன்னும்கூட விலகி நின்றபடிதான் இருந்து வருகிறுர்கள் என்கிற உண்மையோடு அவர்களுக்குப் பயங்கரவாதத்தின்பால் உள்ள மனச்சார்பு காரணபூர்வமாக நெருங்கிப் பிணைந்திருக்கிறது என்பதை சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகள், தங்கள் பேதைமையின் காரணமாக, உணரவில்லை. மிதமிஞ்சிய ஆர்வத்தோடு செய்யும் ஆட்சேபணைகள் இத் தனை காரமான மசாலா சேர்க்கத் தேவைப்படுகிற எந்த விஷயத்தின் மதிப்பைப் பற்றியும் அவநம்பிக்கை கொள்ள வும் சந்தேகிக்கவும் அடிக்கடி கொண்டுபோய் விடுகின்றன. ''பயங்கரவாதத்திஞல் நாங்கள் மக்களிடையே வேலை

செய்வதைப் பின்னணிக்குத் தள்ளி வைக்கவில்லை'' என்கிற சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் உறுதிமொழிகளைப் படிக்கும் போது, ''இந்த ஆட்சேபணைகள் அவர்களுக்குச் சலிப்பூட்டவில்லையா?'' என்கிற இந்த வார்த்தைகளே அடிக்கடி என் நினைவுக்கு வருகின்றன. என்ன இருந்தாலும், மக்களை உண்மையாகவே தட்டியெழுப்பி எழுச்சி கொள்ளச் செய்கிற சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் இயக்கத்திலிருந்து ஏற்கெனவே அப்பாற்போய்விட்ட அதே பேர்வழிகளிடமிருந்து இந்த உறுதிமொழிகள் வருகின்றன; ஏதாவதொரு வகையான தத்துவத்தின் துண்டு துக்கடாக்களை எட்டிப் பிடித்துத் தொங்கியபடி, இந்த இயக்கத்திலிருந்து தொடர்ந்து விலகிச் சென்று கொண்டிருக்கிற பேர்வழிகளிடமிருந்து அவை வருகின்றன.

மேலே கூறியதற்கு ஒரு நேர்த்தியான எடுத்துக்காட்டாக 1902, ஏப்ரில் 3ல் ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சி'' வெளியிட்ட துண்டுப்பிரசுரம் பயன்படக் கூடும். அது ஒரு மிகமிக யதார்த்தமான மூலமாகும்; நேரிலிருக்கிற தலைவர்களுடன் நெருங்கியுள்ள மிகமிக நம்பகமான மூலமாகும். ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயாவின்'' (இதழ் 7, பக்கம் 24) மதிப்புள்ள வாக்குமூலத்தின்படி, இந்தப் பிரசுரத்தில் ''பயங்கரவாதப் போராட்டம் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கும் விதம் கட்சியின் கருத்துக்களோடு முற்றாகப் பொருந்துகின்றது.''*

---

* இந்த விஷயத்திலும் ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயா'' [''புரட்சிகர ருஷ்யா''] செப்பிடுவித்தை செய்கிறது என்பது உண்மையே. ஒரு புறத்தில்—''முற்றாகப் பொருந்துகிறது'', மற்றொரு புறத்தில்—''மிகையுரைகளைப்'' பற்றி ஒரு குறிப்பு. ஒரு பக்கத்தில், இந்தத் துண்டுப் பிரசுரம் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் ''ஒரு குழுவினிடமிருந்து'' மட்டுமே வந்தது என்று ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயா'' பிரகடனப்படுத்துகிறது. இன்னொரு பக்கத்தில், ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சியால் வெளியிடப் பெற்றது'' என்கிற முத்திரையை அந்தத் துண்டுப்பிரசுரம் தாங்கி நிற்பது உண்மை. மேலும், அது இதே ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயாவின்'' கோஷத்தை (''போராட்டத்தின் வழியே உரிமைகளைப் பெறுவாய்'') தாங்கியிருக்கிறது.

பயங்கரவாதிகளின் ''கடைசிகடைசியாக வந்த'' வாதங்களின் மோஸ்தரைக் குறிப்பிடத்தக்கத் திட்டத்துடன் ஏப்ரில் 3ம் தேதிய துண்டுப்பிரசுரம் பின்பற்றுகிறது. எடுத்த எடுப்பிலே கண்ணைக் கவரும் சொற்கள் பின்வருபவையே: ''நாங்கள் பயங்கரவாதத்தை ஆதரித்துப் பேசுவது மக்களிடையே வேலை செய்வதற்கு மாற்றாக அல்ல, அதே வேலையைச் செய்வதற்காகவும், அத்துடன் இதையும் ஒரே காலத்தில் சேர்த்துக் கொள்வதற்காகவுந்தான்''. குறிப்பாக இந்தச் சொற்கள் கண்ணைக் கவரக் காரணம், பிரசுரத்தின் மற்ற வாசகத்தை விட மூன்று மடங்கு பெரிதான எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளதே (நிச்சயமாக, இந்த உத்தியை ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயா'' திரும்பக் கையாள்கிறது). உண்மையிலே இதெல்லாம் அவ்வளவு இலேசானதாம்! ''மாற்றாக அல்ல, சேர்த்துத்தான்'' என்று கொட்டை எழுத்துக்களில் போட்டால் போதும்—சோஷல்-டெமாக்ராட்டுகளின் எல்லா வாதங்களும், வரலாறு கற்பித்த எல்லாமே, இற்று விழுந்துவிடுமாம். ஆனல் துண்டுப் பிரசுரம் முழுவதையும் படித்தாலே போதும், கொட்டை எழுத்துக்களிலுள்ள ஆட்சேபணைகளில் மக்களின் பெயர் வீணாகவே உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுகொள்வீர்கள். ''இருட்டிலிருந்து உழைப்பாளி மக்கள் வெளிவரும்'' ''மக்களின் பலம்மிகுந்த எழுச்சியலையானது இரும்பு வாயிற்கதவுகளைத் தூள்தூளாக்கும்'' அந்த நாள்—''ஐயோ!'' (பிரசுரத்தில் உள்ளபடியே, ''ஐயோ!'') ''இன்னமும் வெகுதூரத்தில் இருக்கிறதே, எதிர்காலத்தில் கொள்ளை கொள்ளும் பலியைப் பற்றி நினைக்கவே பயமாயிருக்கிறதே! ''ஐயோ, இன்னமும் வெகுதூரத்தில் இருக்கிறதே'' என்கிற இந்தச் சொற்கள்

---

இந்தக் கூச்சந்தரும் விஷயத்தைப் பிரஸ்தாபிக்க ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயாவுக்குப்'' பிடிக்கவில்லை என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்; எனினும் இப்படிப்பட்ட வழக்குகளில் கண்பொத்தி விளையாட்டு விளையாடுவது அசிங்கத்தனமாகும் என்றே நாங்கள் நம்புகிறோம். ''பொருளாதாரவாதம்'' இருந்தது புரட்சிகரமான சோஷல்-டெமாக்ரஸிக்கு இதே அளவுக்குப் பிடித்தமற்றுத்தான் இருந்தது. ஆனல் புரட்சிகரமான சோஷல்-டெமாக்ரஸியாரையும் தவருன வழியில் செலுத்தச் சிறிதேனும் முயற்சி செய்யாமல், அதைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியது.

மக்கள் இயக்கத்தைப் புரிந்துகொள்ளத் தவறுவதையும் அதில் நம்பிக்கையில்லாமையையும் பிரதிபலிக்கவில்லையா? ஏற்கெனவே உழைப்பாளி மக்கள் எழுச்சியடையத் தொடங்கியிருக்கும் உண்மையை வேண்டுமென்றே இகழ்ந்து கேலிசெய்வதல்லவா இந்த வாதத்தின் பொருள்? மேலும் கடைசியாக, இந்தச் சுவை நைந்தவாதம் எந்த அளவுக்கு உண்மையிலேயே அபத்தமாக இருக்கிறதோ அதே அளவுக்கு நன்கு ஆதாரப்பட்டிருப்பதாகக் கொண்டாலும் அதிலிருந்து தெட்டத் தெளிவாக வெளிப்படக் கூடிய விஷயம் பயங்கரவாதம் பயனற்றது என்பதே, ஏனெனில் உழைப்பாளி மக்கள் இல்லாமல் எல்லா வெடிகுண்டுகளுமே சக்தியற்றவை, நிச்சயமாகச் சக்தியற்றவை.

இதைத் தொடர்ந்து வருவதைச் சிறிது கேளுங்கள்: ''பயங்கரவாதத்தின் ஒவ்வொரு அடியும் எதேச்சாதிகார முறையின் பலத்தில் ஒரு பகுதியைப் பறித்து அந்தப் பலத்தையெல்லாம்(!) சுதந்திரத்துக்காகப் போராடுபவர்களுக்கு மாற்றித் தருகிறது (!)''. ''மேலும், பயங்கரவாதத்தைத் திட்ட முறையாகச் (!) செயல்படுத்தினுல் தராசின் முள் நம் பக்கம் கடைசியிலே சாயும் என்பது வெளிப்படை''. உண்மைதான், எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிவது என்னவெனில், இங்கே பயங்கரவாதிகளின் மிகப்பெரிய தப்பெண்ணங்களில் ஒன்ருகிய, அரசியல் கொலை தன்னியல்பாகவே ''பலத்தை மாற்றித் தருகிறது'' என்கிற தப்பெண்ணம் அதன் மிகக் கொச்சையான வடிவத்தில் தரப்பட்டிருப்பதுதான்! ஆக, ஒரு பக்கத்தில் பலத்தை மாற்றித் தருவது பற்றிய தத்துவம், மற்றொரு பக்கத்தில்—''மாற்ருக அல்ல; சேர்த்துத்தான்...''. இந்த ஆட்சேபணைகள் அவர்களுக்கே சலிப்பூட்டவில்லையா?

ஆனல் இது தொடக்கந்தான். அசல் விஷயம் இன்னும் வர இருக்கிறது. ''யாரை நாம் அடித்து வீழ்த்துவது?'' என்று சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சி கேள்வி போடுகிறது. அதற்குப் பின்வரும் பதிலும் தருகிறது: ஜார் மன்னனை அல்ல, மந்திரிகளைத்தான்; ஏனெனில் ''விஷயங்கள் தீவிரமாக முற்றிய நிலைக்குப் போக விடமாட்டார் ஜார் மன்னர்'' (!! அதை எப்படிக் கண்டுபிடித்தார்கள்??); மேலும் ''அது இன்னும் சுளுவானதுங்கூட'' (உள்ளபடியே அவர்கள்

சொல்வது இது!): ''கோட்டைக்குள்ளே சொகுசாகத் தங்கியிருக்கிற மாதிரி அரண்மனையிலே எந்த மந்திரியும் இருக்க முடியாது''. மேலும், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் ''தத்துவத்துக்கு'' ஒரு முன்மாதிரி என அமரத்துவமளிக்கத்தக்க பின்வரும் நியாயத்தோடு இந்த வாதம் முடிகிறது: ''மக்கள் கூட்டத்தை எதிர்க்க எதேச்சாதிகாரமுறையிடம் பட்டாளம் இருக்கிறது; புரட்சிகரமான ஸ்தாபனங்களை எதிர்க்க அதன் இரகசியப் போலீசும் சீருடையணிந்த போலீசும் இருக்கின்றன; ஆனால் இடையருமல், ஒருவருக்கொருவர் தெரியாமலே(!!), தாக்குதலுக்குத் தயாரித்துக் கொண்டும், தாக்கிக் கொண்டும் இருக்கும் நபர்களிடமிருந்தோ சிறு குழுக்களிடமிருந்தோ எது காப்பாற்றும் அதை?'' (இந்த ''அது'' என்ன வகையைச் சேர்ந்தது? எதேச்சாதிகார முறையையா இது குறிக்கிறது? சுலபமாக அடித்துக் கொல்லப்படக்கூடிய மந்திரி எனும் தாக்குக் குறியும் எதேச்சாதிகார முறையும் ஒன்றேதான் என்று ஆசிரியர் தன்னையறியாமலே ஒரு நிலையிலே வைத்துக் காட்டிவிட்டார்!).''பிடிக்கு அகப்படாமல் தப்பிப்பதற்கு எதிராக எந்தச் சக்தியும் பயன்படாது. எனவே, நம் கடமை தெளிவானது: எதேச்சாதிகார முறை நமக்கு விட்டு வைத்துள்ள(!) மரணம் என்கிற ஒரே சாதனத்தைக் கொண்டு ஆட்சியிலுள்ள எதேச்சாதிகார முறையின் ஒடுக்குகிறவர்கள் ஒவ்வொருவரையும் அகற்ற வேண்டியதுதான்.'' சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் பயங்கரவாதத்தை ஆதரித்துச் சிபார்சு செய்வதால் மக்களிடையே வேலை செய்வதைத் தாங்கள் பின்னணிக்குத் தள்ளிவிடவில்லை என்றோ, அதைச் சீர்குலைக்கவில்லை என்றோ, வாக்குறுதிகளைக் கொண்டு எத்தனை காகிதங்களை நிரப்பிக் குவித்தாலும் சரி—நாம் மேற்கோள் காட்டியிருக்கும் துண்டுப்பிரசுரத்திலே நவீன காலத்திய பயங்கரவாதியின் அசல் மனப்பாங்கு விசுவாசத்தோடு அப்படியே வெளியிடப்படுகின்றது என்கிற உண்மையை அவர்களின் பேச்சுவெள்ளம் பொய்யாக்க முடியாது. பலத்தை மாற்றித் தருவது பற்றிய தத்துவத்துக்கு இயல்பான துணையாகப் பிடிக்கு அகப்படாமல் தப்பிக்கும் தன்மை பற்றிய தத்துவம் கிடைக்கிறது; இந்தத் தத்துவம் சென்றகால அனுபவத்தை மட்டுமின்றிப் பொது அறிவு முழுவதையுங்கூடத் தலைகீழாகப் புரட்டிவிடுகிறது. ''மக்கள் கூட்டம்'' ஒன்று

தான் புரட்சியின் ஒரே ''நம்பிக்கை'', இந்த மக்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திச் செல்கிற (சொல்லளவிலே அல்ல, செயலிலே) புரட்சி ஸ்தாபனம் ஒன்றுதான் போலீசை எதிர்த்துப் போராட முடியும்—இவை யாவும் அரிச்சுவடிப் பாடங்கள். இதை நிரூபிக்கத் தேவையாயிருப்பதே வெட்கத்திற்குரிய விஷயம். எல்லாவற்றையும் மறந்துவிட்டு எதையும் கற்காமலிருக்கிற பேர்வழிகள் மட்டுமே, பட்டாளத்தினர் எதேச்சாதிகாரமுறையை மக்கள் கூட்டத்திடமிருந்து ''காப்பாற்ற'' முடியும், புரட்சி ஸ்தாபனங்களிடமிருந்து எதேச்சாதிகாரமுறையைப் போலீஸ் ''காப்பாற்ற'' முடியும், ஆனல் மந்திரிகளை வேட்டையாடியொழிக்கிற தனி நபர்களிடமிருந்து மீட்சி எதுவும் கிடையாது என்கிற கட்டுக்கதையான, வெடிப்புறச் சிரிக்கத்தக்க முட்டாள்தனத்துக்கு வந்துசேர்ந்து ''தலைகீழாகத்'' தீர்மானித்திருக்க முடியும்!!

இந்தக் கட்டுக்கதையான வாதம்—இதற்குக் கெட்ட பெயர் சூழும் தலைவிதி ஏற்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்—எவ்வகையிலும் வெறுமனே ஒரு விந்தைப் பொருள் மட்டுமல்ல. இல்லை, அது பாடம் புகட்டக்கூடியதாயுமிருக்கிறது; காரணம், ஒரேயடியாக அபத்தநிலைக்குத் தாழ்த்தப்பட்டதின் மூலமாக, அது பயங்கரவாதிகளின் பிரதானமான தவற்றை வெளிப்படுத்துகிறது, அவர்கள் இந்தத் தவற்றைப் ''பொருளாதாரவாதிகளோடு''(மாய்ந்துவிட்ட ''பொருளாதாரவாதத்தின்''[32] முந்தையப் பிரதிநிதிகளோடு என்று ஏற்கெனவே சொல்லிவிடலாம் போலிருக்கிறது) பகிர்ந்து கொள்கிறார்கள். ஏற்கெனவே பல சமயங்களில் நாம் சுட்டிக்காட்டியவாறு, இந்தத் தவறு நமது இயக்கத்தின் அடிப்படையான குறைபாட்டைப் புரிந்து கொள்ளத் தவறுவதில் அடங்கியிருக்கிறது. இயக்கத்தின் மிகமிக வேகமான வளர்ச்சியின் காரணமாக, தலைவர்கள் மக்களை விட்டுப் பின்தங்கிவிட்டார்கள், புரட்சி ஸ்தாபனங்கள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான செயல்வன்மையின் தரத்துக்கு வந்து சேரவில்லை, முன்வரிசையில் நடை போட்டு மக்களுக்குத் தலைமைதாங்கிச் செல்லச் சக்தியற்றுப் போயின. இவ்வகைப்பட்ட வேறுபாடு உண்டு என்பதைஇயக்கத்தோடு கொஞ்சத்துக்குக் கொஞ்சமேனும் தொடர்புள்ள, மனச்சாட்சி

படைத்த எவரும் சந்தேகிக்க முடியாது. அப்படியானால், இன்றைய பயங்கரவாதிகள் உண்மையிலே திருப்பிப் போடப் பட்ட ''பொருளாதாரவாதிகளே'', இவர்களும் அதே அளவில் முட்டாள்தனமான, ஆனால் எதிரான, கோடிக்குச் செல்கின்றனர் என்பது தெளிவு. ஏற்கெனவே எழுச்சியுற்று வரும் மக்கள் திரளைத் தலைமைதாங்கி நடத்துவதற்குப் புரட்சிக் காரர்களுக்குச் சக்திகளும் சாதனங்களும் பற்றுக்குறையாக இருக்கிற நேரத்திலே, தனிநபர்களும் ஒன்றுக்கொன்று தெரியாத குழுக்களும் மந்திரிகளைக் கொல்லும் முயற்சிகளை ஏற்பாடு செய்கிற பயங்கரவாதச் செயல்களில் இறங்குமாறு வேண்டுகோள் விடுப்பதற்கு அர்த்தம், அதன் மூலமாக மக்களிடையே வேலை செய்வதை முறித்துவிடுவது மட்டுமின்றி இவ்வேலையில் பச்சையான சீர்குலைவைப் புகுத்துவதுமாகும்.—புரட்சிக்காரர்களாகிய நாம் ''பயந்தாங் கொள்ளித் தனமான குழுக்களாக ஒட்டிக்கொண்டிருக்கப் பழக்கப்பட்டவர்கள்; மேலும், சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தோன்றியிருக்கிற புதிய தைரியமான உணர்ச்சியுங்கூட (கவனிக்க!) தனிநபர்களின் மனோபாவத்தைவிட மக்கள் கூட்டத்தின் மனோபாவத்தை உயர்த்தத்தான் இது வரை அதிகமாகச் செயல்புரிந்திருக்கிறது'' என்று அந்த ஏப்ரில் 3ம் தேதிய துண்டுப்பிரசுரத்திலே நாம் படிக்கிறோம். தன்னையறியாமலே இந்தச் சொற்கள் உண்மையை நிறையச் சொல்கின்றன. இதே உண்மைதான் பயங்கரவாதத்தின் பிரசாரகர்களுக்கு வீழ்த்திநொறுக்கும் அடி கொடுக்கிறது. இந்த உண்மையிலிருந்து, இன்னும் அதிகமான சக்தியோடும் தைரியத்தோடும் இயைபோடும் குழுச்செயலைப் பயன்படுத்துவது அவசியம் என்கிற முடிவுக்கு ஒவ்வொரு சிந்திக்கிற சோஷலிஸ்டும் வருகிறான். ஆனால் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் முடிவு செய்வது பின்வருமாறு:''பிடிக்கு அகப்படாமல் தப்பிக்கிற தனிமனிதனே, துப்பாக்கியால் சுடு; ஏனெனில் மக்கள் கூட்டம் துரதிர்ஷ்டவசமாக இன்னும் வெகுதூரத்திலே இருக்கிறது, மேலும் அதை எதிர்த்துப் பட்டாளத்தினர் நிற்கிறார்கள்'' என்று. கனவான்களே, இது உண்மையிலே பகுத்தறிவை எதிர்த்துச் சவால் விடுவதாகும்!

அந்தத் துண்டுப்பிரசுரம் மனக்கிளர்ச்சியுண்டாக்கும் பயங்கரவாதத்தைப் பற்றிய தத்துவத்தையும் கைவிட

வில்லை. ''தன்னந்தனியாக நின்று ஒரு வீரன் போராட்டத்தில் ஈடுபடுகிற ஒவ்வொரு சமயத்திலும், அது நம் எல்லோரிடையேயும் ஒரு போராட்ட மனோபாவத்தையும் தைரியத்தையும் எழுப்பி விடுகிறது'' என்று நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் சென்ற காலத்திலிருந்து நாம் தெரிந்து கொண்டிருப்பதும் இன்று கண்கூடாகக் காண்பதும் என்னவெனில், வெகுஜன இயக்கத்தின் புதிய வடிவங்களோ, அன்றிப் புதிய புதிய மக்கள் பகுதிகள் சுயேச்சையான போராட்டத்தில் இறங்க விழிப்புக்கொள்வதோ, மட்டுமே போராட்ட மனோபாவத்தையும் தைரியத்தையும் எல்லோரிடமும் உண்மையிலே எழச்செய்கிறது என்பதுதான். ஆனால், தன்னந்தனியான போராட்டம் என்பது, பால்மாஷோவ் வகையறுக்கள் நடத்துகிற தன்னந்தனியான போராட்டமாகவே இருந்து விடுகிற காரணத்தால், வெறுமே கொஞ்ச நேரத்துக்குப் பரபரப்பு உண்டாக்கும் ஒரு உடனடி விளைவைத்தான் பெறுகிறது; அதே நேரத்தில் அது மறைமுகமாக அக்கறையின்மைக்கும் அடுத்த தன்னந்தனியான போராட்டத்துக்குச் செயலற்றுக் காத்துக் கொண்டிருக்கும் நிலைக்கும் கூடக் கொண்டுபோய்விடுகிறது. ''பயங்கரவாதத்தின் ஒவ்வொரு ஒளிவெட்டும் நமது மனத்தில் ஒளிபாய்ச்சிவிடுகிறது'' என்று மேலும் நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பயங்கரவாதத்தைப் பிரசாரம் செய்கிற சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சி விஷயத்தில் அப்படி நடக்கிறதாக நமக்குத் தெரியவில்லை. பெரிய வேலை சிறிய வேலை என்கிற ஒரு தத்துவம் நம்முன் வைக்கப்படுகிறது. ''அதிகமான பலமும் வாய்ப்புகளும் மனோதிடமும் உள்ளவர்கள் சிறிய(!) வேலையோடு திருப்தியடைந்து ஓய்வு கொள்ளாதிருப்பார்களாக; மக்களிடையே(!) பயங்கரவாதத்தைப் பிரசாரம் செய்வது, சிக்கலான... (பிடிக்கு அகப்படாமல் தப்பிக்கும் தன்மை பற்றிய தத்துவத்தை அதற்குள் மறந்து விட்டார்களே!)... பயங்கரவாத முயற்சிகளுக்குத் தயார் செய்வது என்கிற ஒரு பெரிய இலட்சியத்தைத் தேடிப்பிடித்து அதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்வார்களாக''. உண்மையிலே எவ்வளவு பிரமிக்கத்தக்க கெட்டிக்காரத்தனம் இது; ஸிப்யாகின் என்கிற அயோக்கியனைப் பழிவாங்கி அதன் பிறகு அவன் இடத்துக்கு பிளேவே என்கிற அயோக்

கியன் வர ஒரு புரட்சிக்காரனின் உயிரைப் பலியிடுவது—இது பெரிய வேலையாம். ஆனால், உதாரணத்துக்குச் சொல்லுமிடத்து, ஒரு ஆயுதந்தாங்கிய ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் திரளைத் தயார்படுத்துவதென்றால்—அது ஒரு அற்பமான வேலையாம். இந்த விஷயம் ''ரெவலூத்ஸியோனயா ரோஸ்ஸீயாவின்'' 8ம் இதழில் விளக்கப்பட்டிருக்கிறது. ஆயுதந் தாங்கிய ஆர்ப்பாட்டங்களைப் பற்றி ''என்றைக்கோ ஒரு தூர எதிர்காலத்தில் நடக்கப் போகிற விவகாரமாக எழுதுவதும் பேசுவதும் இலேசு'', ''ஆனால் இன்றைய வரைக்கும் இந்தப் பேச்செல்லாம் வெறும் தத்துவார்த்தத் தன்மை கொண்டதாகவே இருந்து வந்துள்ளது'' என்று அது பிரகடனப்படுத்துகிறது. உறுதியான சோஷலிஸ்ட் பற்றுகோள்களின் கட்டுத்தளைகளின்றிச் சுதந்திரமாயிருக்கும், எல்லாவித வெகுஜன இயக்கங்களின் சுமையான அனுபவத்தினின்றும் சுதந்திரமாக இருக்கிற பேர்வழிகளின் இந்தப் பாஷை நமக்கு எவ்வளவு நன்றாகத் தெரியும்! அவர்கள் உடனடியாகக் கைமேல் கிடைக்கிற,பரபரப்பூட்டும்,விளைவுகளை நடைமுறைப் பாங்கோடு குழப்பிக் கொள்கிறார்கள். வர்க்க நிலையைத் திடமாகப் பற்றி நிற்கவேண்டும், இயக்கத்தின் வெகுஜனத் தன்மையை நிலைநிறுத்திவர வேண்டும் என்கிற கோரிக்கை அவர்களுக்குப் ''பிடிபடாத'' ''தத்துவப்பேச்சாக'' உள்ளது. அவர்கள் பார்வையில், வரையறுத்த தன்மை நிலை என்பது உணர்ச்சியின் ஒவ்வொரு திருப்பத்துக்கும் அடிமைப் புத்தியோடு கீழ்ப்பட்டு நடப்பது, மேலும்... மேலும் அவ்விதம் கீழ்ப்பட்டு நடப்பதால் ஒவ்வொரு திருப்பத்திலும் தவிர்க்க முடியாதவாறு ஒன்றும் செய்ய முடியாத நிலை என்பதாகும். ஆர்ப்பாட்டங்கள் தொடங்குகின்றன—என்றதும் இரத்தவெறிகொண்ட வார்த்தைகளும் முடிவுக்கு ஆரம்பம் இது என்கிற பேச்சும் இப்படிப்பட்ட பேர்வழிகளின் வாயிலிருந்து பெருக்கெடுக்கிறது. அந்த ஆர்ப்பாட்டங்கள் நின்றுவிடுகின்றன—என்றதும் அவர்களின் கரங்கள் விழுந்துவிடுகின்றன, கால்செருப்பு தேய்வதற்குப் பிடிக்கிற நேரம்கூடக் காத்திராமல் அதற்குள் ''ஐயோ, மக்கள் இன்னமும் வெகுதூரத்தில்...'' என்று கூச்சல்போடுகிறார்கள். ஜார் மன்னனின் கையாட்கள் ஏதாவதொரு புதிய அட்டூழியம் புரிகிறார்கள்—என்றதுமே அந்தக் குறிப்பிட்ட அட்டூழியத்

துக்கு ஒரு தீர்த்துக் கட்டும் பதில் தரக்கூடியதாயிருக்கிற ஒரு ''திட்டமான'' நடவடிக்கையை, உடனடியாக''பலத்தை மாற்றித்தரக் கூடியதாக'' அமைந்த ஒரு நடவடிக்கையைக் காட்டும்படி கோருகிறார்கள்; மேலும் அந்த பலத்தை மாற்றித்தருவதாக ஜம்பமாக வாக்குறுதியளிக்கிறார்கள்! பலத்தை ''மாற்றித் தருகிற'' இதே வாக்குறுதிதான் அரசியல் துர்ச்சாகசவாதம் ஆகுமென்றும் அவர்களின் துர்ச்சாகசவாதம் அவர்களின் கோட்பாடற்ற நிலையிலிருந்து முளைக்கிறது என்றும் இந்தப் பேர்வழிகள் புரிந்து கொள்ள வில்லை.

சோஷல்-டெமாக்ராட்டுகள் எப்போதும் துர்ச்சாகச வாதத்தை எதிர்த்து எச்சரித்துக் கொண்டேயிருப்பார்கள், தவிர்க்க முடியாதவாறு முற்றாக ஏமாற்றத்திலே முடிகிற பிரமைகளை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்திவருவார்கள். ஒரு புரட்சிகரமான வர்க்கத்தின் இயக்கத்தைச் செயலளவில் வழிகாட்டிச் செல்கிற போது மட்டுமே புரட்சிகரமான கட்சிக்கு அந்தப் பெயரை வகிக்க லாயக்கு உண்டு என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். எந்த வெகுஜன இயக்கமும் முடிவேயில்லாதபடி பல்வேறு வடிவங்களை ஏற்றுக் கொள்கிறது என்றும், அது இடையறாமல் புதிய வடிவங்களை வளர்த்துப் பழைய வடிவங்களைக் கைவிட்டு வருகிறது என்றும், பழைய புதிய வடிவங்களிலேயே திருத்தங்களையோ புதிய சேர்க்கைகளையோ செய்து கொண்டேயிருக்கிறது என்றும் நாம் நினைவில் வைக்க வேண்டும். போராட்டத்திற்குரிய சாதனங்களையும் வழிமுறைகளையும் வகுத்துக் கொள்ளும் இந்த இயக்கப்போக்கிலே தீவிரமாகப் பங்கு எடுப்பது நம் கடமையாகும். மாணவர் இயக்கம் முன்னைவிடக் கடுமையானபோது மாணவர்களுக்கு உதவியாக வருமாறு நாம் தொழிலாளர்களை அறைகூவி அழைக்கத் தொடங்கினோம் (''இஸ்க்ரா'', இதழ் 2); ஆனால் ஆர்ப்பாட்டங்கள் என்னென்ன வடிவங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்கூட்டிச் சொல்லும் பொறுப்பை நாம் ஏற்கவில்லை, அவை உடனடியாக பலத்தை மாற்றித் தருவதையோ, மனதைப் பிரகாசமடையச் செய்வதையோ உண்டாக்கும், அல்லது ஒரு தனிச்சிறப்பான பிடிபடாத்தன்மையை உண்டாக்கும் என்றோ வாக்குறுதியளிக்கவில்லை. அந்த ஆர்ப்

பாட்டங்கள் இணைத்துத் திரட்டப்பெற்றபோது, அவை ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென்றும் மக்களை ஆயுதபாணியாக்க வேண்டுமென்றும் நாம் அறைகூவியழைக்கத் தொடங்கினோம். மேலும் மக்களின் புரட்சியெழுச்சிக்குத் தயார் செய்கிற கடமையையும் முன்வைத்தோம். பலாத்காரத்தையும் பயங்கரவாதத்தையும் கோட்பாட்டுரீதியிலே கொஞ்சத்துக்குக் கொஞ்சமேனும் மறுக்காமல், மக்கள் நேரிடையாகப் பங்குகொள்ளத்தக்கவாறு அமைந்த, அப்படிப் பங்குகொள்வதை உறுதி செய்யத்தக்கவாறு அமைந்த பலாத்கார வடிவங்களைத் தயாரிப்பதற்கான வேலை செய்ய வேண்டுமென்று நாம் கோரினோம். இந்த வேலையிலுள்ள கஷ்டங்களை நாம் பார்க்காமலில்லை, ''பிடிபடாத தூர எதிர்கால'' விவகாரம் இது என்கிற ஆட்சேபணைகளால் தடுக்கப்படாமல் இதற்காக நிலையாகவும் விடாமுயற்சியுடனும் வேலை செய்வோம். ஆம், கனவான்களே, நாங்கள் சென்ற காலத்திய இயக்க வடிவங்களுக்கு மட்டுமின்றி இயக்கத்தின் எதிர்கால வடிவங்களுக்காகவும் நிற்கிறோம். இறந்த காலத்தால் கண்டித்து நிராகரிக்கப்பட்ட வேலையைச் ''சுளுவாகத்'' திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருப்பதை விட ஒரு எதிர்காலத்துக்கு உறுதிமொழி தருகிற நீண்டகால, கடினமான வேலையையே நாங்கள் விரும்புகிறோம். வழக்கால் தேய்ந்து போன சூத்திரங்களை எதிர்த்துச் சொல்லளவிலே போராடிக் கொண்டு, நடைமுறையிலே பலத்தின் மாற்றித் தருவது பற்றிய தத்துவம், பெரிய வேலைக்கும் சிறிய வேலைக்கும் உள்ள வேறுபாடு, தன்னந்தனியான போராட்டத்தைப் பற்றிய தத்துவம், போன்ற செல்லரித்துப் போன, தீங்கான, வழக்கப் பேச்சுகளை மட்டும் பற்றிநிற்கும் பேர்வழிகளை நாம் எப்பொழுதும் அம்பலப்படுத்திவருவோம். ''பண்டைக் காலத்தில் மக்களின் போராட்டங்களை அவர்களின் தலைவர்கள் தன்னந்தனியான போராட்டம் செய்து முடித்துக் கொடுத்ததுபோல், இப்பொழுது பயங்கரவாதிகள் எதேச்சாதிகாரமுறையோடு தன்னந்தனியான போராட்டத்தைச் செய்து ருஷ்யாவின் சுதந்திரத்தை வென்று தருவார்கள்'' என்று ஏப்ரில் 3ம் தேதியத் துண்டுப்பிரசுரம் முடிக்கிறது. இப்படிப்பட்ட வாக்கியங்களைச் சும்மா திரும்ப அச்சிடுவதே அவற்றிற்கு மறுப்பு தந்துவிடுகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துடன் இணைத்துத் தன்னுடைய புரட்சிகரமான வேலையை உண்மையிலே செய்துவருகிற எவனும் பாட்டாளி வர்க்கத்தின் (அத்தோடு கூடவே அதை ஆதரிக்கத் திறனுள்ள மக்கள் பகுதிகளின்) தீர்க்கப்படாத உடனடியான, நேரடியான கோரிக்கைகள் எத்தனை எத்தனையோ இருந்துவருவதை நன்ருகத் தெரிந்திருக்கிருன், காண்கிருன், உணர்ந்திருக்கிருன். பலப்பல இடங்களில், விரிவான பிரதேசங்களிலே, உழைப்பாளி மக்கள் செயலிலிறங்கத் துடித்துக் கொண்டிருக்கிருர்கள்; நூல்களும் தலைவர்களும் பற்ருக்குறையாயிருப்பதினுல், புரட்சி ஸ்தாபனங்களின் சக்திகளும் சாதனங்களும் இல்லாமையினுல், அவர்களின் உற்சாகம் வீணுகிப் போகிறது என்று அவனுக்குத் தெரியும். கெட்ட சகுனம் பிடித்ததுபோல வெகுகாலமாக ருஷ்யப் புரட்சியைச் சூழ்ந்து அமுக்கி வரும் பழைய அதே விஷச் சக்கரத்தில் நாம் இருந்துவருகிருேம், இருந்து வருவதைப் பார்க்கவும் செய்கிருேம். ஒரு பக்கத்தில், அறிவுத்தெளிவும் ஸ்தாபனத்திரட்சியும் போதிய அளவுக்கில்லாத மக்கள் கூட்டின் புரட்சி உற்சாகம் வீணுகிறது. மறுபக்கத்தில், அணிவகுத்து நடைபோட்டுச் செல்வதின், மக்கள் திரளோடு கைகோத்து வேலை செய்வதின் சாத்தியப்பாட்டில் நம்பிக்கை இழந்துவரும் ''பிடிபடாத தனிநபர்கள்'' சுடும் துப்பாக்கி ரவைகளும் வீணுகிப் போகின்றன.

எனினும், தோழர்களே, விவகாரங்களைத் திருத்திச் சரிப்படுத்த முடியும்! ஒரு உண்மையான இலட்சியத்தில் நம்பிக்கை இழத்தல் என்பது ஒரு அபூர்வமான விதிவிலக்கேயன்றி விதியல்ல. பயங்கரவாதச் செயல்கள் புரிய விரும்பும் துடிப்பு வந்துபோகிற ஒரு மனேநிலைதான். எனவே சோஷல்-டெமாக்ராட்டுகள் நெருக்கமாக அணிவகுத்து நிற்கட்டும், புரட்சிக்காரர்களின் போராட்டத் துடிப்புள்ள ஸ்தாபனத்தையும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜன ரீதியான வீராவேசத்தையும் ஒரே முழுமையாக ஒன்ருக்குவோம்!

நூல்திரட்டு, தொகுதி 6

*''இஸ்க்ரா'', இதழ்கள் 23—24, 1902, ஆகஸ்ட் 1, செப்டம்பர் 1*

## ‘‘பூந்த்’’ ஸ்தாபனத்தினது தேசியவாதத்தின் கடைசி வார்த்தை

### என்கிற கட்டுரையிலிருந்து[33]

‘‘ஆணு என்று சொல்கிறவன் ஆவன்னு என்று சொல்லித் தீரவேண்டும்’’—தேசியவாதத்தின் கருத்துநிலையை மேற் கொண்டவன் தன்னுடைய தேசிய இனத்தைச் சுற்றி, தன் னுடைய தேசியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சுற்றி, ஒரு சீனத்துச் சுவர் எழுப்பிக் கொள்ளும் விருப்பத்துக்கு இயல்பாகவே வந்து சேருகிறான்; இதற்கு அர்த்தம் ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு சிறு ஊரிலும் கிராமத்திலும் தனித் தனிச் சுவர்கள் கட்டுவதாகும் என்பதைப் பற்றிக்கூட அவன் தர்மசங்கடமடைவதில்லை; தன்னுடைய பிளவுபடுத் தும் துண்டுபோடும் செயல்தந்திரத்தால் எல்லாத் தேசிய இனங்களையும் எல்லா மானிட இனங்களையும் எல்லா மொழி களையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினர்களையும் அணி திரட்டி ஒற்றுமை சேர்க்கும் மகத்தான அறைகூவலைச் சுத்த பூஜ்யமாக்கி வருகிறான் என்பதைப் பற்றியும் கூட, அவன் தர்மசங்கடப்படுகிறதில்லை.

நூல்திரட்டு, தொகுதி 7

*‘‘இஸ்க்ரா’’, இதழ் 46,*
*1903, ஆகஸ்ட் 15*

# 1904, ஜனவரி 15 (28)ல், ருஷ்வாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியின் கவுன்சிலில் பிரேரிக்கப்பட்ட, கட்சிக்குள் அமைதியை மீண்டும் நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் பற்றிய தீர்மான மசோதா

என்பதிலிருந்து

ஒரு மாபெரும் வெகுஜன இயக்கத்தில் ஆதாரப்பட்டு நிற்கும் ஒரு கட்சியில், எல்லா வட்ட உணர்ச்சியையும் குறுகிய செக்டேரியன் கருத்துக்களையும் அழுத்தமாக நிராகரித்து விட்டு அந்த இயக்கத்தின் உணர்வுபூர்வமான பிரதிநிதியாக விளங்கக் கிளம்பும் ஒரு கட்சியில், எல்லா வகைப்பட்ட பிரச்சினைகள் மீதும் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் எப்பொழுதும் எழுந்துள்ளன, தவிர்க்க முடியாதவாறு எழுந்து கொண்டேதானிருக்கும். ஆனால், தமது கட்சி உறுப்பினர்கள் வர்க்க உணர்வுள்ள, போராட்டத் துடிப்புள்ள பாட்டாளி வர்க்கத்தின் தகுதி வாய்ந்த பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமானால், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தகுதிபெற்ற பங்காளர்களாயிருக்க வேண்டுமானால், நம் கட்சியின் வேலைத்திட்டத்தின் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதிலும் நடைமுறையாக்கும் வழிமுறைகள் விஷயத்திலும் உள்ள தனிப்பட்ட கருத்துவேறுபாடுகள் நமது மத்திய ஸ்தாபனங்களின் வழிசெலுத்தலின் கீழ் நடக்கும் உள்ளிணக்கத்தோடுகூடிய கூட்டு வேலையில் குறுக்கிடாதவாறு, அல்லது குறுக்கிடச் சக்தியில்லாதவாறு, உறுதிப்படுத்தத் தங்களால் ஆனமட்டும் செய்ய வேண்டும். நமது வேலைத் திட்டத்தைப் பற்றியும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளைப் பற்றியும் நமது ஞானம் ஆழத்திலும் விரிவிலும் அதிகமாக அதிகமாக, பிரசாரம், கிளர்ச்சி, ஸ்தாபன அமைப்பு ஆகியவற்றை வளர்ப்பதில் உருப்படியான வேலை செய்வதை நாம் மதிப்பது அதிகமாக அதிகமாக, செக்டேரியன் போக்கிலிருந்தும் அற்பமான வட்ட உணர்ச்சியிலிருந்தும் பட்டம் பதவி எண்ணங்களிலிருந்தும் நாம் விலகி நிற்கும் தூரம் அதிகமாக அதிகமாக, கட்சி உறுப்பினர்களிடையேயுள்ள கருத்து வேற்றுமைகளை நிதானத்துடனும், அவற்றின் தகுதியின்

அடிப்படையிலும், நாம் விவாதிக்க முயல்வது அதிகமாக வேண்டும்; இந்தக் கருத்துவேற்றுமைகள் நமது வேலையில் குறுக்கிடவோ, நமது நடவடிக்கைகளைச் சீர்குலைக்கவோ, நமது மத்திய ஸ்தாபனங்களின் முறையான செயலோட்டத்தைத் தடங்கல் செய்யவோ, விடக்கூடாது.

நூல்திரட்டு, தொகுதி 8

நி. ஷாகோவ் எழுதிய ''காங்கிரஸைக்
கூட்ட நடத்தும் போராட்டம்''
என்கிற சிறுநூலில், ஜெனீவா,
1904, ஜனவரியில் பதிப்பிக்கப்பட்டது

# கொரில்லாப் போர்

## என்கிற கட்டுரையிலிருந்து

...போராட்ட வடிவங்கள் பற்றிய பிரச்சினையை ஆராய்வதில் ஒவ்வொரு மார்க்ஸீயவாதியும் கோரவேண்டிய அடிப்படையான கோரிக்கைகள் என்ன? முதலாவதாக, ஏதாவது ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவத்தோடு இயக்கத்தைக் கட்டிப்போடாததிலே மார்க்ஸீயம் சோஷலிஸத்தின் எல்லாத் திருந்தாத வடிவங்களிலிருந்தும் மாறுபடுகிறது. அது மிகமிக வேறுபாடுள்ள போராட்ட வடிவங்களை அங்கீகரிக்கிறது; மேலும், அவற்றை அது ''புனைவதும்'' கிடையாது; அதற்குப் பதிலாக, இயக்கத்தின் போக்கிலே தாமாகவே எழுகிற புரட்சிகரமான வர்க்கங்களின் போராட்ட வடிவங்களை அது பொதுமைப்படுத்தவும் திரட்டியமைக்கவும் உணர்வுபூர்வமான வெளியீடு பெறவும் மட்டுமே செய்கிறது. பொதுச் சூட்சுமமான எல்லாச் சூத்திரங்களுக்கும் வறட்டுக் கோட்பாடு ரீதியான எல்லாப் பரிகாரங்களுக்கும் முற்றும் பகையாயிருக்கும் மார்க்ஸீயம் நடந்துகொண்டிருக்கும் வெகுஜனப் போராட்டத்தின்பால் கவனிப்பான கண்ணோட்டம் வேண்டும் என்று கோருகிறது; இயக்கம் வளர வளர, மக்கள் திரளின் வர்க்க உணர்வு வளர வளர, பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் தீவிரமாக முற்ற முற்ற, இந்த வெகுஜனப் போராட்டம் புதிய, மேலும் வேறுபட்ட, தற்காப்பு முறைகளையும் தாக்கு முறைகளையும் தோற்றுவிக்கிறது. எனவே, மார்க்ஸீயம் எந்தப் போராட்ட வடிவத்தையும் நிச்சயமாக நிராகரிக்கவில்லை. அந்தந்தக் குறிப்பிட்ட தருணத்தில் மட்டும் சாத்தியமான, அல்லது இருக்கிற போராட்ட வடிவங்களோடு மார்க்ஸீயம் எந்தச் சந்தர்ப்பங்களிலும் நின்று விடுவதில்லை. மாறாக, அந்தந்தக் குறிப்பிட்ட சமுதாய நிலைமை மாறுகிறபொழுது தவிர்க்க முடியாதவாறு அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியைச் சேர்ந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தெரியாத, புதிய போராட்ட வடிவங்கள் தோன்றுகின்றன என்று அது அங்கீகரிக்கிறது. இந்த விஷயத்தில் மார்க்ஸீயம் வெகுஜன நடைமுறையிடமிருந்து (அப்படிச் சொல்லக் கூடுமென்றால்) கற்றுக்

கொள்கிறது; படிப்பறைகளின் தனிமையிலே ''திட்ட ஒழுங்கு செய்பவர்கள்'' புனேகிற போராட்ட வடிவங்களேக் கொண்டுபோய் மக்களுக்குக் கற்பிக்க மார்க்ஸீயம் எந்த விதமான பாத்தியத்தையும் கோரவில்லே. இன்று நம்மால் முன்கூட்டியறிய முடியாமலிருக்கிற புதிய போராட்ட வடிவங்களே நெருங்கிக் கொண்டிருக்கும் நெருக்கடி புகுத்தப் போகிறது என்பதை நாமறிவோம் என்று, எடுத்துக் காட்டாக, காவுத்ஸ்கி சமுதாயப் புரட்சியின் வடிவங்களே ஆராய்கையில் சொன்ஞர்.

இரண்டாவதாக, போராட்ட வடிவங்கள் பற்றிய பிரச்சினேக்கு முற்ருக வரலாற்றுரீதியான பரிசிலனே வேண்டும் என்று மார்க்ஸீயம் கோருகிறது. ஸ்தூலமான வரலாற்று நிலேமைக்கு அப்பால் நிறுத்தி இந்தப் பிரச்சினேயைக் கருதுவது இயக்க இயல் பொருள்முதல்வாதத்தின் ஆரம்ப அம்சங்களேப் புரிந்துகொள்ளத் தவறுவதையே காட்டிவிடுகிறது. பொருளாதாரப் பரிணமத்தின் வெவ்வேறு கட்டங்களில், அரசியல், தேசிய-பண்பாட்டு நிலேமைகள், வாழ்க்கை நிலேமைகள், மற்றும் பிற நிலேமைகளேப் பொறுத்து வெவ்வேருன போராட்ட வடிவங்கள் முன்னணிக்கு வந்து வந்து பிரதானமான போராட்ட வடிவங்கள் ஆகின்றன; மேலும், இது சம்பந்தமாக, இரண்டாம் பட்சமான, துணேயான போராட்ட வடிவங்கள் தம்முறைக்கு மாற்றமடைகின்றன. ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் ஸ்தூலமான நிலேமையை அதன் வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் வைத்து ஒரு விபரமான பரிசிலனே செய்யாமல், ஒரு குறிப்பிட்ட போராட்ட முறையைப் பயன்படுத்த வேண்டும் என்கிற கேள்விக்கு ஆம் அல்லது இல்லே என்று விடையளிக்க முயல்வது மார்க்ஸீய நிலேயை முற்ருகக் கைவிடுவதாகும்.

இவ்விரு பிரதானமான தத்துவார்த்தக் கூற்றுக்களேக் கொண்டு நாம் வழி செலுத்தப்பட வேண்டும். இங்கே சொல்லியிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கு ஐரோப்பாவில் மார்க்ஸீயத்தின் வரலாறு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்களேத் தருகிறது.

நூல்திரட்டு, தொகுதி *14*

''புரொலித்தாரிய்'', இதழ் 5,
*1906*, செப்டம்பர் *30*

## "யோ. பி. பெக்கர், யோ. டித்ஸ்கேன், பி. எங்கெல்ஸ், கா. மார்க்ஸ் ஆகியோரும் மற்றவர்களும் ஸோர்கேக்கும் மற்றவர்களுக்கும் எழுதிய கடிதங்கள்" என்ற நூலின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு வரைந்த முகவுரை

### என்பதிலிருந்து

பிரிட்டிஷ், அமெரிக்க, ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கங்களைப் பற்றி மார்க்ஸும் எங்கெல்ஸும் சொன்னதை ஒப்புநோக்குவது மிகவும் போதனையளிப்பதாயுள்ளது. ஒரு பக்கத்தில் ஜெர்மனியும் மற்றொரு பக்கத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் முதலாளித்துவ வளர்ச்சியின் வெவ்வேறான கட்டங்களையும், அந்த நாடுகளின் அரசியல் வாழ்க்கை முழுவதின் மீதும் பூர்ஷ்வா வர்க்கம் வர்க்கரீதியாக வகிக்கும் ஆதிக்கத்தின் வெவ்வேறான வடிவங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதை நாம் நினைவில் கொண்டால் இப்படிப்பட்ட ஒப்புநோக்குதலுக்கு முக்கியத்துவம் அதிகமாகிறது. விஞ்ஞான ரீதியான கருத்து நிலையிலிருந்து பார்த்தால், பொருள்முதல்வாத இயக்க இயலுக்கு இங்கே நமக்கு ஒரு மாதிரி கிடைக்கிறது; வெவ்வேறான அரசியல், பொருளாதார நிலைமைகளின் குறிப்பான குணாம்சங்களோடு பொருத்திச் செயல்படுத்தும்போது பிரச்சினையின் பல்வேறு நிலைகளையும் பல்வேறு அம்சங்களையும் முன்னணிக்குக் கொண்டு வந்து அழுத்திச் செல்லும் திறனுக்கு ஒரு மாதிரி கிடைக்கிறது. தொழிலாளர் கட்சியின் நடைமுறைக் கொள்கை, செயல் தந்திரங்கள் என்கிற கருத்து நிலையிலிருந்து பார்த்தால், வெவ்வேறு நாடுகளில் உள்ள தேசியத் தொழிலாளி வர்க்க இயக்கங்களின் வெவ்வேறான கட்டங்களுக்குத் தகுந்த வாறு போராடும் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகளைக் "கம்யூனிஸ்ட் அறிக்கையின்" சிருஷ்டிகர்த்தாக்கள் வரையறுத்த வழிக்கு ஒரு முன்மாதிரி இங்கே நமக்குக் கிடைக்கிறது.

பிரிட்டிஷ், அமெரிக்க சோஷலிஸத்தில் மார்க்ஸும் எங்கெல்ஸும் மிகமிகக் கடுமையாக விமர்சிப்பது அது தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து தனிமைப்பட்டிருக்கும் நிலையைத்தான். பிரிட்டனிலுள்ள "சோஷல்-டெமாக்ராட்டிக்

பெடரேஷன்'' (Social-Democratic Federation)[31] மீதும் அமெரிக்க சோஷலிஸ்டுகள் மீதும் அவர்கள் தந்துள்ள பல குறிப்புக்களின் பல்லவி என்னவெனில், அவர்கள் மார்க்ஸியத்தை ஒரு வறட்டுச் சூத்திரமாகத் தாழ்த்தி விட்டார்கள். கட்டிதட்டிப்போன (starre) ''மரபுபேணல்'' ஆக்கி விட்டார்கள், அவர்கள் அதைச் ''செயலுக்கு வழி காட்டியாகக் கருதாமல் ஒரு சமயக் கொள்கையாகக்''[35] கருதுகிறார்கள், தம் பக்கத்திலேயே நடை போட்டுவருகிற, தத்துவ ரீதியிலே நிர்க்கதியான, எனினும் உயிரோட்டமும் ஆற்றலும் உள்ள தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குத் தக்கபடி தங்களைச் சரிப்படுத்திக்கொள்ளத் திறனற்றிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டேயாகும். ''நமது வேலைத் திட்டத்தைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டவர்களோடு மட்டுமே கூட்டாக வேலை செய்யமுடியும் என்று நாம் 1864லிருந்து 1873 வரை வற்புறுத்தியிருந்தோமானால் இன்று நாம் எங்கே இருந்திருக்க வேண்டும்?'' என்று எங்கெல்ஸ் தமது 1887 ஜனவரி 27ம் தேதியிட்ட கடிதத்தில் வியப்பு வினா கிளப்பினார். மேலும் அதற்கு முந்திய கடிதத்தில் (1886 டிசம்பர் 28), அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்திடையே ஹென்றி ஜார்ஜின் கருத்துக்கள் வகிக்கும் செல்வாக்கு சம்பந்தமாக அவர் எழுதியதாவது:

''நல்லெண்ணமுள்ள'' (bona fide) ''ஒரு தொழிலாளர் கட்சிக்கு அடுத்த நவம்பரில் கிடைக்கும் பத்து அல்லது இருபது லட்சம் தொழிலாளர் வோட்டுக்கள் ஒரு கோட்பாடு ரீதியிலே நிறைநேர்த்தியான வேலைத்திட்டத்துக்குக் கிடைக்கும் ஒரு லட்சம் வோட்டுக்களைவிட இன்று அளவில்லா மதிப்புள்ளதாகும்.''

இவை மிகவும் அக்கறைக்குரிய பகுதிகளாகும். ஒரு ''தொழிலாளர் காங்கிரஸ்'' பற்றிய கருத்துக்கோ லாரினுடைய ''விசாலமான தொழிலாளர் கட்சியின்'' தன்மை கொண்ட ஒன்றுக்கோ ஆதரவாக அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஓடோடிவந்த சோஷல்-டெமாக்ராட்டுகள் நம் நாட்டில் உண்டு. அவசரக்குடுக்கைகளாக எங்கெல்ஸைப் ''பயன்படுத்திக் கொள்கிறவர்களைக்'' கேட்க விரும்புகிறோம்: ஒரு ''இடதுசாரிக் கூட்டணிக்கு'' ஆதரவாக ஏன் அதைப் பயன்படுத்தலாகாது, என்று. இந்த மேற்கோள்கள் எடுத்

தாளப்பட்டுள்ள கடிதங்கள் அமெரிக்கத் தொழிலாளர்கள் ஹென்ரி ஜார்ஜுக்குத் தேர்தல்களில் வோட்டு அளித்த காலத்தைக் குறிக்கின்றன. திருமதி விஷ்னெவேத்ஸ்கா—இவர் ருஷ்யனை மணந்து கொண்ட அமெரிக்க மாது, எங்கெல்ஸ் நூல்களின் மொழிபெயர்ப்பாளர்—ஹென்ரி ஜார்ஜைப்பற்றி ஒரு செம்மையான விமர்சனம் தருமாறு எங்கெல்ஸைக் கேட்டுக் கொண்டிருந்தார்; இது எங்கெல்ஸின் பதிலிலிருந்து தெரியக்கூடும். அதற்கு இன்னமும் காலம் வரவில்லை, முற்றுகச் சுத்தமான ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையிலே இல்லாதுபோயினும் தொழிலாளர் கட்சி தன்னைத்தானே ஸ்தாபனரீதியிலே அமைத்துக்கொள்ளத் தொடங்க வேண்டியதே பிரதான விஷயம் என்று எங்கெல்ஸ் (1886, டிசம்பர் 28ல்) எழுதினர். பின்னல், தொழிலாளர்கள் தாங்களாகவே என்ன பிசகு என்று புரிந்து கொள்ளத் தொடங்குவார்கள், ''தங்களுடைய சொந்தத் தவறுகளிலிருந்தே கற்றுக்கொள்வார்கள்'', ஆனல் ''தொழிலாளர் கட்சி தேசரீதியாகத் திரண்டு கெட்டிப்படுவதை—அது எந்த வேலைத்திட்டத்தைக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை—தாமதப்படுத்தவோ, தடுக்கவோ செய்கிற எதையும் ஒரு பெருந்தவருகவே நான் கருதுவேன்...''.

சோஷலிஸ்ட் பார்வையின் நிலையிலிருந்து பார்க்கும் போது ஹென்ரி ஜார்ஜினுடைய கருத்துக்களின் அபத்தத்தையும் பிற்போக்கான தன்மையையும் எங்கெல்ஸ் நிறைவாகப் புரிந்துகொண்டிருந்தார், அடிக்கடி குறிப்பிடவும் செய்தார் என்பது சொல்லாமலே விளங்கும். ஸோர்கே கடிதப்போக்குவரத்தில் 1881, ஜூன் 20 தேதியிட்டு கார்ல் மார்க்ஸ் எழுதிய மிகவும் அக்கறைக்குரிய கடிதம் ஒன்று இருக்கிறது; அதில் அவர் ஹென்ரி ஜார்ஜ் தீவிரப்போக்கு உள்ள பூர்ஷ்வாக்களின் கொள்கைவாதி என்று வர்ணித்தார். ''தத்துவ விஷயத்தில் அந்த மனிதர் முற்றிலும் பிற்பட்டவர்'' (total arrière) என்று மார்க்ஸ் எழுதினர். இருந்தபோதிலும், மக்களுக்குத் ''தம்முடைய தவறுகளின் விளைவுகளை'' எடுத்துச் சொல்வதற்கு ஆட்கள் இருக்கும் வரை, இந்த சோஷலிஸ்ட் பிற்போக்காளருடன் தேர்தலில் சேர்ந்து நிற்க எங்கெல்ஸ் பயப்படவில்லை (1886, நவம்பர் 29 தேதியிட்ட கடிதத்தில் எங்கெல்ஸ்).

''தொழிலாளரின் வீரக்காவலர்கள்''(Knights of Labour)[36] —அந்தக் காலத்தில் இருந்த அமெரிக்கத் தொழிலாளர்களின் ஒரு ஸ்தாபனம் இது—பெற்றுத்தவரையில், அதே கடிதத்தில் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''தொழிலாளரின் வீரக்காவலர்களின் மிகவும் பலவீனமான (அப்படியே மொழி பெயர்த்தால்: மிகவும் அழுகிய, faulste) அம்சம் அவர்களுடைய அரசியல் நடுநிலேயேயாகும்.... புதிதாக இயக்கத்தில் புகும் ஒவ்வொரு நாட்டுக்கும் எப்பொழுதும் முக்கியமான முதற்பெரும் படி என்னவெனில் தொழிலாளர்களே ஒரு சுதந்திரமான அரசியல் கட்சியாக—அது எப்படி அமைக்கப் பெற்ருலும் அது ஒரு தனிச்சிறப்புள்ள தொழிலாளர் கட்சியாக இருக்கும்வரை சரியே—நிறுவுவதேயாகும்.''

நூல்திரட்டு, தொகுதி 15

*1907, ஏப்ரில் 6(19)ல்*
*எழுதப்பட்டது*

*1907ல், செயின்ட் பீட்டர்ஸ்பர்கில்,*
*பி. தௌகே பதிப்பித்த நூலில்*
*வெளியிடப்பட்டது*

## பகிஷ்காரத்தை எதிர்த்து

### என்கிற கட்டுரையிலிருந்து

## (ஒரு சோஷல்-டெமாக்ராட் பிரசாரகரின் குறிப்புக்களிலிருந்து) [37]

நமது புரட்சியின் போராட்ட வடிவங்கள், ஸ்தாபன வடிவங்கள், முதலியவற்றை மக்களுக்குத் தெரிவிப்பது, மக்களிடையே புரட்சிகரமான பரம்பரைகளைப் பலப்படுத்துவது, புரட்சிகரமான போராட்டம் ஒன்றின் மூலமாக மட்டுமே எந்த முக்கியமான, நிரந்தரமான மேம்பாடுகளையும் சாதிக்க முடியும் என்று மக்களை ஏற்கச் செய்வது, ''சட்டபூர்வமான'' அடிமைப்போக்கு, துரோகம், மொல்ச்சாலின் போக்கு[38] என்கிற விஷவாயுவைக் கொண்டு சமுதாயச் சூழலைக் கெடுக்கும் சுயதிருப்தி மனோபாவமுள்ள மிதவாதிகளின் பச்சையான இழிதகைமையைத் திட்டமாக அம்பலப்படுத்துவது, நமது புரட்சியை மிகவும் கவனமாகவும் முற்றுகவும் பயில்வது ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டுகளின் கடமை என்பதில் ஐயமில்லை. சுதந்திரத்திற்கான போராட்டத்தின் வரலாற்றிலே அக்டோபர் வேலைநிறுத்தத்தின், அல்லது டிசம்பர் புரட்சியெழுச்சியின்[39] ஒரு நாள் என்பது, டூமா சட்டசபையில் பொறுப்பற்ற மன்னனைப் பற்றியும், சட்டபூர்வமான முடியாட்சி பற்றியும் மாதக்கணக்கில் காடெட்டு அடிவருடிகள் செய்கிற பிரசங்கங்களைவிட நூறுமடங்கு அதிகமாகக் குறிபொருள் உள்ளதாகும். ஸ்தோலீப்பினுடையவும், அவருடைய போலீஸ் தணிக்கையாளர்களின் பரிவாரத்தினுடையவும் நல்லவிதமான இணக்கத்தோடு நமது மிதவாதக் கட்சிகளைச் சேர்ந்தவையும் கட்சிச் சார்பற்றவையுமான ''ஜனநாயக'' (சே, சே!) பத்திரிகைகள் இவ்வளவு உற்சாகத்தோடு உலகுக்குத் தெரிவித்த மாதக் கணக்கான ''சட்டபூர்வமான'' மூச்சடைப்பையும், பாலலாய்கின்-மொல்ச்சாலின் சுபிட்சத்தையும் விட[40], அந்த உணர்ச்சிப் பெருக்குள்ள, நிகழ்ச்சிச் செறிவுள்ள, தமது முக்கியத்துவத்திலும் விளைவுகளிலும் மிகப் பெரிய நாட்களைப் பற்றி அதிக முழுமையாகவும் விபரமாகவும் மக்கள் தெரிந்து வைத்திருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்—ஏனெனில்,

நாம் பார்த்துக் கொள்ளாவிட்டால், வேறு யாரும் அதைச் செய்ய மாட்டார்கள்.

சென்ற காலத்தின் மிகச் சிறந்த பகுதியின் புரட்சிகர மான பரம்பரையை வளர்க்கவும், ஒரு தைரியமிக்க, பகிரங்க மான, மனோதிடமுள்ள போராட்டம் என்கிற ஒரு சுடரைக் கொண்டு சாரமற்ற அன்றாட நிகழ்காலம் என்கிற அமங்கல மான சகதிக்குழிமேல் ஒளிபாய்ச்சவும், புரட்சிக்காரர்கள் செய்கிற இந்த மெச்சத்தக்க முயற்சிகளே, பல வழக்கு களில், பகிஷ்காரத்துக்கு அனுதாபத்தை உண்டாக்குகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் புரட்சிகரமான பரம்பரைகள் பால் உள்ள இந்த அக்கறையை நாம் மதித்துப் போற்று கிறோம் என்கிற அதே காரணத்திற்காகத்தான், ஒரு குறிப் பிட்ட வரலாற்றுக் காலப்பகுதியின் கோஷங்களில் ஒன்றைப் பயன்படுத்துவதின் மூலமாக அந்தக் காலப்பகுதியின் முக்கிய மான நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்த முடியும் என்கிற கருத்தை நாம் வன்மையாக ஆட்சேபிக்க வேண்டும். புரட்சி யின் பாரம்பரியங்களைப் பேணிக்காப்பது, இடையறாத கிளர்ச்சிப் பிரசாரத்திற்காகவும் பழைமையான சமூகத்தை எதிர்த்து நடக்கும் நேரடியான, தாக்கி முன்னேறுகிற தன்மையுள்ள போராட்டத்தின் நிலைமைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் அவற்றை எப்படிப் பயன் படுத்துவது என்பது ஒரு விஷயம்; ஆனால், ஒரு கோஷத்தைத் தோற்றுவித்ததும் அதன் வெற்றிக்கு உறுதிப்பாடு செய்தது மான மொத்த நிலைமைகளிலிருந்து அந்தக் கோஷத்தைப் பிரித்தெடுத்துத் திருப்பிச் சொல்வது, சாராம்சத்திலே வேறுபட்டுப்போன நிலைமைகளுக்குப் பொருத்திச் செயல் படுத்துவது என்பது முற்றிலும் வேறு விஷயமாகும்.

புரட்சிப் பரம்பரைகளை மிகவும் உயர்வாக மதித்த வரும், அவற்றின்பால் கட்சிமாறித்தனமான, போலி மரபு விருப்பமுள்ள கண்ணோட்டத்தைக் கொள்வதை ஈவிரக்க மின்றித் தாக்கியவருமான அதே மார்க்ஸ்தான், அதே காலத் தில், புரட்சிக்காரர்கள் சிந்திக்கவும், சில கோஷங்களை வெறுமனே திருப்பிச் சொல்லிக்கொண்டிராமல், பழைய போராட்ட வழிமுறைகளைப் பயன்படுத்த முடியச் செய்கிற நிலைமைகளைப் பற்றிப் பகுத்தாய்ந்தறியவும் திறமை பெற்றி ருக்க வேண்டும் என்று கோரினார். பிரான்ஸிலுள்ள 1792ன்

''தேசியப்'' பரம்பரைகள் ஒருக்கால் சில புரட்சிகரமான போராட்ட வழிமுறைகளுக்கு நிரந்தரமாக ஒரு முன்மாதிரியாக இருந்துவரலாம்; ஆனால் இந்தப் பரம்பரைகளை ஒரு வேறுபட்ட காலப்பகுதிக்குப் பொருந்திச் செயல்படுத்தும் தவற்றைப் பற்றி 1870ம் வருடத்திய புகழ்பெற்ற இன்டர்நேஷனலின் ''பிரகடனத்தில்'' பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தை எச்சரிப்பதிலிருந்து மார்க்ஸை இது தடுக்கவில்லை.

இது ருஷ்யாவுக்கும் பொருந்தும். பகிஷ்காரத்தைப் பொருத்திச் செயல்படுத்துவதற்குரிய நிலைமைகளை நாம் பயிலவேண்டும்; புரட்சியானது எழுச்சிமுகமாகச் சென்று கொண்டிருக்கிற தருணங்களில் (வீணாக மார்க்ஸின் பெயரை எடுத்துக்கொள்கிற ஏட்டுப் பண்டிதர்கள் என்ன சொன்னாலும்) பகிஷ்காரம் என்பது ஒரு முற்றிலும் நியாயமான, சில சமயங்களில் அவசியமான, வழிமுறையாகும் என்கிற கருத்தை மக்கள் மனத்தில் நாம் ஊட்ட வேண்டும். ஆனால், புரட்சி உண்மையிலே எழுச்சிமுகமாகச் செல்கிறதாயிருக்கிறதா—ஒரு பகிஷ்காரத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு இது அடிப்படையான நிபந்தனையாகும்—என்கிற பிரச்சினையை ஒருவன் சுதந்திரமாக எழுப்பவும், உண்மை விபரங்களைப் பற்றிய கவனிப்புள்ள பகுப்பாய்வு அடிப்படையில் முடிவுகட்டவும் சக்திபெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட எழுச்சிக்கு நம் சக்தியாலானமட்டும் வழியைத் தயாரிப்பதே நம் கடமை, தகுந்த தருணத்தில் பகிஷ்காரத்தை நிராகரிப்பதல்ல; ஆனால் பகிஷ்கார கோஷம் ஒவ்வொரு மோசமான அல்லது மிகவும் மோசமான பிரதிநிதித்துவ ஸ்தாபனத்துக்கும் பொதுவாகவே பொருந்தும் என்று கருதுவது முற்றான தவறாக இருக்கும்.

நூல்திரட்டு, தொகுதி 16

*1907, ஜூன் 26 (ஜூலை 9)ல்*
எழுதப்பட்டது

*1907, ஜூலை இறுதியில்,*
செயின்ட் பீட்டர்ஸ்பர்கில்,
''மூன்றாவது டூமாவைப் பகிஷ்கரிப்பது பற்றி''
என்கிற சிறு நூலில் பதிப்பிக்கப்பட்டது

கையொப்பம்: நி. லெனின்

## மார்க்ஸீயமும் திரிபுவாதமும்

### என்கிற கட்டுரையிலிருந்து

திரிபுவாதத்தின் தவிர்க்க இயலாத்தன்மையை நவீன சமுதாயத்தில் அதற்கு இருக்கிற வர்க்க வேர்கள் நிர்ணயிக்கின்றன. திரிபுவாதம் ஒரு சர்வதேசத் தோற்றமாகும். கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது விஷயம் தெரிந்துவைத்திருக்கிற எந்தச் சிந்திக்கும் சோஷலிஸ்டும், ஜெர்மனியில் மரபுவிரும்பிகளுக்கும் பேர்ன்ஷ்டைன் வாதிகளுக்கும்[41] இடையேயும், பிரான்ஸிலுள்ள கேட் வகையருக்களுக்கும் ழொரேஸ் வகையருக்களுக்கும் (இன்று குறிப்பாக புரூஸ் வகையருக்களுக்கும்)[42] இடையேயும், பிரிட்டனிலுள்ள சோஷல்-டெமாக்ராட்டிக் பெடரேஷனுக்கும் சுயேச்சையான தொழிற்கட்சிக்கும் இடையேயும்; பெல்ஜியத்தில் ப்ரூக்கேருக்கும் வன்டெர்வேல்டேக்கும் இடையேயும், இத்தாலியில் இன்டெக்ரலிஸ்டுகளுக்கும்[43] சீர்திருத்தவாதிகளுக்கும் இடையேயும், ருஷ்யாவில் போல்ஷெவிக்குகளுக்கும் மென்ஷெவிக்குகளுக்கும் இடையேயும் இருக்கிற உறவுகள் எல்லாவிடங்களிலும்—இந்த எல்லா நாடுகளின் இன்றைய நிலையில் தேசிய நிலைமைகளிலும் சரித்திரக் காரணிகளிலும் பெரும் பல்வகைத் தன்மை இருக்கிறபோதிலும்—சாராம்சத்தில் ஒன்றுபோல் இருப்பதைப் பற்றிச் சிறிதேனும் சந்தேகிக்க முடியாது. யதார்த்தத்திலே பார்த்தால், இன்றைய சர்வதேச சோஷலிஸ்ட் இயக்கத்திலுள்ள ''பிளவு'' உலகிலுள்ள பல்வேறு நாடுகள் அனைத்திலும் ஒரேமாதிரியான வழிகளில் சென்று கொண்டிருக்கிறது; இதை முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததோடு ஒப்பிட்டால் ஒரு மிகப்பெரிய முன்னேற்றமாகும்; அன்று பல்வேறு நாடுகளிலுள்ள வேறுபட்ட போக்குகள் ஒரேயொரு சர்வதேச சோஷலிஸ்ட் இயக்கத்திற்குள் போராடிக் கொண்டிருந்தன. மேலும், ''புரட்சிகரமான சிண்டிகலிஸம்''[44] என்று லத்தீன் நாடுகளில் உருக்கொண்ட ''இடதுசாரித்

திரிபு வாதமும்'' தன்னை மார்க்ஸீயத்தோடு சரிசெய்து கொண்டு வருகிறது, மார்க்ஸீயத்தைத்''திருத்திவருகிறது'': இத்தாலியில் லப்ரியோலாவும் பிரான்ஸில் லாகர்டேலும் மார்க்ஸைத் தவருகப் புரிந்து கொண்ட நிலையில் நின்று மார்க்ஸை சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறவர்களுக்கு அடிக்கடி வேண்டுகோள் விட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

நூல்திரட்டு, தொகுதி 17

*1908, மார்ச் பிற்பகுதியில்—ஏப்ரில் 3(16)க்குப் பிற்படாத காலத்தில் எழுதப்பட்டது*

*1908, செப்டம்பர் 25க்கும் அக்டோபர் 2க்கும் (அக்டோபர் 8க்கும் 15க்கும்) இடையே செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் கேத்ரோவ் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்ற ''கார்ல் மார்க்ஸ் (1818-83)'' என்ற தொகுப்பு நூலில் பதிப்பிக்கப்பட்டது*

## "புரொலித்தாரிய்" என்கிற பத்திரிகையின் விரிவான ஆசிரியர் குழுவினது மாநாட்டின் தீர்மானங்கள்

### என்பதிலிருந்து[45]

### I

### ஒட்ஸொவிஸம் பற்றியும் இறுதி எச்சரிக்கைவாதம் பற்றியும்

புலீகின் டூமாவையும், முதலாவது அரசாங்க டூமாவையும் பகிஷ்காரம் செய்வது என்று நமது கட்சியின் புரட்சிகரமான தரப்பினர் விடுத்த கோஷம் அந்தக் காலத்தில் ஒரு மகத்தான புரட்சிப் பாத்திரம் வகித்தது. தொழிலாளி வர்க்கத்தின் மிகச் செயல்துடிப்புள்ள, மிகப் புரட்சிகரமான பகுதிகள் அதை உற்சாகத்துடன் எடுத்துக்கொண்டன.

விரிவான மக்கள் திரளின் நேரடிப் புரட்சிப் போராட்டத்தைத் தொடர்ந்து புரட்சி எதிர்ப்பின் ஒரு கடுமையான காலப்பகுதி வந்தது. இந்தப் புதிய அரசியல் நிலைமைக்குப் பொருத்தமாக சோஷல்-டெமாக்ராட்டுகள் தங்களுடைய புரட்சிகரமான செயல்தந்திரங்களைச் சீர்படுத்திக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகி விட்டது; இது சம்பந்தமாக, சோஷல்-டெமாக்ராட்டிக் கிளர்ச்சிக்கும் ஸ்தாபனத்துக்கும் உதவும் பொருட்டு டூமாவை ஒரு பகிரங்கமான மேடையாகப் பயன்படுத்துவது அசாதாரணமான முக்கியத்துவமுள்ள கடமைகளில் ஒன்று ஆகிவிட்டது.

என்றபோதிலும், இந்த வேகமான நிகழ்ச்சித் திருப்பத்தில், நேரடியான புரட்சிப் போராட்டத்தில் பங்கு கொண்ட தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் புரட்சி எதிர்ப்பின் புதிய நிலைமைகளுக்குப் பொருத்தமான புரட்சிகரமான சோஷல்-டெமாக்ராட்டிக் செயல்தந்திரங்களைச் செயல்படுத்துவதில் உடனே இறங்க முடியாமல் போயினர்; பகிரங்கமான உள்நாட்டுப் போர் நடந்த காலப்பகுதியில் புரட்சிகரமானதாக இருந்துவந்த, ஆனால் இன்று திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் போராட்டத்தின் புதிய நிலைமைகளில் தொழிலாளிவர்க்கத்தின் அணிகளை ஒன்றுதிரட்டி வரும் செயல்போக்கைத்தடங்கல் செய்யக் கூடிய கோஷங்களையே தொடர்ந்து வெறுமே திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

மறுபக்கத்தில் இந்த வேதனைமிக்க நெருக்கடியின் நிலைமைகளில், புரட்சிப் போராட்டத்தின் நலிவுச் சூழலில், தொழிலாளர்களில் ஒரு பகுதியினரிடையேகூட அசிரத்தையும் மனச்சோர்வும் தட்டிய சூழலில், தொழிலாளர்களின் ஸ்தாபனங்கள் நசுக்கப்பட்டு வந்த காலத்தில், பிளவுபடுத்தும் பாதிப்புகளை எதிர்த்து நிற்கும் சக்தி அவற்றிடம் போதாமல் இருந்த காலத்தில், தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியிடையே பொதுவாகவே அரசியல் போராட்டத்தின்பால் அசிரத்தையான மனோபாவமும், டூமாவில் சோஷல்-டெமாக்ராட்டுகள் செய்யும் வேலையின்பால் குறிப்பான ஒரு அக்கறையின்மையும் வளர்ந்திருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகளிலேதான், ஒட்ஸொவிஸம், இறுதி எச்சரிக்கை வாதம் எனப்பட்டவை பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பகுதிகளிடையே தாற்காலிகமாக வெற்றி பெறக் கூடும்.

எதேச்சாதிகார முறையின் உண்மையான தன்மையையும் எல்லாவிதப் புரட்சி எதிர்ப்புச் சக்திகளின் உண்மையான தன்மையையும், மேலும், புரட்சிப் போராட்டத்தின் அவசியத்தையும் மிக விரிந்த மக்கள் பகுதிகளுக்கு எடுத்துக் காட்டுவதற்குச் சுரண்டும் வர்க்கங்களின் அந்தப் பிரதிநிதித்துவ ஸ்தாபனத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு மூன்றாவது டூமாவின் நடவடிக்கைகள் சோஷல்-டெமாக்ராட்டுகளுக்கு இடமளிக்கின்றன என்று தொழிலாளர்களின் இந்தப் பகுதியினர் தங்களுக்கு சோஷல்-டெமாக்ராட்டிக் பயிற்சி போதாமையினால் இன்னமும் புரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றனர்; எனவே தொழிலாளர்களின் தேவைகளைப் பகிரங்கமாகப் புறக்கணிக்கும் மூன்றாவது டூமாவின் நடவடிக்கைகள் அவர்களுக்கிடையே ஒட்ஸொவிஸ மனோபாவத்தைத் தூண்டிவிடுகின்றன.

தொழிலாளர்களின் இந்தப் பகுதியினரிடையே இந்த ஒட்ஸொவிஸ மனோபாவத்திற்கு உதவுகிற மற்றொரு காரணி, டூமாவிலுள்ள சோஷல்-டெமாக்ராட்டிக் குழு, குறிப்பாகத் தனது நடவடிக்கையின் முதலாவது ஆண்டில், செய்த மிகவும் கொடிய தவறுகளாகும்.

தொழிலாளி வர்க்கத்துக்கு சோஷலிஸ்ட், புரட்சிப் பயிற்சி தருவதில் இந்த ஒட்ஸொவிஸ மனோபாவம் தீங்கான

பாதிப்பு செய்கிறது என்பதை அங்கீகரித்து, கட்சியின் போல்ஷெவிக் தரப்பு பின்வருபவை தேவை என்று கருதுகிறது:

(அ) தொழிலாளர்களின் இந்தப் பகுதிகளைப் பொறுத்தவரை: சோஷல்-டெமாக்ராட்டிக் பயிற்சி, ஸ்தாபன அமைப்பு வேலையை விடாது செய்துவருதல்; ஒட்ஸொவிஸத்தின், இறுதி எச்சரிக்கைவாதத்தின் முற்றுன அரசியல் பயனின்மையையும், சோஷல்-டெமாக்ராட்டிக் பாராளுமன்ற முறையின் உண்மையான குறிபொருளையும், ஒரு புரட்சி எதிர்ப்புக் காலப்பகுதியில் சோஷல்-டெமாக்ராட்டுகளுக்கு வாய்த்த ஒரு மேடை என்கிற வகையில் டூமா வகிக்கும் பாத்திரத்தையும் முறையாகவும் விடாப்பிடியாகவும் விளக்கிவருதல்;

(ஆ) டூமாவிலுள்ள சோஷல்-டெமாக்ராட்டிக் குழுவையும் பொதுவாக டூமா வேலையையும் பொறுத்தவரையில்: டூமா குழுவுக்கும் முன்னேறிய தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகளை நிறுவுவது, அக்குழுவுக்கு எல்லா உதவியும் புரிவது, மற்றவை ஒரு புறமிருக்க, அதன் தவறுகளைப் பகிரங்கமாக விளக்கிச் சொல்வதின் மூலமாகக் கட்சி முழுவதும் அதனை மேற்பார்வையிடவும், அதன்மீது நிர்ப்பந்தம் கொண்டுவரவும் வகை செய்வது; கட்சியின் ஒரு உறுப்பு என்கிற வகையில் அதன் நடவடிக்கைகளைக் கட்சி வழி செலுத்தி வருவதை நடைமுறையில் உறுதிப்படுத்துவது, மேலும், பொதுவாகவே, இவ்விஷயத்தில் அண்மையில் நடந்த கட்சி மாநாட்டின் முடிவுகளை போல்ஷெவிக்குகள் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவது, ஏனெனில், டூமாவிலுள்ள சோஷல்-டெமாக்ராட்டிக் குழுவின் நடவடிக்கைகளின் மீது தொழிலாளி வர்க்க வட்டாரங்கள் அதிகரித்த கவனம் செலுத்துவதும், சோஷல்-டெமாக்ராட்டுகளின் டூமா நடவடிக்கைகளில் அவை ஸ்தாபனமுறையோடு பங்குகொள்வதும் மட்டுமே நமது டூமா குழுவின் செயல்தந்திரங்களை நேர்செய்வதற்குப் பயனுள்ளதாக இருக்கும்;

(இ) டூமா குழுவைக் கட்சிக்கு விரோதமான ஒரு பாதைக்குக் கொண்டுபோக இழுத்துவருகிற, அதன் மூலம் அதைத் தொழிலாளரின் முன்னணிப் படையிடமிருந்து கத்தரித்து அப்பால் தள்ளிச் செல்கிற கட்சியின் வலதுசாரித் தரப்பைப் பொறுத்தவரையில்: அதை எதிர்த்து ஒரு முறையான, சமரசத்திற்கிடமற்ற போராட்டம் நடத்துவது,

இந்தச் செயல்தந்திரங்கள் கட்சிக்குப் பிராணபத்தானவை என்று அம்பலப்படுத்துவது.

* * *

பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் போக்கிலே கட்சியில் பல நபர்கள் சேர்ந்தார்கள்; அதன் சுத்தமான தொழிலாளி வர்க்க வேலைத்திட்டத்தால் ஈர்க்கப்பட்டு அல்ல, பிரதான மாக, ஜனநாயகத்துக்காக அது நடத்திய வீரமிக்க, ஊக்க முள்ள போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு; இந்த நபர்கள் கட்சியின் புரட்சிகரமான ஜனநாயக கோஷங்களை ஏற்றுக் கொண்டார்கள், ஆனால் சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத் தின் போராட்டம் முழுமொத்தத்துடனும் அவற்றைத் தொடர்பு படுத்திக் கொள்ளாமலே அவற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

பாட்டாளி வர்க்கப் பார்வை போதிய அளவுக்குப் பெற் ிராத இப்படிப்பட்ட நபர்கள் கட்சியின் நம் போல்ஷெவிக் ்ரியின் அணிகளிலேகூட காணப்படுகிறார்கள். சமுதாயத் நக்கம் கொண்ட இந்தக் காலப்பகுதியில் இப்படிப்பட்ட பர்கள் தங்களிடம் சோஷல்-டெமாக்ராட்டிக் ஒத்தியைவு இல்லாததை மேலும் மேலும் வெளிப்படுத்திக் கொள்கிறார் கள். இவர்கள் புரட்சிகரமான சோஷல்-டெமாக்ராட்டிக் செயல்தந்திரங்களின் அடிப்படைகளுடன் மேலும் மேலும் தீவிரமாக முரண்பட்டு வந்து, சென்ற ஆண்டினூடே ஒரு போக்கை சிருஷ்டித்து வந்திருக்கிறார்கள். அது ஒட்ஸொவி ஸம், இறுதி எச்சரிக்கைவாதம் பற்றிய ஒரு சித்தாந்தத்துக்கு உருவம் கொடுக்க முயல்கிறது, ஆனால் உண்மையிலே பார்த் தால் சோஷல்-டெமாக்ராட்டிக் பாராளுமன்ற முறையை யும், டூமாவில் சோஷல்-டெமாக்ரஸியின் வேலையையும் பற்றிய பொய்யான எண்ணங்களை ஒரு கோட்பாடு நிலைக்கு உயர்த்தித் தீவிரப்படுத்துகிறது.

ஒரு ஒட்ஸொவிஸ மனோ நிலையிலிருந்து ஒரு முழுமையான ஒட்ஸொவிஸக் கொள்கையையே சிருஷ்டிக்கும் இந்த முயற்சி கள், ஒரு பக்கத்தில் அரசியல் அக்கறையின்மையையும், இன்னொரு பக்கத்தில் அராஜகவாத வக்கரிப்புகளையும் கொண்ட தத்துவார்த்தத்தைச் சாராம்சத்தில் வெளியிடுகிற ஒரு சித்தாந்தத்துக்குக் கொண்டுபோய்விடுகின்றன. புரட்சி

கரமான சொற்பிரயோகம் அதனிடம் எவ்வளவுதான் இருந்த போதிலும், ஒட்ஸொவிஸ, இறுதி எச்சரிக்கை வாதச் சித்தாந்தம் நடைமுறையிலே மக்களின் அவசர அவசியமான தேவைகளை அரசாங்க டூமாவினுலேயே பூர்த்தி செய்ய முடியும் என்கிற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட சட்ட வகைப்பட்ட பிரமைகளின் எதிர்ப்பக்கத்தையே கணிசமான அளவுக்குக் காட்டுகிறது. சாராம்சத்திலே, அது பாட்டாளி வர்க்கத் தத்துவத்துக்குப் பதிலாகக் குட்டிபூர்ஷ்வாப் போக்குகளை வைக்கிறது.

சோஷல்-டெமாக்ராட்டிக் லட்சியத்துக்குத் தீங்கு விளைப்பதில் பகிரங்கமான ஒட்ஸொவிஸத்துக்கு எந்த அளவிலும் குறைவுபடாத மற்ருென்று இறுதி எச்சரிக்கை வாதம் எனப்பட்டது (அதாவது, கோட்பாட்டின் பெயரால் மூன்ருவது டூமா மேடையைப் பயன்படுத்திக் கொள்வதைக் கைவிடும் போக்கு, அல்லது இந்தக் கடமையிலிருந்து பிறழ்வதை நடைமுறைக் காரணங்களைக் கொண்டு நியாயப் படுத்த முயல்கிற போக்கு, மேலும் டூமாவிலிருந்து சோஷல்-டெமாக்ராட்டிக் குழுவை வாபஸ்பெறச் செய்ய முயல்வதில், டூமாக் குழுவுக்குப் பயிற்சி தந்து அதன் கொள்கையை நேர் செய்வதற்குரிய நெடுங்கால வேலையைக் கைவிட்டு அதற்கு ஒரு உடனடியான இறுதி எச்சரிக்கை விடுப்பதை ஆதரிப்பது). அரசியல் ரீதியிலே பார்த்தால், இறுதி எச்சரிக்கை வாதம் என்பது இன்று ஒட்ஸொவிஸத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாததாயிருக்கிறது, தன் ஒட்ஸொவிஸத்தின் மறைவான தன்மையின் காரணத்தால் அது இன்னும் அதிகமான குழப்பத்தையும் சீர்குலைவையும் புகுத்துகிறது. புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலே நமது கட்சியினர் நடைமுறையில் கையாண்ட பகிஷ்காரத்துடன் தனக்கு நேரடியான சம்பந்தம் உண்டு என்று இறுதி எச்சரிக்கைவாதம் சாதிக்கப் பார்க்கும் முயற்சிகள் புலீகின் டூமாவையும் முதலாவது டூமாவையும் பகிஷ்காரம் செய்ததின்—நம் கட்சியின் மிகப் பெரும்பான்மையினர் அதைச் செவ்வனே செயல்படுத்தினர்—உண்மையான பொருளையும் தன்மையையும் வெறுமே திரித்து விடுகின்றன. புரட்சியின் ஏதாவதொரு தருணத்தில் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களைப் பகிஷ்கரிப்பது செயல்படுத்தப்பட்ட குறிப்பிட்ட வழக்குகளைக் கொண்டு,

புரட்சி எதிர்ப்புக் காலத்திலும் கூட பகிஷ்காரக் கொள்கையே போல்ஷெவிக் செயல்தந்திரங்களின் இனக்குறிப்பான குணும்சம் என்கிற முடிவுக்கு வரச்செய்யும் அவற்றின் முயற்சிகளால் ஒட்ஸொவிஸமும் இறுதி எச்சரிக்கை வாதமும் இந்தப் போக்குகள் சாராம்சத்தில் மென்ஷெவிஸத்தின் மறுபக்கமே என்று தெரியப்படுத்துகின்றன; மென்ஷெவிஸம், புரட்சியின் அந்தந்தக் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தைப் பொருட்படுத்தாமல், ஒரு புரட்சிகரமான எழுச்சி இருக்கிறதா இல்லையா என்பதையும் பொருட்படுத்தாமல், எல்லாப் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களிலும் தாமதமின்றிப் பங்கெடுக்க வேண்டும் என்று பிரசாரம் செய்கிறது.

ஒட்ஸொவிஸமும் இறுதி எச்சரிக்கை வாதமும் தம்முடைய தத்துவத்துக்கு ஆதாரமாகக் கோட்பாடுகளை வரையறுத்து வைக்க இதுவரை செய்துவந்துள்ள முயற்சிகள் அனைத்தும், புரட்சிகரமான மார்க்ஸீயத்தின் அடிப்படைகளை மறுப்பதில் தவிர்க்க முடியாதபடி கொண்டுபோய்விட்டுள்ளன. அவை பிரேரேபிக்கும் செயல்தந்திரங்கள் இன்றைய ருஷ்ய நிலைமைகளுக்குப் பொருத்திச் செயல்படுத்துகிற வகையிலுள்ள சர்வதேச சோஷல்-டெமாக்ரஸியின் இடது சாரியின் செயல்தந்திரங்களோடு தவிர்க்க முடியாதபடி முற்றுக முறித்துக் கொள்வதிலே கொண்டுபோய் விடுகின்றன, அராஜகவாதத் திரிபுகளை விளைக்கின்றன.

ஒட்ஸொவிஸ-இறுதி எச்சரிக்கை வாதக் கிளர்ச்சி ஏற்கெனவே சந்தேகத்திற்கிடமின்றித் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் சோஷல்-டெமாக்ராட்டிக் வேலைக்கும் தீங்கு விளைக்கத் தொடங்கிவிட்டது. அது தொடர்ந்து நடந்தால் கட்சி ஒற்றுமைக்கு ஆபத்தாகக் கூடும்; ஏனெனில் ஏற்கெனவே இந்தக் கிளர்ச்சியானது, டூமாவிலுள்ள நமது கட்சிப் பிரதிநிதிகளுக்கு உதவி கிடைக்காதவாறு தடுக்கும் நோக்குடன் (செயின்ட் பீட்டர்ஸ்பர்கில்) ஒட்ஸொவிஸ்டுகளுக்கும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் இடையே கூட்டணி ஏற்பட்டிருப்பது போன்ற விகாரமான தோற்றங்களையும், திட்டவட்டமான சிண்டிகலிஸ்டுகளுடன் கூட்டாகச் சேர்ந்து தொழிலாளர்களின் பொதுக்கூட்டங்களில் உரைகள் நிகழ்த்துவதையும் உண்டாக்கியுள்ளது.

இவையெல்லாவற்றின் காரணமாக, ருஷ்யாவின்

சோஷல்-டெமாக்ராட்டுக் தொழிலாளர் கட்சிக்குள் ஒரு திட்டமான போக்காக விளங்குகிற போல்ஷெவிஸத்துக்கும் ஒட்ஸொவிஸம், இறுதி எச்சரிக்கைவாதத்துக்கும் இடையே எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், புரட்சிகரமான மார்க்ஸியத்தின் பாதையைவிட்டு விலகும் இந்தத் திரிபுகளைக் கட்சியின் போல்ஷெவிக் சாரி மனஉறுதியுடன் போராடித் தீர வேண்டும் என்றும் ''புரொலித்தாரிய்'' பத்திரிகையின் விரிந்த ஆசிரியர் குழு பிரகடனம் செய்கிறது.

*நூல்திரட்டு, தொகுதி 19*

*1909, ஜூலை 3 (16),*
''புரொலித்தாரிய்'', இதழ் 46ன்
இணைமலரில் பதிப்பிக்கப்பட்டது

# ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள கருத்துவேற்றுமைகள்

## I

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தற்காலத் தொழிலாளர் இயக்கத்தில் இருக்கிற பிரதானமான செயல் தந்திரங்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் எனப்பட்டவை இந்த இயக்கத்தின் ஆதிக்கம் செலுத்தும் தத்துவமாக உண்மையிலே ஆகிவிட்டுள்ள, மார்க்ஸீயத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிற, இரண்டு பெரிய போக்குகளை எதிர்த்து நடக்கும் போராட்டமாகத் தங்களைக் காட்டிக் கொள்கின்றன. திரிபுவாதம் (சந்தர்ப்பவாதம், சீர்திருத்த வாதம்), அராஜகவாதம் (அராஜக-சிண்டிகலிஸம், அராஜக-சோஷலிஸம்)என்பவையே இந்த இரண்டு போக்குகள். தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் வகிக்கும் மார்க்ஸீயத் தத்துவத்தினின்றும், மார்க்ஸீயச் செயல்தந்திரங்களினின்றும் விலகிச் செல்கிற இவ்விரண்டு விலகல்களும் வெகுஜனத் தொழிலாளர் இயக்கத்தின் அரை நூற்றுண்டுக்குமேலான காலத்தில் எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சாயல்களிலும் காணப்பட்டன.

இந்த ஒரு உண்மையே இந்த விலகல்களைத் தற்செயலுக்கோ, தனிநபர்களின் அல்லது குழுக்களின் தவறுகளுக்கோ, நாட்டினக் குணும்சங்களுக்கோ பரம்பரைகளுக்கோ, மற்றவற்றிற்கோ உரியவை எனச் சொல்ல முடியாது என்று காட்டுகிறது. இந்த விலகல்களை இடையருது தோற்றுவிப்பதற்குப் பொருளாதார அமைப்பிலும் எல்லா முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சியின் தன்மையிலும் ஆழ்ந்த வேர்விட்டிருக்கும் காரணங்கள் இருந்துதீர வேண்டும். ஆன்டன் பேனகாக் என்கிற ஒரு ஹாலந்து நாட்டு மார்க்ஸீயவாதி சென்ற ஆண்டில் வெளியிட்ட ''தொழிலாளர் இயக்கத்திலுள்ள செயல்தந்திரங்கள் பற்றிய கருத்துவேற்றுமைகள்'' ("*Die taktischen Differenzen in der Arbeiterbewegung*",

Hamburg, Erdmann-Dubber, 1909) என்கிற சிறு நூல், இந்தக் காரணங்களை விஞ்ஞான ரீதியாக ஆராய்கிற ஒரு அக்கறைக்குரிய முயற்சியைக் காட்டுகிறது. நமது விளக்கத்தில் பேனகாக் அவர்களின் முடிவுகளை வாசகர்களுக்குத் தெரியப் படுத்துவோம்; அவை முற்றிலும் சரியே என்று அங்கீகரித்தாக வேண்டும்.

செயல்தந்திரங்கள் பற்றிக் கருத்து வேற்றுமைகளை அவ்வப்பொழுது தோற்றுவிக்கச் செய்யும் ஆழ்ந்த காரணங்களில் ஒன்று, தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியேயாகும். ஏதாவதொரு அதிசயக் கற்பனையின் பாற்பட்ட இலட்சியத்தை அளவுகோலாகக் கொண்டு இந்த இயக்கத்தை அளக்காமல், சாதாரண மனிதர்களின் நடைமுறை இயக்கமாகக்கருதினுல், மேலும் மேலும் அதிகமான தொகையில் ''புதுப்படைவீரர்கள்'' அணி சேர்க்கப்படுவதும் உழைப்பாளி மக்களின் புதிய பகுதியினர் இயக்கத்தில் சேர்வதும் தவிர்க்கமுடியாதபடி அதைத் தொடர்ந்து தத்துவத்துறையிலும் செயல்தந்திரத் துறையிலும் ஊசலாட்டமும் பழைய தவறுகளைத் திரும்பச் செய்வதும், பழையதாகிப்போன கருத்துக்களுக்கும் பழையதாகிப்போன வழிமுறைகளுக்கும் தற்காலிகமாகத் திரும்புவதும், மற்றவையும், வரும் என்பது தெளிவாகும். ஒவ்வொரு நாட்டின் தொழிலாளர் இயக்கமும் அவ்வப்பொழுது புதிய ஆட்களுக்குப் ''பயிற்சி'' தருவதில் மாறுபட்ட அளவில் சக்தியையும் கவனத்தையும் நேரத்தையும் செலவழிக்கின்றது.

மேலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சி விகிதம் வெவ்வேறு நாடுகளில், தேசியப் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளில் வேறுபட்டிருக்கிறது. பெரிய அளவுத் தொழில்கள் மிக அதிகமாக வளர்ந்திருக்கிற இடங்களில் தொழிலாளி வர்க்கமும் அதன் தத்துவாசிரியர்களும் மார்க்ஸீயத்தை மிகச் சுலபமாகவும் துரிதமாகவும் முழுமையாகவும் நிரந்தரமாகவும் சீரணித்துக் கொள்கிருர்கள். பிற்பட்ட பொருளாதார உறவுகளும், அல்லது வளர்ச்சியில் பின்னடைந்துள்ள பொருளாதார உறவுகளும், மார்க்ஸீயத்தின் சில அம்சங்களை மட்டும் சீரணித்துக் கொண்டிருக்கிற, புதிய உலகக் கண்ணேட்டத்தின் சில பகுதிகளை மட்டும் சீரணித்துக் கொண்டிருக்கிற, அல்லது தனித்தனியான கோஷங்களை

யும் கோரிக்கைகளையும் சீரணித்துக் கொண்டிருக்கிற தொழிலாளர் இயக்க ஆதரவாளர்கள் தோன்றுவதில் இடையருது கொண்டுபோய்விடுகின்றன; பொதுவாக பூர்ஷ்வா உலகக் கண்ணேட்டத்தின், அம்சரீதியாக பூர்ஷ்வா ஜனநாயக உலகக் கண்ணேட்டத்தின், எல்லாப் பரம்பரைகளுடனும் திண்ணமாக முறித்துக்கொள்ள இவர்கள் சக்தியற்றிருப்பதே இதற்குக் காரணம்.

மேலும், கருத்துவேற்றுமைகளுக்குரிய ஒரு நிரந்தரமான ஊற்றுக்கண் சமுதாய வளர்ச்சியின் இயக்க இயல் ரீதியான தன்மையே; அது முரண்பாடுகளிலும், முரண்பாடுகளின் மூலமாகவும், முன்செல்கிறது. முதலாளித்துவம் பழைய உற்பத்தி முறைகளை அழித்து உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதினுல் அது முற்போக்கானது; ஆனுல், அதே சமயத்தில், வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில், அது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது. அது தொழிலாளர்களை வளர்க்கிறது, ஸ்தாபனரீதியாகத் திரட்டுகிறது, கட்டுப்படுத்துகிறது—ஆனுல், அது நசுக்கவும் செய்கிறது, ஒடுக்கவும் செய்கிறது, சீரழிவு, வறுமை முதலியவற்றிற்கும் கொண்டு செல்கிறது. முதலாளித்துவம் தனக்குச் சவக்குழிதோண்டுபவனையே சொந்தத்தில் சிருஷ்டித்துவிடுகிறது, தானே ஒரு புதிய அமைப்புக்குரிய அம்சங்களைச் சிருஷ்டிக்கிறது; ஆனுல், அதே சமயத்தில், ஒரு ''பாய்ச்சல்'' இல்லாமல் இந்தத் தனித்தனி அம்சங்கள் பொதுவான விவகார நிலையில் எதையும் மாற்றுவதில்லை, மூலதனத்தின் ஆதிக்கத்தைப் பாதிப்பதில்லை. மார்க்ஸீயத்தான், இயக்க இயல் லோகாயதவாதத்தின் தத்துவம் என்கிற முறையில், உயிர்ப்புள்ள யதார்த்தத்தின், முதலாளித்துவத்தினதும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினதும் உயிர்ப்புள்ள வரலாற்றின் முரண்பாடுகளை முற்ருக உட்படுத்திக் கொள்ள வல்லது. ஆனுல், மக்கள் கற்றுக் கொள்வது வாழ்க்கையிலிருந்துதான், புத்தகங்களிலிருந்தல்ல என்று சொல்லத் தேவையில்லை; எனவே, சில நபர்கள் அல்லது குழுக்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் ஏதாவதொரு குணும்சத்தை இன்றைக்கு ஒன்ருகவும் நாளைக்கு மற்ருென்ருகவும் எடுத்துக்கொண்டு, இந்த வளர்ச்சியின் ''பாடத்தில்'' இன்றைக்கு ஒன்றையும் நாளைக்கு மற்ருென்றையும்

எடுத்துக் கொண்டு, ஒருதலைப்பட்சமான தத்துவமாகவும், ஒரு-சார்பான செயல்தந்திரத் தொகுப்புமுறையாகவும் எப்பொழுதும் மிகைப்படுத்தி உயர்த்தி வைக்கிறார்கள்.

பூர்ஷ்வாத் தத்துவாசிரியர்களும் மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் மார்க்ஸீயத்தைப் புரிந்துகொள்ளாமல், நவீனகாலத்தியத் தொழிலாளர் இயக்கத்தையும் புரிந்துகொள்ளாமல், பயனற்ற ஒரு துருவநிலையிலிருந்து இன்னொரு துருவநிலைக்கு என்றும் தாண்டிக் குதித்தவாறிருக்கிறார்கள். ஒரு சமயம், அவர்கள் கெட்ட எண்ணம் படைத்த நபர்கள் வர்க்கத்துக்கு எதிராக வர்க்கத்தைத் ''தூண்டிவிடுகிறார்கள்'' என்று சாதித்து விவகாரம் முழுவதையும் விளக்கிவிடுகிறார்கள்;—மற்றொரு சமயம், தொழிலாளர் கட்சி ''சமாதானப் போக்கு உள்ள சீர்திருத்தக் கட்சிதான்'' என்கிற கருத்தைக் கொண்டு தங்களைத் தாங்களேதேற்றிக் கொள்கிறார்கள். அராஜக-சிண்டிகலிஸம், சீர்திருத்தவாதம் இரண்டுமே இந்த பூர்ஷ்வா உலகக் கண்ணோட்டத்தின் அதன்செல்வாக்கின், நேரடியான விளைபொருளே என்று கரு, வேண்டும்; அவை தொழிலாளர் இயக்கத்தின் ஒரு அம்சத்தைப் பிடித்துக் கொள்கின்றன, ஒரு-சார்பான நிலையை ஒரு தத்துவமாக உயர்த்திவைக்கின்றன, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின், தொழிலாளி வர்க்க நடவடிக்கைகளின் குறிப்பட்ட நிலைமைகளின், தனிச்சிறப்பான அம்சமாயிருக்கிற போக்குகளையோ குணம்சங்களையோ ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ள முடியாதவை என்று பிரகடனம் செய்கின்றன. ஆனால், வாழ்க்கையும் இயற்கையிலுள்ள வளர்ச்சியும் மெதுவான பரிணாமம், துரிதமான பாய்ச்சல்கள், தொடர்ச்சியில் முறிவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது போலவே நிஜவாழ்க்கையும், நிஜவரலாறும் இந்த வெவ்வேறான போக்குகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளன.

''பாய்ச்சல்கள்'' பற்றியும், கோட்பாடுரீதியிலே தொழிலாளி வர்க்க இயக்கம் பழைய சமுதாயம் முழுவதற்கும் பகையாக இருப்பது பற்றியும் உள்ள எல்லா வாதங்களையும் வாய்ச்சொல்வீச்சு என்று திரிபுவாதிகள் கருதுகிறார்கள். சீர்திருத்தங்களை அவர்கள் சோஷலிஸத்தின் அரைகுறையான

பூர்த்தி என்று கருதுகிறுர்கள். அராஜக-சிண்டிகலிஸ்டுகள் ''அற்பவேலையை'' நிராகரிக்கிறுர்கள், குறிப்பாகப் பாராளு மன்ற மேடையைப் பயன்படுத்துவதை நிராகரிக்கிறுர்கள். நடைமுறையிலே பார்த்தால், பின்சொன்ன செயல்தந்திரங் கள் என்பவை ''மகத்தான நாட்களை'' எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பதாகத்தான், அத்துடன் மகத்தான நிகழ்ச்சி களைச் சிருஷ்டிக்கிற சக்திகளைத் திரட்டத் திறனற்றிருப் பதாகத்தான், அமைகின்றன. இரு வகையினரும் எது மிக முக்கியமானதோ எது அவசரமானதோ அதை—அதாவது, செவ்வனே செயல்பட வரும், எல்லா நிலைமைகளிலும் செவ்வனே செயல்பட்டுவரத்தக்க, தெளிவாகத் தம்முடைய குறிக்கோள்களைப் புரிந்து கொண்டும் உண்மையான மார்க்ஸீய உலகக்கண்ணேட்டத்தில் பயிற்சிபெற்றும் வர்க்கப் போராட்ட உணர்வு ஊட்டப்பெற்றுமிருக்கிற, பெரிய, பலம் வாய்ந்த ஸ்தாபனங்களில் தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவது என்கிற விஷயத்தை—தடுக்கின்றன.

இங்கே விஷயத்தை விட்டுச் சிறிது விலகிச் செல்ல விரும்புகிறோம்; சாத்தியமான தப்பெண்ணங்கள் எழாது தவிர்ப்பதற்காக இடையே ஒன்று சொல்லிவைக்கிறோம்; சிறிதேனும் ருஷ்யாவைப் பற்றிக் குறிப்பிடாமல், மேற்கு ஐரோப்பிய வரலாற்றிலிருந்து, குறிப்பாக ஜெர்மனி, பிரான்சு வரலாற்றிலிருந்து, மட்டும் எடுத்துக் கொண்ட உதாரணங்களை வைத்து பேனகாக் தமது பகுப்பாய்வை விளக்குகிறுர். சில சமயங்களில் அவர் ருஷ்யாவைச் சுட்டு வதாகத் தோன்றுகிறதென்ருல், அதற்குக் காரணம் பண் பாடு, அன்ருட வாழ்க்கை, வரலாற்று வளர்ச்சி, பொருளா தார வளர்ச்சி, ஆகியவற்றில் ருஷ்யாவுக்கும் மேலைய நாடு களுக்கும் இடையே பெரும் வேற்றுமை இருக்கிறபோதிலும் நம் நாட்டிலே கூட மார்க்ஸீயச் செயல்தந்திரங்களிலிருந்து பிரியும் திட்டவட்டமான விலகல்களைத் தோற்றுவிக்கிற அடிப்படையான போக்குகள் காணக்கிடக்கின்றன என்பதே.

கடைசியாக, தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொண்ட வர்களிடையே கருத்துவேற்றுமைகள் எழுவதற்கு ஒரு முக்கியமான காரணம், பொதுவாக ஆளும் வர்க்கங்களின், குறிப்பாக முதலாளி வர்க்கத்தின், செயல்தந்திரங்களில் உள்ள மாற்றங்களிலே அடங்கியுள்ளது. முதலாளி வர்க்கத்

தின் செயல்தந்திரங்கள் எப்போதும் சீராக இருக்குமேயானல், அல்லது கொஞ்சத்துக்குக் கொஞ்சமேனும் ஒரேவகைப் பட்டதாக இருக்குமேயானல், தொழிலாளி வர்க்கமும் அதே சீரான அல்லது அதே வகையான செயல்தந்திரங்களைக் கொண்டு பதில்கொடுக்கத் துரிதமாகக் கற்றுக்கொள்ளும். ஆனல், உண்மை என்னவென்ருல், ஒவ்வொரு நாட்டிலும் முதலாளி வர்க்கம் இரண்டு ஆட்சி முறைகளை, தனது நலன்களுக்காகப் போராடவும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் இரண்டு வழிமுறைகளை, தவிர்க்கமுடியாதபடி புனைந்து கொள்கிறது; இந்த முறைகள் சில சமயங்களில் ஒன்றைத் தொடர்ந்து மற்ருென்ருக வருகின்றன, சில சமயங்களில் பல்வேறு கலவைகளாக அவை ஒன்ருேடொன்று சேர்த்துப் பின்னிவிடப்படுகின்றன. இவற்றில் முதலாவது பலாத்கார முறை, தொழிலாளர் இயக்கத்துக்கு எல்லாச் சலுகைகளையும் மறுக்கும் முறை, பழைய காலாவதியாகிவிட்ட ஸ்தாபனங்கள் அனைத்தையும் ஆதரிக்கும் முறை, சமரசத்திற்கிடமற்ற வகையில் சீர்திருத்தங்களை மறுக்கும் முறை. இந்தப் பழைமையான கொள்கையின் தன்மை இதுதான்; இது மேற்கு ஐரோப்பாவில் நிலவுடைமை வர்க்கத்தாரின் கொள்கையாகி இருப்பது வரவரக் குறைந்து பொதுவாகவே பூர்ஷ்வாக் கொள்கையின் பலவகைகளில் ஒன்ருக மேலும் மேலும் அதிகமாகி வருகிறது. இரண்டாவது ''மிதவாதத்தின்'' வழிமுறையாகும் அரசியல் உரிமைகளின் வளர்ச்சி நோக்கி, சீர்திருத்தங்களை, சலுகைகளை, மற்றவைகளை நோக்கி அடியெடுத்துவைக்கிற முறையாகும்.

பூர்ஷ்வா வர்க்கம் ஒரு வழிமுறையிலிருந்து மற்ருெரு வழிமுறைக்குப் போவதற்குக் காரணம் தனிநபர்களின் கெடுநோக்கல்ல, தற்செயலும் அல்ல, அதன் நிலையில் அடிப்படையாகவேவுள்ள முரண்பாடான தன்மையே காரணமாகும். உறுதியாக நிலைநிறுத்தப்பட்ட பிரதிநிதித்துவ அமைப்பு இல்லாமல், சார்புநோக்கில் உயர்வான ''பண்பாடுவகைப்பட்ட'' தேவைகளால் தனிச்சிறந்து தீரவேண்டியிருக்கும் மக்கள் தொகைக்குச் சில அரசியல் உரிமைகள் இல்லாமல் சகஜமான முதலாளித்துவ சமுதாயம் வெற்றிகரமாக வளர முடியாது. உயர்தரமான தொழில்நுட்பம், பல்வகைத் தன்மை, நெளிவுசுளுவு, இயங்குந்தன்மை, உலகப் போட்டி

யின் துரித வளர்ச்சி, முதலியவற்றோடு உள்ள முதலாளித் துவ உற்பத்திமுறையின் நிலைமைகளே ஓரளவுக்குக் குறைந்த பட்சப் பண்பாட்டுக்குரிய தேவைகளைச் சிருஷ்டிக்கின்றன. இதன் விளைவாக, பூர்ஷ்வா வர்க்கத்தின் செயல்தந்திரங் களில் ஊசலாட்டங்கள், பலாத்கார முறையிலிருந்து மேல் போக்காகத் தெரிகிற சலுகைகள் தரும் முறைக்கு மாறுகிற மாற்றங்கள் என்பவை சென்ற அரை நூற்றுண்டுக் காலத் தில் எல்லா ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றிற்கும் குணக் குறிப்பாக இருந்து வந்திருக்கின்றன; இந்தப் பல்வேறு நாடு கள் அந்தந்த திட்டவட்டமான காலப்பகுதிகளில் ஏதாவ தொரு வழிமுறையைச் செயல்படுத்துவதைப் பிரதானமாக வளர்த்தன. எடுத்துக்காட்டாக, 19ம் நூற்றுண்டின் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் பிரிட்டன் ''மிதவாத'' பூர்ஷ்வாக் கொள்கைக்குரிய ஆதர்ச நாடாக இருந்தது, எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஜெர்மனி பலாத்கார வழிமுறையைப் பற்றி நின்றது, என்றவாறு.

இந்த வழிமுறை ஜெர்மனியில் நிலவிய காலத்தில்,இந்தக் குறிப்பிட்ட பூர்ஷ்வா அரசாங்க அமைப்பின் ஒரு ஒருசார் பான எதிரொலியே தொழிலாளர் இயக்கத்தில் அராஜக-சிண்டிகலிஸம் அல்லது அராஜகவாதம் என்று அன்று அழைக் கப்பட்டதின் வளர்ச்சியாகும் (தொண்ணூறுகளின் தொடக் கத்தில் இருந்த ''இளைஞர்கள்''[46], எண்பதுகளின் தொடக்கத் தில் யோஹன் மொஸ்ட்). 1890ல் ''சலுகைகள்'' தரும் மாற்றம் ஏற்பட்டபோது இந்த மாற்றம், எப்போதும் நடப் பது போலவே, தொழிலாளர் இயக்கத்துக்கு இன்னும் அதிக ஆபத்தானதாக இருந்தது, அதே அளவுக்கு ஒருசார்பான பூர்ஷ்வா ''சீர்திருத்தவாத'' எதிரொலியை—தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தை—தோற்றுவித்தது. பேன காக் சொல்கிறார்: ''பூர்ஷ்வா வர்க்கத்தினது மிதவாதக் கொள்கையின் உருப்படியான, உண்மையான குறிக்கோள் தொழிலாளர்களைத் தவருன வழியில் செலுத்துவதே, அவர் களுடைய அணிகளில் பிளவு உண்டாக்குவதே, அவர்களு டைய கொள்கையை ஒரு நபும்சகத்தனமான, எப்போதும் நபும்சகத்தமும் கணந்தோன்றி மறையும் தன்மையுமுள்ள போலி சீர்திருத்தவாதத்தின் நபும்சகத்தனமான தொங்கு சதையாக மாற்றிவிடுவதே'' என்று.

அடிக்கடி, பூர்ஷ்வா வர்க்கம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ''மிதவாதக்'' கொள்கை மூலமாகத் தனது குறிக்கோளைச் சாதித்துக் கொள்கிறது; அது ''மற்றதைவிட மிகத் தந்திரமான'' கொள்கை என்று நியாயமாகத்தான் பேனாக் குறிப்பிடுகிருர். மேல்போக்காகத் தெரிகிற சலுகைகளைக் கொண்டு ஒரு பகுதித் தொழிலாளர்களும் அவர்களின் பிரதிநிதிகளின் ஒரு பகுதியினரும் சில சமயங்களில் ஏமாற்றப் படுவதற்கு இடமளித்துக் கொள்கிருர்கள். வர்க்கப் போராட்டம் என்கிற கோட்பாடு ''பழையதாகிப்போய்விட்டது'' என்று திரிபுவாதிகள் பிரகடனப்படுத்துகிருர்கள், அல்லது உண்மையிலே வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்ட ஒரு கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்குகிருர்கள். பூர்ஷ்வா செயல்தந்திரங்களின் கோணல்மாணல்கள் தொழிலாளர் இயக்கத்தினுள்ளே திரிபுவாதத்தைத் தீவிரப்படுத்துகின்றன, அடிக்கடி தொழிலாளர் இயக்கத்தினுள் இருக்கும் வேற்றுமைகளை முற்ருகப் பிளவுபடும் அளவுக்குக் கொண்டு செல்கின்றன.

இவ்வகைப்பட்ட மேலே குறித்த எல்லாக் காரணங்களும் தொழிலாளர் இயக்கத்திலும், தொழிலாளர் அணிகளிலும், செயல்தந்திரங்கள் விஷயத்தில் வேற்றுமைகளை உண்டாக்குகின்றன. ஆனுல், தொழிலாளி வர்க்கத்துக்கும் அதனேடு தொடர்புள்ள விவசாயி மக்கள் உள்ளிட்ட குட்டி பூர்ஷ்வாப் பகுதியினருக்கும் இடையே ஒரு சீனத்துச் சுவர் கிடையாது, இருக்கவும் முடியாது. குட்டிபூர்ஷ்வாக்களைச் சேர்ந்த சில நபர்களும், குழுக்களும், பகுதிகளும் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளுக்கு வந்துசேருவது, தன் முறைக்கு, தொழிலாளி வர்க்கத்தின் செயல்தந்திரங்களிலே ஊசலாட்டங்களைக் கட்டாயம் தோற்றுவிக்கும் என்பது தெளிவு.

பல்வேறு நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தின் அனுபவம், ஸ்தூலமான நடைமுறைப் பிரச்சினைகளின் அடிப்படையில் மார்க்ஸீயச் செயல்தந்திரங்களின் தன்மையை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது; மார்க்ஸீயத்திலிருந்து விலகுபவைகளின் உண்மையான வர்க்கக் குறிபொருளை மேலும் தெளிவாக வேறுபடுத்திக் கண்டுகொள்ளவும், இந்த விலகல்

களை மேலும் வெற்றிகரமாக எதிர்த்துப் போராடவும் இளம் நாடுகளுக்கு உதவுகின்றது.

நூல்திரட்டு, தொகுதி 20

*''ஸ்வேஸ்தா'', இதழ் 1,*
*1910, டிசம்பர் 16*

கையொப்பம்: வி. இல்யீன்

# தொழிலாளி வர்க்க ஒற்றுமை

## என்கிற கட்டுரையிலிருந்து

தொழிலாளி வர்க்கத்துக்கு ஒற்றுமை தேவை. தன்னுடைய முடிவுகளை எல்லா வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் மனச்சாட்சி பூர்வமாக நிறைவேற்றிவைக்கிறதாக அமைந்துள்ள ஒரு ஒன்றுபட்ட ஸ்தாபனத்தினுலேதான் ஒற்றுமையை உண்டாக்க முடியும். பிரச்சினையை விவாதிப்பது, வெவ்வேறு கருத்துக்களைச் சொல்வது, கேட்பது ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள மார்க்ஸீயவாதிகளின் பெரும் பான்மையினரின் கருத்துக்களைக் கண்டுகொள்வது, பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் என்கிற வடிவத்திலே இந்தக் கருத்துக்களை வெளியிட்டு அவற்றை மனச்சாட்சிபூர்வமாக நிறைவேற்றுவது—உலகிலுள்ள நியாய புத்தியுள்ள மக்கள் இதைத்தான் ஒற்றுமை என்று அழைக்கிறுர்கள். அப்படிப்பட்ட ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்துக்கு அளவற்ற மதிப்புள்ளது, அளவற்ற முக்கியத்துவமுள்ளது. பிளவுபட்டால், தொழிலாளர்கள் வெறும் பூஜ்யம்தான். ஒன்றுபட்டால், எல்லாமே அவர்கள்தான்.

நூல்திரட்டு, தொகுதி 24

''ஸா பிராவ்தூ'', இதழ் 50,
*1913*, டிசம்பர் *3*

## ஒற்றுமை

### என்கிற கட்டுரையிலிருந்து

தொழிலாளர்களுக்கு ஒற்றுமை அவசியம் வேண்டியிருக்கிறது. மேலும் நினைவில் நிறுத்த வேண்டிய முக்கியமான விஷயம் என்னவெனில் தங்களைத் தவிர வேறு யாரும் ஒற்றுமையைக் ''கொடுக்க'' மாட்டார்கள், ஒற்றுமையைச் சாதிப்பதில் அவர்களுக்கு வேறுயாராலும் உதவவும் முடியாது. ஒற்றுமைக்கு ''வாக்குறுதி'' அளிக்கமுடியாது—அது வீண் டம்பப்பேச்சு, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வது என்றுதான் இருக்கும்; அறிவுஜீவிகளின் குழுக்களிடையே ''ஒப்பந்தங்கள்'' செய்து கொள்வதிலிருந்து ஒற்றுமையைச் ''சிருஷ்டிக்க'' முடியாது. அவ்வாறு நினைப்பது ஒரு தயரமிக்க, அப்பாவித்தனமிக்க, அறியாத்தனமிக்க பிரமையேயாகும்.

ஒற்றுமையைச் சம்பாதித்தாக வேண்டும்; மேலும், தொழிலாளர்கள் மட்டுமே, வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் மட்டுமே, அதைச் சம்பாதிக்க முடியும்—பிடிவாதமான, விடாப்பிடியான முயற்சி மூலமாக.

''ஒற்றுமை'' என்கிற வார்த்தையை கெஜநீள எழுத்துக்களில் எழுதுவதைப்போல, வாக்குறுதியளிப்பதுபோல, ஒருவன் தன்னை ஒற்றுமையின் ஆதரவாளன் என்று ''பிரகடனம்'' செய்துகொள்வதைப்போல, சுலுவானது வேறொன்றுமில்லை. ஆனால், யதார்த்தத்தில் பார்த்தால், முன்னேறிய நிலையிலுள்ள தொழிலாளர்களின் எல்லா வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களின் முயற்சிகளாலும் ஸ்தாபன அமைப்பாலும் மட்டுமே ஒற்றுமையை முன்னுக்குக் கொண்டு போக முடியும்.

ஸ்தாபன அமைப்பு இல்லாமல் ஒற்றுமை அசாத்தியம். பெரும்பான்மைக்குச் சிறுபான்மை பணியாவிட்டால் ஸ்தாபன அமைப்பு அசாத்தியம்.

நூல்திரட்டு, தொகுதி 25

''த்ருதோவாயா பிராவ்தா'', இதழ் 2,
1914, மே 30

## பி. கியெவ்ஸ்கிய்க்கு (யூ. பியாத்தக்கோவுக்கு) பதில்[47]

தனிநபர்களின் வாழ்க்கையிலோ நாடுகளின் வரலாற்றிலோ நிகழ்கிற ஒவ்வொரு நெருக்கடியையும் போலவே, யுத்தமும் சிலரை ஒடுக்கி உடைத்து விடுகிறது, மற்றவர்களை எஃகுபோல் ஆக்கி அறிவு புகட்டுகிறது.

யுத்தம் குறித்தும், யுத்தம் சம்பந்தமாயும் சோஷல்-டெமாக்ராட்டிக் சிந்தனைமுறையில் இந்த உண்மை பாதிப்புச் செலுத்தி வருகிறது. உயர்வாக வளர்ந்துள்ள முதலாளித்துவத்திலிருந்து வளர்ந்தெழுகிற ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தின் காரணங்கள், அதன் குறிபொருள், அப்படிப்பட்ட யுத்தம் சம்பந்தமான சோஷல்-டெமாக்ராட்டிக் செயல்தந்திரங்கள், சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்திற்குள்ளே இருக்கும் நெருக்கடியின் காரணங்கள் முதலியவை பற்றிச் சீரிய முறையில் சிந்திப்பது ஒரு விஷயம். ஆனல் யுத்தம் நமது சிந்தனையையே ஒடுக்கிவிட அனுமதிப்பது, யுத்தத்தின் பயங்கரமான முத்திரைகளின், வேதனை தரும் விளைவுகளின் அல்லது குணும்சங்களின் பாரம் தாங்க மாட்டாமல் சிந்திப்பதையும் பகுத்தாய்வதையும் நிறுத்திவிடுவது முற்றிலும் வேறு விஷயம்.

யுத்தத்தால் உண்டாக்கப்படுகிற இப்படிப்பட்ட மனித சிந்தனை ஒடுக்கத்தின் அல்லது அடக்குதலின் ஒரு வடிவம், ஜனநாயகத்தைப் பற்றி ''ஏகாதிபத்தியப் பொருளாதார வாதம்'' காட்டும் துச்சமாக நினைக்கும் மனேபாவமாகும். யுத்தத்தால் தூண்டப்பட்ட இந்த ஒடுக்கப்பட்ட நிலை, இந்தப் பயம், பகுத்தாய்ந்தறிய மறுக்கும் இந்த மறுப்பு தமது எல்லா வாதங்களினூடேயும் ஒரு இழைபோல் ஓடிக் கொண்டிருப்பதை பி. கியெவ்ஸ்கிய் பார்க்கவில்லை. இப்படிப்பட்ட பயங்கரமான நாசத்தின் மத்தியிலே தாய்நாட்டின் பாதுகாப்புபற்றி விவாதிப்பதில் என்ன பொருள் இருக்கிறது? முற்ருக மூச்சடைத்துக்கொல்வதே விதிமுறையாக

எங்குமே இருக்கும்போது தேசங்களின் உரிமைகளைப் பற்றி விவாதிப்பதில் என்ன பொருள் இருக்கிறது? தேசங்களின் சுயநிர்ணய உரிமையாம், ''சுதந்திரமாம்''—அதோ ''சுதந்திரமான'' கிரேக்க நாட்டை அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள், பாருங்கள்! இராணுவ வாதிகளின் நலன்களுக்காக எங்கு பார்த்தாலும் உரிமைகள் காலடியில் மிதிக்கப்பட்டு வருகையில் ''உரிமைகள்'' பற்றிப் பேசுவதில், சிந்திப்பதில் என்ன பலன்! மிகமிக ஜனநாயகத்தன்மை வாய்ந்த குடியரசுகளுக்கும் மிகமிகப் பிற்போக்கான முடியாட்சிகளுக்கும் இடையே வேறுபாடு அறவே இல்லாதிருக்கும்போது, வேறுபாட்டின் ஒவ்வொரு சாயலையும் யுத்தம் துடைத்து அழித்திருக்கும் போது, குடியரசு பற்றிப் பேசுவதிலே, சிந்திப்பதிலே என்ன பொருள் இருக்கிறது!

பொதுப்படையாக ஜனநாயகத்தை நிராகரிக்கும் அளவுக்குப் பயத்துக்கு ஆளாகிவிட்டார் என்று சொன்னால் கியெவ்ஸ்கிய் மிகவும் கோபப்படுகிறார். அவர் கோபப்பட்டு ஆட்சேபிக்கிறார்: நான் ஜனநாயகத்துக்கு எதிராயில்லை: நான் ''கெட்டது'' என்று நினைக்கிற ஒரு ஜனநாயகக் கோரிக்கையைத்தான் எதிர்க்கிறேன், என்று. ஆனால், கியெவ்ஸ்கிய் கோபப்பட்டபோதிலும், தான் சிறிதேனும் ஜனநாயகத்துக்கு ''எதிராக'' இல்லை என்று அவர் நமக்கு (ஒரு வேளை தனக்கும் சேர்த்துத்தான்) ''உறுதிமொழி'' அளித்தாலும் அவருடைய வாதங்கள்—அல்லது, இன்னும் சரியாகச் சொல்வதென்றால், அவருடைய வாதங்களில் இருக்கும் முடிவேயில்லாத பிழைகள்—நேர் எதிர்மறையையே நிரூபிக்கின்றன.

ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தில் தாய்நாட்டுப் பாதுகாப்பு என்பது பொய், ஆனால் ஒரு ஜனநாயகபூர்வமான, புரட்சிகரமான யுத்தத்தில் அது பொய்யல்ல. யுத்தத்தின்போது ''உரிமைகள்'' பற்றிப் பேசுவது அபத்தமாகத் தோன்றுகிறது; காரணம், எல்லாவகை யுத்தமும் உரிமைகளின் இடத்தில் நேரடியான, பச்சையான பலாத்காரத்தை வைக்கிறது. ஆனால், யுத்தத்தின் போது ஒவ்வொரு வகையான ''உரிமைக்கும்'', ஒவ்வொரு வகையான ஜனநாயகத்துக்கும் பதிலாக பலாத்காரத்தை வைக்கிற போதிலும் கூட, தம்முடைய சமுதாய உள்ளடக்கத்திலும் விளைவுகளிலும், ஜனநாயக இலட்சியத்துக்கும் அதன் விளைவாக சோஷலிஸத்துக்

கும், சேவை புரிந்திருக்கும் யுத்தங்களை (ஜனநாயகபூர்வமான, புரட்சிகரமான யுத்தங்களை) வரலாறு சென்ற காலத்தில் அறிந்ததே (எதிர்காலத்திலும் அநேகமாக அறியும், அறிந்தாகவேண்டும்) என்கிற விஷயத்தை மறப்பதில் இது நம்மைக் கொண்டு போய் விடக்கூடாது. கிரேக்க நாட்டு உதாரணம் எல்லாத் தேசிய சுயநிர்ணயத்தையும் ''மறுப்பதாகத்'' தோன்றக்கூடும். ஆனால் சற்று நின்று சிந்திக்கவும், விஷயங்களைப் பகுத்தாய்ந்து எடைபோடவும் முற்பட்டால், சொற்களின் இரைச்சலால் காதடைக்கப்படவோ, யுத்தத்தின் பேய்க்கனவான காட்சிகளால் பயப்படவோ ஒடுக்கப்படவோ இடங்கொடாதிருந்தால், ருஷ்யாவில் இருக்கும் அதே வகைப்பட்ட இராணுவமயமான தான்தோன்றித்தனத்தை ''ஜனநாயகக்'' குடியரசுகள்—பிரான்சு மட்டுமல்ல, அமெரிக்க ஐக்கிய நாடுகள், போர்ச்சுகல், ஸ்விட்ஸர்லாந்து ஆகிய மிகமிக ஜனநாயகத் தன்மையுள்ள குடியரசுகளும்—ஏற்கெனவே புகுத்திவிட்டன அல்லது புகுத்திவருகின்றன என்ற காரணத்துக்காகக் குடியரசு அமைப்பையே கேலி செய்வதைத் தவிர அதிகமாக இந்த எடுத்துக்காட்டு காரியப்பற்றுள்ளதாகவோ ஏற்புடையதாகவோ, இல்லை.

முடியரசுக்கும் குடியரசுக்கும் உள்ள வேற்றுமையை ஏகாதிபத்திய யுத்தம் அழித்துவிடுகிறது என்பது உண்மை. ஆனால், அதைக்கொண்டு குடியரசை நிராகரிப்பது, அல்லது அதைத் துச்சமாகக் கருதுவது, யுத்தத்தால் பீதிக்கிரையாக இடங்கொடுப்பதாகும், அதன் பயங்கரங்கள் சிந்தனையை ஒடுக்க இடங்கொடுப்பதாகும். ''ஆயுதக் களைப்பு'' கோஷத்தை ஆதரிக்கிறவர்களில் பலருடைய மனோபாவம் அதுவே (ரோலண்ட்-ஹோல்ஸ்ட், ஸ்விட்ஸர்லாந்திலுள்ள இளம் நபர்கள், ஸ்காந்தினேவியாவைச் சேர்ந்த ''இடதுசாரிகள்'', மற்றவர்கள்). இந்த யுத்தத்திலே ஒரு குடியரசு மிலிஷியாவுக்கும்* முடியாட்சியின் நிரந்தர இராணுவத்துக்கும் இடையே வேற்றுமை இல்லாதிருக்கையில், எங்குபார்த்தாலும் இராணுவவாதம் தனது பயங்கரமான தொழிலைச் செய்து வருகையில், இராணுவத்தையோ மிலிஷியாவையோ

* மிலிஷியா — போர்முனை செல்லாமல் பின்னணியில் குட்டும் செயலாற்றுவதற்காகத் திரட்டிப் பயிற்றப்பட்ட மடிமக்கள் படை.—(மொ-ர்.)

புரட்சிகரமாகப் பயன்படுத்திக் கொள்வது பற்றி விவாதிப்பதில் பயனென்ன?—என்பது உட்கிடையாக அவர்கள் சொல்வது.[48]

கியெவ்ஸ்கிய் ஒவ்வொரு படியிலும் தன்னையறியாமல் செய்கிற ஒரே சிந்தனைப்போக்கு, ஒரேமாதிரியான தத்துவார்த்த, நடைமுறை-அரசியல் தவறு அது. சுயநிர்ணயத்தை எதிர்த்து மட்டுமே தான் வாதிப்பதாக அவர் நினைக்கிறார், சுயநிர்ணயத்தை எதிர்த்து மட்டுமே வாதிக்க அவர் விரும்புகிறார், ஆனால் விளைவு என்னவெனில்—தன்னுடைய சித்தத்துக்கும் மனச் சாட்சிக்கும் எதிராக, அதுதான் வேடிக்கையான விஷயம்!—பொதுவாக ஜனநாயகத்துக்கு எதிராகவும் அப்படியே பொருத்திக்காட்ட முடியாத ஒரே ஒரு வாதத்தைக் கூட அவர் தரவில்லை!

அவருடைய எல்லா வினோதமான தர்க்கப் பிழைகளுக்கும் குழப்பத்துக்கும் உண்மையான மூலஸ்தானம்—இது சுயநிர்ணயத்துக்கு மட்டுமின்றி, தாய்நாட்டுப் பாதுகாப்பு, திருமண ரத்து, பொதுவாக ''உரிமைகள்'', யாவற்றிற்கும் பொருந்தும்—யுத்தம் அவருடைய சிந்தனையை ஒடுக்கிவருவதிலே உள்ளது; அது அவரை ஜனநாயகத்தைப் பற்றிய மார்க்ஸிய நிலையை முழுக்கத் திரித்துவிடும்படி செய்கிறது.

ஏகாதிபத்தியம் என்பது உயர்வாக வளர்ந்த முதலாளித்துவம்; ஏகாதிபத்தியம் முற்போக்கானது; ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தின் மறுப்பாக உள்ளது—''எனவே'', ஜனநாயகம் முதலாளித்துவத்தின் கீழ் ''அடையமுடியாதது''. ஏகாதிபத்திய யுத்தம் என்பது எல்லா ஜனநாயகத்தையும் வெளிப்படையாக மறுத்துப் பங்கம் செய்வது, பிற்பட்ட முடியரசுகளிலும் சரி, முற்போக்கான குடியரசுகளிலும் சரி—''எனவே'', ''உரிமைகள்'' பற்றி (அதாவது, ஜனநாயகம் பற்றி!) பேசுவதில் பொருளில்லை. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ''எதிராக நிறுத்துவதற்கு'' இருக்கிற ''ஒரேயொரு'' விஷயம் சோஷலிஸம்தான்; சோஷலிஸம் ஒன்றுதான் ''தீர்வுக்கான வழி''; ''எனவே'', நமது குறைந்தபட்ச வேலைத் திட்டத்தில்—அதாவது, முதலாளித்துவத்தின்கீழ்—ஜனநாயக கோஷங்களை முன்வைப்பது ஒரு ஏமாற்று அல்லது பிரமை, சோஷலிஸ்ட் புரட்சிக் கோஷத்தைக் குழப்புவது அல்லது தள்ளிப்போடுவது, முதலியவையே ஆகும்.

கியெவ்ஸ்கிய் அதை உணராவிட்டாலும் அதுதான் அவருடைய எல்லா விபத்துக்களுக்கும் உண்மையான மூலஸ்தானமாகும். அதுதான் அவருடைய அடிப்படையான தர்க்கப் பிழை; அது அடிப்படையாக இருப்பதினுலேதான், அதை ஆசிரியர் உணராததாலேதான், அது ஒவ்வொரு படியிலும் ''வெடிக்கிறது'', ஓட்டைவிழுந்த சைக்கிள் டயர்போல. ஒரு சமயம் அது தாய்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினையிலே, மற்ருெரு சமயம் திருமண ரத்துப் பிரச்சினையிலே, மற்ருெரு சமயம் ''உரிமைகள்'' பற்றிய சொற்ருெடரிலே, உரிமைகளைப் பற்றி நாம் பேச வேண்டாம், ஆனுல் யுகயுகமாக இருந்து வந்திருக்கிற அடிமைமுறையை ஒழிப்பதைப் பற்றிப் பேசுவோம் என்கிற இந்தக் குறிப்பிடத்தக்க (''உரிமைகள்'' பற்றி அறவே துச்சமாக மதிப்பது, பிரச்சினையைப் புரிந்துகொள்ள அடியோடு தவறுவது, அதில் குறிப்பிடத்தக்கதாகும்) சொற்ருெடரிலே அது ''வெடித்துக்கிளம்புகிறது''!

அதைச் சொல்வது முதலாளித்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும், சோஷலிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இருக்கிற உறவைப் புரிந்துகொள்ளாமையைக் காட்டிக் கொள்வதாகும்.

பொதுவாக முதலாளித்துவமும், குறிப்பாக ஏகாதிபத்தியமும், ஜனநாயகத்தை ஒரு பிரமையாக மாற்றிவிடுகிறது —அதே காலத்தில் முதலாளித்துவம் மக்களிடையே ஜனநாயக விருப்பங்களைத் தோற்றுவித்தபோதிலும், ஜனநாயக ஸ்தாபனங்களைச் சிருஷ்டித்த போதிலும், ஏகாதிபத்தியத்தின் ஜனநாயக மறுப்புக்கும் ஜனநாயகத்துக்கான மக்களின் முயற்சிக்கும் இடையேயுள்ள பகைமையைத் தீவிரப்படுத்திய போதிலும். முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பொருளாதாரப் புரட்சி மூலமாகத்தான் வீழ்த்த முடியும். ஜனநாயக மாற்றங்களால், அவை மிகமிக ''ஆதர்சபூர்வமானவையாக'' இருந்தாலும் சரி, அவற்றை வீழ்த்த முடியாது. ஆனுல் ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் பயிற்சி பெருத பாட்டாளி வர்க்கம் பொருளாதாரப் புரட்சியைச் செய்வதற்குச் சக்தியற்றது. பாங்குகளை எடுத்துக் கொள்ளாமல், உற்பத்திச் சாதனங்கள் மீதுள்ள தனியுடைமை முறையை ரத்து செய்யாமல், முதலாளித்துவத்தை வீழ்த்த

முடியாது. ஆனால், பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து பிடுங்கப் பட்ட உற்பத்திச் சாதனங்களை ஜனநாயக ரீதியிலே நிர் வகிக்க எல்லா மக்களையும் ஸ்தாபனரீதியிலே திரட்டாமலே, தங்களுடைய அணிகளையும், தங்களுடைய சக்திகளையும், அரசு விவகாரங்களில் தாங்கள் பங்கெடுப்பதையும், ஜன நாயக முறையில் ஸ்தாபனரீதியிலே அமைப்பதற்காக உழைப் பாளி மக்கள் திரள் முழுவதையும், பாட்டாளிகளையும், அரைப்-பாட்டாளிகளையும், சிறுவிவசாயிகளையும் அணி சேர்க்காமலே, இந்தப் புரட்சிகரமான நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாது. ஏகாதிபத்திய யுத்தம் என்பது மூன்று வகையில் ஜனநாயகத்தை மறுப்பதாகும் என்று சொல்லக் கூடும் (அ—ஒவ்வொரு யுத்தமும் ''உரிமைகளுக்குப்'' பதிலாக பலாத்காரத்தை வைக்கிறது; ஆ—ஏகாதி பத்தியம் என்பதே ஜனநாயகத்தின் மறுப்பு நிலையாகும்; இ—ஏகாதிபத்திய யுத்தம் முடியரசையும் குடியரசையும் முழுக்க சமநிலையில் வைத்துவிடுகிறது). ஆனால் ஏகாதிபத் தியத்தை எதிர்த்து எழும் சோஷலிஸ்ட் புரட்சியின் விழிப் பும் வளர்ச்சியும் ஜனநாயக எதிர்ப்பின், கொந்தளிப்பின் வளர்ச்சியோடு பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக் கிறது. எந்த ஒரு அரசும்—எனவே எந்த ஒரு ஜனநாயக மும்—உலர்ந்து மக்கி மறையும் நிலைக்கு சோஷலிஸம் கொண்டுபோய்விடுகிறது, ஆனால் சோஷலிஸத்தைப் பாட் டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமாக மட்டுமே நிறை வேற்ற முடியும், இது பூர்ஷ்வா வர்க்கத்துக்கு, அதாவது ஜனத்தொகையில் சிறுபான்மைக்கு, எதிராகக் கையாளும் பலாத்காரத்தை ஜனநாயகத்தின் முழு வளர்ச்சியோடு— அதாவது, எல்லா அரசு விவகாரங்களிலும் முதலாளித் துவத்தை ஒழிப்பதிலுள்ள சிக்கலான பிரச்சினைகள் எல்லா வற்றிலும் மக்கள் தொகையின் முழுத் திரளும் உண்மை யிலேயே சமநிலையிலும் உண்மையிலேயே சர்வஜனரீதியி லும் பங்கெடுப்பது—பிணைத்துவைக்கிறது.

கியெவ்ஸ்கிய் ஜனநாயகத்தைப் பற்றிய மார்க்ஸீய போதனையை மறந்துபோய்விட்டதினால் இந்த ''முரண்பாடு களில்'' தம்மைத்தாமே குழப்பத்திலாழ்த்திக் கொண்டார். உருவகமாகச் சொல்வதென்றால், எல்லாவிதச் சிந்தனைக்கும் பதிலாக ''ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவித்துக்கொள்''

என்கிற கிளர்ச்சி கோஷத்தைப் பயன்படுத்தும் அளவுக்கு அவருடைய சிந்தனையை யுத்தம் ஒடுக்கியிருக்கிறது; இது, நாகரிக நாடுகள் ''காலனிகளை விட்டு வெளியேறுவது'' என்பதின் முறையான பொருள்—பொருளாதார, அரசியல் ரீதியான பொருள்—என்னவென்று பகுத்தாய்ந்தறிவதற்குப் பதிலாகக் ''காலனிகளை விட்டு வெளியேறிவிடுக'' என்கிற கோஷம் பயன்படுத்தப்படுவது போன்றதே.

பூர்ஷ்வா வர்க்கத்தின் வீழ்ச்சிக்குத் தயாரிப்புச் செய்து தன்னுடைய சொந்த வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் தனது வர்க்கப் போராட்டத்தில் எல்லா ஜனநாயக ஸ்தாபனங்களையும் விருப்பங்களையும் தொழிலாளி வர்க்கம் பயன் படுத்துவது என்பதே ஜனநாயகம் என்கிற பிரச்சினைக்கு மார்க்ஸீயம் தரும் தீர்வாகும். இப்படிப் பயன்படுத்துவது சுலுவான காரியமல்ல. ''பூர்ஷ்வா''கருத்துக்களுக்கு, சந்தர்ப்பவாதக் கருத்துக்களுக்குத் தருகிற மன்னிக்கமுடியாத சலுகை இது என்று அடிக்கடி ''பொருளாதாரவாதிகளுக்கும்'', தல்ஸ்த்தோய் வாதிகளுக்கும், மற்றவர்களுக்கும் தோன்றுகிறது, ''நிதி மூலதனத்தின் சகாப்தத்தில்'' தேசிய சுயநிர்ணயத்தை ஆதரிப்பது பூர்ஷ்வாக் கருத்துக்களுக்குத் தருகிற மன்னிக்க முடியாத சலுகை என்று கியெவ்ஸ்கிய்க்குத் தோன்றுவது போல. ஒரு குறிப்பிட்ட முதலாளித்துவச் சமுதாயத்தின் பூர்ஷ்வா வர்க்கத்தால் சிருஷ்டிக்கப்பட்டுத் திரிக்கப்பெற்ற ஜனநாயக ஸ்தாபனங்களைப் பயன்படுத்துவதைக் கைவிடுவதின் மூலம் ''சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துப் போராடுவது'' என்பது சந்தர்ப்பவாதத்துக்கு முழுக்க முழுக்க அடிபணிந்து விடுவதாகும் என்று மார்க்ஸீயம் போதிக்கிறது!

சோஷலிஸத்திற்காக உள்நாட்டுப் போர் என்கிற கோஷம் ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து வெளியேறுவதற்குரிய மிக மிகச் சுருக்கான பாதையைக் காட்டுகிறது, மேலும் அது யுத்தத்தை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டத்தை சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டத்துடன் இணைக்கிறது. யுத்தகாலத்தின் விசேஷ அம்சங்கள்—யுத்தம் நீடித்துக் கொண்டே போகிறது, அது ஒரு முழுமையான யுத்த ''சகாப்தமாக'' வளரப்போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது!—, சமாதானவாதம், சட்டவாதம்,

தத்தம் ''சொந்த'' பூர்ஷ்வா வர்க்கத்துக்கு உகந்தமுறையில் நடந்துகொள்வது என்கிற சந்தர்ப்பவாதத்திலிருந்து தனித்து இனங்காட்டிக்கொள்கிற நமது நடவடிக்கைகளின் பொதுத்தன்மை ஆகிய இரண்டையுமே இந்த கோஷம் ஒன்றே சரிவரக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இத்துடன் கூட, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து நடக்கும் உள்நாட்டுப் போர் என்பது ஏழை மக்கள் சொத்துள்ள சிறுபான்மையை எதிர்த்து ஜனநாயகரீதியிலே திரண்டு ஜனநாயகரீதியிலே நடத்தும் யுத்தமாகும். ஆனால் உள்நாட்டுப் போர் என்பது, மற்ற ஒவ்வொன்றையும் போலவே, தவிர்க்க முடியாதபடி உரிமைகளுக்குப் பதிலாகப் பலாத்காரத்தைக் கையாண்டு தீர வேண்டும். என்ற போதிலும், பெரும்பான்மையினரின் நலன்கள், உரிமைகள் பேரால் இருக்கும் பலாத்காரம் ஒரு வேறுபட்ட தன்மை பெற்றதாகும். அது சுரண்டுபவர்களின், பூர்ஷ்வா வர்க்கத்தின் ''உரிமைகளை'' மிதிக்கிறது; இராணுவத்தையும் ''பின்னணியையும்'' ஜனநாயக ரீதியிலே அணிதிரட்டி அமைக்காமல் அதைச் சாதிக்க முடியாது. உள்நாட்டுப் போர் உடனடியாகவும் முதன் முதலாகவும் பாங்குகளையும் தொழிற்சாலைகளையும் ரயில்வேக்களையும் பெரிய எஸ்டேட்டுகளையும் மற்றவைகளையும் பலவந்தமாகப் பறிமுதல் செய்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் பறிமுதல் செய்ய வேண்டும் என்பதின் பொருட்டே எல்லா அலுவலர்களையும் இராணுவ அதிகாரிகளையும் மக்கள் தேர்ந்தெடுப்பதை நாம் புகுத்தித் தீரவேண்டும், பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்துப்போர் நடத்துகிற இராணுவத்தை மக்கள் தொகையின் திரளோடு முழுக்கக் கலந்துவிட வேண்டும், உணவு சப்ளை நிர்வாகம், உணவு உற்பத்தி, அதன் வினியோகம் முதலானவற்றை முழுக்க ஜனநாயகப்படுத்தித் தீரவேண்டும். உள்நாட்டுப் போரின் குறிக்கோள் பாங்குகள், தொழிற்சாலைகள், முதலியவற்றைக் கைப்பற்றுவது, பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்புக்குரிய எல்லா சாத்தியப்பாட்டையும் அழிப்பது, அதன் இராணுவப் படைகளை ஒழிப்பது என்பதே. ஆனால், நாம், யுத்தத்தின்போதே, ஏககாலத்தில் நமது இராணுவப் படைகளிடையேயும், நமது ''பின்னணியிலும்'' ஜனநாயகத்தைப் புகுத்தி விரிவாக்கினாலொழிய நமது குறிக்கோளை அதன் சுத்தமான இராணுவ அம்சத்திலோ அல்லது

பொருளாதார அல்லது அரசியல் அம்சங்களிலோ சாதிக்க முடியாது. நாம் மக்களுக்கு இன்றே சொல்கிறோம் (நாம் சொல்வது சரி என்று அவர்கள் உள்ளுணர்வாகவே உணர்ந்து கொள்கிறார்கள்): ''ஜனநாயகம் பற்றிய மகத்தான கோஷங்களால் மறைக்கப்பட்ட ஒரு யுத்தத்தில் ஏகாதிபத்திய முதலாளித்துவத்துக்காகப் போரிடச் செய்வதில் உங்களை அவர்கள் ஏமாற்றிவருகிறார்கள்''. ''நீங்கள் உண்மையான ஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் சாதிப்பதற்கு பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து ஒரு உண்மையான ஜனநாயக பூர்வமான யுத்தத்தை நடத்தித்தீரவேண்டும், நடத்துங்கள்'' என்று. பலாத்காரத்தையும் நிதிச் சார்பு நிலையையும் கொண்டு இன்றைய யுத்தம் நாட்டினங்களை நேசக் கூட்டணிகளாக ஒன்றுபடுத்துகின்றது, ''கலக்கிறது''. பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து நாம் நடத்தும் உள்நாட்டுப் போரில், ரூபிளின் சக்தியால் இன்றி, போலீஸ் தடியின் சக்தியால் இன்றி, பலாத்காரத்தால் இன்றி, தன்னிச்சையான, உடன்பாடு மூலமாக, சுரண்டுபவர்களுக்கு எதிராக உழைப்பாளி மக்களின் ஒற்றுமை மூலமாக நாம் நாட்டினங்களை ஒன்றுபடுத்துவோம், கலப்போம். பூர்ஷ்வா வர்க்கத்தைப் பொறுத்தவரை, எல்லா தேசங்களுக்கும் சம உரிமைகள் என்கிற பிரகடனம் ஒரு ஏமாற்றுவேலையாகி விட்டது. நம்மைப் பொறுத்தவரை, எல்லாத் தேசிய இனங்களையும் நம் பக்கம் கொண்டுவரச் செய்வதைச் சுலுவாக்கித் தருகிற, துரிதப்படுத்துகிற உண்மையாக அது விளங்கும். தேசிய இனங்களிடையே நன்கு அமைக்கப்பெற்ற ஜனநாயக உறவுகள் இன்றி —எனவே, பிரிந்துபோவதற்குரிய உரிமை இன்றி—பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக எல்லா தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின், பொதுவாகவே உழைப்பாளி மக்களின் உள்நாட்டுப் போர் என்பது சாத்தியமேயில்லை.

பூர்ஷ்வா ஜனநாயகத்தைப் பயன்படுத்திக் கொள்வதின் மூலமாக, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்தும் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்தும் பாட்டாளி வர்க்கத்தை சோஷலிஸ்ட் ரீதியிலும் ஒத்தியைந்த ஜனநாயகரீதியிலும் அமைப்பது. வேறு வழி எதுவும் இல்லை. மற்ற எந்த வழியும் நேர்வழி அல்ல. வாழ்க்கையைப் போலவே, மார்க்ஸீயத்துக்கும் வேறு எந்த வழியும் தெரியாது. தேசங்கள் சுதந்திரமாகப் பிரிந்து செல்வதை, கலப்பதை, அந்தப் பாதையில் நாம் வழிசெலுத்த

வேண்டும், அவற்றைக் கண்டு நாம் சங்கோசத்துடன் விலகிப் போகக் கூடாது, நமது பொருளாதாரக் குறிக்கோள்களின் ''தூய்மையை'' அது ''கெடுத்துவிடும்'' என்று பயப்படக் கூடாது.

நூல்திரட்டு, தொகுதி *30*

*1916*, ஆகஸ்ட்-செப்டம்பரில்
எழுதப்பட்டது

*1929*, ''புரொலித்தார்ஸ்காயா
ரெவொல்யூத்ஸியா'' என்ற சஞ்சிகை, இதழ் 7ல்
முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது

# செயல்தந்திரங்கள் பற்றிய கடிதங்கள்

## என்கிற சிறுநூலிலிருந்து

### முதற்கடிதம்

### இன்றைய நிலைமை பற்றிய மதிப்பீடு

வர்க்கங்களுக்கு இடையே உள்ள பரஸ்பரச் சம்பந்தம், ஒவ்வொரு வரலாற்று நிலைமைக்கும் தனிச்சிறப்பாயுள்ள ஸ்தூலமான குணும்சங்கள் பற்றிக் கருராகத் துல்லியமான, புறநிலையிலே சரிபார்க்கத்தக்க பகுப்பாய்வு செய்யுமாறு மார்க்ஸீயம் நம்மைக் கோருகிறது. போல்ஷெவிக்குகளாகிய நாம் இந்தத் தேவையை—கொள்கையில் ஒரு விஞ்ஞான பூர்வமான அஸ்திவாரம் கொடுப்பதற்கு இது முற்ருக அவசியப்படுகிற ஒன்ருகும்—எப்போதும் பூர்த்தி செய்ய முயன்றுவந்திருக்கிருேம்.

''நமது தத்துவம் ஒரு வறட்டுச் சூத்திரம் அல்ல, செயலுக்கு ஒரு வழிகாட்டி அது'' என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் எப்போதும் சொல்லிவந்திருக்கிருர்கள்; ''சூத்திரங்களை'' வெறுமே மனப்பாடம் செய்துகொண்டு திருப்பிச் சொல்லிவருவதை அவர்கள் சரியாகத்தான் கேலி செய்தார்கள்; இந்தச் சூத்திரங்கள் அதிகபட்சமாகச் சொன்னல் பொதுவான கடமைகளைக் குறியிட்டுக்காட்ட மட்டுமே முடியும்; இந்தப் பொதுவான கடமைகள் சரித்திர இயக்கப் போக்கின் ஒவ்வொரு குறிப்பான காலப்பகுதியைச் சேர்ந்த ஸ்தூலமான பொருளாதார, அரசியல் நிலைமைகளால் அவசியமாகவே மாற்றப்படத்தக்கவையாகும்.

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கட்சி தன்னுடைய நடவடிக்கையின் கடமைகளையும் வடிவங்களையும் வரையறுப்பதில், தெளிவாக நிலைநாட்டப் பெற்ற புறநிலை ரீதியான எந்த உண்மைகளால் இன்று வழிகாட்டப்பட வேண்டும்?

*1917*, மார்ச் *21-22* தேதிகளில் ''பிராவ்தா'', இதழ்கள் *14*, *15*ல் வெளியிடப்பெற்ற என்னுடைய முதலாவது ''தொலைவிலிருந்து எழுதிய கடிதத்திலும்'' (''முதற்புரட்சி

யின் முதற்கட்டம்''), என்னுடைய ஆய்வுரைகளிலும்[49], ''ருஷ்யாவிலுள்ள இன்றைய நிலைமையின் குறிப்பான குணும்சத்தைப்'' புரட்சியின் முதற்கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்துக்கு மாறிச் செல்கிற காலப்பகுதி என்று வரையறுக்கிறேன். எனவே, பின்வருவதையே நான் இந்தத் தருணத்தில் அடிப்படையான கோஷமாக, ''தற்சமயத்தின் கடமையாக'', கருதினேன்: ''தொழிலாளர்களே, ஜார் ஆட்சியை எதிர்க்கும் உள்நாட்டுப் போரில் நீங்கள் பாட்டாளி வர்க்க வீரம் மிகுந்த, மக்களுக்குரிய வீரம் மிகுந்த அதிசயங்கள் புரிந்திருக்கிறீர்கள். புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் உங்களுடைய வெற்றிக்குப் பாதையைத் தயார் படுத்த நீங்கள் ஸ்தாபன அமைப்பு அதிசயங்களை, பாட்டாளி வர்க்கத்தையும் எல்லா மக்களையும் ஸ்தாபன ரீதியாக அமைப்பதில் அதிசயங்களைப் புரிந்தாக வேண்டும்'' என்று (''பிராவ்தா'', இதழ் 15).

அப்படியானல், முதல் கட்டம் என்பதென்ன?

பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அரசு அதிகாரம் போய்ச் சேர்ந்திருப்பதே அது.

1917ன் பிப்ரவரி-மார்ச் புரட்சிக்குமுன், ருஷ்யாவில் அரசு அதிகாரம் ஒரு பழைய வர்க்கத்தின் கையில், அதாவது நிக்கொலாய் ரொமானவ் தலைமையிலுள்ள நிலப்பிரபுக்கள், உயர்குடி நிலச்சுவான்தார்கள் கையில் இருந்தது.

அப்புரட்சிக்குப்பின், அதிகாரம் வேறு ஒரு வர்க்கத்தின், ஒரு புதிய வர்க்கத்தின், அதாவது பூர்ஷ்வா வர்க்கத்தின் கையில் இருக்கிறது.

கறாரான விஞ்ஞான அர்த்தத்திலும் சரி, நடைமுறை அரசியல் அர்த்தத்திலும் சரி, இரண்டு வகையிலும் அரசு அதிகாரம் ஒரு வர்க்கத்தின் கையிலிருந்து மற்றென்றுக்கு வந்துசேருவது ஒரு புரட்சியின் முதன்முதலான, பிரதானமான, அடிப்படையான அறிகுறியாகும்.

இந்த அளவுக்கு, பூர்ஷ்வா, அல்லது பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி ருஷ்யாவில் முடிந்து முற்றுப் பெற்றுவிட்டது.

ஆனல் இந்த இடத்தில், தங்களைப் ''பழைய போல்ஷெவிக்குகள்'' என்று இலேசிலே அழைத்துக் கொள்ளும் நபர்களிடமிருந்து ஆட்சேபனைக் கூக்குரலை நாம் கேட்கிறோம். அவர்கள் சொல்கிறார்கள்: ''பாட்டாளி வர்க்கத்தின், விவ

சாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம்'' மூலமாகத்தான் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெறும் என்று நாம் சொல்லிச் சாதித்து வந்ததில்லையா? விவசாயப் புரட்சி—அதுவும் ஒரு பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிதான்—முற்றுப் பெற்றுவிட்டதா? அதற்கு மாருக, அது இன்னும் தொடங்கக்கூட இல்லை என்பதுதானே உண்மை?

என் பதில்: போல்ஷெவிக் கோஷங்களையும் கருத்துக்களையும் மொத்தத்திலே வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது; ஆனல் ஸ்தூலமாகப் பார்க்கும்போது விவகாரங்கள் வேறு விதமாக அமைந்துள்ளன; அவை யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடிய அளவுக்கு மேலாகத் தனிமாதிரியாகவும், சிறப்பாகவும், பல்வகையம்சத்துடனும், உள்ளன.

இந்த உண்மையைப் புறக்கணிப்பது அல்லது பார்க்கத் தவறுவது என்பதற்கு அர்த்தம், புதிய உயிர்ப்புள்ள யதார்த்தத்தின் குறிப்பான குணும்சங்களைப் பயில்வதற்குப் பதிலாகப் புத்தியைச் செலுத்தாமல் மனப்பாடம் செய்து கொண்ட சூத்திரங்களைத் திருப்பிச் சொல்லி நம் கட்சியின் வரலாற்றில் ஏற்கெனவே ஒரு தடவைக்கு மேலாகவே எவ்வளவோ வருந்தத்தக்க பாத்திரம் வகித்த அந்தப் ''பழைய போல்ஷெவிக்குகளைப்'' பின்பற்றிச் செல்வதேயாகும்.

ருஷ்யப் புரட்சியில் ''பாட்டாளி வர்க்கத்தின் விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம்'' ஏற்கெனவே ஒரு யதார்த்தமாகி இருக்கிறது*, ஏனெனில் இந்தச் ''சூத்திரம்'' வர்க்கங்களுக்கிடையே பரஸ்பரச் சம்பந்தத்தைத்தான் உருவாக்குகிறது, இந்தச் சம்பந்தத்தை, இந்தக் கூட்டுறவை நடைமுறையாக்குகிற ஒரு ஸ்தூலமான அரசியல் ஸ்தாபனத்தை அல்ல. ''தொழிலாளர்கள், போர் வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்''—அதோ, அதுதான் யதார்த்தத்தில் ஏற்கெனவே சாதிக்கப்பட்டுள்ள ''தொழிலாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம்.''

இந்தச் சூத்திரம் ஏற்கெனவே பழையதாகிவிட்டது. நிகழ்ச்சிகள் அதைச் சூத்திரங்களின் நிலையிலிருந்து யதார்த்

* ஒரு குறிப்பிட்ட வடிவத்தில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு.

தத்தின் நிலைக்கு மாற்றிவிட்டுள்ளன, சதையும் எலும்பும் கொடுத்து உருவம் தந்துள்ளன, ஸ்தூலப்படுத்தி அதன் விளைவாக உருமாற்றியுள்ளன.

இன்று ஒரு புதிய, வேறான கடமை நம்மை எதிர் நோக்கியுள்ளது: இந்தச் சர்வாதிகாரத்துக்குள்ளே பாட்டாளி வர்க்க நபர்களுக்கும் (பாதுகாப்புவாதத்தை எதிர்க்கும், சர்வதேசியவாத, ''கம்யூன்கார''—கம்யூனுக்கு மாறிச் செல்வதற்கு நிற்கும்—நபர்கள்) சிறு உடைமையாளர் அல்லது குட்டிபூர்ஷ்வா நபர்களுக்கும் (புரட்சிகரமான பாதுகாப்புவாதிகளும் கம்யூனை நோக்கிச் செல்வதை எதிர்ப்பவர்களும் ஆகிய, பூர்ஷ்வா வர்க்கத்தையும் பூர்ஷ்வா அரசாங்கத்தையும் ''ஆதரிக்க'' விரும்புகிற, ச்ஹெயித்ஸே, த்ஸெரெத்தேலி, ஸ்தெக்லோவ், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், இன்னும் மற்றவர்கள்) இடையே ஒரு பிளவு ஏற்படுத்துவதே.

ஒரு ''பாட்டாளிவர்க்க, விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம்'' பற்றி மட்டும் இன்று பேசுகிற நபர் காலத்துக்குப் பின்தங்கிவிட்டவனாகிறான்; எனவே அவன், விளைவைப் பார்க்கையில், பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்கு எதிராகக் குட்டிபூர்ஷ்வா வர்க்கத்தின் தரப்புக்குப் போய்விட்டவனாகிறான்; அந்த நபரைப் புரட்சிக்கு முந்திய ''போல்ஷெவிக்'' பழம்பொருட் சேமிப்பகத்தில் வைக்க வேண்டியதேயாகும் (அதற்கு ''பழைய போல்ஷெவிக்குகளின்'' பழம்பொருட் சேமிப்பகம் என்று பெயரிடலாம்).

பட்டாளிவர்க்க, விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவிட்டது, ஆனால் மிகவும் தனிவகைப் பாணியிலே, பல அதிமுக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களோடு. என்னுடைய அடுத்த கடிதம் ஒன்றில் அவற்றைத் தனியாக விளக்குகிறேன். ஒரு மார்க்ஸீயவாதி நிஜ வாழ்க்கையை, யதார்த்தத்தின் உண்மையான விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும், நேற்றையத் தத்துவத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கக்கூடாது—அது எல்லாத் தத்துவங்களையும் போலவே அதிகப்பட்சமாகப் போனால் பிரதானமானதையும் பொதுவானதையுமே வரைவிளக்கம் செய்கிறது, வாழ்க்கையை அதன் எல்லாச் சிக்கலோடும் தழுவிக்கொள்ள

நெருங்குவதோடு நின்றுகொள்வது—என்கிற மறுக்க முடியாத உண்மையை உணர்வது தற்சமயத்துக்கு அவசியமாகும்.

''நண்பனே, தத்துவம் என்பது பழுப்பேறிப் போனது, ஆனல் வாழ்க்கை என்னும் நிரந்தரமான மரம் பசுமையோடிருப்பது''[50].

பூர்ஷ்வா புரட்சியின் ''நிறைவேற்றம்'' என்கிற பிரச்சினையைப் பழைய வழியிலே பார்ப்பது உயிர்ப்புள்ள மார்க்ஸீயத்தை உயிரற்ற எழுத்துக்குப் பலியிடுவதாகும்.

பழைய சிந்தனையின் வழிப்படி, பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்க, விவசாயி மக்களின் ஆட்சி, அவற்றின் சர்வாதிகாரம், வரமுடியும் வரவேண்டும்.

ஆனல், நிஜ வாழ்க்கையில் விவகாரங்கள் ஏற்கெனவே வேறு விதமாக நடந்தேறியுள்ளன; மிகமிக ஆதியான, புதிதான, முன்னென்றும் இருந்திராதபடி ஒன்றோடொன்று இழைபின்னிக் கொண்டிருப்பது நடந்துள்ளது. அக்கம் பக்கமாக இரண்டும் இருந்து வருகிற நிலையில், ஒரே காலத்தில், பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சி (லிவோவ், குச்கோவ் இவர்களின் அரசாங்கம்), பாட்டாளிவர்க்கத்தின், விவசாயி மக்களின் ஒரு புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் ஆகிய இரண்டும் இருக்கின்றன; இந்தச் சர்வாதிகாரம் தன்னிச்சையாக பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அதிகாரத்தை கை மாற்றித் தந்து கொண்டிருக்கிறது, தன்னிச்சையாகவே தன்னை பூர்ஷ்வா வர்க்கத்தின் பின்னிணைப்பு ஆக்கிக் கொண்டு வருகிறது.

நடைமுறையில், பெத்ரோகிராதில், அதிகாரம் தொழிலாளர்களின் போர்விரர்களின் கையில் இருக்கிறது என்பதை மறக்கவே கூடாது; புதிய அரசாங்கம் அவர்களை எதிர்த்துப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கவில்லை, பிரயோகிக்கவும் முடியாது; காரணம், போலீஸ் ஒன்றும் இல்லை, மக்களுக்கு அப்பால் நிற்கிற இராணுவம் ஒன்றும் இல்லை, மக்களுக்கு மேல்நிலையில் நிற்கும் எல்லா சக்திகளும் பெற்ற அதிகார வர்க்கம் இல்லை. இது ஒரு உண்மை. பாரிஸ் கம்யூன் மாதிரி அமைந்த ஒரு அரசுக்குக் குணக்குறிப்பாயுள்ள விதத்திலிருக்கும் உண்மை. இந்த உண்மை பழைய திட்டவரைவுகளோடு பொருந்துகிறதாயில்லை. திட்டவரைவுகளை உண்மை

களுக்கேற்பப் பொருத்திச் சரி செய்து கொள்ள ஒருவன் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்—பொதுப்படையாகப் ''பாட்டாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் சர்வாதிகாரம்'' பற்றி இன்று அர்த்தமற்றுப் போன சொற்களைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக.

இந்தப் பிரச்சினையை மேலும் தெளிவுபடுத்துவதற்கு அதை மற்றொரு கோணத்திலிருந்து அணுகுவோம்.

வர்க்க உறவுகளைப் பற்றிய கவனிப்புள்ள பகுப்பாய்வு என்கிற ஆதார ஸ்தானத்தைவிட்டு ஒரு மார்க்ஸீயவாதி செல்லக்கூடாது. பூர்ஷ்வா வர்க்கம் ஆட்சியிலிருக்கிறது. ஆனால், விவசாயி மக்களின் திரளும் கூட ஒரு பூர்ஷ்வா வர்க்கம்தானே, வேறான சமுதாயப் பகுதியைச் சேர்ந்ததாய் வேறு வகையானதாக, வேறுதன்மையோடு, மட்டுமுள்ள ஒன்றுதானே? இந்தப் பகுதி அதிகாரத்துக்கு வந்து, அதன் வழியே பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியை ''நிறைவேற்றுவது'' முடியாது என்று இதிலிருந்து எப்படிப் பெறப்படும்? இது ஏன் சாத்தியமில்லை?

இப்படித்தான் பழைய போல்ஷெவிக்குகள் அடிக்கடி வாதிக்கிறார்கள்.

என்னுடைய பதில், அது முற்றும் சாத்தியமே. ஆனால், ஒரு குறிப்பிட்ட நிலைமையை மதிப்பீடு செய்யும்போது, ஒரு மார்க்ஸீயவாதி எது சாத்தியம் என்ற நிலையிலிருந்தல்லாமல், எது யதார்த்தத்தில் இருப்பது என்கிற நிலையிலிருந்து தொடங்கவேண்டும்.

நூல்திரட்டு, தொகுதி 31

*1917, ஏப்ரில் 8-13 (21-26)க்கு இடையே எழுதப்பட்டது*

*1917, ஏப்ரிலில், ''ப்ரிபோய்'' பதிப்பகத்தாரால் தனிப்பிரசுரமாக வெளியிடப்பட்டது*

## சமரசங்கள் பற்றி

அரசியல் துறையில் சமரசம் என்கிற சொல் சில கோரிக்கைகளை, இன்னொரு கட்சியுடன் செய்து கொள்ளும் உடன்பாடு மூலமாக, விட்டுக்கொடுப்பது, தன்னுடைய கோரிக்கைகளில் ஒரு பகுதியைக் கைவிடுவது என்பதை உட்கிடையாகக் குறிக்கும்.

போல்ஷெவிக்குகளைப் பற்றி பிலிஸ்டைனிடம் வழக்கமாயுள்ள கருத்து என்னவெனில்—அவர்களை அவதூறு செய்கிற பத்திரிகைகள் ஊக்கிவளர்த்துள்ள கருத்து இது—போல்ஷெவிக்குகள் யாருடனும் சமரசம் செய்ய என்றைக்கும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதே.

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்கிற வகையில் இந்தக் கருத்து நமக்குப் பெருமையளிப்பதாயிருக்கிறது; ஏனெனில், புரட்சியின், சோஷலிஸத்தின் அடிப்படையான கோட்பாடுகளிடம் நமக்குள்ள விசுவாசத்தை நமது பகைவர்கள்கூட ஒத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. என்றபோதிலும், இந்தக் கருத்து தவறு என்று நாம் சொல்லித் தீர வேண்டும். பிளாங்கியவாதக் கம்யூனிஸ்டுகளின் கொள்கை அறிக்கையை (1873) பற்றிய தமது விமர்சனத்தில், ''சமரசங்கள் கூடாது!'' என்கிற அவர்களின் பிரகடனத்தை எங்கெல்ஸ் சரியாகத்தான் கேலிசெய்தார். இது ஒரு வெற்றுச் சொல் என்றார் அவர், ஏனெனில் தவிர்க்க முடியாதபடி சந்தர்ப்பங்கள் ஒரு போராடும் கட்சிமீது அடிக்கடி சமரசங்களைத் திணிக்கின்றன, மேலும் ''கடனைப் பகுதி பகுதியாகப் பெறுவதை'' என்றைக்கும் ஏற்கமாட்டோம் என்று மறுப்பது அபத்தமாகும். ஒரு உண்மையான புரட்சிக் கட்சியின் கடமை எல்லா சமரசங்களையும் கைவிடுவது சாத்தியமில்லை என்று பிரகடனப்படுத்துவதல்ல, அதற்குப் பதிலாக, அவை தவிர்க்க முடி

யாதவையாக ஆகிறபோது, எல்லா சமரசங்களினூடேயும் தனது கோட்பாடுகளுக்கும், தனது வர்க்கத்துக்கும், தனது புரட்சி நோக்கத்துக்கும், புரட்சிக்கு வழியைச் செப்பனிடு கிற, புரட்சியில் வெற்றிபெற மக்களுக்குப் போதனையளிக் கிற, தனது கடமைக்கும், உண்மையாயிருந்து வரச் சக்தி பெற்றிருப்பதேயாகும்.

எடுத்துக்காட்டாக, மூன்ருவது நான்காவது டூமாவில் பங்கெடுக்க ஒத்துக்கொள்வது ஒரு சமரசமேயாகும், தற் காலிகமாகப் புரட்சிகரமான கோரிக்கைகளைக் கைவிடுவதே யாகும். ஆனல் இந்தச் சமரசம் முற்றிலும் நம் மீது நிர்ப் பந்தமாகச் சுமத்தப்பட்டதேயாகும்; ஏனெனில், சக்திகளின் ஒப்புவலிமையானது தற்காலிகமாக நாம் ஒரு வெகுஜனப் புரட்சிப் போராட்டத்தை நடத்துவதை அசாத்தியமாக்கி விட்டிருந்தது, மேலும் இந்தப் போராட்டத்துக்கு ஒரு நீண்ட காலப் பகுதியில் தயாரிப்பு செய்வதன் பொருட்டு நாம் இப்படிப்பட்ட ஒரு ''பன்றிப் பட்டியின்'' உள்ளேகூட இருந்து வேலை செய்யத் திறமை பெற்றிருக்க வேண்டியிருந்தது. ஒரு கட்சி என்கிற முறையில் போல்ஷெவிக்குகள் இப்பிரச் சினையில் எடுத்த அணுகுநிலை முற்றிலும் சரி என்று சரித்திரம் நிரூபித்துள்ளது.

இப்பொழுது பிரச்சினை, பலவந்தமாகத் திணிக்கப்படு கிற சமரசம் என்பதல்ல, தன்னிச்சையான சமரசம் என்கிற பிரச்சினையே.

வேறு எந்த அரசியல் கட்சியையும் போலவே, நமது கட்சியும் தனக்கென்று அரசியல் ஆதிக்கம் பெற முயன்று கொண்டிருக்கிறது. நமது குறிக்கோள் புரட்சிகரமான பாட் டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம். புரட்சியின் ஆறுமாத காலம் இந்தக் கோரிக்கையானது இந்தக் குறிப்பிட்ட புரட்சி யின் நலன்களையொட்டி சரியானதே, தவிர்க்க இயலாததே என்று மிகத் தெளிவாக, பலமாக, ஏற்கத்தக்க விதத்திலே நிரூபித்துள்ளது; ஏனெனில், அப்படியின்றேல் மக்கள் ஒரு ஜனநாயக பூர்வமான சமாதானத்தை என்றைக்கும் பெற மாட்டார்கள், விவசாயிகள் நிலம் பெற மாட்டார்கள், முழுமையான சுதந்திரம் (முற்ருன ஜனநாயகக் குடியரசு) பெற மாட்டார்கள். நமது புரட்சியின் ஆறு மாத காலத் தால், வர்க்கங்களின், கட்சிகளின் போராட்டத்தால், ஏப்ரில்

*20-21, ஜூன் 9-10, 18-19, ஜூலை 3-5, ஆகஸ்ட் 27-31*[51] தேதிய நெருக்கடிகளின் வளர்ச்சியால் இது காட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ருஷ்யப் புரட்சி எவ்வளவோ சடேரென்றும், தனி வகையிலும் திருப்பம் பெற்றுவருவதின் காரணத்தால் நாம், ஒரு கட்சி என்கிற வகையில், ஒரு தன்னிச்சையான சமரசத்தை வழங்கக்கூடும்—நமது நேரடியான, பிரதானமான வர்க்க விரோதியாகிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அல்ல என்பது உண்மையே, ஆனால் நமக்கு நெருங்கிய நிலையிலுள்ள எதிரிகளாகிய, ''ஆட்சிபுரிகிற'' குட்டிபூர்ஷ்வா ஜனநாயகக் கட்சிகளாகிய சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் மென்ஷெவிக்குகளுக்கும்.

ஒரு விதிவிலக்காக மட்டுமே, இந்தக் குறிப்பிட்ட நிலைமையின் விசேஷத்தாலே மட்டுமே—அது மிகவும் குறுகிய காலத்துக்குத்தான் நீடிக்கும் என்பது வெளிப்படை—இந்தக் கட்சிகளுக்கு நாம் ஒரு சமரசம் வழங்கக்கூடும். மேலும், அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன்.

அதிகாரமனைத்தும் சோவியத்துக்களுக்கே, சோவியத்துக்களுக்குப் பொறுப்பாயுள்ள சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் கொண்ட அரசாங்கமே வேண்டும் என்கிற ஜூலைக்கு முந்திய நமது கோரிக்கைக்கு நாம் திரும்பிச் செல்வதே நம் தரப்பில் நாம் வழங்கும் சமரசம்.

இப்பொழுது, இப்பொழுது மட்டுமே, ஒருக்கால் சில நாட்களுக்கு மட்டுமே, அல்லது இரண்டொரு வாரங்களுக்கு மட்டுமே, அப்படிப்பட்ட அரசாங்கம் முற்றிலும் சமாதான பூர்வமான வழியிலே நிறுவப்பெறவும், கெட்டிப்படுத்தப்படவும் முடியக்கூடும். அநேகமாக ருஷ்யப் புரட்சி முழுவதும் சமாதான பூர்வமாக முன்னேறுவதை அது சாதிக்க முடியக்கூடும், சமாதானத்தையும் சோஷலிஸத்தின் வெற்றியையும் நோக்கிச் செல்லும் உலக இயக்கம் மகத்தான அடிகள் எடுத்துவைப்பதற்கு அசாதாரணமான நல்ல வாய்ப்பினைத் தர முடியக்கூடும்.

என் கருத்தில், உலகப் புரட்சியின், புரட்சி வழிமுறைகளின் சார்பாளர்களாகிய போல்ஷெவிக்குகள் புரட்சியின் சமாதானபூர்வமான வளர்ச்சிக்கென்று மட்டுமே—இது சரித்திரத்தில் மிகமிக அபூர்வமான ஒரு வாய்ப்பு, மிகமிக விலை

மதிப்புள்ள ஒரு வாய்ப்பு, எப்போதாவது ஒரு தடவைதான் கிடைக்கிற ஒரு வாய்ப்பு ஆகும்—இந்தச் சமரசத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடும், ஒத்துக்கொள்ள வேண்டும்.

அந்தச் சமரசம் பின்வருமாறு அமைவதாயிருக்கும்: அரசாங்கத்தில் தாங்கள் பங்கெடுப்பதாக போல்ஷெவிக்குகள் கோராமல் (பாட்டாளி வர்க்கத்தின், ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரம் அமையாத வரையில் சர்வதேசியவாதிகளுக்கு இது சாத்தியமில்லை), பாட்டாளி வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் உடனடியாக அதிகாரத்தை மாற்றித்தருமாறு கோராமல் இருப்பார்கள், இந்தக் கோரிக்கைக்காகப் போராடுவதில் புரட்சிகரமான வழிமுறைகளைப் பயன்படுத்தாமல் இருப்பார்கள். ஒரு நிபந்தனை—இது வெளிப்படை, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் மென்ஷெவிக்குகளுக்கும் இது புதிதல்ல—என்னவெனில் பிரசாரத்திற்கு முழு சுதந்திரம் வேண்டும், மேற்கொண்டு தாமதங்கள் செய்யாமல், அல்லது தற்போது குறித்த தேதிக்கு முன்பே அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும், என்பதே.

மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும், அரசாங்கக் கூட்டணி என்ற முறையில் (சமரசம் ஏற்பட்டு விட்டது என்று வைத்துக்கொண்டால்), சோவியத்துக்களுக்கு மட்டுமே முற்றுகப் பொறுப்புள்ள ஒரு அரசாங்கத்தை அமைக்க ஒத்துக்கொள்வார்கள். சோவியத்துக்கள் ஸ்தலங்களிலும் எல்லா அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ளும். இதுவே ''புதிய'' நிபந்தனையாக இருக்கும். உண்மையிலேயே முழுமையான பிரசார சுதந்திரம் இருக்கிற விசேஷத்தாலும் சோவியத்துக்களின் அமைப்பிலும் (அவற்றிற்குப் புதிய தேர்தல்கள்) அவற்றின் செயல்பாட்டிலும் ஒரு புதிய ஜனநாயகம் உடனடியாக நிறுவுதலின் காரணத்தாலும், புரட்சி சமாதானபூர்வமாக முன்னேறும் என்பதிலும் சோவியத்துக்களில் கட்சிப் போராட்டம் சமாதானபூர்வமாகத் தீர்க்கப்படும் என்பதிலும் நம்பிக்கை வைத்து போல்ஷெவிக்குகள் வேறு எந்த நிபந்தனையும் முன்வைக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஒருவேளை இது ஏற்கெனவே அசாத்தியமோ? இருக்கலாம். ஆனால், நூற்றில் ஒன்றாக வாய்ப்பு இருந்தாலும்,

அந்த வாய்ப்பை நடைமுறையாக்கிக் கொள்ளும் முயற்சி பயனுள்ளதே.

''உடன்பாடு காணும்'' இரு தரப்பினரும்—அதாவது, ஒருபுறம் போல்ஷெவிக்குகளும், மறுபுறம் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின், மென்ஷெவிக்குகளின் கூட்டணியும்—இந்த ''சமரசத்தால்'' என்ன லாபம் பெறுவார்கள்? இரு தரப்பினருக்குமே எந்த லாபமும் கிடைக்கவில்லையென்றால், அந்த சமரசம் அசாத்தியம் என்று அங்கீகரிக்கப்பட வேண்டும், அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை. எவ்வளவு தான் கடினமானதாக இந்த சமரசம் இன்று (ஜூலை—ஆகஸ்டுக்குப் பிறகு, ''சமாதானபூர்வமான'', தூங்கிவிழுகிற காலத்தில் இருபது ஆண்டுகளுக்குச் சமானமானவை இந்த இரண்டு மாதங்கள்) இருந்தபோதிலும் அதை நடைமுறையில் காண்பதற்கு ஒரு சிறு வாய்ப்பு இன்னமும் இருக்கிறது என்றே நினைக்கிறேன். காடெட்டுகளுடன் சேர்ந்து ஒரு அரசாங்கத்தில் பங்கெடுப்பதில்லை என்கிற சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின், மென்ஷெவிக்குகளின் முடிவு இந்த வாய்ப்பைச் சிருஷ்டித்திருக்கிறது.

போல்ஷெவிக்குகள் தம்முடைய கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்வதற்கும், ஒரு உண்மையிலே முழுமையான ஜனநாயகத்தின்கீழ் சோவியத்துக்களில் செல்வாக்கு பெற முயல்வதற்கும் வாய்ப்பு பெறுவார்கள். போல்ஷெவிக்குகளுக்கு இந்தச் சுதந்திரம் உண்டு என ''எல்லோருமேதான்'' வார்த்தையளவில் ஒப்புக்கொள்கிறார்கள். யதார்த்தத்திலோ, ஒரு பூர்ஷ்வா அரசாங்கத்தின் கீழ் அல்லது பூர்ஷ்வா வர்க்கம் பங்குகொள்கிற ஒரு அரசாங்கத்தின் கீழ், சோவியத்துக்கள் அல்லாத மற்ற எந்த அரசாங்கத்தின் கீழும், இந்தச் சுதந்திரம் சாத்தியமற்றது. ஒரு சோவியத் அரசாங்கத்தின் கீழ் அப்படிப்பட்ட சுதந்திரம் சாத்தியமே (நிச்சயமாக இருக்கும் என்று நாம் சொல்லவில்லை, இருந்தாலும் சாத்தியம் என்றே சொல்கிறோம்). இப்படிப்பட்ட கடினமான காலத்தில் இப்படிப்பட்ட சாத்தியப்பாட்டிற்காக, சோவியத்துக்களில் இன்றுள்ள பெரும்பான்மையினருடன் சமரசம் செய்வது பயனுள்ளதேயாகும். உண்மையான ஜனநாயகத்திடம் நமக்குப் பயப்படுவதற்கு ஒன்றுங்கிடையாது, ஏனெனில் யதார்த்தம் நம் தரப்பில் இருக்கிறது, நமக்கு எதிரியாக

வுள்ள சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சிக்குள்ளேயும், மென்ஷெவிக் கட்சிக்குள்ளேயும் உள்ள போக்குகளின் வளர்ச்சியே நமது நிலை சரியென்று நிரூபிக்கிறது.

மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் லாபமடைவார்கள், எப்படியெனில் வெளிப்படையாக மிகப் பெரிய பெரும்பான்மையான மக்களின் ஆதரவோடு அவர்கள் தங்களுடைய கூட்டணியின் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எல்லா வாய்ப்பும் உடனே பெறுவார்கள், மேலும் சோவியத்துக்களில் உள்ள தங்களுடைய பெரும்பான்மையைத் தாங்கள் ''சமாதானபூர்வமாகப்'' பயன்படுத்திக் கொள்வதையும் பெறுவார்கள்.

நிச்சயமாக, இந்தக் கூட்டணியிலிருந்து அநேகமாக இரண்டு குரல்கள் கேட்கக்கூடும்; அது ஒரு கூட்டணி என்பதினாலும், பூர்ஷ்வா வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கத்தையும் விட எப்போதும் குட்டிபூர்ஷ்வா ஜனநாயகம் குறைாகவே ஒருவகைத்தன்மை உள்ளது என்பதினாலும்—இது நம்பக் கூட்டணியாகவே இருக்கும்.

ஒரு குரல் சொல்லக்கூடும்: ''போல்ஷெவிக்குகளும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கமும் போகிற அதே பாதையை நாம் பின்பற்றிச் செல்ல முடியாது. எப்படியிருந்தாலும் அது அளவுக்குமிஞ்சிக் கோரும், வாய்வீச்சு மூலமாக ஏழை விவசாயிகளை அது கவர்ந்து இழுத்துக் கொள்ளும். அது சமாதானத்தையும் நேசநாடுகளிடமிருந்து முறித்துக் கொள்வதையும் கோரும். அது சாத்தியமில்லை. பூர்ஷ்வாக்களோடு இருப்பதில் நாம் மேலான நிலையிலேயே இருக்கிறோம், பத்திரமாயும் இருக்கிறோம்; என்ன இருந்தாலும், நாம் அவர்களிடமிருந்து பிரிந்து சென்றுவிடவில்லை, கர்னீலோவ் நிகழ்ச்சியை வைத்து மட்டுமே நாம் ஒரு தற்காலிகமான சண்டை போட்டுக்கொண்டோம். நாம் சண்டைபோட்டுக் கொண்டோம், என்றாலும் சரிசெய்து கொண்டு சமாதானமாகிப் போய்விடுவோம். மேலும், போல்ஷெவிக்குகள் நமக்கு எதையும் 'விட்டுக்கொடுக்கவில்லை', ஏனெனில் புரட்சிக்கலகம் செய்யும் அவர்களின் முயற்சிகள் 1871 ஆண்டையக் கம்யூன் போலவே தோல்வியுறுவது திண்ணம்.''

மற்றொரு குரல் சொல்லக்கூடும்: ''கம்யூனைக் குறிப்பிட்டது மிகவும் மேலோட்டமானது, முட்டாள்தனமானதுங்

கூட. ஏனெனில், முதலாவதாக, 1871க்குப் பிறகு போல்ஷெவிக்குகள் கொஞ்சம் விஷயம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; பாங்குகளைப் பிடுங்கிக் கொள்ள அவர்கள் தவற மாட்டார்கள், வெர்ஸேய் மீது படையெடுத்துச் செல்ல மறுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளில் அந்தக் கம்யூன்கூட வெற்றிபெற்றிருக்கும். மேலும், போல்ஷெவிக்குகள் அதிகாரத்துக்கு வந்தால் வழங்கக் கூடியதை—அதாவது, விவசாயிகளுக்கு நிலம், சமாதானத்திற்கு ஒரு உடனடியான திட்டம், உற்பத்திமீது உண்மையான கண்காணிப், உக்ரேனியர்களுடன், பின்லாந்து மக்களுடன், மற்றவர்களுடன் ஒரு நேர்மையான சமாதானம்—கம்யூனால் உடனடியாக மக்களுக்கு வழங்க முடியவில்லை. அப்பட்டமாகச் சொல்வதென்றால், கம்யூனைவிட போல்ஷெவிக்குகள் பத்து மடங்கு அதிகமான ''துருப்புச் சீட்டுகள்'' வைத்திருக்கிறார்கள். இரண்டாவதாக, என்னதான் இருந்தாலும், கம்யூன் என்றாலே ஒரு கடுமையான உள்நாட்டுப் போர் என்று பொருள், வெகு காலத்திற்குச் சமாதானபூர்வமான கலாச்சார வளர்ச்சிக்குத் தேக்கம் என்று பொருள், பல வகையான மாக்மஹோன்களுக்கும் கர்னீலோவ்களுக்கும் இன்னும் அதிகச் சுளுவுடன் வேலை செய்யவும் சதிகள் புரியவும்—அப்படிப்பட்ட காரியங்கள் நம் பூர்ஷ்வா சமுதாயம் பூராவுக்கும் ஒரு ஆபத்தாகும்—ஒரு வாய்ப்பு என்று பொருள். கம்யூன் ஆபத்தை மேற்கொள்வது விவேகமானதுதானா?

''நம் கைகளிலேயே அதிகாரத்தை நாம் எடுத்துக் கொள்ளாவிட்டால், மே 6க்கும் ஆகஸ்ட் 31க்கும் இடையே இருந்த அதே மோசமான நிலையில் விவகாரங்கள் இருந்து வருமேயானால், ருஷ்யாவில் இன்று கம்யூன் தவிர்க்க முடியாததாகும். ஒவ்வொரு புரட்சிகரமான தொழிலாளியும் போர்வீரனும் தவிர்க்க முடியாதபடி கம்யூனைப் பற்றி நினைப்பான், கம்யூன்மீது நம்பிக்கை வைப்பான், தவிர்க்க முடியாதபடி அதைக்கொண்டுவர முயல்வான்; ஏனெனில், அவன் பின்வருமாறு வாதிப்பான்: 'மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள், யுத்தமும் பஞ்சமும் நாசமும் பரவிக் கொண்டிருக்கின்றன. கம்யூன் ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றும். ஆகவே நாம் அனைவரும் செத்தாலும் பரவாயில்லை, உயிர்போனாலும் பரவாயில்லை, கம்யூனை அமைப்போம் வாருங்கள்' என்று.

தொழிலாளர்களிடம் இப்படிப்பட்ட கருத்துக்கள் தவிர்க்க முடியாதவை, மேலும் 1871ல் செய்தது போல் கம்யூனை நசுக்குவது இன்று அவ்வளவு சுலபமல்ல. உலகமெங்கும் ருஷ்யக் கம்யூனுக்கு நேசசக்திகள், 1871ல் கம்யூனுக்கு இருந்ததைவிட நூறு மடங்கு அதிக பலமுள்ள நேசசக்திகள், இருக்கும்.... நாம் கம்யூன் ஆபத்தை மேற்கொள்வது விவேகமானதுதானா? போல்ஷெவிக்குகள் தம்முடைய சமரசம் மூலம் நமக்கு அநேகமாக ஒன்றுமே விட்டுக் கொடுக்கவில்லை என்கிறதையும் நாம் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும், யுத்தகாலத்தில் பாட்டாளி வர்க்கத்துடன் செய்து கொள்கிற ஒவ்வொரு உடன்பாட்டையும், அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, நாகரிகமுள்ள மந்திரிகள் மிக உயர்வாக மதிக்கிறார்கள். அவர்கள் மிகமிக உயர்வாக மதிக்கிறார்கள். அவர்கள் விவகாரஞானமுள்ள மனிதர்கள், உண்மையான மந்திரிகள். அடக்குமுறை இருந்தபோதிலும், அவர்கள் பத்திரிகைகள் பலவீனமாக இருந்தபோதிலும், போல்ஷெவிக்குகள் வேகமாக மேன்மேலும் பலம் அடைந்து வருகிறார்கள்.... நாம் கம்யூன்ஆபத்தை மேற்கொள்வது விவேகமானதுதானா?

''நமக்கு ஒரு பத்திரமான பெரும்பான்மை இருக்கிறது; கொஞ்ச காலத்துக்கு ஏழை விவசாயிகள் விழித்தெழ மாட்டார்கள்; நம் ஆயுட்காலத்துக்கு நாம் பத்திரம்தான். ஒரு விவசாயி நாட்டில் பெரும்பான்மையினர் அதீதவாதிகளைப் பின்பற்றுவார்கள் என்று நான் நம்பவில்லை. மேலும், வெளிப்படையான பெரும்பான்மைக்கு எதிராக ஒரு உண்மையான ஜனநாயகக் குடியரசில் எந்தப் புரட்சிக் கலகமும் சாத்தியமில்லை''. இதைத்தான் இரண்டாவது குரல் சொல்லும்.

மார்த்தவ் அல்லது ஸ்பிரிதோனவா, ஆகியோரின் ஆதரவாளர்களிடமிருந்து ஒரு மூன்றாவது குரலுங்கூட கேட்கக் கூடும். அது சொல்லும்: ''எனக்கு ஆத்திரம் வருகிறது, 'தோழர்களே', நீங்கள் கம்யூனைப் பற்றியும் அது வரக்கூடிய நிலை பற்றியும் பேசும்போது தயக்கமின்றி அதன் எதிரிகளின் பக்கம் போவதைக் கண்டு. ஏதாவது ஒரு வடிவத்தில், நீங்கள் இருவரும் கம்யூனை நசுக்கியவர்கள் பக்கம் போகிறீர்கள். கம்யூனுக்காக நான் கிளர்ச்சி நடத்த மாட்டேன்,

ஒவ்வொரு போல்ஷெவிக்கும் செய்யப் போவதைப்போல் நான் அதன் அணிகளில் நின்று சண்டைபோட முன்கூட்டியே வாக்குறுதி தர முடியாது. ஆனால் என்னுடைய முயற்சிகளை யும் மீறி கம்யூன் தொடங்குமேயானால், அதன் எதிரிகளுக்கு உதவுவதை விட அதனைப் பாதுகாத்து நிற்பவர்களுக்கு உதவுவேன்...'' என்று.

''கூட்டணியில்'' இருக்கிற குரல்களின் குழப்பம் பெரிது, தவிர்க்க முடியாததுங்கூட; ஏனெனில் குட்டிபூர்ஷ்வா ஜனநாயக வாதிகளிடையே பலப்பல சாயல்கள் பிரதிநிதித் துவம் பெற்றுள்ளன—அரசாங்கத்தில் பதவிபெற முழுக்க லாயக்கான முழு பூர்ஷ்வா முதலாகப் பாட்டாளி வர்க்க நிலையை இன்னமும் மேற்கொள்ளச் சக்தியற்றிருக்கிற அரைப் பஞ்சப்பனுதி ஈருக. எந்த ஒரு குறிப்பிட்ட தருணத் திலும் இந்தக் குரல்களின் குழப்பத்தின் விளைவு என்ன ஆகும் என்று யாருக்கும் தெரியாது.

* * *

மேற்கண்ட வரிகள் செப்டம்பர் 1ந் தேதி வெள்ளிக் கிழமை எழுதப்பெற்றன; ஆனால் எதிர்பாராத சந்தர்ப்பங் களால் (கேரென்ஸ்கியின் கீழ், போல்ஷெவிக்குகளில் எல் லோரும் தங்கள் இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள சுதந்திரம் பெற்றிருக்கவில்லை என்பதை வரலாறு கூறும்) அவை அதே நாளில் ஆசிரியர் அலுவலகத்திற்குப் போய்ச் சேரவில்லை. சனிக்கிழமை பத்திரிகைகளையும் இன்றைய, ஞாயிற்றுக்கிழமை, பத்திரிகைகளையும் படித்த பிறகு எனக்கு நானே சொல்லிக் கொள்வதாவது: ஒருவேளை, ஒரு சமரசத் திட்டம் கொடுப்பதற்கு ஏற்கெனவே காலம் கடந்துவிட்டது போலும். ஒருவேளை, சமாதான பூர்வமான வளர்ச்சி இன்ன மும் சாத்தியமாயிருந்திருக்கக்கூடிய அந்த சில நாட்களுங் கூடக் கடந்துவிட்டன போலும். ஆம், அவை ஏற்கெனவே கடந்து விட்டன என்றுதான் தோன்றுகிறது. ஏதாவது ஒரு வழியில், கேரென்ஸ்கிய் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சி, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் ஆகிய இரண்டையுமே கைவிட்டு, அவர்களின் செயலற்று நிற்கும் நிலையின் காரணத் தால் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் இல்லாமலேயே பூர்ஷ்வா

வர்க்கத்தின் உதவியைக் கொண்டு தன்னுடைய பதவியைக் கெட்டிப்படுத்திக் கொள்வார்.... ஆம், சந்தர்ப்பவசமாக சமாதான பூர்வமான வளர்ச்சிப் பாதையைச் சாத்திய மாக்கிய அந்த நாட்கள் ஏற்கெனவே கடந்துவிட்டன என்று தோன்றுகிறது. இனி செய்வதற்கு மிச்சமிருப்பது இந்தக் குறிப்புக்களை, ''காலங்கடந்த சிந்தனைகள்'' என்று அவற் றிற்குத் தலைப்புக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு ஆசிரி யருக்கு அனுப்ப வேண்டியதுதான்.... ஒருவேளை, காலங் கடந்த சிந்தனைகளும் சில சமயங்களில் சுவையற்றுப் போகா *அல்லவா?*

நூல்திரட்டு, தொகுதி *34*

*1917, செப்டம்பர் 3*

*1917, செப்டம்பர் 1—3 (14-16)*
தேதிகளில் எழுதப்பட்டது

*1917, செப்டம்பர் 19(6),*
''ரபோச்சிய் பூத்'' என்ற பத்திரிகை,
இதழ் *3*ல் பதிப்பிக்கப்பட்டது

கையொப்பம்: நி. லெனின்

# புரட்சிகரமான வாய்ச்சொல்[52]

புரட்சிகரமான யுத்தத்தைப் பற்றிய புரட்சிகரமான வாய்ச்சொல் நமது புரட்சியை நாசம் செய்யக்கூடும் என்று நான் ஒரு கட்சிக் கூட்டத்தில் சொன்னபோது, என்னுடைய வாதத்தின் கூர்மைக்காக என்னைக் கடிந்து கொண்டார்கள். ஆனபோதிலும், ஒரு பிரச்சினையைக் கூர்மையாக எழுப்பித் தீரவேண்டிய, விவகாரங்களைப் பச்சையாகச் சொல்லித் தீரவேண்டிய தருணங்கள் உண்டு; இல்லையேல் கட்சிக்கும் புரட்சிக்கும் சீர் செய்யமுடியாத தீங்கு உண்டாக்கும் அபாயம் ஏற்படும்.

புரட்சிகரமான கட்சிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாட்டாளி வர்க்க நபர்களும் குட்டிபூர்ஷ்வா நபர்களும் இணைந்த ஒரு சேர்க்கையாக, அல்லது கூட்டணியாக, அல்லது பரஸ்பரக் கலவையாக அமைகிற காலங்களிலும், புரட்சி நிகழ்ச்சிகளின் போக்கு பெரிய, வேகமான திருப்பங்களைக் காட்டும்போதும், புரட்சிகரமான கட்சிகள் பெரும்பாலாக அனுபவிக்கிற ஒரு வியாதியே புரட்சிகரமான வாய்ச்சொல்வீச்சு என்பது. புரட்சிகரமான வாய்ச்சொல்வீச்சு என்கிறபோது நிகழ்ச்சிகளின் ஒரு குறிப்பிட்ட திருப்பத்தில் இருக்கிற புறநிலைச் சந்தர்ப்பங்களையும் அந்தந்த நேரத்தில் இருக்கிற குறிப்பிட்ட விவகார நிலைகளையும் பார்க்காமல் புரட்சிகரமான கோஷங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதையே அர்த்தப்படுத்துகிறோம். அந்தக் கோஷங்கள் நேர்த்தியானவை, வசீகரமானவை, போதையூட்டுபவை; ஆனால் அவற்றிற்கு ஆதாரம் எதுவும் கிடையாது; புரட்சிகரமான வாய்ச்சொல்லின் இயல்பு இப்படிப்பட்டது.

இன்றைய தினம், *1918* ஜனவரி-பிப்ரவரியில், ருஷ்யாவில் ஒரு புரட்சிகரமான யுத்தத்திற்குச் சாதகமாகப் பேசும் வாதங்களின் ஒரு தொகையை—மிக முக்கியமானவற்றையே—நாம் ஒரு பார்வை பார்ப்போம். இந்தக் கோஷத்தைப்

புறநிலையான யதார்த்தத்தோடு ஒப்புநோக்கினுல் அதுவே நான் தருகிற குணக்குறி சரிதானு என்று சொல்லிவிடும்.

1

அண்டை நாடுகளில் முதலாளித்துவம் இன்னமும் இருந்து வருகையில் ஒரு தனி நாட்டில் சோஷலிஸம் வெற்றி பெறுகிற நிலைமை ஏற்பட்டால் ஒரு புரட்சிகரமான யுத்தத்துக்குத் தயார் செய்ய வேண்டியதின் தேவையைப் பற்றி நமது பத்திரிகைகள் எப்போதும் பேசிவந்துள்ளன. இது மறுக்க முடியாதது.

பிரச்சினை என்னவெனில், நமது அக்டோபர் புரட்சிக்குப் பிறகு யதார்த்தத்தில் உள்ளபடியே அந்தத் தயாரிப்புகள் எப்படிச் செய்யப்பட்டுள்ளன?

இந்த வழியேதான் நாம் தயார் செய்திருக்கிறோம்: நாம் இராணுவத்தைக் கலைத்துவிட வேண்டியதாயிற்று; சந்தர்ப்பங்களால் அப்படிச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம்; படைக் கலைப்புக்கு எதிராகக் கட்சியில் ஒரு ''போக்கோ'', மனேநிலையோ, எழுந்திருந்தது என்பதற்குப் பதிலாக அதை எதிர்த்து ஒற்றையாகவேனும் ஒரு குரல்கூட எழுப்பப்படவில்லை என்கிற அளவுக்கு அந்தச் சந்தர்ப்பங்கள் வெளிப்படையாகவும், கனம் மிக்கவையாகவும், சமாளிக்க முடியாதவையாகவும் இருந்தன. அண்டையிலுள்ள ஒரு ஏகாதிபத்திய அரசுடன் நடக்கும் யுத்தம் முடிவடையுமுன் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசின் இராணுவம் கலைக்கப்பட்டது போன்ற அபூர்வமான நிகழ்ச்சிக்குரிய வர்க்க காரணங்களைப் பற்றிக் கொஞ்சம் சிந்தனை செலுத்த விரும்புகிற எவனும், இந்தக் காரணங்களை, மூன்ருண்டுக் காலத்திய யுத்தத்திற்குப் பிறகு மட்டற்ற பொருளாதார நாசத்திற்குத் தாழ்த்தப்பட்டுவிட்ட, சிறு விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள ஒரு பிற்பட்ட நாட்டின் சமுதாய உள்ளமைப்பிலே அதிகக் கஷ்டமில்லாமல் கண்டு கொள்வான். பல லட்சம் பேர்களைக் கொண்ட ஒரு இராணுவம் கலைக்கப்பட்டது, தன்னிச்சையாக முன்வரும் அடிப்படையில் ஒரு செஞ்சேனையைச் சிருஷ்டிக்கத் துவக்கப்பட்டது—இவைதான் உண்மைகள்.

ஒரு புரட்சிகரமான யுத்தம் பற்றி 1918 ஜனவரி-பிப்ரவரியில் நடந்த பேச்சோடு இந்த உண்மைகளை ஒப்பிட்டுப்

பாருங்கள், புரட்சிகரமான வாய்ச்சொல்லின் இயல்பு உங்களுக்குத் தெளிவாகும்.

பெத்ரோகிராத், மாஸ்கோ ஸ்தாபனங்கள்—உதாரணத்துக்குச் சொல்கிறேன்—ஒரு புரட்சிகரமான யுத்தத்திற்குக் காட்டிய இந்த ''ஆதரவு'' ஒரு வெற்று வாய்ச்சொல்லாக இருந்திராவிட்டால் அக்டோபருக்கும் ஜனவரிக்கும் இடையே நம்மிடம் வேறு உண்மைகள் இருந்திருக்க வேண்டும்; அந்த ஸ்தாபனங்களின் தரப்பிலிருந்து படைக்கலைப்புக்கு எதிரான தீர்மானமிக்க போராட்டத்தை நாம் பார்த்திருக்க வேண்டும். ஆனல் அப்படி எதுவும் நடக்கக் காணேம்.

பெத்ரோகிராத்காரர்களும் மாஸ்கோக்காரர்களும் பத்தாயிரக் கணக்கிலே கிளர்ச்சிப் பேச்சாளர்களையும் போர்வீரர்களையும் போர்முனைக்கு அனுப்பியதை நாம் பார்த்திருக்க வேண்டும்; அங்கிருந்து அவர்கள் படைக்கலைப்பை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைப் பற்றியும், அவர்கள் போராட்டத்தின் வெற்றிகளைப் பற்றியும், படைக்கலைப்பை நிறுத்துவது பற்றியும் நாள்தோறும் தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

ஆனல் அப்படி எதுவும் நடக்கக் காணேம்.

ரெஜிமென்டுகள் செஞ்சேனையாக உருப்பெற்று அமைந்து வருவதாகவும், படைக்கலைப்பை நிறுத்துவதற்குப் பயங்கரவாத முயற்சிகளைப் பயன்படுத்துவதாகவும், ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து வரச் சாத்தியப்பாடுள்ள தாக்குதலை எதிர்க்கப் பாதுகாப்புகளையும் அரண்களையும் புதுப்பித்து வருவதாகவும் நமக்கு நூற்றுக் கணக்கான தகவல்கள் கிடைத்திருக்க வேண்டும்.

அப்படி எதுவும் நடக்கக் காணேம். படைக்கலைப்பு முழு வேகத்தில் நடக்கிறது. பழைய இராணுவம் இல்லை. புதிய இராணுவம் இப்போதுதான் பிறந்து வருகிறது.

வெறும் சொற்களால், படாடோபமான பிரகடனங்களால், ஆர்ப்பரிப்புக்களால், தன்னைத் தேற்றிக் கொள்ள விரும்பாத எவனும் 1918 பிப்ரவரியில் புரட்சிகரமான யுத்தம் பற்றிய ''கோஷம்'' என்பது வாய்ச்சொற்களிலேயே மிகமிக வெற்றுவேட்டான வாய்ச்சொல் என்றும் அதில் உண்மை ஏதுமில்லை என்றும் புறநிலைவகைப்பட்டதாக ஏதுமில்லை என்றும் பார்த்துத் தீரவேண்டும். இன்று இந்தக்

கோஷத்தில் உணர்ச்சியும், விருப்புகளும், ஆத்திரமும், ஆட்சேபக் கோபமும் தவிர வேறெதுவும் உள்ளடங்கியதாகக் கிடையாது. இப்படிப்பட்ட உள்ளடக்கமுள்ள ஒரு கோஷந்தான் புரட்சிகரமான வாய்ச்சொல் என்று அழைக்கப்படுகிறது.

நமது சொந்தக் கட்சியிடமும் மொத்தத்தில் சோவியத் ஆட்சியிடமும் இருக்கும் நிலவரங்கள், பெத்ரோகிராத், மாஸ்கோ போல்ஷெவிக்குகளிடமுள்ள நிலவரங்கள், தன்னிச்சையாகச் சேர்ந்த செஞ்சேனையை அமைப்பதில் முதல் படிகளுக்கு அப்பால் செல்வதில் நாம் இதுவரை வெற்றி பெறவில்லை என்று காட்டுகின்றன. இந்த இனிப்பில்லாத உண்மையைவிட்டு — அதுதான் உண்மை—சொற்களின் திரைக்குப் பின்னால் ஒளிந்து கொள்வதும், அதே நேரத்தில் படைக்கலைப்பை நிறுத்த ஒன்றும் செய்யாமலிருப்பதோடு அல்லாமல் அதற்கு ஆட்சேபமும் தெரிவிக்காதிருப்பதும், சொற்களின் ஓசையிலே போதையூட்டிக் கொள்வதேயாகும்.

எடுத்துக்காட்டாக, சொல்லி வந்ததற்கு இனக்குறிப்பான நிரூபணமாக, நமது கட்சியின் மத்தியக் கமிட்டியில் ஒரு தனித்த சமாதானத்தை எதிர்த்த முக்கியமான எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையினர் புரட்சிகரமான யுத்தத்துக்கு எதிராக வோட்டளித்தார்கள், ஜனவரி பிப்ரவரி இரண்டிலும் எதிர்த்து வோட்டளித்தார்கள் என்கிற உண்மை விளங்குகிறது. அதற்குப் பொருள் என்ன? உண்மையை நேராகப் பார்க்கப் பயப்படாத யாருமே புரட்சிகரமான யுத்தம் சாத்தியமற்றது என்பதை அங்கீகரிக்கிறார்கள் என்பதேயாகும்.

இப்படிப்பட்ட வழக்குகளில், வாதங்களை முன்வைப்பதன் மூலமாக, முன்வைக்க முயல்வதின் மூலமாக, உண்மை தட்டிக்கழிக்கப்படுகிறது. அவற்றை நாம் பரிசீலிப்போம்.

## 2

முதல் வாதம். 1792ல் இதே அளவுக்குப் பிரான்சு பொருளாதார நாசத்தை அனுபவித்தது, ஆனால் புரட்சிகரமான யுத்தம் எல்லாவற்றையும் குணப்படுத்தி விட்டது, அது எல்லோருக்கும் ஒரு எழுச்சித் தூண்டுதலாக விளங்கியது,

உற்சாகத்தை உண்டாக்கி எல்லாவற்றையும் முன்தள்ளிக் கொண்டு சென்றது. புரட்சியில் நம்பிக்கையற்றவர்கள் மட்டுமே, சந்தர்ப்பவாதிகள் மட்டுமே, நமது, அதைவிட ஆழமான, புரட்சியில் புரட்சிகரமான யுத்தத்தை எதிர்க்க முடியும்.

இந்தக் காரணத்தை, அல்லது இந்த வாதத்தை, உண்மைகளோடு ஒப்பு நோக்குவோம். பிரான்சில் பதினெட்டாம் நூற்றுண்டின் முடிவில், புதிய, மேலான உற்பத்திமுறைக்குரிய பொருளாதார அடிப்படை முதலில் சிருஷ்டிக்கப் பெற்றிருந்தது, அதன்பிறகு, அதன் விளைவாக, ஒரு மேல் கட்டு மானம் என்கிற வகையில், சக்திமிகுந்த புரட்சிகரமான இராணுவம் தோன்றியது என்பது உண்மை. மற்றைய நாடுகளுக்கு முன்பே பிரான்சு நிலப்பிரபுத்துவத்திலிருந்து விடுபட்டது, வெற்றிகரமான புரட்சியின் ஒரு சில ஆண்டுகளின் போக்கிலே அதைத் துடைத்து அகற்றி விட்டது, எந்த யுத்தத்தாலும் களைத்துப்போயிராத, நிலத்தையும் சுதந்திரத்தையும் வென்றுபெற்றிருந்த, நிலப்பிரபுத்துவத்தை ஒழித்ததினுல் மேலும் பலம் அடைந்திருந்த மக்களை பொருளாதாரரீதியிலும் அரசியல் ரீதியிலும் பிற்பட்ட பல மக்கள் சமூகங்களுக்கு எதிராக யுத்தத்தில் இயக்கிச் செலுத்தியது.

இதை நம் காலத்திய ருஷ்யாவுடன் ஒப்புநோக்குங்கள். யுத்தத்தால் நம்பமுடியாத களைப்பு. தொழில்நுட்பத் துறையில் நேர்த்தியான முஸ்தீப்புள்ள ஜெர்மனியின் அரசு முதலாளித்துவத்தைவிட மேலான ஒரு புதிய பொருளாதார அமைப்பு இன்னமும் ஏற்படாமலே இருக்கிறது. அது ஸ்தாபிதமாகி வருகிறது, அவ்வளவே. நமது விவசாயிகள் நிலத்தைச் சமூகவுடைமையாக்குகிற ஒரு சட்டத்தை மட்டுமே பெற்றிருக்கிருர்கள். சுதந்திரமான (நிலப்பிரபுக்களிடமிருந்தும், யுத்த வேதனையிலிருந்தும் சுதந்திரம் பெற்ற) வேலைக்குரிய ஒரு ஆண்டுக்காலம் கூடப் பெறவில்லை. நமது தொழிலாளர்கள் முதலாளிகளைத் தூக்கியெறியத் தொடங்கியிருக்கிருர்கள், ஆனுல் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதையோ, பண்டப் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்வதையோ, தானிய போக்கு வரத்துக்கு ஏற்பாடு செய்வதையோ, உழைப்பின் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதையோ, இன்னமும் சமாளித்தாகவில்லை,

இதை நோக்கித்தான் நாம் முன்னே சென்ருேம், இந்தப் பாதையில்தான் நாம் சென்ருேம், ஆனல் புதிய, மேலான பொருளாதார அமைப்பு இன்னமும் அமையவில்லை என்பது வெள்ளிடைமலை.

வெல்லப்பட்ட நிலப்பிரபுத்துவம், திடப்படுத்தப்பட்ட பூர்ஷ்வாச் சுதந்திரம், நிலப்பிரபுத்துவ நாடுகளுக்கு எதிரான நல்லூட்டம் பெற்ற ஒரு விவசாயி—இதுவே யுத்தத் துறையில் 1792லும் 1793லும் கண்ட ''அதிசயங்களுக்கு'' இருக்கும் பொருளாதார அடிப்படையாகும்.

சிறுவிவசாயிகளைக் கொண்டதாய், யுத்தத்தால் பசியும் துன்பமும் அனுபவித்து வருவதாய், தன் யுத்தக் காலக் காயங்களை அப்பொழுதுதான் ஆற்றிக்கொள்ளத் தொடங்கியிருக்கிறதாய், தொழில்நுட்ப ரீதியிலும் அமைப்பு முறைகளிலும் மேலான உழைப்பின் உற்பத்தித்திறனை எதிர்த்து நிற்பதாய் இருக்கிற ஒரு நாடு—இதுதான் 1918ன் தொடக்கத்தில் இருக்கும் புறநிலைவகைப்பட்ட நிலைமை.

எனவேதான் 1792ம் ஆண்டு, முதலியவற்றைத் திரும்பிப் பார்த்துச் சிந்தனையில் மூழ்குவதெல்லாம் ஒரு புரட்சிகரமான வாய்ச்சொல் தவிர வேருென்றுமில்லை. ஆட்கள் கோஷங்களை, சொற்களை, போர் முழக்கங்களைத் திருப்பிச் சொல்கிருர்கள்; ஆனல் புறநிலைவகைப்பட்ட யதார்த்தத்தைப் பகுத்தாராயப் பயப்படுகிருர்கள்.

## 3

இரண்டாவது வாதம். ஜெர்மனியால் ''தாக்கி முன்னேற முடியாது'', வளர்ந்துவரும் அதன் புரட்சி அதை அனுமதிக்காது.

ஜெர்மானியர்களால் ''தாக்கி முன்னேற முடியாது'' என்கிற வாதம் 1918 ஜனவரியிலும், பிப்ரவரியின் தொடக்கத்திலும், தனித்த சமாதானத்தின் எதிர்ப்பாளர்களால் லட்சக்கணக்கான தடவைகளில் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டதே. அவர்களில் அதிக எச்சரிக்கையுள்ளவர்கள் ஜெர்மானியர்கள் தாக்கி முன்னேற முடியாமல் இருக்கிறதின் சாத்தியப்பாடு 25லிருந்து 33 சதவிகிதத்துக்கு—சராசரியாக என்பது உண்மை—இருக்கும் என்று சொன்ஞர்கள்.

உண்மைகள் இந்தக் கணக்குகளை மறுத்தன. தனித்த சமாதானத்தின் எதிர்ப்பாளர்கள் இங்கேயும் அடிக்கடி

உண்மைகளின் இரும்புபோன்ற தர்க்கத்தைக் கண்டு பயந்து அவற்றை ஒதுக்கித் தள்ளுகிறார்கள்.

உண்மையான புரட்சிக்காரர்கள் (உணர்ச்சியின் பாற்பட்ட புரட்சிக்காரர்கள் அல்ல) அங்கீகரித்துப் பகுத்தாராய முடியத் தக்க இந்தத் தவற்றின் மூலஸ்தானம் எது?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக நாம், பொதுவாகவே, தந்திரோபாயமாக நடந்து கொண்டும் கிளர்ச்சி செய்து கொண்டும் இருந்த காரணத்தாலா? அது அல்ல. நாம் தந்திரோபாயமாக நடந்து கொண்டு தீரவேண்டியிருந்தது, கிளர்ச்சி செய்ய வேண்டியிருந்தது. ஆனால், தந்திரோபாயமாக நடக்கவும் கிளர்ச்சி செய்யவும் இன்னமும் சாத்தியப்பாடு இருக்கையில், நாம் தந்திரோபாயமாக நடக்கவும் கிளர்ச்சி செய்யவும் பிரச்சினை கடுமையாகி விட்ட போது எல்லா தந்திரோபாயங்களையும் நிறுத்தி விடவும் ''நமக்குரிய நேரத்தை'' நாமே தேர்ந்து கொள்ள வேண்டியுமிருந்தது.

தவற்றின் மூலஸ்தானம் எது வென்றால், புரட்சிகரமான ஜெர்மன் தொழிலாளர்களுடன் நமது புரட்சிகரமான ஒத்துழைப்பு உறவுகள் என்பவை ஒரு வெற்றுச் சொல்லாக மாற்றப்பட்டதேயாகும். நம்மால் முடிந்த எல்லா வழிகளிலும்—அளவளாவுவது, கிளர்ச்சி செய்வது, இரகசிய ஒப்பந்தங்களைப் பிரசுரிப்பது, முதலியன—நாம் புரட்சிகரமான ஜெர்மன் தொழிலாளர்களுக்கு உதவினோம், உதவி வருகிறோம். அதுவே செயல் பூர்வமான உதவி, உண்மையான உதவி.

ஆனால் நம்முடைய சில தோழர்களின் பிரகடனம்—''ஜெர்மானியர்களால் தாக்கி முன்னேற முடியாது'' என்பது—ஒரு வெற்றுச் சொல்லாகும். நம் சொந்த நாட்டில் நாம் இப்போதுதான் ஒரு புரட்சியிலிருந்து வெளிவந்திருக்கிறோம். ஐரோப்பாவைவிட ருஷ்யாவில் ஒரு புரட்சியைத் தொடங்குவது ஏன் சுலபமாயிருந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நமது புரட்சி ஆரம்பமாகியிருந்தது மட்டுமின்றி, முடியாட்சி முறையைத் தூக்கியெறிந்து விட்டிருந்தது மட்டுமின்றி, எல்லா இடங்களிலும் சோவியத்துக்களை நிறுவியிருந்தபோதிலும், ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் 1917 ஜூன் மாதத்தியத் தாக்குதலை நம்மால் தடுக்க முடியவில்லை என்று கண்டோம். யுத்தங்களை அரசாங்கங்களே நடத்துகின்றன,

எனவே ஒரு பூர்ஷ்வா யுத்தத்தை நிறுத்துவதற்கு பூர்ஷ்வா அரசாங்கத்தைத் தூக்கியெறிவது அவசியம் என்பதை நாம் பார்த்தோம், நாம் அறிந்திருந்தோம், நாம் தொழிலாளர்களுக்கு விளக்கிச் சொன்னோம்.

''ஜெர்மானியர்களால் தாக்கி முன்னேற முடியாது'' என்கிற பிரகடனம் ''ஜெர்மன் அரசாங்கம் அடுத்த சில வாரங்களில் தூக்கியெறியப்படும்'' என்று பிரகடனப்படுத்துவதற்கு ஒப்பாகும். யதார்த்தத்தில் இது நமக்குத் தெரியாது, தெரிந்திருக்கவும் முடியாது; எனவே, அந்தப் பிரகடனம் ஒரு வெற்றுச் சொல்லேயாகும்.

ஜெர்மன் புரட்சி பக்குவப்பட்டு வருகிறது என்று திட நம்பிக்கை கொள்வதோடு, அது பக்குவமடைய நாம் பயனுள்ள வகையில் உதவுவது, அது பக்குவமடையச் சாத்தியமான வரைக்கும் செயல்களாலும் கிளர்ச்சியாலும் அளவளாவுவதாலும், நாம் புரிய முடியும் எல்லாவிதச் செயல்களாலும் உதவுவது என்பது ஒரு விஷயம். அதுதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பதின் பொருள்.

ஜெர்மன் புரட்சி ஏற்கெனவே பக்குவப்பட்டுவிட்டது (அப்படியில்லை என்பது வெளிப்படையாக இருந்த போதிலும்) என்று நேரடியாகவோ, சுற்றிவளைத்தோ, பகிரங்கமாகவோ மறைவிலோ பிரகடனம் செய்வது என்பது, அதனை நம்முடைய செயல்தந்திரங்களுக்கு ஆதாரமாகக் கொள்வது என்பது, வேறு விஷயம். அதில் தினையளவுக்கேனும் புரட்சித்தன்மை இல்லை. அதில் வாய்ச்சொல்வீச்சு தவிர வேறெதுவும் இல்லை.

''ஜெர்மானியர்களால் தாக்கி முன்னேற முடியாது'' என்கிற ''கர்வமுள்ள, பளிச்சிடுகிற, பகட்டான, படாடோபமான'' பிரகடனத்தில் அடங்கியிருக்கும் தவற்றின் மூலஸ்தானம் இதுவே.

## 4

''ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதின் வழியாக நாங்கள் ஜெர்மன் புரட்சிக்கு உதவி செய்து வருகிறோம், அவ்வழியே வில்ஹெல்ம் மீது லீப்க்னெஹ்ட் வெற்றிகொள்வதை நெருங்கிவரச் செய்கிறோம்'' என்கிற அழுத்தமான கூற்றும் அதே படாடோபமாக ஒலிக்கும் முட்டாள் தனத்தின் ஒரு மாற்றேயொழிய வேறில்லை,

லீப்க்னெஹ்டின் வெற்றி—ஜெர்மன் புரட்சி பக்குவம் பெறும்போது அது சாத்தியப்படும், தவிர்க்க முடியாததாகி விடும்—நம்மை எல்லா சர்வதேச நெருக்கடிகளினின்றும் மீட்டு புரட்சிகரமான யுத்தத்திலிருந்து விலக்கி வைக்கும் என்பது நியாயத்துக்கு ஒத்துவரக் கூடிய விஷயந்தான். லீப்க்னெஹ்டின் வெற்றி நம்மை எவ்வித முட்டாள் தனமான செயல்களின் விளைவுகளிலிருந்தும் மீட்டுவிடும். ஆனால் நிச்சயமாக அது முட்டாள்தனமான செய்கைகளை நியாயப் படுத்துமா?

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை ஏதாவது ஒரு வகையில் ''எதிர்ப்பது'' ஜெர்மன் புரட்சிக்கு உதவுமா? கொஞ்சம் சிந்திக்கவோ, அல்லது ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தின் வரலாற்றை நினைவூட்டிக் கொள்ளக்கூடவோ கவலைப்படுகிற எவனும் பிற்போக்கை எதிர்ப்பது என்பது சந்தர்ப்பப் பயனுள்ளதாக இருக்கும்போது மட்டுமே புரட்சிக்கு உதவும் என்பதைச் சுலபமாக உணர்வான். ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தின் அரை நூற்றுண்டுக் காலத்தில், சந்தர்ப்பப் பயனற்றிருந்த பிற்போக்கு எதிர்ப்பு பற்றிய பல வழக்குகளை அனுபவித்திருக்கிறோம். வெகுஜனச் சக்திகளைப் பற்றிய, வர்க்க உறவுகள் பற்றிய, ஒரு நுட்பதிட்பமான கணக்கைக் கொண்டு எந்த ஒரு போராட்ட வடிவத்தின் சந்தர்ப்பப் பயனையும் நாம் நிர்ணயித்தோம் என்பதிலே எப்போதுமே மார்க்ஸீய வாதிகளாகிய நாம் பெருமைப்பட்டு வந்திருக்கிறோம். ஒரு புரட்சியெழுச்சி எப்போதுமே சந்தர்ப்பப் பயனுள்ளது அல்ல என்று சொல்லியிருக்கிறோம்; மக்களிடையே முன்தேவைகள் அதற்கு இருந்தாலொழிய அது ஒரு சூதாட்டமே; புரட்சியின் பார்வை நிலையிலிருந்து, தனிநபர்களின் மிகவும் வீரம் செறிந்த எதிர்ப்பு வடிவங்களைச் சந்தர்ப்பப் பயனற்றது, தீங்கானது என்று நாம் அடிக்கடி கண்டித்திருக்கிறோம். 1907ல், கசப்பான அனுபவத்தின் அடிப்படையில், மூன்றாவது டூமாவில் பங்கு கொள்வதை எதிர்ப்பதைச் சந்தர்ப்பப் பயனற்றது என்று நாம் நிராகரித்தோம்; இவ்வாறே பிறவும்.

ஒரு பகிரங்கமான புரட்சிக்கலகத்தில் அல்லது இராணுவ மோதலில் ஒரு உறுதியான, தீவிரமான, நிர்ணயமான அடி கொடுப்பதற்குப் போதிய பலம் பெற்றிராத வரை, ஜெர்மன் புரட்சிக்கு உதவுவதற்கு நாம் நம்மை பிரசாரத்தோடு,

கிளர்ச்சியோடு, அளவளாவுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் அல்லது அந்த மோதல் எதிரிக்கு உதவாது என்று நிச்சயமாகத் தெரிந்தால் நாம் அதை ஏற்க வேண்டும்.

நமக்குச் சக்திகள் இல்லை என்று தெரிந்திருந்தும், நம்மிடம் இராணுவம் இல்லை என்று தெரிந்திருந்தும், ஒரு தீவிரமான புரட்சிக் கலக அல்லது இராணுவ மோதலை மேற்கொள்வது ஒரு சூதாட்டமே என்பதும், அது ஜெர்மன் தொழிலாளிகளுக்கு உதவாது, அவர்களின் போராட்டத்தைத் தான் மேலும் கஷ்டமாக்கிவிடும், அவர்களுடைய எதிரிக்கும் நமது எதிரிக்கும் விவகாரங்களை மேலும் சுலபமாக்கிக் கொடுக்கும் என்பதும் எல்லோருக்கும் (வெற்றுச் சொற்களால் போதையேறிப் போயிருப்பவர்களைத் தவிர) தெளிவாகத் தெரியும்.

5

இன்னொரு வாதம் உண்டு. அது சிறுபிள்ளைத்தனமான முறையிலே கேலிக்குரியதாயிருக்கிறபடியால் அதை நானே காதாரக் கேட்டிராவிட்டால் அதை என்றைக்கும் நம்பியிருக்க மாட்டேன்.

''சென்ற அக்டோபரில், நம்மிடம் சக்திகள் இல்லை, துருப்புக்கள் இல்லை, இயந்திரத் துப்பாக்கிகள் இல்லை, தளவாடங்கள் இல்லை என்று சந்தர்ப்பவாதிகள் சொல்லவில்லையா? ஆனால் போராட்டத்தின்போது, வர்க்கத்துக்கு எதிரே வர்க்கமாக நின்று போராட்டம் தொடங்கியபோது இவையாவும் வந்தன. ஜெர்மன் முதலாளிகளை எதிர்த்து ருஷ்யாவின் பாட்டாளிவர்க்கம் நடத்தும் போராட்டத்திலும் அவை வரும், ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் நம் உதவிக்கு வரும்.''

அக்டோபரில் இருந்த நிலவரங்களில், வெகுஜன சக்திகளைப் பற்றி ஒரு சரிநுட்பமான கணக்குப் போட்டிருந்தோம். சோவியத்துக்களுக்கு நடந்த வெகுஜனத் தேர்தல்களின் அனுபவத்திலிருந்து, தொழிலாளர்களிலும் போர்வீரர்களிலும் மிகமிகப் பெரும்பான்மையானவர்கள் ஏற்கெனவே செப்டம்பரிலும் அக்டோபர் முன்பகுதியிலும் நம் தரப்புக்கு வந்தாகி விட்டது என்று நாம் நினைத்தது மட்டுமல்ல, நாம் நிச்சயமாக அறிந்து வைத்திருந்தோம். ஜனநாயக மாநாட்டின்[53] வோட்டுப் பதிவிலிருந்து மட்டும்கூட விவசாயிகளின்

ஆதரவையும் கூட்டணி இழந்துவிட்டது என்று தெரிந்து கொண்டிருந்தோம்—அதற்கு அர்த்தம் நமது லட்சியம் ஏற்கெனவே வெற்றிபெற்று விட்டது என்பதே.

அக்டோபர் புரட்சிக்கலகப் போராட்டத்திற்குரிய புறநிலைவகைப்பட்ட நிலைமைகள் பின்வருமாறு:

(1) போர்வீரர்களின் தலைமேல் அப்போது முதற்கொண்டு எந்தத் தடியும் இருக்கவில்லை—அது 1917 பிப்ரவரியில் ஒழிக்கப்பட்டது (ஜெர்மனி இன்னும் ''தன்னுடைய சொந்த'' பிப்ரவரியை எட்டவில்லை);

(2) தொழிலாளர்களைப் போலவே போர்வீரர்களுக்குப் கூட்டணி போதும் போதுமென்றாகி விட்டது; அதனிடமிருந்து தங்களுடைய உணர்வுபூர்வமான, திட்டமிட்ட, மனப்பூர்வமான வெளியேற்றத்தை அவர்கள் முடித்திருந்தார்கள்.

இதுவே, இது ஒன்றேதான், அக்டோபரில் ''புரட்சிக் கலகத்துக்கான'' கோஷத்தின் சரிநிலையை நிர்ணயித்தது (ஜூலையில் அந்தக் கோஷம் தவறாயிருந்திருக்கும், அன்று நாம் அதை முன்வைக்கவில்லை).

அக்டோபர் சந்தர்ப்பவாதிகளின்[54] தவறு, புறநிலைவகைப்பட்ட முதனிலைமைகள் குறித்து அவர்கள் கொண்ட ''கவலை'' என்பதல்ல (குழந்தைகள்தாம் அப்படி என்று நினைக்கமுடியும்), உண்மைகளைப் பற்றிய அவர்களின் தவறான மதிப்பீடுதான்: அற்ப விஷயங்களைப் பிடியில் பிடித்துக் கொண்டு, சமரசத்தைவிட்டு நம் தரப்புக்கு சோவியத்துக்கள் வந்து விட்டன என்கிற பிரதானமான விஷயத்தை அவர்கள் பார்க்கவில்லை.

ஜெர்மனிக்கு எதிராக (தனது சொந்த ''பிப்ரவரியையோ'', தனது சொந்த ''ஜூலையையோ''—அக்டோபர் பற்றிப் பேசவே வேண்டாம்—இன்னமும் அனுபவிக்காத அதனுக்கு எதிராக), பூர்ஷ்வா-ஏகாதிபத்திய, முடியாட்சி அரசாங்கம் கொண்டுள்ள ஜெர்மனிக்கு எதிராக இராணுவ மோதலோடு 1917 பிப்ரவரியிலிருந்து பக்குவப்படத் தொடங்கி செப்டம்பர்-அக்டோபரில் முற்றிலும் பக்குவம் எய்திய சோவியத்துக்களின் பகைவர்களை எதிர்த்து நடந்த அக்டோபர் புரட்சிக்கலகப் போராட்டத்தை ஒப்பிடுவது என்பது கேலி செய்வதற்கு மட்டுமே உரிய சிறு பிள்ளைத் தனமாகும். இப்படிப் பட்ட அபத்தத்துக்குத்தான் ஆட்களை வெற்றுச் சொற்கள் கொண்டு போய்விடுகின்றன!

## 6

இதோ, இன்னொரு வகையான வாதம். ''ஆனால், ஒரு தனித்த சமாதான ஒப்பந்தம் மூலமாக ஜெர்மனி நம்மைப் பொருளாதாரத் துறையிலே குரல்வளையை நெறித்துக் கொன்றுவிடும்; அது நிலக்கரியையும் தானியத்தையும் எடுத்துக் கொண்டு நம்மை அடிமைப்படுத்திவிடும்.''

மிகவும் விவேகமுள்ள வாதம்தான். அதற்கிணங்க, இராணுவம் இல்லாமலேயே நாம் ஒரு ஆயுதமேந்திய மோதலை ஏற்கவேண்டும்; அந்த மோதல் நிச்சயமாக நமது அடிமைத் தனத்திலே முடிவது மட்டுமின்றி நம்மை மூச்சடைத்துக்கொல்வதிலும், மாற்று எதுவுமின்றி நமது தானியம் பறிக்கப்படுவதிலும், நம்மை செர்பியா அல்லது பெல்ஜியத்தின் நிலையில் வைத்துவிடுவதிலும் போய் முடியும் என்று இருக்கிற போதிலும், நாம் அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்; காரணம், அப்படிச் செய்யாவிட்டால் ஒரு மோசமான ஒப்பந்தம் நமக்குக் கிடைக்கும்; ஜெர்மனி நம்மிடமிருந்து தவணைகளிலே 600 கோடியிலிருந்து 1,200 கோடிவரை கப்பம் எடுத்துக் கொள்ளும், இயந்திரங்களுக்குப் பதிலாகத் தானியத்தை எடுத்துக் கொள்ளும், முதலியன.

ஆஹா, என்ன புரட்சிகரமான வாய்ச்சொல்வீரர்கள்! ஏகாதிபத்தியவாதிகளுக்கு ''அடிமைப்படுவதைப்'' பழித்துரைக்கையில் அடிமைப்படுவதிலிருந்து முழுக்க மீட்சி பெறுவதற்கு ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிப்பது அவசியம் என்கிற உண்மையை அவர்கள் நாணத்துடன் மௌனமாகத் தட்டிக் கழிக்கிறார்கள்.

இன்று நாம் ஒரு புரட்சிகரமான யுத்தத்திற்குத் தயாரான நிலையில் இன்னமும் இல்லை என்பதையும், நமக்கு ஒரு காலம் வரும் என்று காத்திருக்கவேண்டும்' (கேரென்ஸ்கியின் அடிமை முறையை, நமது சொந்த பூர்ஷ்வாவர்க்கத்தின் அடிமை முறையை நாம் ஜூலையிலிருந்து அக்டோபர் வரை சகித்திருந்ததுபோல) என்பதையும், நாம் மேலும் பலமடையும்வரை நாம் காத்திருந்தாக வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்துத்தான் நாம் ஒரு பாதகமான ஒப்பந்தத்தையும் ஒரு தனித்த சமாதானத்தையும் ஏற்றுக்கொண்டு வருகிறோம். எனவே, மிகமிகப் பாதகமான தனித்த சமா

தானத்தைப் பெற ஒரு வாய்ப்பு இருக்குமேயானுல், இன்னமும் பலவீனமாக இருந்துகொண்டிருக்கிற (ஜெர்மனியில் பக்குவப் பட்டுவரும் புரட்சி இன்னமும் நம் உதவிக்கு, ருஷ்யர் களின் உதவிக்கு, வராத காரணத்தால்) சோஷலிஸ்ட் புரட்சி யின் நலன்களை உத்தேசித்து நாம் அதை நிச்சயமாக ஒத்துக் கொண்டு தீர வேண்டும். ஒரு தனித்த சமாதானம் அறவே சாத்தியமில்லாமல் போனுல் மட்டுமே நாம் உடனடியாகப் போராடவேண்டியிருக்கும்—அது சரியான செயல்தந்திரம் என் பதாலல்ல, நமக்கு வேறுவழி இல்லை என்பதால். அது சாத்திய மில்லை என்று நிரூபணமானுல் அந்தந்தச் செயல்தந்திரம் பற்றி சர்ச்சை செய்ய சந்தர்ப்பம் இராது. மிகமிக உக்கிர மான எதிர்ப்பின் தவிர்க்க முடியாத தன்மையைத் தவிர வேறென்றும் இராது. ஆனுல் நம்மிடம் சேர்ந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறவரை நாம் ஒரு தனித்த சமாதானத்தை யும் ஒரு மிகமிகப் பாதகமான ஒப்பந்தத்தையும் தேர்ந்து கொள்ள வேண்டும்; ஏனெனில் அப்போதுங்கூட அது பெல் ஜியத்தின்[55] நிலைமையை விட நூறுமடங்கு மேலானதா யிருக்கும்.

இன்று நாம் இன்னமும் பலவீனமாக இருக்கிறபோதி லும் மாதந்தோறும் நாம் மேலும் மேலும் பலமடைந்து வருகிறோம். இன்னமும் முற்றுகப் பக்குவப்படவில்லை எனி னும் உலக சோஷலிஸ்ட் புரட்சி ஐரோப்பாவில் மாதந்தோ றும் பக்குவப்பட்டு வருகிறது. எனவே... எனவே ஜெர்மன் ஏகாதிபத்தியம் நம்மைவிட வெளிப்படையாக அதிக பல முள்ளதாயிருக்கிற, ஆனுல் மாதாமாதம் பலவீனப்பட்டுவருகிற (ஜெர்மனியில் புரட்சி மெதுவாக, ஆனுல் நிச்சயமாக, பக்குவப்பட்டுவருகிற காரணத்தால்) காலத்தில் நாம் யுத்தத்தை ஏற்கவேண்டும் என்று ''புரட்சிக்காரர்கள்'' (அவர்களிடமிருந்து கடவுள் நம்மைக் காப்பாராக) வாதாடு கிருர்கள்.

உணர்ச்சியின் பாற்பட்ட ''புரட்சிக்காரர்கள்'' பிரமாத மாக வாதாடுகிருர்கள், நேர்த்தியாக வாதாடுகிருர்கள்!

## 7

கடைசி வாதம், மிகவும் ''பகட்டானதும்'' மிகவும் பரவலானதும் ஆன வாதம், இதுதான்: ''இந்த அசிங்கத்தன

மான சமாதானம் ஒரு வெட்கக் கேடாகும், அது லாத்வியா, போலந்து, கூர்லாந்து, லித்துவேனியா ஆகியவற்றைக் காட்டிக்கொடுப்பதாகும்''.

சர்வதேசியத்தின் பாற்பட்ட வாதம் என்று சொல்லிக் கொள்ளப்படுகிற இதை விவரித்து விளக்குவதில் ருஷ்ய பூர்ஷ்வாக்களும் (அவர்களை அண்டிப்பிழைக்கும் கூட்டமான ''நோவிய் லூச்'', ''தேலோ நரோதா'', ''நோவயா ஷிஸ்ன்''[56] கும்பலும்) மிகமிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பதில் வியப்பு ஏது?

இல்லை, அது வியப்பில்லை. ஏனெனில், இந்த வாதம் ஒரு வலை, அதில் ருஷ்ய போல்ஷெவிக்குகளைச் சிக்கவைக்க பூர்ஷ்வாக்கள் புத்தி பூர்வமாக இழுத்துச் செல்கிறார்கள். அதில் போல்ஷெவிக்குகளில் சிலர்—அவர்களுக்குச் சொற்கள் மீது இருக்கும் மோகத்தால்—தங்களை அறியாமலேயே விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

தத்துவத்தின் பார்வைநிலையிலிருந்து இந்த வாதத்தைப் பரிசீலிப்போம்; எதை முதலில் வைப்பது, தேசங்களின் சுய நிர்ணய உரிமையையா, சோஷலிஸத்தையா?

சோஷலிஸந்தான் முதலில் வைக்கப்பட வேண்டும்.

தேசங்களின் சுயநிர்ணய உரிமையை மீறுவதின் காரணத்தால் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு விழுங்கப்படுவதையும் வெளிப்படையாக ஏகாதிபத்தியம் அதிகமாகப் பலம் பெற்றும் வெளிப்படையாக சோவியத் குடியரசு பலவீனமாயும் இருக்கிற நேரத்தில் ஏகாதிபத்தியத்தின் அடிகளுக்கு அதைத் திறந்துகாட்டுவதையும் அனுமதிக்க முடியுமா?

இல்லை, அது அனுமதிக்கத் தக்கதல்ல. அது பூர்ஷ்வா அரசியலாகும், சோஷலிஸ்ட் அரசியலாகாது.

மேலும், போலந்து, லித்துவேனியா, கூர்லாந்து ''நமக்குத்'' திருப்பிக் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனையின்பேரில் ஏற்படும் சமாதானம் என்பது குறைச்சலான மானக்கேடாகி விடுமா, கட்டாயப் பிரதேச இணைப்புச் சமாதானம் என்பதில் குறைந்து விடுமா?

ருஷ்ய பூர்ஷ்வா நபரின் பார்வை நிலையிலிருந்து பார்த்தால், அது அப்படித்தான் ஆகும்.

சோஷலிஸ்ட்-சர்வதேசியவாதியின் பார்வை நிலையிலிருந்து பார்த்தால், அது அப்படி ஆகாது.

ஏனெனில், ஜெர்மன் ஏகாதிபத்தியம் போலந்துக்கு விடுதலை அளித்தால் (இதை ஒரு சமயத்தில் ஜெர்மனியில் சில பூர்ஷ்வாக்கள் விரும்பினுர்கள்) அது முன்னைவிட அதிகமாக செர்பியா, பெல்ஜியம், முதலியவற்றைக் கசக்கிப்பிழியும்.

ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கத்தினர் ''அசிங்கத்தனமான'' சமாதானத்தைப் பற்றி ஒப்பாரி வைக்கும்போது, அவர்கள் சரியாகத்தான் தங்களுடைய வர்க்க நலன்களை வெளியிடுகிருர்கள்.

ஆனுல், சில போல்ஷெவிக்குகள் (சொற்களின் வியாதியால் பீடிக்கப்பட்டு) அந்த வாதத்தைத் திருப்பிச் சொன்னுல், அது வருத்தமான விஷயமே.

ஆங்கிலோ-பிரெஞ்சு பூர்ஷ்வாக்களின் நடத்தை சம்பந்தப்பட்ட உண்மைகளைப் பரிசிலியுங்கள். ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் இன்று நம்மை இழுத்துச் செல்வதற்குத் தங்களால் ஆனதையெல்லாம் அவர்கள் செய்து வருகிருர்கள், நமக்கு லட்சக் கணக்கிலே நன்மைகள், பூட்ஸுகள், உருளைக்_கிழங்குகள், பீரங்கிக்குண்டுகள், ரெயில்வே எஞ்சின்கள் (கடனுகத்தான்... அது ''அடிமைத்தனம்'' இல்லையாம், பயப்படாதீர்கள்! அது ''வெறுமே'' கடன்தானும்!) தர முன்வருகிருர்கள். நாம் ஜெர்மனியை எதிர்த்து இன்று போராட வேண்டுமென்று விரும்புகிருர்கள்.

இதை ஏன் அவர்கள் விரும்புகிருர்கள் என்பது வெள்ளிடைமலை. அவர்கள் அதை விரும்பக் காரணம், முதன் முதலாக, ஜெர்மன் இராணுவங்களில் ஒரு பகுதியை நாம் சமாளிக்க வேண்டும் என்பது. இரண்டாவதாக, ஜெர்மன் ஏகாதிபத்தியத்தோடு அகாலமான மோதலால் சோவியத் அதிகாரம் மிக மிகச் சுளுவாக நொறுங்கி விழக்கூடும் என்பதே.

ஆங்கிலோ-பிரெஞ்சு பூர்ஷ்வா வர்க்கத்தினர் நமக்கு ஒரு வலை விரிக்கிருர்கள்: தயவு செய்து இப்பொழுது போய்ச் சண்டைபோடுங்கள், எங்களுக்கு ஆதாயம் பிரமாதமாயிருக்கும். ஜெர்மானியர்கள் உங்களைக் கொள்ளையடிப்பார்கள், கிழக்கே ''இலாபம் சம்பாதிப்பார்கள்'', மேற்கு நாடுகளோடு மலிவான பேரங்களுக்கு ஒத்துக்கொள்வார்கள், அதற்கு மேலாக, சோவியத் ஆட்சி ஒழித்தெறியப்பட்டு விடும் ... போல்ஷெவிக் ''நேச சக்திகளே!'' தயவு செய்து சண்டைபோடுங்கள், நாங்கள் உங்களுக்கு உதவுகிருேம்!

நமது ''இடதுசாரி'' போல்ஷெவிக்குகள் (அவர்களிட மிருந்து நம்மைக் கடவுள் காப்பாராக) மிகமிகப் புரட்சி கரமான சொற்களை உச்சரித்துக் கொண்டு அந்த வலையிலே போய் விழுகிறார்கள்....

உண்மைதான், குட்டிபூர்ஷ்வா மனப்பாங்கினுடைய சாயல்களின் வெளிப்படுகளில் ஒன்று, புரட்சிகரமான வாய்ச் சொற்களுக்குப் பணிந்துவிடுவதேயாகும். இது ஒரு பழைய உண்மை, மிகவும் அடிக்கடி திரும்பப் புதுப்பிக்கப்படும் பழங்கதை....

## 8

*1907,* கோடை காலத்தில் நமது கட்சிகூடப் புரட்சிகர மான வாய்ச்சொல்லின் வியாதியை அனுபவித்தது; அது, சில அம்சங்களில், இதையே ஒத்திருந்தது.

செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலும் மாஸ்கோவிலும் உள்ள அநேகமாக எல்லா போல்ஷெவிக்குகளுமே மூன்றாவது டூமாவை பகிஷ்கரிப்பதற்குச் சாதகமாக இருந்தார்கள்; ஒரு புற நிலைவகைப்பட்ட பகுப்பாய்வுக்குப் பதிலாக ''உணர்ச்சியால்'' அவர்கள் வழிகாட்டப்பட்டனர்; ஒரு வலையில் போய்விழுந்தனர்.

அந்த வியாதி மறுபடியும் பிடித்துக் கொண்டுவிட்டது. நேரம் முன்னைவிடக் கஷ்டமானது. பிரச்சினை லட்சம் மடங்கு அதிக முக்கியமானது. இப்படிப்பட்ட நேரத்தில் நோய் கொள்வது புரட்சி நாசமாவதற்கு இடங்கொடுப்ப தாகும்.

புரட்சிகரமான வாய்ச்சொல்லை எதிர்த்து நாம் போராடித் தீர வேண்டும், நாம் போராடியாக வேண்டும், ''புரட்சிகரமான யுத்தத்தைப் பற்றிய ஒரு புரட்சிகரமான வாய்ச்சொல் புரட்சியை நாசப்படுத்தியது'' என்கிற கசப் பான உண்மையை மக்கள் ஏதாவதொரு எதிர்காலத்தில் நம்மைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதற்காக நாம் நிச்சயமாகப் போராடித் தீர வேண்டும்.

நூல்திரட்டு, தொகுதி *35*

*''பிராவ்தா'' இதழ் 31,*
*1918, பிப்ரவரி 21 (8)*

கையொப்பம்: கார்ப்போவ்

# விநோதமானதும் உருமுரணானதும்

நமது கட்சியின் மாஸ்கோ பிரதேசத்தின் தலைமைக் குழு 1918 பிப்ரவரி 24 தேதியன்று நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் மத்தியக் கமிட்டி மீது நம்பிக்கையின்மையை வெளியிட்டிருக்கிறது, ''ஆஸ்திரியாவுடனும் ஜெர்மனியுடனும் செய்துள்ள சமாதான ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை அமுலாக்குவதோடு சம்பந்தப்படுத்தப்பெறும்'' அதன் முடிவுகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டது, மேலும் அந்தத் தீர்மானத்துக்கு உள்ள ஒரு ''விளக்கக் குறிப்பில்'' அது ''மிகநெருங்கிய எதிர்காலத்தில் கட்சியில் ஒரு பிளவு ஏற்படுவது அநேகமாகத் தவிர்க்க முடியாததாகும் என்று கருதுகிறது'' என்று பிரகடனப்படுத்தி இருக்கிறது.*

இதிலெல்லாம் உருமுரணானதாக எதுவுமில்லை, விநோதமானதுங்கூட எதுவுமில்லை. ஒரு தனித்த சமாதானத்தைப் பற்றிய பிரச்சினை மீது மத்தியக் கமிட்டியோடு தீட்சண்யமாகக் கருத்துவேறுபாடு கொள்ளும் தோழர்கள் மத்தியக்

---

* தீர்மானத்தின் முழு வாசகம் பின்வருமாறு: ''மத்தியக் கமிட்டியின் நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்தபிறகு, ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியின் மாஸ்கோ பிரதேசத்தின் தலைமைக்குழு, மத்தியக் கமிட்டியின் அரசியல் கொள்கை, உள்ளமைப்பு ஆகியவற்றை உத்தேசித்து அதன்மீது நம்பிக்கையின்மையை வெளியிட்டது. கிடைக்கிற முதல் சந்தர்ப்பத்தில் ஒரு புதிய மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அது வற்புறுத்தும். மேலும், ஆஸ்திரியாவுடனும் ஜெர்மனியுடனும் செய்துள்ள சமாதான ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை அமுலாக்குவதோடு சம்பந்தப்படுத்தப்பெறும் அதனுடைய முடிவுகளுக்கு முற்றாகக் கீழ்ப்படியும் கடமை தனக்கு இல்லை என்றும் மாஸ்கோ பிரதேசத் தலைமைக்குழு கருதுகிறது.'' இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கமிட்டியைத் திட்சண்யமாகக் கண்டிப்பதும், ஒரு பிளவு தவிர்க்க முடியாதது என்கிற தங்களுடைய துணிபை வெளியிடுவதும் முற்றிலும் இயல்பானதேயாகும். அதெல்லாம் கட்சி உறுப்பினர்களின் மிகமிக நியாயமான உரிமையாகும், அது முற்றுகப் புரிந்து கொள்ளத் தக்கதே.

ஆனல் விநோதமானது, உருமுரணனது இதோ இருக்கிறது. தீர்மானத்துடன் ஒரு ''விளக்கக் குறிப்பு'' இணைக்கப் பெற்றுள்ளது. அதன் முழு வாசகம் பின்வருமாறு:

''மிக நெருங்கிய எதிர்காலத்தில் கட்சியில் பிளவு ஏற்படுவது அநேகமாகத் தவிர்க்க முடியாததாகும் என்று மாஸ்கோ பிரதேசத்தின் தலைமைக் குழு கருதுகிறது. மேலும், தனித்த சமாதானத்தைச் செய்து கொள்வதை ஆதரித்துக் கோருபவர்களையும் கட்சியிலுள்ள எல்லா மித வாத சந்தர்ப்பவாதிகளையும் ஒருங்கே சமமாக எதிர்க்கும் எல்லா முரணற்ற புரட்சிகரமான கம்யூனிஸ்டுகளும் ஒன்று படுவதற்கான குறிக்கோளைத் தனக்கென்று நிறுவிக் கொள்கிறது. உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, இப்போது வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக்கொண்டுவருகிற சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதே என்று நாங்கள் கருதுகிறோம். நமது முதன்மையான கடமை சோஷலிஸ்ட் புரட்சியின் கருத்துக்களை எல்லாப் பிற நாடுகளுக்கும் பரப்புவதென்றும், தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தை உண்டாக்குவதென்றும், ருஷ்யாவில் பூர்ஷ்வா எதிர்ப்புரட்சியை ஈவிரக்கமின்றி நசுக்குவதென்றும் முன்போலவே நாங்கள் சாதிக்கிறோம்.''

இந்த வாசகத்தில் நாம் அழுத்தம் கொடுத்திருக்கும் சொற்கள்தாம் விநோதமானவை, உருமுரணனவை.

இந்தச் சொற்களிலேதான் விஷயத்தின் கரு அடங்கியிருக்கிறது.

தீர்மானத்தின் ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கொள்கை முழுவதையும் இந்தச் சொற்கள் ஒரே அபத்தமாக்கி விடுகின்றன. இந்தச் சொற்கள் அவர்களது தவற்றின் வேரை அசாதாரணமான தெளிவுடன் அம்பலப்படுத்துகின்றன.

''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து,... சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப்ப பயனுள்ளதே....'' அது விநோதமானது, ஏனெனில் முதனிலைகளுக்கும் முடிவுக்கும் தொடர்புகூட

இல்லை. ''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, சோவியத் ஆட்சியின் இராணுவத் தோல்வியை ஒப்புக் கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதே''—இப்படிப்பட்ட ஒரு கூற்று சரியாகவோ, தப்பாகவோ இருக்கலாம், ஆனால் அது விநோதமானது என்று சொல்லியிருக்க முடியாது. இது முதல் விஷயம்.

இரண்டாவது விஷயம்: சோவியத் ஆட்சி ''இப்போது வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக்கொண்டுவருகிறது''. இது விநோதமானது மட்டுமல்ல, சுத்த உருமுரணானதுங்கூட. ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே சிக்கலில் சிக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. இந்தச் சிக்கலை நாம் விடுவித்தாக வேண்டும்.

முதல் பிரச்சினையைப் பொறுத்தவரை, உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து யுத்தத்தில் தோல்வியடையும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதாயிருக்கும்—அது சோவியத் ஆட்சியை இழப்பதில்கொண்டு போய்விடும், வேறு சொற்களில் சொல்வதென்றால் ருஷ்யாவில் பூர்ஷ்வா வர்க்கம் வெற்றிபெறுவதில் கொண்டு போய் விடும் என்பதே ஆசிரியர்களின் கருத்தாக இருக்கும் போலும். இந்தக் கருத்துக்குக் குரல் கொடுப்பதின் மூலம் நான் எனது 1918, ஜனவரி 8ல் எழுதிய, 1918, பிப்ரவரி 24ல் ''பிராவ்தாவில்'' பதிப்பிக்கப்பட்ட) ஆய்வுரையில் சொன்னதின், அதாவது, ஜெர்மனி வைத்த சமாதான ஷரத்துக்களை ஏற்க மறுப்பது ருஷ்யாவின் தோல்வியிலும் சோவியத் ஆட்சி வீழ்த்தப்படுவதிலும் கொண்டுபோய்விடும் என்று சொன்னதின், உண்மையை ஆசிரியர்கள் மறைமுகமாக ஒத்துக் கொள்கிறார்கள்.

எனவே, la raison finit toujours par avoir raison — உண்மை எப்போதும் வெல்லும்! எனது ''அதிதீவிரவாத'' எதிர்ப்பாளர்கள், பிளவுபடுத்தப் பயமுறுத்துகிற மாஸ்கோக்காரர்கள்—ஒரு பிளவைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசும் நிலைக்கு வந்துவிட்டிருக்கிற படியாலேயே—தங்களுடைய ஸ்தூலமான காரணங்களை, புரட்சிகரமான யுத்தத்தைப் பற்றிப் பொதுப்படையான வாய்ச்சொல் வீச்சோடு நிறுத்திக் கொள்கிற ஆசாமிகள் மௌனத்திலே தட்டிக் கழிக்க விரும்பும் அதே காரணங்களைப் பற்றி அதே அளவுக்கு வெளிப்

படையாகப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். என்னுடைய ஆய்வுக் கட்டுரையின் வாதங்களின் அசல் சாராம்சமே என்னவெனில் (இதை என்னுடைய 1918, ஜனவரி 7ம் தேதிய ஆய்வுக்கட்டுரையைக் கவனமாகப் படிக்க அக்கறை காட்டுகிற எவனும் பார்க்க கூடும்) இந்த மிகமிகக் கடுமையான சமாதானத்தை இன்றே, உடனடியாக ஏற்றுக்கொண்டு தீரவேண்டும், அதே சமயத்தில் ஒரு புரட்சிகரமான யுத்தத்துக்குத் தீவிரமாகத் தயாரிப்புச் செய்ய வேண்டும் (மேலும், இப்படிப்பட்ட தீவிரமான தயாரிப்புகளின் நலன்களுக்கென்றே அதை ஏற்கவேண்டும்) என்பதே. ஒரு புரட்சிகரமான யுத்தம் பற்றிப் பொதுப்படையான வாய்ச்சொல் வீச்சோடு நிறுத்திக்கொள்கிற ஆசாமிகள் என் வாதங்களின் அசல் சாராம்சத்தைப் புறக்கணித்தார்கள், அல்லது காணத் தவறினார்கள், அல்லது காண விரும்பவில்லை. என் வாதங்களின் சாராம்சம் பற்றி மேற்கொண்ட ''மௌனம் எனும் சதியை'' உடைத்து விட்டதற்கு எனது ''அதிதீவிரவாத'' எதிர்ப்பாளர்களாகிய மாஸ்கோக்காரர்களுக்குத்தான் என் நெஞ்சின் அடியாழத்திலிருந்து இப்போது நான் நன்றி தெரிவிக்க வேண்டியிருக்கிறது. மாஸ்கோக்காரர்கள்தாம் அவற்றிற்கு முதன்முதலில் பதில் கொடுத்தவர்கள்.

அவர்களின் பதில் என்ன?

அவர்களின் பதில், என்னுடைய ஸ்தூலமான வாதத்தின் சரிநிலையை ஒத்துக் கொள்வதேயாகும். ஆம், மாஸ்கோக்காரர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், நாம் இப்போது ஜெர்மானியர்களை எதிர்த்துச் சண்டை போட்டால் நிச்சயமாகத் தோற்கடிக்கப்படுவோம்*. ஆம், இந்தத் தோல்வி நிச்சய

* எப்படியிருந்தாலும் சண்டை போடுவதைத் தவிர்ப்பது சாத்தியமில்லை என்கிற எதிர்வாதத்தைப் பொறுத்தவரை, உண்மைகள் அதற்குப் பதில் கொடுத்துள்ளன: ஜனவரி 8ம் தேதி எனது ஆய்வுக்கட்டுரை படிக்கப் பெற்றது; ஜனவரி 15ம் தேதி வாக்கில் நமக்குச் சமாதானம் கிடைத்திருக்கக் கூடும். நிச்சயமாக ஒரு ஒய்வு உறுதிப்படுத்தப் பெற்றிருக்கும் (மேலும் நமக்கு ஒரு மிகமிகக் குறுகிய கால ஒய்வுகூட மிகமிகப் பிரம்மாண்டமான குறிபொருளுடையதாக இருந்திருக்கும்—பௌதிக ரீதியிலும் சரி, தார்மீக

மாக சோவியத் ஆட்சியின் வீழ்ச்சியில் கொண்டுபோய்விடும்.

எனது வாதங்களின் சாராம்சத்திற்கு எதிராக, அதாவது யுத்தத்தை உடனே ஏற்றுக் கொள்வதாயிருந்தால் யுத்தத்தின் நிலைமைகள் எப்படி இருக்கும் என்பது பற்றிய என்னுடைய ஸ்தூலமான கூற்றுக்கு எதிராக மேற்கொண்ட ''மௌனம் எனும் சதியை'' உடைத்துவிட்டதற்காகவும் எனது ஸ்தூலமான கூற்றின் சரிநிலையைப் பயமின்றி ஒத்துக் கொண்டதற்காகவும் மீண்டும் மீண்டும் எனது ''அதிதீவிர வாத'' எதிர்ப்பாளர்களாகிய மாஸ்கோக்காரர்களுக்கு என் நெஞ்சின் அடியாழத்திலிருந்து நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும், எந்த ஆதாரங்களின் மீது என்னுடைய வாதங்கள்—அவை சரி என்று ஏற்கும்படி மாஸ்கோக்காரர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்—நிராகரிக்கப்படுகின்றன?

உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து சோவியத் ஆட்சியின் இழப்பை நாம் கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிற ஆதாரங்களின் மீது.

உலகப் புரட்சியின் நலன்களுக்கு இது ஏன் தேவைப்பட வேண்டும்? விஷயத்தின் கரு, எனது வாதங்களைத் தோற்கடிக்க விரும்புகிறவர்கள் வாதம் புரிவதிலுள்ள அசல் சாராம்சம் இதுதான். மேலும், இந்த விஷயத்தின் மீது, இந்த மிகமிக முக்கியமான, அடிப்படையான, கருப்பொருளான விஷயத்தின் மீதுதான், தீர்மானத்திலோ விளக்கக் குறிப்பிலோ ஒரு வார்த்தையேனும் சொல்லப்படவில்லை. எல்லோருக்கும் தெரிந்திருக்கிற, விவாதத்திற்கிடமற்ற விஷயத்தைப் பற்றி, ''ருஷ்யாவில் பூர்ஷ்வா எதிர்ப்புரட்சியை ஈவிரக்கமின்றி நசுக்குவது'' பற்றியும் (சோவியத் ஆட்சியை இழப்பதில் கொண்டுபோய்விடுகிற ஒரு கொள்கையின் வழிமுறைகளையும் சாதனங்களையும் பயன்படுத்தியா?), கட்சியிலுள்ள எல்லா மிதவாத சந்தர்ப்பவாதிகளையும் எதிர்ப்பது பற்றியும், பேசுவதற்கு இந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்களுக்கு நேரமும் இடமும் கிடைத்தது. ஆனால் எது உண்மையிலே

ரீதியிலும் சரி; ஏனெனில் ஜெர்மானியர்கள் ஒரு புதிய யுத்தத்தைப் பிரகடனப் படுத்த வேண்டியதாயிருந்திருக்கும்),—புரட்சிகரமான வாய்ச்சொல் வீச்சு மட்டும் இராதிருந்தால்.

விவாதத்திற்குரியதாயுள்ளதோ, எது சமாதானத்தின் எதிர்ப்பாளர்களின் நிலையின் சாராம்சத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறதோ, அதைப் பற்றி—ஒரு வார்த்தை இருக்க வேண்டுமே, கிடையாது!

விநோதம்தான். மிகமிக விநோதம்தான். இந்த விஷயத்தில் தாங்கள் குறிப்பாகப் பலவீனமாயிருக்கிறதை உணர்ந்ததினாலேதான் இதைப் பற்றி இந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் மௌனம் சாதித்தார்களோ? ஏன் (இது உலகப் புரட்சியின் நலன்களுக்குத் தேவை) என்பதை வெளிப்படையாகச் சொல்வதென்றால் அதற்கு அநேகமாக அர்த்தம் தங்களை அம்பலப்படுத்திக் கொண்டதாகிவிடுமே....

அது எப்படியிருந்தாலும், தீர்மானத்தின் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியிருக்கக் கூடும் வாதங்களை நாம் தேடிப் பிடிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகளோடு எந்தச் சமாதானமும் செய்து காள்வதை உலகப் புரட்சியின் நலன்கள் தடை செய் ன்றன என்று ஒருக்கால் ஆசிரியர்கள் நம்புகிறார்களோ? பெத்ரோகிராத் கூட்டங்கள் ஒன்றில், சமாதானத்தின் எதிர்ப்பாளர்களில் சிலர், இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள், ஆனால் ஒரு தனித்த சமாதானத்தை ஆட்சேபித்தவர்களில் அற்பச் சிறுபான்மையினர்தாம் அதை ஆதரித்தார்கள். இந்த அபிப்பிராயம், பிரேஸ்த் பேச்சுவார்த்தைகளின் சந்தர்ப்பப் பயனை மறுப்பதிலும், போலந்து, லாத்வியா, கூர்லாந்து திருப்பிக் கொடுக்கப்படுகிற நிலை கூடவே தொடர்ந்து வரும் சமாதானத்தையும் மறுப்பதிலும் கொண்டுபோய் விடும் என்பது தெளிவு. இந்தக் கருத்து தவறு என்பது (எடுத்துக்காட்டாக, பெத்ரோகிராத் சமாதான எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையினர் அதை நிராகரித்தனர்) பட்டப்பகல் போல் தெளிவானது. இந்தப் பார்வை நிலையிலிருந்து பார்த்தால், ஏகாதிபத்திய வல்லரசுகளால் சூழப்பட்டுள்ள ஒரு சோஷலிஸ்ட் குடியரசு எந்தப் பொருளாதார ஒப்பந்தங்களையும் செய்யமுடியாது, சந்திர மண்டலத்துக்குப் பறந்து போனாலன்றி நிலவவும் முடியாது.

உலகப் புரட்சியின் நலன்களுக்கு அது உந்தப்படுவது தேவையாயிருக்கிறது என்றும், அப்படி அது உந்தப்படுவது யுத்தத்தால் மட்டுமே முடியும் என்றும், சமாதானத்தால்

என்றைக்கும் முடியாது, ஏனெனில் ஏகாதிபத்தியம் ''நியாயப் படுத்தப்படுகிறது'' என்கிற ஒரு அபிப்பிராயத்தை மக்களிடம் அது உண்டாக்கக் கூடும் என்றும் ஒருக்கால் ஆசிரியர்கள் நம்புகிருர்களோ? இப்படிப்பட்ட ''தத்துவம்'' மார்க்ஸீயத்துக்கு முற்ருக மாறுபட்டது, ஏனெனில் புரட்சிகளை ''உந்துவதை'' எப்போதும் மார்க்ஸீயம் எதிர்த்து வந்திருக்கிறது; புரட்சிகள் அவற்றை உற்பத்தி செய்கிற வர்க்கமுரண்பாடுகளின் மிகுந்துகொண்டே போகும் கூர்மையிலிருந்து வளர்கின்றன. அப்படிப்பட்ட ஒரு தத்துவம், ஆயுதமேந்திய எழுச்சி என்கிற போராட்ட வடிவம் எப்போதும் எல்லா நிலைமைகளிலும் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒன்று என்கிற கருத்துக்குச் சமமாகும். ஆனல், யதார்த்தத்திலோ, உலகப் புரட்சியின் நலன்களுக்குத் தேவைப்படுவது என்னவெனில், இந்த நாட்டில் பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூக்கியெறிந்துவிட்ட பிறகு சோவியத் ஆட்சி அந்த உலகப் புரட்சிக்கு உதவி புரிய வேண்டும், ஆனல் அது தன்னுடைய சக்திக்கு ஏற்றவாறு உதவியின் வடிவத்தைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. அதே புரட்சி தன் சொந்த நாட்டில் தோல்வியடையும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வதன் மூலமாக உலக ரீதியிலே சோஷலிஸ்ட் புரட்சிக்கு உதவுவது என்பது ''உந்துவது'' பற்றிய தத்துவத்திலிருந்து கூடத் தொடர்கிற ஒரு கருத்தல்ல.

ஜெர்மனியில் ஏற்கெனவே புரட்சி தொடங்கிவிட்டது என்றும், அது ஏற்கெனவே ஒரு பகிரங்கமான, தேச ரீதியான உள்நாட்டுப் போரின் கட்டத்தை எட்டிவிட்டது என்றும், எனவே ஜெர்மன் தொழிலாளர்களுக்கு உதவுவதில் நமது பலத்தைச் செலவிடவேண்டும், ஒரு நிர்ணயமான போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கிவிட்டுக் கடுமையாக நெருக்கப்பட்டு வருகிற ஜெர்மன் புரட்சியைக் காப்பாற்றுவதற்காக நாமே சாக வேண்டும் (''சோவியத் ஆட்சியை இழப்பது'') என்றும் ஒருக்கால் அந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் நம்புகிருர்களோ? இந்தத் தத்துவத்தின்படி, நாம் சாகிற அதே நேரத்தில் நாம் ஜெர்மன் புரட்சி எதிர்ப்புச் சக்திகளின் ஒரு பகுதியை வேறுபக்கம் திருப்பிவிட்டவர்களாவோம், அதன் மூலமாக ஜெர்மன் புரட்சியைக் காப்பாற்றியவர்களாவோம்.

இந்த முதனிலைகள் இருப்பதாக இருந்தால், தோல்வியின் சாத்தியப்பாட்டையும், சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டையும் ஒப்புக்கொள்வது (தீர்மானத்தின் ஆசிரியர்கள் சொல்வதுபோல) ''சந்தர்ப்பப் பயனுள்ளது'' மட்டுமல்ல, நேரான கடமையும் ஆகும் என்பது முற்றிலும் சிந்திக்கத்தக்க விஷயமே. ஆனால் இந்த முதனிலைகள் இல்லை என்பது வெளிப்படை. ஜெர்மன் புரட்சி பக்குவப்பட்டு வருகிறது. ஆனால் அது வெடிக்கும் நிலையை ஜெர்மனியில் எட்டவில்லை, ஜெர்மனியில் உள் நாட்டுப் போர் நிலையை எட்டவில்லை என்பது வெளிப்படை. ''சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வதின்'' மூலம் நிச்சயமாக நாம் ஜெர்மன் புரட்சி பக்குவப்படுவதற்கு உதவ மாட்டோம், அதைத் தடங்கல்தான் செய்பவர்களாவோம். ஜெர்மன் பிற்போக்குத்தான் நாம் உதவுவோம், அதற்கு உகந்த மாதிரி நடந்து கொள்பவர்களாவோம், ஜெர்மனியில் சோஷலிஸ்ட் இயக்கத்துக்குத் தடங்கல் செய்வோம், சோஷலிஸத்தின் பக்கம் இன்னமும் வராத பெருந்திரளான ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினரும் அரைப்பாட்டாளி வர்க்கத்தினரும் சோஷலிஸத்தை வெறுத்து ஒதுங்கி விடும் படிச் செய்வோம், ஏனென்றால் 1871ல் பாரிஸ் கம்யூனின் தோல்வியைக் கண்டு பிரிட்டிஷ் தொழிலாளர்கள் பயந்து போனது போல், அவர்கள் சோவியத் ருஷ்யாவின் தோல்வியைக் கண்டு பயந்து போவார்கள்.

விரும்பிய மட்டும் எப்படியெப்படியெல்லாம் திருப்பியும் புரட்டியும் பார்த்தாலும் சரி, ஆசிரியர்களின் வாதங்களில் தர்க்கம் ஏதும் இல்லவே இல்லை. ''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக் கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதே'' என்கிற கருத்தைத் தாங்கி நிறுத்துவதற்குப் புத்திசாலித்தனமான வாதங்கள் ஏதுமில்லை.

''இப்போது சோவியத் ஆட்சி வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக் கொண்டு வருகிறது''—இதுவே, நாம் பார்த்தது போல, மாஸ்கோத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் பிரகடனப்படுத்த முன்வந்த உருமுரணான கருத்து.

ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் நம்மை நஷ்ட ஈடு தருமாறு செய்யப் போகிறார்கள், ஜெர்மனிக்கு எதிராகக்

கிளர்ச்சியும் பிரசாரமும் செய்வதைத் தடை செய்வார்கள் என்பதால் சோவியத் ஆட்சி எல்லாக் குறிபொருளையும் இழக்கிறது, ''வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிவிடுகிறது''—இதுவே தீர்மானத்தின் ஆசிரியர்களின் ''தர்க்கப் போக்காக'' இருக்கலாம். ''இருக்கலாம்'' என்று நாம் சொல்வதற்குக் காரணம், ஆசிரியர்கள் தங்களுடைய ஆய்வுரைக்கு ஆதரவாகத் தெளிவாகவோ குறிப்பானதாகவோ எதையும் வைக்கவில்லை.

ஆழ்ந்த, நிர்க்கதியான நிராசை, முற்றான நம்பிக்கைக் குலைவு—இவை சோவியத் ஆட்சியின் குறிபொருள் வெறுமனே சம்பிரதாயச் சடங்கே ஆகும், சோவியத் ஆட்சியை இழப்பது சாத்தியமாவதற்கு இடங்கொடுக்கிற செயல்தந்திரங்கள் அனுமதிக்கத்தக்கவையே என்கிற ''தத்துவத்தின்'' முழுச் சாராம்சமும் இதுதான். எப்படியும் மீட்சியே கிடையாதாகையால், சோவியத் ஆட்சியும் ஒழிந்து போகட்டுமே—இந்த உணர்ச்சிதான் இந்த உருமுரணான தீர்மானத்தைப் போடச் செய்தது. சில சமயங்களில் இப்படிப்பட்ட கருத்துக்களுக்குப் போர்த்தப்படுகிற ''பொருளாதார'' வாதங்கள் எனப்பட்டவையும் அதே நிர்க்கதியான நிராசையைத்தான் வெளிக்காட்டுகின்றன: கொஞ்ச நஞ்சமான கப்பம் அல்ல, இத்தகைய பெரிய அளவில் கப்பம் வசூலிக்கப்பட முடியுமென்றால் அது என்ன சோவியத் குடியரசு? என்பது உட்கிடை.

நிராசை தவிர வேறில்லை: எப்படியும் நாம் சாவோம்!

ருஷ்யா அகப்பட்டுக் கொண்டிருக்கிற படுமோசமான நிலைமையில் இது மிகவும் புரிந்து கொள்ளத்தக்க ஒரு மனோநிலைதான். ஆனால் இது உணர்வுபூர்வமான புரட்சிக்காரர்களிடையே ''புரிந்து கொள்ளத்தக்க'' விஷயமல்ல. அதன் குணக்குறியான விஷயம் என்னவென்றால், இங்கே மாஸ்கோக்காரர்களின் கருத்துக்கள் அபத்த நிலைக்குத் தாழ்த்தப்பட்டுப் போவதேயாகும். 1793ன் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய ஆதாயங்கள்—குடியரசும் ஜனநாயகமும்—வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகி வருகின்றன என்றும் குடியரசை இழக்கும்படியான சாத்தியப்பாட்டை ஒப்புக்கொண்டாக வேண்டுமென்றும் என்றைக்கும் சொல்லியிருக்கமாட்டார்கள். அவர்கள் நெஞ்சிலே நிராசையை நிறைத்துக்

கொண்டிருந்தவர்களல்ல, வெற்றி மீதுள்ள நம்பிக்கையை நிறைத்துக் கொண்டிருந்தவர்கள். ஒரு புரட்சிகரமான யுத்தத்துக்கு அறைகூவல் விடுப்பதும் அதே நேரத்தில் ஒரு அதிகாரபூர்வமான தீர்மானத்தில் ''சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது'' பற்றிப் பேசுவதும் தன்னைத்தானே முழுக்க முழுக்க அம்பலப்படுத்திக் கொள்வதாகும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், நெப்போலியன் யுத்தங்கள் நடந்த காலத்தில், 1918ல் ருஷ்யா அனுபவித்து வருகிறதைவிட அதிகமாகப் பிரஷ்யாவும் வேறு பல நாடுகளும் ஒப்புவமையற்ற, அளவற்ற, எவ்வளவோ கஷ்டங்களையும், தோல்வியின் சுமைகளையும், பராதீனத்தையும், அவமானத்தையும், நாடு பிடித்தவனின் ஒடுக்கு முறையையும் அனுபவித்தன. என்ற போதிலும், நாம் இன்று மிதிக்கப்பட முடிகிறதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகப் பலமாக நெப்போலியனின் இராணுவ பூட்ஸுகள் தங்களை மிதித்துத் துவைத்த காலத்தில் பிரஷ்யாவின் தலைசிறந்த மனிதர்கள் நம்பிக்கை குலைந்து நிற்கவில்லை; தங்களுடைய தேசிய அரசியல் ஸ்தாபனங்கள் ''வெறுமனே சம்பிரதாயச் சடங்கே'' என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் கை சோர்ந்து நிற்கவில்லை; அல்லது ''எப்படியும் நாம் சாவோம்'' என்கிற உணர்ச்சி வசப்படவும் இல்லை. பிரேஸ்த் ஒப்பந்தத்தைவிட எவ்வளவோ எல்லையற்ற கடுமையான, மிருகத்தனமான, அவமானகரமான, ஒடுக்குமுறையான சமாதான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்கள்; அதன் பிறகு உரிய தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கவும் அறிந்திருந்தார்கள்; நாடு பிடித்தவனின் நுகத்தடியை உறுதியாகச் சகித்துக் கொண்டார்கள்; மீண்டும் போராடினுர்கள்; மீண்டும் நாடு பிடிக்கிறவனின் நுகத்தடியின் கீழ் வந்தார்கள்; மீண்டும் அசிங்கத்திலும் அதி அசிங்கத்தனமான சமாதான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்கள்; மீண்டும் நிமிர்ந்தெழுந்தார்கள்; கடைசியிலே தங்களை விடுதலை செய்து கொண்டார்கள் (அதிக பலமுள்ள, தங்களுக்குள் போட்டி போட்டுக் கொள்கிற, நாடுபிடிக்கிறவர்களிடையேயுள்ள சச்சரவுகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அல்ல).

நம் வரலாற்றிலும் இது ஏன் திரும்ப நடக்கக் கூடாது?

நாம் ஏன் நம்பிக்கைக் குலேவுக்குப் பணிந்து போக வேண்டும்? ''சோவியத் ஆட்சி வெறுமனே சம்பிரதாயச் சடங்கே ஆகி வருகிறது'' என்று சொல்கிற தீர்மானங்களே—அட தெய்வமே, மிக மிக வெட்கக் கேடான சமாதானத்தைவிட வெட்கக் கேடானவை யாயிற்றே இவை—ஏன் எழுத வேண்டும்?

நவீன ஏகாதிபத்திய அசுரர்களே எதிர்க்கும் போராட்டத்தில் கிடைக்கும் மிகக் கடுமையான இராணுவத் தோல்விகள் ருஷ்யாவிலும் ஏன் தேசிய குணவியல்பை உருக்குப் பதம் பெறச் செய்யக்கூடாது, சுயக்கட்டுப்பாட்டை ஏன் பலப்படுத்தக் கூடாது? டம்பப் பேச்சுக்கும் வாய்ச்சொல் வீச்சுக்கும் ஏன் முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது? ஏன் எதையும் தாங்கும் மனேசக்தியைப் போதிக்கக் கூடாது? நெப்போலியனுல் நசுக்கப்பட்டபோது பிரஷ்யர்கள் கையாண்ட சரியான செயல் தந்திரங்களின் பக்கம்—நம்மிடம் ஒரு இராணுவம் இல்லாதபோது சமாதான ஒப்பந்தங்களிலேயே மிகமிக அவமானகரமான சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, பிறகு நம்முடைய சக்திகளே ஒன்றுதிரட்டிக் கொண்டு மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழுகிற செயல்தந்திரங்களின் பக்கம்—மக்களே ஏன் திருப்பிக் கொண்டு வரக்கூடாது?

முதல் சமாதான ஒப்பந்தத்திற்கே, அது நம்பமுடியாத அளவுக்குக் கொடிதாக இருந்தபோதிலும், பிற நாடுகள் அதைவிடக் கசப்பான துர்ப்பாக்கியங்களே உறுதியுடன் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கிறபோது நாம் ஏன் நம்பிக்கைக் குலேவுக்கு உள்ளாக வேண்டும்?

பலமில்லாதபோது ஒருவன் பணிந்து தீர வேண்டும் என்று அறிந்து, அப்படியிருப்பினும் எந்த விலே கொடுத்தாயினும் மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழும் சக்தி பெற்றும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பலத்தை வளர்த்துக்கொள்ளும் சக்தி பெற்றும் இருக்கிற தொழிலாளியின் உறுதிக்குப் பொருத்தமாக இந்த நம்பிக்கைக் குலேவுள்ள செயல்தந்திரங்கள் உள்ளனவா, அல்லது நம் நாட்டில், இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சி என்கிற வடிவத்திலே ஒரு புரட்சிகரமான யுத்தத்தைப்பற்றி வாய் வீச்சடிப்பதிலே தனக்கு நிகரில்லே என்று காட்டிக் கொண்டுள்ள குட்டிபூர்ஷ்வாவின் முதுகெலும்பற்ற தன்மைக்குப் பொருத்தமாயுள்ளனவா?

இல்லை, அன்பார்ந்த மாஸ்கோ ''அதிதீவிரவாதத்'' தோழர்களே, மிக மிக வர்க்க உணர்வுள்ள, உறுதியாயுள்ள, அதே தொழிலாளர்களைச் சோதனையின் ஒவ்வொரு நாளும் உங்களிடமிருந்து தூரத்திவிடும். சோவியத் ஆட்சி சம்பிர தாயச் சடங்கு ஆகிக் கொண்டும் வரவில்லை, ஆகவும் செய்யாது என்று அவர்கள் சொல்வார்கள்—ப்ஸ்கோவில் நாடுபிடிப் போன் இருந்துகொண்டு தானியம், உலோகத் தாதுப்பொருட் கள், பணம் என்ற வடிவத்தில் ஆயிரம் கோடி ரூபிள் கப்பம் கட்டும்படிச் செய்து கொண்டிருக்கிற இன்று மட்டுமல்ல, அவன் நீஷ்னிய் நோவ்கராத், தோன் பிரதேச ரஸ்தோவ் நகர் வரை வெகு தூரத்திற்கு வந்தாலுங்கூட, இரண்டா யிரம் கோடி ரூபிள் கப்பம் கட்டும்படி செய்தாலுங்கூட.

அன்னியனின் எந்த நாடுபிடிப்பும் எப்பொழுதும் மக்களின் ஆதரவுள்ள அரசியல் ஸ்தாபனத்தை ''வெறுமனே சம்பிர தாயச்சடங்கு'' ஆக்கிவிடாது (மேலும், வரலாற்றுக்குத் தெரிந்த எதையும் விட எவ்வளவோ மேலானது மட்டுமல்ல சோவியத் ஆட்சி என்பது). அதற்கு மாறாக, அன்னியனின் எந்த நாடுப்பிடிப்பும் சோவியத் ஆட்சியின்பால்—அது மட்டும் கண்மூடித்தனமான முட்டாள் செயல்களில் இறங்கா மலிருந்தால்—மக்களின் மனப்பற்றை பலப்படுத்தும்.

மேலும், நம்மிடம் இராணுவம் இல்லாதபோது மிகமிக அசிங்கத்தனமான சமாதானத்திலும் கையெழுத்திட மறுப் பது ஒரு கண்மூடித்தனமான சூதாட்டமாகவே இருக்கும்; அதற்காக, அப்படிச் செய்ய மறுக்கும் அரசாங்கத்தை மக்கள் நியாயமாகவே கண்டிப்பார்கள்.

பிரேஸ்த் ஒப்பந்தத்தைவிட அதிகக் கொடிதான, அவ மானகரமான சமாதான ஒப்பந்தங்கள் முன்பு வரலாற்றிலே கையெழுத்திடப்பட்டுள்ளன (மேலே சில உதாரணங்கள் தந்தோம்). அவை அரசாங்கத்தின் செல்வாக்கைக் கெடுக் கவோ, அதைச் சம்பிரதாயச் சடங்கு ஆக்கவோ இல்லை; அவை ஆட்சியையோ மக்களையோ நாசம் செய்யவில்லை, அதற்குப் பதிலாக மக்களை எஃகுபோல் உறுதிப்படுத்தின; மிகவும் கடினமான நிலைமையிலேயுங்கூட நாட்டைப் பிடித்த வனின் காலடியின் கீழிருந்து கொண்டே, ஒரு பயன் திற னுள்ள இராணுவத்தை நிர்மாணிக்கும் கண்டிப்புள்ள, கஷ்டமான கலையை மக்களுக்கு அவை போதித்தன.

ஒரு புதிய, உண்மையான தேசபக்திபூர்வமான யுத்தத்தை நோக்கி, சோவியத் ஆட்சியைக் காத்துப் பேணுவதற்கும் திடப்படுத்துவதற்கும் உரிய ஒரு யுத்தத்தை நோக்கி, ருஷ்யா போய்க் கொண்டிருக்கிறது. ஒருவேளை, இன்னொரு சகாப்தம்—நெப்போலியன் யுத்தங்களின் சகாப்தம்போல்—சோவியத் ருஷ்யா மீது ஆக்கிரமிப்பாளர்கள் சுமத்திய விடுதலை யுத்தங்களின்) (ஒன்றல்ல, பல யுத்தங்கள்) சகாப்தமாக இருக்கலாம். அது சாத்தியமே.

எனவே, ஒரு இராணுவம் இராத காரணத்தால் கட்டாயமாகச் செய்து தீரவேண்டியிருக்கிற அந்தக் கடுமையான, மிகவும் கடுமையான சமாதானத்தையும் விட, எந்த அவமானகரமான சமாதானத்தையும்விட, அவமானகரமான நிராசையே அதிக அவமானகரமானது. புரட்சி யெழுச்சியையும் யுத்தத்தையும் பொறுப்பு உணர்ச்சியோடு எடுத்துக் கொண்டால், ஒரு டஜன் மோசமான சமாதான ஒப்பந்தங்களாலும் கூட நாம் சாக மாட்டோம். நிராசையாலும், வாய்ச்சொல் வீச்சாலும் நம்மை நாமே அழித்துக் கொள்ளாமலிருந்தால் நாட்டைப் பிடிப்பவன் எவனும் நம்மை அழிக்க முடியாது.

நூல்திரட்டு, தொகுதி 35

*''பிராவ்தா'', இதழ்கள் 37-38*
*1918, பிப்ரவரி 28 (15),*
*மார்ச் 1 (பிப்ரவரி 16)*

கையொப்பம்: நி. லெனின்

# ''இடதுசாரிச்'' சிறுபிள்ளைத்தனமும் குட்டிபூர்ஷ்வா மனோபாவமும்

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' ஒரு சிறு குழு தங்களுடைய ''கம்மூனிஸ்ட்'' (இதழ் 1, 1918, ஏப்ரில் 20) என்கிற சஞ்சிகையையும், தங்களுடைய ''ஆய்வுரைகளையும்'' வெளியிட்டிருப்பது நான் சோவியத் ஆட்சியின் அடுத்த கடமைகள் பற்றிய சிறுநூலில் வெளியிட்ட கருத்துக்களைத் தெற்றென உறுதிப்படுத்துகிறது. சில சமயங்களில் ''இடதுசாரிக்'' கோஷங்களால் மறைக்கப்படுகிற குட்டிபூர்ஷ்வா ஒழுங்கீனத்தைத் தாங்கி ஆதரிப்பதின் முற்றான பேதைமைக்கு அரசியல் இலக்கியத்தில் இதைவிட நல்ல ஊர்ஜிதம் இருக்க முடியாது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வாதங்களை எடுத்துரைப்பதில் சொல்வது பயனுள்ளதாகும், அவசியமாகும்; காரணம், நாம் கடந்து சென்று கொண்டிருக்கும் காலப் பகுதிக்குக் குணக்குறியாக அவையுள்ளன. மிக்கத் தெளிவுடன் அவை இந்தக் காலப்பகுதியின் ''கருப்பொருளின்'' எதிர் மறையான பக்கத்தைப் புலப்படுத்துகின்றன. அவை போதனையளிக்கத்தக்கவையாயிருக்கக் காரணம், நாம் யாரைப்பற்றிப் பேசுகிறோமோ அவர்கள் இந்தக் காலப்பகுதியைப் புரிந்து கொள்ளத் தவறியவர்களில் மிகச் சிறந்தவர்கள்; அதே தவறான கருத்துக்களின் சாதாரணப் பிரதிநிதிகளாகிய சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளைவிட அறிவிலும் விசுவாசத்திலும் எவ்வளவோ உயரத்தில் நிற்பவர்கள்.

## I

ஒரு அரசியல் பரிமாணம், அல்லது ஒரு அரசியல் பாத்திரம் வகிக்க உரிமை கோரும் ஒரு குழு, என்கிற வகையில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' குழு தனது ''தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளை'' முன்வைத்துள்ளது. தன்னுடைய

கருத்துக்களுக்கும் செயல்தந்திரங்களுக்கும் அடிப்படையாயிருக்கிற கோட்பாடுகளைப் பற்றி ஒரு கோவையான, முழுமையான விளக்கவுரை தருவது ஒரு நல்ல மார்க்ஸிய வழக்கமாகும். இந்த நல்ல மார்க்ஸிய வழக்கம் நம்முடைய ''இடதுசாரிகள்'' புரிந்த தவற்றைப் புலப்படுத்த உதவியுள்ளது; காரணம், ஆர்ப்பாட்டமாகப் பேசாமல் விவாதிக்க முயல்கிற வெறும் முயற்சியே அவர்களின் வாதங்களின் தவற்றை அம்பலப்படுத்துகிறது.

முதன்முதலாக ஒருவருடைய கவனத்தில் பதிவது என்னவெனில், பிரேஸ்த் ஒப்பந்தம் செய்து கொண்டது சரியா தப்பா என்கிற பழைய பிரச்சினை சம்பந்தமாக மறைவான குறிப்புகளும் ஜாடைச் சொற்களும் தட்டிக் கழித்தல்களும் மிகுதியாக இருப்பதுதான். ''இடதுசாரிகள்'' பிரச்சினையை நேரான வழியிலே வைக்கத் தைரியம் கொள்வதில்லை; கோமாளித்தனமான முறையிலே இப்படியும் அப்படியுமாகப் புரள்கிறார்கள்; வாதங்களை அடுக்குகிறார்கள்; காரணங்களைத் தேடிப்பிடிக்கிறார்கள்; ''ஒரு பக்கத்தில் பார்த்தால்'' அப்படி இருக்கக் கூடும் ஆனால் ''இன்னொரு பக்கத்தில் பார்த்தால்'' அப்படி அல்லாமலும் இருக்கக் கூடும் என்று வாதிடுகிறார்கள்; அவர்களின் சிந்தனைகள் எல்லாவிதமான விவகாரங்களையும் தொட்டுத் தொட்டு அலைகின்றன; தங்களைத் தாங்களே தோற்கடித்துக் கொள்வதைப் பார்க்காமலிருக்க எப்போதும் முயன்றவண்ணம் இருக்கிறார்கள். ''இடதுசாரிகள்'' புள்ளிவிவரத்தை மேற்கோள் காட்டுவதில் மிகவும் எச்சரிக்கையாயுள்ளனர்: கட்சிக் காங்கிரஸிலே சமாதானத்துக்கு எதிராகப் பன்னிரண்டு வோட்டுகளும், சாதகமாக இருபத்தெட்டும் விழுந்தன என்று; ஆனால் சோவியத்துக்களின் காங்கிரஸிலுள்ள போல்ஷெவிக் குழுவின் கூட்டத்தில் போட்ட நூற்றுக்கணக்கான வோட்டுகளில் தங்களுக்குப் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகக் கிடைத்த விஷயத்தைக் குறிப்பிடாமல் இங்கிதமாக இருந்து விடுகிறார்கள். ''களைத்துப்போன, வர்க்கத் தன்மை யிழந்த பேர்வழிகளால்'' சமாதானத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; ஆனால் ''பொருளாதார வாழ்வில் அதிக வீர்யமும் ரொட்டி வினியோகத்தில் அதிக உறுதிப்பாடும் உள்ள தெற்கத்தியப் பிராந்தியங்களின் தொழிலாளர்களும் விவசாயிகளும்''

அதை எதிர்த்தார்கள் என்னும் ஒரு ''தத்துவத்தைப்'' புனைந்திருக்கிறார்கள்.... இதைப் பற்றிச் சிரிக்காமல் வேறென்ன செய்ய முடியும்? சமாதானத்திற்குச் சாதகமாக அகில உக்ரேய்னுவின் சோவியத்துக்களின் காங்கிரஸின் வோட்டெடுப்புபற்றியோ, சமாதானத்துக்கு எதிராக ருஷ்யாவிலுள்ள குணக்குறிப்பான குட்டிபூர்ஷ்வா, வர்க்கத்தன்மையிழந்த அரசியல் அவியலின் (இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சியின்) சமுதாய, வர்க்கத் தன்மை பற்றியோ ஒரு வார்த்தை இல்லை. முற்றுகச் சிறுபிள்ளைத் தனமான முறையிலே, நகைப்புக்கிடமான ''விஞ்ஞான பூர்வமான'' விளக்கங்கள் மூலமாக அவர்கள் தங்களுடைய திவாலான நிலையை மறைக்கவும், உண்மைகளை மறைக்கவும் முயல்கிறார்கள்; அவற்றை வெறுமனே மறுபரிசிலனை செய்தாலே போதும்—கட்சியிலுள்ள வர்க்கத் தன்மையிழந்த, அறிவுஜீவித் தன்மை கொண்ட ''சிறந்த பகுதி'', உயர்ந்தோர் குழாம்தான் புரட்சிகரமான குட்டிபூர்ஷ்வா வாய்ச் சொற்களால் புனைந்த கோஷங்களைக் கொண்டு சமாதானத்தை எதிர்த்தது என்றும், சமாதானத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் திரளான தொழிலாளர்களும் சுரண்டப்பட்ட விவசாயிகளும் என்றும் காட்டிவிடும்.

என்றபோதிலும், யுத்தம் சமாதானம் குறித்த பிரச்சினை பற்றிய ''இடதுசாரிகளின்'' மேற்சொன்ன எல்லாப் பிரகடனங்களையும் மழுப்பல்களையும் மீறிக்கொண்டு பச்சையான, அப்பட்டமான உண்மை வெளிப்பட முடிகிறது. ''சமாதான உடன்பாடு தற்சமயத்துக்கு ஏகாதிபத்திய நாடுகள் உலக ரீதியிலே பேரம் செய்துகொள்ளப் பார்த்த முயற்சிகளைப் பலவீனப்படுத்தியுள்ளது'' என்று (இதை ''இடதுசாரிகள்'' பிசகாக வரையறுக்கிறார்கள்; ஆனால் பிசகுகளைக் குறிக்க இது இடமல்ல) ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ''சமாதான உடன்பாடு ஏற்கெனவே ஏகாதிபத்திய வல்லரசுகளிடையேயுள்ள சச்சரவுகளை மேலும் கூராக்கி விட்டிருக்கிறது.''

ஆம், இது உண்மை. இது நிர்ணயமான குறிபொருள் உள்ள விஷயம். எனவேதான், சமாதானம் செய்து கொள்வதை எதிர்த்தவர்கள் தங்களையறியாமலே ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பாவைகளாக இருந்தார்கள்; ஏகாதிபத்திய

வாதிகள் அவர்களுக்காக விரித்த வலையில் போய் விழுந்தார்கள். ஏனெனில், உலக சோஷலிஸ்ட் புரட்சி வெடிக்கும் வரை, அது பல நாடுகளைத் தழுவிக்கொண்டு சர்வதேச ஏகாதிபத்தியத்தையே வீழ்த்தும் அளவுக்குப் போதிய பலம் பெறும் வரை, ஒரு நாட்டில் (குறிப்பாக ஒரு பிற்பட்ட நாட்டில்) வெற்றி பெற்ற சோஷலிஸ்டுகளின் நேரடியான கடமை ஏகாதிபத்திய அசுரர்களுடன் சண்டை போட ஒத்துக் கொள்ளக் கூடாது என்பதே. சோஷலிஸ்டுகளின் கடமை சண்டையைத் தவிர்ப்பது, ஏகாதிபத்திய வாதிகளிடையே யுள்ள சச்சரவுகள் அவர்களை மேலும் அதிகமாகப் பலவீனப் படுத்தும் வரை, மற்ற நாடுகளில் புரட்சி இன்னமும் அதிக மாக நெருங்கி வரச் செய்கிற வரை காத்திருப்பதேயாகும். நமது ''இடதுசாரிகள்'' இந்தச் சாதாரண உண்மையை ஜனவரியிலும் பிப்ரவரியிலும் மார்ச்சிலும் புரிந்து கொள்ள வில்லை. இன்று கூட அவர்கள் இதைப் பகிரங்கமாக ஒத்துக் கொள்ள அஞ்சுகிறார்கள். எனினும், ''ஒருபுறத்தில் அதை ஒத்துக்கொண்டாக வேண்டும், மறுபுறத்தில் இதை ஏற்றுக் கொண்டாக வேண்டும்'' என்கிற குழப்பமான வாதத்தின் மூலமாக அது வெளிச்சத்துக்கு வரவே செய்கிறது.

''இடதுசாரிகள்'' தம்முடைய ஆய்வுரைகளில் எழுதுவதாவது:

''வரப்போகும் வசந்த காலத்திலும் கோடைக்காலத்திலும் ஏகாதிபத்திய அமைப்பின் வீழ்ச்சி தொடங்கித் தீர வேண்டும். யுத்தத்தின் இன்றையக் கட்டத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு வெற்றி கிடைக்குமேயானால், இந்த வீழ்ச்சி தள்ளிப் போடப்படுவது மட்டுமே நடக்க முடியும். ஆனால் அது இன்னும் அதிகத் தீவிரமான வடிவங்களிலே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.''

இந்த வரையறுப்பு விஞ்ஞானத்தோடு விளையாடுகிற போதிலும் இன்னும் அதிகச் சிறுபிள்ளைத்தனமான முறையிலே பிசகாயுள்ளது. எந்த ஆண்டில் வசந்தகாலத்திலா, கோடைக்காலத்திலா, மாரிக்காலத்திலா, குளிர்காலத்திலா, ''வீழ்ச்சி தொடங்கித் தீரவேண்டும்'' என்று நிர்ணயிக்க முடிகிற ஒன்றே விஞ்ஞானம் என்ற பொருளிலே விஞ்ஞானத்தைப்'' ''புரிந்து கொள்வது'' குழந்தைகளின் இயல்பு தானே!

நிர்ணயிக்க முடியாததை நிர்ணயிக்க முயலும் நகைப்புக் கிடமான, வீணை முயற்சிகள் இவை. ஒரு ''அமைப்பின்'' ஏதாவதொரு ''வீழ்ச்சி'' என்றைக்குத் ''தொடங்கித் திர வேண்டும்'' என்று எந்தப் பொறுப்புள்ள அரசியல்வாதியும் என்றைக்கும் சொல்லமாட்டான் (அதிலும் அந்த அமைப்பின் வீழ்ச்சி ஏற்கெனவே தொடங்கிவிட்டு, புரட்சி வெடிப்பது எந்தெந்தக் குறிப்பிட்ட நாடுகளில் எந்தத் தருணத்தில் தொடங்கும் என்பது இன்று பிரச்சினை ஆகியிருக்கும்போது). இந்தச் சிறுபிள்ளைத்தனமான நிர்க்கதியான வரையறுப் பினூடே ஒரு மறுக்கமுடியாத உண்மை முட்டிக்கொண்டு வெளிப்படுகிறது; அதாவது, பிற, மேலும், முன்னேறிய, நாடுகளில் புரட்சி வெடிப்பது, ஒரு மாதத்துக்கோ ஆறு வாரங்களுக்கோ முன்பு இருந்ததைவிட, இன்று, சமா தானத்தைச் செய்துகொண்டதைத் தொடர்ந்து வந்த ''ஓய்வின்'' தொடக்கத்திற்குப் பிறகுள்ள ஒரு மாதத்தில், மேலும் நெருங்கிவந்திருக்கின்றது என்பதே.

இதிலிருந்து தொடர்வதென்ன?

இதிலிருந்து தொடர்வது, சமாதானத்தின் ஆதரவாளர் களின் நிலை முற்றிலும் சரி, நிகழ்ச்சிகளின் போக்கு அவர்களின் நிலையை நியாயப்படுத்தி இருக்கிறது என்பதே. சக்திகளின் ஒப்புநிலையை ஒருவன் கணக்கிடத் திறன் பெற்றிருக்க வேண்டும்; சோஷலிஸம் இன்னும் பலவீனமாக இருக்கையில், சண்டையின் வாய்ப்புக்கள் சோஷலிஸத்துக்கு எதிரானவை யாக வெளிப்படையாக இருக்கையில், சோஷலிஸத்துக்கு எதிரான சண்டையை ஏகாதிபத்திய வாதிகளுக்கு மேலும் சுலபமாக்கித் தருவதின் மூலம் ஒருவன் ஏகாதிபத்திய வாதி களுக்கு உதவக்கூடாது என்று படாடோபப் பிரியர்களின் மண்டையிலே உறைக்கும்படி அவர்கள் அடித்துச் சொல்லி வந்தது சரிதான்.

ஆனால், நமது ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள்—இவர் கள் தங்களைப் ''பாட்டாளி வர்க்கக்'' கம்யூனிஸ்டுகள் என்றும்கூட அழைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்; காரணம், பாட்டாளி வர்க்கத் தன்மை இவர்களிடமிருப்பது அற்ப சொற்பமே, குட்டி பூர்ஷ்வாத் தன்மையே நிறைய இருக்கிறது—சக்திகளின் ஒப்புநிலையைப் பற்றி, அதைக் கணக்கிடுவது பற்றி சிந்திக்கச் சக்தியற்றிருக்கிறார்கள். இது

தான் மார்க்ஸீயத்தின், மார்க்ஸீயச் செயல்தந்திரங்களின் கருப்பொருள், ஆனால் அவர்கள்,

''....ஒரு செயலற்ற 'சமாதான மனோபாவத்தில்' மக்கள் திரள் நிலையாக ஊறியிருக்கிறார்கள் என்பது அரசியல் நிலைமையின் ஒரு புறநிலை உண்மையாகும்...''

என்கிற ''பெருமிதமுள்ள'' சொற்களைக் கொண்டு, அந்தக் ''கருப்பொருளைத்'' துச்சமாக ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள்.

முத்தான சொல்! மூன்றாண்டுகள் நடந்த, ஒரு மிகமிக வேதனை நிறைந்த, பிற்போக்கான யுத்தத்துக்குப் பிறகு, சோவியத் ஆட்சியின் காரணத்தாலும் வெறும் வாய்ச்சொல் வீச்சில் என்றைக்கும் இறங்காத அதன் சரியான செயல்தந்திரத்தின் விசேஷத்தாலும், மக்கள் ஒரு மிக மிகக் குறுகிய கால, நிலையற்ற, போதவே போதாத ஓய்வைப் பெற்றார்கள். ஆனால், ''இடதுசாரி'' அறிவுவாதிக் குழந்தைகளோவெனில், தன்மீது தானே மோகங்கொண்ட ஒரு நார்ஸிஸஸின்[57] மேல் மினுக்கோடு, ஆழ்ந்தரீதியிலே பிரகடனப்படுத்துகிறார்கள்: ''ஒரு செயலற்ற (!!! ???) சமாதான மனோபாவத்தில் மக்கள் திரள் (???) நிலையாக ஊறியிருக்கிறது (!!!)'' என்று. ''இடதுசாரிகளின்'' பத்திரிகையை அல்லது சஞ்சிகையைக் ''கம்யூனிஸ்ட்'' என்று அழைப்பதற்குப் பதிலாக ''ஷ்லாஹ்திச்''* என்று தான் அழைத்திருக்க வேண்டும் என்று நான் கட்சி காங்கிரஸில் சொன்னது சரிதானே?

உழைக்கிற, சுரண்டப்படுகிற மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும் மனோபாவத்தையும் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது புரிந்து கொண்டிருக்கும் ஒரு கம்யூனிஸ்ட், ''சமாதான மனோபாவம்'' ''செயலற்றது'' என்று பிரகடனம் செய்து அட்டைக் கத்தியைச் சுழற்றி அதுவே ''செயல்புரிவது'' என்று நம்புகிற ஒரு பிரபுவின் அல்லது ஷ்லாஹ்திச்சின் மனோபாவத்தோடுகூடிய குணக்குறிப்பான வர்க்கத் தன்மையிழந்த, குட்டிபூர்ஷ்வா அறிவுவாதியின் பார்வை நிலைக்கு இறங்கிவிட முடியுமா? ஏனெனில், மூன்றாண்டுக் காலமாக நடந்த இரத்தக் களரியினால் முற்றாகக் களைத்துப் போன

* ஷ்லாஹ்திச்—போலந்து நாட்டின் சிறு நிலப்பிரபு.—(மொ-ர்.)

மக்கள் சமூகங்கள் ஒய்வு இன்றி சண்டை போட்டுக் கொண்டேயிருக்க முடியாது, மேலும் யுத்தத்தை ஒரு தேச அளவிலே அமைத்து நடத்த முடியாவிட்டால் அதுவே அடிக்கடி பாட்டாளி வர்க்கத்தின் இரும்புக் கட்டுப்பாட்டுக்குப் பதிலாகச் சிறு உடைமையாளர்களுக்கே விசேஷமாயுள்ள உடைந்து நொறுங்கிப்போகிற மனுேபாவத்தைத்தான் சிருஷ்டிக்கிறது என்கிற, எல்லோருக்கும் தெரிந்த, உக்ரேய்னுவில் நடக்கும் யுத்தம் இதற்கு இன்னொரு கூடுதலான சான்ருகப் பயன்பட்டுள்ள, உண்மையை நமது ''இடதுசாரிகள்'' புறக்கணிக்கிற போது, அட்டைக் கத்தியைத்தான் சுழற்றி விசுகிருர்கள். நமது ''இடதுசாரிகளுக்குப்'' பாட்டாளிவர்க்க இரும்புக் கட்டுப்பாடு பற்றியும், அது எப்படி சாதிக்கப்படுகிறது என்பது பற்றியும் ஒன்றுமே தெரியாது, அவர்கள் வர்க்கத்தன்மையிழந்த குட்டிபூர்ஷ்வா அறிவுவாதியின் மனுேபாவத்தில் முற்ருக ஊறிப்போயிருக்கிருர்கள் என்று ''கம்மூனீஸ்டின்'' ஒவ்வொரு பக்கமும் புலப்படுத்துகிறது.

## II

யுத்தத்தைப் பற்றிய ''இடதுசாரிகளின்'' இந்த வாய்ச் சொற்கள் எல்லாம் சிறுபிள்ளைத்தனமான ஆர்வப் பேச்சுதான் என்றும், அவை சென்ற காலத்தைப் பற்றியவை, எனவே அரசியல் குறிபொருளின் சாயல் எதுவும் இல்லாதவை என்றும் ஒருக்கால் சொல்ல முடியுமா? நமது ''இடதுசாரிகளைக்'' காக்கும் வகையில் சிலர் வைக்கும் வாதம் இது. ஆனல் இது தவறு. அரசியல் தலைமைக்கு வர விரும்புகிறவர்கள் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி திர்க்கமாகச் சிந்திக்கத் திறன் பெற்றிருக்க வேண்டும்; இந்தத் திறனில்லாமை ''இடதுசாரிகளை'' ஒரு ஊசலாட்டமான கொள்கையைப் பிரசாரம் செய்யும் முதுகெலும்பற்ற பிரசாரகர்களாக மாற்றிவிடுகிறது; இந்தக் கொள்கைக்குப் புறநிலையில் ஒரேயொரு விளைவுதான் இருக்க முடியும், அதாவது ''இடதுசாரிகள்'' தங்களுடைய ஊசலாட்டத்தின் மூலமாக, வெளிப்படையாகத் தனக்குப் பாதகமாக இருக்கக் கூடிய ஒரு யுத்தத்தில் இறங்குமாறு ருஷ்யாவின் சோவியத் குடியரசை ஆத்திரமூட்டிவிட ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவி வருகிருர்கள்,

நம்மை ஒரு வலையில் இழுத்துச் சிக்க வைக்க அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவி வருகிறார்கள், என்பதே. இதைக் கேளுங்கள்:

''...உலகப் புரட்சிப் பாதையைக் கைவிடுவதின் மூலமாக, இடையறாது சண்டையைத் தவிர்த்துச் சர்வதேச மூலதனத்தின் நிர்ப்பந்தத்துக்குப் பணிவதின் மூலமாக, 'உள்நாட்டு மூலதனத்துக்குச்' சலுகைகள் கொடுப்பதின் மூலமாக, ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கப் புரட்சி 'தன்னைத்தானே காத்துக்கொள்ள' முடியாது.

''இந்தப் பார்வை நிலையிலிருந்து பார்க்கையில், சர்வதேசப் புரட்சிப் பிரசாரத்தைச் சொல்லாலும் செயலாலும் ஒன்றுபடுத்துகிற ஒரு திண்ணமான வர்க்க சர்வதேசக் கொள்கையை மேற்கொள்வதும், சர்வதேச சோஷலிஸத்தோடு (சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்தோடு அல்ல) இருக்கும் உள்ளார்ந்த தொடர்பைப் பலப்படுத்துவதும் அவசியமாகும்....''

இந்தப் பகுதியில் உள்நாட்டுக் கொள்கை மீது குத்துகள் வீசி இருப்பதைத் தனியாக எடுத்துக்கொள்கிறேன். ஆனால் வெளிநாட்டுக் கொள்கைத் துறையில் உள்ள இந்த அட்டகாசமான வாய்ச்சொல் வீச்சையும்—செய்கைகளில் உள்ள பயந்தாங்கொள்ளித்தனத்தையும்—பரிசீலியுங்கள். ஏகாதிபத்திய ஆத்திரமூட்டலுக்குக் கருவியாக இருக்க விரும்பாதவர்கள், வலையில் விழ விரும்பாதவர்கள், எல்லோருக்கும் கட்டாயமாக இன்று இருக்க வேண்டிய செயல்தந்திரங்கள் என்ன? இந்தக் கேள்விக்கு ஒவ்வொரு அரசியல்வாதியும் ஒரு தெளிவான, நேரான பதில் கொடுத்துத் தீர வேண்டும். நம் கட்சியின் பதில் நன்கு தெரிந்ததே: இந்தத் தருணத்தில் நாம் பின்வாங்க வேண்டும், சண்டையைத் தவிர்க்கவேண்டும். நமது ''இடதுசாரிகள்'' இதை மறுத்துச் சொல்லத் தைரியமின்றி, ஒரு ''திண்ணமான வர்க்க சர்வதேசக் கொள்கை'' என்று காற்றிலே அம்புபோடுகிறார்கள்!!

இது மக்களை ஏமாற்றுவதாகும். இப்போது சண்டை போட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் பகிரங்கமாகச் சொல்லுங்கள். இப்போது பின்வாங்கக் கூடாது என்று நீங்கள் விரும்பினால் பகிரங்கமாகச் சொல்லுங்கள். இல்லையேல், உங்களுடைய புறநிலைப்பட்ட பாத்திரத்தில், நீங்கள் ஏகாதிபத்திய ஆத்திரமூட்டலுக்குரிய ஒரு கருவியே ஆவீர்கள். மேலும்,

உங்களுடைய அகநிலே ''மஞேபாவம்'' ஜன்னி கொண்ட குட்டிபூர்ஷ்வாவினுடையது; அவன் இறுமாந்து நடப்பான்; விருப்புடன் பேசுவான்; ஆனல் அவனுக்கு ஊகமாகத் தெரியும்—ஒழுங்காகவே பின்வாங்குவதிலும் பின்வாங்க முயல்வதிலும் பாட்டாளியின் நிலே சரி என்று. நமக்குப் பலமில்லாததால் நாம் (மேற்கத்திய, கிழக்கத்திய ஏகாதிபத்தியங்கள் முன்னே) பின்வாங்கித் தீரவேண்டும், உரால் பிரதேசம் வரைக்கும்கூட பின்வாங்கித் தீரவேண்டும் என்று பாட்டாளி விவாதிப்பது சரி என்று அவனுக்கு ஊகமாகப் புரியும்; ஏனெனில் மேற்கே புரட்சி பக்குவப்பட்டு வருகையில்—புரட்சி ''வசந்த காலத்திலோ கோடைக் காலத்திலோ'' தொடங்க வேண்டுமென்று ''கட்டாயம்'' ஒன்றுமில்லே (''இடதுசாரிகளின்'' வெற்றுப் பேச்சு இருந்த போதிலும் சரி), ஆனல் அது மேலும் மேலும் நெருங்கி வந்துகொண்டே இருக்கிறது; ஒவ்வொரு மாதமும் அது நிகழ்வதற்குரிய சாத்தியப்பாடு அதிகமாகி வருகிறது—நமக்கு நேரம் தேடிக் கொள்வதற்கு ஒரே வாய்ப்பு இந்த ஒன்றிலே தான் உள்ளது.

''இடதுசாரிகளுக்குத்'' தங்களுக்கே ''சொந்தமான'' கொள்கை ஏதுமில்லே. இந்தத் தருணத்தில் பின்வாங்கத் தேவையில்லே என்று பிரகடனம் செய்ய அவர்களுக்குத் தைரியம் கிடையாது. அவர்கள் இப்படியும் அப்படியும் புரள்கிருர்கள்; நெளிகிருர்கள்; சொற்களோடு விளேயாடுகிருர்கள்; இந்தத் தருணத்தில் சண்டையைத் தவிர்ப்பது என்கிற பிரச்சினேக்குப் பதிலாகத் ''தொடர்ச்சியாகச்'' சண்டையைத் தவிர்ப்பது என்கிற பிரச்சினேயை வைக்கிருர்கள். ''செயலால் சர்வதேசப் புரட்சிப் பிரசாரம்'' என்று நுரைக் குமிழிகளே ஊதிவிடுகிருர்கள்!! இதற்கு அர்த்தம் என்ன?

இதற்கு அர்த்தம் இரண்டில் ஒன்ருகத்தான் இருக்க முடியும்: ஒன்று, அது வெறும் நோஸ்த்ரியோவியம்[58], அல்லது சர்வதேச ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதற்கு ஒரு தாக்கு யுத்தம். இப்படிப்பட்ட முட்டாள்தனத்தைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது; எனவேதான் ஒவ்வொரு அரசியல் உணர்வுள்ள பாட்டாளியிடமும் கேலிக்கு ஆளாவதிலிருந்து தப்பிக்கப் புகலிடம் தேடிப் படாடோபமான வெற்றுச் சொற்களின் பின்னே ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள்

ஒளிந்து கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ''செயலால் சர்வதேசப் புரட்சிப் பிரசாரம்'' என்கிற சொற்றொடரின் அர்த்தத்தை, உண்மையான அர்த்தத்தை, கவனமற்ற வாசகன் பார்க்க மாட்டான் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

படாடோபமான வாய்ச்சொற்களை எடுத்து வீசுவது வர்க்கத்தன்மையிழந்த குட்டிபூர்ஷ்வா அறிவுஜீவியின் குணக்குறியாகும். ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள கம்யூனிஸ்டுகளாகிய பாட்டாளிகள் இந்தப் ''பழக்கத்தைக்'' கேலிசெய்வார்கள், பொறுப்புள்ள எல்லாப் பதவிகளிலிருந்தும் வெளியேற்றுவதற்கும் குறையாத ஒரு தண்டனைக்கு ஆளாக்கி நிச்சயமாகத் தண்டிப்பார்கள். மக்களுக்குக் கசப்பான உண்மையை எளிதாக, தெளிவாக, நேராகச் சொல்லித் தீர வேண்டும்; ஜெர்மனியில் யுத்தம் கோரும் கட்சியின் கை மீண்டும் மேலோங்குவது சாத்தியமே, அநேகமாகச் சாத்தியமே (அதாவது, நமக்கு எதிராகத் தாக்குதல் உடனடியாகத் தொடங்கும்); ஜெர்மனி ஜப்பானுடன் அதிகார பூர்வமான ஒப்பந்தம் மூலமாகவோ, சொல்லாமற்சொல்லி வைத்த ஏற்பட்டின்மூலமாகவோ, சேர்ந்துகொண்டு நம்மைப் பிளவுபடுத்தி நெரித்துக் கொல்வது சாத்தியமே, அநேகமாகச் சாத்தியமே. வாய்வீருப்புக்காரர்களின் பேச்சை நாம் கேட்க விரும்பாவிட்டால், நம்முடைய செயல்தந்திரம், காத்திருப்பது, நீட்டித் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது, சண்டையைத் தவிர்ப்பது, பின்வாங்குவது என்று தான் இருக்கவேண்டும். வாய்வீருப்புக்காரர்களை நாம் உதறித் தள்ளிவிட்டு உண்மையான இரும்புக் கட்டுப்பாட்டை, உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டை, உண்மையான கம்யூனிஸ்ட் கட்டுப்பாட்டைச் சிருஷ்டிப்பதன் மூலமாக நம்மை ''இறுக்கிவிட்டுக் கொண்டால்'', பல மாதங்களைப் பெறுவதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும். அதன் பிறகு, நிலைமை மோசத்திலும் படுமோசமாகப் போகுமேயானால், உரால் பிரதேசத்துக்கும்கூடப் பின்வாங்குவதின் மூலமாக நமது நேசச் சக்திகள் (சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்) நம் உதவிக்கு வருவதை, புரட்சிகரமான வெடிப்புகள் தொடங்குவதற்கும் புரட்சிக்கும் உள்ள தூரத்தை (விளையாட்டு பாஷையிலே சொல்லுவ

தென்றல்) ''கடந்து வருவதை'', மேலும் சுலபமாக்கித் தருவோம்.

இவைதான், இவைமட்டுமேதான், உண்மையிலே சர்வதேச சோஷலிஸத்தின் தற்காலிகமாகத் தனிமைப்பட்டுள்ள ஒரு பகுதிக்கும் பிற பகுதிகளுக்கும் உள்ள தொடர்பைப் பலப்படுத்த முடிகிற செயல்தந்திரமாகும். ஆனல் அன்புக்குரிய ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகளே, உண்மையைச் சொல்வதென்றல் உங்களுடைய வாதங்களெல்லாம் ஒரு படாடோபமான சொல்லுக்கும் மற்ருெரு படாடோபமான சொல்லுக்கும் இடையே ''உள்ளார்ந்த தொடர்பைப் பலப்படுத்துவதிலேதான்'' கொண்டுபோய் விடுகின்றன. இது ஒரு மோசமான ''உள்ளார்ந்த தொடர்பு''!

எனது அருமை நண்பர்களே, இப்படிப்பட்ட விபத்து உங்களுக்கு வாய்த்ததின் காரணத்தை நான் தெளிவாக்குகிறேன். அதற்குக் காரணம், புரட்சிகரமான கோஷங்களைச் சிந்தித்துத் தெளிவடைவதற்குப் பதிலாக மனப்பாடம் செய்து நினைவிலே வைத்துக்கொள்வதிலேதான் நீங்கள் அதிகமாக முயற்சியைச் செலவழிக்கிறீர்கள். இது உங்களை ''சோஷலிஸ்ட் தந்தை நாட்டுப் பாதுகாப்பு'' என்பதை மேற்கோள் குறிபோட்டு எழுதுவதிலே கொண்டுபோய் விடுகிறது; அந்த மேற்கோள் குறிகள் ஒருக்கால் நீங்கள் நையாண்டி செய்ய முயல்வதைக் குறிக்கும் பொருள் உள்ளவைபோலும், ஆனல் அவை நீங்கள் மூளைகுழம்பிப் போனவர்கள் என்று தான் உண்மையிலே நிரூபிக்கின்றன. ''பாதுகாப்புவாதம்'' ஏதோ இழிவான, வெறுக்கத்தக்க ஒன்று என்று கருதுவதே உங்களுக்குப் பழக்கமாகி விட்டிருக்கிறது; இதைப் பயின்றீர்கள்; மனப்பாடம் செய்துகொண்டீர்கள். இதை நீங்கள் மிகவும் நன்ருக மனப்பாடம் செய்து கொண்டிருப்பதனல், உங்களில் சிலர், ஒரு ஏகாதிபத்திய சகாப்தத்தில் தந்தை நாட்டைப் பாதுகாப்பது அனுமதிக்கத்தக்கதல்ல என்ற பொருளில் முட்டாள்தனமான பேச்சைப் பேசத் தொடங்கியிருக்கிறீர்கள் (உண்மையிலே சொன்னல், பூர்ஷ்வா வர்க்கம் நடத்துகிற ஒரு ஏகாதிபத்திய, பிற்போக்கான யுத்தத்தில் மட்டுமே அது அனுமதிக்கத்தக்கதல்ல). ஆனல் ''பாதுகாப்பு வாதம்'' ஏன், எப்பொழுது, வெறுக்கத்தக்கது என்று நீங்கள் தீர்க்கமாகச் சிந்திக்கவில்லை,

தந்தை நாட்டுப் பாதுகாப்பை அங்கீகரிப்பதின் பொருள் யுத்தத்தின் நியாயத்தையும் நீதியையும் அங்கீகரிப்பதாகும். நியாயமும் நீதியும் எந்தப் பார்வைநிலையிலிருந்து? சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின், அதன் விடுதலைக் குரிய போராட்டத்தின், பார்வை நிலையிலிருந்து மட்டுமே. வேறெந்த நிலையையும் நாம் அங்கீகரிக்கவில்லை. சுரண்டும் வர்க்கம், ஒரு வர்க்கம் என்ற முறையிலே தன்னுடைய ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கோடு யுத்தம் நடத்தினால் அப்படிப்பட்ட யுத்தம் குற்றமுள்ள யுத்தம். அப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில் ''பாதுகாப்பு வாதம்'' என்பது சோஷலிஸத்தை ஈனமாகக் காட்டிக் கொடுப்பதாகும். பாட்டாளி வர்க்கம் தன் சொந்த நாட்டில் பூர்ஷ்வா வர்க்கத்தை வென்றபிறகு சோஷலிஸத்தைப் பலப்படுத்தும் வளர்க்கும் நோக்குடன் யுத்தத்தை நடத்தினால், அப்படி பட்ட யுத்தம் நியாயமானது, ''புனிதமானது''.

1917, அக்டோபர் 25ந் தேதியிலிருந்து நாம் ''பாதுகாட வாதிகளாகத்'' தான் இருந்து வருகிறோம். ஒரு தடவைக்கு மேலாகவே நான் இதைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். அதை நீங்கள் மறுக்கத் தைரியங் கொள்ளமுடியாது. சர்வதேச சோஷலிஸத்தோடு ''தொடர்பைப் பலப்படுத்திக்கொள்ளும்'' நலன்களுக்காகவேதான் சோஷலிஸ்ட் தந்தைநாட்டைப் பாதுகாப்பது நம் கட்டாயக் கடமையாகும். பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே வெற்றிபெற்றுவிட்ட ஒரு நாட்டின் பாதுகாப்பை விளையாட்டுத்தனமாகக் கருதி நடத்த விரும்புகிறவர்கள்தான் சர்வதேச சோஷலிஸத்தோடுள்ள தொடர்பை ஒழிக்கிறார்கள். ஒரு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் பிரதிநிதிகளாக நாம் இருந்தபோது, ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தில் தந்தைநாட்டைப் பாதுகாக்கும் விஷயத்தில் நாம் விளையாட்டுத்தனமான கண்ணோட்டத்தை மேற்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட பாதுகாப்பை நாம் கோட்பாட்டின் மேல் நின்று எதிர்த்தோம். இன்று நாம் சோஷலிஸத்தை அமைக்கத் தொடங்கி இருக்கும் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகி விட்டிருப்பதினாலே, நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் ஒரு பொறுப்புள்ள கண்ணோட்டத்தை எல்லோரும் மேற்கொள்ளுமாறு கோருகிறோம். மேலும், நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் பொறுப்புள்ள கண்ணோட்டத்தை மேற்

கொள்வது என்பதற்குப் பொருள், அதற்காக முற்றுகத் தயாரிப்பு செய்வது, சக்திகளின் ஒப்புநிலையைக் கணக்கிட்டுக் கொள்வது ஆகும். நம் சக்திகள் வெளிப்படையாகவே சிறிதாக இருந்தால், பாதுகாப்புக்குரிய தலைசிறந்த வழி நாட்டின் உள்பகுதிக்குப் பின்வாங்கிச் செல்வதாகும் (ஏதோ ஒரு தருணத்தின் தேவைகளுக்கு உசிதமாகப் புனையப்பட்ட ஒரு செயற்கையான சூத்திரம்தான் இது என்று யாராவது கருதுவார்களேயானல், இராணுவ விவகாரங்களில் மிகப் பெரிய நிபுணர்களில் ஒருவரான அந்த முதியவராகிற கிளாவுஸெவிட்ஸை, இது சம்பந்தமான வரலாற்றின் படிப்பினைகள் பற்றிப் படிக்க வேண்டும்). ஆனல், ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் சக்திகளின் ஒப்புநிலை பற்றிய பிரச்சினையின் குறிபொருளைப் புரிந்துகொண்டதாகக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமேனும் காட்டிக் கொள்ளவில்லை.

பாதுகாப்பு வாதத்தைக் கோட்பாட்டின் மீது நின்று நாம் எதிர்த்த காலத்தில் சோஷலிஸத்தின் நலன்களின் பெயரால் தங்களுடைய தாய்நாட்டைக் ''காப்பாற்ற'' விரும்பியவர்களை நாம் கேலி செய்ததில் நியாயமிருந்தது. பாட்டாளி வர்க்க ரீதியான பாதுகாப்புவாதிகளாகும் உரிமை நாம் பெற்றபோது அந்தப் பிரச்சினை முழுதும் தீவிரமாக மாற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட வெவ்வேறு சக்திகளை மிக மிகச் சரிநுட்பமாகக் கணக்கிடுவதும், நமது நேச சக்தி (சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்) நம் உதவிக்குக் காலா காலத்தில் வரமுடிவதற்குள்ள வாய்ப்புகளை ஆன மட்டும் எச்சரிக்கையோடு எடைபோட்டுக்கொள்வதும் நம் கடமையாகிவிட்டது. எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களும் ஒன்றுகுமுன் (யதார்த்தத்தில் ஒன்றுபடுமுன், அதாவது புரட்சியைத் தொடங்குவதின்மூலமாக) தனது விரோதியை (புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை) துண்டு துண்டாக ஒழிப்பது மூலதனத்தின் நலன்களுக்கு உகந்ததாகும். சாத்தியமானதை எல்லாம் செய்வது, புரட்சிகரமான தொழிலாளிகளின் பட்டாளங்கள் ஒரே மாபெரும் சர்வதேச இராணுவமாக ஒன்றுபடுகிற தருணம் வரை (அல்லது அந்தத் தருணத்திற்குப் ''பிறகுவரை'') நிர்ணயகரமான போராட்டத்தைத்

தள்ளிப்போட அற்பசொற்பமாகக் கிடைக்கிற சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்வது, நம் நலன்களுக்கு உகந்ததாகும்.

## III

உள்நாட்டுத் துறையில் நமது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' அனுபவிக்கும் துர்ப்பாக்கியங்களுக்குப் போவோம். தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளில் பின்வரும் வாதங்களைச் சிரிக்காமல் படிப்பது என்பது கஷ்டமான விஷயம்:

''...சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றினால் மட்டுமே மீதமிருக்கும் உற்பத்திச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கத்தகும்''... ''பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் அதன் குட்டிபூர்ஷ்வா அறிவாளிரீதியான ஏவலாட்களுக்கும் பணிவதற்காக அல்ல, பூர்ஷ்வா வர்க்கத்தை முறியடித்துத் துரத்துவதற்காக, நாசவேலையை முற்றாக ஒழிப்பதற்காக...'

அன்புக்குரிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'', எவ்வளவு உறுதியோடு இருக்கிறார்கள்; ஆனால் சிறிதேனும் சிந்தனையைக் காட்டவில்லையே! ''சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றுவது'' என்பதற்கு அவர்களின் அர்த்தம் என்ன?

தேசவுடைமையாக்குவது, அல்லது பறிமுதல் செய்வது என்ற பிரச்சினை பற்றி ஒருவன் உறுதியுள்ளவனாகவோ இல்லாதவனாகவோ இருக்கக் கூடும்; ஆனால் விவகாரம் முழுவதுமே என்னவென்றால், தேசவுடைமை நிலையிலிருந்து, பறிமுதல் நிலையிலிருந்து, சமுதாயவுடைமை நிலைக்கு மாறுவதற்கு அதிகப்பட்சமான ''மனவுறுதி'' இருந்தாலும் போதாது. நம் ''இடதுசாரிகளின்'' துரதிர்ஷ்டம் என்னவெனில், ''சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை'' என்கிற பேதைமையான, சிறுபிள்ளைத்தனமான சொற்கூட்டு மூலமாகப் பிரச்சினையின் கருப்பொருளை, ''தற்கால'' நிலைமையில் கருப்பொருளைப் புரிந்துகொள்ளத் தவறியதைக் காட்டிக் கொள்கிறார்கள். நம் ''இடதுசாரிகளின்'' துரதிர்ஷ்டம் என்னவெனில், ''தற்கால நிலைமையின்'' சாராம்சத்தை—பறிமுதல் செய்கிற நிலை

யிலிருந்து (இதை நிறைவேற்றுவதற்கு ஒரு அரசியல்வாதியிடம், எல்லாவற்றிற்கும் மேலாக, உறுதி இருக்க வேண்டும்) சமுதாய உடைமை நிலைக்கு (இதை நிறைவேற்றுவதற்கு ஒரு புரட்சிக்காரனிடம் வேறொரு குணம் வேண்டியிருக்கிறது) மாறிச் செல்வதை—தவற விட்டு விட்டார்கள்.

நேற்றைய தினம், சாத்தியமான அளவுக்கு மன உறுதியுடன் தேசவுடைமையாக்குவதும், பறிமுதல் செய்வதும், பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்தி நசுக்குவதும், நாசவேலையை ஒழிப்பதும் அத்தருணத்திய பிரதான கடமையாக இருந்தது. இன்றைய தினம் கணக்கிட்டுப் பார்க்க நேரமேயில்லாது போன அளவுக்கு அதிகமாகவே நாம் தேசவுடைமையாக்கினோம், பறிமுதல் செய்தோம், வீழ்த்தி நொறுக்கினோம், ஒழித்தோம் என்பதை ஒரு குருடன் மட்டுமே பார்க்கத் தவறியிருக்க முடியும். சமுதாயவுடைமை நிலைக்கும் சாதாரணமான பறிமுதலுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில் பறிமுதலை ''உறுதியை'' மட்டும் கொண்டு—கணக்கிட்டு, முறையாக வினியோகம் செய்யும் திறன் இல்லாமலே—நிறைவேற்றிவிட முடியும், ஆனால் சமுதாயவுடைமை நிலையை இந்தத் திறனில்லாமல் உண்டாக்க முடியாது.

நாம் செய்திருக்கும் வரலாற்றுரீதியான சேவை என்னவெனில், நாம் நேற்றைய தினம் (நாளைக்கும் கூடத்தான்) பறிமுதல் செய்வதிலேயும், பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்துவதிலேயும், நாசவேலையை ஒழிப்பதிலேயும் மன உறுதியோடு இருந்தோம். அதைப் பற்றி இப்போது ''தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளில்'' எழுதுவது சென்ற காலத்தின் புறமாகத் திரும்பிக் கொள்வதாகும், எதிர்காலத்துக்கு மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ளத் தவறுவதாகும்.

''...நாசவேலையை முற்றாக ஒழிப்பது....'' ஆஹா, என்ன கடமையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்! நம் நாசவேலைக்காரர்கள் போதிய அளவுக்கு ''ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள்''. நமக்கு இல்லாமலிருப்பது வேறொன்றாகும். எந்த நாசவேலைக்காரர்களிடம் வேலை வாங்குவது, எந்த இடத்தில் அவர்களை வைப்பது என்பதுபற்றிய ஒரு முறையான கணக்கீடு நம்மிடம் இல்லை. உதாரணத்துக்குச் சொன்னால், நமது சேவகத்துக்குள் இப்போது வந்து கொண்டிருக்கும் ஒரு நூறு நாசவேலைக்காரர்களை ஒரு போல்ஷெவிக் தலைவன்

அல்லது கண்காணிப்பவன் மேற்பார்வையிடச் செய்வதற்குத் தேவையான முறையிலே நமது சொந்த சக்திகளின் ஒழுங்கமைப்பு நமக்கில்லை. விவகாரங்கள் இவ்வாறு இருக்க, ''சமுதாயவுடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை'', ''முறியடித்துத் துரத்துவது'', ''முற்றாக ஒழிப்பது'' போன்ற வாய்ச்சொற்களை விசிக்காட்டுவது குறிதவறிச் சுடுவதாகும். முறியடித்துத்துரத்துவது, ஒழிப்பது, முதலியவை மட்டும் சோஷலிஸத்துக்குப் போதாது என்பதைப் பார்க்காமலிருப்பது குட்டிபூர்ஷ்வாப் புரட்சிக்காரனின் குணக்குறியாகும். ஒரு பெரிய உடைமையாளன் மேல் ஆத்திரப்படுகிற சிறு உடைமையாளனுக்கு அது போதும். ஆனால் எந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரனும் என்றைக்கும் இப்படிப்பட்ட தவற்றைச் செய்ய மாட்டான்.

நாம் மேற்கோள் காட்டிய சொற்கள் புன்சிரிப்பை உண்டாக்குகின்றன என்று சொன்னால், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' செய்துள்ள பின்வரும் கண்டுபிடிப்பு அட்டகாசமான வெடிச் சிரிப்பைத்தான் நமக்கு உண்டாக்கும். அவர்களின் படி, ''போல்ஷெவிக் வலதுசாரித் திரிபின்'' கீழ் சோவியத் குடியரசை ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிச் செல்கிற பரிணாமம்'' பயமுறுத்திக் கொண்டிருக்கிறதாம். இப்போது அவர்கள் நம்மை உண்மையிலேயே பயப்படுத்திவிட்டார்கள்! எவ்வளவு உற்சாகத்தோடு இந்த ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தப் பயமுறுத்தலான கண்டுபிடிப்பைத் தங்களுடைய ஆய்வுரைகளிலும் கட்டுரைகளிலும் திரும்பத்திரும்பச் சொல்கிறார்கள்....

நம் சோவியத் குடியரசில் உள்ள இன்றைய விவகார நிலைமைகளோடு ஒப்பிடும்போது அரசு முதலாளித்துவம் ஒரு படி முன்னேற்றம் என்று அவர்கள் புத்தியில் படவேயில்லை. சுமார் ஆறுமாத காலத்தில் நம் குடியரசில் அரசு முதலாளித்துவம் நிலைபெற்று விடுமேயானால் அது ஒரு பெரிய வெற்றியாகும், ஓர் ஆண்டுக்குள் சோஷலிஸம் நிரந்தரமான உறுதியான பிடிப்பு பெற்று நம் நாட்டில் தோற்கடிக்கப்பட முடியாதது ஆகிவிடுவதற்கு அது ஒரு நிச்சயமான உத்தரவாதமாகும்.

எவ்வளவு மேன்மையான ஆத்திரத்துடன் ஒரு ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' இந்தச் சொற்களிடமிருந்து விலகி

ஓடுவான் என்பதையும், ''போல்ஷெவிக் வலதுசாரித் திரிபு'' பற்றித் தொழிலாளர்களிடம் எவ்வளவு ''நொறுக்கித் தள்ளும் படியான விமர்சனம்'' செய்வான் என்பதையும் என்னுல் கற்பனே செய்ய முடியும். என்ன இது! சோவியத் சோஷலிஸ்ட் குடியரசில் அரசு முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்வது ஒரு படி முன்னேற்றமா?... இது சோஷலிஸத் துக்குத் துரோகமாகாதா?

இங்கே, ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பொருளா தாரத் தவற்றின் வேருக்கு வருகிருேம். எனவேதான் இவ் விஷயத்தை அதிக விபரமாக நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத் துக்குப் போகிற எந்த வகைப்பட்ட மாற்றநிலே நமது நாட்டை சோவியத்துக்களின் சோஷலிஸ்ட் குடியரசு என்று அழைக்க நமக்கு உரிமையும் அடிப்படைகளும் தருகிறது என்பதை ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' புரிந்துகொள்ள வில்லே.

இரண்டாவதாக, நம் நாட்டில் குட்டிபூர்ஷ்வா அம்சமே சோஷலிஸத்தின் பிரதான எதிரி என்று அங்கிகரிக்காததைக் கொண்டுதான் அவர்கள் தங்களுடைய குட்டிபூர்ஷ்வா மனுேபா வத்தை வெளிப்படுத்துகிருர்கள்.

மூன்ருவதாக, ''அரசு முதலாளித்துவம்'' என்று பூச் சாண்டி காட்டுவதின் மூலமாக,சோஷலிஸ்ட் அரசு பொருளா தார ரீதியிலே பூர்ஷ்வா அரசுடன் வேறுபட்டது என்று புரிந்துகொள்ளத் தவறுவதைக் காட்டிக் கொள்கிருர்கள்.

இந்த மூன்று விஷயங்களேயும் பரிசிலிப்போம்.

ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு பற்றிய பிரச்சினே யைப் பயில்வதில் யாருமே அதன் மாற்ற நிலேத்தன்மையை மறுக்கவில்லே என்று நினேக்கிறேன். அல்லது சோவியத் சோஷ லிஸ்ட் குடியரசு என்கிற சொல்லுக்கு உட்கிடை சோஷ லிஸத்துக்குக் கொண்டு போகும் மாற்ற நிலேயைச் சாதிப் பதில் சோவியத் ஆட்சிக்குள்ள மன உறுதியே தவிர, புதிய பொருளாதார அமைப்பை ஒரு சோஷலிஸ்ட் அமைப்பாக அங்கீகரிப்பதல்ல என்பதையும் எந்தக் கம்யூனிஸ்டும் மறுக்க வில்லே என்றும் நினேக்கிறேன்.

ஆனுல் ''மாற்றநிலே'' என்கிற சொல்லுக்குப் பொருள் என்ன? பொருளாதாரத்தோடு பொருத்திப் பேசும்போது,

அதற்குப் பொருள் இன்றைய அமைப்பில் சோஷலிஸம் முதலாளித்துவம் ஆகிய இரண்டின் அம்சங்களும், துகள்களும், கூறுகளும் அடங்கியுள்ளன என்பதுதானே? அதன் பொருள் அப்படித்தான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இதை ஒப்புக்கொள்கிறவர்கள் எல்லோரும் இன்று ருஷ்யாவிலுள்ள பல்வேறு சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் யதார்த்தத்தில் என்னென்ன அம்சங்கள் அடங்கியுள்ளன என்று சிந்திக்க முயல்வதில்லை. இதுவே பிரச்சினையின் கருப்பொருளாகும்.

இந்த அம்சங்களை விவரிப்போம்:

*1)* தந்தைவழி, அதாவது, ஒரு கணிசமான அளவுக்கு, சுய தேவைச் சாகுபடி முறை;

*2)* சிறு பண்ட உற்பத்தி முறை (இதில், தங்களுடைய தானியத்தை விற்கிற விவசாயிகளில் பெரும்பான்மையினர் அடங்குவார்கள்);

*3)* தனிப்பட்ட முதலாளித்துவம்;

*4)* அரசு முதலாளித்துவம்;

*5)* சோஷலிஸம்.

ருஷ்யா எவ்வளவோ பெரிதாக, வேறுபட்டதாக இருக்கிறதினாலே இந்த வெவ்வேறான சமுதாய-பொருளாதாரக் கட்டமைப்புக்களின் மாதிரிகள் எல்லாம் கலந்து இருக்கின்றன. இதுவே நிலைமையில் குறிப்பான குணும்சமாக அமைந்துள்ளது.

இந்தக் கேள்வி எழுகிறது: எந்த அம்சங்கள் மேலோங்கியிருப்பவை? ஒரு சிறு விவசாயி நாட்டில் குட்டிபூர்ஷ்வா அம்சமே மேலோங்கியிருக்கிறது, லேலோங்கியிருந்து தீர வேண்டும், ஏனெனில் நிலத்தில் பாடுபடுகிறவர்களில் மிகப் பெரும்பான்மையினர் சிறுபண்ட உற்பத்தியாளர்களே என்பது தெளிவு. நமது அரசு முவலாளித்துவத்தின் மேலோடு (தானிய ஏகபோகம், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் முயற்சியாளர்களும் வியாபாரிகளும், பூர்ஷ்வாக் கூட்டுறவாளர்கள்) கொள்ளைலாபக்காரர்களால் ஒரு சமயம் ஓரிடத்திலும், ஒரு சமயம் வேறொரு இடத்திலும், துளைக்கப்படுகிறது; கொள்ளை லாபமடிப்பதின் பிரதானக் குறியாகவிருப்பது தானியமே.

இந்தக் களத்திலேதான் பிரதானமான சண்டை நடத்

தப்பட்டு வருகிறது. ''அரசு முதலாளித்துவம்'' போன்ற பொருளாதார வகைப்பிரிவுகளின் ரீதியிலே நாம் பேசுவதானால், எந்த அம்சங்களுக்கிடையே இந்தப் போராட்டம் நடத்தப் பெறுகிறது? நான் இப்போது விவரித்த வரிசையில் நான்காவதற்கும் ஐந்தாவதற்கும் இடையிலா? நிச்சயமாக இல்லை. சோஷலிஸத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பது அரசு முதலாளித்துவமல்ல; பதிலாக, குட்டிபூர்ஷ்வாக்களும் தனிப்பட்ட முதலாளித்துவமும் ஒருங்கே சேர்ந்து அரசு முதலாளித்துவம், சோஷலிஸம் ஆகிய இரண்டையும் எதிர்த்துச் சண்டையிட்டு வருகின்றன. ஒவ்வொரு வகைப்பட்ட அரசுத் தலையீட்டையும், கணக்கு வைப்பதையும், கண்காணிப்பையும்—அது அரசு முதலாளித்துவ ரீதியானதாயிருந்தாலும் சரியே, அரசு சோஷலிஸ ரீதியானதாக இருந்தாலும் சரியே—குட்டிபூர்ஷ்வாக்கள் எதிர்க்கிறார்கள். இது யதார்த்தத்தின் முற்றான, கேள்விக்கிடமற்ற, ஒரு உண்மையாகும்; ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பொருளாதாரத் தவற்றின் வேர், இதை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியிருப்பதுதான். கொள்ளைலாபக்காரன், வியாபாரக் கொள்ளைக்காரன், ஏகபோகத்தைச் சிதறடிப்பவன்—இவர்கள்தான் நமது பிரதான ''உள்நாட்டு'' விரோதிகள், சோவியத் ஆட்சியின் பொருளாதார நடவடிக்கைகளின் விரோதிகள். ஒரு நூற்று இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன், மிகமிக ஆர்வமுள்ள, நேர்மையான புரட்சிக்காரர்களாகிய பிரெஞ்சுக் குட்டிபூர்ஷ்வாக்கள் ''பொறுக்கியெடுத்த'' சிலரைத் தண்டித்துக் கொன்றதன் மூலமாகவும் இடி முழக்கம் போன்ற பிரகடனங்கள் மூலமாகவும் கொள்ளைலாபக்காரனை நசுக்க முயன்றது மன்னிக்கக்கூடியதாய் இருந்திருக்கலாம். ஆனால் இன்று, இந்தப் பிரச்சினை மீது சில இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் காட்டுகிற வெறும் அலங்காரச் சொல் நடைக்குரிய கண்ணோட்டம் ஒவ்வொரு அரசியல் உணர்வுள்ள புரட்சிக்காரனிடமும் வெறுப்பையும் அசிங்க உணர்ச்சியையும் தவிர, வேறெதையும் எழுப்ப முடியாது. கொள்ளைலாபத்தனத்தின் பொருளாதார அடிப்படை, ருஷ்யாவில் அசாதாரணமான அளவுக்குப் பரவலாயிருக்கிற சிறு உடைமையாளர்களும், தனிப்பட்ட முதலாளித்துவமும்—ஒவ்வொரு குட்டிபூர்ஷ்வாவும் அதன் ஏஜண்டுதான்—

ஆகிய இரண்டுமேயாகும் என்பதை நாம் நன்ருக அறிவோம். இந்தக் குட்டிபூர்ஷ்வா விஷஜந்துவின் லட்சக்கணக்கான நச்சுக் கரங்கள் அடிக்கடி தொழிலாளர்களின் பல்வேறு பகுதிகளைச் சூழ்ந்து கவ்விக் கொள்கின்றன என்றும், அரசு ஏகபோகத்திற்குப் பதிலாகக் கொள்ளைலாபத்தனம் நமது சமுதாய-பொருளாதார அமைப்பின் ஒவ்வொரு மயிர்க்கால் வழியேயும் முட்டிக் கொண்டு வெளிப்படுகிறது என்றும், நாம் அறிவோம்.

இதைப் பார்க்கத் தவறுகிறவர்கள் தங்களுடைய குருட்டுத்தனத்தால் தாங்கள் குட்டிபூர்ஷ்வாக் காழ்ப்புக் களின் அடிமைகள் என்று காட்டிக் கொள்கிருர்கள். இதுதான் நமது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' விஷயத்தில் உள்ள வழக்கு; அவர்கள், சொல்லளவிலே (நிச்சயமாக மிக ஆழ்ந்த துணிபுகளிலும்), குட்டிபூர்ஷ்வாக்களின் ஈவிரக்கமற்ற எதிரிகளே, ஆனுல் செயலளவிலோ எனில், அவர்கள் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்துக்கு மட்டுமே உதவுகிருர்கள்; ஜனத் தொகையின் இந்தப் பகுதிக்கு மட்டும் சேவை செய்கிருர் கள்; அதன் பார்வை நிலையை மட்டுமே வெளியிடுகிருர்கள்— ''அரசு முதலாளித்துவத்தை'' எதிர்த்து—1918 ஏப்ரிலில்!!— சண்டை போடுவதின் மூலமாக. அவர்கள் வெகுதொலை வுக்குக் குறிதவறிப் போயிருக்கிருர்கள்!

''நேர்மையான'' வழியிலேயும் குறிப்பாக நேர்மையற்ற முறையிலேயும் யுத்த காலத்திலே சம்பாதித்த சில ஆயிரம் பணத்தைக் குட்டிபூர்ஷ்வாக்கள் பத்திரப்படுத்திக் கொண் டுள்ளனர். கொள்ளைலாபத்தனத்துக்கும் தனிப்பட்ட முத லாளித்துவத்துக்கும் அடிப்படையாக அமையப் பயன்படுகிற பொருளாதார வகையாக, குணக்குறிப்பான பாத்திரங் களாக, இருப்பவர்கள் அவர்களே. பணம் என்பது சமுதாயச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையளிக்கும் ஒரு சான்றி தழேயாகும்; பல லட்சக் கணக்கிலே எண்ணத்தக்க சிறு உடைமையாளர்களின் ஒரு பெரும் பகுதியினர் இந்தச் சான்றிதழைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிருர்கள்; அதை ''அரசிடமிருந்து'' மறைக்கிருர்கள்; அவர்கள் சோஷலிஸத்திலோ கம்யூனிஸத்திலோ நம்பிக்கையில்லாத வர்கள் பாட்டாளி வர்க்கப் புயல் வீசி ஓயும்வரை ''நின்று காத்திருக்கிருர்கள்.'' ஒன்று, நாம் குட்டிபூர்ஷ்வாக்

களை நமது கண்காணிப்புக்கும் கணக்கு வைத்தலுக்கும் கீழ்ப்படுத்துவது (வர்க்க உணர்வுள்ள பாட்டாளிகளின் முன்னணிப் படையைச் சூழ்ந்து ஏழைகளை, அதாவது ஜனத் தொகையில் பெரும்பான்மையினரை, அல்லது அரைப் பாட்டாளிகளை, நாம் திரட்டி ஒழுங்கமைத்தால் இதை நாம் செய்ய முடியும்) அல்லது, இதே சிறு சொத்து உடைமை என்கிற மண்ணிலிருந்து தோன்றிய நெப்போலியன்களும் கவேன்யாக்குகளும் புரட்சியைத் தூக்கியெறிந்தது போலவே நிச்சயமாகவும், தவிர்க்க முடியாத வகையிலும் அவர்கள் நம்முடைய தொழிலாளர்களின் அதிகாரத்தைத் தூக்கியெறி வார்கள். இப்படித்தான் பிரச்சினை நிற்கிறது. ''உழைக்கும்'' விவசாயிகளைப் பற்றிய தங்களுடைய வெற்றுச் சொற்களின் பனிமூட்டத்தினூடே யிருந்துகொண்டு இடதுசாரி சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகள் மட்டுமே வெளிப்படையான, பச்சை யான இந்த உண்மையைப் பார்க்கத் தவறுகிறார்கள், ஆனால் வாய்ச்சொல் வீச்சுள்ள இந்த இடதுசாரி சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகளை யார் மதிக்கிறார்கள்?

தனது ஆயிரக்கணக்கான சில்லறைப் பணங்களைப் பதுக் கும் குட்டிபூர்ஷ்வா அரசு முதலாளித்துவத்தின் விரோதியா வான். தன்னுடைய சில்லறைப் பணங்களை அவன் தனக்காக மட்டுமே பயன்படுத்த விரும்புகிறான்—ஏழை மக்களுக்கு எதிராக, எந்த வகைப்பட்ட அரசுக் கண்காணிப்புக்கும் எதிராக. பலப்பல கோடிகளாகக் கூடும் இந்த ஆயிரங்களின் ஒட்டு மொத்தமே, கொள்ளை லாபத்தனத்துக்கு அடிப்படை யாகிறது; அது நமது சோஷலிஸ்ட் நிர்மாணத்தைப் பல வீனப்படுத்துகிறது. 1,000க்குச் சமமான மதிப்புகளை ஒரு சில நாட்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தொழி லாளர்கள் உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்வோம். பிறகு, சிறு அளவான கள்ள வியாபாரத்தாலும் பலவிதமான கையாடல்களாலும், சிறு உடைமையாளர்கள் சோவியத் உத்தரவுகளையும் விதிகளையும் ஏய்ப்பதாலும் இந்த மொத் தத்தில் 200 மறைந்துவிட்டது என்றும் வைத்துக்கொள் வோம். அந்த 1,000ல் 300 கொடுப்பதின் மூலமாக இன்ன மும் மேலான ஒழுங்கும் ஒழுங்கமைப்பும் பெற முடியுமா யின், தான் 200க்குப் பதிலாக 300 விரும்பிக் கொடுப்பதாக ஒவ்வொரு வர்க்க உணர்வுள்ள தொழிலாளியும் சொல்

வான்; ஏனெனில் பின்னுல்—ஒழுங்கும் ஒழுங்கமைப்பும் நிலை நிறுத்தப்பெற்றதும், அரசு ஏகபோகத்தைக் குட்டிபூர்ஷ்வா சிதறடிப்பதை முற்றுக ஒழித்ததும்—இந்தக் ''கப்பத்தை'' 100 ஆகவோ 50 ஆகவோ (எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்) குறைத்துவிடுவது சோவியத் ஆட்சியின் கீழ் மிகச் சுலபமாகும்.

இந்த எளிய எண் ரூபத்திலுள்ள உதாரணவிளக்கம்—தெட்டத்தெளிவாகப் புலப்படுத்த வேண்டுமென்பதற்காக நான் வேண்டுமென்றே ஆனமட்டும் எளிதாக்கி யிருக்கிறேன்—அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்கும் உள்ள தற்போதைய சார்பு உறவுநிலையை விளக்குகிறது. சோஷலிஸ்ட் காரியங்களுக்காக அன்றி மற்றப்படி ஒரு தம்பிடிகூட விடாமல் அந்த ஆயிரம் முழுவதையும் ''எடுத்துக்கொள்ளும்'' சட்ட வாய்ப்புடன் தொழிலாளர்கள் அரசு அதிகாரம் வைத்திருக்கிறுர்கள். யதார்த்தத்தில் தொழிலாளர் கைக்கு அதிகாரம் மாறியிருப்பதில் ஆதாரப்பட்டுள்ள இந்தச் சட்ட வாய்ப்பு சோஷலிஸத்தின் ஒரு அம்சம்.

ஆனுல், பல வழிகளிலே, சிறு உடைமை அம்சமும் தனிப்பட்ட முதலாளித்துவ அம்சமும் இந்தச் சட்ட நிலையைப் பலவீனப்படுத்துகின்றன; கள்ள வியாபாரத்தை இழுத்து வருகின்றன; சோவியத் உத்தரவுகளை நிறைவேற்றுவதைத் தடங்கல் செய்கின்றன. நாம் இன்று கொடுப்பதைவிட அதிகமாகக் கொடுத்த போதிலும்கூட (இதைப் பளிச்செனத் தெளிவாக்கும் பொருட்டு வேண்டுமென்றே இப்படிப்பட்ட எண்ரூபமுள்ள உதாரணத்தை எடுத்துக்கொண்டேன்) அரசு முதலாளித்துவம் ஒரு மிகப் பெரிய முன்னேற்றப்படியாக இருக்கும்; ஏனெனில் ''பாடம் கற்பதன்'' பொருட்டு அதிக விலை கொடுப்பது லாபகரமானது; தொழிலாளர்களுக்குப் பயனுள்ளது; ஏனெனில் ஒழுங்கின்மை, பொருளாதார நாசம், கண்டிப்பின்மை ஆகியவற்றை வெல்வதுதான் மிகமிக முக்கியமான விஷயம்; ஏனெனில் சிறு உடைமையின் அராஜகம் நீடிப்பதானது ஆகமிகப் பெரிய, மிகத் தீவிரமான அபாயமாகும்; அது நிச்சயமாக நமக்குக் கேடாக அமையும் (அதை நாம் வெல்லாவிட்டால்). ஆனுல் அரசு முதலாளித்துவத்துக்கு இன்னும் அதிக அளவில் கப்பம் கொடுப்பதால் நாம் நாசமாக மாட்டோம். அது நம்மை நிச்சயமான பாதை

யிலே சோஷலிஸத்துக்குக் கொண்டுபோய்விடும். சிறு உடைமையின் அராஜகத்திலிருந்து அரசு அமைப்பை எப்படிப் பாதுகாப்பது என்று தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்ளும் பொழுது, பெரும் அளவு உற்பத்தியை தேச ரீதியிலே அரசு முதலாளித்துவப் தாதையிலே அமைக்க அது கற்றுக் கொள்ளும் பொழுது, அது தன் கையில் (இந்தச் சொல்லை நான் உபயோகிக்கக் கூடுமானால்) எல்லாத் துருப்புச் சீட்டுகளையும் வைத்திருக்கும், சோஷலிஸத்தைக் கெட்டிப் படுத்துவது நிச்சயமாகிவிடும்.

முதலாவதாக, பொருளாதார ரீதியிலே, நம்முடைய இன்றையப் பொருளாதார அமைப்பைவிட அளவிடமுடியாத அளவுக்கு எவ்வளவோ மேலானது அரசு முதலாளித்துவம்.

இரண்டாவதாக, இதில் சோவியத் ஆட்சிக்குப் பயங்கரமானதாக ஒன்றுமில்லை. ஏனெனில் சோவியத் அரசு என்பது தொழிலாளர்களின், ஏழை மக்களின் அதிகாரம் உறுதிப் படுத்தப்பெற்றுள்ள ஒரு அரசாகும். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தக் கேள்விக்கிடமற்ற உண்மைகளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்; பொதுவாகவே அரசியல் பொருளாதாரத்தைப்பற்றிய எந்தக் கருத்துக்களையும் மண்டையிலே ஏற்றிக்கொள்ள முடியாத ஒரு ''இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதி'' இவற்றை என்றைக்கும் புரிந்து கொள்ள மாட்டான்; ஆனால் அவற்றை ஒவ்வொரு மார்க்ஸீயவாதியும் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். ஒரு இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதியோடு விவாதிப்பதிலும் கூடப் பயனில்லை. ஒரு வாய்வீச்சுக்காரனுக்கு ''வெறுப்பூட்டும் உதாரணமாக'' அவனைச் சுட்டிக்காட்டுவதே போதுமானது. ஆனால் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டோடு'' விவாதித்தாக வேண்டும்; ஏனெனில் தவறு செய்பவன் மார்க்ஸீயவாதி, அவனுடைய தவற்றைப் பகுத்தாராய்வது தொழிலாளி வர்க்கம் உண்மையான பாதையைக் கண்டு செல்வதற்கு உதவும்.

## IV

விஷயத்தை இன்னும் மேலாகத் தெளிவாக்க, நாம் அரசு முதலாளித்துவத்தின் மிக ஸ்தூலமான உதாரணத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். இந்த உதாரணம் எது

என்று எல்லோருக்கும் தெரியும். அது ஜெர்மனிதான். இங்கே, நவீன பெருமளவு முதலாளித்துவப் பொறியியலின், ஜங்கர்-பூர்ஷ்வா ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ள திட்டமிட்ட ஒழுங்கமைப்பின் மிகச் செவ்வையான வடிவத்தைப் பார்க்கிறோம். கொட்டை எழுத்துக்களில் உள்ள சொற்களை அடித்துவிடுங்கள், இராணுவவாதி, ஜங்கர், பூர்ஷ்வா, ஏகாதிபத்திய அரசுக்குப் பதிலாக இன்னொரு அரசை வையுங்கள், வேறொரு சமுதாய மாதிரியைச் சேர்ந்த, வேறொரு வர்க்க உள்ளடக்கமுள்ள அரசை, ஒரு சோவியத் அரசை, அதாவது ஒரு பாட்டாளி வர்க்க அரசை வையுங்கள்; சோஷலிஸத்திற்கு வேண்டிய நிலைமைகளின் மொத்தத் தொகை உங்களுக்குக் கிடைத்துவிடும்.

நவீன விஞ்ஞானத்தில் கடைசியாக வந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அமைந்த பெருமளவு முதலாளித்துவப் பொறியியல் இல்லாமல் சோஷலிஸத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒரு ஒன்றுபடுத்தப்பட்ட தரத்தை மிகமிகக் கண்டிப்புடன் பின்பற்றிவருமாறு பல கோடிக்கணக்கான மக்களை வைக்கிற திட்டமிட்ட அரசு அமைப்பு இல்லாமல் அதைப்பற்றிச் சிந்திக்கவே முடியாது. இதைப் பற்றி மார்க்ஸீயவாதிகளாகிய நாம் எப்போதும் பேசிவந்திருக்கிறோம். இதைக்கூடப் புரிந்து கொள்ளாதவர்களோடு (அராஜகவாதிகளும் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளில் சரிபாதிப் பேர்களும்) பேசி இரண்டு விநாடிகள் கூட வீணாக்குவதிலும் பயனில்லை.

அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கம் அரசின் ஆட்சியாளியாக இராவிட்டாலும் சோஷலிஸத்தைப்பற்றிச் சிந்திக்கவே முடியாது. இதுவும் அரிச்சுவடி. மேலும், வரலாறு (''முழுமையான'' சோஷலிஸத்தை மென்மையாக, மிருதுவாக, சுலபமாக, எளிதாக இது கொண்டுவந்து விடும் என்று முதல்தரமான மென்ஷெவிக் முட்டாள்கள் தவிர வேறுயாரும் எதிர்பார்க்கவில்லை) சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முட்டையோட்டுக்குள் எதிர்காலத்திய இரண்டு கோழிக்குஞ்சுகள் இருக்கிற மாதிரி ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாது அக்கம் பக்கமாக இருந்து கொண்டிருக்கும் சோஷலிஸத்தின் இரண்டு பாதிகளை 1918ல் பெற்றெடுத்திருக்கிற அளவுக்கு ஒரு விநோதமான போக்கிலே போயுள்ளது. 1918ல் ஜெர்

மனியும் ருஷ்யாவும், ஒரு பக்கத்தில், சோஷலிஸத்திற்குரிய பொருளாதார, உற்பத்தி ரீதியான, சமுதாய-பொருளாதார நிலைமைகளையும், இன்னொரு பக்கத்தில், அதற்குரிய அரசியல் நிலைமைகளையும் பௌதீக ரீதியிலே அடைந்துள்ள தின் விளக்கமான உருவெளிப்பாடாக ஆகியுள்ளன.

ஜெர்மனியில் உண்டாகும் ஒரு வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சி எந்தவிதமான ஏகாதிபத்திய முட்டை யோட்டையும் உடனடியாக, வெகு சுலபமாக உடைத் தெறியும் (அந்த முட்டை ஓடு, துரதிர்ஷ்டவசமாக, மிக நேர்த்தியான உருக்கிலே செய்யப்பட்டது; எனவே அதை எந்த... கோழிக்குஞ்சின் முயற்சிகளாலும் உடைத் தெறிய முடியாது,) எவ்விதக் கஷ்டங்களுமில்லாமல், அல்லது கொஞ்சக் கஷ்டங்களுடன்—''கஷ்டம்'' எனும் போது மிகக் குறுகிய அர்த்தத்திலல்லாமல் உலக வரலாற்று அளவிலே கஷ்டமானது என்கிற பொருளில் கொண்டால்—உலக சோஷ லிஸத்தின் வெற்றியை நிச்சயமாகச் சாதிக்கும்.

ஜெர்மனியில் புரட்சி ''பிறப்பது'' இன்னமும் மெது வாகவே இருந்து வருகையில், ஜெர்மானியர்களின் அரசு முதலாளித்துவத்தைப் பயில்வதும், அதை மேற்கொள்வதில் எந்த முயற்சியையும் மிச்சம் வைக்காமலிருப்பதும், அதை மேற்கொள்வதைத் துரிதப்படுத்துவதற்கு சர்வாதிகார வழி முறைகளை மேற்கொள்ளப் பின்வாங்காமலிருப்பதும் நம் கடமையாகும். அநாகரிகத்தை எதிர்த்துப் போராட அநாகரிகமான வழிமுறைகளைப் பயன்படுத்தத் தயங்காமல், அநாகரிக நிலையிலிருந்த ருஷ்யா மேற்கத்தியப் பண்பாட்டை மேற்கொள்வதைப் பீட்டர் துரிதப்படுத்தியதைவிட நாம் அதிகமாகத் துரிதப்படுத்த வேண்டும். நார்ஸிஸஸ் போன்ற சிந்தனைகளில் ஆழ்ந்து ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து ''பாடம் கற்றுக்கொள்வது'' புரட்சிக்காரர்களாகிய நமக்குத் தகுதியல்ல என்று சொல்கிற அராஜகவாதிகளும் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் இருப்பார்களேயானால் (மத்திய நிர்வாகக் கமிட்டிக்குமுன் கரேலின், கே ஆகியோரின் பேச்சுக்கள் தற்செயலாக நினைவுக்கு வந்தன), நாம் பதி லுக்குப் பின்வருமாறு சொல்ல முடியும்: இவர்களைப் பொருட் படுத்துகிற புரட்சி மீட்க முடியாதபடி அழிவுறும் (அழியத் தகுதியுடையதுமாகும்).

தற்சமயம், ருஷ்யாவில் குட்டிபூர்ஷ்வா முதலாளித்துவம் மேலோங்குகிறது. அதிலிருந்து ஒரேயொரு பாதைதான் பெருமளவு அரசு முதலாளித்துவம், சோஷலிஸம் ஆகிய இரண்டுக்கும் இட்டுச் செல்கிறது: ''தேசீய ரீதியான கணக்கு வைத்தல், உற்பத்தியையும் வினியோகத்தையும் கண்காணித்தல்'' என்று அழைக்கப்படுகிற ஒரே இடைக்கால ஸ்டேஷன் மூலமாக. இதைப் புரிந்துகொள்ளத் தவறுகிறவர்கள் ஒரு மன்னிக்க முடியாத பொருளாதாரவாதத் தவறு செய்கிறார்கள்: ஒன்று, அவர்கள் வாழ்க்கையின் உண்மைகளை அறியவில்லை, யதார்த்தத்தில் இருக்கிறதைப் பார்க்கவில்லை. உண்மையை நேர்முகமாகப் பார்க்க முடியாமலிருக்கிறார்கள்; அல்லது, அவர்கள் சூட்சுமமான நிலையிலே ''முதலாளித்துவத்தை'' ''சோஷலிஸத்துடன்'' ஒப்புநோக்குவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள், நம் நாட்டில் ஏற்பட்டு வருகிற மாற்றத்தின் ஸ்தூலமான வடிவங்களையும் கட்டங்களையும் பயிலத் தவறுகிறார்கள். இதே தத்துவ ரீதியான தவறுதான் ''நோவயா ஷிஸ்ன்'', ''வ்பெர்யோத்''[59] முகாமைச் சேர்ந்த தலைசிறந்த நபர்களை வழிதவறச் செய்தது என்று இடையுரையாக இங்குச் சொல்லலாம். இவர்களில் மிக மோசமானவர்களும் நடுத்தரப் பேர்வழிகளும் தங்களுடைய முட்டாள் தனத்தாலும் முதுகெலும்பற்ற தன்மையாலும், தாங்கள்பய பக்தியோடு பார்க்கிற பூர்ஷ்வா வர்க்கத்தின் பின்னே ஒட்டிக் கொண்டு செல்கிறார்கள். சோஷலிஸத்தின் போதகர்கள், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதின் ஒரு முழுக் காலகட்டத்தைப் பற்றிப் பேசியதும் புதிய சமுதாயத்தின் ''நீடித்த பிரசவ வேதனைகளைப்'' பற்றி வலியுறுத்தியதும் காரணம் இல்லாமலல்ல என்பதை அவர்களில் தலைசிறந்தவர்கள் புரிந்துகொள்ளத் தவறியிருக்கிறார்கள். மேலும், இந்தப் புதிய சமுதாயம் என்பதும் ஒரு சூட்சும விஷயமே; அது ஏதாவதொரு சோஷலிஸ்ட் அரசைச் சிருஷ்டிக்கத் தொடர்ச்சியான, பல்வகையான, செவ்வைப்பாடற்ற ஸ்தூலமான முயற்சிகளைக் கடந்து செல்வதின் மூலமாகத்தான் பிறக்க முடியும்.

அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்கும் பொதுவாயுள்ளதைத் (தேசீயரீதியான கணக்கு வைத்தல், கண்காணித்தல்) கடந்து செல்லாமல் இன்றிருக்கிற

பொருளாதார நிலைமையிலிருந்து ருஷ்யா முன்னேற முடியாது என்ற காரணத்தினுலேதான் ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிப் போகிற பரிணுமம்'' என்கிறதைக் கொண்டு (''கம்மூனிஸ்ட்'', இதழ் 1, பக்கம் 8, பத்தி 1) தங்களையும் பிறரையும் பயமுறுத்தும் முயற்சி தத்துவரீதியிலே முற்றுன அபத்தமாகும். இது, ''பரிணுமத்தின்'' உண்மையான பாதையை விட்டுச் சிந்தனைகளை வேறெங்கோ அலைந்து திரிய விடுவதாகும்; அந்தப் பாதை எதுவென்று புரிந்து கொள்ளத் தவறுவதுமாகும். நடைமுறையிலே, அது நம்மைச் சிறு உடைமை முதலாளித்துவத்தை நோக்கிப் பின்னுக்கிழுப்பதற்குச் சமம்.

அரசு முதலாளித்துவத்தைப் பற்றி இந்த ''உயர்வான'' மதிப்பு, நான் கொடுத்திருப்பது இது முதல் தடவை அல்ல என்றும், போல்ஷெவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே அதைக் கொடுத்தேன் என்றும் வாசகர்களை நம்பச் செய்வதற்காக ''நிகழவிருக்கும் விபத்து, அதை எதிர்த்து எப்படிப் போராடுவது'' என்கிற 1917, செப்டம்பரில் எழுதிய என்னுடைய சிறு நூலிலிருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்ட உரிமை எடுத்துக் கொள்கிறேன்:

''...ஜங்கர்-முதலாளித்துவ அரசுக்குப் பதிலாக, நிலப்பிரபு-முதலாளி அரசுக்குப் பதிலாக, ஒரு புரட்சிகரமான-ஜனநாயக அரசை, அதாவது எல்லாவிதச் சிறப்புச் சலுகைகளையும் புரட்சிகரமான வழியிலே அழிக்கிற, புரட்சிகரமான வழியிலே முழுமையான ஜனநாயகத்தைப் புகுத்தப் பயப்படாத ஒரு அரசை, வைக்க முயலுங்கள்; உண்மையான ஒரு புரட்சிகரமான-ஜனநாயக அரசு இருக்கிறதாக இருந்தால் அரசு-ஏகபோக முதலாளித்துவம் என்பது சோஷலிஸத்தை நோக்கிச் செல்லுவதற்குரிய ஒருபடி, ஒரு படிக்கும் மேலானதே என்று தவிர்க்க முடியாதபடி, தப்பிக்க முடியாதபடி அது உட்கிடையாக உணர்த்தும்!

''...ஏனெனில் சோஷலிஸம் என்பது அரசு-முதலாளித்துவ ஏகபோகத்திலிருந்து செல்கிற அடுத்த முன்னேற்றப் படியே தவிர வேறில்லை.

''...அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிஸத்திற்குரிய ஒரு முழுமையான பௌதிகத் தயாரிப்பு, சோஷ

லிஸத்தின் புகுவாயில், வரலாற்றின் ஏணியில் ஒரு படி, அதற்கும் சோஷலிஸம் என்கிற படிக்கும் இடையே வேறு இடைப்பட்ட படிகள் கிடையா'' (பக்கங்கள் 27, 28).

இது கேரென்ஸ்கிய் அதிகாரத்தில் இருந்தபோது எழுதப் பட்டது என்பதையும், நாம் விவாதிப்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றியல்ல, சோஷலிஸ்ட் அரசு பற்றியல்ல, ''புரட்சிகரமான-ஜனநாயக'' அரசு பற்றியே என்பதையும் தயவு செய்து கவனியுங்கள். இந்த அரசியல் ஏணியிலே நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிக உயரத்தில் இருக்கிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிக முழுமையாக நாம் சோஷலிஸ்ட் அரசையும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் சோவியத்துக்களில் இணைத்துக் கலந்துவிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாக நாம் ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றி பயப்பட வேண்டியிருக்கும் என்று தெளிவாகவில்லையா? பௌதிக, பொருளாதார, உற்பத்திப் பார்வை நிலையிலிருந்து பார்க்கையில் நாம் இன்னும் சோஷலிஸத்தின் ''புகுவாயிலில்'' அடிவைக்கவில்லை என்று தெளிவாகவில்லையா? நாம் இன்னும் எட்டாத ''புகுவாயிலைத்'' தாண்டாமல் சோஷலிஸத்தின் கதவு வழியே நுழைந்து செல்ல முடியாது என்று தெளிவாகவில்லையா?

பிரச்சினையை எந்தப் பக்கத்திலிருந்து அணுகினாலும், ஒரே யொரு முடிவுதான் எடுக்க முடியும்; நம்மைப் பயமுறுத்துச் சொல்லப்படுகிற ''அரசு முதலாளித்துவம்'' பற்றிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வாதம் பொருளாதாரரீதியில் ஒரு முற்றான தவறாகும், அவர்கள் குட்டி பூர்ஷ்வாத் தத்துவார்த்தத்தின் முழு அடிமைகள் என்பதற்கு வெளிப்படையான சான்றாகும்.

## V

பின்வருவதும் மிகவும் படிப்பினையளிக்கும் விஷயமேயாகும்.

மத்திய நிர்வாகக் குழுவில் நாங்கள் தோழர் புகாரினோடு விவாதித்த போது, மற்ற விஷயங்களுக்கிடையே அவர் சொன்னார்: நிபுணர்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கிற பிரச்சினையில் ''நாங்கள்'' (''இடதுசாரிக் கம்யூனிஸ்டு

களையே'' அவர் குறிப்பிட்டார் என்பது தெளிவு) ''லெனினை விட வலதுசாரியாக இருந்தோம்''; ஏனெனில் இந்த வழக்கில் ''நாங்கள்'' கோட்பாட்டிலிருந்து விலகுகிற திரிபைப் பார்க்கவில்லை; ''அவர்கள் அத்தனை பேரையுமே பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடுவது''[60] (அதாவது, முதலாளிகள் அத்தனை பேரையும் சரிக்கட்டிவிடுவது, பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து நிலத்தையும், தொழிற்சாலைகளையும், உற்பத்திக் கூடங்களையும், மற்ற உற்பத்திச் சாதனங்களையும் விலைக்கு **வாங்கிப் போடுவது**) சில குறிப்பிட்ட நிலைமைகளில் தொழிலாளிவர்க்கத்துக்குச் சந்தர்ப்பப்பயனுள்ளதாகும் என்கிற மார்க்ஸின் சொற்களை நினைவில் வைத்திருந்தோம் என்று.

முதன்முதலிலே, மிகவும் அக்கறைக்குரிய இந்தக் கூற்று தோழர் புகாரின் அராஜகவாதிகளைவிட, இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளைவிட, எவ்வளவோ உயர்ந்தவர் என்றும், வாய்ச்சொல்வீச்சுச் சகதியிலே நம்பிக்கைக்கிடமற்ற முறையிலே அவர் நிச்சயமாக அழுந்திக் கிடக்கவில்லை, அதற்கு மாருக முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் போகிற மாற்ற நிலையின்—வேதனை தருகிற, கஷ்டமான மாற்ற நிலையின்—ஸ்தூலமான கஷ்டங்களைச் சிந்தித்தறிய முயற்சிகள் எடுத்து வருகிருர் என்றும் காட்டுகிறது.

இரண்டாவதாக, இந்தக் கூற்று புகாரினுடைய தவற்றை மேலும் தெற்றெனக் காட்டுகிறது.

மார்க்ஸின் கருத்தைக் கவனமாகப் பார்ப்போம்.

சென்ற நூற்றுண்டின் எழுபதுகளைச் சேர்ந்த பிரிட்டனைப் பற்றி, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச நிலைபற்றி மார்க்ஸ் பேசிக்கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் மற்ற நாடுகளைவிட இராணுவ வெறியும் அதிகார வர்க்கமும் குறைவாக இருந்த நாடாக பிரிட்டன் இருந்தது; தொழிலாளர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தைப் ''பணம் கொடுத்துச் சரிக்கட்டிவிடுவது'' என்கிற அர்த்தத்தில் சோஷலிஸத்துக்கு ''சமாதானபூர்வமான'' வெற்றி கிடைக்கும் சாத்தியப்பாடு மிக அதிகமாக உள்ள நாடாக பிரிட்டன் இருந்தது. சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டிவிட நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்று மார்க்ஸ் சொன்

ளுர். வடிவ விவகாரங்கள் பற்றி, புரட்சியை உண்டாக்குவதற்குரிய வழிவகைகளைப் பற்றி, மார்க்ஸ் தம்மையோ, சோஷலிஸ்ட் புரட்சியின் எதிர்காலத் தலைவர்களையோ, கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பெரும் எண்ணிக்கையில் புதிய பிரச்சினைகள் எழும் என்றும் புரட்சியின் போக்கிலே மொத்த நிலைமையே மாறும் என்றும் புரட்சியின் போக்கிலே நிலைமை திவிரமாகவும் அடிக்கடியும் மாறும் என்றும் மார்க்ஸ் நன்ருகப் புரிந்துகொண்டிருந்தார்.

சரி, சோவியத் ருஷ்யாவைப் பற்றி என்ன? பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைப் கைப்பற்றிய பிறகு, சுரண்டுபவர்களின் ஆயுதமேந்திய எதிர்ப்பையும் நாச வேலையையும் நசுக்கிய பிறகு, சில நிலைமைகள் நிலவுகின்றன, அரை நூற்ருண்டுக்கு முன் பிரிட்டனில் சோஷலிஸத்துக்குரிய ஒரு சமாதான பூர்வமான மாற்றம் தொடங்கியிருந்தால் என்ன நிலைமைகள் இருந்திருக்கக் கூடுமோ அவற்றிக்குப் பொருத்தமாக அவை உள்ளன என்று தெளிவாகவில்லையா? பிரிட்டனில் முதலாளிகள் தொழிலாளர்களுக்குக் கீழ்ப்படுவது பின்வரும் சந்தர்ப்பங்களின் காரணமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்: (1) ஒரு விவசாயிகள் வகுப்பு இல்லாததால் ஜனத்தொகையில் தொழிலாளர்களின், பாட்டாளிகளின், முற்ருன பெரும்பான்மை இருந்தது (பிரிட்டனில், எழுபதுகளில், விவசாயத் தொழிலாளர்களிடையே சோஷலிஸம் மிகத் துரிதமாகப் பரவும் என்கிற நம்பிக்கை இருந்தது); (2) பாட்டாளிகள் தொழிற்சங்கங்களிலே மிக நேர்த்தியாக ஸ்தாபன ரீதியில் அமைப்பு பெற்றிருந்தது(இந்த அம்சத்தில் பிரிட்டன் உலகத்திலேயே தலைமை ஸ்தானத்தில் இருந்த நாடாகும்); (3)நூற்ருண்டுக் காலத்திய அரசியல் சுதந்திரத்தின் வளர்ச்சியால் பயிற்றப்பட்டிருந்த பாட்டாளி வர்க்கம் ஒப்புநோக்கில் உயர்ந்த பண்பாட்டுத் தரம் கொண்டிருந்தது; (4) நன்கு ஒழுங்கமைப்பு பெற்றுள்ள பிரிட்டிஷ் முதலாளிகள்—அந்தச் சமயத்தில் உலகத்தில் வேறெந்த நாட்டையும்விட பிரிட்டனிலேதான் முதலாளிகள் நன்கு ஒழுங்கமைப்பு பெற்றிருந்தனர்(இந்த மேல்நிலை இப்போது ஜெர்மனிக்கு மாறிப் போயுள்ளது)—அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமரசம் மூலமாகத் தீர்க்கும் பழைய பழக்கம் பெற்றிருந்தது. தொழிலாளர்கள் பிரிட்டிஷ் முதலாளிகளைச் சமாதான பூர்வமாகக்

கீழ்ப்படியச் செய்வது சாத்தியமே என்கிற கருத்தை இந்தச் சந்தர்ப்பங்களே அக்காலத்தில் எழச்செய்தன.

நம் நாட்டில், தற்சமயம், அடிப்படையான குறி பொருளுள்ள சில முதனிலைகளால் (அக்டோபரின் வெற்றி, அக்டோபரிலிருந்து பிப்ரவரி வரை முதலாளிகளின் ஆயுத மேந்திய எதிர்ப்பையும் நாசவேலையையும் ஒடுக்கியது) இந்தக் கீழ்ப்படியச் செய்தல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஜனத்தொகையில் தொழிலாளர்களின், பாட்டாளிகளின் முற்றான மேல்நிலைக்குப் பதிலாக, அவர்களிடையே அதி உயர் தரமான அளவிலே ஸ்தாபன அமைப்பு இருப்பதற்குப் பதிலாக, ருஷ்யாவில் வெற்றிக்குரிய முக்கியமான காரணியாக விளங்கியது ஏழை விவசாயிகளிடமிருந்தும் திடீரென்று நாசம் அனுபவித்துவிட்ட விவசாயிகளிடமிருந்தும் தொழிலாளர்கள் பெற்ற ஆதரவாகும். கடைசியாக, ஒரு உயர்தரமான அளவுக்குப் பண்பாடோ, சமரசம் செய்துகொள்ளும்பழக்கமோ, நமக்கு இல்லை. இந்த ஸ்தூலமான நிலைமைகளைக் கவனமாகப் பரிசீலித்தால், நாம் இரண்டு வழிமுறைகளை ஒரே காலத்தில் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும் என்று தெளிவாகும். ஒரு பக்கத்தில், ''அரசு முதலாளித்துவத்தோடு'' எவ்விதச் சம்பந்தத்தையும் அல்லது எந்த விதச் சமரசத்தையும் நிராகரிக்கிற, சோவியத் நடவடிக்கைகளின் நிறைவேற்றத்துக்குக் கள்ள வியாபாரத்தாலும் ஏழை விவசாயிகளுக்கு லஞ்சம் கொடுப்பது முதலியவற்றாலும் தொடர்ந்து தடங்கல் செய்து வருகிற பண்பாடற்ற முதலாளிகளை நாம் ஈவிரக்கமின்றி நசுக்கவேண்டும்.* மற்

---

* இவ்வழக்கிலும் நாம் உண்மையை நேர்முகமாகப் பார்க்கவேண்டும். சோஷலிஸத்தின் வெற்றிக்கு இன்றியமையாத ஈவிரக்கமின்மை நமக்கு இன்னும் குறைவாகவே இருக்கிறது. குறைவாக இருப்பதற்குக் காரணம் நமக்குத் துணிவு இல்லாதது அல்ல. நமக்குப் போதிய துணிவு உண்டு. நமக்கு இல்லாதிருப்பது எதுவெனில், போதிய எண்ணிக்கையில் கள்ளவியாபாரிகளை, கொள்ளைக்காரர்களை, முதலாளிகளை—சோவியத்துக்கள் நிறைவேற்றும் நடவடிக்கைகளை மீறுகிற பேர்வழிகளை—வேகமாகப் பிடிக்கும் திறமையேயாகும். இதைச் செய்வதற்குரிய ''திறமையைக்'' கணக்கு வைப்பதையும் கண்காணிப்பையும் நிலைநிறுத்துவதின் மூலமாக மட்டுமே பெறமுடியும்! மற்றொரு விஷயம், நீதி மன்றங்கள்

ெருரு பக்கத்தில், சமரசம் செய்து கொள்ளும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்; அல்லது ''அரசு முதலாளித்துவத் துக்கு'' ஒத்துக் கொள்கிற, அதை நடைமுறையில் செயலாக்கத்திறமையுள்ள, கோடானுகோடி மக்களுக்குப் பண்டங்களை யதார்த்தத்தில் சப்ளை செய்கிற ஆகமிகப் பெரிய தொழிற் சாலைகளின் அறிவுள்ள, அனுபவமுள்ள ஒழுங்க மைப்பாளர்கள் என்கிற ரீதியிலே தொழிலாளி வர்க்கத் துக்குப் பயனுள்ளவர்களாயுள்ள, பண்பாடுள்ள முதலாளி களைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டிவிடும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

புகாரின் நன்கு படித்த ஒரு மார்க்ஸிய-பொருளாதார வாதி. ஆகவே, சோஷலிஸத்துக்கு மாறிச் செல்வதைச் சுளுவாக்குவதற்காகவே பெரும் அளவு உற்பத்திக்குரிய அமைப்பை வைத்துப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைத் தொழிலாளர்களுக்குப் போதித்தபோது மார்க்ஸ் மிக ஆழ்ந்த ரீதியிலே சரியான நிலைதான் எடுத்தார் என்று அவர் நினைவில் கொண்டார். பணம் கொடுக்கப்பட்டால் முதலாளிகள் சமா தானமாகக் கீழ்ப்படிந்து, பண்பாடுள்ள, ஒழுங்கமைந்; வகையில் சோஷலிஸத்தின் பக்கம் வரும்படி அவர்களை நிர்பந்திக்கத்தக்க சந்தர்ப்பங்கள் இருந்தால் (ஒரு விதி விலக்காக—அப்பொழுது பிரிட்டன் ஒரு விதிவிலக்குதான்) முதலாளிகளுக்கு நன்ருகப் பணம்கொடுக்கும் கருத்து சிந்திக்கத் தக்கதே என்று போதித்தார் மார்க்ஸ்.

ஆனுல் புகாரின் வழிதவறிச் சென்ருர்; காரணம், தற் சமயம் ருஷ்யாவிலுள்ள நிலைமையின் குறிப்பான குணம்சங் களுக்குள்ளே அவர் போதிய ஆழத்துடன் புகவில்லை—அது ஒரு அசாதாரணமான நிலைமை, அதில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கமாகிய நாம், நம்முடைய அரசியல் அமைப்பையும் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தின் பலத்தையும் பொறுத்தவரையில் எந்த பிரிட்டனையும்விட, எந்த ஜெர்

---

போதிய அளவுக்கு உறுதியாக இல்லை. லஞ்சம் வாங்கும் பேர்வழிகளைச் சுட்டுத்தள்ளத் தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக, அவை ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கின்றன. இவ் விரண்டு குறைபாடுகளுக்கும் ஒரேமாதிரியான வேர் உண்டு; குட்டிபூர்ஷ்வா அம்சத்தின் செல்வாக்கு, அதன் தொள தொளாத் தன்மை.

மனியையும்விட முன்னேறிய நிலேயில் இருக்கும்போதே, ஒரு நல்ல அரசு முதலாளித்துவத்தை ஒழுங்காக அமைப்பதைப் பொறுத்தவரையில், பண்பாட்டின் தரம், சோஷலிஸத்தைப் ''புகுத்துவதற்கு'' வேண்டிய பௌதிக, உற்பத்தி தயாரிப்பு நிலேயின் அளவு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மிகமிகப் பிற்பட்ட மேற்கு ஐரோப்பிய நாட்டையும்விட பின்தங்கி இருக்கிறோம். இன்றைய நிலேமையின் குறிப்பான தன்மை யானது ஒரு குறிப்பிட்ட விதமான ''பணம் கொடுத்துச் சரிக் கட்டுதலின்'' அவசியத்தைச் சிருஷ்டிக்கிறது; அதைத் தொழிலாளர்கள், சோவியத் அதிகாரத்தின் சேவையில் ஈடு படவும் கூடியவரை பெரிய அளவிலே, ஆகப் பெரிய அளவிலே 'அரசு'' உற்பத்தியை ஒழுங்கமைப்பதிலே நேர்மையோடு உதவிபுரியவும் தயாராயிருக்கும் முதலாளிகளிடையேயுள்ள மேலான பண்பாடு கொண்ட, மேலான திறனுடைய, மேலான சக்தி வாய்ந்த ஒழுங்கமைப்பாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெளிவாகவில்லேயா? இந்தக் குறிப்பிட்ட நிலேமையில் இரண்டு தவறுகளே—அவ்விரண்டுமே ஒரு குட்டி பூர்ஷ்வா இயல்புள்ளவை—தவிர்க்க நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும் என்று தெளிவாகவில்லேயா? ஒரு பக்கத்தில், நமது பொருளாதாரச் ''சக்திகளுக்கும்'' நமது அரசியல் பலத்துக்கும் இடையே ஒரு இசைவின்மை இருக்கிற படியால் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கக் கூடாது[61] என்று அதிலிருந்து ''பெறப்படுகிறது'' எனப் பிரகடனப் படுத்துவது ஒரு மரணுபத்தான தவருக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு ''இசைவின்மை'' எப்போதும் இருக்கும்; இயற்கையின் வளர்ச்சியிலும் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அது எப் போதும் இருந்து வருகிறது, வரிசையான முயற்சிகள் மூல மாக மட்டுமே—அவற்றில் ஒவ்வொன்றும், தனித்தனியாக எடுத்துப்பார்த்தால், ஒருசார்பானதாக இருக்கும், சில இசை வின்மைகளேக் கொண்டதாக இருக்கும்—எல்லா நாடுகளே யும் சேர்ந்த தொழிலாளர்களின் புரட்சிகரமான ஒத்துழைப் பால் முழுமையான சோஷலிஸம் சிருஷ்டிக்கப்படும் என்பதை மறக்கிற ஒரு ''உருமாலே முக்காடிட்ட மனிதன்''[62] மட்டுமே அப்படிப்பட்ட வாதத்தை முன்வைக்க முடியும்.

இன்னெரு பக்கத்தில், ''கண்ணேப் பறிக்கும்'' புரட்சி உணர்ச்சியால் நிலேகுலேய இடங்கொடுத்துவிடுகிற, ஆனல்

மிகக் கஷ்டமான மாற்றக் கட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்கிற, தொடர்ச்சியான, சிந்தனை பூர்வமான, நிதானப் புத்தியுள்ள புரட்சி வேலைக்குத் திறனற்ற, வாய் வீரர்களுக்கும் வாய்வீச்சுக்காரர்களுக்கும் முழுச் சுதந்திரம் கொடுத்து விடுவதும் ஒரு வெளிப்படையான தவருகவே இருக்கும்.

அதிர்ஷ்டவசமாக, புரட்சிகரமான கட்சிகளின் வளர்ச்சி வரலாறும், அவற்றை எதிர்த்து போல்ஷெவிஸம் நடத்திய போராட்டத்தின் வரலாறும், நமக்குக் கூர்மையாக வரையறை செய்யப்பட்ட மாதிரிகளின் மரம்பரையைத் தந்துள்ளன; அதில் மோசமான புரட்சிக்காரர்கள் என்பதற்குத் தெற்றெனத் தெரியும் எடுத்துக்காட்டுகளாக இடதுசாரி சோஷலிஸ்ட்—புரட்சிவாதிகளும் அராஜகவாதிகளும் உள்ளனர். அவர்கள் இப்போது ''வலதுசாரி போல்ஷெவிக்குகளின்'' ''சமரசத்தைப்'' பற்றி ஜன்னிக்கூச்சல் போட்டு வருகிருர்கள்; தொண்டை யடைத்துக் கட்டிக் கொள்ளும் முறையில் கூக்குரலிட்டு வருகின்றனர். ஆனால், ''சமரசத்திலே'' எது தப்பு என்றும், வரலாறும் புரட்சியின் போக்கும் ஏன் ''சமரசத்தை'' நியாயமாகவே கண்டித்துள்ளன என்றும் சிந்திக்க அவர்கள் திறனற்றவர்கள்.

கேரென்ஸ்கிய் காலத்தில் சமரசம் என்பதற்குப் பொருள் அதிகாரத்தை ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்திற்கு விட்டுக் கொடுப்பதாகும்; மேலும் அதிகாரம் பற்றிய பிரச்சினையே ஒவ்வொரு புரட்சியின் அடிப்படையான பிரச்சினையாகும். 1917, அக்டோபர்—நவம்பர் மாதங்களில் போல்ஷெவிக்குகளில் ஒரு பகுதியினர் சமரசம் செய்து கொள்வது என்பதற்குப் பொருள், ஒன்று, அவர்கள் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைப் பற்றி பயப்பட்டனர்; அல்லது, அதிகாரத்தைச் சரிசமமாக இடதுசாரி சோஷலிஸ்ட்—புரட்சிவாதிகள் போன்ற ''நம்பத் தகுதியற்ற சகப்பிரயாணிகளோடு'' மட்டுமல்லாமல் எதிரிகளுடனும், செர்னேவ் வகையருக்களுடனும் மென்ஷெவிக்குகளுடனும், பங்கிட்டுக் கொள்ள விரும்பினர் என்பதேயாகும். பின்குறிப்பிட்டவர்கள், அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது[63], பொகயேவ்ஸ்கிய் வகையருக்களை ஈவிரக்கமின்றி நசுக்கியது, சர்வவியாபகமாக சோவியத் ஸ்தாபனங்களை நிறுவியது, ஒவ்வொரு பறிமுதல் நடவடிக்கை போன்ற அடிப்

படையான விவகாரங்களில் தவிர்க்க இயலாத முறையில் நமக்குத் தடங்கல் செய்திருப்பார்கள்.

இப்போது ''நம்பத் தகுதியற்ற சகப்பிரயாணிகள்'' கூட இல்லாமலே ஒரு கட்சியால், பாட்டாளி வர்க்கக் கட்சியால், அதிகாரம் கைப்பற்றப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டு, கெட்டிப் படுத்தப்பட்டுள்ளது. அதிகாரத்தைப் பங்கிடுவது, பூர்ஷ்வா வர்க்கத்தின் மேலுள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை விட்டுக் கொடுப்பது பற்றிய பிரச்சினையே இல்லாதிருக்கையில், இருக்கமுடியாதிருக்கையில், இந்தச் சமயத்தில் சமரசம் பற்றிப் பேசுவது புரிந்துகொள்ளாமல் மனப்பாடம் செய்து கொண்ட வார்த்தைகளைக் கிளிப்பிள்ளை போல் திருப்பிச் சொல்வதேயாகும். நாம் நாட்டை ஆள முடியும், ஆளவேண்டும் என்கிற நிலைமையை எட்டிவிட்ட பிறகு, முதலாளித்துவம் பயிற்றுவித்த மிகவும் திறமையுள்ள நபர்களைச் செலவைப் பொருட்படுத்தாமல் நம் பக்கத்திற்கு வரச் செய்யவும், சிறு உடைமையின் உடைவை எதிர்த்து நம் சேவையில் அவர்களை எடுத்துக்கொள்ளவும், நாம் முயல்கிற விஷயத்தை ''சமரசம்'' என்று வர்ணிப்பது சோஷலிஸ நிர்மாணத்தின் பொருளாதாரக் கடமைகளைத் தீர்க்கமாகச் சிந்தித்தறிய அறவே சக்தியில்லாத் தன்மையைத் தான் வெளிப்படுத்துகிறது.

எனவே, மத்திய நிர்வாகக் குழுவில் தோழர் புகாரின் தனக்குக் கரேலினும் கேயும் செய்த ''சேவையைப்'' பற்றி உடனேயே ''வெட்கப்பட்டது'' அவருக்குப் பெருமையே என்றாலும், ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' போக்கு பொறுத்த மட்டில், அவர்களுடைய அரசியல் தோழர்களைப் பற்றிய குறியீடு இன்னமும் ஒரு கடுமையான எச்சரிக்கையாகவே இருந்து வருகிறது.

உதாரணத்துக்கு இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகளின் பத்திரிகையான ''ஸ்னமியா த்ருதா'', 1918, ஏப்ரில் 18 தேதிய இதழை எடுத்துக் கொள்ளுங்கள். அது பெருமையோடு பிரகடனப்படுத்துவதாவது: ''நம் கட்சியின் இன்றைய நிலை போல்ஷெவிஸத்திலுள்ள மற்றொரு போக்குடன் (புகாரின், பொக்ரோவ்ஸ்கிய், மற்றவர்கள்) ஒன்றாகப் பொருந்துகிறது'' என்று. அல்லது அதே தேதியிட்ட மென்ஷெவிக் ''வ்பெர்யோத்'' என்று பத்திரிகையை எடுத்துக்

கொள்ளுங்கள். அதில் மற்ற கட்டுரைகளுக்கிடையே, அபகீர்த்திமிக்க மென்ஷெவிக் ஈஸூவ் எழுதிய பின்வரும் ''ஆய்வுரையைப்'' பாருங்கள்:

''தொடக்கத்திலிருந்தே ஒரு உண்மையான பாட்டாளி வர்க்கத் தன்மை இல்லாதிருக்கும் சோவியத் அதிகாரத்தின் கொள்கை சமீபகாலத்தில் மேலும் மேலும் பகிரங்கமாக பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கைப் பின்பற்றியுள்ளது, வெளிப்படையான தொழிலாளி வர்க்கத்துக்கு விரோதமான தன்மையைப் பெற்றுள்ளது. தொழிலைத் தேசியமயமாக்குதலின் சாக்கிலே தொழில் டிரஸ்டுகளை நிலைநாட்டும் கொள்கையை அவர்கள் பின்பற்றுகிறார்கள்; நாட்டின் உற்பத்திச் சக்திகளை மீட்டு நிறுவுவதின் சாக்கிலே அவர்கள் எட்டுமணி நேர வேலையை ஒழிக்கவும் வேலை அளவுக்கேற்ற சம்பள ஏற்பாட்டையும் டெய்லர் முறையையும் தண்டனைப் பட்டியல்களையும் குற்றஞ்சாட்டி வேலையிலிருந்து நீக்குதலையும் புகுத்த முயல்கிறார்கள். இந்தக் கொள்கை பாட்டாளி வர்க்கத்திலிருந்து அதன் அதிமுக்கியமான பொருளாதார ஆதாயங்களைப் பறிக்கவும், பூர்ஷ்வா வர்க்கத்தின் வரம்பற்ற சுரண்டலுக்கு அதை இரையாக்கவும் வழிகோலி வருகிறது.''

பிரமாதம், இல்லையா?

ருஷ்ய முதலாளிகளுக்கு நாடுகளை எடுத்துக் கொள்ள வாக்குறுதி தந்த இரகசிய ஒப்பந்தங்களுக்காக ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தைக் கேரென்ஸ்கியோடு சேர்ந்து நடத்திய அவருடைய நண்பர்கள், ஜூன் 11ம் தேதியன்று தொழிலாளர்களை நிராயுதபாணியாக்குவதாகப் பயமுறுத்திய த்ஸெரெத்தேலியின் கூட்டாளிகள்[64], படாடோபமான சொற்களைக் கொண்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியைத் திரையிட்டு மறைத்த லீபெர்டான்கள்[65],—இதே பேர்வழிகள் தாம் சோவியத் ஆட்சி ''பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்கிறது'' என்றும், ''டிரஸ்டுகளை நிலைநாட்டுகிறது'' என்றும் (அதாவது ''அரசு முதலாளித்துவத்தை'' நிலைநாட்டுகிறது!), டெய்லர் முறையைப் புகுத்துகிறது என்றும் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

உண்மைதான், போல்ஷெவிக்குகள் ஈஸூவுக்கு ஒரு பதக்கம் தரவேண்டும்; அவருடைய ஆய்வுரை ஒவ்வொரு தொழிலாளர் கிளப்பிலும் சங்கத்திலும் காட்சிக்கு வைக்

கப்பட வேண்டும்—பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆத்திரமூட்டும் பிரசங்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக. தொழிலாளர்களுக்கு இந்த லீபெர்டான்களையும், த்ஸெரெத்தேலிகளையும், ஈஸாஃவ்களையும் நன்ருகத் தெரியும். இப்பேர்ப்பட்ட நபர்களை அனுபவத்திலிருந்து அவர்கள் தெரிந்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட பூர்ஷ்வா வர்க்கத்தின் ஏவலாட்கள் தொழிலாளர்களை டெய்லர் முறையையும் ''டிரஸ்டுகளை நிறுவுவதையும்'' எதிர்க்கும்படி தூண்டுவதற்குக் காரணம் என்ன என்பதைத் தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் லீபெர்டான்களின், ஸெரெத்தேலி வகையருக்களின் நண்பனுகிய ஈஸாஃவின் ஆய்வுரையையும்'' ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பின்வரும் ஆய்வுரையையும் கவனமாக ஒப்புநோக்குவார்கள்:

''தொழில் துறையில் முதலாளிகளின் நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம்பந்தமாக உழைப்புக் கட்டுப்பாடு புகுத்துவது உழைப்பின் உற்பத்தித்திறனைக் கணிசமான அளவுக்கு அதிகப்படுத்த முடியாது; ஆனல் அது பாட்டாளிகளின் வர்க்க முன்முயற்சியையும், செயலூக்கத்தையும், ஒழுங்கமைப்பையும் குறைக்கும். அது தொழிலாளி வர்க்கத்தை அடிமைப்படுத்த வழிகோலுகிறது; அது பிற்பட்ட நிலையிலுள்ள நபர்களிடையேயும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையின் இடையேயும் அதிருப்தியை உண்டாக்கும். 'முதலாளித்துவ நாசவேலைக்காரர்களை' எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்திடையே நிலவும் பகைமைக்கு எதிர்முகமாக இந்த முறையை அமுலாக்குவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சியானது, தொழிலாளிகளுக்கு எதிராகக் குட்டிபூர்ஷ்வாக்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்; இந்த வழியிலே அது பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்ற முறையில் தன்னைத் தானே நாசப்படுத்திக் கொள்ளும்'' (''கம்மூனீஸ்ட்,'' இதழ் 1, பக்கம் 8, பத்தி 2).

''இடதுசாரிகள்'' வலையில் விழ்ந்து விட்டார்கள், ஈஸாஃவ் வகையருக்களும் முதலாளித்துவத்தைச் சேர்ந்த மற்ற துரோகிகளும் தங்களை ஆத்திரமூட்டிவிட இடங்கொடுத்து விட்டார்கள் என்பதற்கு இது மிகத் தெளிவான சான்ருகும். இது தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல பாடமாகப் பயன்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையேதான் உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தப்படுவதற்கு ஆதரவாக நிற்

கிறது என்பதையும், குட்டிபூர்ஷ்வா வர்க்கம்தான் இந்தக் கட்டுப்பாட்டைச் சிதறடிக்கத் தன்னாலான மட்டும் செய்து வருகிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள். ''இடதுசாரிகளின்'' மேலே மேற்கோள் காட்டிய ''ஆய்வுரை'' போன்ற பிரசங்கங்கள் பயங்கரமான மானக்கேடாகும், அதன் உட்குறிப்பு கம்யூனிஸத்தை நடைமுறையில் முற்றாகக் கைவிடுவது, குட்டிபூர்ஷ்வா வர்க்கத்தின் முகாமுக்கு முற்றாக ஓடிப்போய்விடுவது, ஆகும்.

''முதலாளிகளின் நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம்பந்தமாக''—இந்த வார்த்தைகளைக் கொண்டு ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' ''தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்'' என்று நம்புகிறார்கள். அறவே பயனற்ற ஒரு தற்காப்பு இது—ஏனெனில், முதலாவதாக, சோவியத் ஆட்சி முதலாளிகளின் கையில் ''நிர்வாகத்தை'' வைக்கும்போது, தொழிலாளர்களின் கமிஸார்களை அல்லது தொழிலாளர்களின் கமிட்டிகளை நியமிக்கிறது; அவை நிர்வாகி எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் கண்காணிக்கின்றன, அவை அவனுடைய நிர்வாகத்திலிருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்கின்றன, அவனுடைய உத்தரவுகளுக்கு எதிராக அப்பீல் செய்து கொள்ள அவற்றிற்கு உரிமை இருப்பது மட்டுமல்ல, சோவியத் ஆட்சியின் உறுப்புகளின் மூலமாக அவனைப் பதவியிலிருந்து நீக்கச்செய்யவும் முடியும். இரண்டாவதாக, வேலை செய்கிறபோது நிர்வாகக் காரியங்களுக்கு மட்டுமே முதலாளிகளிடம் ''நிர்வாகம்'' கொடுக்கப்படுகிறது; அவற்றின் நிபந்தனைகளை சோவியத் ஆட்சி நிர்ணயிக்கிறது; அவற்றை சோவியத் ஆட்சி ஒழிக்கக்கூடும், மாற்றக்கூடும். மூன்றாவதாக, சோவியத் அதிகாரம் ''நிர்வாகத்தை'' முதலாளிகளிடம் முதலாளிகள் என்கிற ஹோதாவில் அல்லாமல் தொழில்நுட்ப நிபுணர்கள் அல்லது ஒழுங்கமைப்பாளர்கள் என்கிற ஹோதாவிலே உயர்ந்த சம்பளங்களிலே கொடுக்கிறது. உண்மையிலே பெருமளவிலுள்ள, பிரமாண்டமான தொழிற்சாலைகளின், டிரஸ்டுகளின் அல்லது பிற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பாளர்களிலும் முதல்தரமான தொழில்நுட்ப நிபுணர்களிலும் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொழிலாளர்கள் நன்றாக அறிவார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சி

யாகிய நாம் இவர்களைத்தான் உழைப்பின் இயக்கப் போக்கை ''நிர்வகிக்கவும்'', உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் நியமிக்க வேண்டும்; காரணம், இந்த விஷயத்தில் நடை முறை அனுபவமுள்ள நபர்கள் வேறு யாரும் கிடையாது. ''இடதுசாரிச்'' சொற்களாலோ குட்டிபூர்ஷ்வாத்தனமான தொளதொளத்த சிந்தனையாலோ தடம்புரளச் செய்யப் படக் கூடிய தங்களுடைய குழந்தைப் பருவத்தைக் கடந்து வந்துள்ள தொழிலாளர்கள் டிரஸ்டுகளில் முதலாளித்துவ நிர்வாகத்தின் மூலமாகத்தான், பிரமாண்டமான இயந்திரத் தொழில் மூலமாகத்தான், ஆண்டுதோறும் பலகோடிப்பணப் புழக்கமுள்ள தொழில் அமைப்புகள் மூலமாகத்தான்—அப்படிப்பட்ட உற்பத்திமுறையின், அப்படிப்பட்ட தொழில் அமைப்புகளின், மூலமாகத்தான்—சோஷலிஸத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் குட்டி பூர்ஷ்வாத் தன்மையுடையவர்களல்ல. பெருமளவு ''அரசு முதலாளித்துவத்தைக்'' கண்டு அவர்கள் பயப்படவில்லை. அதை அவர்கள் தங்களுடைய, பாட்டாளி வர்க்கத்தினுடைய, உற்பத்திக்குரிய ஆயுதம் என்று தங்களுடைய, சோவியத் ஆட்சி சிறு உடைமைக்குரிய உடைவுக்கும் அமைப்புக் குலைவுக்கும் எதிராக அதைப் பயன்படுத்தும் என்று போற்றிப் பாவிக்கிறார்கள்.

இது வர்க்கத்தன்மையிழந்த, அதன் மூலமாக முற்றாகக் குட்டிபூர்ஷ்வாவாகிப்போன படிப்பாளிக் கூட்டத்துக்குத் தான் புரியக்கூடியதாயில்லை; ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளிலே'' ஒஸீன்ஸ்கிய் பின்வருமாறு எழுதும் போது இதை மாதிரியாக்கிக் காட்டுகிறார்:

''....எந்தத் தொழில் நிறுவனத்தின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் முன்முயற்சி முழுவதும் 'டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களுக்குச்' சொந்தமாயிருக்கும். அவர்களுக்கு நாம் கற்றுத்தரப் போவதில்லை, அல்லது அவர்களைச் சாதாரணத் தொழிலாளர்களாக ஆக்கப்போவதுமில்லை; அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம்'' (''கம்மூனீஸ்ட்'', இதழ் 1, பக்கம் 14, பத்தி 2).

இந்தப் பகுதியில் முயலப்பட்டுள்ள நையாண்டி எனது

''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து சோஷலிஸத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்'' என்கிற சொற்கள் மீது எய்ததாகும்.

இது வேடிக்கை என்று ஒஸின்ஸ்கிய் நினைக்கிறார். டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களை அவர் ''சாதாரணத் தொழிலாளர்களாக'' ஆக்கவிரும்புகிறார். ''என்ன, பதினைந்து வயதுதானா, அதற்குமேல் இல்லையா?''[66] என்று கவிஞன் எழுதிய பருவத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் இப்படி எழுதியிருந்தால், அதில் வியப்படைய ஒன்றும் இருக்காது. ஆனால், பெருமளவு முதலாளித்துவம் சிருஷ்டித்த தொழில் நுட்ப, பண்பாட்டுத் துறைகளின் சாதனைகளைத் தான் பயன் படுத்தாவிட்டால் சோஷலிஸம் சாத்தியமேயில்லை என்று போதிக்கப்பட்டுள்ள ஒரு மார்க்ஸீயவாதியிடமிருந்து இவற்றைக் கேட்பது கொஞ்சம் விநோதமாகத்தான் இருக்கிறது. இதில் மார்க்ஸீயத்தின் சாயல் அறவே கிடையாது.

இல்லை. டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து கற்றுக் கொள்ளாமல் சோஷலிஸத்தைச் சிருஷ்டிப்பதோ, புகுத்துவதோ அசாத்தியம் என்று புரிந்துகொள்கிறவர்கள் தான் கம்யூனிஸ்டுகள் என்கிற பெயருக்குத் தகுதியுடையவர்கள். காரணம், சோஷலிஸம் என்பது கற்பனையின் ஒரு புனைவு அல்ல; ஆட்சியைக் கைப்பற்றிய பாட்டாளி வர்க்க முன்னணிப்படை டிரஸ்டுகளால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பவை உட்கொண்டு செயல்படுத்தப்படுவதே அது. பாட்டாளி வர்க்கக் கட்சியாகிய நாம், முதல்தரமான முதலாளித்துவ நிபுணர்களிடமிருந்து பெறுவதைத் தவிர, டிரஸ்டுகள் அமைக்கப் பெறுகிற ரீதியிலே, டிரஸ்டு வழியில் பெருமளவு உற்பத்தியை அமைக்கும் திறமையைப் பெறுவதற்கு, நமக்கு வேறு வழியொன்றும் இல்லை.

பூர்ஷ்வாப் படிப்பாளிகளுக்கு சோஷலிஸம் ''கற்றுக் கொடுப்பது'' என்கிற சிறுபிள்ளைத்தனமான வேலையை நாம் மேற்கொண்டாலொழிய, அவர்களுக்குக் கற்றுத்தர நம்மிடம் எதுவுமில்லை. அவர்களுக்கு நாம் கற்றுத்தரலாகாது, பறிமுதல்தான் செய்ய வேண்டும் (ருஷ்யாவில் போதிய அளவுக்கு ''உறுதியோடு'' செய்யப்பட்டு வருவது போல), அவர்களின் நாசவேலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; அவர்களை ஒரு பகுதியாகவோ, குழுதாகவோ சோவியத் ஆட்சிக்குக்

கீழ்ப்படுத்த வேண்டும். மறுபக்கத்தில், நாம்—குழந்தை வயதுள்ள, குழந்தை அறிவுள்ள கம்யூனிஸ்டுகளாக நாம் இராவிட்டால்—அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும், கற்றுக்கொள்வதற்கு விஷயம் இருக்கிறது; ஏனெனில் பாட்டாளிவர்க்கக் கட்சிக்கும் அதன் முன்னணிப் படைக்கும் கோடானு கோடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற பிரமாண்டமான தொழில் நிறுவனங்களை ஒழுங்கமைப்பதில் சுதந்திரமாக வேலைசெய்த அனுபவம் கிடையாது.

ருஷ்யாவிலுள்ள தலைசிறந்த தொழிலாளர்கள் இதை உணர்ந்துவிட்டனர். அவர்கள் முதலாளித்துவ ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்தும் நிர்வகிக்கும் எஞ்சினீயர்களிடமிருந்தும் தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்தும் கற்கத் தொடங்கியுள்ளனர். அவர்கள் திடமாக, எச்சரிக்கையாக, று விஷயங்களிலிருந்து தொடங்கி, படிப்படியாக அதைவிட அதிகக் கடினமான விஷயங்களுக்கும் போகிறவாறு கற்கத் தொடங்கியுள்ளனர். உலோகத் தொழிலிலும் இயந்திர நிர்மாணத் தொழிலிலும் விவகாரங்கள் இன்னமும் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம், அவை அதிகக் கடினமாக உள்ளன. ஆனால் ஜவுளி, புகையிலைத் தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள், ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றியோ, ''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடம் கற்றுக்கொள்வது'' பற்றியோ வர்க்கத் தன்மையிழந்த குட்டிபூர்ஷ்வாப் படிப்பாளிக் கூட்டம் பயப்படுவதுபோல பயப்படவில்லை. ''பிரதான தோல் கமிட்டி'', ''மத்திய ஜவுளிக் கமிட்டி'' ஆகிய பிரதான மத்திய நிலையங்களிலுள்ள இந்தத் தொழிலாளர்கள் முதலாளிகள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிருர்கள், டிரஸ்டுகளை நிலைநாட்டுகிருர்கள்; ''அரசு முதலாளித்துவத்தை''—அது சோவியத் ஆட்சியின் கீழ் சோஷலிஸத்தின் வாயிற்படியை, அதன் உறுதியான வெற்றியைக் குறிக்கிறது—நிலைநாட்டுகிருர்கள்.

ருஷ்யாவின் முன்னேறிய தொழிலாளிகளின் இந்த வேலையும், உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தும் அவர்களின் வேலையோடு கூடவே தொடங்கிவிட்டது; சந்தடியில்லாமல், படாடோபம் இல்லாமல், சில ''இடதுசாரிகளுக்கு'' எவ்வளவோ அவசியமாயிருக்கிற சத்தமும் ஆர்ப்பாட்டமும் இல்லாமல்

நடந்து கொண்டிருக்கிறது. அது நடைமுறை அனுபவத்தின் படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதிக எச்சரிக்கையோடு, படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடினமான வேலை, பெருமளவு உற்பத்தியை எப்படி நிர்மாணிப்பது என்று நடைமுறையில் கற்றுக்கொள்ளும் வேலை, நாம் சரியான பாதையிலேதான் செல்கிறோம் என்பதற்கு உத்தரவாதமாகும். சிறு உடைமையாள ரீதியான உடைவையும் அமைப்புக்குலைவையும் எதிர்த்தும், குட்டி பூர்ஷ்வா கட்டுப்பாடின்மையை* எதிர்த்தும் ருஷ்யாவில் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உத்தரவாதமாகும், கம்யூனிஸத்தின் வெற்றிக்கு உத்தரவாதமாகும்.

## VI

முடிவாக இரண்டு குறிப்புக்கள்.

1918, ஏப்ரில் 4ம் தேதியன்று, ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளோடு'' வாதம் புரியும்போது (''கம்மூனிஸ்ட்'', இதழ் 1, பக்கம் 4, அடிக்குறிப்பைப் பார்க்க) நான் அவர்களிடம் பச்சையாகச் சொன்னேன், ''ரெயில்வே அரசாணையில் உங்களுக்கு அதிருப்தியளிப்பதை விளக்குங்கள்; உங்களுடைய திருத்தங்களைக் கொடுங்கள். பாட்டாளி வர்க்கத்தின் சோவியத் தலைவர்கள் என்கிற வகையில் அது உங்கள் கடமையாகும்; இல்லையேல் நீங்கள் சொல்வது வெறும் வாய்ச்சொல் வீச்சு தவிர வேறில்லை'' என்று.

---

* பொருளாதாரத் துறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் குறிபொருள் பற்றி ஒரு வார்த்தைகூட ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் சொல்லாமலிருப்பது மிகவும் குணக்குறிப்பான விஷயமாகும். ''ஒழுங்கமைப்பு'' வகையறு என்று மட்டுமே அவர்கள் பேசுகிறார்கள். ஆனால் பொருளாதார உறவுகளில் தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தைத் தவிர்த்து ஒதுக்குகிற குட்டிபூர்ஷ்வாக்கள்கூட அதை ஒப்புக்கொள்கிறார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இந்தக் ''கருப்பொருளை'', முதலாளித்துவத்தின் பொருளாதார அடிப்படைகளுக்கு எதிராகச் செலுத்தப்படுகிற இதை, இப்படிப்பட்ட தருணத்தில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரன் என்றைக்கும் ''மறக்க'' முடியாது.

''கம்மூனிஸ்டின்'' முதல் இதழ் 1918, ஏப்ரில் 20ம் தேதியில் வெளிவந்தது; ஆனல், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு களின்'' கருத்துப்படி ரெயில்வே அரசாணையை எப்படி மாற்ற வேண்டும் அல்லது திருத்தவேண்டும் என்பது பற்றி ஒரு வார்த்தையேனும் அதில் இல்லை.

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' மௌனமே அவர்களைத் தண்டித்து விட்டது. எல்லா விதமான மறைமுகக் குற்றச்சாட்டுகளையும் கொண்டு (இதழ் 1ன் பக்கங்கள் 8, 16 பார்க்க) ரெயில்வே அரசாணையைத் தாக்கினதைத் தவிர அவர்கள் வேறொன்றும் செய்யவில்லை; ''அரசாணை தவருனதென்றால் அதை எப்படித் திருத்தவேண்டும்?'' என்கிற கேள்விக்குத் தெளிவான விடை தரவில்லை.

இதைப் பற்றி மேலும் சொல்லத் தேவையில்லை. ரெயில்வே அரசாணையைப் பற்றிய (நம்முடைய செயலுக்குரியகொள்கைக்கு, கண்டிப்புள்ள கொள்கைக்கு, சர்வாதிகாரத்திற்குரிய கொள்கைக்கு, பாட்டாளி வர்க்கக் கட்டுபாட்டுக்குரிய கொள்கைக்கு அது ஒரு இனக்குறிப்பான எடுத்துக்காட்டாகும்) இப்படிப்பட்ட ''விமர்சனத்தை'' ''ஈஸமேவ் வகைப்பட்ட'' விமர்சனம் என்றோ வெறும் வாய்ச்சொல் வீச்சு என்றோதான் வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் அழைப்பார்கள்.

இரண்டாவது குறிப்பு. ''கம்மூனிஸ்டின்'' முதல் இதழில் ''அரசும் புரட்சியும்'' என்கிற என்னுடைய சிறுநூலை புகாரின் மிகவும் புகழ்ந்து எழுதிய விமர்சனவுரை இருந்தது. புகாரின் போன்றவர்களின் அபிப்பிராயத்தை நான் எவ்வளவுதான் மதித்த போதிலுங்கூட, அந்த விமர்சனவுரையின் தன்மை ஒரு வருந்தத்தக்க, குறிபொருள் உள்ள விஷயத்தை வெளிப்படுத்துகிறது என்று சொல்லுமாறு என் மனச்சாட்சி கட்டாயப்படுத்துகிறது. புகாரின் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளைச் சென்ற காலத்தின் நிலையிலிருந்து கவனிக்கிருரே தவிர எதிர்காலத்தின் நிலையிலிருந்து அல்ல. அரசு பற்றிய பிரச்சினையில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரனுக்கும் குட்டிபூர்ஷ்வாப் புரட்சிக்காரனுக்கும் இடையே பொதுவாக இருக்கக்கூடியதை புகாரின் குறிப்பிட்டார், வலியுறுத்தினர். ஆனல் அவர்களில் ஒருவரிடமிருந்து

மற்றொருவரை வேறுபடுத்திக் காட்டுவது எதுவோ அதை புகாரின் ''குறிக்கத் தவறினர்''.

பழைய அரசு இயந்திரத்தை ''நொறுக்க வேண்டும்'', ''தகர்க்க வேண்டும்'', பூர்ஷ்வா வர்க்கத்தை ''இறுதியாக, முற்றாக நசுக்கிக் கொல்ல வேண்டும்'' என்றவாறெல்லாம் புகாரின் குறிப்பிட்டார், வலியுறுத்தினர். வெறிகொண்ட குட்டிபூர்ஷ்வா இதை விரும்பக் கூடும். இதைத்தான், பிரதானமாக, நமது புரட்சி 1917 அக்டோபருக்கும் 1918 பிப்ரவரிக்கும் இடையே ஏற்கெனவே செய்துள்ளது.

மிகமிகப் புரட்சிகரமான குட்டிபூர்ஷ்வாகூட விரும்ப முடியாத, வர்க்க உணர்வுள்ள பாட்டாளி விரும்புகிற, நமது புரட்சி இன்னமும் செய்து முடிக்காமலிருக்கிற விஷயத்தையுங் கூட என் சிறுநூலில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தக் கடமையைப்பற்றி, நாளையக் கடமையைப் பற்றி, புகாரின் எதுவுட் சொல்லவில்லை.

இவ்விஷயத்தைப் பற்றி நான் மௌனம் சாதிக்கப விருப்பதற்கு இன்னமும் காரணமிருக்கிறது; ஏனெனில் முதலாவதாக, நேற்றையக் கடமைகளில்லாமல் நாளையக் கடமைகளிலேதான் அதிகமாகக் கவனம் செலுத்துமாறு கம்யூனிஸ்டிடம் எதிர்பார்க்கப்படுகிறது; இரண்டாவதாக, போல்ஷெவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் எழுதப்பட்டது எனது பிரசுரம்; அச்சமயத்தில் ''ஆமாம், அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும் நீங்கள் கட்டுப்பாட்டைப் பற்றிக் கட்டாயம் பேசத் தொடங்குவீர்கள்'' என்பது போன்ற கொச்சையான குட்டிபூர்ஷ்வா வாதங்களை போல்ஷெவிக்குகளிடம் வைப்பது சாத்தியமற்றிருந்தது.

''...சோஷலிஸம் கம்யூனிஸமாக வளரும்... ஏனெனில் பலாத்காரமோ கீழ்ப்படிதலோ இல்லாமல் சமுதாய வாழ்க்கையின் சாதாரணமான விதிகளை மக்கள் பின்பற்றப் பழக்கப்பட்டு விடுவார்கள்'' (''அரசும் புரட்சியும்'', பக்கங்கள் 77—78; ஆக, ''சாதாரணமான விதிகள்'' அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே விவாதிக்கப்பட்டன).

''...நூற்றாண்டு நூற்றாண்டுகளாகத் தெரிந்திருக்கிற, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எல்லாப் பள்ளிப் புத்தக நீதிநெறி மொழிகளிலும் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டு வந்திருக்கிற சமுதாயத் தொடர்புக்குரிய சாதாரணமான

விதிகளை மக்கள் பின்பற்றப் படிப்படியாகப் பழக்கப்பட்டுப் போகிற காலத்தில், பலாத்காரமில்லாமல், கட்டாயம் இல்லாமல், அரசு எனச் சொல்லப்படும் கட்டாயப்படுத்து வதற்குரிய தனிச்சிறப்பான இயந்திர சாதனம் இல்லாமல் மக்கள் அவற்றைப் பின்பற்றப் பழக்கப்பட்டுப் போகிற காலத்தில்'' தான் ''ஜனநாயகம் காய்ந்து கருகிப் போகத் தொடங்கும்'' (மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 84; ஆக ''பள்ளிப் புத்தக நீதிநெறி மொழிகள்'' பற்றி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே குறிப்பிடப் பட்டது).

''...கம்யூனிஸ வளர்ச்சியின் மேல் கட்டத்திற்கு'' (தேவைக்குத் தக்க ஊதியம், திறனுக்குத் தக்க உழைப்பு) ''முன்தேவையாக எதிர்பார்க்கப்படுவது இன்றைய உழைப் பின் உற்பத்தித் திறனுமல்ல, இன்றைய சாதாரண மக்களு ...ல்ல—இவர்கள் பொமயாலோவ்ஸ்கியின் புத்தகத்தில் ...ரும் மதப் பள்ளி மாணவர்களைப் போல், விளையாட்டுக் ...ாக வென்றே பொதுச் செல்வத்தின் இருப்புக்களைச் சேதப் ...டுத்தவும் சாத்தியமற்றதைக் கோரவும் கூடியவர்கள்'' (அதே நூல், பக்கம் 91).

''...கம்யூனிஸத்தின் மேல்கட்டம் வரும்வரை, உழைப் பின் அளவு, உபயோகத்தின் அளவு ஆகியவற்றின்மீது மிக மிகக் கண்டிப்பான சமுதாயக் கண்காணிப்பும் அரசின் கண் காணிப்பும் இருக்க வேண்டுமென்று சோஷலிஸ்டுகள் கோரு கிறார்கள்...'' (அதே நூல்).

''...கணக்கு வைப்பது, கண்காணிப்பது—இதுதான் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் முதல் கட்டம் இணக்கமாக வேலை செய்யவும் சரிவர வேலை செய்யவும், ஏற்பாடு செய் வதற்கு வேண்டிய முதல் விஷயம்'' (அதே நூல், பக்கம் 95). மேலும், இந்தக் கண்காணிப்பு ''அற்பமான சிறுபான்மை யினராயுள்ள முதலாளிகள்மீது மட்டுமின்றி, தங்களுடைய முதலாளித்துவப் பழக்கங்களை நீடித்துக் காக்க விரும்புகிற உயர்குடி மக்கள் மீது மட்டுமின்றி'', ''முதலாளித்துவத் தால் ஆழ்ந்த வகையிலே கெடுக்கப்பட்டிருக்கும்'' தொழி லாளர்கள்மீதும் (அதே நூல், பக்கம் 96), ''சோம்பேறிகள், பிரபுவம்சத்தினர், கயவாளிகள், இன்னும் இதுபோன்ற முத

லாளித்துவ மரபுகளின் காவலர்கள்'' மீதும் நிலைநிறுத்தப் பட வேண்டும் (அதே நூல்).

இதை புகாரின் வலியுறுத்தாமல் விட்டது குறிபொருள் உள்ளதாகும்.

*1918, மே 5*

நூல்திரட்டு, தொகுதி *36*

*1918 மே, 9, 10, 11 தேதிகள்,*
*''பிராவ்தா'', இதழ்கள் 88, 89, 90ல்*
*பதிப்பிக்கப்பட்டது*

*கையொப்பம்:* நி. லெனின்

## 1919, நவம்பர் 22ல், கிழக்கத்திய மக்களினங்களினது கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களின் இரண்டாம் அகில ருஷ்ய காங்கிரஸில் ஆற்றிய உரை

என்பதிலிருந்து[67]

முடிவாக, கிழக்கத்திய தேசிய இனங்களைப் பொறுத்த மட்டில் வளர்ந்துவரும் நிலைமையைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல அனுமதியுங்கள். நீங்கள் பல்வேறு கிழக்கத்திய நாட்டினங்களின் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களின், கம்யூனிஸ்ட் ட்சிகளின் பிரதிநிதிகள். பழைய ஏகாதிபத்தியத்தில் டைப்பு ஏற்படுத்துவதிலும், புரட்சிக்குப் புதிய பாதைகளை ளிவீசிக் காட்டிச் செல்லும் மிகவும் கஷ்டமான, ஆனால் மிகவும் மேன்மையான கடமையை மேற்கொள்வதிலும் ருஷ்ய போல்ஷெவிக்குகள் வெற்றி பெற்றார்களென்றால், கிழக்கத்திய உழைப்பாளி மக்களின் பிரதிநிதிகளாகிய உங்கள் முன்னே அதைவிடப் பிரம்மாண்டமான, அதை விடப் புதிய கடமை ஒன்றிருக்கிறது என்று நான் சொல்லித் தீர வேண்டும். உலகம் பூராவிலும் வரவிருக்கும் சோஷலிஸப் புரட்சியானது ஒவ்வொரு நாட்டுப் பாட்டாளி வர்க்கமும் தன் சொந்த பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது பெறுகிற வெற்றியாக மட்டும் இராது என்று மிகவும் தெளிவாகி வருகிறது. புரட்சிகள் சுளுவாகவும் வேகமாகவும் வந்தால் அது சாத்தியமாயிருக்கும். இதை ஏகாதிபத்தியவாதிகள் அனுமதிக்க மாட்டார்கள்; எல்லா நாடுகளும் தங்கள் உள்நாட்டு போல்ஷெவிஸத்துக்கு எதிராக ஆயுதமேந்தி நிற்கின்றன; உள்நாட்டிலுள்ள போல்ஷெவிஸத்தை எப்படித் தோற்கடிப்பது என்பது அவற்றின் ஒரே சிந்தனையாயுள்ளது என்று நாம் அறிவோம். எனவேதான் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு உள்நாட்டு யுத்தம் குமுறிக் கொண்டிருக்கிறது; அதில் பழைய சோஷலிஸ்ட் சமரசவாதிகள் ஏகாதிபத்தியத்தின் தரப்பில் அணிதிரட்டப்பட்டுள்ளனர். எனவே, சோஷலிஸ்ட் புரட்சியானது ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகரமான தொழிலாளர்கள் தத்தம் பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து நடத்துகிற போராட்டமாக மட்டுமோ, அன்றிப் பிரதானமான

தாகவோ, இராது—இருக்கவே இருக்காது, அது சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப் பட்டுள்ள எல்லாக் காலனிகளும் நாடுகளும், எல்லாச் சார்பு நாடுகளும் நடத்தும் போராட்டமாகத்தானிருக்கும். இவ்வாண்டு மார்ச் மாதத்தில் நாங்கள் ஏற்றுக்கொண்ட கட்சி வேலைத்திட்டத்தில் உலக சோஷலிஸ்ட் புரட்சி நெருங்கு வதைக் குண வரையறுப்பு செய்கையில், எல்லா முன்னேறிய நாடுகளிலும் ஏகாதிபத்திய வாதிகளையும் சுரண்டுபவர் களையும் எதிர்த்து உழைப்பாளி மக்கள் நடத்தும் உள் நாட்டுப் போர் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடக்கும் தேசியப் போர்களுடன் பிணைக்கப்படத் துவங்கி யுள்ளது என்று சொன்னோம். புரட்சியின் போக்கு அதை உறுதிப்படுத்தி இருக்கிறது; காலம் செல்லச் செல்ல அது மேன்மேலும் உறுதிப் படுத்தப் பெறும். கிழக்கிலும் அவ் வாறேதான் இருக்கும்.

கிழக்கத்திய மக்கள் சுயேச்சையாகப் பங்கு கொள்ளுப வர்களாக, ஒரு புதிய வாழ்க்கையின் அமைப்பாளர்களாக எழுவார்கள் என்று நமக்குத் தெரியும்; காரணம், உரிமை கள் முழுவதும் பறிக்கப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் சார்புத் தேசங்களை—இதுவரை சர்வதேச ஏகாதிபத் தியக் கொள்கையின் இலக்காக இருந்து வந்திருக்கின்ற, முதலாளித்துவப் பண்பாட்டுக்கும் நாகரிகத்துக்கும் உர மிடும் பொருளாக மட்டுமே இருந்திருக்கின்ற தேசங்களை— சேர்ந்தவர்களாயுள்ளனர். காலனிகள்மேல் ஆட்சியாணைப் பத்திரம் கொடுப்பது பற்றி அவர்கள் பேசும் பொழுது, அதற்கு அர்த்தம் களவாடலுக்கும் சூறையாடுவதற்கும் ஆணைப்பத்திரம்—உலக மக்கள் தொகையின் அற்பச் சிறு பான்மைக்கு உலகின் பெரும்பான்மையினரைச் சுரண்டு வதற்கான ஆணைப்பத்திரம்—கொடுப்பது என்றும் நாம் அறிவோம். சுயேச்சையான புரட்சிச் சக்தியாக அமைய முடி யாமையால் வரலாற்று ரீதியான முன்னேற்றத்தின் இயக்க வட்டத்துக்கு அதுவரை முற்றுக அப்பாற்பட்டிருந்த அந்தப் பெரும்பான்மையினர் அப்படிப்பட்ட ஒரு செயலொழிந்த பாத்திரம் வகிப்பது இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத் தில் நின்று போயிற்று என்பதை நாம் அறிவோம். 1905ஐப் பின்தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனவிலும்

புரட்சிகள் ஏற்பட்டன, இந்தியாவில் புரட்சி இயக்கம் வளர்ந்தது என்று நாமறிவோம். அதேபோல் ஏகாதிபத்திய யுத்தமும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு அனுகூலமாயிருந்தது; காரணம், ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய போராட்டத்தில் முழு முழுக் காலனி மக்களின் பட்டாளங்களை அணிதிரட்ட வேண்டியிருந்தது. ஏகாதிபத்திய யுத்தம் கிழக்கத்திய நாடுகளையும்கூட விழிப்புறச் செய்தது, அவற்றின் மக்கள் சமூகங்களைச் சர்வதேச அரசியலில் இழுத்துவிட்டது. பிரிட்டனும் பிரான்சும் காலனி மக்களை ஆயுதபாணியாக்கின, அவர்கள் இராணுவக் கலை நுணுக்கத்தோடும் மிக நவீனமான இயந்திரங்களோடும் பழக்கப்படவும் உதவின. அவர்கள் அந்த அறிவை ஏகாதிபத்திய கனவான்களுக்கு எதிராகப் பயன்படுத்துவார்கள். நம் காலத்தியப் புரட்சிகளில் கிழக்கு விழித்தெழுகிற காலப் பகுதியைப் பின்தொடர்ந்து, பிறரின் செல்லப் பெருக்குக் குரிய இலக்குகளாக மட்டும் இல்லாமலிருக்க வேண்டி, உலக முழுவதின் தலைவிதியை நிர்ணயிப்பதில் எல்லாக் கிழக்கத்திய மக்கள் சமூகங்களும் பங்கெடுத்துக் கொள்கிற ஒரு காலப்பகுதி வந்து கொண்டிருக்கிறது. கிழக்கத்திய மக்கள் சமூகங்கள் நடைமுறைச் செயலின் அவசியத்தை, மனித குலம் முழுவதின் தலைவிதியை உருவாக்குவதில் ஒவ்வொரு தேசமும் பங்கு கொள்வதின் அவசியத்தை உணரத் தலைப் பட்டுள்ளனர்.

எனவேதான் உலகப் புரட்சியின்—அதன் துவக்கத்தை வைத்து மதிப்பிடும்போது அது பல வருடங்கள் தொடர்ந்து நடக்கும், அதற்கு நிறைய முயற்சி தேவைப்படும்—வளர்ச்சி வரலாற்றில், புரட்சிகரமான போராட்டத்தில், புரட்சிகரமான இயக்கத்தில் நீங்கள் ஒரு பெரிய பாத்திரம் வகிக்கவும், சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடக்கும் எங்கள் போராட்டத்துடன் கலக்கவும், வேண்டியிருக்கும். சர்வதேசப் புரட்சியில் நீங்கள் பங்கெடுப்பதில் உங்கள் முன் ஒரு சிக்கலான, கஷ்டமான கடமை எதிர்ப்படும்; அதை நிறைவேற்றி முடிப்பது நமது பொதுவான வெற்றிக்கு அஸ்திவாரமாக இருக்கும்; காரணம், இங்கே முதல் தடவையாக மக்களில் பெரும்பான்மையினர் சுயேச்சையான இயக்கத்தில் ஈடுபட்டு, சர்வதேச ஏகாதிபத்தியத்தை வீழ்த்தும் போராட்டத்தில் ஒரு செயலுள்ள காரணியாக இருப்பார்கள்.

ஐரோப்பாவில் மிக மிகப் பிற்பட்ட நாடாகிய ருஷ்யாவைவிட மோசமான நிலைமையில் பெரும்பான்மையான கிழக்கத்திய மக்களினங்கள் உள்ளனர். ஆனால், நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களுக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான எங்கள் போராட்டத்தில் நாங்கள் ருஷ்யாவின் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஒன்றுபடுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறோம்; மேலும், எங்கள் போராட்டம் அவ்வளவு சுளுவாக நடந்ததற்குக் காரணம் விவசாயிகளும் தொழிலாளிகளும் முதலாளித்துவத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக ஒன்றுபட்டனர். இங்கே கிழக்கத்திய மக்களினங்களுடன் தொடர்புகொள்வது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது; காரணம், கிழக்கத்திய மக்களில் பெரும்பான்மையினர் உழைப்பாளி மக்களின் இனக் குறிப்பான பிரதிநிதிகளாவர்—அவர்கள் முதலாளித்துவத் தொழிற்சாலைகள் என்கிற பள்ளியில் பயின்று வந்த தொழிலாளிகள் அல்ல; அதற்குப் பதிலாக, மத்தியகால ஒடுக்குமுறைக்கு இரையாகியுள்ள உழைக்கும் சுரண்டப்படும் விவசாயி மக்களின் இனக் குறிப்பான பிரதிநிதிகளாவர். தொழிலாளிகள் முதலாளித்துவத்தைத் தோற்கடித்த பிறகு கோடிக்கணக்கான, பரவலாகச் சிதறியுள்ள உழைப்பாளி மக்கள் திரளுடன் ஒன்றுபட்டு மத்தியகால ஒடுக்கு முறையை எதிர்த்து எப்படி வெற்றிகரமாகக் கிளர்ந்தெழுந்தனர் என்பதை ருஷ்யப் புரட்சி காட்டியது. இன்று நமது சோவியத் குடியரசு விழித்தெழுந்து வரும் கிழக்கத்திய மக்கள் அனைவரையும் தன் பக்கம் அணிதிரட்டி, அவர்களோடு சேர்ந்து சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்த வேண்டும்.

இங்கே, உலகக் கம்யூனிஸ்டுகளை முன்பு எதிர்கொண்டிராத ஒரு கடமை உங்களை எதிர்கொண்டிருக்கிறது; அதாவது, பொதுவான கம்யூனிஸ்ட் தத்துவத்தின்மீதும் நடைமுறைகளின் மீதும் நீங்கள் நிலைகொண்டு, ஐரோப்பிய நாடுகளில் இராத தனித்தன்மையுள்ள நிலைமைகளுக்கேற்ப—ஜனத்தொகையில் பெரும்பகுதி விவசாயிகளாக உள்ள நிலைமைகளுக்கும், முதலாளித்துவத்தை எதிர்த்து அல்லாது, மத்தியகால மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட்டத்தை நடத்துவதே கடமையாயிருக்கிற நிலைமைகளுக்கும்—அந்தத்

தத்துவத்தையும் நடைமுறைகளையும் பொருத்திச் செயல் படுத்த வேண்டும். அது ஒரு கஷ்டமான, குறிப்பான கடமையே என்றாலும் மிகவும் பலன் தரக்கூடிய கடமையாகும்; காரணம், இது வரை போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத மக்கள் திரள் அதில் ஈர்க்கப்படாதது; மற்றொரு புறத்தில், கிழக்கே கம்யூனிஸ்ட் உட்கருக்களை அமைப்பது உங்களுக்கு மூன்றாவது இன்டர்நேஷனலுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வாய்ப்புத்தருகிறது. உலகிலுள்ள முன்னணித் தொழிலாளர்களுக்கும் பல வழக்குளில் மத்தியகால நிலைமைகளில் இருக்கிற கிழக்கத்திய ழைக்கிற, சுரண்டப்படுகிற மக்கள் திரளுக்கும் இடையே ள்ள இந்த நேச உறவுக்கு நீங்கள் குறிப்பான வடிவங்கள் ண்டுபிடிக்க வேண்டும். பெரிய நாடுகளில் பெரிய அளவில் நீங்கள் செய்ய இருப்பதை நாங்கள் எங்கள் நாட்டில் சிறிய அளவில் செய்து முடித்திருக்கிறோம். அந்த, பின்சொன்ன, கடமையை நீங்கள் வெற்றிகரமாகச் செய்வீர்கள் என்று நம்புகிறேன். கிழக்கத்திய கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்கள்—அவற்றின் பிரதிநிதிகள் நீங்கள்—இருக்கிறதின் காரணத்தால் முன்னேறிய புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தோடு உங்களுக்குத் தொடர்பு உண்டு. ஒவ்வொரு நாட்டிலும், மக்கள் புரிந்துகொள்கிற மொழியில் கம்யூனிஸ்ட் பிரசாரம் நடந்து வருவதைத் தொடர்ந்து உறுதிப்படுத்தி வருவது உங்கள் கடமையாகும்.

உலகிலுள்ள எல்லா முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம்தான் இறுதி வெற்றியை ஈட்டமுடியும் என்பது வெள்ளிடைமலை; மேலும், ருஷ்யர்களாகிய நாங்கள் துவங்கியிருக்கிற வேலையை பிரிட்டிஷ், பிரெஞ்சு, அல்லது ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் கெட்டிப்படுத்தும். ஆனால், எல்லா ஒடுக்கப்பட்ட காலனி மக்கள் சமூகங்களின், அதில் முதன்மையாகக் கிழக்கத்திய நாடுகளின், உழைப்பாளி மக்கள் திரளின் உதவியில்லாமல் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்வதை முன்னணிப் படையால் மட்டும் தன்னந்தனியே சாதிக்க முடியாது என்று நாம் உணர வேண்டும். மக்கள் திரள் எந்தத் தரத்தை எட்டியுள்ள போதிலும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்களைப் புரட்சிகரமான நடவடிக்

கைக்கும் சுயேச்சையான செய்கைக்கும் ஸ்தாபன அமைப்புக்கும் விழிப்புறச் செய்வது, மற்றவற்றைவிட அதிகமாக முன்னேறிய நாடுகளுக்கென்று கருதப்பட்ட உண்மையான கம்யூனிஸ்ட் தத்துவத்தை ஒவ்வொரு மக்கள் சமூகத்தின் மொழியிலும் பெயர்ப்பது, உடனடியாகச் செய்து முடிக்க வேண்டியிருக்கும் நடைமுறை வேலைகளைச் செய்து முடிப்பது, பிற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினருடன் ஒரு பொதுப் போராட்டத்தில் கலந்து கொள்வது என்பதே கடமையாகும்.

இவைதான் பிரச்சினைகள். இவற்றிற்குரிய தீர்வுகளை நீங்கள் எந்தக் கம்யூனிஸ்ட் நூலிலும் கண்டு கொள்ள மாட்டீர்கள்; ஆனால் ருஷ்யா துவக்கியுள்ள பொதுப் போராட்டத்திலேதான் அவற்றைக் காண்பீர்கள். அந்தப் பிரச்சினையை நீங்கள்தான் உங்கள் சொந்த, சுயேச்சையான அனுபவத்தைக் கொண்டு சமாளித்துத் தீர்வுகாண வேண்டும். இதில், ஒரு புறத்தில், பிற நாடுகளின் உழைப்பாளி மக்களின் முன்னணிப் படையுடன் கூடிய நெருக்கமான நேசவுறவும், மறுபுறத்தில், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிற கிழக்கத்திய மக்கள் சமூகங்கள்பால் சரியான அணுகுமுறையைக் கண்டுபிடிக்கிற திறனும் உங்களுக்குத் துணைபுரியும். அந்த மக்கள் சமூகங்களிடையே விழிப்படைந்துவருகிற, விழிப்புற்றுத் தீர வேண்டிய, பூர்ஷ்வா தேசியவாதத்தை—அதற்கு சரித்திர ரீதியான நியாயம் உண்டு—நீங்கள் அஸ்திவாரமாகக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில், ஒவ்வொரு நாட்டின் உழைக்கும், சுரண்டப்பட்டு வரும் மக்களுக்கு நீங்கள் வழி கண்டுபிடித்துச் சென்று அவர்கள் புரிந்து கொள்ளத் தக்க மொழியில் சர்வதேசப் புரட்சியின் வெற்றியிலேதான் அவர்களின் விடுதலைக்குரிய ஒரே நம்பிக்கை இருக்கிறது என்றும், கிழக்கைச் சேர்ந்த கோடானுகோடி உழைக்கும், சுரண்டப்பட்டுவரும் மக்களின் ஒரே நேச சக்தி சர்வதேசப் பாட்டாளி வர்க்கமே என்றும் சொல்ல வேண்டும்.

உங்களை எதிர்கொள்கிற மாபெரும் கடமை இதுதான்; புரட்சிச் சகாப்தத்தின் காரணமாகவும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியின் காரணமாகவும்—இதுபற்றி ஐயம் இருக்க முடியாது—கிழக்கத்தியக் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களின் கூட்டு முயற்சிகள் மூலமாக இது வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்

பெறும்; அது சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மீது முழுவெற்றி பெறுவதிலே சென்று முடிவு பெறும்.

நூல்திரட்டு, தொகுதி 39

''ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்)
கட்சியினது மத்தியக் கமிட்டியின்
இஸ்வேஸ்தியா'', இதழ் 9,
1919, டிசம்பர் 20

# தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுரைகளின் தொடக்க மசோதா

## (கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸுக்கு)[68]

கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது காங்கிரஸுக்கு விவாதத்திற்கென்று தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிப் பின்வரும் ஆய்வுரை மசோதாவை வைக்கும் போது, எல்லாத் தோழர்களும், குறிப்பாக இந்த மிகச் சிக்கலான பிரச்சினைகளில் எதைப்பற்றியாயினும் ஸ்தூலமான செய்தி விபரங்கள் வைத்திருப்பவர்களும், தங்களுடைய அபிப்பிராயங்களையும் திருத்தங்களையும் சேர்க்க வேண்டியவற்றையும் ஸ்தூலமான குறிப்புக்களையும், மிகமிகச் சுருக்கமான வடிவத்தில் (இரண்டு மூன்று பக்கங்களுக்கு மேல் போகாமல்), குறிப்பாகப் பின்வரும் விஷயங்கள் பற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்:

ஆஸ்திரிய அனுபவம்.
போலிஷ்-யூத, உக்ரேனிய அனுபவம்.
அல்ஸேஸ்-லொரேன், பெல்ஜியம்.
அயர்லாந்து.
டென்மார்க்-ஜெர்மன், இத்தாலி-பிரெஞ்சு, இத்தாலி-ஸ்லாவ் உறவுகள்.
பால்கன் அனுபவம்.
கிழக்கத்திய மக்கள் இனங்கள்.
அகண்ட-இஸ்லாம் இயக்கத்தை எதிர்த்துப் போராட்டம். காக்கஸஸில் இருக்கும் உறவுகள்.
பாஷ்கிரிய, தாத்தார் குடியரசுகள்.
கிர்கிஸியா.
துருக்கிஸ்தான், அதன் அனுபவம்.
அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்கள்.
காலனிகள்.
சீனு—கொரியா—ஜப்பான்.

நி. லெனின்

*1920, ஜூன் 5*

1) பொதுவாக சமத்துவத்தைப் பற்றியும் அம்சரீதியாக தேசிய சமத்துவத்தைப்பற்றியும், சூட்சுமமாகவோ சம்பிரதாய ரீதியாகவோ விவரிப்பது பூர்ஷ்வா ஜனநாயகத்தின் இயல்புக்கே உரியதாகும். பொதுப்படையாகத் தனி நபர்களின் சமத்துவம் என்கிற வெளிவேஷத்தின் கீழ் பூர்ஷ்வா ஜனநாயகம் உடைமையாளனுக்கும் பாட்டாளிக்கும், சுரண்டுகிறவனுக்கும் சுரண்டப்படுகிறவனுக்கும் உள்ள சம்பிரதாயரீதியான அல்லது சட்டரீதியான சமத்துவத்தைப் பிரகடனப்படுத்துகிறது; அதன் மூலமாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைப் பச்சையாக வஞ்சிக்கிறது. எல்லா மனிதர்களும் முற்றிலும் சமமானவர்களே என்கிற சாக்கில் பூர்ஷ்வா வர்க்கம் சமத்துவம் என்கிற கருத்தை—இது பண்ட உற்பத்தி உறவுகளின் ஒரு பிரதிபலிப்புத்தான்—வர்க்கங்களை ஒழிப்பதை எதிர்த்துத் தான் நடத்தும் போராட்டத்தில் ஒரு ஆயுதமாக மாற்றி வருகிறது. சமத்துவம் வேண்டும் கோரிக்கைக்கு வர்க்கங்களை ஒழிக்கும் கோரிக்கை என்ற வகையில் மட்டுமே உண்மையான அர்த்தம் உண்டு.

2) பூர்ஷ்வா ஜனநாயகத்தை எதிர்த்துப் போராடுவது, அதன் பொய்மையையும் ஆஷாடபூதித்தனத்தையும் அம்பலப்படுத்துவது என்கிற அடிப்படையான கடமைக்கு ஏற்ப கம்யூனிஸ்ட் கட்சி, பூர்ஷ்வா நுகத்தடியைத் தூக்கி எறியும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் உணர்வு பூர்வமான போர்வீரன் என்கிற வகையில், தேசியப் பிரச்சினையிலுங் கூட தனது கொள்கையை சூட்சுமமான அல்லது சம்பிரதாய ரீதியான கோட்பாடுகள் மேல் ஆதாரப்படுத்தக் கூடாது; அதற்குப் பதிலாக, முதலாவதாக, குறிப்பான சரித்திர நிலைமையை, பிரதானமாகப் பொருளாதார நிலைமையைப் பற்றிய ஒரு செவ்வையான மதிப்பீட்டின் மீதும்; இரண்டாவதாக, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், உழைக்கிற, சுரண்டப்படுகிற வர்க்கங்களின் நலன்களுக்கும், ஆளும் வர்க்கத்தின் நலன்களை உட்கிடையாகக் கொண்டிருக்கிற தேசிய நலன்கள் எனப்பட்ட பொதுவான கருத்தமைப்பு முழுவதற்கும் இடையேயுள்ள தெளிவான வேறுபாட்டின் மீதும்; மூன்றாவதாக, ஒடுக்கப்படுகிற, சார்ந்திருக்கிற, சம உரிமைகள் பெறாத தேசங்களுக்கும் ஒடுக்குகிற, சுரண்டுகிற, முழு அரசுரிமையுள்ள நாடுகளுக்கும் இடையே அதே போல்

சமத்தெளிவான வேறுபாட்டின் மீதும் ஆதாரப் பட்டிருக்க வேண்டும்; மிகமிகச் செல்வச் செழிப்புள்ள, முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் என்கிற ஒரு அற்பமான சிறு பான்மை உலக மக்கள் தொகையில் மிகப் பெரிய பெரும்பான்மையைக் காலனி ரீதியிலும் நிதித் துறையிலும் அடிமைப்படுத்தியுள்ளதை—இது நிதிமூலதனத்தின், ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்துக்கு குணக்குறிப்பான விஷயமாகும்—மறைக்கும் பூர்ஷ்வா ஜனநாயகப் பொய்களை மறுதளிப்பதற்கு இது வேண்டும்.

3) ஜெர்மன் ஜங்கர்களின், கெய்ஸர் மன்னனின் பிரேஸ்த் லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தைவிட, அபகீர்த்தி பெற்ற ''மேற்கத்திய ஜனநாயகங்களின்'' வெர்ஸேய் ஒப்பந்தமானது பலவீனமான தேசங்களுக்கு எதிராகச் செய்த பலாத்காரச் செயலில் அதிக மிருகத்தனமானது, வெறுக்கத்தக்கது என்று நடைமுறையில் எடுத்துக்காட்டி பூர்ஷ்வா-ஜனநாயக வாய்ச்சொல்வீச்சின் பொய்மையை உலகத்தின் எல்லா தேசங்களுக்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் 1914—1918 ஏகாதிபத்திய யுத்தம் மிகத் தெளிவாகக் காட்டிவிட்டது. சர்வதேச சங்கமும் ஆந்தாந்த் யுத்த பிற்காலக் கொள்கை முழுவதும் இந்த உண்மையை மேலும் தெளிவாகவும் துல்லியமாகவும் காட்டுகின்றன, அவை எல்லா இடங்களிலும் புரட்சிகரமான போராட்டத்தை—முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்தையும் காலனி, சார்பு நாடுகளின் உழைப்பாளி மக்களின் புரட்சிகரமான போராட்டத்தையும்—ஒருங்கே தீவிரப்படுத்தி வருகின்றன; முதலாளித்துவத்தின்கீழ் தேசங்கள் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ முடியும் என்கிற குட்டி பூர்ஷ்வா தேசிய வாதப் பிரமைகளின் வீழ்ச்சியை அவை துரிதப்படுத்தி வருகின்றன.

4) இந்த அடிப்படையான ஆதாரவுரைகளிலிருந்து, தேசிய, காலனிப் பிரச்சினைகளில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் கொள்கை முழுவதும், நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தூக்கி எறிவதற்கான ஒரு கூட்டான புரட்சிகரமான போராட்டத்திற்காக எல்லாத் தேசிய இனங்களையும் நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளின், பொதுவாக உழைப்பாளி மக்களின் முன்னைவிட நெருங்கிய கூட்

டொருமை மீது ஆதாரப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஏனெனில் இது ஒன்றுதான் முதலாளித்துவத்தின் மீது வெற்றி கொள்வதை உத்தரவாதம் செய்யும்; அதில்லாமல் தேசிய ஒடுக்குமுறையையும் சமத்துவமின்மையையும் ஒழிப்பது சாத்தியமல்ல.

5) உலக அரசியல் நிலைமை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை இன்றைய நிகழ்ச்சி நிரலில் வைத்துள்ளது. உலக அரசியலின் எல்லா நிகழ்ச்சிகளும் ஒரே ஒரு மையப்புள்ளியைச் சுற்றி, அதாவது சோவியத் ருஷ்யாவின் குடியரசை எதிர்த்து உலக பூர்ஷ்வா வர்க்கம் நடத்தும் போராட்டத்தைச் ற்றி, தவிர்க்க முடியாதவாறு சுழல்கின்றன; இந்த ாவியத் ருஷ்யாவின் குடியரசைச் சுற்றி, ஒரு புறத்தில், ல்லா நாடுகளின் முன்னேறிய தொழிலாளர்களின் சாவியத் இயக்கங்களும், மறுபுறத்தில், உலக ஏகாதிபத்தியத்தின்மீது சோவியத் அமைப்புமுறை வெற்றிபெறுவது ஒன்றிலேதான் தங்களுடைய மீட்சி இருக்கிறது என்பதைக் கசப்பான அனுபவத்தால் கற்று வருகிற காலனிகளிலும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களிடையேயும் உள்ள எல்லா தேசியவிடுதலை இயக்கங்களும் தவிர்க்க முடியாதவாறு குழுமி வருகின்றன.

6) இதன் விளைவாக, பல்வேறு தேசங்களின் உழைப்பாளி மக்களிடையே முன்னைவிட நெருக்கமான கூட்டொருமை இருப்பதின் தேவையை வெறுமே அங்கீகரிப்பதோடு அல்லது பிரகடனப்படுத்துவதோடு இன்று ஒருவன் நிறுத்திக் கொள்ள முடியாது; சோவியத் ருஷ்யாவோடு எல்லாத் தேசிய, காலனி விடுதலை இயக்கங்களும் மிக நெருங்கிய நேச உறவு கொள்வதைச் சாதிக்கத்தக்க ஒரு கொள்கையைப் பின்பற்றுவது அவசியமாகும்; ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்திடையே கம்யூனிஸ்ட் இயக்கம் பெற்றுள்ள வளர்ச்சி அளவோ, அல்லது பிற்பட்ட நாடுகளிலோ பிற்பட்ட தேசிய இனங்களிலோ இருக்கும் தொழிலாளர்களின் விவசாயிகளின் பூர்ஷ்வா ஜனநாயக விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி அளவோ, இந்த நேச உறவின் வடிவத்தை நிர்ணயிக்க வேண்டும்.

7) வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களின் முழுமையான ஒற்றுமைக்குரிய ஒரு மாற்றக் கால

வடிவமே கூட்டாட்சி அரசு என்பது. ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசுக்கும் பிற சோவியத் குடியரசுகளுக்கும் (சென்ற காலத்தில் ஹங்கேரி, பின்லாந்து, லாத்வியக்[69] குடியரசுகள், இன்று அஸர்பெய்ஜான், உக்ரேனியக் குடியரசுகள்) இடையேயுள்ள உறவுகளும் சரி, ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசுக்குள்ளேயே இருக்கிற முன்பு அரசுரிமையையோ சுயாட்சி உரிமையையோ அனுபவித்திராத நாட்டினங்கள் (எடுத்துக்காட்டாக ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசில் 1919லும் 1920லும் நிறுவப்பெற்ற பாஷ்கிர், தாத்தார் சுயாட்சிக் குடியரசுகள்) சம்பந்தமாய் உள்ள உறவுகளும் சரி, ஒருங்கே நடைமுறையில் கூட்டாட்சியின் உசிதத்தை ஏற்கெனவே எடுத்துக்காட்டியிருக்கின்றன.

8) சோவியத் அமைப்பு, சோவியத் இயக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்துவரும் இந்தப் புதிய கூட்டாட்சிகளை மேலும் வளர்ப்பதும், அத்துடன் அவற்றைப் பயில்வதும் அனுபவத்தைக்கொண்டு சோதித்துப்பார்ப்பதும் இவ்விஷயத்தில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் கடமையாகும். கூட்டாட்சி என்பது முழுமையான ஒற்றுமைக்கு ஒரு மாற்றக்கால வடிவமே என்று அங்கீகரிக்கையில், முதலாவதாக, இராணுவத் துறையில் அளவிடற்கரிய பலம் பெற்றுள்ள உலக முழுவதிலுமுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகளால் சூழப்பட்டுள்ள நிலைமையில் சோவியத் குடியரசுகள் மிக நெருக்கமான நேச உறவு பூண்டிராமல் தொடர்ந்து நீடித்திருப்பது சாத்தியமில்லை என்பதையும்; இரண்டாவதாக, சோவியத் குடியரசுகளுக்கிடையே நெருக்கமான பொருளாதார நேச உறவு அவசியம், இல்லையேல் ஏகாதிபத்தியத்தால் நாசப்படுத்தப்பட்ட உற்பத்திச் சக்திகளை மீட்டுக் கொள்வது சாத்தியமில்லை, உழைப்பாளி மக்களின் நல்வாழ்க்கையை உறுதிப்படுத்துவதும் சாத்தியமில்லை என்பதையும்; மூன்றாவதாக, எல்லா தேசங்களின் பாட்டாளி வர்க்கத்தால் ஒரு ஒன்றிணைந்த முழுமையாக, ஒரு பொதுத் திட்டத்தின்படி, ஒழுங்காகச் செலுத்தப்பட்ட ஒரேயொரு உலகப் பொருளாதாரத்தைப் படைக்கும் திசையில் செல்லும் ஒரு போக்கு—இந்தப் போக்கு ஏற்கெனவே முதலாளித்துவத்தின் கீழ் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப் பெற்றுள்

ளது; இது சோஷலிஸத்தின் கீழ் மேலும் வளர்க்கப் பெற்று முழுமையாக்கப்பட்டுத் தீரும்—இருக்கிறது என்பதையும் நினைவில் கொண்டு மேலும் மேலும் நெருக்கமான கூட்டாட்சி ஒற்றுமைக்கு முயல்வது அவசியம்.

9) அரசுகளுக்கிடையேயுள்ள உறவுகளைப் பொறுத்த மட்டில், தாங்கள் பூர்ஷ்வா ஜனநாயக வாதிகள்தான் என்று மனந்திறந்து ஒப்புக்கொள்கிற பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளும் சரி, சோஷலிஸ்டுகள் என்கிற பெயரை வைத்துக் கொள்கிறவர்களும் சரி—எடுத்துக்காட்டாக இரண்டாவது இன்டர்நேஷனலின் சோஷலிஸ்டுகள்—நிறுத்திக் கொள்கிற மாதிரி தேசங்களின் சமத்துவத்தை மொட்டையாக, சம்பிரதாய ரீதியாக, வெறும் சொல் விளம்பரமாக, உண்மையிலே பிடி கொடுக்காத, அங்கீகாரம் செய்வதோடு கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் தேசியக் கொள்கை நிறுத்திக் கொள்ள முடியாது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களுடைய கிளர்ச்சி, பிரசாரம் அனைத்திலும்—பாராளுமன்றத்திற்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி—எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், அவற்றின் ''ஜனநாயக'' அரசியல் சட்டங்கள் இருந்த போதிலும், தேசங்களின் சமத்துவத்தையும் தேசியச் சிறுபான்மையினரின் உத்திரவாதமாக்கப்பட்ட உரிமைகளையும் எப்பொழுதும் மீறி வருவதை முரணின்றி அம்பலப்படுத்த வேண்டும். மேலும், முதலாவதாக, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்க்கும் போராட்டத்தில் தொழிலாளர்களை முதலில் ஒன்று படுத்தியும் பிறகு உழைப்பாளி மக்களின் முழுத் திரளையும் ஒன்றுபடுத்தியும் சோவியத் அமைப்புமுறை ஒன்றுதான் உண்மையான தேசங்களின் சமத்துவத்தை உத்திரவாதம் செய்யும் திறனுடையது என்று எப்போதும் விளக்கி வருவது அவசியம்; இரண்டாவதாக, சார்பு தேசங்களிலும் முழு அரசுரிமை பெறாத தேசங்களிலும் (எடுத்துக்காட்டாக, அயர்லாந்து, அமெரிக்காவில் நீக்ரோக்கள், முதலானவை) காலனிகளிலும் உள்ள புரட்சி இயக்கங்களுக்கும் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் நேரடியாக உதவிபுரிய வேண்டும்.

பின்சொன்ன நிபந்தனையில்லாமற்போனால்—அது குறிப்பான முக்கியத்துவமுள்ளது—சார்பு தேசங்களையும் காலனி

களையும் ஒடுக்கி வருவதை எதிர்த்துப் போராட்டம் என்பதும், அவற்றின் பிரிந்துபோகும் உரிமையை அங்கீகரிப்பது என்பதும், வெறும் பிரசாரத்திற்குரிய விளம்பரப் பலகையேயாகும்; இதற்கு இரண்டாவது இன்டர்நேஷனலின் கட்சிகள் சாட்சி கூறுகின்றன.

10) சொல்லளவில் சர்வதேசியத்தை அங்கிகரிப்பது, செயலில், எல்லாக் கிளர்ச்சி, பிரசார, நடைமுறை வேலைகளிலும் அதற்குப் பதிலாகக் குட்டிபூர்ஷ்வாத் தேசியவாதத்தையும் சமாதானவாதத்தையும் வைப்பது என்பது இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த கட்சிகளிடையே மட்டுமின்றி, அந்த இன்டர்நேஷனலிலிருந்து வெளியேறியிருக்கிற கட்சிகளிடையேயும், இப்போது தங்களைக் கம்யூனிஸ்ட் என்று அழைத்துக் கொள்கிற கட்சிகளிடையேயுங்கூடத்தான், மிகவும் வழக்கமாயிருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு தேசிய அமைப்பிலிருந்து (அதாவது, ஒரேயொரு நாட்டில் இருந்துகொண்டு உலக அரசியலை நிர்ணயிக்கத் திறனில்லாதிருப்பது) ஒரு சர்வதேச அமைப்பாக (அதாவது, குறைந்தபட்சம் சில முன்னேறிய நாடுகளை உள்ளடக்கிக் கொண்டு உலக அரசியல் முழுவதின் மீதும் நிர்ணயமான செல்வாக்கு செலுத்தத் திறன்பெற்ற ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) மாற்றும் கடமை நிகழ்காலத்தின் அவசரப் பிரச்சினை ஆக ஆக, இந்தத் தீமையை எதிர்த்து, மிக மிக ஆழமாக வேர்விட்டிருக்கிற குட்டிபூர்ஷ்வாத் தேசியவாத விருப்பு வெறுப்புகளை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது மேலும் மேலும் அவசியமாகும். சர்வதேசியம் என்று குட்டிபூர்ஷ்வாத் தேசியவாதம் பிரகடனம் செய்வது தேசங்களின் சமத்துவத்தை மொட்டையாக அங்கீகரிப்பதற்கு மேலாக ஒன்றுமில்லை. இந்த அங்கீகாரம் வெறுமனே வார்த்தையளவிலேதான் என்பது ஒரு புறமிருக்க, குட்டிபூர்ஷ்வாத் தேசியவாதம் தேசியச் சுயநல உணர்வைப் பேணிக் காக்கிறது; ஆனால் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம், முதலாவதாக, ஒரு நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்களை உலக ரீதியாக நடக்கும் அந்தப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்றும், இரண்டாவதாக, முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றியைச் சாதிக்கும் ஒரு தேசம் சர்வதேச முத

லாளித்துவத்தைத் தூக்கி எறிவதற்கு ஆகமிகப் பெரிய தேசியத் தியாகங்கள் புரியத் திறனும் விருப்பமும் கொண்டிருக்க வேண்டும் என்றும் கோருகிறது.

ஆக, ஏற்கெனவே முற்ருக முதலாளித்துவமயமாகியிருக்கிற நாடுகளில், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக உண்மையிலேயே செயல்படுகிற தொழிலாளர் கட்சிகளைக் கொண்டிருக்கிற நாடுகளில், சர்வதேசியத்தின் கருத்தமைப்பு, கொள்கைபற்றிய சந்தர்ப்பவாத, குட்டி பூர்ஷ்வா சமாதானவாதத் திரிபுகளை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது ஒரு முதன்மையான, முக்கியக் கடமையாகும்.

*11)* நிலப்பிரபுத்துவ அல்லது தந்தையாதிக்க ரீதியான, தந்தையாதிக்க-விவசாயி ரீதியான உறவுகள் மேலோங்கிய நிலையிலுள்ள, மற்றவற்றைவிடப் பிற்பட்டுள்ள அரசுகள், தேசிய இனங்கள் சம்பந்தப்பட்டவரை, பின்வருபவற்றைக் கவனிப்பது சிறப்பாக முக்கியமானது:

*ஒன்று:* இந்த நாடுகளிலுள்ள பூர்ஷ்வா ஜனநாயக இயக்கங்களுக்கு எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் உதவி புரிந்து தீர வேண்டும்; மேலும், மிகமிகத் தீவிரமான உதவி தரும் கடமை எந்த நாட்டை அந்தந்தப் பிற்பட்ட தேசம் காலனியாக அல்லது நிதித் துறையில் சார்ந்திருக்கிறதோ அந்த நாட்டின் தொழிலாளர்களையே பிரதானமாகப் பொறுத்திருக்கும்;

*இரண்டு:* பிற்பட்ட நாடுகளில் இருக்கிற மதக் குருக்களையும் செல்வாக்குள்ள பிற பிற்போக்கான, மத்தியகாலப் பேர்வழிகளையும் எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியம்;

*மூன்று:* ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடக்கும் விடுதலை இயக்கத்தை கான்கள், நிலப்பிரபுக்கள், முல்லாக்கள் முதலியோரின் நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியோடு பிணைக்க முயல்கிற அகண்ட-இஸ்லாம், இன்னும் அது போன்ற பிற போக்குகளை எதிர்த்துப் போராடுவதின் அவசியம்;*

---

* திருத்தப் பிரதிகளில் 2வது, 3வது பிரிவுகளுக்கு எதிரே வி. இ. லெனின் இரட்டை அடைப்புக்குறியிட்டு, 2ஐயும் 3ஐயும் ஒன்றுசேர்க்கவும் என்று எழுதினர்.—(ப-ர்.)

நான்கு: நிலப்பிரபுக்கள், பெரும் நில உடைமை முறை, நிலப்பிரபுத்துவ முறையின் எல்லாவித வெளிப்பாடுகள் அல்லது மீதமிச்சங்கள் ஆகியவற்றை எதிர்த்து விவசாயி இயக்கத்துக்குத் தனிச்சிறப்பான ஆதரவு நல்குவதின் அவசியம், மேற்கு ஐரோப்பியக் கம்யூனிஸ்ட் பாட்டாளி வர்க்கத்துக்கும் கிழக்கிலும் காலனிகளிலும் பொதுவாகப் பிற்பட்ட நாடுகளிலும் உள்ள புரட்சிகரமான விவசாயி இயக்கத்துக்கும் இடையே முடிந்தவரைக்கும் நெருக்கமான நேச உறவை நிலைநாட்டுவதின் மூலமாக விவசாயி இயக்கத்துக்கு மிக மிகப் புரட்சிகரமான குணத்தைத் தர முயல்வதின் அவசியம்; முதலாளித்துவத்திற்கு முந்திய உறவுகள் மேலோங்கியிருக்கிற நாடுகளில், ''உழைப்பாளி மக்களின் சோவியத்துக்கள்'' முதலியவற்றை நிறுவுவதின் வழியாக சோவியத் அமைப்பு முறையின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பொருத்திச் செயல்படுத்த எல்லா முயற்சிகளும் செய்வது குறிப்பாக அவசியம்;

ஐந்து: பிற்பட்ட நாடுகளிலுள்ள பூர்ஷ்வா-ஜனநாயக விடுதலைப் போக்குகளுக்குக் கம்யூனிஸ்ட் சாயம் பூசும் முயற்சிகளை எதிர்த்துத் தீர்மானமான போராட்டம் நடத்துவதின் அவசியம்; இந்த நாடுகளில் எதிர்காலத்திய பாட்டாளி வர்க்கக் கட்சிகளின்—அவை பெயரளவுக்கு மட்டும் கம்யூனிஸ்டாக இரா—மூல உறுப்பினர்கள் தங்களுடைய தனிச்சிறப்பான கடமைகளை, அதாவது தத்தம் தேசங்களுக்குள்ளேயே பூர்ஷ்வா-ஜனநாயக இயக்கங்களை எதிர்த்துப் போராடுவதை, கவனத்தில் கொண்டு ஒன்றுபடுத்தப்படும் பயிற்சி யளிக்கப்படும் என்கிற நிபந்தனையின் பேரில் மட்டுமே காலனி நாடுகளின், பிற்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா-ஜனநாயகத் தேசிய இயக்கங்களைக் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் ஆதரிக்க வேண்டும், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் காலனி நாடுகளின், பிற்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா ஜனநாயகத்தோடு ஒரு தற்காலிகக் கூட்டு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; ஆனால் அத்துடன் ஒன்று கலக்கக் கூடாது; மேலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாட்டாளி வர்க்க இயக்கத்தின்—அது மிக மிக ஆரம்பகாலக் கரு வடிவத்திலிருந்த போதிலும்—சுதந்திரத்தை நிலைநிறுத்த வேண்டும்;

ஆருவது: ஏகாதிபத்திய வல்லரசுகள் அரசியல் ரீதியிலே சுதந்திரமான அரசுகள் என்ற வெளி வேஷத்தில் தங்களையே முற்றுகப் பொருளாதாரத் துறையிலும் நிதித் துறையிலும் இராணுவத் துறையிலும் சார்ந்திருக்கும்படியான அரசுகளை ஏற்படுத்துகின்றன; எல்லா நாடுகளின், குறிப்பாகப் பிற்பட்ட நாடுகளின் மிக விரிவான உழைப்பாளி மக்களிடையே ஏகாதிபத்திய வல்லரசுகள் திட்டமுறையாகப் பயில்கிற இத்தகைய வஞ்சகத்தை எப்போதும் விளக்கி அம்பலப்படுத்திக் கொண்டேயிருப்பதின் தேவை; நவினகாலச் சர்வதேச நிலைமைகளில், சார்புள்ள, பலவீனமான தேசங்களுக்கு ஒரு சோவியத் குடியரசுகளின் கூட்டில் தவிர வேறு விமோசனம் கிடையாது.

12) ஏகாதிபத்திய வல்லரசுகள் காலனிகளாயுள்ள, பலவீனமான தேசிய இனங்கள் மீது சகாப்த காலமாகச் செலுத்திய ஒடுக்கு முறையானது ஒடுக்கப்பட்ட தேசங்களின் உழைப்பாளி மக்களிடையே ஒடுக்கும் தேசிய இனங்கள் மீது பகைமையுணர்ச்சியை மூட்டிவிட்டது மட்டுமின்றி அவற்றின் பாட்டாளி வர்க்கத்தின் மீதுகூட பொதுவாக இந்தத் தேசிய இனங்களின் அவநம்பிக்கையை எழுப்பியுள்ளது. இந்தப் பாட்டாளி வர்க்கத்தின் அதிகார பூர்வமான தலைவர்களில் பெரும்பாலோர் சோஷலிஸத்துக்கு வெறுக்கத்தக்க முறையில் 1914-19ல் துரோகம் இழைத்து, ''தந்தைநாட்டுப் பாதுகாப்பு'' என்பது ''தங்களுடைய சொந்த'' பூர்ஷ்வா வர்க்கத்துக்குக் காலனிகளை ஒடுக்கவும் சார்பு நாடுகளை நிதித்துறையில் கொள்ளையடிக்கவும் இருக்கும் ''உரிமையைப்'' பாதுகாப்பதை மறைப்பதற்காக ஒரு சமுதாய இனவெறித் திரையாகப் பயன்படுத்தப்பட்டபோது, இந்த முற்றிலும் நியாயமான அவநம்பிக்கை அதிகப்படுவது நிச்சயம். மறுபுறத்தில், எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஒரு நாடு பிற்பட்ட நிலையில் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மீது சிறு விவசாய உற்பத்தி முறையின், தந்தையாதிக்க முறையின், தனித்தொதுங்கி வாழும் நிலையின் பிடிப்பு பலமாயிருக்கிறது; இவை மிகமிக ஆழ்ந்த குட்டிபூர்ஷ்வா விருப்பு வெறுப்புகளுக்கும் தேசியச் சுயநல உணர்வுக்கும் தேசியக் குறுகிய மனப்பான்மைக்கும் தவிர்க்க முடியாதவாறு குறிப்பான வலுவையும் உறுதியையும் தரு

கின்றன. இந்த விருப்பு வெறுப்புகள் மிகவும் மெதுவாகத் தான் மறைந்து தீரும், ஏனெனில் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் முன்னேறிய நாடுகளில் மறைந்த பின்னர் தான், பிற்பட்ட நாடுகளின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை முழுவதும் தீவிரமாக மாறிய பின்னர்தான், அவை மறைய முடியும். எனவே, வெகுகாலமாக ஒடுக்கப் பட்டு வருகிற நாடுகள், நாட்டினங்கள் ஆகியவற்றிடையே யுள்ள தேசிய உணர்ச்சிகளின் மீதமிச்சங்களைக் குறிப் பான எச்சரிக்கையுடனும் கவனிப்புடனும் நடத்துவது எல்லா நாடுகளையும் சேர்ந்த வர்க்க உணர்வு பெற்ற கம் யூனிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்; மேலும் இந்த அவநம்பிக்கையையும் இந்த விருப்பு வெறுப்புகளை யும் இன்னும் விரைவாகப் போக்கும் நோக்குடன் சில சலுகைகளைத் தருவதும் அதே அளவுக்கு அவசியமாகும். உலகனைத்துமுள்ள எல்லா நாடுகளின், எல்லாத் தேசிய இனங் களின் பாட்டாளி வர்க்கமும், அதைப் பின்தொடர்ந்து உழைப்பாளி மக்களின் திரள் முழுவதும் தன்னிச்சை யாகக் கூட்டொருமைக்கும் ஒற்றுமைக்கும் முயற்சி செய்தா லொழிய முதலாளித்துவத்தை வெல்வதை வெற்றிகர மாகச் சாதிக்க முடியாது.

நூல்திரட்டு, தொகுதி *41*

*1920*, ஜூன்-ஜூலை மாதங்களில்
எழுதப்பட்டது

*1920*, ஜூலை *14*ல்
''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்'',
இதழ் *11*ல் பதிப்பிக்கப்பட்டது

## 1920, ஜூலை 19ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸில் ஆற்றிய சர்வதேச நிலைமையும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் அடிப்படையான கடமைகளும் பற்றிய உரை

என்பதிலிருந்து

தோழர்களே, முடிவாக இந்த விஷயத்தின் வேறு ஒரு அம்சத்தை எடுத்துக் கொள்கிறேன். நமது காங்கிரசுக்கு உலகக் காங்கிரஸ் என்கிற பெயர் தகும் என்று நமது தோழர், கூட்டத் தலைவர், சொன்னார். அவர் சொன்னது சரி என்றே நான் நினைக்கிறேன். அதற்குக் குறிப்பான காரணம், பிற்பட்ட, காலனி நாடுகளின் புரட்சி இயக்கத்தின் பிரதிநிதிகள் பலர் இங்கே இருப்பதுதான். இது ஒரு சிறிய ஆரம்பமே. எனினும் ஆரம்பித்து விட்டதே ஒரு முக்கியமான விஷயந்தான். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் புரட்சிகரமான பாட்டாளிகள், பாட்டாளி வர்க்கம் இல்லாத, அல்லது அநேகமாக இல்லாத, நாடுகளின் புரட்சிகரமான மக்களுடனும் காலனி முறையிலுள்ள கிழக்கத்திய நாடுகளின் ஒடுக்கப்படுகிற மக்களுடனும் ஒன்றுபடுவது இந்தக் காங்கிரசில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒற்றுமையுறவுகளைப் பிணைத்துக் கட்டுவது நம்மைப் பொறுத்திருக்கிறது— அதை நாம் சாதிப்போம் என்று உறுதியாக நம்புகிறேன். குட்டிபூர்ஷ்வாப் பேர்வழிகளின் எதிர்ப்பையும் சிறிய மேல் தட்டுத் தொழிலாளர்-பிரபுக்களின் செல்வாக்கையும் தோற்கடித்து ஒவ்வொரு நாட்டின் சுரண்டப்படுகிற, ஒடுக்கப்படுகிற தொழிலாளர்களின் புரட்சிகரமான தாக்குதல், இதுவரை சரித்திரத்திற்கு வெளியிலிருந்த, சரித்திரத்தின் செயப்படு பொருளாக மட்டுமே கருதப்பட்டு வந்த கோடானுகோடி மக்களின் புரட்சிகரமான தாக்குதலுடன் ஒன்று கலக்கும் போது உலக ஏகாதிபத்தியம் வீழ்ந்து தீர வேண்டும்.

ஏகாதிபத்திய யுத்தம் புரட்சிக்கு உதவியிருக்கிறது; பூர்ஷ்வா வர்க்கம் காலனிகளிலிருந்து, பிற்பட்ட நாடுகளிலிருந்து, தனிமையிலிருந்து, போர்வீரர்களை இந்த ஏகாதிபத்

திய யுத்தத்தில் பங்கெடுப்பதற்காக இழுத்துச் சென்றது. ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டனைப் பாதுகாப்பது இந்திய விவசாயிகளின் கடமை என்று இந்தியாவிலிருந்து வந்த போர் வீரர்களிடம் பிரிட்டிஷ் பூர்ஷ்வா வர்க்கம் வலியுறுத்திச் சொல்லியது; பிரான்ஸைப் பாதுகாப்பது கறுப்பு நிற மக்களின் கடமை என்று பிரெஞ்சுக் காலனிகளிலிருந்து வந்த போர்வீரர்களிடம் பிரெஞ்சு பூர்ஷ்வா வர்க்கம் வலியுறுத்திச் சொல்லியது. அவை அவர்களுக்கு ஆயுதங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்தன. இது மிகவும் பயனுள்ள விஷயமாகும்; இதற்காக பூர்ஷ்வா வர்க்கத்திற்கு நாங்கள் ஆழ்ந்த நன்றி செலுத்தக்கூடும்—எல்லா ருஷ்யத் தொழிலாளர்கள் விவசாயிகள் சார்பாகவும், குறிப்பாக ருஷ்ய செஞ்சேனை முழுவதின் சார்பாகவும் நாங்கள் நன்றி செலுத்தக்கூடும். ஏகாதிபத்திய யுத்தம் சார்பு நாட்டு மக்கள் சமூகங்களை உலக வரலாற்றுக்குள் இழுத்து விட்டிருக்கிறது. இப்போது நம்மை எதிர்கொண்டிருக்கிற அதி முக்கியமான கடமைகளில் ஒன்று, முதலாளித்துவம் அல்லாத நாடுகளில் சோவியத் இயக்கத்தின் ஸ்தாபனத்திற்குரிய அடிக்கல் எப்படிப் போட முடியும் என்று சிந்திப்பதுதான். அங்கு சோவியத்துக்கள் அமைப்பது சாத்தியமே; அவை தொழிலாளர் சோவியத்துக்களாக இரா, விவசாயிகளின் சோவியத்துக்களாக, அல்லது உழைப்பாளி மக்களின் சோவியத்துக்களாக இருக்கும்.

நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கும்; தவறுகள் தவிர்க்க முடியாமலிருக்கும்; இந்தப் பாதையில் பல கஷ்டங்கள் எதிர்ப்படும். கோடிக் கணக்கான மக்களிடையே ஒழுங்கற்ற முறையில் இதுவரை செய்து வந்த வேலையை ஒழுங்காக, இசைவாக, திட்ட ஒழுங்கோடு, செய்துவர சாத்தியமாக்கும் நடைமுறைக்குரிய கோட்பாடுகளை விவரிப்பது, அல்லது குறிப்பிடுவது, இரண்டாவது காங்கிரசின் அடிப்படையான வேலையாகும்.

இப்போது, கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் முதல் காங்கிரஸ் நடந்து ஒரு வருடமோ, அதற்குச் சற்று அதிகமோ ஆனபிறகு, நாம் இரண்டாவது இன்டர்நேஷனலை வென்ற வெற்றி வீரர்களாக வெளிவந்திருக்கிறோம்; சோவியத் கருத்துக்கள் நாகரிகமுள்ள நாடுகளைச் சேர்ந்த தொழி

லாளர்களிடையே இன்று பரவியிருப்பது மட்டுமல்ல, அவை புரியக்கூடியவையாக, தெரிந்துள்ளவையாக இருப்பது அவர்களிடையே மட்டும் அல்ல; எல்லா நாட்டுத் தொழிலாளர்களும், தங்களை சோஷலிஸ்டுகள் என்று அடிக்கடி அழைக்கிற போலிப் பண்டிதர்கள் பலர், சோவியத் ''அமைப்பு''—இப்படித்தான் இதை ஜெர்மன் அமைப்புகர்த்தாக்கள் அழைக்க விரும்புகிறார்கள்—அல்லது சோவியத் ''கருத்து''—பிரிட்டிஷ் ''கில்டு'' சோஷலிஸ்டுகள்[70] இப்படித்தான் அழைக்கிறார்கள்—பற்றி மேதாவித் தனத்துடனும் அரை மேதாவித் தனத்துடனும் வாதிக்கிறதைக் கண்டு சிரிக்கிறார்கள்; சோவியத் ''அமைப்பு'' அல்லது ''கருத்து'' பற்றிய இந்த வாதங்கள் அடிக்கடி தொழிலாளர்களின் பார்வையையும் சிந்தனையையும் மங்கச்செய்கின்றன. என்றாலும் இந்தப் போலிப் பண்டிதக் குப்பைகளைத் தொழிலாளர்கள் அகற்றியெறிந்து வருகிறார்கள்; சோவியத்துக்கள் தந்துள்ள ஆயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வருகிறார்கள். கிழக்கத்திய நாடுகளிலும் சோவியத்துக்களின் பாத்திரம், குறிபொருள் பற்றிய மதிப்புப்பாராட்டு இப்போது பரவியிருக்கிறது.

சோவியத் இயக்கத்திற்குரிய ஒரு அடிப்படை கிழக்கு பூராவிலும், ஆசியா முழுவதிலும், எல்லாக் காலனி மக்கள் இனங்களிடையேயும் போடப்பட்டுள்ளது.

சுரண்டுபவர்களை எதிர்த்து சுரண்டப்படுபவர்கள் கிளர்ந்தெழுந்து தங்களுடைய சோவியத்துக்களை நிறுவ வேண்டும் என்கிற கூற்று மிகவும் சிக்கலான ஒன்றல்ல. எங்களது அனுபவத்திற்குப் பின்னர், ருஷ்யாவில் இரண்டரை ஆண்டுகளாக சோவியத் குடியரசு இருந்து வருவதற்குப் பின்னர், மூன்றாவது இன்டர்நேஷனலின் முதல் காங்கிரசுக்குப் பின்னர், சுரண்டுபவர்களால் ஒடுக்கப்பட்டுவரும் கோடானு கோடி மக்களுக்கு அது புரியக்கூடியது ஆகி வருகிறது; மேலும், ருஷ்யாவிலுள்ள நாங்கள் அடிக்கடி சமரசம் செய்து தீர வேண்டி ஏற்படுகிறது என்றால், நமக்கொரு காலம் வரும் என்று காத்திருக்க வேண்டி ஏற்படுகிறது என்றால்—ஏனெனில் சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளைவிட நாங்கள் பலவீனமாயிருக்கிறோம்—125 கோடி எண்ணிக்கையுள்ள மக்களினது நலன்களின் காவலர்கள் நாங்கள் என்பதை நாங்கள் அறிவோம். மணிக்கு மணி அழிந்தொழிந்து வருகிற முட்டுக்

கட்டைகளும் விருப்பு வெறுப்புகளும் அறியாமையும் தற்காலிகமாக எங்களைத் தடங்கல் செய்து வருகின்றன; என்ருலும் மேலும் மேலும் அதிகமாக உலக மக்கள் தொகையின் இந்த எழுபது சதவிகிதத்தினரை, உழைக்கிற, சுரண்டப் படுகிற இந்த மக்கள் திரளை, நாங்கள் பிரதிநிதித்துவப் படுத்தியும் உண்மையிலே பாதுகாத்தும் வருகிருேம். நாங்கள் பெருமையோடு சொல்ல முடியும்: முதலாவது காங்கிரசில் உண்மையில் நாங்கள் பிரசாரகர்களாக மட்டுமே இருந்தோம், உலக முழுவதிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்திடையே பிரதானமான கருத்துக்களைப் பரப்பிக் கொண் மட்டும் இருந்தோம், போராட்ட அறைகூவலை மட்டு வெளியிட்டோம், இந்தப் பாதையில் செல்லக்கூடிய சக் பெற்ற மக்கள் எங்கே என்று மட்டும் கேள்வி எழுப்ப ஞேம். ஆனல், இப்போது, எங்கு பார்த்தாலும் முன்னேறிய பாட்டாளி வர்க்கம் எங்களோடு இருக்கிறது. சில சமயங்களில் மோசமாக ஸ்தாபன அமைப்பு பெற்று திருத்தியமைக்க வேண்டிய தேவையிருந்த போதிலும் எங்கு பார்த்தாலும் எங்களுக்கு ஒரு பாட்டாளிவர்க்கப் படை இருக்கிறது; மேலும், இப்போது எங்களது சர்வதேசத் தோழர்கள் ஒரு ஒன்றுபட்ட படையை ஸ்தாபன ரீதியாகத் திரட்ட எங்களுக்கு உதவினல், எங்களது கடமையை நிறைவேற்றுவதில் எந்தக் குறைபாடுகளும் எங்களைத் தடுக்க மாட்டா. இந்தக் கடமை உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கடமையே; ஒரு உலக சோவியத் குடியரசைப் படைக்கும் கடமையே. (நீடித்த கைதட்டல்)

நூல்திரட்டு, தொகுதி 41

''பிராவ்தா'', இதழ் 162,
*1920, ஜூலை 24*

## 1920, ஜூலை 26ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸில் தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய குழுவின் அறிக்கை

தோழர்களே, ஒரு சுருக்கமான முன்னுரையோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். அதன்பிறகு எங்களது குழுவின் செயலாளராக இருந்த தோழர் மாரிங், ஆய்வுரைகளில் செய்த மாற்றங்களைப் பற்றி ஒரு விபரமான விளக்கம் தருவார். பிற்சேர்வு ஆய்வுரைகளை வரையறுத்த தோழர் ராய் அவரைப் பின்தொடர்ந்து பேசுவார். திருத்தப்பட்ட தொடக்க ஆய்வுரைகளையும் பிற்சேர்வு ஆய்வுரைகளையும் ஒருங்கே எங்களது குழு ஒருமனதாக அங்கீகரித்துள்ளது. எனவே, எல்லா முக்கியமான பிரச்சினைகளிலும் நாங்கள் முழுமையான கருத்தொற்றுமை கண்டோம். இப்போது சில சுருக்கமான குறிப்புக்கள் மட்டும் சொல்கிறேன்.

முதலாவதாக, எங்களது ஆய்வுரைகளின் பிரதானமான, அடிப்படையான கருத்து என்ன? ஒடுக்கும் தேசங்களுக்கும் ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்ப்பது. இரண்டாவது இன்டர்நேஷனலைப் போலவும் பூர்ஷ்வா ஜனநாயகத்தைப் போலவும் அல்லாமல் நாங்கள் இந்த வேறுபாட்டை வலியுறுத்திச் சொல்கிறோம். இந்த ஏகாதிபத்தியச் சகாப்தத்தில், ஸ்தூலமான பொருளாதார உண்மைகளை நிலைநாட்டுவதும், எல்லாக் காலனி, தேசியப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் சூட்சுமமான கூற்றுகளிலிருந்தல்லாமல் ஸ்தூலமான யதார்த்தங்களிலிருந்து புறப்படுவதும் பாட்டாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலுக்கும் குறிப்பாக முக்கியமாகும்.

இன்று நாம் பார்க்கிறபடி, உலக முழுவதும் எண்ணிக்கையில் பெரிதாயுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களாகவும் எண்ணிக்கையில் அற்பமாக உள்ள ஒடுக்கும் தேசங்களாகவும்—ஆனால் அவை அமோகமான செல்வமும் பலமான இராணுவச் சக்திகளும் பெற்றவை—பிரிக்கப்பட்டுள்ளதே ஏகாதிபத்

தியத்தின் இனக்குறிப்பான குணும்சமாகும். உலக மக்கள் தொகையில் ஆகமிகப் பெரிய பெரும்பான்மையினர், 100 கோடிக்கு மேலான மக்கள், அநேகமாக 125 கோடி பேர் அல்லது—உலக மக்கள் தொகை 175 கோடி என்று நாம் எடுத்துக் கொண்டால்—உலக மக்கள் தொகையில் 70 சத மானம் உள்ள மக்கள் ஒடுக்கப்பட்ட தேசங்களின் கணக் கிலே சேருகிருர்கள்; இந்தத் தேசங்கள் நேரடியான காலனிச் சார்பு நிலையிலோ அல்லது அரைக் காலனிகளைக் குறிப்பவையாகவோ (உதாரணமாக பாரசிகம், துருக்கி, சீன) அல்லது ஒரு பெரிய ஏகாதிபத்திய வல்லரசினிடம் தோல் வியடைந்ததால் சமாதான ஒப்பந்தங்கள் காரணமாகப் பெரு மளவுக்கு அந்த வல்லரசைச் சார்ந்திருக்கும்படி செய்யப் பட்டவையாகவோ உள்ளன. இந்த வேறுபாடு, தேசங்களை ஒடுக்கப்பட்டவை ஒடுக்குபவை என்று பிரிக்கிற இந்தக் கருத்து, எல்லா ஆய்வுரைகளிலும் இழையோடிக் கொண் டிருக்கிறது—என் பெயரின் கீழ்ப் பிரசுரமான தொடக்க ஆய்வுரைகளில் மட்டுமல்லாமல் தோழர் ராய் முன்வைத்த ஆய்வுரைகளிலும் கூட. பின் சொன்னவை இந்திய நிலைமை யின், பிரிட்டனுல் ஒடுக்கப்பட்ட பிற பெரிய ஆசிய மக்களினங்களின் நிலைமையின், பார்வை நிலையிலிருந்து எழுதப்பட்டவை. அவை அவ்வளவு மதிப்புள்ளவையாக இருக்க அதுவே காரணம்.

எங்கள் ஆய்வுரைகளின் இரண்டாவது அடிப்படையான கருத்து, ஏகாதிபத்திய யுத்தத்திற்குப் பிறகு, சர்வதேச உறவுகள், அரசுகளின் மொத்த உலக அமைப்பு, சோவியத் இயக்கத்தையும் சோவியத் ருஷ்யாவின் தலைமையிலுள்ள சோவியத் அரசுகளையும் எதிர்த்து ஒரு சிறு குழுவான ஏகாதி பத்திய நாடுகள் நடத்தும் போராட்டத்தால் நிர்ணயிக்கப் படுகின்றன என்பதே. அதை நினைவில் வைக்காவிட்டால் எந்த ஒரு தேசிய, காலனிப் பிரச்சினையையும் — அது உலகத்தின் எந்த தூரக்கோடியிலிருந்தாலும்—நாம் சரியாக முன்வைக்க முடியாது. நாகரிக நாடுகள், பிற்பட்ட நாடுகள், இரண்டையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் இதைத் தம்முடைய தொடக்க நிலையாகக் கொண்டால் மட்டுமே அரசியல் பிரச்சினைகளை வைக்கவோ தீர்க்கவோ முடியும்.

மூன்ருவதாக, பிற்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா ஜன

நாயக இயக்கத்தின் பிரச்சினையைக் குறிப்பாக வலியுறுத்த நான் விரும்புவேன். இந்தப் பிரச்சினையே சில வேற்றுமைகளைத் தோற்றுவித்தது. கோட்பாடு வகையிலோ தத்துவார்த்த வகையிலோ, பிற்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா ஜனநாயக இயக்கங்களைக் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆதரித்துத் தீரவேண்டும் என்று சொல்லுவது சரியாக இருக்குமா என்று நாங்கள் விவாதித்தோம். எங்கள் விவாதத்தின் விளைவாக, ''பூர்ஷ்வா ஜனநாயக இயக்கம்'' என்பதை விட, தேசியப் புரட்சி இயக்கம் என்று பேசுவது என்கிற ஒருமனதான முடிவுக்கு வந்தோம். ஒவ்வொரு தேசியப் புரட்சி இயக்கமும் ஒரு பூர்ஷ்வா ஜனநாயக இயக்கமாகத் தான் இருக்க முடியும் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகம் இல்லை; காரணம், பிற்பட்ட நாடுகளில் மக்கள் தொகையில் ஆகமிகப் பெரிய திரளான விவசாயிகள் பூர்ஷ்வா-முதலாளித்துவ உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சிகள்—இந்தப் பிற்பட்ட நாடுகளில் அவை உண்மையிலே தோன்ற முடியுமேயானால்—விவசாய இயக்கத்துடன் திட்டவட்டமான உறவுகள் ஏற்படுத்திக் கொள்ளாமலும் அதற்குப் பயனுள்ள ஆதரவு தராமலும் கம்யூனிஸ்ட் செயல்தந்திரங்களையும் கம்யூனிஸ்ட் கொள்கையையும் பின்பற்ற முடியும் என்று நம்புவது கற்பனாவாதமாயிருக்கும். ஆனால், நாங்கள் பூர்ஷ்வா ஜனநாயக இயக்கத்தைப் பற்றிப் பேசுவோமேயானால் சீர்திருத்தவாத ரீதியான இயக்கத்துக்கும் புரட்சிகரமான இயக்கத்துக்கும் உள்ள எல்லா வேறுபாட்டையும் அழித்தவர்கள் ஆவோம் என்று ஆட்சேபிக்கப்பட்டது. இருந்தாலும் அண்மைக் காலத்தில் பிற்பட்ட நாடுகளிலும் காலனி நாடுகளிலும் அந்த வேறுபாடு வெகு தெளிவாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது; ஏனெனில் ஏகாதிபத்திய முதலாளிவர்க்கம் ஒடுக்கப்பட்ட தேசங்களில் கூட ஒரு சீர்திருத்தவாத இயக்கத்தை நடுவதற்குத் தன் சக்தியாலானது அனைத்தையும் செய்து வருகிறது. சுரண்டும் நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் காலனி நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே ஒருவிதமான நெருக்கம் ஏற்பட்டு விட்டது, எனவே மிக அடிக்கடி—ஒருவேளை, அநேகமாக எல்லா வழக்குகளிலுமே —ஒடுக்கப்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கம் தேசிய இயக்

கத்தை ஆதரித்தபோதிலும், அது ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துடன் கைகோத்து வேலை செய்து வருகிறது; அதாவது, எல்லாப் புரட்சிகரமான இயக்கங்களையும் புரட்சிகரமான வர்க்கங்களையும் எதிர்த்து அத்துடன் தன் சக்திகளைச் சேர்க்கிறது. இது குழுவிலே மறுக்க முடியாத படி நிரூபிக்கப்பட்டது; இந்த வேறுபாட்டைக் கணக்கில் எடுத்துக் கொள்வது, கிட்டத்தட்ட எல்லா வழக்குகளிலும் ''பூர்ஷ்வா ஜனநாயக'' என்கிற சொல்லுக்குப் பதிலாக ''தேசியப் புரட்சிகர'' என்ற சொல்லை வைப்பது ஒன்றே சரியானது என்று நாங்கள் முடிவு செய்தோம். இந்த மாற்றத்தின் குறிபொருள் என்னவெனில், கம்யூனிஸ்டுகளாகிய நாம், காலனிகளிலுள்ள பூர்ஷ்வா விடுதலை இயக்கங்கள் உண்மையிலே புரட்சிகரமானவையாக இருந்தால் மட்டுமே புரட்சிகரமான உணர்விலே விவசாயிகளுக்கும் சுரண்டப்படுகிற பெருந்திரளான மக்களுக்கும் பயிற்சி அளித்து ஒழுங்கமைக்கும் நம் வேலையை அவற்றின் பிரதிநிதிகள் தடங்கல் செய்யாமலிருந்தாலும் மட்டுமே, அவற்றை ஆதரிக்க முடியும், ஆதரிப்போம். இந்த நிலைமைகள் இல்லாவிட்டால், இந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் சீர்திருத்தவாத பூர்ஷ்வா வர்க்கத்தை—அதனிடையே இரண்டாவது இன்டர்நேஷனலின் வீரர்களும் இருக்கிறார்கள்—எதிர்த்துப் போராட வேண்டும். காலனி நாடுகளில் சீர்திருத்தவாதக் கட்சிகள் ஏற்கெனவேயுள்ளன. சில வழக்குகளில் அவற்றின் பிரதிநிதிகள் தங்களை சோஷல்-டெமாக்ராட்டுகள் என்றும் சோஷலிஸ்டுகள் என்றும் அழைத்துக் கொள்கிறார்கள். நான் குறிப்பிட்ட வேறுபாடு எல்லா ஆய்வுரைகளிலும் செய்யப்பட்டுள்ளது; அதன் விளைவாக எங்களது கருத்து இன்னும் மேலாகச் சரிநுட்பமாக வரையறுக்கப்பெற்றுள்ளது.

அடுத்தபடி, விவசாயிகளின் சோவியத்துக்கள் பற்றி ஒரு குறிப்பு செய்யவிரும்புகிறேன். முந்திய ஜாரிஸ்ட்காலனிகளில், துருக்கிஸ்தான் முதலியவை போன்ற பிற்பட்ட நாடுகளில், ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறை நடவடிக்கைகள் கம்யூனிஸ்ட் செயல்தந்திரங்களையும் கொள்கையையும் முதலாளித்துவத்துக்கு முந்தியநிலைமைகளில் எப்படிப் பொருத்திச் செயல்படுத்துவது என்கிற பிரச்சினையை முன்னே நிறுத்தியது. ஏனெனில், இந்த நாடுகளில் உள்ள பிர

தானமான குணும்சம், முதலாளித்துவத்துக்கு முந்திய உறவு முறைகளின் ஆதிக்கமேயாகும்; எனவே ஒரு சுத்தமான பாட்டாளி வர்க்க இயக்கம் என்கிற பேச்சுக்கே இடம் இருக்க முடியாது. இந்த நாடுகளில் ஒரு எந்திரத் தொழிலாளி வர்க்கமே அநேகமாகக் கிடையாது. அப்படியிருந்த போதிலும், அங்கேயும்கூட நாங்கள் தலைமைப்பாத்திரத்தை வகித்தோம், வகித்துத் தீர வேண்டும். இந்த நாடுகளிலுள்ள நாங்கள் வெற்றி கொள்ள வேண்டிய பிரம்மாண்டமான கஷ்டங்களை அனுபவம் காட்டியது. ஆனால், இந்தக் கஷ்டங்கள் இருந்த போதிலும் மக்களிடையே சுதந்திரமான அரசியல் சிந்தனைக்கும் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைக்கும்—யதார்த்தத்தில் ஒரு பாட்டாளி வர்க்கம் இல்லாத போதிலுங்கூட—வேட்கையைத் தூண்டி எழுப்பி விடுகிற நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்பதற்கு நடைமுறை விளைவுகள் சான்ருக உள்ளன. மேலைய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தோழர்களைவிட எங்களுக்கு இந்த வேலை அதிகக் கஷ்டமாக இருக்கிறது; காரணம், ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் அரசு நிர்வாக வேலையிலே மூழ்கியிருக்கிறது. மேலும், அரை நிலப்பிரபுத்துவச் சார்பு நிலையில் வாழும் விவசாயிகள் சோவியத் ஸ்தாபன அமைப்பு எனும் கருத்தை முற்ருகக் கிரகித்துக் கொண்டு அதை நடை முறைக்குக் கொண்டுவர முடியும் என்பது முற்றிலும் புரிந்த கொள்ளத் தக்கதே. ஒடுக்கப்பட்ட மக்கள், வர்த்தக மூலதனத்தால் மட்டுமின்றி நிலப்பிரபுக்களாலும் நிலப்பிரபுத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட அரசாலும் சுரண்டப் படுகிறவர்கள், தங்களுடைய நிலைமைகளிலுங்கூட இந்த ஆயுதத்தை, இந்த ஸ்தாபன அமைப்பு மாதிரியை, பொருத்திச் செயல்படுத்த முடியும் என்பதும் தெளிவு. சோவியத் ஸ்தாபன அமைப்பு என்கிற கருத்து எளிமையானதாகும்; அது பாட்டாளி வர்க்க உறவுகளுக்கு மட்டுமின்றி விவசாயி நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவ உறவுகளுக்கும் கூட பொருத்திச் செயல்படுத்தத் தக்கதாகும். இந்த அம்சத்தில் எங்களது அனுபவம் வெகு கணிசமானதாக இன்னும் இல்லை. ஆனால், காலனி நாடுகளின் பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண்ட குழுவின் விவாதங்கள், விவசாயிகளின் சோவியத்துக்கள், சுரண்டப்படுகிறவர்களின் சோவியத்துக்

கள் என்பவை முதலாளித்துவ நாடுகளில் மட்டுமின்றி முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகள் உள்ள நாடுகளிலும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட முடியும் என்றும், விவசாயிகளின் சோவியத்துக்களுக்கு அல்லது உழைப்பாளி மக்களின் சோவியத்துக்களுக்கு ஆதரவாக எல்லாவிடங்களிலும், பிற்பட்ட நாடுகள் காலனி நாடுகள் உட்பட, பிரசாரம் செய்வது கம்யூனிஸ்ட் கட்சிகளின், கம்யூனிஸ்ட் கட்சிகளை ஸ்தாபிக்கத் தயாராயுள்ள நபர்களின் தீராக் கடமை என்றும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் ஆய்வுரைகள் குறிப்பிட வேண்டும் என்று நிதர்சனப்படுத்தின. நிலைமைகள் அனுமதிக்கிற இடங்களிலெல்லாம், உழைப்பாளி மக்களின் சோவியத்துக்களை நிறுவ அவர்கள் உடன யான முயற்சிகள் செய்ய வேண்டும்.

இது நடைமுறைக்குரிய நடவடிக்கைகளுக்கு ஒரு மிக அக்கறைக்குரிய, முக்கியமான களத்தைத் திறந்து வ கிறது. இதுவரை இந்த விஷயத்தில் நமது பொதுவான அனுபவம் மிக அதிகமில்லை. ஆனல் படிப்படியாக மேலும் மேலும் விபரங்கள் குவியும். முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் பிற்பட்ட நாடுகளின் உழைப்பாளி மக்களுக்கு உதவ முடியும், உதவித் தீரவேண்டும்; சோவியத் குடியரசுகளின் வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் இந்த மக்களுக்கு உதவியாகக் கைகொடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் நிலையிலிருக்கும்போது பிற்பட்ட நாடுகள் தமது இன்றைய நிலையிலிருந்து வெளி வந்து வளர முடியும் என்பதில் விவாதத்துக்கே இடம் கிடையாது.

இந்தப் பிரச்சினை மீது குழுவில் ஒரு உற்சாகமான விவாதம் இருந்தது—என் ஆய்வுரைகள் சம்பந்தப்பட்டு மட்டுமல்ல, அதைவிட அதிகமாகத் தோழர் ராய் அவர்களின் ஆய்வுரைகள் சம்பந்தமாக; அவற்றை அவர் இங்கு ஆதரித்து நிற்பார்; அதற்குரிய சில திருத்தங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இப்படித்தான் பிரச்சினை வைக்கப்பட்டது: இன்று தங்களை விடுதலை செய்து கொண்டுவருகிற, யுத்தத்திற்குப் பிறகு கொஞ்சம் முன்னேற்றம் காண்பதாக இருக்கிற பிற்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டம் தவிர்க்க முடியாதது என்பது உண்மையா? இல்லை

என்று நாங்கள் பதில் கொடுத்தோம். வெற்றி பெற்ற புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் அவர்களிடையே திட்ட முறையாகப் பிரசாரம் நடத்திஞல், சோவியத் அரசாங் கங்கள் அவற்றின் உதவிக்குத் தன்னிடம் உள்ள எல்லாச் சாதனங்களுடனும் வந்தால்—அப்போது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் பிற்பட்ட நாடுகளுக்குத் தவிர்க்க முடியாதது என்று கருதுவது தவருக இருக்கும். எல்லாக் காலனிகளிலும் பிற்பட்ட நாடுகளிலும் நாம் சுதந்திரமாகப் போராடுகிறவர்களின் படைகளையும் கட்சி ஸ்தாபன அமைப்புகளையும் நிர்மாணிப்பதோடு மட்டும் அல்லாமல், விவசாயிகளின் சோவியத்துக்களை அமைப்பதற்கு உடனடி யான பிரசாரத்தைத் தொடங்கி அவற்றை முதலாளித் துவத்துக்கு முந்திய நிலைமைகளுக்குப் பொருத்தியமைக்க முயல்வதோடு மட்டுமல்லாமல், இந்தப் பிற்பட்ட நாடுகள், முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் உதவியோடு, முதலாளித்துவக் கட்டத்திஞடே நுழைந்து வராமலேயே, சோவியத் அமைப்பு முறைக்கும், குறித்த வளர்ச்சிக் கட்டங் களைக் கடந்த பிறகு, கம்யூனிஸத்துக்கும், போய்ச் சேர முடி யும் என்கிற கருத்துரையை கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் முன்வைத்துத் தத்துவ ரீதியாக மெய்ப்படுத்த வேண்டும்.

இதற்குத் தேவையான சாதனங்களை முன்கூட்டியே குறித்துக் காட்ட முடியாது. நடைமுறை அனுபவம் அதைச் சொல்லும். மிகத் தொலைவிலுள்ள நாட்டினங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களின் திரளும்கூட சோவியத்துக்களின் கருத்தைப் புரிந்துகொள்கிறது என்றும், சோவியத்துக்கள் என்கிற ஸ்தாபன அமைப்புகள் முதலாளித்துவத்துக்கு முந்திய நிலைமைகளுக்குப் பொருந்த மாற்றப்பட வேண்டும் என்றும், கம்யூனிஸ்ட் கட்சிகள் உடனடியாக, உலகின் எல் லாப் பகுதிகளிலும், இத்திசையில் வேலை தொடங்க வேண் டும் என்றும் திட்டவட்டமாக நிலைநாட்டப்பெற்றுள்ளது.

தங்களுடைய சொந்த நாடுகளில் மட்டுமின்றிக் காலனி நாடுகளிலும்கூட, குறிப்பாகக் காலனி மக்களை அடிமைத் தனத்தில் வைத்திருக்கச் சுரண்டும் நாடுகள் பயன்படுத் தும் துருப்புக்களிடையேயும், கம்யூனிஸ்ட் கட்சிகள் செய் யும் புரட்சிகரமான வேலையின் முக்கியத்துவத்தைக் குறிப் பிடவிரும்புகிறேன்.

எங்களது குழுவில் பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் குவெல்ச் இதைப்பற்றிப் பேசினார். பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நடக்கிற கலகங்களில் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளுக்கு உதவுவது துரோகம் என்று சாதாரண பிரிட்டிஷ் தொழிலாளி கருதுவான் என்று அவர் சொன்னார். உண்மைதான்; பிரிட்டனின், அமெரிக்காவின் ஜிங்கோயிஸ்ட்[71] மனப்பான்மையுள்ள, இனவெறி மனப்பான்மையுள்ள தொழிலாளர்-பிரபுக்கள் சோஷலிஸத்துக்கு ஒரு பெரிய ஆபத்தாக இருக்கிறார்கள்; இரண்டாவது இன்டர்நேஷனலின் வெகு பலமான தூணாக இருக்கிறார்கள். அந்த பூர்ஷ்வா இன்டர்நேஷனலைச் சேர்ந்த தலைவர்களின் தொழிலாளர்களின் ஆகமிகப் பெரிய துரோகம் நம்மை இங்கே எதிர்கொள்கிறது. காலனிப் பிரச்சினை இரண்டாவது இன்டர்நேஷனலிலும் விவாதிக்கப்பட்டது. இந்த விஷயத்தில் பாஸெல் கொள்கையறிக்கைகூட[72] மிகத் தெளிவாகவே உள்ளது. இரண்டாவது இன்டர்நேஷனலின் கட்சிகள் புரட்சிகரமான நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி செய்தன. ஆனால், ஒடுக்கும் தேசங்களை எதிர்த்து கலகம் செய்வதில் சுரண்டப்பட்ட, சார்பு நிலையிலுள்ள தேசிய இனங்களிடையே உண்மையான புரட்சிகரமான வேலையோ அவற்றுக்கு உதவியோ செய்யும் சமிக்ஞை ஒன்றும் அவை கொடுக்கவில்லை. இது, இரண்டாவது இன்டர்நேஷனலை விட்டுவிலகி மூன்றாவது இன்டர்நேஷனலோடு இணைய விரும்பும் பெரும்பாலான கட்சிகளுக்கும் பொருந்தும் என்றே நான் கருதுகிறேன். இதைப் பகிரங்கமாக, எல்லோருக்கும் கேட்கும்படியாக, நாம் பிரகடனம் செய்ய வேண்டும்; அதை மறுக்கவே முடியாது. இதை மறுக்க ஏதாவது முயற்சி நடக்கிறதா என்று நாம் பார்ப்போம்.

இந்த எல்லா யோசனைகளும் எங்களது தீர்மானங்களுக்கு அடிப்படையாகச் செய்யப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் அளவுக்கு மிஞ்சி நீண்டிருப்பதில் சந்தேகமில்லை; இருந்தாலும் அவை மதிப்புள்ளவையாக நிரூபிக்கப்பெறும்; நம்முடைய பிரதானக் கடமையாகிய தேசிய, காலனிப் பிரச்சினைகள்

சம்பந்தமான உண்மையான புரட்சிகரமான வேலையின் வளர்ச்சிக்கும் ஒழுங்கமைப்புக்கும் அவை உதவும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நூல்திரட்டு, தொகுதி 41

''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின்
இரண்டாம் காங்கிரஸின் செய்திகள்'',
இதழ் 6, 1920 ஆகஸ்டு 7

# ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்

ஆஸ்திரியக் கம்யூனிஸ்ட் கட்சி பூர்ஷ்வா ஜனநாயகப் பாராளுமன்றத்திற்கு நடக்கும் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்துள்ளது. சமீபத்தில் முடிவுற்ற கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது காங்கிரஸ் பூர்ஷ்வா பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும் இந்தப் பாராளுமன்றங்களின் வேலையிலும் பங்கெடுத்துக் கொள்வது சரியான செயல்தந்திரம் என்று அங்கீகரித்தது.

ஆஸ்திரியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளின் அறிக்கைகளை வைத்து முடிவு செய்கிறபோது, அது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் முடிவைக் கட்சிகளில் ஒன்றின் முடிவுகளுக்குமேலாக வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கம் போய்விட்ட சோஷலிஸத்தின் துரோகிகளாகிய ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ராட்டுகள் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் முடிவுபற்றி—அது ஆஸ்திரியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பகிஷ்கார முடிவுக்கு முரணுயுள்ளது—மகிழ்ச்சி அடைவார்கள் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது. என்றபோதிலும், ஷீடெமன் வகையறுக்கள், நோஸ்கே வகையறுக்கள், அல்பேர் டோமா, கோம்பர்ஸ் வகையறுக்கள் ஆகியோரின் கூட்டாளிகளும் ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ராட்டுகளும் ஆகிய கனவான்கள் போன்ற பேர்வழிகளின் வஞ்சகமான மகிழ்ச்சியில் அரசியல் உணர்வுள்ள தொழிலாளர்கள் கவனம் செலுத்தமாட்டார்கள் என்பது நிச்சயம். திருவாளர்கள் ரென்னர் வகையறுக்கள் பூர்ஷ்வா வர்க்கத்தினிடம் அடிமையாகிக் கிடப்பது போதிய அளவுக்கு வெளிப்படையாகியுள்ளது; எல்லா நாடுகளிலும் இரண்டாவது அல்லது மஞ்சள் இன்டர்நேஷனலின் வீரர்களை எதிர்த்து ஆத்திரம் வளர்ந்து பரவி வருகிறது.

ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ராட்டுகளாகிய கனவான்கள் பூர்ஷ்வா பாராளுமன்றத்திலும்—தங்கள் சொந்த பத்திரிகை வரை தங்களுடைய எல்லா ''வேலைகளின்'' துறைகளிலும்—முதலாளி வர்க்கத்துடன் யதார்த்தத்தில் முற்றுகச் சார்ந்திருக்கும் வகையில் முதுகெலும்பற்ற ஊசலாட்டத்திலே மட்டுமே திறனுள்ள குட்டிபூர்ஷ்வா ஜனநாயகவாதிகள் போல் நடந்துகொள்கிருர்கள். கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா பாராளுமன்றத்தில் நுழைவதற்குக் காரணம், தொழிலாளர்களும் உழைப்பாளிமக்களும் வஞ்சிக்கப்படுகிற இந்த முற்றுக அழுகிய முதலாளித்துவ ஸ்தாபனத்தின் மேடை, வஞ்சகத்தை அம்பலப்படுத்துவதற்குரிய மற்ருெரு சாதனம் என்பதே.

பூர்ஷ்வாப் பாராளுமன்றத்தில் பங்கெடுப்பதை எதிர்த்து ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் வாதங்களில் ன்று இன்னும் கொஞ்சம் அதிகக் கவனமான யோசனைக்ரியதாகும். அந்த வாதம் பின்வருமாறு:

''கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்றம் ஒரு பிரசார மேடையாக மட்டுமே முக்கியத்துவமுடையது. ஆஸ்திரியாவிலுள்ள எங்களுக்குத் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் ஒரு பிரசார மேடையாக இருக்கிறது. எனவே, பூர்ஷ்வாப் பாராளுமன்றத்தின் தேர்தல்களில் நாங்கள் பங்கெடுக்க மறுக்கிருேம். ஜெர்மனியில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் என்று குறிப்பிடத்தக்கதாக ஒன்றுமில்லை. அதனுலேதான் ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் வேருன செயல் தந்திரங்களைப் பயன்படுத்துகிருர்கள்''.

இந்த வாதம் தவறு என்று நான் கருதுகிறேன். பூர்ஷ்வாப் பாராளுமன்றத்தை ஒழிக்க நாம் போதிய சக்தியற்றவர்களாக இருக்கும்வரை நாம் அதை எதிர்த்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வேலை செய்ய வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளிகள் பயன்படுத்துகிற பூர்ஷ்வா ஜனநாயகக் கருவிகளை உழைக்கும் மக்களில்—பாட்டாளிகள் மட்டுமின்றி, அரைப் பாட்டாளிகளும் சிறு விவசாயிகளும்—எந்தக் கணிசமான தொகையினராயினும் நம்புகிறவரை, தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதியினர்—குறிப்பாகப் பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்கள்—

அதிமுக்கியமானதாகவும் செல்வாக்கு உள்ளதாகவும் கருதுகிற அதே மேடையிலிருந்து இந்த வஞ்சத்தை நாம் விளக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றித் தேர்தல்கள்—பூர்ஷ்வாக்களுக்கெதிராகத் தங்களுடைய சோவியத்துக்களுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் தேர்தல்கள்—நடத்த முடியாதிருக்கிற வரை, பூர்ஷ்வா வர்க்கம் அரசு அதிகாரத்தை வகித்து மக்களின் வெவ்வேறான வர்க்கங்களைத் தேர்தல்களில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறவரை, அந்தத் தேர்தல்களில், எல்லா உழைப்பாளி மக்களிடையேயும்—பாட்டாளிகளிடம் மட்டுமல்ல—பிரசாரம் செய்கிற நோக்குடன், நாம் பங்கெடுப்பது நமது கடமையாகும். பூர்ஷ்வாப் பாராளுமன்றம், நிதி மோசடிகளையும் எல்லாவிதமான லஞ்சங்களையும் மூடிமறைப்பதற்கு (பூர்ஷ்வாப் பாராளுமன்றத்தில் நடப்பதுபோல் வேறெங்கும் எழுத்தாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், மற்றவர்களின் விஷயத்தில் அத்துணை பெரிய அளவில் குறிப்பான ''சூட்சுமமான'' வகைப்பட்ட லஞ்சம் கையாளப்படுவதில்லை) ''ஜனநாயகத்தைப்'' பற்றிய வாய்ச்சொற்களைப் பயன்படுத்தி, தொழிலாளிகளை வஞ்சிப்பதற்குரிய ஒரு சாதனமாக இருந்துவருகிற வரை, இதே நிறுவனத்தில்—அது மக்களின் சித்தத்தை வெளியிடுவதாகக் கருதப்படுகிறது; ஆனால் யதார்த்தத்தில் பணக்காரர்கள் மக்களை ஏய்ப்பதையே அது மூடிமறைக்கிறது—கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த வஞ்சனையை முரணின்றி அம்பலப்படுத்துவது, தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகள் பக்கம் மாறிப் போகிற ரென்னர் கூட்டத்தின் ஒவ்வொரு காரியத்தையும் அம்பலப்படுத்துவது நமது கடமையாகும். பாராளுமன்றத்திலே பூர்ஷ்வாக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் இடையே உள்ள உறவுகள் மிக அடிக்கடி தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன; பூர்ஷ்வா சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களிடையேயும் நிலவும் உறவுகளை அவை பிரதிபலிக்கின்றன. எனவேதான், பூர்ஷ்வாப் பாராளுமன்றத்திலே, கம்யூனிஸ்டுகளாகிய நாம் கட்சிகள்பால் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் போக்கின், பண்ணைத் தொழிலாளிகள்பால் நிலப்பிரபுக்கள் கடைப்

பிடிக்கும் போக்கின், ஏழை விவசாயிகள்பால் பணக்கார விவசாயிகள் கடைப்பிடிக்கும் போக்கின், அலுவலக ஊழியர்கள்பால், சிறு உடைமையாளர்கள் பால் பெரும் முதலாளிகள் கடைப்பிடிக்கும் போக்கின், இப்படியே மற்ற வற்றின் உண்மையை நாம் மக்களுக்கு விளக்க வேண்டும்.

முதலாளிகளின் கேடுகெட்ட, நாசூக்கான தந்திரங்கள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக் கற்றுக்கொள்ளவும், குட்டிபூர்ஷ்வா வர்க்கத்தினர்கள் மீதும் பாட்டாளி வர்க்கமல்லாத உழைக்கும் மக்கள் திரள்மீதும் செல்வாக்குச் செலுத்தக் கற்றுக் கொள்ளவும், பாட்டாளி வர்க்கம் இதையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். இந்தப் ''பள்ளிப் பயிற்சி'' இல்லாமல், பாட்டாளி வர்க்கம் பாட்டாளி வர்க்க ர்வாதிகாரத்தின் பொறுப்புக்களை வெற்றிகரமாகச் சமாளிக்க டியாது. காரணம், அப்போதுங்கூட, பூர்ஷ்வா வர்க்கம் னுடைய புதிய நிலையிலிருந்து கொண்டு (ஆட்சியிலி ந்து கவிழ்க்கப்பட்ட ஒரு வர்க்கம் என்ற நிலையில்) பல டிவங்களிலே பல துறைகளிலே விவசாயிகளை ஏமாற்றியும் அலுவலகச் சிப்பந்திகளை லஞ்சம் கொடுத்தும் பயமுறுத்தியும் வரும், ''ஜனநாயகம்'' பற்றிய வாய்ச்சொற்களைக் கொண்டு தன்னுடைய சுயலாப, அசிங்கமான அபிலாஷைகளை மூடிமறைக்கும் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றும்.

இல்லை, ரென்னர் வகையறுக்களின், அவர்களைப் போன்றேயுள்ள பூர்ஷ்வா வர்க்கத்தின் இதர ஏவலாட்களின் கெடு எக்களிப்பினல் ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் பயப்பட மாட்டார்கள். ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய பகிரங்கமான, நேரடியான, சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டின் அங்கீகாரத்தைப் பிரகடனம் செய்ய அஞ்சமாட்டார்கள். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களுடைய அறிவு, சித்தம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கட்டுப்பாடுக்குக் கீழ்ப்படுவதால் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தின் மகத்தான பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்பதிலே நாம் பெருமைப்படுகிறோம்; அவ்வழியே, செயல்பூர்வமாக (ரென்னர்களும், பிரிட்ஸ் ஆட்லெர்களும்,

ஆட்டோ பௌளவர்களும் செய்வதுபோல் சொல்லளவில் அல்ல) உலகெங்கும் கம்யூனிஸத்துக்காக நடக்கும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமையைச் செயல்படுத்துகிறோம்.

நி. லெனின்

1920, ஆகஸ்ட் 15

நூல்திரட்டு, தொகுதி 41

*1920, ஆகஸ்ட் 31ல்,*
"*Die Rote Fahne*" (Wien), இதழ் 396ல்
ஜெர்மன் மொழியில் பதிப்பிக்கப்பட்டது

*1925ல், ''லெனின் திரட்டுக்கள் IV''ல்*
ருஷ்ய மொழியில் முதன்முதலில்
பதிப்பிக்கப்பட்டது

## ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது பத்தாம் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்ட கட்சி ஒற்றுமை பற்றிய தீர்மானத்தின் தொடக்க மசோதா[73]

1. கட்சியின் ஒற்றுமையும் இணைவும், கட்சி உறுப்பினர்களிடையேயுள்ள முழுமையான பரஸ்பர நம்பிக்கைக்கும் பாட்டாளி வர்க்க முன்னணிப்படையின் சித்த ஒருமைப்பாட்டை உண்மையிலே உருத்தாங்கி நிற்கிற உண்மையான கூட்டு வேலைக்கும் உத்தரவாதமாயிருப்பது, இச்சமயத்தில் நாட்டின் குட்டிபூர்ஷ்வா மக்கள் இடையே ஊசலாட்டத்தைப் பல சந்தர்ப்பங்கள் அதிகப்படுத்தி வரும்போது, குறிப்பாகத் தேவைப்படுகின்றது என்பதைக் கட்சி உறுப்பினர்களின் கவனத்திற்குக் காங்கிரஸ் கொண்டுவருகிறது.

2. அது ஒருபுறமிருக்க, தொழிற்சங்கங்கள் பற்றிய பொதுவான கட்சி விவாதத்திற்கு முன்பேகூட, குழுப்பிரிவுப் போக்கின் சில சமிக்ஞைகள்—தனித்தனிச் செயல் திட்டத்தைக் கொண்டு குழுக்களை அமைத்தல், ஓரளவுக்குத் தனிமைப்படுத்தித் தங்கள் சொந்தக் குழுவின் கட்டுப்பாட்டைச் சிருஷ்டிக்க முயற்சித்தல் — கட்சியிலே புலப்பட்டன. உதாரணமாக, மாஸ்கோவில் ஒரு கட்சி மாநாட்டிலும் (1920, நவம்பர்) கார்க்கவில் ஒரு மாநாட்டிலும் ''தொழிலாளர் எதிர்த்தரப்பு''[74] எனப்பட்ட குழு, ஓரளவுக்கு ''ஜனநாயக மத்தியத்துவவாதம்''[75] எனப்பட்ட குழு, இரண்டினாலும் இப்படிப்பட்ட குழுப் பிரிவுப் போக்கின் அறிகுறிகள் வெளிப்படுத்தப்பட்டன.

எல்லா வகைப்பட்ட குழுப் பிரிவுப்போக்கும் தீங்கானது, அனுமதிக்க முடியாதது என்று எல்லா வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் தெளிவாக உணர்ந்து தீர வேண்டும்; ஏனெனில், தனித்தனிக் குழுக்களின் உறுப்பினர்கள், எவ்வளவுதான் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாக்க விரும்புகிற போதிலும், நடைமுறையில் குழுப் பிரிவுப்போக்கு கூட்டு வேலையைப் பலவீனப்படுத்துவதற்கும், ஆட்சி செலுத்தும்

கட்சியாயிருப்பதால் அதற்குள் நுழைந்து கொண்டிருக்கிற கட்சியின் விரோதிகள் விரிசலை விரிவாக்கி அதை புரட்சி எதிர்ப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தத் தீவிரப்படுத்தப்பட்ட, திரும்பத் திரும்பச் செய்கிற முயற்சிகளுக்கும் தவிர்க்க முடியாதவாறு கொண்டுபோய் விடுகிறது.

ஒரு முற்றான முரணற்ற கம்யூனிஸ்ட் கொள்கையிலிருந்து திரிபாகச் செல்வதைப் பாட்டாளிவர்க்கத்தின் விரோதிகள் எந்த வழியில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது க்ரோன்ஷ்டாட் கலக வழக்கில் மிகத் தெற்றெனக் காட்டப்பட்டது; அப்போது, உலகிலுள்ள எல்லா பூர்ஷ்வாப் புரட்சி எதிர்ப்பாளர்களும் வெள்ளைப் படையினரும் சோவியத் அமைப்பின் கோஷங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிவதைச் சாதித்துக்கொள்ள மட்டும் முடிவதானால் அவற்றை ஏற்கக் கூடத் தாங்கள் தயார் என்று சொன்னார்கள். அப்போது சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் பொதுவாகவே பூர்ஷ்வாப் புரட்சி எதிர்ப்பாளர்களும் க்ரோன்ஷ்டாட்டில் சோவியத் அதிகாரத்தின் நலன்களுக்காக என்று மேலுக்குச் சொல்லிக் கொண்டு சோவியத் அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி எழுச்சிக்கு அறைகூவல் விடும் கோஷங்களைப் பயன்படுத்தினார்கள்[76]. ருஷ்யாவிலுள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அரணைப் பலவீனப்படுத்தி அழிக்கும் ஒரே நோக்கத்திற்காக, வெள்ளைப்படையினர் தங்களைக் கம்யூனிஸ்டுகளாகவும், இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளாகவும்கூட மூடி மறைத்துக் கொள்ள முடியும், மறைத்துக் கொள்கிறார்கள் என்று இந்த உண்மைகள் முற்றாக நிரூபிக்கின்றன. அதே போல், க்ரோன்ஷ்டாட் கலகம் நடக்கவிருந்த தருணத்தில் பெத்ரோகிராதில் வினியோகிக்கப்பட்ட மென்ஷெவிக் துண்டுப் பிரசுரங்கள், மென்ஷெவிக்குகள் கலகங்களின் எதிர்ப்பாளர்கள் என்றும் வெகு சில திருத்தங்களுடன் மட்டும் சோவியத் ஆட்சியின் ஆதரவாளர்கள் என்றும் சொல்லிக் கொண்டே, யதார்த்தத்தில் க்ரோன்ஷ்டாட் கலகக்காரர்களையும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளையும் வெள்ளைப் படையினரையும் தூண்டிவிட்டு ஆதரிப்பதற்காக ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள கருத்து வேற்றுமை

களையும் குழுப்பிரிவுப்போக்கின் சில ஆரம்பத் தோற்றங் களையும் மென்ஷெவிக்குகள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று காட்டுகின்றன.

3. இந்தப் பிரச்சினையில், ஒரு பக்கத்தில், கட்சி ஒற்று மையின் பார்வை நிலையிலிருந்தும் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் வெற்றிக்குப் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் சித்த ஒருமைப்பாடு சாதிப்பது ஒரு அடிப் படையான நிபந்தனை என்கிற பார்வை நிலையிலிருந்தும் குழுப் பிரிவுப் போக்கின் தீங்கையும் அபாயத்தையும் பற்றி முழுமையாக விளக்குவதாகப் பிரசாரம் அமைய வேண்டும்; இன்னொரு பக்கத்தில், சோவியத் அதிகாரத்தின் பகைவர் களின் கடைசியாக வந்துள்ள செயல்தந்திர உத்திகளின் தனிச் சிறப்பான குணும்சங்களைப்பற்றிய ஒரு விளக்கமாக வும் அது அமைய வேண்டும். ஒரு பகிரங்கமான வெள்ளைப் படையின் கொடியின் கீழ் எதிர்ப்புரட்சி செய்வதின் பயனின்மையை உணர்ந்த பிறகு இந்தப் பகைவர்கள் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே இருக்கும் கருத்து வேற்றுமைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் சோவியத் அதிகாரத்தை அங்கீகரிப்பதில் மிகமிக நெருங்கியிருப்பதாக வெளிக்குத் தெரிகிற அரசியல் குழுக்களுக்கு அதிகாரத்தை மாற்றித் தருவதின் மூலமாக ஏதாவதொரு வழியில் எதிர்ப் புரட்சியை முன்னேற்றி விடவும் தங்களால் முடிந்தவரைக் கும் பாடுபட்டு வருகிறார்கள்.

இதற்கு முந்திய புரட்சிகளின் படிப்பினைகளையும் பிர சாரம் போதிக்க வேண்டும்; அவற்றில் அதிதமான புரட்சி கரக் கட்சிக்கு மிகமிக நெருங்கிய நிலையிலிருந்த எதிர்ப்புக் குழுவை, புரட்சிகரமான சர்வாதிகாரத்தை ஆட்டி அசைத்து, தூக்கியெறிந்து அதன்மூலமாகப் பின்னல் எதிர்ப்புரட்சியின், முதலாளிகளினதும் நிலப்பிரபுக்களினதும், முழு வெற்றிக்கு வழியைச் செப்பனிடுவதற்காகப் புரட்சி எதிர்ப்பு ஆதரித் தது.

4. குழுப் பிரிவுப்போக்கை எதிர்க்கும் நடைமுறைப் போராட்டத்தில் ஒவ்வொரு கட்சி ஸ்தாபனமும் எந்தப் பிரிவுப்போக்குச் செய்கைகளையும் தடுப்பதற்குக் கண்டிப் பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தலைமை நிலை யிலுள்ள கட்சியின் ஸ்தல ஸ்தாபனங்களின், மத்திய ஸ்தா

பனங்களின் கவனிப்பிற்கும் முடிவுக்கும் வைப்பதற்காக ஒவ்வொரு நடைமுறை யோசனையும் உடனடியாக, தாமதமில்லாமல், சாத்தியமான மிகச் சரிநுட்பமான வடிவத்தில் வைக்கப்படும் வகையிலே கட்சியின் குறைபாடுகளைப் பற்றிய விமர்சனம் நடத்தப்படுவது முற்றாகத் தேவை. விமர்சனம் செய்கிற ஒவ்வொருவரும் பகைவர்களின் வளையத்தால் சூழப்பட்டிருக்கிற கட்சியின் நிலையைத் தன்னுடைய விமர்சனத்தின் வடிவம் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும், மேலும், சோவியத், கட்சி வேலையில் நேரடியாகப் பங்குகொள்வதின் மூலமாக நடைமுறையில் கட்சியுடைய அல்லது தனிப்பட்ட கட்சி உறுப்பினர்களுடைய தவறுகள் திருத்தப்படுவதைச் சோதிக்க முடிகிற வகையில் தன் விமர்சனத்தின் உள்ளடக்கம் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். கட்சியின் பொதுக் கொள்கை பற்றிய பகுப்பாய்வு, அதன் நடைமுறை அனுபவத்தை பற்றிய மதிப்பீடு, அதன் முடிவுகள் நிறைவேற்றப்படுவதை சரிபார்ப்பது, தவறுகளைத் திருத்துவது பற்றிய ஆராய்ச்சி, முதலியன எப்பொழுதும் எந்த விதமான ''கொள்கை மேடைகளினதும்'' அடிப்படையில் அமைக்கப்பட்ட குழுக்கள் முன் பூர்வாங்க விவாதத்திற்கு வைக்கப்படக் கூடாது; அதற்குப் பதிலாக, எல்லா வழக்குகளிலும் விவாதத்திற்கென்று நேரடியாக எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக, ''திஸ்க்குஸியோன்னிய் லிஸ்தோக்''*, விசேஷமான உரையரங்குகள் ஆகியவை மேலும் முறையாகப் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும், விமர்சனம் பிரதானமானவற்றில் கவனத்தைக் குவிப்பதாயிருப்பதையும் பாட்டாளிகளின் வர்க்க விரோதிகளுக்கு உதவக் கூடியதான ஒரு வடிவத்தைத் தாங்காத படியும் உறுதிப்படுத்த இடைவிடாத முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்றும் காங்கிரஸ் உத்தரவிடுகிறது.

5. சிண்டிகலிஸத்தையும் அராஜகவாதத்தையும் நோக்கிப் போகும் திரிபை—இதைப் பரிசீலிக்க ஒரு விசேஷத் தீர்மானம் போடப்பட்டுள்ளது—கோட்பாடு ரீதியாக நிராகரித்து, எல்லாவிதக் குழுப் பிரிவுப்போக்கையும் முற்றாக ஒழித்து

* ''விவாதத் தாள்.''—(மொ-ர்.)

விடுவதைச் சாதிக்கும்படி மத்தியக் கமிட்டிக்குக் கட்டளை யிட்டு, அதே சமயத்தில் கட்சிக் காங்கிரஸ், ''தொழிலாளர் எதிர்த்தரப்பு'' எனப்பட்ட குழு, கட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கமல்லாத, நம்பத்தகாத நபர்களை விலக்குவது, அதி காரவர்க்கத்தை எதிர்த்துச் சண்டைபோடுவது, ஜனநாயகத் தையும் தொழிலாளர் முன்முயற்சியையும் வளர்ப்பது போன்ற—உதாரணத்துக்குக் குறிப்பிட்டால்—தனிக் கவனம் செலுத்த வேண்டிய ஒவ்வொரு நடைமுறை யோசனையும் மிகமிகக் கவனிப்போடு பரிசீலிக்கப்பட்டு நடைமுறை வேலை யில் சோதிக்கப்பட வேண்டும் என்று பிரகடனப்படுத்து கிறது. பல்வேறு வகைப்பட்ட முட்டுக்கட்டைகளை நாம் எதிர் கொள்கிறோம் என்றாலும், இந்தப் பிரச்சினைகள் சம் பந்தமாக எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவில்லை, காரியத்திற்கு அப்பாற்பட்ட, குழுப் பிரிவுப்போக்குப் போலி விமர்சனங்களை ஈவிரக்கமின்றி நிராகரிக்கிற கட்சி, அதே காலத்தில் புதிய வழிமுறைகளைச் சோதித்துப் பார்த்து அதிகார வர்க்கத்தை எதிர்த்தும், ஜனநாயகத்தையும் முன்முயற்சியையும் விரிவாக்கவும், தன் அணிகளில் நுழைந்துள்ள நபர்களைக் கண்டுபிடித்து, அம் பலப்படுத்தி, கட்சியிலிருந்து வெளியேற்றுவது, முதலிய வற்றிற்கு இடைவிடாது தொடர்ந்து தன்னிடமுள்ள எல்லாச் சாதனங்களைக் கொண்டும் போராடும் என்றும் கட்சிக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

6. எனவே, ஒரு அல்லது மற்றொரு கொள்கை மேடை யின் அடிப்படையில் அமைந்துள்ள எல்லாக் குழுக்களும் (''தொழிலாளர் எதிர்த்தரப்புக்'' குழு, ''ஜனநாயக மத்தி யத்துவவாதக்'' குழு முதலியவை போன்றவை) கலைக்கப் பட்டு விட்டதாகக் காங்கிரஸ் பிரகடனம் செய்கிறது, அவை விதி விலக்கின்றி உடனே கலைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறது. காங்கிரஸின் இந்தத் தீர்மானம் செயல் படுத்தப் படாமை கட்சியிலிருந்து முழுமையாகவும் உடனடியாகவும் விலக்கப்படுவதற்குக் காரணம் ஆகும்.

7. கட்சிக்குள்ளேயும் சோவியத் வேலை முழுவதிலும் கண்டிப்பான கட்டுப்பாடு உறுதி செய்யவும், எல்லாவிதக் குழுப் பிரிவுப்போக்கையும் ஒழித்து அதிகப்பட்சமான ஒரு மனப்பாட்டைப் பெறவும் கட்டுப்பாடு மீறப்படுகிற, அல்லது

குழுப் பிரிவுப்போக்குக்கு மறு உயிர்ப்பு தருகிற அல்லது சகித்துக் கொள்கிற எல்லா வழக்குகளிலும், கட்சியிலிருந்து வெளியேற்றுவது உள்ளிட்டு எல்லாத் தண்டனைகளையும் விதிப்பதற்கும், மத்தியக்கமிட்டி உறுப்பினர்கள் விஷயத்தில் அவர்களை வேட்பு உறுப்பினர் அந்தஸ்துக்குத் தாழ்த்தவும், அதிதீவிர வழக்குகளில், கட்சியிலிருந்து வெளியேற்றவுங் கூட மத்தியக் கமிட்டிக்குக் காங்கிரஸ் அதிகாரமளிக்கிறது. மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் மத்தியக் கமிட்டியின் வேட்பு உறுப்பினர்களுக்கும் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களுக்கும் இப்படிப்பட்ட தீவிரமான நடவடிக்கையை விதிப்பதற்குரிய ஒரு அவசியமான நிபந்தனை யாவது, மத்தியக் கமிட்டியின் முழுக்கூட்டம் கூட்டப்படுவது; அதற்கு மத்தியக் கமிட்டியின் எல்லா வேட்பு உறுப்பினர்களும் கண்காணிப்புக் கமிஷனின் எல்லா உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும். கட்சியின் அதிமிகப் பொறுப்புள்ள தலைவர்களைக் கொண்ட இப்படிப்பட்ட ஒரு பொதுக் கூட்டம், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையில், மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் ஒருவரை வேட்பு அங்கத்தினர் அந்தஸ்துக்குத் தாழ்த்துவதையோ, அல்லது கட்சியிலிருந்து வெளியேற்றுவதையோ தேவை என்று கருதினால், அந்த நடவடிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

நூல்திரட்டு, தொகுதி 43

*1923ல், ''புரொலேதேரி''*
என்ற சஞ்சிகையின் 22ம் இதழில்
முதன்முதலில் பதிப்பிக்கப்பட்டது

# ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது பத்தாம் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்ட நம் கட்சியில் சிண்டிகலிஸ்ட், அராஜகவாதத் திரிபைப் பற்றிய தீர்மானத்தின் தொடக்க மசோதா

1. சென்ற சில மாதங்களில் நம் கட்சியில் ஒரு சிண்டிகலிஸ்ட், அராஜகவாதத் திரிபு திட்டவட்டமாக வெளிப்படுத்தப் பெற்றிருக்கிறது. அதற்கு எதிராக மிகத் தீவிரமான தத்துவார்த்தப் போராட்டமும், கட்சியைத் துப்புரவாக்குவதும், அதன் ஆரோக்கியத்தை மீட்டுக் கொள்வதும் அவசியமாகிறது.

2. இந்தத் திரிபுக்குக் காரணம் கட்சிக்குள்ளே முன்னுள் மென்ஷெவிக்குகளும் கம்யூனிஸ்ட் உலகக் கண்ணேட்டத்தை இன்னமும் முற்ருகச் சிரணித்துக்கொள்ளாத தொழிலாளர்களும் விவசாயிகளும் வந்து சேர்ந்திருப்பதே. ஆனல் பிரதானமாக, இந்தத் திரிபுக்குக் காரணம் பாட்டாளி வர்க்கத்தின் மீதும் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சி மீதும் குட்டி பூர்ஷ்வா அம்சம் செலுத்தும் செல்வாக்குதான். இது நம் நாட்டில் அசாதாரணமாகப் பலமாக இருக்கிறது. இது தவிர்க்க முடியாதபடி அராஜகவாதத்தைநோக்கிப் போகிற ஊசலாட்டத்தைச் சிருஷ்டிக்கிறது—குறிப்பாக, விளைச்சல் குறைவு, யுத்தத்தின் நாசகரமான விளைவுகள் ஆகியவற்றின் பின்விளைவினுலும் மக்களின் நிலைமைகள் வெகுவாக மோசமாகி விட்டுள்ளபோது, பல லட்சக் கணக்கானவர்களைக் கொண்ட இராணுவத்தைக் கலைத்ததிலே பல லட்சக் கணக்கான விவசாயிகளும் தொழிலாளிகளும் விடுவிக்கப் பெற்று அவர்கள் உடனடியாக வாழ்க்கைக்குரிய முறையான சாதனங்களைத் தேடிக் கொள்ள முடியாதிருக்கும்பொழுது.

3. இந்தத் திரிபின் தத்துவரீதியிலே மிகமிக முழுமையான, தெளிவாக வரையறுக்கப்பட்ட வெளியீடு (அல்லது மிக மிக முழுமையானதும் பிறவுமான வெளியீடுகளில் ஒன்று) ''தொழிலாளர் எதிர்த்தரப்பு'' எனப்பட்ட குழுவின் ஆய்வுரைகளும் பிற இலக்கியச் சிருஷ்டிகளும் ஆகும்.

எடுத்துக்காட்டாக, இதைப் புலப்படுத்துவதற்குப் போதியதாயிருப்பது அந்தக் குழு விவரிக்கும் பின்வரும் ஆய்வுரையாகும்: ''பொருளாதாரத்தின் நிர்வாகத்தை ஒழுங்கமைப்பது இயந்திரத் தொழில் தொழிற்சங்கங்களில் அமைக்கப் பட்ட உற்பத்தியாளர்களினது அகில ருஷ்யக் காங்கிரஸின் வேலையாகும்; அவை குடியரசின் பொருளாதாரம் முழுவதையுமே நிர்வகிப்பதற்கு ஒரு மத்திய உறுப்பைத் தேர்ந்தெடுக்கின்றன''.

இந்த, இதுபோன்ற எண்ணற்ற கூற்றுக்களுக்கடியில் இருக்கும் கருத்துக்கள் தத்துவரீதியிலே முற்றிலும் தவறானவையாகும்; அவை மார்க்ஸீயத்தினின்றும் கம்யூனிஸத்தினின்றும் எல்லா அரைப் பாட்டாளிவர்க்கப் புரட்சிகளின் நடைமுறை அனுபவத்தினின்றும் நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நடைமுறை அனுபவத்தினின்றும் முற்றாக முறித்துக் கொண்டதையே குறிக்கின்றன.

முதலாவதாக, ''உற்பத்தியாளன்'' என்கிற கருத்தமைப்பு பாட்டாளிகளை அரைப் பாட்டாளிகளுடனும் சிறு பண்ட உற்பத்தியாளர்களுடனும் கலந்து விடுகிறது; அதன் வழியாக வர்க்கப் போராட்டம் பற்றிய அடிப்படையான கருத்தமைப்பிலிருந்தும் வர்க்கங்களிடையே ஒரு சரிநுட்பமான வேறுபாடு செய்ய வேண்டும் என்கிற அடிப்படையான கோரிக்கையினின்றும் தீவிரமாக விலகிப் போகிறது.

இரண்டாவதாக, கட்சிச் சார்பற்ற மக்களைச் சார்ந்திருப்பது, அவர்களோடு சரசம் செய்வது—மேலே மேற்கோள் காட்டிய ஆய்வுரையில் வெளியிட்டுள்ளபடி—மார்க்ஸீயத்திலிருந்து தீவிரமாக விலகிப் போவதுதான்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி, அதாவது, கம்யூனிஸ்ட் கட்சி, ஒன்றுதான் பாட்டாளி வர்க்கத்தின், உழைப்பாளி மக்களின் மொத்தத் திரளின் ஒரு முன்னணிப் படையை ஒன்றுபடுத்தவும் பயிற்றுவிக்கவும் ஒழுங்கமைக்கவும் சக்தி பெற்றிருக்கிறது; அந்தப் படை ஒன்றுதான் இந்தத் திரளின் தவிர்க்க முடியாத குட்டிபூர்ஷ்வா ஊசலாட்டங்களை எதிர்த்து நிற்கவும், தொழிலாளி வர்க்கத்தினிடையேயுள்ள தவிர்க்க முடியாத குறுகிய தொழில் பிரிவு சங்கவாதத்தின் பரம்பரைகளையும் மறுக்களிப்புக்களையும் அல்லது தொழில் பிரிவின் விருப்பு வெறுப்புக்களையும்

எதிர்த்து நிற்கவும், பாட்டாளி வர்க்கம் முழுவதின் எல்லாவித நடவடிக்கைகளிலும் தலைமை வகிக்கவும், அதாவது அதை அரசியல் ரீதியிலே தலைமை வகித்து நடத்திச் செல்லவும், அதன்மூலமாக உழைப்பாளி மக்களின் மொத்தத் திரளேயும் தலைமைவகித்து நடத்திச்செல்லவும் சக்தி பெற்றதாயிருக்கும். இது இல்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சாத்தியமல்ல—இவ்வாறு மார்க்ஸீயம் போதிக்கிறது. இந்தத் தத்துவக்கூறு கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலால் அதன் இரண்டாவது (1920) காங்கிரஸின் பாட்டாளி வர்க்க அரசியல் கட்சியுடைய பாத்திரம் பற்றிய தீர்மானத்தில் முறையாக ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பது மட்டுமின்றி நமது புரட்சியால் நடைமுறையில் உறுதிப்படுத்தவும் பட்டிருக்கிறது.

கட்சிச் சார்பற்ற பாட்டாளி வர்க்கத்தினர்பாலும், முதலாவதாகவும் இரண்டாவதாகவும் சொன்ன காரணிகள் சம்பந்தப்பட்டவரை உழைப்பாளி மக்களின் மொத்தத் திரள்பாலும் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம் பற்றிய தவறான ஞானம், கம்யூனிஸத்திலிருந்து ஒரு தீவிரமான, தத்துவார்த்த விலகலாகும்; சிண்டிகலிஸத்தையும் அராஜகவாதத்தையும் நோக்கிச் செல்லும் திரிபுமாகும்; இந்தத் திரிவு ''தொழிலாளர் எதிர்த்தரப்புக்'' குழுவின் எல்லாக் கருத்துக்களேயும் நிரப்பிக் கொண்டிருக்கிறது.

4. தொழிற்சங்கங்களின் பாத்திரம் குறித்துப் பேசும் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டத்தின் பொருளாதாரப் பகுதியின் 5வது அம்சத்தை எடுத்துக்காட்டி தங்களுடைய தவறான கருத்துக்களைக் காத்து நிற்க மேற்சொன்ன குழுவும் பிற நபர்களும் செய்கிற எல்லா முயற்சிகளும் தீவிரமாகத் தவறானவை என்று கருதுவதாகவும்கூட ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாம் காங்கிரஸ் பிரகடனம் செய்கிறது. இந்த அம்சம் சொல்வதாவது: ''முடிவிலே தொழிற்சங்கங்கள் தங்கள் கையிலே ஒரேயொரு பொருளாதார அலகு என்கிற முறையில் பொருளாதாரம் முழுவதின் நிர்வாகத்தையும் யதார்த்தத்தில் குவித்துக் கொள்ள வேண்டும்'', ''இந்த வழியிலே அவை மத்திய அரசு நிர்வாகத்துக்கும் பொருளாதாரத்துக்கும் உழைப்பாளி மக்களில் விரிவான திரளுக்கும் இடையே கலைக்க முடியாத

உறவுகளை உறுதிப்படுத்தும்'', இந்த மக்கள் திரளைப் ''பொருளாதாரத்தை நிர்வகிக்கும் நேரடியான வேலையில் ஈடுபடச் செய்யும்.''

ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டத்தி லுள்ள இந்த அம்சம் தொழிற்சங்கங்கள் ''முடிவிலே குவித்துக்கொள்ள வேண்டும்'' என்பதற்கு முன்நிபந்தனையாக அவை ''மேலும் மேலும் அதிக அளவிலே குறுகிய தொழில் பிரிவு உணர்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண் டும்'', பெரும்பான்மையைத் தழுவிக் கொள்ளவும், ''படிப் படியாக எல்லா'' உழைப்பாளி மக்களையும் தழுவிக் கொள்ள வும் வேண்டுமென்றும் சொல்கிறது.

கடைசியாக, ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்திலுள்ள இந்த அம்சம் ''ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசினது சட்டங்களின் படியும் நிலைநாட்டப் பட்ட நடைமுறைப்படியும் தொழிற்சங்கங்கள் ஏற்கெனவே தொழில் நிர்வாகத்தின் எல்லா ஸ்தல, மத்திய உறுப்புக் களிலும் பங்கெடுக்கின்றன'' என்று வலியுறுத்துகிறது.

நிர்வாகத்தில் பங்கெடுப்பதின் நடைமுறை அனுபவத் தைப் பயில்வதற்குப் பதிலாகவும் பெற்ற வெற்றிகள், திருத் திய தவறுகள் ஆகியவற்றுக்குக் கண்டிப்பாகப் பொருந்து மாறு அமைந்ததாக இந்த அனுபவத்தை மேலும் வளர்ப் பதற்குப் பதிலாகவும் சிண்டிகலிஸ்டுகளும் அராஜகவாதி களும் பொருளாதாரத்தின் நிர்வாக உறுப்புக்களைத் ''தேர்ந் தெடுக்கிற'' ''உற்பத்தியாளர்களின் காங்கிரஸ்கள் அல்லது காங்கிரஸ்'' என்பதை ஒரு உடனடியான கோஷமாக முன் வைக்கிறார்கள். ஆகவே, பாட்டாளிவர்க்கத்தின் தொழிற்சங் கங்கள் சம்பந்தமாகக் கட்சியின் தலைமை வகிக்கிற, பயிற்றிப் போதிக்கிற, ஒழுங்கமைக்கிற பாத்திரமும், உழைப்பாளி மக்களுக்கிடையே உள்ள அரைக் குட்டிபூர்ஷ்வா, முழுக் குட்டிபூர்ஷ்வாப் பகுதியின் சம்பந்தமாகப் பாட்டாளிவர்க் கம் வகிக்கும் பாத்திரமும் முற்றாகத் தட்டிக் கழிக்கப் படு கிறது, ஒழிக்கப்படுகிறது; சோவியத் அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ள புதிய பொருளாதார வடிவங்களின் நிர் மாணம் சம்பந்தமான நடைமுறை வேலையைத் தொடர்ந்து செய்வதற்குக் திருத்துவதற்கும் பதிலாக, இந்த வேலையைக் குட்டிபூர்ஷ்வா அராஜகவாதம் சிதறடிப்பதையே நாம்

பார்க்கிறோம்; இது பூர்ஷ்வாப் புரட்சி எதிர்ப்பின் வெற்றிக்கே கொண்டுபோய்விட முடியும்.

5. தத்துவார்த்தத் தவறுகள், ஏற்கெனவே சோவியத் ஆட்சி தொடங்கியுள்ள பொருளாதார நிர்மாணத்தின் நடைமுறை அனுபவத்தைப் பற்றி ஒரு தீவிரமான தவறான கண்ணோட்டம், ஆகியவற்றோடு கூடுதலாக, இந்தக் குழுவின், இவைபோன்ற குழுக்களின், நபர்களின் கருத்துக்களிலே ஒரு மோசமான அரசியல் தவற்றையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இருப்புக்கே வாய்க்கிற ஒரு நேரடியான அரசியல் அபாயத்தையும் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது காங்கிரஸ் பார்க்கிறது.

ருஷ்யா போன்ற ஒரு நாட்டில், குட்டிபூர்ஷ்வா அம்சம் மிகப் பெரும்பான்மையாயிருப்பதும், யுத்தத்தால் தவிர்க்க முடியாதபடி விளைகிற பெருநாசம், வறுமை பெருகுவது, கொள்ளை நோய்கள், விளைச்சல் தவறுவது, இன்மைக் கொடுமை, தேசிய விபத்து, ஆகியவையும் குட்டிபூர்ஷ்வா, அரைப் பாட்டாளி வர்க்க மக்களின் மனோபாவத்திலே கூர்மையான ஊசலாட்டங்களைச் சிருஷ்டிக்கின்றன. ஒரு தருணத்தில் அந்த ஊசலாட்டம் இந்த மக்களுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள கூட்டணியைப் பலப்படுத்தும் திசையில் போகிறது, இன்னொரு தருணத்தில் பூர்ஷ்வா மீட்சியின் திசையில் போகிறது. பதினெட்டாவது, பத்தொன்பதாவது, இருபதாவது நூற்றாண்டுகளின் எல்லாப் புரட்சிகளினதும் அனுபவம் முழுவதும், இந்த ஊசலாட்டங்களின் ஒரே சாத்தியமான விளைவு—பாட்டாளி வர்க்கத்தினது புரட்சிகரமான முன்னணிப்படையின் ஒற்றுமையும் பலமும் செல்வாக்கும் கொஞ்சம் கொஞ்சமாகப் பலவீனப்படுத்தப் பட்டால்—முதலாளிகளின், நிலப்பிரபுக்களின் அதிகாரம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதாகவே இருக்க முடியும் என்று மிக மிகத் தெளிவாகவும் உளத்தில் பதியும் வகையிலும் காட்டுகின்றது.

எனவே, ''தொழிலாளர் எதிர்த்தரப்புக்'' குழுவின், அதைப் போன்ற மனோபாவமுள்ள நபர்களின், கருத்துக்கள் தத்துவரீதியிலே தவறு மட்டுமல்ல, அவை குட்டி பூர்ஷ்வா, அராஜகவாத ஊசலாட்டத்தின் ஒரு நடைமுறை வெளியீடாகும்; நடைமுறையிலே அவை கம்யூனிஸ்ட் கட்சி

யின் தலைமையான கொள்கையின் முரணற்ற தன்மையைப் பல வினப்படுத்துகின்றன; நடைமுறையிலே பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வர்க்க விரோதிகளுக்கு உதவுகின்றன.

6. இவற்றை யெல்லாம் உத்தேசித்து, ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரஸ் ஒரு சிண்டிகலிஸ்ட், அராஜகவாதத் திரிபை வெளியிடுகிற மேற்சொன்ன கருத்துக்களை அழுத்தமாக நிராகரிக்கையிலேயே,

முதலாவதாக, இந்தக் கருத்துக்களை எதிர்த்து ஒரு பின்வாங்காத, முறையான, தத்துவார்த்தப் போராட்டம் நடத்துவதும் அவசியம் என்று கருதுகிறது;

இரண்டாவதாக, இந்தக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வது ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் நிலைக்குப் பொருத்தமற்றது என்று காங்கிரஸ் கருதுகிறது.

இந்த முடிவுகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதை மத்தியக் கமிட்டிக்குக் காங்கிரஸ் ஒப்படைக்கிறது; அதே சமயத்தில் ஆங்கே குறிப்பிட்ட எல்லாப் பிரச்சினைகள் மீதும் கட்சி உறுப்பினர்களிடையே ஒரு மிகமிக முழுமையான கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள விசேஷமான பிரசுரங்களிலும் கருத்துத் திரட்டுக்களிலும் இடம் கொடுக்க முடியும், கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது.

நூல்திரட்டு, தொகுதி 43

1923ல், நி. லெனின் (வி. உல்யானேவ்),
நூல்திரட்டு, தொகுதி XVIII, முதற்
பகுதியில் முதன்முதலாகப்
பதிப்பிக்கப்பட்டது

## 1921, மே 28ல், ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் பத்தாம் அகில ருஷ்ய மாநாட்டின் முடிவில் ஆற்றிய உரை[77]

தோழர்களே, நான் சுருக்கமாகப் பேசலாம் என்று நினைக்கிறேன். பொருளாதாரக் கொள்கை சம்பந்தமாக மத்திய ஸ்தாபனத்துக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், கட்சி, சோவியத் ஊழியர்களுக்கும் இடையே முழுமையான தெளிவு பெறும் பிரதான நோக்கத்துடன் குறுகிய கால அறிவிப்பில் நாம் இந்த மாநாட்டைக் கூட்டியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் குறிக்கோளை மிகத் திட்டவட்டமாக மாநாடு முடித்துக் கொடுத்திருக்கிறதென்று நான் நினைக்கிறேன். எல்லா சந்தேகங்களையும் போக்க வேண்டும் என்றும், பத்தாம் கட்சிக் காங்கிரஸ் வரையறுத்து பின்னல் முடிவுகள் மூலமாகவும் தீர்மானங்கள் மூலமாகவும் உறுதிப் படுத்தப் பெற்றுள்ள கொள்கையைக் காரியப்பற்றுள்ள முறையிலும், நெடுங்காலத்துக்கும், நிறைவேற்றப்பட வேண்டிய கொள்கையென்று திட்டவட்டமாகக் கட்சி ஏற்றுக் கொள்கிறது என்றும் தோழர் ஒஸின்ஸ்கிய் சொன்னபோது, அவர் ஸ்தல கட்சி ஸ்தாபனங்களைச் சேர்ந்த பற்பல, அநேகமாகப் பெரும்பான்மையான, கட்சி ஊழியர்களின் மனோ நிலையை மிகச் சரியாகவே வெளியிட்டார் என்று பல தோழர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் பல பாராக்களைக் கூட்டிக் கொண்டு, இதைத்தான் மாநாடு வெகு அழுத்தமாகச் செய்துள்ளது. தோழர்கள் தங்களுடைய ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் திரும்பிச் செல்லும்போது, தவருன வியாக்கியானத்துக்குச் சிறிதேனும் சாத்தியப்பாடு இருக்காது. பல ஆண்டுகளைக் கொண்ட நெடிய காலத்திற்கு நிறைவேற்றி வைக்க வேண்டி நாம் ஒரு கொள்கையை வரையறை செய்கிறபோது, சர்வதேசப் புரட்சியும், அதன் வேகவிகிதமும் வளர்ச்சியும், எல்லாவற்றையுமே மாற்றிவிடக் கூடும் என்பதை ஒருகண மேனும் நாம் மறக்கவில்லை. இன்றைய சர்வதேச நிலைமையில் சமன

நிலை—அது தற்காலிகமானதும் ஸ்திரமில்லாததும் என்றா லும் அது ஒரு சமயநிலையே—போன்ற இயல்புள்ள ஒன்று நிலைநாட்டப் பெற்றுள்ளதைக் குறிக்கிறதாயுள்ளது; ஏகாதி பத்திய வல்லரசுகள் ருஷ்யாமீது பகைமை கொண்டிருந் தும், அதன்மீது பாய்ந்துவிட ஆசை கொண்டிருந்தும், அந்தக் கருத்தை அவை கைவிடும்படிச் செய்த ஒரு வகையான சமன நிலை அது; இதற்குக் காரணம், முதலாளித்துவ உலகின் பதனழிவு மேலும் அதிகமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, அதற்குரிய ஒருமைப்பாடு இடையருது குறைந்து வருகிறது, நூறு கோடிக்கு மேலாகவே எண்ணிக்கையுள்ள ஒடுக்கப்பட்ட காலனி மக்கள் சமூகங்கள் கொடுக்கும் தாக் குதல் ஆண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும்கூட, வளர்ந்து வருகிறது. ஆனல் இவ்விஷயத்தில் நாம் ஊகங் களில் இறங்க முடியாது. இன்று நாம் நமது பொருளாதாரக் கொள்கை மூலமாகத்தான் பிரதானமாக உலகப் புரட்சியின் மீது செல்வாக்கு செலுத்தி வருகிறோம். எல்லோரும் ருஷ்ய வின் சோவியத் குடியரசையே பார்த்துக் கொண்டிருக்கிறா கள்; விதிவிலக்கில்லாமல் எல்லா நாட்டு உழைப்பாளி மக்களின் பார்வையும் சோவியத் குடியரசு மேல் திருப்பப் பட்டுள்ளது—இது மிகையுரையல்ல. அந்த அளவுக்கு நாம் சாதித்துள்ளோம். முதலாளிகள் விஷயங்களை மூடிவைக்க முடியாது, மறைக்க முடியாது; எனவே அவர்கள் நம்முடைய பொருளாதாரத் தவறுகளை, நம்முடைய பலவீனத்தை, பிடித்துத் தொங்குகிறுர்கள். இன்றும் இந்தத் துறையில் போராட்டம் உலக அளவிலே நடத்தப்படுகிறது. இந்தக் கடமையை நாம் நிறைவேற்றினல், உலக ரீதியிலே நாம் ஒரு திட்டவட்டமான, முடிவான ஆதாயத்தைப் பெற்றவர் களாயிருப்போம். எனவே பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள் மிக அசாதாரணமான குறிபொருளைப் பெறு கின்றன. இந்த முனையில் ஒரு மெதுவான, படிப்படியான—அது வேகமாகப் போவது சாத்தியமல்ல—ஆனல் திடமான மேம்பாட்டாலும் முன்னேற்றத்தாலும் நாம் வெற்றிபெற வேண்டும். நமது மாநாடு செய்திருக்கும் பணி நாம் அந்தக் குறிக்கோளை முற்றுக, எந்தவிதமான நிலைமைகளிலும், எட்டிப்

பிடிப்பதைச் சாதித்ததே என்று எனக்குத் தோன்றுகிறது. (கைதட்டல்)

நூல்திரட்டு, தொகுதி 43

*1921, ஜூன் 2ல்,*
*''பிராவ்தா'', இதழ் 119ல்,*
*பதிப்பிக்கப்பட்டது*

## 1921, ஜூலை 1ல்,
## கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றும் காங்கிரஸில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் செயல்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு[78]

தோழர்களே, தற்காப்போடு நான் நின்றுகொள்ள வேண்டியிருப்பது பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன் (சிரிப்பு). மிக வருத்தப்படுகிறேன் என்று நான் சொல்லக் காரணம் தோழர் டெராச்சீனியின் சொற்பொழிவையும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் கொண்டுவந்துள்ள திருத்தங்களையும் நான் தெரிந்து கொண்ட பிறகு தாக்குதலில் இறங்கவே வெகுவாக விரும்புகிறேன்; ஏனெனில், முறையாகப் பார்த்தால், டெராச்சீனியும் இந்த மூன்று பிரதிநிதிக் குழுக்களும் காத்து ஆதரிக்கும் கருத்துக்களை எதிர்த்து தாக்குதல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இப்படிப்பட்ட தவறுகளை எதிர்த்து, இப்படிப்பட்ட ''இடதுசாரி'' முட்டாள்தனங்களை எதிர்த்து, காங்கிரஸ் ஒரு வீர்யமுள்ள தாக்குதல் நடத்தாவிட்டால் இயக்கம் முழுவதும் பாழாகும். இது என் ஆழ்ந்த நம்பிக்கை. ஆனல் நாம் ஸ்தாபன அமைப்புள்ள, கட்டுப்பாடுள்ள மார்க்ஸீயவாதிகள். தனிப்பட்ட தோழர்களை எதிர்த்துப் பேசுவதோடு நாம் திருப்திப்பட முடியாது. அந்த இடதுசாரி வாய்ச் சொற்களைக் கேட்டுக் கேட்டு ருஷ்யர்களாகிய நாம் ஏற்கெனவே சலித்து விட்டிருக்கிறோம். நாம் ஸ்தாபன அமைப்புள்ள நபர்கள். நமது திட்டங்களை வகுக்கும்போது, நாம் ஒரு ஸ்தாபன அமைப்பான வழியில் சென்று சரியான கொள்கையைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். நமது ஆய்வுரைகள் ஒரு சமரசமே என்பது யாருக்கும் ரகசியமாயில்லை. ஆனல், அவை ஏன் சமரசமாக இருக்கக் கூடாது? ஏற்கெனவே தங்களுடைய மூன்ருவது காங்கிரஸைக் கூட்டியிருக்கிற, குறித்த அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்திருக்கிற கம்யூனிஸ்டுகளிடையே சில சந்தர்ப்பங்களில் சமரசங்கள் தேவையாகும். ருஷ்யப் பிரதிநிதிகள் முன்வைத்த எங்களது ஆய்வுரைகள் மிகமிக கவனமான முறையிலே ஆராய்ந்து தயாரிக்கப்

பட்டவை, அவை நீண்ட சிந்தனையினதும் பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுடன் கலந்து ஆலோசித்ததினதும் விளைவு. அவற்றின் குறிக்கோள் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் அடிப்படைக் கொள்கையை நிலைநாட்டுவது; உண்மையான மத்திய வாதிகளை சம்பிரதாய பூர்வமாகக் கண்டித்ததோடல்லாமல் கட்சியிலிருந்து வெளியேற்றிய பிறகு இன்று அவை குறிப்பாகத் தேவைப்படுகின்றன. இவைதாம் உண்மைகள். இந்த ஆய்வுரைகளை என் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்று டெராச்சினி முன்வந்து மத்திய வாதிகளை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் எப்படி அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் சொல்லும் போது இந்தத் திருத்தங்கள் ஒரு திட்டவட்டமான போக்கைக் குறிக்கின்றன வென்ருல் இந்தப் போக்கை எதிர்த்து ஒரு விட்டுக்கொடாத போராட்டம் நடத்தப்பட்ட வேண்டும் என்று நான் சொல்கிறேன்; ஏனெனில் அப்படிச் செய்யாவிட்டால், கம்யூனிஸமும் இல்லை; கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலும் இல்லை. இந்தத் திருத்தங்களின் கீழ் ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியின்[79] கையொப்பம் இல்லாதிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. (சிரிப்பு). டெராச்சினி காத்து ஆதரிப்பதையும் இந்தத் திருத்தங்கள் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள். அவை இவ்வழியிலே தொடங்குகின்றன: ''பக்கம் 1, பத்தி 1, வரி 19ல் 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண்டும்''. பெரும்பான்மையா! அது மிகவும் அபாயமானதாயிற்றே! (சிரிப்பு.) பிறகு, மேலும்: ''அடிப்படையான கோட்பாடுகள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்று புகுத்துக. அடிப்படைக் கோட்பாடுகளும் இலட்சியங்களும் வெவ்வேருனவை. அராஜகவாதிகள்கூடத்தான் இலட்சியங்களில் நம்மோடு ஒத்துக் கொள்வார்கள்; ஏனெனில் அவர்களும் சுரண்டலையும் வர்க்க வேறுபாடுகளையும் ஒழிக்க நிற்கிருர்கள்.

என் வாழ்க்கையில் நான் அராஜகவாதிகளைச் சந்தித்துப் பேசியது அற்பசொற்பமே. இருந்தபோதிலும், நான் அவர்களைப் போதிய அளவுக்குப் பார்த்தாகிவிட்டது. நான் சில சமயங்களில் அவர்களோடு இலட்சியங்களில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றேன்; ஆனல் கோட்

பாடுகள் விஷயத்தில் என்றைக்கும் இல்லை. கோட்பாடுகள்— அது இலட்சியம் அல்ல, வேலைத்திட்டம் அல்ல, செயல் தந் திரங்களல்ல, தத்துவமல்ல. செயல்தந்திரங்களும் தத்துவ மும் கோட்பாடுகளல்ல. கோட்பாடு விஷயத்தில் நம்மை அராஜகவாதிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது எது? கம்யூனிஸத்தின் கோட்பாடுகள், பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் நிலைநாட்டுவதிலும் மாற்றநிலைக் கட்டத்தில் அரசு பலவந்தத்தைப் பயன்படுத்துவதிலும் அடங்கியுள்ளன. இவைதான் கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்; ஆனால் அவை அதன் இலட்சியமல்ல. இந்த யோசனையை வைத்த தோழர் கள் ஒரு தவறு செய்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, இங்கே சொல்லப்பட்டிருப்பதாவது: '' 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண் டும்''. அந்தப் பகுதி பூராவையும் படியுங்கள்:

''பல நாடுகளில் புரட்சிகரமான அர்த்தத்தில் புறநிலை வகையான நிலைமை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிற சந்தர்ப்பத் தில் பல வெகுஜனக் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஸ்தாபன அமைப்புப் பெற்றிருக்கையில், இடையே அவை தொழி லாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மேல் உண்மையாகத் தலைமையை யதார்த்தப் புரட்சிகரமான போராட்டத்தில் எங்குமே தங்கள் கையில் எடுத்துக் கொள்ளாதிருக்கிற நிலைமைகளில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாவது காங்கிரஸ் செயல்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைகளை விமர் சனம் செய்யப் புறப்பட்டிருக்கிறது.''

ஆக, அவர்கள் ''பெரும்பான்மை'' என்கிற சொல் நீக்கப் பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட எளிய விஷயங்களில் நாம் உடன்பட முடியாதென்றால், நாம் எப்படி ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்ய முடியும், பாட்டாளி வர்க் கத்தை வெற்றிக்குக் கொண்டு செல்ல முடியும் என்று எனக்குப் புரியவில்லை. அதன்பிறகு நாம் கோட்பாடுகள் பற்றிய பிரச்சினையிலும் உடன்பாடு காண முடியாமற்போவதிலே சிறிதேனும் வியப்பு கிடையாது. தொழிலாளி வர்க்கத் தினிடையே பெரும்பான்மையை ஏற்கெனவே பெற்றிருக்கும் ஒரு கட்சியை எனக்குக் காட்டுங்கள். உதாரணம் தர வேண்டும் என்று கூட டெராச்சீனி சிந்திக்கவில்லை. நிஜம் தான், அப்படி ஒரு உதாரணமும் கிடையாது.

ஆகவே, ''கோட்பாடுகள்'' என்கிறதற்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்கிற வார்த்தை போட வேண்டும்; ''பெரும்பான்மை'' என்கிற சொல் நீக்கப்பட வேண்டும். உங்களுக்கு மிகவும் நன்றி! நாங்கள் அப்படிச் செய்யப் போவதில்லை. ஜெர்மன் கட்சிகூட—சிறந்தவைகளில் அது ஒன்று—தன்பின்னே தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. அது உண்மை. ஒரு மிகக் கடுமையான போராட்டத்தை எதிர்கொண்டிருக்கிற நாங்கள் இந்த உண்மையைச் சொல்லப் பயப்படவில்லை; ஆனால் ஒரு பொய்யுடன் தொடங்க விரும்புகிற மூன்று பிரதிநிதிக் குழுக்கள் இங்கே உள்ளன; ஏனெனில்; ''பெரும்பான்மை'' என்கிற சொல்லைக் காங்கிரஸ் நீக்கினால் அதன் மூலமாக அது ஒரு பொய்யை விரும்புகிறது என்றுதான் காட்டும். அது மிகத் தெளிவு.

பிறகு பின்குறித்த திருத்தம் வருகிறது: ''பக்கம் 4, பத்தி 1, வரி 10ல், 'பகிரங்கக் கடிதம்'[80] முதலிய சொற்கள் நீக்கப்பட வேண்டும்' ''. ஏற்கெனவே இன்று நான் ஒரு சொற்பொழிவைக் கேட்டேன்; அதில் இதே கருத்தைப் பார்த்தேன். ஆனால் அது இயல்பாயிருந்தது. அது தோழர் ஹேம்பெலின் சொற்பொழிவு; அவர் ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியின் ஒரு உறுப்பினர். அவர் சொன்னதாவது: '''பகிரங்கக் கடிதம்' ஒரு சந்தர்ப்பவாதச் செய்கையாகும்.'' நான் இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏற்கெனவே தனிமையிலே சொல்லப்படுவதையும் கேட்டுப் பெரிதும் வருத்தப்பட்டேன், ஆழ்ந்த வெட்கமடைந்தேன். ஆனால் காங்கிரஸிலே, இப்படிப்பட்ட நீடித்த விவாதத்திற்குப் பிறகு, ''பகிரங்கக் கடிதம்'' சந்தர்ப்பவாதமானது என்று பிரகடனப்படுத்தப் பட்டால்—அது ஒரு வெட்கக்கேடு; மானக்கேடுதான்! இப்போது தோழர் டெராச்சினி மூன்று பிரதிநிதிக் குழுக்களின் சார்பாக முன்வந்து ''பகிரங்கக் கடிதம்'' என்கிற சொற்களை நீக்க விரும்புகிறார். அப்படியானால் ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியோடு சண்டை போடுவதில் என்ன பயன்? ''பகிரங்கக் கடிதம்'' ஒரு முன்மாதிரியான அரசியல் நடவடிக்கை. அது நமது ஆய்வுரைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் நிச்சயமாக ஆதரித்து நிற்க வேண்டும். அது ஒரு முன்மாதிரி என்

பதற்குக் காரணம், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம்பக்கம் வென்று கொணர்வதற்குரிய விவகார ரீதியான வழிமுறையின் முதல் செயல் ஆகும். ஐரோப்பாவில்—அங்கே அநேகமாக எல்லாப் பாட்டாளிகளுமே ஒழுங்கமைந்துள்ளனர்—தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நாம் வென்று நம் தரப்புக்குக் கொண்டுவர வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிற எவரும் கம்யூனிஸ்ட் இயக்கத்தால் இழக்கப்பட்டுவிட்டவரே; மகத்தான புரட்சியின் மூன்றுண்டு காலத்தின் போது இதை இன்னமும் கற்றுக் கொள்ளாதிருக்கிற யாரும் எதையும் என்றைக்கும் கற்கப் போவதில்லை.

கட்சி சிறிதாக இருந்தபோதிலும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்ரேம் என்று டெராச்சீனி சொல்கிருர். ஆய்வுரைகளில் செகோஸ்லோவாக்கியாவைப் பற்றிச் சொல்லியிருப்பதில் அவர் அதிருப்தியடைந்திருக்கிருர். இங்கே 27 திருத்தங்கள் உள்ளன; அவற்றை நான் விமர்சிக்க எண்ணிஞல் சில சொற்போர்வித்தகர்களைப் போல மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் பேசவேண்டியிருக்கும்.... இதில் நாம், செகோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்ட் கட்சி 3 லட்சத்திலிருந்து 4 லட்சம் வரை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்றும், பெரும்பான்மையை நம்பக்கம் வென்று கொணர்வது, ஒரு வெல்வதற்கியலாத சக்தியைச் சிருஷ்டிப்பது, தொழிலாளர்களில் புதிய மக்கள் திரளைத் தொடர்ந்து சேர்த்துக் கொள்வது அவசியம் என்றும் சொல்லியிருக்கிருேம். டெராச்சீனி ஏற்கெனவே தாக்கத் தயாராகிவிட்டார். அவர் சொல்கிருர்: ஏற்கெனவே 4 லட்சம் தொழிலாளர்கள் கட்சியில் இருக்கிருர்கள் என்ருல் அதற்கு மேலாக நாம் ஏன் விரும்ப வேண்டும்? நீக்குங்கள்! (சிரிப்பு.) ''மக்கள் திரள்'' என்ற சொல்லைக் கண்டு அவர் பயப்படுகிருர்; அதை ஒழிக்க விரும்புகிருர். தோழர் டெராச்சீனி ருஷ்யப் புரட்சியை அற்பமாகவே புரிந்து கொண்டிருக்கிருர்.

ருஷ்யாவில் நாங்கள் ஒரு சிறு கட்சியாகத்தான் இருந்தோம்; ஆனல் அதோடு கூடுதலாக எங்களுடன் நாடெங்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளினது சோவியத்துக்களின் பெரும்பான்மையையும் பெற்றிருந்தோம். (கூக்குரல்: ''முற்றிலும் உண்மை!'') அது உங்களுக்கு எங்கே

இருக்கிறது? இராணுவத்தில் அநேகமாகப் பாதி எங்கள் பக்கம் இருந்தது—அப்போது அது குறைந்தபட்சம் ஒரு கோடிபேரைக் கொண்டிருந்தது. நிஜமாகவே இராணுவத்தில் பெரும்பான்மை உங்களிடம் இருக்கிறதா? அப்படிப்பட்ட நாட்டை எனக்குக் காட்டுங்கள்! தோழர் டெராச்சினியின் இந்தக் கருத்துக்களை மற்ற மூன்று பிரதிநிதிக் குழுக்களும் கொண்டிருக்கின்றன என்றால், அப்போது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலில் விவகாரங்கள் ஒழுங்காயில்லை! அப்படியென்றால் நாம் சொல்லித் தீரவேண்டும்: ''நில்லுங்கள்! நிர்ணயமான போராட்டம்! இல்லையேல் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் நாசமாகும்!'' என்று. (ஹாலில் பரபரப்பு.)

நான் ஒரு தற்காப்பு நிலை எடுத்துக் கொண்டுள்ள போதிலும் (சிரிப்பு), என் அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்லித் தீரவேண்டும், எனது பிரசங்கத்தின் இலட்சியமும் கோட்பாடும் எங்கள் பிரதிநிதிக் குழு தயாரித்த தீர்மானத்தையும் ஆய்வுரைகளையும் காத்து ஆதரிப்பதிலே அடங்கியிருக்கிறது என்று. நிஜந்தான், அவற்றில் ஒரு எழுத்தைக் கூட மாற்றக் கூடாது என்று சொல்வது போலிப் புலமையின் பாற்பட்டதாயிருக்கும். நான் பல தீர்மானங்களைப் படிக்க வேண்டியவனாக இருந்திருக்கிறேன்; அவற்றில் ஒவ்வொரு வரியிலும் நல்ல திருத்தங்களைப் புகுத்தி இருக்க முடியும் என்பதையும் நான் நன்கு அறிவேன். ஆனால் அது போலிப் புலமையாக இருக்கும். இருந்தபோதிலும், அரசியல் அர்த்தத்தில் இப்போது நான் அதில் ஒரு எழுத்துகூட திருத்தக் கூடாது என்று சொன்னால் அதற்குக் காரணம், நான் பார்க்கிறபடி திருத்தங்கள் ஒரு முழு திட்டவட்டமான அரசியல் இயல்பு கொண்டவையாயுள்ளன; அவை கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலுக்குத் தீங்கும் அபாயமும் உண்டாக்கும் ஒரு பாதையிலே நம்மைக் கொண்டு செல்கின்றன. எனவே, நானும், நாமெல்லோரும், ருஷ்யப் பிரதிநிதிக் குழுவும், ஆய்வுரைகளில் ஒரு எழுத்தையேனும் மாற்றக்கூடாது என்று வற்புறுத்த வேண்டும். நாம் நமது வலதுசாரி நபர்களைக் கண்டித்ததோடு மட்டுமல்ல—அவர்களை வெளியே தள்ளியிருக்கிறோம். ஆனால், டெராச்சினியைப் போல், வலதுசாரிகளை எதிர்க்கும் போராட்டத்தை ஆட்கள் ஒரு விளை

யாட்டாக மாற்றினுல் அப்பொழுது நாம் சொல்லித் தீர வேண்டும்: ''நிறுத்துங்கள்! இல்லையேல் அபாயம் மிகவும் தீவிரமாகிவிடும்!'' என்று.

ஒரு தாக்குதல் போராட்டத்தைப் பற்றிய தத்துவத்தை[81] டெராச்சினி ஆதரித்திருக்கிறுர். இது சம்பந்தமாக, அந்த அபகீர்த்தி பெற்ற திருத்தங்கள் இரண்டு மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு சூத்திரத்தைப் பிரேரேபிக்கின்றன. அவற்றை நாம் வாசிக்கத் தேவையில்லை. அங்கே எழுதப் பட்டிருப்பதை நாமறிவோம். பிரச்சினை எதைப் பற்றி என்று டெராச்சினி மிகத் தெளிவாகக் கூறினுர். ''இயங்கும் தன்மையுள்ள போக்குகளைச்'' சுட்டிக்காட்டியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல்புரியும் நிலைக்குப் போகும் மாற்ற நிலையைச்'' சுட்டிக் காட்டியும் அவர் தாக்குதல் பற்றிய தத்துவத்தை ஆதரித்தார். ருஷ்யாவிலுள்ள நாங்கள் மத்திய வாதிகளை எதிர்த்த போராட்டத்தில் போதிய அரசியல் அனுபவம் பெற்றிருக்கிறேம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே எங்களுடைய சந்தர்ப்பவாதிகளையும் மத்தியவாதிகளையும், மென்ஷெவிக்குகளையும் கூடத்தான், எதிர்த்துச் சண்டை செய்து கொண்டிருந்தோம்; மேலும் மென்ஷெவிக்குகள் மட்டுமின்றி அரை அராஜகவாதிகள் மீதும் நாங்கள் வெற்றிபெற்றேம்.

இதை நாங்கள் செய்யாதிருந்தால், நாங்கள் அதிகாரத்தை மூன்றரை ஆண்டுகளுக்காயினும் அல்லது மூன்றரை வாரங்களுக்காயினும் கூடக் கையில் வைத்திருக்க முடிந்திராது; இங்கே கம்யூனிஸ்ட் காங்கிரஸ்களையும் கூட்டியிருக்க முடியாது. ''இயங்கும் தன்மையுள்ள போக்குகள்'', ''செயலற்ற நிலையிலிருந்து செயல்புரியும் நிலைக்குப் போகும் மாற்ற நிலை''—இவையெல்லாம் எங்களுக்கு எதிராக இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் பயன்படுத்திய வாய்ச்சொற்களே. அவர்கள் இப்போது சிறைகளில் உட்கார்ந்திருக்கிறுர்கள்—அங்கே ''கம்யூனிஸத்தின் இலட்சியங்களை'' ஆதரித்துக் கொண்டும், ''செயலற்ற நிலையிலிருந்து செயல்புரியும் நிலைக்குப் போகும் மாற்றநிலை'' பற்றி சிந்தித்துக் கொண்டும். (சிரிப்பு.) பிரேரேபித்துள்ள திருத்தங்களில் வாதித்திருப்பதுபோல் வாதம் புரிவது அசாத்தியம், ஏனெனில் அவற்றில் மார்க்ஸீயமோ, அரசியல் அனுபவமோ, தர்க்கநியாயமோ இல்லை. நமது ஆய்வுரைகளில் நாம் புரட்சிகரமான

தாக்குதல் பற்றி ஒரு பொதுவான தத்துவத்தை விவரித்து இருக்கிருேமா? ராதேக் அல்லது எங்களில் யாராவது அப்படிப்பட்ட முட்டாள்தனத்தைச் செய்திருக்கிருேமா? ஒரு குறிப்பிட்ட நாடு, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி சம்பந்த மாகவே தாக்குதல் பற்றிய தத்துவத்தைப் பற்றிப் பேசி யிருக்கிருேம்.

முதல் புரட்சிக்கு முன்பே புரட்சிகரமான கட்சி ஒரு தாக்குதலே நடத்த வேண்டுமா என்று சந்தேகப்பட்ட ஆட்களேப் பார்க்க முடிந்ததை நாங்கள் மென்ஷெவிக்குகளே எதிர்த்து நடத்திய போராட்டத்திலிருந்து காட்ட முடியும். இப்படிப்பட்ட சந்தேகங்கள் எந்த சோஷல்-டெமாக்ராட் டையாவது—அப்படித்தான் அந்த காலத்தில் நாங்களெல் லோரும் எங்களே அழைத்துக் கொண்டோம்—பிடித்தால் அவருக்கு எதிராகப் போராட்டம் தொடுத்து, அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்றும் மார்க்ஸீயத்திலும் புரட்சிகரக் கட்சி யின் இயக்கப் போக்கிலும் எதையும் அவர் புரிந்து கொள்ள வில்லே என்றும் சொன்னேம். பொதுப்படையாகக் கூட ஒரு புரட்சிகரமான தாக்குதல் அனுமதிக்கத்தக்கதா என்று ஒரு கட்சி சந்தேகிக்க முடியுமா? அந்த எண்ணத்துக்கே இடங் கொடுக்க முடியுமா? எங்கள் நாட்டில் அப்படிப் பட்ட உதார ணங்கள் தேடுவதற்குப் பதினேந்து ஆண்டுகள் பின்னேக்கிச் செல்ல வேண்டும். தாக்குதல் பற்றிய தத்துவத்தை மறுக் கிற மத்தியவாதிகளோ மறைவான மத்தியவாதிகளோ இருந்தால், அப்படிப்பட்டவர்களே உடனே வெளியே தள்ள வேண்டும். அந்தப் பிரச்சினே ஆட்சேபனேயைத் தோற்றுவிக்க முடியாது. ஆனுல் இன்றைக்கும் கூட, கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனல் மூன்ருண்டுகளாக இருந்து வந்த பிறகும் கூட, நாம் ''இயங்கும் தன்மையுள்ள போக்குகள்'' பற்றியும் ''செயலற்ற நிலேயிலிருந்து செயல்புரியும் நிலேக்குப் போகும் மாற்றநிலே'' பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிருேம் என்கிற உண்மை இருக்கிறதே—அது ஒரு வெட்கக் கேடு, மானக்கேடு.

எங்களோடு சேர்ந்து இந்த ஆய்வுரைகளே எழுதிய தோழர் ராதேக்கோடு எங்களுக்கு இவ்விஷயத்தில் சர்ச்சை எதுவும் கிடையது. யதார்த்தத்தில் ஒரு தாக்குதல் தயாரிக் கப்படாமலிருக்கும் போது புரட்சிகரமான தாக்குதல் குறித்த

தத்துவத்தைப் பற்றி ஜெர்மனியில் பேசத் தொடங்குவது ஒரு வேளை முழுவதும் சரியில்லை. என்றாலும் மார்ச்சு நடவடிக்கை ஒரு மகத்தான முன்னேற்றப் படிதான்—அதன் தலைவர்களின் தவறுகள் இருந்தபோதிலும். ஆனால் இது பரவாயில்லை. லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீரத்துடன் போராடினார்கள். எவ்வளவு தைரியத்தோடுதான் ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சி பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்துப் போரிட்டிருந்தாலும், ஹோல்ட்ஸைப் பற்றி ஒரு ருஷ்யக் கட்டுரையில் ராதேக் சொன்னதையே நாம் சொல்லித் தீர வேண்டும். எவனாவது, ஒரு அராஜகவாதி கூட, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து வீரமாகப் போரிடுகிறான் என்றால் அது ஒரு பெரிய விஷயமே; ஆனால் லட்சக் கணக்கான பேர்கள் சோஷல்-துரோகிகளின் மோசமான ஆத்திர மூட்டலையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் எதிர்த்துப் போரிடுகிறார்கள் என்றால் அது உண்மையான ஒரு முன்னேற்றப் படிதான்.

தன் தவறுகளை விமர்சனக் கண் கொண்டு பார்ப்பது மிக முக்கியமாகும். அதிலிருந்துதான் நாம் தொடங்கினோம். லட்சக்கணக்கான பேர் பங்கெடுத்த ஒரு போராட்டத்திற்குப் பிறகு யாராவது இந்தப் போராட்டத்தை எதிர்த்துப் பேசினால், லெவீ போல் நடந்து கொண்டால், அவரை வெளியேற்ற வேண்டும். அதைத்தான் செய்தோம். ஆனால் இதிலிருந்து ஒரு படிப்பினை பெற வேண்டும். உண்மையிலே நாம் ஒரு தாக்குதலுக்குத் தயார் செய்திருந்தோமா? (ராதேக்: ''நாம் தற்காப்புக்குக் கூட தயார் செய்திருக்கவில்லை''.) உண்மையிலே, பத்திரிகைக் கட்டுரைகள் மட்டுமே தாக்குதல் பற்றிப் பேசின. *1921* ஜெர்மனியின் மார்ச்சு நடவடிக்கையோடு பொருத்திச் செயல்படுத்தப்பட்ட வகையில் இந்தத் தத்துவம் சரியல்ல—அதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்; ஆனால், பொதுப்படையாக, புரட்சிகரமான தாக்குதல் பற்றிய தத்துவம் சிறிதும் பொய்யல்ல.

ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றோம். மேலும் அவ்வளவு சுலபமாக வெற்றி பெற்றோம்; அதற்குக் காரணம் எங்கள் புரட்சிக்கு ஏகாதிபத்திய யுத்தத்தின் போது தயார் செய்தோம். அதுதான் முதல் நிபந்தனை. ருஷ்யாவில் ஒரு கோடி தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆயுதமேந்தி

யிருந்தனர்; எங்கள் கோஷம், எந்த விலை கொடுத்தேனும் உடனடியான சமாதானம் என்று இருந்தது. நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் விவசாயிகளின் மாபெரும் மக்கள் திரள் பெரிய நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் புரட்சி செய்யும் மனோபாவத்தோடு இருந்தது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், இரண்டாவதும் இரண்டரையாவதும் இன்டர்நேஷனல்களினது[82] சார்பாளர்கள், 1917, நவம்பரில் ஒரு பெரிய விவசாயிக் கட்சியாயிருந்தனர். அவர்கள் புரட்சிகரமான வழி முறைகளைக் கோரினர். ஆனல், இரண்டாவதும் இரண்டரையாவதும் இன்டர்நேஷனல்களின் உண்மையான வீரர்களைப் போல், புரட்சிகரமான வழியிலே செயல்புரியப் போதிய தைரியம் பெற்றிருக்கவில்லை. 1917, ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நாங்கள் சொன்னேம்: ''தத்துவ ரீதியிலே நாங்கள் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளை முன்போல் எதிர்த்துச் சண்டை போடுகிறோம்; ஆனல் நடைமுறையில் அவர்களுடைய வேலைத்திட்டத்தை நாங்கள் ஏற்கத் தயார், ஏனெனில் அதை எங்களால் மட்டுமே செயலுக்குக் கொண்டு வர முடியும்'' என்று. நாங்கள் சொன்னபடியே செய்தோம். 1917, நவம்பரில் எங்கள் வெற்றிக்குப் பிறகு, எங்களிடம் நல்ல மனப்பான்மை கொண்டிராத விவசாயி மக்களை, அரசியல் நிர்ணய சபைக்கு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளைப் பெரும் பான்மையாக அனுப்பி வைத்த அவர்களை, ஒரு சில நாட்களிலே இல்லாவிட்டாலும்—நான் தவருக ஊகம் செய்து முன்கூட்டிச் சொன்னதுபோல இராவிட்டாலும்—ஒரு சில வாரங்களிலே எங்கள் பக்கம் கொண்டு வந்து விட்டோம். அதில் வித்தியாசம் பெரியதாயில்லை. ஒரு சில வாரங்களில் விவசாயி மக்களில் பெரும்பான்மையினரை உங்கள் பக்கம் வென்று கொணர முடிகிற நாட்டை ஐரோப்பாவில் எங்காவது காட்ட முடியுமா? ஒருவேளை இத்தாலியிலா? (சிரிப்பு.) ஒரு பெரிய கட்சி இல்லாமற்போயினும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றேமே என்று சொல்வதென்றல், அப்படிச் சொல்கிறவர்கள் ருஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ளவில்லை; ஒரு புரட்சிக்கு எப்படி தயார் செய்வது என்பதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்பதைத்தான் அது நிரூபிக்கிறது.

யாருடன் பேசுகிறோம், யாரை முழுக்க நம்பமுடியும்

என்று அறியும் பொருட்டு ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியைப் படைப்பதே எங்களது முதற்படியாக இருந்தது. முதலாவது, இரண்டாவது காங்கிரஸ்களின் கோஷமாக ''மத்தியவாதிகள் வீழ்க!'' எனும் கோஷம் இருந்தது. வழி நெடுகிலும் உலகம் முழுவதிலும் நாம் மத்தியவாதிகளிட மிருந்தும் அரை மத்தியவாதிகளிடமிருந்தும்—ருஷ்யாவில் இவர்களை மென்ஷெவிக்குகள் என்று நாங்கள் அழைக்கி றோம்—நம்மை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளாவிட்டால் கம்யூனிஸத்தின் அரிச்சுவடியைக்கூட நாம் கற்று வசமாக்கிக் கொள்ள முடியாது. ஒரு உண்மையான புரட்சிக் கட்சியைப் படைப்பது, மென்ஷெவிக்குகளுடன் உறவு முறித்துக் கொள் வது என்பதுதான் நமது முதல் கடமை. எனினும் அது ஒரு பயிற்சிப் பள்ளியே ஆகும். நாம் ஏற்கெனவே மூன்றாவது காங்கிரஸைக் கூட்டி வருகிறோம்; தோழர் டெராச்சினியோ முன்போலவே பயிற்சிப் பள்ளியின் கடமை மத்தியவாதிகளை யும் அரை மத்தியவாதிகளையும் தேடிச் சென்று, துரத்திப் பிடித்து அம்பலப்படுத்துவதே என்று சொல்கிறார். உங் களுக்கு மிக்க நன்றி! போதுமான அளவுக்கு அதை ஏற் கெனவே நாம் செய்தாகிவிட்டது. இரண்டாவது காங்கிர ஸில் ஏற்கெனவே மத்தியவாதிகள் நமது பகைவர்கள் என்று நாம் சொல்லியாகி விட்டது. ஆனால் உண்மையிலே சொன் னால், நாம் இன்று மேலே போக வேண்டியவர்களாயிருக் கிறோம். நாம் ஒரு கட்சியாக அமைத்துக் கொண்ட பின்னர் புரட்சிக்குத் தயார் செய்வதைப் பயில்வதே இரண்டாம் கட்ட மாக இருக்கும். எப்படி ஆட்சியைக்கைப்பற்றுவது என்பதைப் பற்றி பல நாம் நாடுகளில் நாம் கற்றுக்கொள்ளக்கூட இல்லை. ருஷ்யாவில் நாங்கள் வெற்றிபெற்றதற்குக் காரணம் தொழி லாளி வர்க்கத்திடையே சந்தேகத்திற்கு இடமற்ற பெரும் பான்மையினர் எங்கள் பக்கம் இருந்தார்கள் (1917 தேர்தல் களின் போது தொழிலாளிகளில் ஆக மிகப் பெரும்பான்மை யினர் மென்ஷெவிக்குகளுக்கு எதிராக எங்கள் பக்கமே இருந் தார்கள்) என்பது மட்டுமல்ல, நாம் அதிகாரத்தைக் கைப் பற்றியதை உடனே தொடர்ந்து இராணுவத்தில் பாதியும் சில வார காலத்தில் விவசாயிகளில் பத்தில் ஒன்பது விகிதத் தினரும் எங்கள் பக்கம் வந்து விட்டனர் என்பதுமாகும்; நாங்கள் வெற்றிபெற்றதற்குக் காரணம் நாங்கள் நிலம்

பற்றிய எங்களுடைய வேலைத்திட்டத்தை அல்ல, சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகளின் வேலைத்திட்டத்தை எடுத்துக் கொண்டு அதை நடைமுறையில் நிறைவேற்றி விட்டோம் என்பதுமாகும். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் வேலைத் திட்டத்தை நிறைவேற்றியதிலேதான் எங்கள் வெற்றி இருந்தது; எனவேதான் இந்த வெற்றி அவ்வளவு சுளுவாக இருந்தது. மேலைய நாடுகளைச் சேர்ந்த உங்களுக்கு இப்படிப் பட்ட பிரமைகள் இருப்பது சாத்தியமா? அது கேலிக்குரியது. தோழர் டெராச்சீனியும் பிரேரேபித்துள்ள திருத்தங்களில் கையெழுத்திட்டுள்ள எல்லாத் தோழர்களும் ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளை ஒப்புநோக்கி மட்டும் பார்க் கட்டும்! அத்தனை வேகமாகப் பெரும்பான்மையினர் எங்கள் பக்கம் வந்துவிட்டிருந்தபோதிலும் எங்கள் வெற்றிக்குப் பிறகு எங்களை எதிர்கொண்ட கஷ்டங்கள் மிகப் பெரியவை. என்ற போதிலும் நாங்கள் வெற்றி பெற்றோம்; காரணம், நாங்கள் எங்கள் இலட்சியங்களை மட்டுமின்றி எங்கள் கோட் பாடுகளையும் நினைவில் வைத்திருந்தோம், கோட்பாடுகளைப் பற்றி மௌனம் சாதித்து இலட்சியங்களைப் பற்றியும் ''இயங் கும் தன்மையுள்ள போக்குகளைப்'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல்புரியும் நிலைக்குப் போகும் மாற்ற நிலை'' பற்றியும் பேசிக் கொண்டிருந்த பேர்வழிகளை நாங்கள் கட்சி யில் இருக்க விடவில்லை. அப்படிப்பட்ட கனவான்களைச் சிறை யில் வைத்திருப்பதே மேல் என நாங்கள் கருதுவதற்காக ஒருக்கால் எங்களைப் பழி சூழக்கூடும். ஆனால் வேறு எந்த வழியிலும் சர்வாதிகாரம் சாத்தியமில்லை. நாம் சர்வாதி காரத்துக்குத் தயார்படுத்த வேண்டும், இப்படிப்பட்ட வாய்ச் சொற்களையும் திருத்தங்களையும் எதிர்த்துப் போராடு வதிலே அது அடங்கியுள்ளது. (சிரிப்பு.) நமது ஆய் வுரைகள் நெடுகிலும் மக்கள் திரளைப் பற்றி பேசுகின்றன. ஆனால், தோழர்களே, மக்கள்திரள் என்பதின் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம். ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியும் இடதுசாரித் தோழர்களும் இந்தச் சொல்லைத்தகாத முறையில் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தோழர் டெராச்சீனியும் இந்தத் திருத்தங்களில் கையெழுத் திட்ட அனைவரும் ''மக்கள் திரள்'' என்கிற சொல்லால்

எதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அறியாமலிருக்கிறார்கள்.

ஏற்கெனவே நான் வெகுநேரம் பேசிவிட்டேன்; எனவே ''மக்கள் திரள்'' என்கிற கருத்தமைப்பு பற்றி ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ''மக்கள் திரள்'' என்கிற கருத்தமைப்பு போராட்டத்தின் தன்மையில் காணும் மாற்றங்களுக்கு ஏற்பத் தானும் மாறுகிறது. போராட்டத்தின் துவக்கத்தில் சில ஆயிரம் உண்மையான புரட்சிகரமான தொழிலாளிகள் இருந்தால்போதும், மக்கள் திரளைப் பற்றி பேசுவது சாத்தியமாகிவிடும். போராட்டத்தில் கட்சி தன்னுடைய உறுப்பினர்களை ஈடுபடுத்துவதில் வெற்றி பெறுவதோடு மட்டுமின்றி, கட்சிச் சார்பல்லாத மக்களையும் தட்டியெழுப்பிவிடுவதிலே வெற்றி பெறுமேயானல், அதுவே மக்கள் திரளைத் தன் பக்கம் வென்று ஈர்ப்பதின் தொடக்கமாகும். எங்களுடைய புரட்சிகளின்போது மக்கள் திரளைக் குறிக்கும் முறையில் சில ஆயிரம் தொழிலாளர்கள் இருந்த வழக்குகள் உண்டு. எங்கள் இயக்கத்தின் வரலாற்றில், மென்ஷெவிக்குகளை எதிர்த்து நடந்த எங்கள் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு நகரில் இயக்கத்துக்கு வெகுஜனத்தன்மை அளிப்பதற்குச் சில ஆயிரம் தொழிலாளர்கள் போதுமானதாக இருந்ததற்குப் பல உதாரணங்கள் காண்பீர்கள். வழக்கமாகவே கிணற்றுத்தவளை வாழ்க்கையையும் மோசமான பிழைப்பையும் நடத்திக் கொண்டு அரசியலைப்பற்றி என்றைக்கும் ஒன்றுமே கேள்விப்படாமலிருந்து வருகிற கட்சிச் சார்பற்ற சில ஆயிரம் தொழிலாளர்கள் புரட்சிகரமான முறையில் செயல்புரியத் தொடங்கிவிட்டால் அங்கே நீங்கள் மக்கள் திரளை எதிர்கொண்டவர்கள் ஆகிறீர்கள். அந்த இயக்கம் பரவித் தீவிரமடைந்தால் அது ஒரு உண்மையான புரட்சியாக வளர்கிறது. 1905லும் 1917லும் மூன்று புரட்சிகளின்போது நாங்கள் இதைப் பார்த்தோம். நீங்களும் இவ்விஷயத்தை உள்ளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். புரட்சி போதுமான அளவுக்குத் தயார் செய்யப்பட்டவுடன் ''மக்கள் திரள்'' என்கிற கருத்தமைப்பு வேறுபட்டுப் போகிறது: சில ஆயிரம் தொழிலாளர்கள் இப்போது மக்கள் திரளாக மாட்டார்கள். அந்தச் சொல் வேறொன்றைக் குறிக்கத் தொடங்குகிறது. மக்கள் திரள்

என்கிற கருத்தமைப்பு பெரும்பான்மையினரை—வெறுமே தொழிலாளர்களில் மட்டுமல்ல, எல்லா சுரண்டப்படும் மக்களிலும் பெரும்பான்மையினரை—உட்கிடையாகக் குறிக்கிற அளவுக்கு ஒரு மாற்றம் பெறுகிறது. ஒரு புரட்சிக்காரன் வேறெந்த வகையிலும் இதைப் புரிந்துகொள்வது தகாது, இந்தச் சொல்லுக்கு வேறெந்த அர்த்தமும் விளங்க இயலாததாகிறது. ஒரு சிறிய கட்சி—எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கக் கட்சி—அரசியல் வளர்ச்சிப் போக்கை முற்றுகப் பயின்ற பிறகு, கட்சிச் சார்பற்ற மக்கள் திரளின் வாழ்க்கையையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்து கொண்ட பிறகு, ஒரு சாதகமான தருணத்தில் ஒரு புரட்சி இயக்கத்தை எழச் செய்வது சாத்தியமே (சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் தோழர் ராதேக் குறிப்பிடுகிறுர்). அப்படிப்பட்ட ஒரு கட்சி அந்த நேரத்தில் தன் கோஷங்களுடன் முன்வந்து கோடிக் கணக்கான தொழிலாளர்கள் தன்னைப் பின்பற்றுமாறு செய்வதில் வெற்றி பெற்றுல் அங்கே ஒரு வெகுஜன இயக்கத்தை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள். ஒரு சிறிய கட்சி புரட்சியைத் தொடங்க முடியும் வெற்றிக்குக் கொணர்ந்து முடிக்க முடியும் என்பதை நிச்சயமாக நான் மறுக்கவில்லை. ஆனல் மக்கள் திரளை நம் பக்கம் கொண்டுவரமுடியச் செய்கிற வழிமுறைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதற்குப் புரட்சிக்குரிய முற்றுன தயாரிப்பு அவசியம். ஆனல் இங்கோ தோழர்கள் ''பெரும்'' திரளான மக்கள் வேண்டும் என்கிற கோரிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று சாதிக்க முன்வருகிறுர்கள். இப்படிப்பட்ட தோழர்களை எதிர்த்துப் போர் முரசு கொட்டியாக வேண்டும். முற்றுன தயாரிப்பில்லாமல் எந்த நாட்டிலும் நீங்கள் வெற்றிபெறப் போவதில்லை. மக்கள் திரளை வழி நடத்திச் செல்ல ஒரு சின்னஞ்சிறு கட்சி இருந்தால் போதும். சில சமயங்களில் பெரிய ஸ்தாபனங்களுக்கு அவசியமில்லை.

ஆனல், வெற்றி பெறுவதற்கு மக்கள் திரளின் பரிவு நமக்கு இருந்து தீர வேண்டும். ஒரு பரமமான பெரும்பான்மை எப்போதும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை; ஆனல் வெற்றி பெறுவதற்கும் அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்

மையினர்—''தொழிலாளி வர்க்கம்'' என்கிற சொல்லை மேலைய ஐரோப்பியப் பொருளில், அதாவது இயந்திரத் தொழிலில் ஈடுபட்டு உள்ள பாட்டாளி வர்க்கம் என்கிற பொருளில், பயன்படுத்துகிறேன்—இருப்பது அவசியம் மட்டுமல்ல, உழைக்கும் சுரண்டப்படும் கிராமப்புற மக்கள் தொகையின் பெரும்பான்மை இருப்பதும் அவசியமாகும். இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? அந்தச் சிந்தனைக்குரிய ஒரு ஜாடையேனும் டெராச்சினியின் சொற்பொழிவில் கிடைக்கிறதா? ஒரு ''இயங்கும் தன்மையுள்ள போக்கு'' பற்றியும் 'செயலற்ற நிலையிலிருந்து செயல் புரியும் நிலைக்கு மாறுவது'' பற்றியும் மட்டுமே அவர் பேசுகிறார். உணவுப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தையேனும் அவர் சொல்கிறாரா? இத்தனைக்கும் ருஷ்யாவில் ஓரளவுக்கு நாம் பார்த்த மாதிரி, தொழிலாளர்கள் எவ்வளவோ சகித்துக் கொண்டு பட்டினி கிடக்க முடிந்த போதிலுங்கூட அவர்கள் அன்றாடம் உணவு கொடு என்று கோரிவருகிறார்கள். எனவே, தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை மட்டுமின்றி, உழைக்கும் சுரண்டப்பட்டு வரும் கிராமப்புற மக்கள் தொகையின் பெரும்பான்மையையும் நம் பக்கம் கொண்டுவர வேண்டும். இதற்குத் தயார் செய்திருக்கிறீர்களா நீங்கள்? அநேகமாக எங்குமே காணோம்.

எனவே, திரும்பச் சொல்கிறேன்: நமது ஆய்வுரைகளை நான் நிபந்தனையின்றிக் காத்துத் தீரவேண்டும், அதைப் பாதுகாப்பது என் கடமை என்றும் நான் கருதுகிறேன். நாம் மத்தியவாதிகளைக் கண்டித்ததோடல்லாமல், கட்சியிலிருந்து வெளியே தள்ளியிருக்கிறோம். இன்று மற்றொரு அம்சத்தை நாம் கவனிக்க வேண்டும். அது ஆபத்தானது என்றும் நாம் கருதுகிறோம். யாரும் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்க இடமில்லாத வகையில் மிகவும் நயப் பாங்கோடு (நமது ஆய்வுரைகளில் நாம் மரியாதையுடனும் பரிவுடனும் சொல்கிறோம்) தோழர்களுக்கு உண்மையைக் கூற வேண்டும். மத்திய வாதிகளைத் தாக்குவதைவிட அதிக முக்கியமுள்ள வேறு பிரச்சினைகளை நாம் இன்று எதிர்கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினை நமக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. ஏற்கெனவே ஓரளவுக்கு அது நமக்குச் சலிப்பூட்டுவதாயிருக்கிறது. அதற்குப் பதிலாக, ஒரு உண்மையான

புரட்சிப் போராட்டத்தை நடத்தத் தோழர்கள் பயில்வது அவசியம். ஜெர்மன் தொழிலாளர்கள் ஏற்கெனவே இவ்வாறு செய்யத் தொடங்கி விட்டார்கள். அந்த நாட்டில் லட்சக் கணக்கான பாட்டாளிகள் வீரமாகப் போராடி வந்திருக்கிருர்கள். இந்தப் போராட்டத்தை எதிர்க்கும் எந்தப் பேர்வழியும் உடனடியாக வெளியே தள்ளப்பட வேண்டும். ஆனல் அதன்பிறகு நாம் வெற்றுச் சொற்பின்னல் வேலையில் ஈடுபடாமல், செய்த தவறுகளின் அடிப்படையில் போராட்டத்தை மேலும் நல்ல முறையிலே ஒழுங்கமைப்பது எப்படி என்று உடனடியாகப் பயிலத் துவங்க வேண்டும். எதிரியிடமிருந்து நமது தவறுகளை நாம் மறைக்கக் கூடாது. இது குறித்துப் பயப்படுகிறவன் ஒரு புரட்சிக்காரன் அல்ல. அதற்கு மாருக, தொழிலாளர்களிடம் ''ஆம், நாங்கள் தவறுகள் செய்தோம்'' என்று பகிரங்கமாகப் பிரகடனப் படுத்திஞல் அவற்றைத் திரும்பச் செய்யமாட்டோம், தருணத்தைத் தேர்ந்துகொள்வதில் முன்னைவிட அதிகத் திறமைபெற்றவர்களாவோம் என்று அதற்குப் பொருள். மேலும், போராட்டத்தின்போதே உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையினர்—தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் மட்டுமல்ல, எல்லாச் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களிலும் பெரும்பான்மையினர்—நம் பக்கம் வந்துவிட்டால் நாம் உண்மையிலே வெற்றிபெறுவோம். (நீடித்த, புயல்போன்ற கைதட்டல்.)

நூல்திரட்டு, தொகுதி 44

*1921, ஜூலை 5ல்,*
*''பிராவ்தா'', இதழ் 144லும்*
*''அகில ருஷ்யாவின் நிர்வாகக்*
*குழுவின் செய்திகள்'', இதழ் 144லும்*
*இதைப் பற்றிய பத்திரிகை ரிப்போர்ட்*
*பதிப்பிக்கப்பட்டது*

*1921, ஜூலை 8ல், ''கம்யூனிஸ்ட்*
*இன்டர்நேஷனலினது மூன்ரும் காங்கிரஸின்*
*செய்திகள்'', இதழ் 11ல்*
*முழுவதாகப் பதிப்பிக்கப்பட்டது*

## 1921, ஜூலை 11ல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றும் காங்கிரஸில் பங்கெடுத்த ஜெர்மனி, போலந்து, செகோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிக் குழுக்களின் உறுப்பினர்களைக் கொண்ட மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்

### 1

நேற்றைய தினம் ''பிராவ்தாவிலே'' நான் படித்த செய்திகளிலிருந்து தாக்குக்குரிய நேரம் நாம் நினைத்ததைவிட—இதற்காக இளம் தோழர்கள் நம்மைக் காங்கிரஸில் பலமாகத் தாக்கினர்கள்—ஒருவேளை மேலும் கிட்ட நெருங்கி விட்டதாக எனக்குத் தெளிவாயிற்று. ஆனல் இந்தச் செய்திகளைப்பற்றிப் பின்னல் பேசுகிறேன். இந்தத் தருணத்தில் நான் சொல்லித் தீர வேண்டியது என்னவெனில், பொதுத் தாக்கு நெருங்க நெருங்க நாம் மேலும் மேலும் ''சந்தர்ப்பவாத முறையில்'' செயலாற்ற வேண்டும் என்பதே. இப்போது நீங்கள் அனைவரும் தம் நாடுகளுக்குத் திரும்பிச் சென்று நாம் மூன்றும் காங்கிரஸுக்கு முன்பிருந்ததைவிட மதியூகம் மிகுந்தவர்கள் ஆகிவிட்டோம் என்று தொழிலாளர்களிடம் கூறுவீர்கள். நீங்கள் குழப்பமடையக் கூடாது, நாம் தவறுகள் செய்ததாகவும் இன்னும் அதிக எச்சரிக்கையுடன் செயலாற்ற நாம் விரும்புவதாகவும் நீங்கள் மக்களிடம் சொல்ல வேண்டும்; அவ்வழியே சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியிடமிருந்தும் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியிடமிருந்தும் மக்களை நம் பக்கம் கொண்டுவருவோம்; விவகாரங்களின் மொத்தப் போக்கின் காரணமாகப் புறநிலை வகைப்பட்ட ரீதியிலே இந்த மக்கள் திரள் நம் பக்கம் ஈர்க்கப்பட்டு வருகிறது, ஆனல் மக்கள் நம்மிடம் பயப்படுகிறார்கள். எங்களது உதாரணம் நாம் மேலும் கவனிப்போடு செயலாற்ற வேண்டும் என்று காட்டுகிறது.

யுத்தம் வெடித்த போது போல்ஷெவிக்குகளாகிய எங்களிடம் ஒரேயொரு கோஷம் இருந்தது—ஒரு உள்நாட்டு யுத்தம், அதிலும் விட்டுக்கொடாத யுத்தம் என்பது. உள்நாட்டு யுத்தத்தை எதிர்த்துப் பேசிய எவனையும் துரோகி

என்று நாங்கள் சூடு போட்டோம். ஆனால் 1917 மார்ச்சில் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்தபோது, எங்கள் நிலையை முற்றாக மாற்றிக் கொண்டோம். நாங்கள் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்து விவசாயிகளிடமும் தொழிலாளிகளிடமும் பேசிய போது, அவர்கள் எல்லோரும் தாய்நாட்டின் பாதுகாப்புக்கு ஆதரவாக நிற்கக் கண்டோம்—மென்ஷெவிக்குகள் மாதிரியல்லாமல் முற்றாக வேறொரு வகையில் அது இருந்தது இயல்புதான்—, இந்தச் சாதாரணத் தொழிலாளர்கள் விவசாயிகள் அனைவரையும் கயவாளிகள் துரோகிகள் என்று நாங்கள் சொல்ல முடியவில்லை. அவர்களை ''மனச்சாட்சி பூர்வமான பாதுகாப்புவாதிகள்'' என்று இனங்குறித்தோம். இதைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதி எல்லா விஷயாதாரங்களையும் பிரசுரிக்க நான் விரும்புகிறேன். ஏப்ரில் 7ல் நான் ஆய்வுரைகளை வெளியிட்டேன், அவற்றில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை என்று வலியுறுத்தினேன். யுத்தத் தொடக்கத்தில் நாங்கள் எடுத்த நிலை சரிதான், ஏனெனில் அந்தச் சமயத்தில் நிச்சயமான, மனத்திட்பமுள்ள உட்கருவை நிறுவுவது முக்கியமாயிருந்தது. பின்னால் நாங்கள் மேற்கொண்ட நிலையும் சரியானதே. மக்கள் திரளை எங்களது பக்கம் கொண்டு வரவேண்டும் என்ற தேவையிலிருந்து அது உதித்தது. ஏற்கெனவே அந்த நாளிலேயே தாற்காலிக அரசாங்கத்தை உடனடியாகத் தூக்கியெறிகிற கருத்தை எதிர்த்தோம். நான் எழுதினேன்: ''அரசாங்கத்தை நாம் தூக்கியெறிய வேண்டும், ஏனெனில் அது சிறுதொகையினரின் ஆட்சி, மக்கள் ஆட்சியல்ல; ஏனெனில் அது மக்களுக்கு உணவோ சமாதானமோ கொடுக்க முடியாது. ஆனால் அதை உடனடியாகத் தூக்கியெறிய முடியாது, காரணம், அது தொழிலாளர்களின் சோவியத்துக்களைச் சார்ந்து இருக்கிறது, தொழிலாளர்களின் நம்பிக்கையை இன்னமும் பெற்றிருக்கிறது. நாம் பிளாங்கியவாதிகள் அல்ல, தொழிலாளி வர்க்கத்தில் பெரும்பான்மையினருக்கு எதிராகச் சிறுபான்மையினரைக் கொண்டு நாம் ஆள விரும்பவில்லை'' என்று. நுட்பமான அரசியல்வாதிகளாகிய காடெட்டுகள் உடனே எங்களுடைய பழைய நிலைக்கும் புதிய நிலைக்கும் உள்ள முரண்பாட்டைக் கண்டு கொண்டு எங்களை ஆஷாடபூதிகள் என்று அழைத்தார்கள். ஆனால் அதே மூச்சில் அவர்கள் எங்களை

உளவாளிகள், துரோகிகள், கயவாளிகள், ஜெர்மன் ஏஜெண்டுகள் என்று அழைத்ததிஞலே முதற்சொன்ன சொல் தைக்காமலே போய்விட்டது. ஏப்ரில் 20ம் தேதியன்று முதல் நெருக்கடி ஏற்பட்டது. அரசாங்கம் ஒரு ஏகாதிபத்திய அரசாங்கம் என்று மில்யூக்கோவின் டார்டனல்ஸ் பற்றிய குறிப்பு[83] அம்பலப் படுத்திவிட்டது. விரைவிலே அதைத் தொடர்ந்து ஆயுதமேந்திய இராணுவ வீரர்கள் அரசாங்கக் கட்டடத்தை வளைத்துக் கொண்டு மில்யூக்கோவை வெளியே தள்ளி விட்டார்கள். யாரோ லிந்தே என்கிற ஒரு கட்சிச்சார்பற்ற நபர் அவர்களுக்குத் தலைமை வகித்தான். இந்த நடவடிக்கையைக் கட்சி உருவாக்கவில்லை. அது ஒரு ஆயுதமேந்திய ஆர்ப்பாட்டத்தைவிட ஓரளவு மேலானது, ஆயுதமேந்திய புரட்சியெழுச்சியைவிட ஓரளவு கீழானது என்று நாங்கள் அதை இனங்குறித்துச் சொன்னேம். ஏப்ரில் 22ல் நடந்த எங்கள் மாநாட்டில் அரசாங்கத்தை உடனடியாகத் தூக்கியெறிய வேண்டுமென்று இடதுசாரிப் போக்கு கோரியது. அதற்கு மாறுக, மத்தியக் கமிட்டி உள்நாட்டுப் போர் என்கிற கோஷத்தை எதிர்த்துப் பேசியது, போல்ஷெவிக்குகள் ஒரு உள்நாட்டுப் போரை விரும்புகிருர்கள் என்கிற படுமோசமான புளுகை மறுத்துப் பேசுமாறு மாநிலங்களிலுள்ள எல்லாப் பிரசாரகர்களுக்கும் ஆணையிடப்பட்டது. ஏப்ரில் 22ல் நான்: ''தாற்காலிக அரசாங்கம் வீழ்க'' என்கிற கோஷம் தவறு என்று எழுதினேன்; காரணம், மக்களிலே பெரும்பான்மையினரின் ஆதரவில்லாத நிலையில் அது ஒரு வெற்றுச் சொல்லாகவோ துர்ச்சாகசமாகவோதான் இருக்க முடியும்.

எங்கள் இடதுசாரிகளை எங்கள் விரோதிகளின் முன்னிலையிலேயே ''துர்ச்சாகசவாதிகள்'' என்று பெயர்சூட்டியழைக்க நாங்கள் தயங்கவில்லை. இதை வைத்து மென்ஷெவிக்குகள் மனநிறைவிலே மகிழ்ச்சி கொண்டாடினர், நாங்கள் திவாலாகிப்போகிற நிலைக்கு வந்துவிட்டதாகச் சொன்னர்கள். ஆனல், மத்தியக் கமிட்டியின் நிலையிலிருந்து சொற்ப அளவுக்கேனும் அற்ப அளவுக்கேனும் இடதுசாரியான நிலையை மேற்கொள்ளும் எந்த முயற்சியும் மடமையாகும், மத்தியக் கமிட்டியின் நிலைக்கு இடதுசாரியாகச் செல்லும் எவனும் ஏற்கெனவே சாமானிய அறிவை இழந்தவனுகிருன் என்றும், நமது விரோதிகள் நம் தவறுகளுக்காக மகிழ்ச்சி கொண்

டாடுவதைக் கண்டு நாம் பயப்பட இடந்தரமாட்டோம் என்றும் நாங்கள் சொன்னேம்.

இன்னமும் பலம்பெறுவது ஒன்றே இன்று எங்களுடைய போர்த்தந்திரமாகும்; எனவே நாங்கள் இன்னமும் விவேகத்துடனும் மதியூகத்துடனும் ''சந்தர்ப்பவாதத்தனத்துடனும்'' நடந்துகொள்ள வேண்டும், அதைத்தான் நாங்கள் மக்கள் திரளுக்குச் சொல்லித் தீரவேண்டும். எங்களது மதியூகத்தால் மக்கள்திரளை எங்கள் பக்கம் கொண்டுவந்த பிறகு தாக்குச் செயல்தந்திரங்களை—அந்தச் சொற்களின் முழுப் பொருளில் —செயல்படுத்துவோம்.

இனி அந்த மூன்று செய்திகளைப்பற்றி:

1) பெர்லின் நகராட்சித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம். இந்தத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் பழைமைப் போக்குள்ளவர்கள், சோஷல்-டெமாக்ராட்டிக் பெரும்பான்மையையும் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியையும் சேர்ந்தவர்கள், நல்ல வேலையில் இருப்பவர்கள், எனினும் வேலைநிறுத்தம் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிருர்கள்.

2) லீல் நகரத்தில் ஜவுளிமில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்.

3) மூன்ருவது செய்தி அதிமுக்கியமானதாகும். கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், குடியரசு என்ற எல்லாக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறதாய் ஐம்பது ஆயிரம் தொழிலாளர்கள்கொண்ட கூட்டம் பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராட்டத்தை உருவாக்க ரோம் நகரில் கூட்டப்பட்டது. இதில் யுத்தத்திலிருந்து திரும்பிய ஐயாயிரம் போர்வீரர்கள் இராணுவச் சீருடையுடன் கலந்து கொண்டார்கள், ஒரு பாசிஸ்டேனும் தெருவில் தலைகாட்டத் துணியவில்லை. நாம் நினைத்ததைவிட அதிகமாக எரிபொருள் ஐரோப்பாவில் இருக்கிறதை இது நிரூபிக்கிறது. செயல் தந்திரங்களைப் பற்றிய நம் தீர்மானத்தை லட்ஸாரி புகழ்ந்தார். அது நம் காங்கிரஸின் ஒரு பெரும் சாதனையாகும். லட்ஸாரி அதை அங்கீகரிக்கிருரென்ருல் அவரைப் பின்பற்றுகிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் நிச்சயமாக நம் பக்கம் வருவார்கள், அவர்களைப் பயமுறுத்தி அவர்களின் தலைவர்கள் நம்மிடமிருந்து விரட்டிவிட முடியாது. "Il faut reculer,

pour mieux sauter" (சிறந்த பாய்ச்சலின் பொருட்டுப் பின் நகர்வது அவசியம்). அந்தப் பாய்ச்சல் தவிர்க்க முடியாத தாகும்; காரணம், புறநிலைமை சகிக்க முடியாததாகி வருகிறது.

ஆக, நாம் நம்முடைய புதிய செயல்தந்திரங்களைச் செயல் படுத்தத் தொடங்கியிருக்கிறோம். பதற்றப்படக் கூடாது. நாம் தாமதித்து வந்தவர்களாக மாட்டோம்; உண்மையிலே பார்த்தால் நாம் காலம் வருமுன்பே தொடங்கிவிடுவது சாத்தியம். மேலும், அதுவரை ருஷ்யா தாக்குப் பிடித்து நிற்க முடியுமா என்று கேட்டால் தற்சமயம் குட்டி பூர்ஷ்வாக்களை எதிர்த்து, விவசாயிகளை எதிர்த்து ஒரு போரை, முந்திய போரைக்காட்டிலும் மிகவும் ஆபத்தான ஒரு பொருளாதாரப் போரை, நாங்கள் நடத்தி வருகிறோம் என்று பதில் சொல்லுகிறோம். கிளாவுஸெவிட்ஸ் சொன்னது போல, யுத்தம் விஷயத்தில் அபாயம் இருக்கத்தான் செய்கிறது, நாங்களோ, ஒரு வினாடியேனும் அபாயத்திலிருந்து விலகி நின்றதில்லை. நாங்கள் இன்னும் அதிக எச்சரிக்கையுடன் செயல்புரியத் தொடங்கினால், காலாகாலத்தில் சலுகைகள் வழங்கினால், இந்தப் போர் மூன்றாண்டுகளுக்கு மேல் நடந்தாலும் இதிலும் வெற்றிபெறுவோம் என்று உறுதியாக நம்புகிறேன்.

சுருங்கச் சொல்கிறேன்:

1) நாம் புதிய செயல்தந்திரங்களைச் செயல்படுத்துவதாக ஐரோப்பா முழுவதற்கும் ஒருமனதாகச் சொல்லுவோம். இவ்வழியே மக்கள் திரளை நம் பக்கம் கொண்டு வருவோம்.

2) ஜெர்மனி, செகோஸ்லோவாக்கியா, இத்தாலி ஆகிய முக்கியத்துவமுள்ள நாடுகளில் தாக்குதலை இணைப்பது. இந்தப் பிரச்சினையில் தயாரிப்பும் இடையறாத ஒத்துழைப்பும் அவசியம். ஐரோப்பா புரட்சியைக் கருக்கொண்டிருக்கிறது, எனினும் முன்கூட்டியே புரட்சிக்குக் கால அட்டவணை வகுப்பது சாத்தியமில்லை. ருஷ்யாவிலுள்ள நாங்கள் ஐந்து ஆண்டுகள் மட்டுமல்ல, இதற்கு மேலும் தாக்குப் பிடித்து நிற்போம். நாம் தீர்மானித்துள்ள போர்த்தந்திரம் ஒன்றுதான் சரியானது. ஆந்தாந்த் வல்லரசுகள் எதிர்க்க முடியாத நிலையில் புரட்சிக்கு ஸ்தாபனங்களை நாம் பிடிப்போம் என்பது

என் உறுதி, அதுவே உலக ரீதியான வெற்றிக்குத் துவக்க மாயிருக்கும்.

2

என் பேச்சில் ஷ்மேராலுக்குத் திருப்தி போலிருக்கிறது, ஆனால் அவர் அதை ஒரு சார்பாக வியாக்கியானம் செய்கிறார். சரியான பாதைக்கு வர ஷ்மேரால் இடதுசாரித் திசையில் இரண்டு அடி எடுத்துவைக்க வேண்டுமென்றும் கிரெய்பிஹ் வலதுசாரித் திசையில் ஓர் அடி எடுத்துவைக்க வேண்டு மென்றும் நான் குழுவில் சொன்னேன். இந்த அடிகளை எடுத்துவைப்பதுபற்றி ஷ்மேரால் எதுவும் சொல்லாதது வருந்தத் தக்கது. நிலைமையைத் தான் எப்படி மதிப்பீடு செய்கிறார் என்பதைப் பற்றியும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. கஷ்டங்களைப் பற்றி ஏற்கெனவே தான் சொன்னதையே திரும்பச் சொன்னார், புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. தன்னுடைய பயங்களை நான் போக்கிவிட்டதாக அவர் சொன்னார். சந்தர்ப்பப் பொருத்தமற்ற முறையில் செயல்புரியும்படி கம்யூனிஸ்ட் தலைமை தன்னை நிர்ப்பந்திக்கும் என்று வசந்தகாலத்தில் அவர் பயந்தார், ஆனால் நிகழ்ச்சிகள் அவருடைய பயங்களைத் தணித்துள்ளன. எனினும், இன்று வேறொன்று நமக்குக் கவலையளிப்பதாயிருக்கிறது; அதாவது, செகோஸ்லோவாக்கியாவில் விவகாரங்கள் செயலுக்குத் தயார் செய்யும் கட்டத்துக்கு உண்மையிலே வந்து சேருமா அல்லது கஷ்டங்களைப்பற்றிய வெறும் பேச்சோடு நின்றுவிடுமா என்று. இடதுசாரித்தவறு வெறுமே தவறு மட்டுமே. அது பெரிய தவறல்ல. சுளுவாகவும் திருத்தப்படக் கூடியதே. செயல்புரிவதில் உளத்திட்பத்தை அது பாதித்தால் அப்போது அது சிறு தவறு அல்ல, துரோகமேயாகும். இந்தத் தவறுகளுக்கு இணையே கிடையாது. மற்றவர்கள் முதலில் செயலாற்றிய பிறகு நாங்கள் புரட்சியைச் செய்துமுடிக்கிறோம் என்கிற தத்துவம் அடிப்படையிலேயே தவறானது.

3

என் அபிப்பிராயத்தில், இந்தக் காங்கிரஸில் செய்துள்ள பின்வாங்கல் நாங்கள் ருஷ்யாவில் 1917ல் செய்துள்ள செயல்

களுடன் ஒப்புநோக்கப்பட வேண்டும், அதன்வழியே அது ஒரு தாக்குக்குத் தயார் செய்யப் பயன்பட வேண்டுமென்று காட்டவேண்டும். நாம் முன்பு சொன்னதை இன்று சொல்ல வில்லை என்று நமது எதிரிகள் சொல்வார்கள். அதனுல் அவர் களுக்கு லாபம் அதிகமிருக்காது; ஆனுல், எந்த அர்த்தத் தில் மார்ச்சு நடவடிக்கை வெற்றிகரமானது என்று கருத லாம், அதன் தவறுகளை ஏன் நாம் விமர்சிக்கிறோம், எதிர் காலத்தில் இன்னமும் நேர்த்தியாகத் தயாரிப்பு செய்ய வேண் டும் என்று ஏன் சொல்கிறோம் என்று விளக்குவோமேயானுல் தொழிலாளி வர்க்க மக்கள் திரள் நம்மைப் புரிந்து கொள் ளும். ஷ்மேரா லுடைய, புரியானுடைய புரிவுகள் தவறு என்று டெராச்சினி சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். செய லிணைப்புக்கு அர்த்தம் வேறொரு, அதிக ஜனத்தொகையும் வளமுமுள்ள நாடு செயல்புரியும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும் என்று கருதப்பட்டால் அது கம்யூனிஸ்ட் புரிவு ஆகாது, பச்சையான ஏமாற்றே ஆகும். செயலிணைப்பு என் பது எந்தெந்த தருணங்கள் முக்கியமானவை என்று பிற நாட்டுத் தோழர்களுக்குத் தெரிந்திருப்பது என்றுதான் அர்த் தப்பட வேண்டும். நல்ல உதாரணங்களைச் சாத்தியமான அளவுக்கு மிக நேர்த்தியாக, மிக விரைவாகப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதே செயலிணைப்புக்கு உள்ள அதிமுக் கியமான புரிவு ஆகும். ரோம் தொழிலாளிகளின் உதாரணம் நல்லது.

நூல்திரட்டு, தொகுதி 44

முதல் சொற்பொழிவு முழுவதாகவும்,
இரண்டாவது, மூன்ருவது சொற்பொழிவுகள்
''வப்ரோஸீ இஸ்தோரியீ
கெ. பெ. எஸ். எஸ்.'', இதழ் 5ல்,
சுருக்கெழுத்துக் குறிப்பின்படியும்
1958ல் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டன

# அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டுவிழா

## என்பதிலிருந்து

கஷ்டங்கள் மலைபோன்றுள்ளன. எனினும் நாம் மலை போன்ற கஷ்டங்களைச் சமாளிக்கப் பழக்கப்பட்டவர்கள். ''கற்பாறை போன்றவர்கள்'' என்றும் ''எலும்பை முறிக்கும் கொள்கையைப்'' பின்பற்றுவோர் என்றும் நம் எதிரிகள் சும்மா சொல்லவில்லை. ஆனால் நாம் புரட்சிக்கு வேண்டிய மற்றொரு கலையையும், அதாவது நீக்குப் போக்கை, புறநிலைமைகளின் மாற்றங்கள் கோரினால் துரிதமாகவும் திடீரென்றும் செயல்தந்திரங்களை மாற்றிக் கொள்ளவும், ஒரு குறிப்பிட்ட தருணத்தில் முந்திய பாதை சந்தர்ப்பப் பயனற்றது அல்லது சாத்தியமற்றது என்று தெரிந்து விட்ட போது நமது குறிக்கோளை அடைய வேறொரு பாதையைத் தேர்ந்து கொள்ளவும், வேண்டிய ஆற்றலை ஓரளவுக்காயினும் கற்றுக் கொண்டிருக்கிறோம்.

முதலில் மக்களின் அரசியல் உற்சாகத்தையும் பிறகு இராணுவ உற்சாகத்தையும் தட்டியெழுப்பி அந்த உற்சாகத்தின் அலைமுகட்டிலே தூக்கிச் செல்லப்பட்டு, நாம் சாதித்த அரசியல், இராணுவ கடமைகளைப் போன்று அதே அளவுக்குப் பெரிய பொருளாதாரக் கடமைகளையும் இந்த உற்சாகத்தை நேரிடையாகச் சார்ந்து நின்று சாதித்துவிடலாம் என்று நாம் எதிர்பார்த்தோம். ஒரு சிறுவிவசாயி நாட்டில் நேர்முகமாகப் பாட்டாளி வர்க்க அரசின் ஆணைப்படியே கம்யூனிஸ்ட் வழியில் அரசாங்கச் சரக்கு உற்பத்தியையும் அரசாங்கச் சரக்கு விநியோகத்தையும் அமைக்க நம்மால் முடியும் என்று நாம் எண்ணினோம்—அல்லது, இன்னும் சரியாகச் சொன்னால், போதிய யோசனை செலுத்தாமலே அனுமானித்துக் கொண்டோம். நமது நிலை தவறானது என்று அனுபவம் காட்டிவிட்டது. கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்வதைத் தயார் செய்ய—பல ஆண்டுகால முயற்சியால் தயார் செய்ய—

சில இடைநிலைக்கட்டங்கள்—அரசு முதலாளித்துவம், சோஷலிஸம்—தேவைப்படும் என்று தோன்றுகிறது. உற்சாகத்தை மட்டும் நேரடியாகச் சார்ந்திராமல், மகத்தான புரட்சியினுலே பிறந்த உற்சாகத்தின் துணை கொண்டும் தனிநபர் நலன், தனிநபர் தூண்டுகோல், பொருளாதார சுய பொறுப்பு, ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்தச் சிறு விவசாயி நாட்டில் நாம் முதலில் வேலையில் இறங்கி அரசு முதலாளித்துவத்தின் வழியாக சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லும் பாலத்தை நிர்மாணிக்க வேண்டும். இதில்லாவிடில் நாம் என்றைக்கும் கம்யூனிஸத்துக்குப் போய்ச்சேர முடியாது; கோடானுகோடி மக்களை என்றைக்கும் கம்யூனிஸத்துக்குக் கொண்டுவர முடியாது. அதைத்தான் அனுபவமும், புரட்சி வளர்ச்சியின் புறநிலைப் போக்கும் நமக்குக் கற்பித்துள்ளன.

இந்த மூன்று நான்கு ஆண்டுகளாக (திடீரென்று கொள்கைநிலை மாற்றங்கள் அவசியப்படும்போது) திடீரென்று கொள்கைநிலை மாற்றங்களைச் செய்யக் கற்றுக்கொண்டிருக்கும் நாம் ஒரு புதிய கொள்கைநிலை மாற்றத்தை—அதாவது, ''புதிய பொருளாதாரக் கொள்கையைச்''—செய்யச் செயலூக்கத்துடனும் கவனிப்புடனும் சுறுசுறுப்புடனும் (இன்னமும் போதுமான அளவுக்குச் செயலுக்கத்துடனும் கவனிப்புடனும் சுறுசுறுப்புடனும் இல்லாதிருந்தபோதிலும்) கற்கத்தொடங்கியிருக்கிறோம். பாட்டாளிவர்க்க அரசு ஒரு எச்சரிக்கையுள்ள, விடாமுயற்சியுள்ள, மதிநுட்பமுள்ள ''வர்த்தகன்'' ஆகவேண்டும், ஒரு காரிய ஒழுங்குள்ள மொத்த வியாபாரி ஆகவேண்டும்—இல்லாவிடில் அது இந்தச் சிறு விவசாயி நாட்டைப் பொருளாதாரத் துறையிலே நிலைபெறச் செய்வதில் என்றைக்கும் வெற்றியடையாது; இப்போது, இப்படிப்பட்ட நிலைமைகளில், முதலாளித்துவ (தற்சமயத்தில் முதலாளித்துவமாயிருக்கிற) மேலைய நாடுகளுடன் நாம் அக்கம் பக்கமாக வாழ்ந்து வருகையில், கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறிச் செல்ல வேறொரு வழியுமில்லை. வானத்துக்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவே மொத்த வியாபாரி என்கிற பொருளாதார வகைக்கும் கம்யூனிஸத்துக்கும் உள்ள தூரம். முரண்பாடுகளில் ஒன்றாகிய இது, வாழ்க்கையின் யதார்த்த நிலைமைகளில், ஒரு சிறுவிவசாயி

நாட்டின் நிலையிலிருந்து அரசு முதலாளித்துவத்தின் வழியே சோஷலிஸத்துக்குக் கொண்டு செல்கிறது. தனிநபர் தூண்டு கோல் உற்பத்தியை வளர்க்கும்; நமது முதல் வேலை எப்படியேனும் உற்பத்தியைப் பெருக்குவதேயாகும். மொத்த வியாபாரம் கோடிக்கணக்கான விவசாயிகளைப் பொருளாதார ரீதியிலே ஒன்று படுத்துகிறது, அவர்களுக்குத் தூண்டு கோல் தருகிறது அவர்களை ஒன்ருக இணைக்கிறது, அவர்களை அடுத்த படிக்கு—அதாவது, உற்பத்தி இயக்கப் போக்கி லேயே அமைந்து வரும் இணைப்பினதும் கூட்டணியினதும் பல்வேறு வடிவங்களுக்கும்—கொண்டுபோய் விடுகிறது. நாம் ஏற்கெனவே நமது பொருளாதாரக் கொள்கையில் தேவையான மாற்றங்களைச் செய்யக் காரியத்தில் இறங்கியாகிவிட்டது. இதில் ஏற்கெனவே நமக்குச் சில வெற்றிகளும் கிடைத்துள்ளன. அவை சிறியவை, அரைகுறையானவை என்பது உண்மைதான் என்ருலும், அவை வெற்றிகளே. இந்தப் புதிய ''பயிற்சித்'' துறையில் நாம் ஏற்கெனவே நமது தயாரிப்புப் படிவத்தை முடித்துக் கொண்டு வருகிருேம். விடாமுயற்சியுள்ள இடை விடாத படிப்பின் மூலமாகவும், நாம் எடுக்கிற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நடைமுறை அனுபவத்தைச் சோதனைக் கல்லாகக் கொள்வதின் மூலமாகவும், ஏற்கெனவே நாம் தொடங்கிவிட்டதை மீண்டும் மீண்டும் மாற்றிக் கொள்ளப் பயப்படாமலிருப்பதின் மூலமாகவும், நம் தவறுகளைத் திருத்திக் கொள்வதின் மூலமாகவும் அவற்றின் குறிபொருளை மிகுந்த கவனிப்புடன் பகுத்தாய்வதின் மூலமாகவும், மேல் படிவங்களுக்கு நாம் போவோம். உலகப் பொருளாதாரத்தின், உலக அரசியலின் தற்கால நிலையானது அந்தப் பயிற்சித் திட்டத்தை நாம் விரும்புகிறதைக் காட்டிலும் நீண்டதாகவும் கஷ்டமானதாகவும் ஆக்கியிருக்கிறது என்ருலும் அந்தப் ''பயற்சித் திட்டத்தை'' முழுக்கப் பயின்று முடிப்போம். என்ன விலை கொடுத்தாயினும் சரி, பரிணமிப்புக் காலத்தின் கஷ்டங்கள் எத்தனை கடுமையாக இருந்தபோதிலும் சரி, விபத்தும் பஞ்ச

மும் அழிவும் இருந்தலும் சரி, நாம் சோர்ந்து விடப் போவதில்லை; நமது இலட்சியத்தை வெற்றிக்குக் கொண்டு செல்வோம்.

*1921, அக்டோபர் 14*

நூல்திரட்டு, தொகுதி 44

*''பிராவ்தா'', இதழ் 234,*
*1921, அக்டோபர் 18*

கையொப்பம்: நி. லெனின்

## தற்சமயத்திலும் சோஷலிஸத்தின் முழு வெற்றிக்குப் பிறகும் தங்கம் வகிக்கும் முக்கியத்துவம்

### என்பதிலிருந்து

உண்மையான புரட்சிக்காரனுக்கு ஆகமிகப் பெரிய அபாயமாக இருப்பது, ஒருவேளை ஒரே அபாயமாக இருப்பது, அதீதமான புரட்சிவாதம், புரட்சிகரமான செயல் முறைகள் பொருத்தமாகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடிகிறதாயும் உள்ள வரம்புகளையும் நிலைமைகளையும் புறக்கணிப்பது என்கிற அபாயமேயாகும். ''புரட்சி'' என்கிற சொல்லைப் புரட்சிக்காரர்கள் கொட்டையெழுத்தில் எழுதத் தொடங்கியபோதும், ''புரட்சியை'' அநேகமாகத் தெய்வீக நிலைக்கு உயர்த்தி வைக்கத் தொடங்கியபோதும், அறிவிழக்கத் தொடங்கியபோதும், எந்தத் தருணத்தில் எந்தச் சூழ்நிலைமைகளில் எந்தச் செயல்துறையில் புரட்சிகரமான முறையிலே செயலாற்றுவது அவசியமாகிறது, எந்தத் தருணத்தில் எந்தச் சூழ்நிலைமைகளில் எந்தச் செயல் துறையில் சீர்திருத்த வகைப்பட்ட செய்கையைச் செயல்படுத்துவது அவசியமாகிறது என்று ஆகமிக நிதானப்புத்தியோடும் விருப்பு வெறுப்பற்ற முறையிலேயும் சிந்திக்கும், எடைபோடும், உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆற்றலை இழக்கத் தொடங்கியபோதும், உண்மையான புரட்சிக்காரர்கள் தலைகுப்புற விழ்ந்து விட்டிருக்கிறார்கள். உண்மையான புரட்சிக்காரர்கள் தங்களுடைய நிதானப் பார்வையைக் கைவிட்டு, ''மகத்தான, வெற்றிகரமான, உலகப்'' புரட்சியானது எல்லாச் சூழ்நிலைமைகிளிலும் எல்லாச் செயல்துறைகளிலும் புரட்சிகரமான முறையிலே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும், தீர்க்க வேண்டும் என்று நினைக்கும்போது மட்டுமே அவர்கள் நாசமாகிப்போவார்கள் (வெளியிலிருந்து அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதல்ல, அவர்களுடைய வேலை உள்ளுக்குள்ளேயே சரிந்து நொறுங்கிவிடும்); அப்படி அவர்கள் செய்தால், அவர்களின் அழிவு உறுதி.

இப்படிப்பட்ட கருத்துக்களை மண்டையிலே ஏற்றிக் கொள்கிறவர் எவராயினும் அவர் அழிந்து தீரவேண்டும்; காரணம், ஒரு அடிப்படையான பிரச்சினைபற்றி முட்டாள் தனமான கருத்துக்களை அவர் பெற்றுவருகிறார்; மேலும், கடுமையான யுத்தத்தின் மத்தியிலே (புரட்சி என்பது ஆக மிகக் கடுமையான வகைப்பட்ட யுத்தமாகும்) முட்டாள் தனத்துக்குத் தண்டனை தோல்வியேயாகும்.

''மகத்தான, வெற்றிகரமான, உலகப்'' புரட்சியானது புரட்சிகரமான செயல்முறைகளை மட்டுமே பயன்படுத்த முடியும், பயன்படுத்தித் தீரவேண்டும் என்று கற்பித்துக் கொள்வதற்கு ஆதாரங்கள் என்ன? ஒன்றுமே கிடையாது. அது முற்றிலும் பொய். நாம் மார்க்ஸீயத்தைப் பற்றி நின்றால் சுத்தமான தத்துவார்த்தக் கருத்துரைகளைக் கொண்டே அது நிரூபிக்கப்படுகிறது. நம் புரட்சியின் அனுபவமும் அது பொய் என்று புலப்படுத்துகிறது. தத்துவப் பார்வை நிலையிலிருந்து பார்த்தால், மற்றக் காலங்களைப் போலவே புரட்சிக் காலத்திலும் முட்டாள்தனமான காரியங்கள் செய்யப்படுகின்றன என்று எங்கெல்ஸ் சொன்னார், அவர் சொன்னதும் சரிதான். முட்டாள்தனமான காரியங்களைச் சாத்தியமான வரைக்குக் குறைவாக நாம் செய்ய வேண்டும், செய்தவற்றையும் சாத்தியமான வரைக்குத் துரிதமாகத் திருத்திக் கொள்ள வேண்டும்; எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்தில் புரட்சிகரமான செயல்முறைகளைக் கொண்டு எந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று சாத்தியமானவரை நிதானப் புத்தியோடு நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். நம் சொந்த நடைமுறை அனுபவத்தின் பார்வை நிலையிலிருந்து பார்த்தால்— பிரேஸ்த் சமாதானம் என்கிற செயல் உதாரணம் சிறிதேனும் புரட்சிரமானதல்ல, அது சீர்திருத்த வகைப்பட்டது, அதைவிட மோசமானதுங்கூட; ஏனெனில் அது ஒரு பின் வாங்கலாகும்; ஆனால் பொது விதியாகச் சீர்திருத்தவாதச் செய்கையென்பது மெதுவாக, எச்சரிக்கையாக, படிப்படியாக முன்னேறுகிறது, பின்னோக்கிச் செல்கிறதில்லை. பிரேஸ்த் சமாதானத்தில் கையெழுத்திட்டதில் நம் செயல் தந்திரம் சரி என்பதற்கான நிரூபணம் அதைப்பற்றி மேற்கொண்டு எதுவும் சொல்லத் தேவையில்லை என்கிற அள

வுக்கு முழுமையாகவும் எல்லோருக்கும் வெளிப் படையான தாகவும் பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்டதாயும் இருக் கிறது.

நூல்திரட்டு, தொகுதி *44*

''பிராவ்தா'', இதழ் *251*,
*1921*, நவம்பர் *6—7*

கையொப்பம்: நி. லெனின்

# நி. இ. புகாரினுக்கும் கி. யெ. ஸினோவியேவுக்கும் எழுதிய கடிதம்

1922, பிப்ரவரி 1

தோழர்கள் புகாரினுக்கும் ஸினோவியேவுக்கும்,

இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களுடனும் நடக்கும் மாநாட்டில்[84] கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலைப் பிரதிநிதித்துவப்படுத்த மிகவும் கூரிய நாபடைத்த நபர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி முன்கூட்டியே யோசித்தாக வேண்டும். இந்த மாநாட்டில் செயல்தந்திரம், போர்த்தந்திரம் பற்றிய பிரதானப் பிரச்சினைகளையும் முன் கூட்டியே பரிசீலிக்க வேண்டும்.

மாநாட்டில் பங்குகொள்கிற தரப்பு ஒவ்வொன்றின் ஒப்புதலோடு மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே ஆலோசித்து கேள்விக்கிடமில்லாமல் வகுக்கப்பட வேண்டும். மூன்று தரப்புகளில் ஒவ்வொரு தரப்பின் அதிகார பூர்வமான பத்திரிகை அறிக்கைகளில் சர்ச்சைக்கிடமற்றது என்று அங்கீகரிக்கப்பட்டுள்ள துறைகள் எவையோ அத்துறைகளில் தொழிலாளி வர்க்க மக்கள் திரள்களின் நடைமுறைக் கூட்டு நடவடிக்கைகளோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகளை மட்டுமே நாம் இந்த நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு ஐக்கிய முன்னணியின் நலன்களை உத்தேசித்து நாம் ஏன் இந்தப் பிரச்சினைகளோடு நிறுத்திக் கொள்கிறோம் என்று முழுமையாக விளக்கிச் சொல்ல வேண்டும். மஞ்சள் கனவான்கள்[85] விவாதத்துக்கு இடமான அரசியல் பிரச்சினைகளை—உதாரணமாக, மென்ஷெவிக்குகளைப் பற்றிய கண்ணோட்டம், ஜார்ஜியா பற்றி, முதலியவை—முன்வைக்க நேருமானால் நம் செயல்தந்திரம் பின்வருமாறு இருக்க வேண்டும்: 1) பங்குகொள்கிற மூன்று தரப்பினரின் ஒருமனதான முடிவுப்படிதான் நிகழ்ச்சி நிரலை வருக்க முடியும் என்று பிரகடனப்படுத்துவது; 2) தொழிலாளி வர்க்க மக்கள் திரளின் செயலொற்றுமை—அடிப்படையான அரசியல் வேறுபாடுகள் இருந்தபோதிலும் அப்படிப்பட்ட

ஒற்றுமையை உடனடியாகச் சாதிக்க முடியும்—ஒன்று தான், ஒன்று மட்டுமே, நிகழ்ச்சி நிரலே வகுப்பதில் நமக்கு வழி காட்டி நின்றது என்று பிரகடனப்படுத்துவது; 3) மென் ஷெவிக்குகள் பற்றிய கண்ணேட்டம், ஜார்ஜியா பற்றிய பிரச்சினைகளையும் மேலும் இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்கள் சொல்லும் வேறெந்தப் பிரச்சினைகளை யும் நாம் எழுப்ப முற்ருகத் தயாராக இருக்கிறோம்; ஆனல் அதற்கு நிபந்தனையாக அவர்கள் பின்வரும் பிரச்சினைகளை எழுப்ப ஒப்புக்கொள்ள வேண்டும் என்று பிரகடனப்படுத்து வது: 1) பாஸெல் கொள்கையறிக்கையைக் கைவிட்டோடும் இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் நிலையைப் பற்றி; 2) இந்தக் கட்சிகள் ஆதரித்து நிற்கும் பூர்ஷ்வா அரசாங்கங்கள் மூலமாக லுக்ஸம்பர்க், லீப்க் னெஹ்ட், இன்னும் பிற ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் படு கொலை செய்யப்பட்டதில் இந்தக் கட்சிகள் உடந்தையா யிருப்பது பற்றி; 3) இந்த இரண்டாவது, இரண்டரை யாவது இன்டர்நேஷனல்கள் ஆதரிக்கிற பூர்ஷ்வாக் கட்சிகள் காலனி நாடுகளில் புரட்சிக்காரர்களைப் படுகொலை செய் வதைக் குறித்து இந்தக் கட்சிகளின் அதேமாதிரியான நிலையைப் பற்றி, என்றவாறு. இந்தப் பிரச்சினைகள், இதே போன்ற மற்ற பிரச்சினைகள், குறித்து நாம் முன்கூட்டியே ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும்; மேலும் இப்பிரச்சினை களில் சில அதி முக்கியமானவை பற்றி ஆய்வுரைகளையும் சொற்பொழிவாளர்களையும் முன்கூட்டியே தயாரிக்க வேண் டும்.

புரட்சி எதிர்ப்பு உலக பூர்ஷ்வா வர்க்கத்தின் கூட்டணி யில் ஒத்திசைவின்றியும் ஊசலாட்டத்துடனும் பங்கெடுத் துவருபவர்கள் என்று மட்டுமே நாம் இரண்டாவது, இரண் டரையாவது இன்டர்நேஷனல்களைக் கருதுகிறோம் என்றும், மக்கள் திரளின் நேரடி நடவடிக்கைகளில் நடைமுறை ஒற்றுமையைச் சாதிப்பதற்காகவும், நம் நிலையின் அரசியல் தவற்றை அம்பலப்படுத்துவதற்காகவும் அவை (இரண்டா வது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்கள்) நம்மோடு ஒரு மாநாட்டில் கலந்து கொள்வது போலவே நாமும் மக் கள் திரளின் நேரடி நடவடிக்கைகளில் சாத்தியமான நடை முறை ஒற்றுமையைச் சாதிப்பதற்காகவும், இரண்டாவது,

இரண்டரையாவது இன்டர்நேஷனல்கள் எடுத்துள்ள நிலை முழுவதின் அரசியல் தவற்றை அம்பலப் படுத்துவதற்காகவும் நாம் ஒரு ஐக்கிய முன்னணிக்கான மாநாட்டில் கலந்து கொள்கிறோம் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்குரிய வாய்ப்பை நாம் தேடிக் கொள்ள வேண்டும்.

லெனின்

நூல்திரட்டு, தொகுதி 44

*1922*, பிப்ரவரி 21ல்,
போனில் செய்யப்பட்டது

*1959*ல், ''லெனின் திரட்டுக்கள் XXXVI"ல்
முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது

# நாம் அதிக விலை கொடுத்துவிட்டோம்

ஓரளவுக்குப் பெருந்திரளான தொழிலாளர்கள் கூடியிருக்கும் பொதுக்கூட்டத்தில் பூர்ஷ்வாவர்க்கத்தின் ஏஜெண்டுகள் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் ஒரு மண்டபத்துக்குள் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதி ஒருவர் நுழைய விரும்புகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த மண்டபத்துக்குள் நுழைவதற்கு அனுமதிக்க பூர்ஷ்வாக்கள் நம்மிடம் அதிக விலை கேட்பதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். முன் கூட்டியே விலை விஷயத்தில் உடன்பாடு ஏற்படாதிருக்குமேயானால் நம் கட்சி நிதி மீது மிதமிஞ்சிய சுமை விழாது தடுக்க வேண்டி நாம் பேரம் பேசித் தீர வேண்டும் என்பது உறுதி. இந்த மண்டபத்துக்குள் நுழைய நாம் மிதமிஞ்சி விலை கொடுத்திருந்தோமானால் நாம் சந்தேகத்திற்கிடமின்றித் தவறு செய்தவர்களாவோம். ஆனால், சீர்திருத்தவாதிகளின்—அதாவது, பூர்ஷ்வா வர்க்கத்தின் மிகவும் விசுவாசமுள்ள நண்பர்களின்—''பிடிப்பில்'' என்று சொல்லத் தக்கவகையில் முற்றாக இதுவரை இருந்து வந்த தொழிலாளர்களிடம் பேசுவதற்கான ஒரு வாய்ப்பை நிராகரிப்பதைவிட அதிக விலை கொடுப்பதே மேல்—முறையாக நாம் பேரம் பேசக் கற்றுக் கொள்கிறவரையிலாயினும்.

மூன்று இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகளிடை ஏற்பட்ட உடன்பாட்டின் ஷரத்துக்களைத் தெரிவிக்கும் பெர்லினிலிருந்து வந்த செய்தியை இன்றைய ''பிராவ்தாவில்'' நான் படித்தபோது இந்த உதாரணம் என் மனதில் உதித்தது.

என் அபிப்பிராயத்தில் நமது பிரதிநிதிகள் பின்வரும் இரண்டு நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டது தவறு: முதலாவதாக, நாற்பத்தேழு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் வழக்கில்[86] சோவியத் ஆட்சி மரணதண்டனை விதிக்காது; இரண்டாவதாக, அந்த வழக்கு விசாரணையில் பிரசன்னமா

யிருக்க மூன்று இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகளுக்கும் சோவியத் ஆட்சி அனுமதியளிக்கும்.

இந்த இரண்டு நிபந்தனைகளும் பிற்போக்கான பூர்ஷ்வாக்களுக்குப் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் தந்த ஒரு அரசியல் சலுகையே தவிர வேறில்லை. இந்த வரையறுப்பை யாரேனும் சந்தேகித்தால், அப்போது, அந்த நபரின் அரசியல் அப்பாவித்தனத்தை வெளிப்படுத்துவதற்காக, பின்வரும் கேள்வியைப் போட்டாலே போதும்: புரட்சிக் கலகங்களுக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அயர்லாந்து தொழிலாளர்களின் வழக்கு விசாரணையில் மூன்று இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருக்க பிரிட்டிஷ் அரசாங்கமோ வேறெந்த நவீன அரசாங்கமோ அனுமதிக்குமா? அல்லது, தென் ஆப்பிரிக்காவில் சமீபத்தில் நடந்த கலகத்தில் சம்பந்தப்படுத்தப்பட்ட தொழிலாளர்களின் வழக்கு விசாரணையிலாவது அனுமதிக்குமா? இந்த, அல்லது இவைபோன்ற, சந்தர்ப்பங்களில், தனது அரசியல் எதிராளிகளுக்கு மரண தண்டனை விதிக்க மாட்டேன் என்று வாக்குறுதி அளிக்க பிரிட்டிஷ் அரசாங்கமோ வேறெந்த அரசாங்கமோ ஒப்புக்கொள்ளுமா? இந்தப் பிரச்சினையைப்பற்றிச் சிறிது சிந்தித்துப்பார்த்தாலே போதும், பின்வரும் எளிய உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்: உலகெங்கும் பிற்போக்கான பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே ஒரு போராட்டம் நடந்து வருகிறது. இந்த வழக்கில், இந்தப் போராட்டத்தில் ஒரு தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் மற்றொரு தரப்புக்கு—அதாவது, பிற்போக்கான பூர்ஷ்வா வர்க்கத்துக்கு—ஒரு அரசியல் சலுகை தருகிறது. ஏனெனில், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் கம்யூனிஸ்டுகளைச் சுட்டிருக்கிறார்கள், அவர்களை எதிர்த்துக் கலகங்களை உருவாக்கி இருக்கிறார்கள், அவர்கள் இதை யதார்த்தத்தில், சில சமயங்களில் சம்பிரதாயமாகவே, பிற்போக்கான சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணி வைத்துக்கொண்டு செய்திருக்கிறார்கள் என்று உலகிலுள்ள எல்லோருக்கும் (வெளிப்படையான உண்மையை மறைக்க விரும்புகிறவர்களைத் தவிர) தெரியும்.

இந்தக் கேள்வி எழுகிறது: அதற்குப் பிரதியாக சர்வ தேச பூர்ஷ்வா வர்க்கம் நமக்கு என்ன சலுகை சந்திருக்கிறது? இந்தக் கேள்விக்கு ஒரே பதில்தான் இருக்க முடியும், அதாவது எந்தச் சலுகையும் அது நமக்குத் தரவில்லை.

வர்க்கப் போராட்டத்தின் எளிய, தெளிந்த உண்மையை மழுப்பிமறைக்கிற, திரளான தொழிலாளர்களின், பிற உழைப்பாளி மக்களின் கண்களில் மண்ணைப் போடுகிற வாதங்களைக் கொண்டு மட்டுமே இந்த வெளிப்படையான உண்மையை மறைக்க முடியும். மூன்றும் இன்டர்நேஷனலின் பிரதிநிதிகள் பெர்லினில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் கீழ் நாம் உலக பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இரண்டு சலுகைகளைத் தந்திருக்கிறோம். பிரதியாக நமக்கு ஒரு சலுகையும் கிடைக்கவில்லை.

பூர்ஷ்வா வர்க்கத்தின் நன்மைக்காகப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து ஒரு அரசியல் சலுகையைப் பலவந்தப்படுத்திப் பெறும் கயவாளிகளாக இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகள் நடந்து கொண்டார்கள்; அதே சமயத்தில் அவர்கள் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கு ஏதாவது அரசியல் சலுகை தரும்படி சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூண்ட அழுத்தந்திருத்தமாக மறுத்து விட்டார்கள், அல்லது எப்படியிருப்பினும் முயற்சியொன்றும் செய்யவில்லை. உண்மைதான், இந்த மறுக்க முடியாத உண்மையை பூர்ஷ்வா இராஜதந்திரத்தின் புத்தி கூர்மையுள்ள பிரதிநிதிகள் (பலநூற்றுண்டுகளின் போக்கிலே பூர்ஷ்வா வர்க்கம் தன் வர்க்கப் பிரதிநிதிகளை நல்ல ராஜ தந்திரிகளாகப் பயிற்றுவித்திருக்கிறது) மழுப்பி மறைத்தார்கள், என்றாலும், உண்மையை மூடிமழுப்பும் முயற்சி அதைச் சிறிதும் மாற்றிவிடாது. இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் பல்வேறு பிரதிநிதிகள் பூர்ஷ்வா வர்க்கத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ உறவுகொண்டிருக்கிறார்களா என்பது பத்தாந்தர முக்கியத்துவமுள்ள விஷயமாகும். நேரடியாக அவர்கள் உறவு கொண்டிருப்பதாக நாம் குற்றஞ்சாட்டவில்லை. நேரடியான உறவு இருந்திருக்கிறதா அல்லது மிகவும் சிக்கலான, மறைமுகமான உறவு இருந்திருக்கிறதா என்கிற கேள்விக்கும் இந்த வழக்குக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. இரண்டாவது,

இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகள் நிர்ப்பந்தப்படுத்தியதின் விளைவாகக் கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனல் ஒரு அரசியல் சலுகையை உலக பூர்ஷ்வா வர்க் கத்துக்குத் தந்தது, பிரதியாக ஒரு சலுகையும் பெறவில்லை என்கிற ஒரு விஷயமே இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகும்.

இதிலிருந்து எடுக்க வேண்டிய முடிவு என்ன?

முதலாவதாக, கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலைப் பிரதி நிதித்துவப்படுத்திய தோழர்கள் ராதேக், புகாரின், மற்ற வர்கள் தவருக நடந்து கொண்டார்கள்.

மேலும், அவர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை நாம் கிழித்தெறிய வேண்டும் என்ரு இதிலிருந்து பெறப்படு கிறது? இல்லை. அப்படிப்பட்ட முடிவுக்கு வருவது தவருக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒப்பந்தத்தை நாம் கிழித்தெறியலாகாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் இந்தத் தடவை பூர்ஷ்வா ராஜதந்திரிகள் நமது ராஜதந்திரி களை விடச் சாதுரியமுள்ளவர்களாகக் காட்டிக் கொண்டார் கள் என்று உணர்வதும், அடுத்த தடவை—முன்கூட்டியே நுழைவதற்குரிய விலை நிர்ணயிக்கப்படாவிட்டால்—சாம் மேலும் சாதுர்யமாகப் பேரம் பேசவும் தந்திரோ பாயமாக நடக்கவும் வேண்டும் என்பதும்தான். சோவியத் ருஷ்யாவுக்கோ, முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடி வரும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் பிற படை களுக்கோ ஏறத்தாழ சமமதிப்புள்ள சலுகைகள் பிரதியாகக் கிடைத்தாலொழிய சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எந்த அரசியல் சலுகையும் (இடைத்தரகர்கள்—அவர்கள் யாராக இருந்தாலும் சரி—எவ்வளவுதான் இந்தச் சலுகைகளைச் சாதுரியமாக மறைத்தாலும்) தரலாகாது என்பது ஒரு விதியாக அமைய வேண்டும்.

மேற்சொன்ன வாதங்களிலிருந்து ஐக்கிய முன்னணிச் செயல்தந்திரங்களே தவறு என்று ஐக்கிய முன்னணிச் செயல் தந்திரங்களை எதிர்த்து வந்துள்ள இத்தாலியக் கம்யூனிஸ்டு களும் பிரெஞ்சு கம்யூனிஸ்டுகளின், சிண்டிகலிஸ்டுகளின் ஒரு பகுதியினரும் ஒருவேளை முடிவுக்கு வரலாம். ஆனல் அப்படிப்பட்ட முடிவு வெளிப்படையாகத் தவருனதாகும்.

இதுவரை சீர்திருத்தவாதிகளின் முற்றன ''உடைமையாக'' இருந்து வந்திருக்கிற தொழிலாளர்களிடம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு—அது சிறு வாய்ப்பாக இருந்தாலும் சரியே—கிடைக்கும் படியாயுள்ள மண்டபத்துக்குள் நுழையக் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகள் மிதமிஞ்சியவிலை கொடுத்திருந்தால், அப்படிப்பட்ட தவற்றை அடுத்த தடவை திருத்திக் கொண்டு தீர வேண்டும். ஆனல் ஓரளவுக்கு நெருக்கமாகப் பந்தோபஸ்து செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ள இந்த மண்டபத்துக்குள் நுழைவதற்குரிய எல்லா ஷராக்களையும் அல்லது எல்லா செலவினத்தையும் நிராகரிப்பது அதை விட எவ்வளவோ பெரிய தவருக இருக்கும். தோழர்கள் ரதேக், புகாரின், மற்றவர்கள் செய்தது கொடிய தவறல்ல; குறிப்பாக பெர்லின் மாநாட்டின் விளைவுகள் சில நபர்களைக் கொல்ல இரண்டு மூன்று வெற்றிகரமான முயற்சிகள் செய்யுமாறு சோவியத் ருஷ்யாவின் விரோதிகளை உற்சாகப்படுத்தக் கூடும் என்கிற ஒரு அபாயம் மட்டுமே நமக்கு ஏற்படுகிறது. ஏனெனில் பெர்லின் மாநாட்டைப்போன்ற மாநாடுகள் தங்களைச் சுட்டுக் கொல்வதினின்று கம்யூனிஸ்டுகளைத் தடுக்கும் என்கிற எதிர்பார்ப்பில் தாங்கள் கம்யூனிஸ்டுகளைச் சுட்டுக்கொல்லலாம் என்று முன்கூட்டியே அவர்கள் தெரிந்திருக்கிருர்கள்.

எப்படியிருப்பினும், நமக்கு அடைப்புத்தாழ் போட்டிருந்த மண்டபத்துக்குள் நுழைய வழி செய்துகொண்டு விட்டோம். எப்படியிருப்பினும், ஆர்ப்பாட்டத்தின் கோஷங்களில் வெர்ஸேய் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் கோரிக்கையைச் சேர்த்துக்கொள்ள இரண்டாவது இன்டர்நேஷனல் மறுத்துவிட்ட விஷயத்தை, தொழிலாளர்களில் ஒரு பகுதியினரிடையிலாவது, அம்பலப்படுத்துவதில் தோழர் ராதேக் வெற்றி பெற்றிருக்கிருர். இத்தாலியக் கம்யூனிஸ்டுகளும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளின், சிண்டிகலிஸ்டுகளின் ஒரு பிரிவினரும் செய்கிற ஆகமிகப் பெரிய தவறு ஏற்கெனவே தங்களிடமுள்ள அறிவோடு அவர்கள் திருப்திப்பட்டிருப்பதுதான். இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகளும், திருவாளர்கள் பாவுல் வெவீயும் செராட்டியும் மற்றவர்களும் பூர்ஷ்வா வர்க்கத்தின் மிகப் புத்திகூர்மையுள்ள பிரதிநிதிகள், அதன் செல்வாக்கைக்

கொண்டு செல்கிறவர்கள் என்று நன்கு தெரிந்திருப்பதோடு அவர்கள் திருப்தியடைகிறார்கள். ஆனால் இதை உண்மையிலே அறிந்திருக்கிற, இதன் குறிபொருளை உண்மையிலே புரிந்து கொண்டிருக்கிற மக்களும் தொழிலாளிகளும் சந்தேகமின்றி இத்தாலியிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரான்சிலும் சிறுபான்மையினரேயாவார்கள். கம்யூனிஸ்டுகள் தங்கள் கூட்டுக்குள் தங்களை அடைத்துக் கொண்டு இருக்கக்கூடாது, தொழிலாளர்கள் மீது பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதிநிதிகள் செல்வாக்கு செலுத்திவரும் தடைசெய்யப்பட்ட இடங்களுக்குள் ஊடுருவக் கற்கவேண்டும்; இதில் அவர்கள் சில தியாகங்கள் செய்யப் பின்வாங்கக்கூடாது, தவறுகள் செய்வதில் பயப்படவும்கூடாது. ஒவ்வொரு புதிய, கஷ்டமான, காரியத்திலும் தவறுகள் துவக்கத்தில் தவிர்க்க முடியாதவையாகும். இதைப் புரிந்து கொள்ள மறுக்கும், இதை எப்படிச் செய்வதென்று கற்றுக் கொள்ள விரும்பாத கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களில் பெரும்பான்மையினரைத் தம் பக்கம் கொண்டுவருவோம் என்று நம்பிக்கை கொள்ளமுடியாது; எப்படியிருப்பினும் இந்தப் பெரும்பான்மையைப் பெறும் காரியத்தை அவர்கள் தடங்கல் செய்கிறார்கள், தாமதப்படுத்துகிறார்கள். கம்யூனிஸ்டுகளுக்கும் தொழிலாளி வர்க்கப் புரட்சியின் உண்மையான சார்பாளர்களுக்கும் இது மன்னிக்க முடியாத விஷயமாகும்.

மீண்டும் பூர்ஷ்வா வர்க்கம் தன் ராஜதந்திரிகளின் மூலமாகக் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் பிரதிநிதிகளைச் சாதுரியத்தில் வென்றுவிட்டது. பெர்லின் மாநாட்டின் படிப்பினை இதுதான். இந்தப் படிப்பினையை நாம் மறக்கப் போவதில்லை. அதிலிருந்து தேவையான எல்லா முடிவுகளும் எடுத்துக் கொள்வோம். இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் பிரதிநிதிகளுக்கு ஒரு ஐக்கிய முன்னணி தேவைப் படுகிறது, ஏனெனில் நம்மை மிதமிஞ்சிய சலுகைகளைத் தருமாறு தூண்டி நம்மைப் பலவீனப்படுத்தலாம் என்று நம்புகிறார்கள்; எந்த விலையும் கொடாமலே நமது கம்யூனிஸ்ட் மண்டபத்துக்குள்ளே ஊடுருவலாம் என்று நம்புகிறார்கள்; சீர்திருத்தவாதச் செயல்தந்திரங்கள் சரி, புரட்சிகரமான செல்தந்திரங்கள் தப்பு என்று தொழிலாளர்களை நம்பச் செய்யும் நோக்கத்திற்காக ஐக்கிய முன்னணிச் செயல்

தந்திரத்தை அவர்கள் பயன்படுத்தலாம் என்று நம்புகிறுர்கள். அதன் எதிர்மறையைத் தொழிலாளர்கள் ஏற்கச் செய்யலாம் என்று நாம் நம்புவதால் நமக்கு ஒரு ஐக்கிய முன்னணி தேவைப்படுகிறது. தவறுகளுக்குரிய பழியை அவற்றைச் செய்த நமது கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் மீதும், அவற்றைச் செய்கிற கட்சிகள் மீதும் போடுவோம். அதே பொழுதில் இந்தத் தவறுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முயல்வோம், எதிர்காலத்தில் அவை மீண்டும் நிகழாவண்ணம் தடுக்க முயல்வோம். ஆனல் எந்தச் சூழ்நிலைமையிலும் நமது கம்யூனிஸ்டுகளின் தவறுகளுக்காகப் பாட்டாளிவர்க்க மக்கள் திரள் மீது பழியைச் சுமத்தமாட்டோம்; அவர்கள் முன்னேறிவரும் முதலாளித்துவத்தின் தாக்குதலை உலகெங்கும் எதிர் கொண்டிருக்கிறுர்கள். இந்த மக்கள் திரள்கள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதில் உதவும் பொருட்டும், சர்வதேசப் பொருளாதாரத்திலும் சர்வதேச அரசியலிலும் உள்ள இரண்டு முனைகள் எனும் ''தந்திரமான பொறியை'' அவர்கள் புரிந்து கொள்வதில் உதவும் பொருட்டும், நாம் ஐக்கிய முன்னணிச் செயல்தந்திரத்தை மேற்கொண்டோம்; இந்தச் செயல்தந்திரத்தை இறுதிவரை நாம் பின்பற்றித் தீருவோம்.

நூல்திரட்டு, தொகுதி 45

*1922*, ஏப்ரில் *9*ல்
போன் செய்யப்பட்டது

''பிராவ்தா'', இதழ் *81*ல்
*1922*, ஏப்ரில் *11*ல் பிரசுரிக்கப்பட்டது

**கையொப்பம்: லெனின்**

## கி. யெ. ஸினோவியேவுக்கு எழுதிய கடிதம்

### என்பதிலிருந்து

**1922, ஏப்ரில் 11**

இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்கள் பற்றிய விமர்சனத்தின் தன்மை இப்பொழுது கொஞ்சம் மாற்றப்பட வேண்டும். அதாவது: அது இன்னும் விளக்க பூர்வமாக இருக்க வேண்டும் (குறிப்பாக இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களை ஆதரிக்கிற தொழிலாளர்கள் வருகிற கூட்டங்களிலும், அவர்களுக்கான விசேஷத் துண்டுப்பிரசுரங்களிலும், கட்டுரைகளிலும்); பெர்லினில் அவர்களின் பிரதிநிதிகள் மேற்கொண்டுள்ள கோஷங்களுக்கும் (உதாரணமாக: மூலதனத்தை எதிர்த்துப் போராட்டம், எட்டு மணிநேர வேலைநாள், சோவியத் ருஷ்யாவுக்கு ஆதரவு, பட்டினி கிடப் போர்க்கு உதவி), மொத்தமான சீர்திருத்தவாதக் கொள்கைக்கும் இடையேயுள்ள சமரசப் படுத்த இயலாத முரண்பாடுகளைக் குறிப்பான பொறுமையுடனும், முழுமையாகவும், கூர்மையான சொற்களால் பயமுறுத்தி விரட்டாமலும், இந்தத் தொழிலாளர்களுக்கு விளக்க வேண்டும்.

நூல்திரட்டு, தொகுதி 45

*1922, ஏப்ரில் 11ல்,*
*போன் செய்யப்பட்டது*

*1959ல், ''லெனின் திரட்டுக்கள் XXXVI''ல்*
*முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது*

# ‘‘பிராவ்தாவின்’’ பத்தாம் ஆண்டுவிழா

சட்ட பூர்வமான—ஜாரிஸ்ட் சட்டத்தின் கீழ் சட்ட பூர்வமான—போல்ஷெவிக் தினத்தாளான ‘‘பிராவ்தா’’ நிறுவப்பட்டுப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இந்தப் பத்தாண்டுக்கு முந்தி சுமார் மற்ெருரு பத்தாண்டு காலம்—போல்ஷெவிஸம் தோன்றியதிலிருந்து நாம் கணக்கிட்டால் ஒன்பது ஆண்டுகள் (1903—1912), அல்லது, முற்றிலும் ‘‘போல்ஷெவிக்’’ போக்குள்ள பழைய ‘‘இஸ்க்ரா’’ (1900) நிறுவப்பட்டதிலிருந்து நாம் கணக்கிட்டால் பதின்மூன்று ஆண்டுகள் (1900—1912)—கழிந்துள்ளது.

ருஷ்யாவில் ஒரு போல்ஷெவிக் தினத்தாள் பிரசுரமாகிப் பத்தாண்டுகள் சென்றுள்ளன.... பத்தே ஆண்டுகள்! ஆனல் நமது போராட்டத்தையும் இயக்கத்தையும் கொண்டு அளந்தால் இந்தப் பத்தாண்டுகள் ஒரு நூறு ஆண்டுகளுக்குச் சமம். ஐரோப்பிய பிலிஸ்டைன்களின், இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் வீரர்களின், பழைய கெஜக்கோலைக் கொண்டு அளந்தால், சென்ற ஐந்தாண்டுகளின் சமுதாய வளர்ச்சியின் வேகம் உண்மையிலே மலைக்கச் செய்வதாயுள்ளது காலனிகளிலும், அரைச்சார்புள்ள, படுமோசமான ஏழ்மையிலுள்ள நாடுகளிலும் கோடானுகோடி மக்கள் (சரிநுட்பமாகச் சொன்னல், நூறு கோடிக்கு மேல்) இந்தியர்களும் சீனர்களும் நடத்தப்படுவதைச் சகித்துக் கொண்டிருக்கும் ஒரு நிலைமை ‘‘இயற்கைதான்’’ என்று கருதுவது இந்த நாகரிகமடைந்த பிலிஸ்டைன்களுக்குப் பழக்கம். அந்த மக்கள் நம்பவொண்ணுத சுரண்டலையும் அப்பட்டமான கொள்ளையையும் பட்டினியையும் பலாத்காரத்தையும் அவமானத்தையும் சகித்துக் கொள்கிருர்கள்—எல்லாம் எதற்காகவென்ருல், கொள்ளையடித்ததை அமைதி வழியிலே பிரித்துப்பங்கிட்டுக் கொள்வதா அல்லது இந்த ஏகாதிபத்

தியக் கொள்ளையை, நேற்று ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும், நாளை ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் (பிரான்சும் பிரிட்டனும் ஏதாவது ஒரு வடிவத்தில் பங்கெடுக்க) பிரித்துப்பங்கிடுவதில் ஒரு கோடியோ இரண்டு கோடியோ மனிதர்கள் கொல்லப்பட வேண்டுமா என்று ''நாகரிகமுள்ள'' மனிதர்கள் ''சுயேச்சையாக'', ''ஜனநாயகபூர்வமாக'', ''பாராளுமன்ற வேலை முறைப்படி'' முடிவு செய்வதற்காக.

உலக வளர்ச்சியின் இந்தப் பிரம்மாண்டமான வேக அதிகரிப்புக்கு அடிப்படைக் காரணம் மேலும் பல கோடிக் கணக்கான பேர் அதனுள் ஈர்க்கப்பெற்றிருப்பதுதான். பிரபஞ்சத்தின் மையம் என்று தன்னைக் கருதிப் பழக்கப்பட்டுப் போன பழைய பூர்ஷ்வா, ஏகாதிபத்திய ஐரோப்பா அழுகி, சீழ்பிடித்த புண்ணைப் போல் முதலாவது ஏகாதிபத்திய யுத்தத்தில் உடைந்தது. ஷ்பெங்கிளர்களும், ஷ்பெங்கிளரை மெச்சவோ (படிக்கவோ) முடிகிற எல்லாக் கற்றறிந்த பிலிஸ்டைன்களும் எவ்வளவுதான் ஒப்பாரி வைத்தாலும் சரி, ஏகாதிபத்தியக் கொள்ளையாலும் உலக மக்கள்தொகையில் பெரும்பான்மையினரை அடக்கும் ஒடுக்கமுறையாலும் மிதமிஞ்சி உண்டு தெவிட்டிப்போன உலக பூர்ஷ்வா வர்க்கத்தின் வீழ்ச்சி வரலாற்றில் பழைய ஐரோப்பாவின் நசிவு என்பது ஒரு உபகதைதான்.

அந்தப் பெரும்பான்மையினர் இப்பொழுது விழித்துக் கொண்டு விட்டார்கள், ''யாவற்றிலும் விறல்மிக்க'' வல்லரசுகளாலும் தடுத்து நிறுத்தமுடியாத ஒரு இயக்கத்தை அவர்கள் தொடங்கிவிட்டார்கள். வல்லரசுகளுக்கு வெற்றி வாய்ப்பே கிடையாது. ஏனெனில், முதலாவது ஏகாதிபத்திய இரத்தக்களரியின் இன்றைய ''வெற்றியாளர்களிடம்'' சிறிய—சின்னஞ்சிறு என்றும் நான் சொல்லக்கூடும்—அயர்லாந்தைத் தோற்கடிக்கவும் கூட பலம் இல்லை; தங்களுக்கிடையிலேயே நிலவும் நிதிநிலைக் குழப்பத்திலிருந்து வெற்றிகரமாக வெளியே வரவும் அவற்றால் முடியவில்லை. இடையே, இந்தியாவும் சீனவும் கொந்தளித்துக் கொண்டுள்ளன. அவை எழுபது கோடிக்கு மேலான மக்களைக் கொண்டிருக்கின்றன. எல்லா வழிகளிலும் தம்மை ஒத்திருக்கிற அண்டையிலுள்ள ஆசிய நாடுகளையும் சேர்த்தால் உலக மக்கள் தொகையில்

பாதிக்கு மேலாக உள்ளவர்களை அவை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. தடுக்கமுடியாதபடி, அதிகரிக்கும் வேகத்தில் அவை தம்முடைய 1905ஐ நெருங்கிக் கொண்டிருக்கின்றன; இதிலுள்ள பிரதானமான, முக்கியமான வேறுபாடு, 1905ல் ருஷ்யாவின் புரட்சி (ஆரம்பத்திலாயினும்) தனிமையில் போய்க்கொண்டிருக்க முடிந்தது, அதாவது மற்ற நாடுகள் உடனடியாக இழுத்து விடப்படாமலே. ஆனால் இந்தியாவிலும் சீனவிலும் பக்குவப்பட்டு வருகிற புரட்சிகள், புரட்சி கரமான போராட்டத்தில் புரட்சிகரமான இயக்கத்தில், உலகப் புரட்சியில், இழுக்கப்பட்டு வருகின்றன அல்லது ஏற்கெனவே இழுக்கப்பட்டுள்ளன.

சட்ட பூர்வமான போல்ஷெவிக் தினத் தாளாகிய ''பிராவ்தாவின்'' பத்தாம் ஆண்டுவிழா, மிக மகத்தான உலகப் புரட்சியின் வேக அதிகரிப்பின் ஒரு முக்கியக் கட்டத்தைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. 1906-07ல், ஜாராட்சி 'ரட்சியை முற்றுக நசுக்கிவிட்டதாகத் தோன்றியது. சில ஆண்டுகள் கழித்து போல்ஷெவிக் கட்சி—வேறொரு வடிவத்தில், வேறொரு வழியில்—விரோதியின் கோட்டைக் குள்ளேயே ஊடுருவி தினந்தோறும், ''சட்டபூர்வமாக'', சாபத்தீடான ஜாரிஸ்ட், நிலப்பிரபுத்துவ யதேச்சாதிகாரத்தை உள்ளுக்குள்ளிருந்தே குழிபறிக்கும் தன் வேலையைச் செய்து கொண்டுபோக முடிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன, போல்ஷெவிஸத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றிபெற்றது.

பழைய ''இஸ்க்ராவை'' 1900ல் நிறுவுவதில் பத்தே பத்துப் புரட்சிக்காரர்களே பங்கு கொண்டனர்; 1903ல் பிரஸ்ஸல்ஸிலும் லண்டனிலும் கூடிய சட்டவிரோதமான காங்கிரஸ்களில் போல்ஷெவிஸத்தின் பிறப்பின்போது சுமார் நாற்பது பேர் வந்திருந்தார்கள்.

1912-13ல் சட்டபூர்வமான போல்ஷெவிக் ''பிராவ்தா'' தோன்றியபோது, அதற்கு லட்சக்கணக்கான தொழிலாளர்களின் ஆதரவு இருந்தது, அவர்கள் சிறுசிறு நிதியுதவிகள் அளித்து ஜாரிஸத்தின் ஒடுக்குமுறையையும் சோஷலிஸத்தைக் காட்டிக் கொடுக்கும் குட்டிபூர்ஷ்வா துரோகிகளான மென்ஷெவிக்குகளின் போட்டியையும் வெல்ல முடிந்தது.

1917 நவம்பரில், அரசியல் நிர்ணய சபைத்தேர்தல்களில்

மொத்தம் மூன்று கோடி அறுபது லட்சம் வோட்டர்களில் 90 லட்சம் வோட்டர்கள் போல்ஷெவிக்குகளுக்கு வோட்டளித்தார்கள். ஆனால் தேர்தல்கள் மட்டும் அல்லாமல் யதார்த்தத்திலும் போராட்டப் போக்கிலும் 1917ல் அக்டோபர் முடிவிலும் நவம்பரிலும், சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸில்[87] பிரதிநிதிகளில் பெரும்பான்மையினரும், உழைப்பாளி மக்களில் மிகமிகச் செயலுள்ள, அரசியல் உணர்வுள்ள பகுதியாகிய ஒரு கோடி இருபது லட்சம் பேர் கொண்ட இராணுவத்தில் பெரும்பான்மையினரும் பிரதிநிதித்துவப்படுத்திய முறையில், போல்ஷெவிக்குகளுக்குப் பாட்டாளி வர்க்கத்தினதும் அரசியல் உணர்வு பெற்ற விவசாயிகளினதும் பெரும்பான்மை இருந்தது.

சென்ற இருபது ஆண்டுகளில் உலகப் புரட்சியின் ''வேக அதிகரிப்பைக்'' காட்டும் இந்தப் புள்ளிகள் ஒரு சிறிய, முழுமையற்ற சித்திரத்தைத்தான் தருகின்றன. 15 கோடிக்கு மேற்படாத மக்கள் சமூகத்தின் வரலாற்றைப்பற்றி ஒரு சுமாரான கருத்தை மட்டுமே அவை தருகின்றன; ஆனால் இதே இருபது ஆண்டுகளில் நூறு கோடிக்கு மேல் ஜனத்தொகையுள்ள நாடுகளில் (ஆசியா முழுவதும்; தென் ஆப்பிரிக்காவையும் மறக்கவேண்டாம்—அது அண்மையில் தனக்கு அடிமை வாழ்க்கை அல்லாது மனிதவாழ்க்கை வேண்டுமென்கிற கோரிக்கையைப் ''பாராளுமன்ற வகைப்பட்டது'' என்று முற்றுகச் சொல்ல முடியாத வழிகளில் உலகத்துக்கு நினைவுபடுத்தியது) தொடங்கி ஒரு வெல்லமுடியாத சக்தியாகப் புரட்சி வளர்ந்திருக்கிறது.

சில ஷ்பெங்ளிளர்வாதி வேடிக்கைப் பிறவிகள்—இந்தச் சொல்லுக்கு மன்னிக்க—புரட்சிகரமான சக்திகளைப் பற்றிய இந்த மதிப்பீடு ஐரோப்பிய, அமெரிக்கப் பாட்டாளிவர்க்கத்தைக் கணக்கில் எடுக்கத் தவறுகிறது என்று முடிவு கட்டக் கூடும் (இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் ''கெட்டிக்காரத்தனமான'' தலைவர்களிடமிருந்து எல்லா வகையான முட்டாள்தனத்தையும் எதிர்பார்க்க முடியும்). கருவுற்ற பிறகு பத்து மாதங்கள் கழித்துக் குழந்தை பிறக்கிறது என்கிறதை வைத்துக்கொண்டு பிரசவம் எத்தனை மணிக்கு எந்த நிமிஷத்தில் நிகழும் என்றும், பிறக்கும்போது குழந்தை எந்த வாட்டில் பிறக்கிறது என்

றும், தாயின் நிலைமை, தாயும் சேயும் அனுபவிக்கிற வேதனையும் அபாயமும் கஞராக எந்த அளவுக்கு என்றெல்லாம் முன் கூட்டியே சொல்லிவிட முடியும் என்ற வகையில் இந்த ''கெட்டிக்காரத்தனமான'' தலைவர்கள் எப்போதும் வாதிக்கிறார்கள். நிரம்ப ''கெட்டிக்காரத்தனம்தான்''! சர்வதேசப் புரட்சி வளர்ச்சியின் பார்வை நிலையிலிருந்து பார்த்தால் சார்ட்டிஸத்திலிருந்து[88] ஒரு ஹென்டெர்ஸனின் அடிபணியும் தன்மைக்கு வந்த மாற்றமும், வார்லேனிலிருந்து ரெனொடேலுக்கு வந்த மாற்றமும், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட், பெபெலிலிருந்து ஸூடெக்குமுக்கும் ஷீடெமனுக்கும் நோஸ்கேக்கும் வந்த மாற்றமும், நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமான வழவழப்பான நெடுஞ்சாலையை விட்டு, சில கெஜ தூரம் நீள முள்ள ஒரு அசிங்கமான நாற்றமடிக்கும் சாக்கடைக் குழியை நோக்கி ஒரு கார் போகிறதோடு மட்டுமே ஒப்பிட முடியும் என்பதை இந்தக் கனவான்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

வரலாற்றைப் படைப்பது மனிதர்களே. ஆனால் சார்ட்டிஸ்டுகளும், வார்லேன்களும், லீப்க்னெஹ்டுகளும் அதைத் தம்முடைய மனத்தாலும் நெஞ்சத்தாலும் படைக்கிறார்கள். இரண்டாவது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் தலைவர்கள் உடம்பின் வேறொரு பகுதியைப் பயன்படுத்தி அதைப் ''படைக்கிறார்கள்''; புதிய சார்ட்டிஸ்டுகளும் புதிய வார்லேன்களும், புதிய லீப்க்னெஹ்டுகளும் தோன்றுவதற்கு அவர்கள் மண்ணுக்கு உரமிடுகிறார்கள்.

இந்த மிகமிகக் கஷ்டமான தருணத்தில், புரட்சிக்காரர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதில் இறங்குவது மிகமிகத் தீங்காகும். போல்ஷெவிஸம் ஒரு சர்வதேசச் சக்தி ஆகியிருக்கிற போதிலும், எல்லா நாகரிகமுள்ள, முன்னேறிய நாடுகளிலும் புதிய சார்ட்டிஸ்டுகளும், புதிய வார்லேன்களும், புதிய லீப்க்னெஹ்டுகளும் முன்னுக்கு வந்து சட்டபூர்வமான (பத்தாண்டுகளுக்கு முன் ஜார் ஆட்சியின் கீழ் ''பிராவ்தா'' இருந்த அதே அளவுக்குச் சட்டபூர்வமான) கம்யூனிஸ்ட் கட்சிகளில் வளர்ந்து வருகிறபோதிலும், தற்சமயத்துக்கு, சர்வதேச பூர்ஷ்வா வர்க்கம் தன்னுடைய வர்க்க விரோதியைவிட ஒப்பிடமுடியாத அளவுக்கு அதிக பலத்துடன் இருந்து வருகிறது. ருஷ்யாவில் பாட்டாளி

வர்க்க அதிகாரம் பிறப்பதைத் தடங்கல் செய்யவும், அந்தப் பிறப்பையொட்டி வந்த அபாயங்களையும் துன்பங்களையும் பத்துமடங்காகப் பெருக்கிவிடவும் தன் சக்தியால் ஆன மட்டும் செய்து பார்த்த இந்தப் பூர்ஷ்வா வர்க்கம் தனது வெள்ளைப்படை யுத்தங்கள், ஏகாதிபத்திய யுத்தங்கள், முதலியவற்றின் மூலமாகப் பல கோடிக்கணக்கான மக்களை வேதனையிலும் சாவிலும் ஆழ்த்தித் தீர்க்கும் நிலையில் இன்னும் இருந்து வருகிறது. இதை நாம் மறக்கலாகாது. இந்தக் குறிப்பிட்ட நிலைமைக்குத் தகுந்த மாதிரி நாம் நமது செயல் தந்திரங்களைத் திருத்திச் சரி செய்து கொள்ளவேண்டும். பூர்ஷ்வா வர்க்கம் இன்னமும் சுதந்திரமாகத் துன்புறுத்தவும் சித்திரவதை செய்யவும் கொல்லவும் முடிகிறது. ஆனால் தவிர்க்க முடியாதபடி, துரிதமாக—உலக வரலாற்றின் நிலையிலிருந்து பார்க்கும்போது, துரிதமாக—நெருங்கிக் கொண்டிருக்கும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் முழுமையான வெற்றியை அது தடுத்து நிறுத்த முடியாது.

*1922, மே 2*

நூல்திரட்டு, தொகுதி *45*

*''பிராவ்தா'', இதழ் 98,*
*1922, மே 5*

கையொப்பம்: **நி. லெனின்**

# நமது புரட்சி

## (நி. ஸுகானவின் குறிப்புக்கள் சம்பந்தமாக)

### I

புரட்சியைப் பற்றிய ஸுகானவின் குறிப்புக்களை அண்மையில் நான் புரட்டிப் படித்துக் கொண்டிருந்தேன். நம் கண்ணை அதிகமாகக் கவர்வது நம் குட்டிபூர்ஷ்வா ஜனநாயக வாதிகள் அனைவரின் சடங்குப் பற்றும், இரண்டாம் இன்டர்நேஷனலின் வீரர்கள் அனைவரின் சடங்குப் பற்றுமே ஆகும். அவர்கள் அத்தனை பேரும் மிகவும் பயந்தாங் கொள்ளிகள் என்பது ஒருபுறமிருக்க, ஜெர்மன் முன்மாதிரியிலிருந்து அற்ப அளவுக்கேனும் திரிந்து செல்வதென்று ஏற்பட்டால் அவர்களில் மிகச் சிறந்தவர்கள்கூட வில்லங்க நிபந்தனைகள் போட்டுத் தங்களை அரண்செய்துகொள்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, எல்லாக் குட்டிபூர்ஷ்வா ஜனநாயகவாதிகளுக்கும் பொதுவாயும் புரட்சி நெடுகிலும் அவர்கள் அபரிமிதமாகக் காட்டிக்கொண்டிருக்கிறதாயும் உள்ள இந்தக் குணக்குறி ஒருபுறமிருக்க, நம் கண்ணைக் கவர்வதாயிருப்பது அவர்கள் சென்ற காலத்தை அடிமைப்புத்தியோடு காப்பியடிப்பதுதான்.

அவர்கள் அனைவரும் தங்களை மார்க்ஸீயவாதிகள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். ஆனால் மார்க்ஸீயத்தைப் பற்றிய அவர்களின் கருத்தோட்டம் சகிக்க முடியாத அளவுக்குச் சடங்குப் பற்று வாய்ந்ததாயுள்ளது. மார்க்ஸீயத்தில் நிர்ணயமாயுள்ளதை—அதாவது, அதன் புரட்சிகரமான இயக்க இயலை—அவர்கள் முற்றாகப் புரிந்து கொள்ளத்தவறி விட்டார்கள். புரட்சிக் காலத்தில் அதிகப்பட்சமான நீக்குப் போக்கு தேவைப்படுகிறது என்கிற மார்க்ஸின் தெளிவான கூற்றுகளையும்கூட அவர்கள் முற்றாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்; உதாரணமாக, தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் ஜெர்மனியில் புரட்சிகரமான ஒரு நிலைமையைப் படைக்கத்தக்க ஒரு விவசாயிப் போரை இணைக்கும் நம்பிக்

கையைத் தெரிவித்து மார்க்ஸ் தன் கடிதங்களில்—1856ல் என்று நினைக்கிறேன்—சொன்ன கூற்றைக்கூட[80] அவர்கள் பார்க்கத் தவறியிருக்கிறார்கள்—இந்தத் தெளிவான கூற்றையும் எதிர்கொள்ளாமல் விலகியோடுகிறார்கள், சூடான பாயசக் கிண்ணத்தைச் சுற்றிச் சுற்றி பூனை வருவதுபோல வந்துகொண்டிருக்கிறார்கள்.

பூர்ஷ்வா வர்க்கத்தை விட்டு முறித்துக் கொண்டுவந்து விடுவது ஒருபுறமிருக்க, அவ்வர்க்கத்திடமிருந்து திரிந்து செல்லவும் பயப்படுகிற பயங்கொள்ளித்தனமான சீர்திருத்தவாதிகளாக அவர்களின் நடத்தை அவர்களைக் காட்டிக் கொடுக்கிறது; அதே நேரத்தில் அவர்கள் அதீதமான அலங்காரச் சொற்களாலும் வாயளப்பாலும் தங்களுடைய பேடித்தனத்தை மறைத்துவைக்கிறார்கள். ஆனால் வெறுமே தத்துவார்த்த நிலையிலிருந்து பார்க்கும் போதுங் கூட பின்வரும் மார்க்ஸீயக் கருத்துக்களை அவர்கள் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒவ்வொருவரிடமும் காண்கிறோம்: இதுவரை மேலைய ஐரோப்பாவில் முதலாளித்துவமும் பூர்ஷ்வா ஜனநாயகமும் ஒரு திட்டவட்டமான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றக் கண்டார்கள். இந்தப் பாதையை mutatis mutandis* மட்டுமே, சில திருத்தங்களோடு மட்டுமே (உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சி நிலையிலிருந்து பார்த்தால் அவை அற்பமானவை) முன் மாதிரியாகக் கொள்ள முடியும் என்று அவர்களால் சிந்திக்க முடியவில்லை.

முதலாவதாக, முதல் ஏகாதிபத்திய யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட புரட்சி. இப்படிப்பட்ட புரட்சி புதிய குணாம்சங்களை அல்லது வேறுபாடுகளை வெளிப்படுத்தியே தீரும்; யுத்தத்திலிருந்து அவை விளைந்தவை; ஏனெனில் இப்படிப்பட்ட நிலைமைகளில் இப்படிப்பட்ட ஒரு யுத்தத்தை என்றைக்கும் உலகம் கண்டதில்லை. இந்த யுத்தத்திற்குப் பிறகு மிகமிகப் பணக்கார நாடுகளைச் சேர்ந்த பூர்ஷ்வாக்கள் இன்றைய நாள் வரை ''சகஜமான'' பூர்ஷ்வா உறவுகளை மீண்டும் நிலைநிறுத்த முடியாமலிருக்கின்றனர். அப்படியிருந்தும் நமது சீர்திருத்தவாதிகள்—புரட்சிக்காரர்களாக வேஷம்

* —தக்க மாற்றங்களோடு.—(ப-ர்.)

போடும் குட்டிபூர்ஷ்வாக்கள்—சகஜமான பூர்ஷ்வா உறவு கள்தாம் வரம்பாகும் (அது வரை நீ போகலாம், அதைத் தாண்டிப் போகக் கூடாது) என்று நினைத்தார்கள், இன்னும் நினைத்து வருகிறார்கள். ''சகஜநிலை'' பற்றிய அவர்கள் கருத்துப்போக்கும்கூட மிகவும் ஒரே மாதிரியாயும் குறுகிய தாயும் இருக்கிறது.

இரண்டாவதாக, மொத்தத்தில் உலக வரலாற்றின் வளர்ச்சி யானது பொதுவான விதிகளைப் பின்பற்றிச் செல்வதா யிருப்பினுங்கூட, சில குறிப்பிட்ட வளர்ச்சிக் காலப்பகுதி கள் வடிவத்திலோ இந்த வளர்ச்சியின் கால ஒழுங்கிலோ தனிச்சிறப்புக்களைக் காட்டிக்கொள்ளக்கூடும் என்பது எவ் விதத்திலும் விளக்கிவைக்கப்பட்ட விஷயமல்ல, பதிலாக அனு மானிக்கப்பட்டதேயாகும்; ஆனால் இந்தக் கருத்து இவர் களுக்கு முற்றாகப் புதிதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, நாகரிக நாடுகளுக்கும் நாகரிகத்தின் வட்டப்பாதைக்குள் முதல்முதலாக யுத்தம் திட்டவட்டமாக இழுத்துக் கொண்டு வந்திருக்கிற நாடுகளுக்கும்—அதாவது, கிழக்கத்திய, ஐரோப் பாவைச் சேராத நாடுகள் எல்லாவற்றுக்கும்—இடையிலுள்ள எல்லைக் கோட்டில் ருஷ்யா நிற்கிற காரணத்தால், ருஷ்யா சில தனிக் குணம்சங்களைக் காட்டிக் கொள்ள முடியும், காட் டியே தீரும் என்று அவர்கள் புத்தியில் படுவதுமில்லை. இந்தக் குணம்சங்கள் உலக வளர்ச்சியின் பொதுப் போக்குடன் ஒத்துப் போகிறதாக நிச்சயமாக இருக்கிற போதிலும் அவை அதன் புரட்சியை மேலைய ஐரோப்பாவில் நடந்தவற்றினின்று வேறு படுத்திக் காட்டுகின்றன, கிழக்கத்திய நாடுகளுக்குப் புரட்சி செல்லச் செல்ல அவை சில அரைகுறையான புதுமை களையும் புகுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக, மேலைய ஐரோப்பிய சோஷல்-டெமாக் ரஸி வளர்ந்தபோது அவர்கள் மனப்பாடமாகக் கற்றுக் கொண்ட வாதம் எல்லையின்றி ஒரே அச்சில் வார்த்ததாக இருக்கிறது; அதாவது, நாம் இன்னும் புரட்சிக்குப் பக்குவ மடையவில்லையாம், அவர்களில் சில ''படித்த'' கனவான் கள் சொல்வதுபோல சோஷலிஸத்துக்கு வேண்டிய புறநிலை யான பொருளாதார நிலைமைகள் நம் நாட்டில் இல்லையாம். ஆனால் முதலாவது ஏகாதிபத்திய யுத்தத்தின்போது சிருஷ் டிக்கப் பட்டது போன்ற ஒரு புரட்சிகரமான நிலைமையில்

அகப்பட்டுக்கொண்ட ஒரு மக்கள் சமூகத்தின் விஷயம் எப்படி என்று கேள்வி கேட்டுக் கொள்ள அவர்களில் ஒருவருக்குக்கூடத் தோன்றவேயில்லை. நாகரிகத்தை மேலும் வளர்த்துக் கொள்வதற்கான, ஓரளவுக்குப் புதுமையான, நிலைமைகளைப் பெறுவதற்குக் கொஞ்சமேனும் வாய்ப்பு தரும்படியாயிருக்கும் ஒரு போராட்டத்தில், வேறு வழியற்றுப் போன நிலையில், அது குதிக்கக் கூடாதா என்ன?—

—''சோஷலிஸத்தைச் சாத்தியமாக்கத் தக்க தரத்தை ருஷ்யாவின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி எட்டவில்லை''. இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த அத்தனை வீரர்களும்—நிச்சயமாக ஸுகானவும் உட்படத்தான்—இந்தக் கருத்துரையை வைத்துப் பறையறைகிறார்கள். பல்வேறு ஸ்ருதிகளில் இந்த மறுக்கமுடியாத கருத்துரையைத்திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள், அதுவே நம் புரட்சிக்கு நிர்ணயமான அளவுகோல் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், சூழ்நிலையின் சிறப்புத்தன்மை காரணமாக, முதலாவது,ஓரளவேனும் செல்வாக்குள்ள ஒவ்வொரு மேற்கு ஐரோப்பிய நாடும் கலந்துகொண்டிருக்கும் ஏகாதிபத்திய உலக யுத்தத்தில் ருஷ்யா இழுத்து விடப்பட்டால், கிழக்கே பக்குவப்பட்டு வந்த, அல்லது அரைகுறையாக ஏற்கெனவே தொடங்கி விட்ட புரட்சிகள் வரும் நிலையில் பிரஷ்யாவுக்குச் சாத்தியப்பாடுள்ள ஒருவழி என்று மார்க்ஸ் என்கிற ''மார்க்ஸீயவாதியே'' 1856ல் கூறிய ''விவசாயிப் போருடன்'' தொழிலாளி வர்க்க இயக்கத்தை இணைக்கும் அதே இணைப்பை நம்மால் சாதிக்க முடிந்த நிலைமைகளில் ருஷ்யாவின் வளர்ச்சி வைக்கப்பட்டால் என்ன செய்வது?

முற்றாக வேறு வழியற்றுப்போன நிலைமையால் தொழிலாளர்களின் விவசாயிகளின் முயற்சிகள் பத்துமடங்காகத் தூண்டப்பட்டு, மேலைய ஐரோப்பிய நாடுகளினின்று மாறுபட்ட பாதையில் நாகரிகத்துக்குரிய அடிப்படையான முன்தேவைகளைப் படைப்பதற்கு நமக்கு வாய்ப்பு தந்தால் என்ன செய்வது? அது உலக வரலாற்று வளர்ச்சியின் பொதுப் போக்கை மாற்றிவிட்டதா? உலக வரலாற்றின் பொதுப் போக்கில் இழுத்துவிடப்பட்டுவருகிற, இழுத்துவிடப்பட்டுள்ள, எல்லா நாடுகளினுடையவும் அடிப்படையான

வர்க்கங்களிடையேயுள்ள அடிப்படையான உறவுகளை மாற்றி விட்டதா?

சோஷலிஸத்தை நிர்மாணிக்க ஒரு குறித்த பண்பாட்டுத் தரம் தேவையானல் (எனினும் அந்தக் குறித்த ''பண் பாட்டுத் தரம்'' என்னவென்று யாராலும் சொல்ல முடியாது, ஏனெனில் அது ஒவ்வொரு மேலை ஐரோப்பிய நாட்டிலும் வெவ்வேருயிருக்கிறது), நாம் ஏன் அந்தப் பண்பாட்டுத் தரத்துக்குரிய முன்தேவைகளை முதலில் ஒரு புரட்சிகரமான வழியில் சாதிப்பதில் தொடங்கி அதன் பிறகு தொழிலாளர்-விவசாயிகளினது ஆட்சியின் உதவியோடும் சோவியத் அமைப்பின் உதவியோடும் பிறநாடுகளை எட்டிப் பிடித்து முந்திக் கொள்ள முன்வர முடியாது?

*1923, ஜனவரி 16*

## II

சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு நாகரிகம் வேண் டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நிரம்பவும் சரி. ஆனல் நிலப்பிரபுக்களையும் ருஷ்ய முதலாளிகளையும் வெளியேற்று வது போன்ற நாகரிகத்துக்கு வேண்டிய முன்தேவைகளை நாங்கள் ஏன் முதலில் சிருஷ்டி செய்துகொண்டு பிறகு சோஷ லிஸத்தை நோக்கிப் போகக்கூடாது? எங்கே, எந்தப் புத்தகங் களில், வழக்கமான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கில் இப் படிப்பட்ட மாறுபாடுகள் அனுமதிக்கத்தகாதவை, சாத்திய மற்றவை என்று படித்திருக்கிறீர்கள்?

நெப்போலியன் எழுதினர் என்று நினைக்கிறேன்: "On s'en gage et puis... on voit" என. கட்டின்றி மொழிபெயர்த்தால் இதற்கு அர்த்தம்: ''முதலில் ஒரு தீவிரமான சண்டையில் இறங்கு, பிறகு என்ன நடக்கிறது என்று பார்'' என்பது. சரி, நாம் முதலில் 1917, அக்டோபரில் ஒரு தீவிரமான சண் டையில் இறங்கத்தான் செய்தோம். அதன்பிறகு பிரேஸ்த் சமாதானம், புதிய பொருளாதாரக் கொள்கை முதலான வளர்ச்சி விபரங்களை (உலக வரலாற்றின் நிலையிலிருந்து பார்த்தால் அவை நிச்சயமாக விபரங்களே) பார்த்தோம். இப்போது பிரதானமாக நாம் வெற்றி பெற்ருேம் என்பதில் சந்தேகம் இருக்கவே முடியாது.

நமது ஸுகானவ்கள்—அதற்கும் வலதுசாரியாக நிற்கும் சோஷல்-டெமாக்ராட்டுகளைப் பற்றிப் பேச வேண்டியதே யில்லை—புரட்சிகளை வேறுவிதமாகவும் செய்ய முடியும் என்று என்றைக்கும் கனவுகூடக் காண்பதில்லை. இன்னும் அதிகமான ஜனத்தொகைகளையும் இன்னும் பெரிதாகச் சமுதாய நிலைமைகளின் வேறுபாடுகளையும் கொண்டிருக்கிற கிழக்கத்திய நாடுகளில் பின்னால் வரும் புரட்சிகள் ருஷ்யப் புரட்சி காட்டியதைவிட இன்னும் அதிகமான தனிச்சிறப்பு களைச் சந்தேகமின்றிக் காட்டும் என்று நமது ஐரோப்பியக் கிணற்றுத் தவளைகள் என்றைக்கும் கனவுகூடக் காண்ப தில்லை.

காவுத்ஸ்கி வழியில் எழுதப்பட்ட ஒரு பாடப்புத்தகம் அதன் காலத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று சொல்லத் தேவையில்லை. இருப்பினும், பின்னால் வந்த உலக வரலாற்றின் எல்லா வளர்ச்சி வடிவங்களையும் அது முன் கூட்டியே பார்த்தது என்கிற கருத்தைக் கைவிடவேண்டிய காலம் வந்துவிட்டது. அப்படி நினைக்கிறவர்கள் சுத்த முட்டாள்கள் என்று சொல்வதும் காலப் பொருத்தமாயிருக் கும்.

*1923, ஜனவரி 17*

நூல்திரட்டு, தொகுதி 45

*1923, மே 30ல்*
*''பிராவ்தா'', இதழ் 117ல்*
*பதிப்பிக்கப்பட்டது*

கையொப்பம்: **லெனின்**

# குறிப்புக்கள்

1 "'இடதுசாரிக்' கம்யூனிஸம் ஒரு பிள்ளைப் பிராயத்துக் கோளாறு" என்கிற நூல் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது காங்கிரஸ் தொடங்கும் தறுவாயில் லெனின் எழுதியதாகும்; அதன் ருஷ்யப் பதிப்பு 1920, ஜூன் 12ல் வெளியாயிற்று; பிரெஞ்சு, ஆங்கிலப் பதிப்புகள் ஜூலை மாதத்தில் வெளியாயின. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு அது கொடுக்கப்பட்டது; காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அதன் பெரு முக்கியமுள்ள கருத்துரைகளும் அடிப்படையாகப் பயன்படுத்தப் பட்டன.

பல மொழிகளில் திரும்பத் திரும்பப் பதிப்பிக்கப் பெற்ற இந்நூல் பரவலாக வினியோகிக்கப்பட்டிருக்கிறது.—7.

2 போல்ஷெவிக்குகளின்—லெனின் நிறுவிய ருஷ்யாவின் புரட்சிகரமான மார்க்ஸீயக் கட்சியின்—தத்துவத்தையும் செயல்தந்திரங்களையும் இது குறிக்கிறது.

ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் (1903) லெனினுடைய ஆதரவாளர்களுக்குப் (பெரும்பான்மையினர் எனப் பொருள்படும்) போல்ஷெவிக்குகள் என்னும் பெயர் தரப்பட்டது, ஏனெனில் அவர்கள் கட்சியின் தலைமை உறுப்புகளுக்கு நடந்த தேர்தல்களில் பெரும்பான்மை பெற்றனர். லெனினுடைய எதிராளிகளான சந்தர்ப்பவாதிகள் மென்ஷெவிக்குகள் என்று அழைக்கப் பட்டார்கள். நீண்டகாலத்துக்கு போல்ஷெவிக்குகளும் மென்ஷெவிக்குகளும் ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியிலே சம்பிரதாயத்துக்கு இரண்டு பிரிவுகளாக இருந்தனர் என்ருலும் உண்மையிலே இரண்டு தனித்தனிக் கட்சிகளாகவே அமைந்திருந்தனர். 1912, ஜனவரியில் ரு. சோ. டெ. தொ. கட்சியின் ஆருவது அகில ருஷ்ய மாநாட்டில் (பிராகா) இறுதியான முறிவு ஏற்பட்டது, அது சந்தர்ப்ப வாதி

களாகிய மென்ஷெவிக்குகளைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது.

*1918*, மார்ச் மாதத்தில் ரு. சோ. டெ. தொ. (போல்ஷெவிக்) கட்சியின் ஏழாவது காங்கிரஸ், கட்சியை ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சி என்று அழைப்பதென்று முடிவுசெய்தது. சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் யூனியன் அமைக்கப்பெற்ற பிறகு, *1925* டிசம்பரில் நடந்த பதினான்காவது கட்சிக் காங்கிரஸ் அந்தப் பெயரை சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சி என்று மாற்றியது. *1952* அக்டோபரில் கூடிய பத்தொன்பதாவது கட்சிக் காங்கிரஸ் அந்தப் பெயரை சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி என்று ஆக்கி விட்டது.—*8*.

3 இரண்டாவது இன்டர்நேஷனல் — சோஷலிஸ்ட் கட்சிகளின் ஒரு சர்வதேசச் சங்கம்; அது *1889*ல் நிறுவப்பெற்றது. ஏகாதிபத்திய சகாப்தம் வந்துள்ளதைத் தொடர்ந்து அதில் சந்தர்ப்ப வாதப் போக்குகள் மேலோங்கி ஆதிக்கம் வகிக்கத் தொடங்கின. *1914*ல் முதலாவது உலக யுத்தம் கிளம்பியபோது இரண்டாவது இன்டர்நேஷனலின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் தத்தம் நாடுகளைச் சேர்ந்த பூர்ஷ்வா அரசாங்கங்களின் ஏகாதிபத்தியக் கொள்கையை வெளிப்படையாக ஆதரித்தனர். இரண்டாவது இன்டர்நேஷனல் உடைந்து போயிற்று.—*8*.

4 ''இஸ்க்ரா'' (''தீப்பொறி'')—*1900*ல் லெனின் நிறுவிய, முதலாவது தேசரீதியான, சட்டவிரோதமான மார்க்ஸீயச் செய்தித்தாளாகும். அது ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மார்க்ஸீயக் கட்சியைப் படைப்பதில் நிர்ணயமான பாத்திரம் வகித்தது. அதன் முதல் இதழ் லைப்ஸிக் நகரில் அச்சடிக்கப்பட்டது; பின் வந்த இதழ்கள் மூனிச், லண்டன், ஜெனீவா நகரங்களிலிருந்து வெளியிடப் பெற்றன. ஆசிரியர்கள் வி. இ. லெனின், கி. வ. பிளெகானவ், யூ. ஒ. மார்த்தவ், பா. பொ. அக்ஸெல்ரோத், அ. நி. பத்ரேஸாவ், வே. இ. ஸஸூலிச் ஆவார்கள். காரியார்த்தத்திலே லெனினே அதன் தலைமையாசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தார். அவருடைய முன்முயற்சியால், அவர் நேரடியாகப் பங்குகொண்ட நிலையில், ''இஸ்க்ராவின்'' ஆசிரியர்கள் கட்சியின் வேலைத்திட்டத்தை வரைந்து ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்கு அடித்தளம்

தயாரித்தனர்; அது ருஷ்யாவிலே உண்மையிலே புரட்சிகரமான மார்க்ஸீயக் கட்சிக்கு அடிப்படை நிறுவியது.

கட்சியின் இரண்டாவது காங்கிரஸை (1903) விரைவிலே தொடர்ந்து மென்ஷெவிக் சந்தர்ப்பவாதிகள் ''இஸ்க்ரா'' நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஐம்பத்திரண்டாவது இதழ் தொடங்கி அந்தச் செய்தித்தாள் புரட்சிகரமான மார்க்ஸீயத்தின் வெளியீடாக இருந்த நிலை முடிவுற்றது.—*9*.

5 *1905-07*ல் ருஷ்யாவில் நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியை இது குறிக்கிறது.

ருஷ்யாவில் 1905-07ல் நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியானது ஏகாதிபத்தியச் சகாப்தத்தைச் சேர்ந்த, முதன்முதலில் வந்த மக்கள் ஈடுபாடுள்ள புரட்சியாகும். அது மக்களின் விரிந்த ஜனப்பகுதிகளைச் செயல் துடிப்புள்ள அரசியல் வாழ்வில் இழுத்துவிட்டது. போல்ஷெவிக்குகள் தலைமையில், ருஷ்யாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஜார்மன்னனின் யதேச்சாதிகார ஆட்சிமுறையை வீழ்த்தவும், நிலப்பிரபுத்துவ உடைமை முறையை ஒழிக்கவும், ஒரு ஜனநாயகக் குடியரசை நிலைநாட்டவும் போராடினார்கள். விவசாயி மக்களைத் தன் நேச சக்தியாகக் கொண்ட தொழிலாளி வர்க்கம் இந்தப் புரட்சியின் பிரதானமான வழிகாட்டும் சக்தியாகத் திகழ்ந்தது.

இந்தப் புரட்சியின் நிகழ்ச்சிப்போக்கிலே பல நகரங்களில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் முளைத்துக் கிளம்பின. ஆதியில் வேலைநிறுத்தங்களை வழிசெலுத்தி நடத்த நிறுவப்பெற்ற இவை படிப்படியாகத் தம்முடைய வேலைகளை விரிவாக்கிக் கொண்டன, உண்மையிலே அவை ஒரு புதிய வகைப்பட்ட அதிகாரத்தின் கருவுருக்களாகும், சோவியத் ஆட்சியின் ஆதி அச்சுகளாகும்.

*1905-07* புரட்சி ஐரோப்பாவில் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும், ஆசிய மக்கள் சமூகங்களின் தேச விடுதலை இயக்கங்களுக்கும் மாபெரும் உந்துவிசை தந்தது.—*16*.

6 *1912* ஏப்ரில் *4(17)*ம் தேதியில் லேனா தங்கவயல்களில் ஆயுதமற்ற வேலைநிறுத்தக்காரர்கள் மீது ஜாராட்சியின் துருப்புக்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை இது குறிக்கிறது. நாடெங்கும் கண்டன வேலை நிறுத்தங்கள் பற்றிக் கொண்டு பரவின, சுமார் மூன்று லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். 1912 மே தினத்தன்று நான்கு

லட்சம் தொழிலாளர் வரை வேலைநிறுத்தம் செய்தனர். —19.

7 இங்கு குறிக்கப்பட்ட 4ம் டூமாவின் பிரதிநிதிகளாகிய போல்ஷெவிக்குகள் அ. யெ. பதாயேவ், ம. கோ. முரானேவ், கி. இ. பெத்ரோவ்ஸ்கிய், பி.நி. ஸமோய்லோவ், நி. ரொ. ஷாகோவ் ஆகியோராவர். 1914, ஜூலை 26 (ஆகஸ்ட் 8)ல் நடந்த கூட்டத்தில், டூமாவில் இருந்த எல்லா பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவக் குழுக்களின் பிரதிநிதிகளும் ருஷ்யா ஏகாதிபத்திய யுத்தத்தில் இறங்கியதை ஒப்பி ஏற்றுக்கொள்ள, போல்ஷெவிக் குழு ஒரு அழுத்தந்திருத்தமான கண்டனத்தைப் பிரேரேபித்தது. அது யுத்தச் செலவினங்களுக்கு வோட்டளிக்க மறுத்து, மக்களுக்கிடையே புரட்சிகரமான பிரசாரத்தைக் கிளப்பி விட்டது. 1914 நவம்பரில் போல்ஷெவிக் பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டார்கள். 1915 பிப்ரவரியில் அவர்கள் விசாரிக்கப்பட்டுக் கிழக்கு சைபீரியாவிலுள்ள துருகான் பிரதேசத்தில் ஆயுட்காலம் முழுவதுக்கும் பலாத்காரக் குடியேற்றம் செய்யப்பட்டார்கள்.—19.

8 ருஷ்யாவிலிருந்து அரசியல் காரணத்திற்காக நாடுகடந்த போல்ஷெவிக்குகளின் நடவடிக்கைகளை லெனின் குறிப்பிடுகிறார்.—20.

9 முதலாவது உலக யுத்தம் மூண்டபோது தத்தம் ஏகாதிபத்திய அரசாங்கங்களை வெளிப்படையாக ஆதரித்த இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த சோஷலிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்களையும் (''சோஷல்-தேசபக்தர்கள்''), காவுத்ஸ்கிய மத்தியவாதிகளையும் (மத்தியவாதத்தின் பிரதான தத்துவாசிரியரான கா. காவுத்ஸ்கியின் பெயரை ஒட்டி இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள்) லெனின் குறிப்பிடுகிறார். இவர்கள் வெளிப்படையான சந்தர்ப்பவாதத்தோடு தங்களுக்கு இருந்த ஸ்தாபனத் தொடர்புகளை முறித்துக் கொள்ளாமல் புரட்சிகரமான மார்க்ஸீய கோஷங்களை ஒரு திரையாகப் பயன்படுத்தி வந்தனர்.—20.

10 லொங்கேவாதம் என்பது பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியில் ழான் லொங்கே என்பவர் தொடங்கி வைத்த ஒரு போக்கு. 1914-18ல் நிகழ்ந்த ஏகாதிபத்திய யுத்தத்தின் போது லொங்கேவாதிகள் புரட்சிகரமான போராட்டத்தை நிராகரித்து, சோஷல்-இனவெறியர்களுடன் சமரசமாகப் போகும் ஒரு கொள்கையைப் பின்பற்றினர்.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்றபோது அவர்கள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குச் சொல்லளவில் ஆதரவு நல்கினர் எனினும் தம்முடைய சீர்திருத்தவாதக் கருத்துக்களைக் கைவிடாது வைத்துக் கொண்டிருந்தனர்.—*20*.

11 பிரிட்டிஷ் சுயேச்சையான தொழிற்கட்சி [Independent Labour Party] *1893*ல் நிறுவப்பெற்றது. பூர்ஷ்வாச் சீர்திருத்த வாதக் கருத்துக்களைப் பற்றி நின்று, அது பாராளுமன்ற வகைப்பட்ட போராட்ட வடிவங்களின் மீதும், மித வாதக் கட்சியோடு பாராளுமன்றப் பேரங்கள் செய்து கொள்வதிலும் தன் கவனத்தை முழுக்கச் செலுத்தியது.

ஃபேபியன்கள் என்போர் ஃபேபியன் சங்கத்தின் [Fabian Society] உறுப்பினர்கள்; அச்சங்கம் *1884*ல் நிறுவப் பெற்ற ஒரு ஆங்கில நாட்டு சீர்திருத்தவாத ஸ்தாபன மாகும். அது ஃபேபியஸ் மாக்ஸிமஸ் என்பவரின் பெயரால் தன்னை அழைத்துக் கொண்டது; அவர் கி.மு. மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய ராணுவத் தலைவரா வார்; கார்தேஜுடன் நடந்த யுத்தத்தில் அவருடைய பொறுத்திருந்து பார்க்கும் போர்த்தந்திரங்களுக்காக வும் நிர்ணயமான சண்டைகளைத் தட்டிக் கழித்த மைக் காகவும் ''குன்க்டேடர்'' (''தாமதிப்பவன்'') என்கிற கேலிப்பெயர் சூட்டப்பெற்றவர். ஃபேபியன் சங்க உறுப் பினர்களில் மிகுதியான பேர் அறிவுஜீவிகள், பாட்டாளி கள் வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டியதில்லை என்று பிரகடனம் செய்து ஒரு சோஷலிஸ்ட் புரட்சியின் தேவையை அவர்கள் நிராகரித்தார்கள். முதலாளித்து வத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச்செல்வது ஒரு படிப்படியான, மெதுவான இயக்கப் போக்கு, பல்வேறு சீர்திருத்தங்களிலிருந்து உண்டாவது என்று அவர்கள் சாதித்தார்கள். *1900*ல் ஃபேபியன் சங்கம் தொழிற் கட்சியிலே கலந்துவிட்டது.—*20*.

12 மந்திரிப் பதவியேற்பு வாதம்—பிற்போக்கான பூர்ஷ்வா அரசாங்கங்களில் சோஷலிஸ்டுகள் பதவி வகிப்பதை நியாயப்படுத்தும் ஒரு சந்தர்ப்பவாதக் கோட்பாடு.—*21*.

13 ஜெர்மன் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி என்பது ஒரு மத்தியவாத ஸ்தாபனம்; அது *1917* ஏப்ரிலில் அமைக்கப்பெற்றது. ''சுயேச்சையாளர்கள்'' சோஷல்-இனவெறியர்களுடன் ஒன்றுபடுவதைப் பிரசாரம் செய் தார்கள், வர்க்கப் போராட்டத்தை நிராகரித்தார்கள்.

கட்சியின் அடிப்படைப் பகுதியாக விளங்கியது காவுத்ஸ்கீய் ஸ்தாபனமான ''உழைப்பாளர் நட்புக் குழு'' என்பது. 1920 அக்டோபரில், ஹாலே நகரில் நடந்த அதன் காங்கிரஸில் அந்தக் கட்சியில் பிளவு ஏற்பட்டது; 1920 டிசம்பரில் ''சுயேச்சையாளர்களில்'' ஒரு பெரும் பகுதியினர் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். வலதுசாரி நபர்கள் ஒரு தனிக் கட்சி அமைத்துக் கொண்டனர், அது ஜெர்மன் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி எனும் பழைய பெயரையே எடுத்துக் கொண்டது. அது 1922ல் கலைக்கப்பட்டது.—22.

14 சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் — ருஷ்யாவில் குட்டி பூர்ஷ்வாக் கட்சி; 1901 இறுதியிலும் 1902 தொடக்கத்திலும் தோன்றியது. அது நிலத்தின் மீதுள்ள தனியுடைமையை ஒழிக்க வேண்டும், சமத்துவரீதியான நிலப் பயன்பாட்டு முறையின் அடிப்படையில் கிராம சமுதாயத்திடம் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரியது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் தங்களை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொண்டபோதிலும், உண்மையிலே அவர்களுடைய வேலைத்திட்டம் சோஷலிஸ்ட் தன்மையுள்ளதல்ல, ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தின் அதிகாரத்தை நிலைநாட்டாமல், அடிப்படையான உற்பத்திச் சாதனங்களை (பாங்குகள், பெரிய தொழிற்சாலைகள், ரயில்வேக்கள்) அதன் வசமாக்காமல், நிலத் தனியுடைமையை ஒழிப்பதானது முதலாளித்துவச் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே எந்த வர்க்க வேறுபாட்டையும் பார்க்கவில்லை; விவசாயிகளுக்குள்ளேயே, உழைக்கும் விவசாயிகளுக்கும் பணக்கார விவசாயிகளாகிய குலாக்குகளுக்கும் இடையேயுள்ள வர்க்கப்படிகளையும் முரண்பாடுகளையும் காண மறுத்தனர், புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகித்துத்தீரவேண்டும் என்கிற கருத்தை அவர்கள் நிராகரித்தனர். அரசியலில் துர்ச்சாகசவாதம் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் ஒரு குணம்சமாக இருந்தது, ஜாராட்சி முறையை எதிர்க்கும் போராட்டத்தில் தனிநபர் பயங்கரவாதம் அவர்களின் பிரதான ஆயுதமாக இருந்தது.

1917 பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் மென்ஷெவிக்குகளும்தான் புரட்சி எதிர்ப்பு பூர்ஷ்வா-நிலப் பிரபுத்துவத் தன்மைபெற்ற தாற்காலிக அரசாங்கத்தின் பிரதான ஆதரவாளர்களாக இருந்தனர், அந்த

அரசாங்கத்தில் அதன் தலைவர்கள் அங்கம் வகித்தனர். நிலப்பிரபுத்துவ உடைமை முறையை ஒழிக்க வேண்டும் என்கிற விவசாயிகளின் கோரிக்கையை சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சி ஆதரிக்க மறுத்தது; தாற்காலிக அரசாங்கத்திலிருந்த சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளாகிய மந்திரிகள் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறித்துக் கொண்ட விவசாயிகளுக்கு எதிராகப் பழிதீர்க்கும் படைகளை அனுப்பினர்.

1917 நவம்பர் இறுதியில் அதன் இடதுசாரிப் பிரிவு சுயேச்சையான இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியை அமைத்தது.

ருஷ்யாவில் வெளிநாட்டு ராணுவக் குறுக்கீடும் உள்நாட்டு யுத்தமும் இருந்த காலத்தில் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் புரட்சி எதிர்ப்புச் சதிகள் செய்வதில் பங்கு கொண்டனர், சோவியத் அரசாங்கத்தின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கெதிராகப் பயங்கரவாதரீதியான நடவடிக்கைகளை உருவாக்கினர். —26.

15 ஸ்பார்ட்டாக்கிஸ்டுகள்—முதல் உலக யுத்தம் தோன்றிய போது ஜெர்மனியில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்ஸம்பர்க், பிரான்ஸ் மேரின்க், கிளாரா ஸெட்கின், யூலியன் மார்ஹ்லேவ்ஸ்கி, லியோன் யோகிகேஸ் (தீஷ்கா), வில்ஹெல்ம் பீக் ஆகியோர் அமைத்த ஒரு புரட்சிகரமான இடதுசாரி சோஷல்-டெமாக்ராட்டிக் ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள். அவர்கள் மக்களிடையே புரட்சிகரமான கருத்துக்களைப் பரப்பினர், மக்கள் திரளின் ஈடுபாடுள்ள யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை உருவாக்கினர், வேலைநிறுத்தங்களை இயக்கி நடத்தினர், யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மையையும் சோஷல்-டெமாக்ரஸியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களின் துரோகத்தையும் அம்பலப்படுத்தினர்.

1917 ஏப்ரிலில், ஸ்பார்ட்டாக்கிஸ்டுகள் ஜெர்மன் சுயேச்சை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியிலே சேர்ந்து கொண்டார்கள், அந்தக் கட்சியினுள்ளே தங்கள் ஸ்தாபன சுதந்திரத்தை வைத்துக் கொண்டார்கள். 1918 நவம்பரில், ஜெர்மனியில் புரட்சியின் நிகழ்ச்சிப் போக்கிலே அவர்கள் ''ஸ்பார்ட்டாகஸ் யூனியன்'' அமைத்துத் தங்களுடைய வேலைத்திட்டத்தை டிசம்பர் 14ல் வெளியிட்ட பிறகு ''சுயேச்சையாளர்களுடன்'' தொடர்பை முறித்துக் கொண்டார்கள். 1918, டிசம்பர் 30—1919, ஜனவரி 1ல் நடந்த தம்முடைய அமைப்புக் காங்கிரஸில்

அவர்கள் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தார்கள்.—27.

16 ஒட்ஸொவிஸ்டுகள், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' என்று பெயர்பெற்ற சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து நடந்த போராட்டத்தை இது குறிக்கிறது.

ஜார் அரசாங்கம் 1907ல் கூட்டிய மூன்றாவது டூமா அதற்கு முந்திய டூமாக்கள் எல்லாவற்றையும்விட மிகப் பிற்போக்கானதாயிருந்த போதிலுங்கூட புரட்சியின் தோல்வியையும் பிற்போக்கின் ஒரு காலப்பகுதியின் தொடக்கத்தையும் முன்னிட்டு போல்ஷெவிக்குகள் அதில் பங்கு கொள்வது தேவை என்று கருதினார்கள். மூன்றாவது டூமாவிலிருந்து சோஷல்-டெமாக்ராட்டிக் பிரதிநிதிகளை வாபஸ் பெறவேண்டுமென்றும், சட்டபூர்வமாக இயங்கிய தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், இன்னும் பிற ஸ்தாபனங்களோடு தொடர்பு முறித்துக் கொள்ள வேண்டும் என்றும் ''ஒட்ஸொவிஸ்டுகள்'' (''வாபஸ் பெற்றவர்கள்'' என்கிற பொருள் உள்ள ருஷ்யச் சொல்லிருந்து தோன்றியது இப்பெயர்) கோரினார்கள். இறுதி எச்சரிக்கைவாதம் என்பது ஒட்ஸொவிஸத்தின் ஒரு வகையேயாகும். சோஷல்-டெமாக்ராடிக் பிரதிநிதிகளோடு விடாமுயற்சியுடனும் அக்கறையுடனும் வேலை செய்து அவர்களை முரணற்ற, புரட்சிகரமான பாராளுமன்றத்தினராக நடந்து கொள்ளச் செய்வதின் அவசியத்தை உணராமல் இந்த இறுதி எச்சரிக்கைவாதிகள் டூமாவிலுள்ள சோஷல்-டெமாக்ராட்டிக் குழுவுக்கு ஒரு இறுதி எச்சரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அதற்கு இணங்கி நடக்க மறுத்தால் டூமாவிலிருந்து சோஷல்-டெமாக்ராட்டிக் பிரதிநிதிகளை வாபஸ் பெற வேண்டுமென்றும் விரும்பினார்கள்.

சோவியத் யூனியன் பிரேஸ்த் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுக்கும்'' இடையே தகராறுக்குரிய விஷயமாயிற்று.

ஜெர்மனியுடனும் அதன் நேசநாடுகளுடனும் கூட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றிய சோவியத் பிரேரணையை பிரான்சும் பிரிட்டனும் அமெரிக்காவும் நிராகரித்தபோது, யுத்தத்திலிருந்து ருஷ்யாவை மீட்டுக் கொண்டுவரச் செய்யும் முயற்சியிலே 1917 நவம்பரில் ஆஸ்திரோ-ஜெர்மன் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது என்று சோவியத் அரசாங்கம் தீர்மானித்தது. நவம்பர் 9ம் தேதியில், பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் நகரில், சமாதானப் பேச்சுக்கள் தொடங்கின. ஜெர்மன் பிரதிநிதிக் குழு கொடிய

பேரநிபந்தனைகளை வைத்தது. அவற்றின்படி ஜெர்மன் துருப்புக்கள் ஆக்கிரமித்து வசப்படுத்தியுள்ள போலந்து, லித்துவேனியா, எஸ்தோனியா, லாத்வியா, பெலோருஷ்யாவின் ஒரு பகுதி, ஆகியவற்றை ஜெர்மனி தன் நிர்வாகத்தில் வைத்திருக்கும், உக்ரேய்னு ஜெர்மனியைச் சார்ந்த நாடு ஆக வேண்டும். இந்தப் பேரநிபந்தனைகள் கொள்ளைக்காரத்தன்மை வாய்ந்தவையாக இருந்தபோதிலும் லெனின் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை வலுவாக வற்புறுத்தினர்; காரணம், இராணுவம் செயல் திறன் அற்றிருந்தது, கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாக நடந்து வந்த காட்டுமிராண்டித்தனமான, அறிவற்ற யுத்தத்திலே மக்கள் சலிப்புற்றிருந்தார்கள். சோவியத் ஆட்சி சோஷலிஸ நிர்மாணத்தில் இறங்கித் தொடங்கச் சக்தி பெறவேண்டி அதற்கு ஒய்வு கிடைத்தாக வேண்டும் என்று அவர் கருதினர். இந்தப் பிரச்சினையில் லெனினையும் அவருடைய ஆதரவாளர்களையும் த்ரோத்ஸ்கியும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்'' எதிர்த்தார்கள். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ஜெர்மனியை எதிர்த்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி, பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ள வேண்டும் என்று கோரினர்கள். சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கூடாது, ஆனல் யுத்தத்தை நிறுத்தி விட்டு இராணுவத்தைக் கலைத்துவிட வேண்டும் என்பது த்ரோத்ஸ்கியின் கருத்து. த்ரோத்ஸ்கியும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்'' கொண்டிருந்த கொள்கை ஏற்கப்பட்டிருந்தால் சோவியத் அரசுக்கு அழிவைத்தான் ஏற்படுத்தி இருக்கும்.

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடனும்'' த்ரோத்ஸ்கியுடனும் ஒரு நீடித்த, கடுமையான போராட்டத்தை நடத்தியபிறகு, லெனினும் அவருடைய ஆதரவாளர்களும் செய்த பிரம்மாண்டமான முயற்சியின் பலனுக ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் 1918 மார்ச் 3ம் தேதியன்று கையெழுத்தாயிற்று. இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது லெனினது செயல்தந்திரங்களின் விவேகத்துக்கும் நீக்குப் போக்குக்கும், வெகுசிக்கலான ஒரு நிலைமையில் ஒரு செவ்வையான கொள்கையை வகுக்கும் திறமைக்கு ஒரு வலுவான எடுத்துக்காட்டாகும். சோஷலிஸ்ட் நிர்மாணத்தைத் தொடங்கவும், புரட்சி எதிர்ப்பையும் வெளிநாட்டுத் தலையீட்டையும் எதிர்க்கும் போராட்டத்துக்கு வேண்டிய பலத்தைத் திரட்டிச் சேர்க்கவும் தேவைப்பட்ட ஒழிவை பிரேஸ்த் ஒப்பந்தம் சோவியத் அரசுக்குத் தந்தது. ஜெர்மனியில் 1918 நவம்பரில் நடந்த, முடியாட்சியை வீழ்த்தியெறிந்த

புரட்சிக்குப் பிறகு அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.—28.

17 புலீகின் டூமாவை (உள்நாட்டு மந்திரி புலீகின் என்பவரின் பெயரால் அழைக்கப்பட்டது) இது குறிக்கிறது. புரட்சியிலிருந்து மக்கள் திரளை வேறுபக்கம் திருப்பிவிடுவதற்காக 1905 ஆகஸ்ட் 6(19) சட்டத்தின் கீழ் ஜாராட்சி அதைக் கூட்டுவதற்கு முடிவு செய்தது. புலீகின் பிரேரேபித்த சட்டத்தின் கீழ் மக்கள் தொகையில் மிகப் பெரும் பகுதியினர் வோட்டுரிமை மறுக்கப்பட்டனர்; டூமாவுங்கூட ஒரு ஆலோசனைகூறும் ஸ்தாபனமாக மட்டுமே இருக்கும். புரட்சியின் எழுச்சிப்பெருக்கு புலீகின் டூமா கூட்டப்படுவதைத் தடுத்துவிட்டது.—29.

18 முதல் ருஷ்யப் புரட்சியின்போது 1905 அக்டோபரில் நடந்த தேசரீதியான அரசியல் வேலைநிறுத்தத்தை இது குறிக்கிறது. இருபது லட்சம் மக்களுக்கு மேலாக இதில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வீர்யத்தையும் சக்தியையும் நிரூபித்துக் காட்டியது, கிராமப்புறத்திலும் இராணுவத்திலும் கடற்படையிலும் புரட்சிப் போராட்டத்துக்கு ஒரு உத்வேகம் ஊட்டியது, பாட்டாளி வர்க்கத்தை ஒரு ஆயுதமேந்திய புரட்சியெழுச்சிக்குக் கொண்டு வந்துவிட்டது.—29.

19 லேபரைட்டுகள் [Labourites] — பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் [Labour Party] உறுப்பினர்கள். பாராளுமன்றத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளை வைக்கும் நோக்குடன் தொழிற்சங்கங்களையும் சோஷலிஸ்ட் ஸ்தாபனங்களையும் கொண்ட ஒரு நிறுவனமாக இது 1900ல் நிறுவப்பெற்றது தொடக்கத்திலிருந்தே தொழிற்கட்சியின் தலைவர்கள் பூர்ஷ்வாக்களுக்கு வர்க்க ஒத்துழைப்பு தரும் கொள்கையைப் பின்பற்றினர். 1914-18ல் நடந்த முதலாவது உலக யுத்தத்தின் போது தொழிற்கட்சித் தலைவர்கள் ஒரு சோஷல்-இனவெறிக் கொள்கையைப் பற்றி நின்றனர், அரசாங்கத்தில் மந்திரிப் பதவிகளை ஏற்றனர்; தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களைப் பிறப்பிக்கத் துணைநின்று உடந்தையாயிருந்து வந்தனர்.—32.

20 காடெட்டுகள்—அரசியல்சட்ட அமைப்பு-ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள்; இது ருஷ்யாவில் மிதவாதி-முடியாட்சிவாதி பூர்ஷ்வாக்களின் பிரதானக் கட்சியாகும். இந்தக் கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பெற்றது,

இது பூர்ஷ்வாக்கள், நிலப்பிரபுக்கள், பூர்ஷ்வா அறிவு ஜீவிகள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்டதாயமைந் திருந்தது. காடெட்டுகள் ஜாராட்சியுடன் உடன்பாடு செய்துகொள்வதில் ஆர்வங்காட்டி வந்தார்கள். அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட ஒரு முடியாட்சி படைக்கப் பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, ருஷ்யா ஒரு குடியரசாவதை எதிர்த்தார்கள். அவர்கள் நிலப்பிரபுத் துவ உடைமை முறையை நிலையாக வைத்திருப்பதை ஆதரித்தனர், புரட்சிகரமான இயக்கத்தை ஒடுக்க ஜாராட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை அங்கீகரித்தார்கள். முதலாவது உலக யுத்தத்தின் போது அவர்கள் ஏகாதிபத்தியத்தின் கொள்கைவாதிகளாக இருந்தார்கள்; ஜாராட்சியின் நாடுவிழுங்கும் கொள்கையை ஆதரித்தனர்.

மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்றபோது, எல்லாப் புரட்சி எதிர்ப்புச் செயல்களிலும், சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகத் தலையீட்டாளர்கள் நடத்திய யுத்தங்களிலும் காடெட்டுகள் பங்கு கொண்டார்கள்.—35.

21 ''இடதுசாரி எதிர்த்தரப்பின்'' கருத்துக்களை வகுத்து வைத்து ஜெர்மன் கம்யூனிஸ்டுகளின் குழு ஒன்று பிராங்புர்ட்-ஆன்-மாயின் என்கிற நகரிலிருந்து வெளியிட்ட ஒரு சிறு நூல் இது. '''இடதுசாரிக்' கம்யூனிஸம் ஒரு பிள்ளைப் பிராயத்துக் கோளாறு'' என்கிற நூலின் V, VI, VIIIம் பகுதிகளில் லெனின் இந்தக் கருத்துக்களை விமர்சிக்கிறார்.

1919 அக்டோபரில் ''இடதுசாரி எதிர்த்தரப்பு''—அல்லது ''கோட்பாடுரீதியான எதிர்த்தரப்பு'' என்று தம்மை அழைத்துக் கொண்டவர்கள்—ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள். 1920 ஏப்ரிலில் அது தன் சொந்த இடதுசாரிச் சந்தர்ப்பவாதக் கட்சியை, ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சி என்று பெயர் வைத்து அமைத்துக் கொண்டது. பிற்காலத்தில் இந்தக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு இல்லாத ஒரு செக்டேரியன் குழுவாக இருந்து விட்டது.—35.

22 பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றிலே முதலாவது அரசாங்கமாகிய பாரிஸ் கம்யூன் (1871) தோல்விக்குப் பின் லண்டன் மாநகரில் நாடுகடந்து வசித்த பிளாங்கியவாதிகளின் ஒரு குழு 1874ல் வெளியிட்ட வேலைத்திட்டத்தை லெனின் குறிக்கிறார். இவர்

கள் பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் லுயி அகுஸ்ட் பிளாங்கி (1805—1881) தொடங்கிவைத்த ஒரு போக்கின் ஆதரவாளர்களாவர். லெனின் சுட்டிக்காட்டியபடி, அவர்கள் ''பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தின் மூலமாக அல்லாமல் அறிவுஜீவிகளின் ஒரு அற்பச் சிறுபான்மையினரின் சதிவேலை மூலமாக மனித குலத்தைக் கூலியடிமைத்தனத்திலிருந்து உய்விக்கலாம்'' என்று எதிர்பார்த்தார்கள்.—36.

23 சர்வதேசச் சங்கம் [League of Nations] என்பது முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த ஒரு சர்வதேச ஸ்தாபனமாகும். முதலாவது உலகயுத்தத்தில் வெற்றி பெற்ற வல்லரசுகளின் பாரிஸ் சமாதான மாநாடு இதை 1919ல் நிறுவியது. அதன் சாசனத்தின்படி, சர்வதேசச் சங்கத்தின் நோக்கம் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் பலப்படுத்துவதேயாகும். எனினும், நடைமுறை யதார்த்தத்தில், அந்தச் சங்கத்தின் தலைவர்கள் ஆயுதப்பெருக்குப் போட்டியை ஊக்கி உற்சாகப்படுத்தினார்கள், இரண்டாம் உலக யுத்தத் தயாரிப்புக்களை ஊக்கி உற்சாகப்படுத்தினார்கள்.—40.

24 ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள ஸிம்மர்வால்ட், கீன்டால் என்கிற நகரங்களில் நடந்த சர்வதேச சோஷலிஸ்ட் மாநாடுகளை இது குறிக்கிறது.

ஸிம்மர்வால்ட் அல்லது முதலாவது சர்வதேச சோஷலிஸ்ட் மாநாடு 1915 செப்டம்பர் 5—8 தேதிகளிடையே நடைபெற்றது.

கீன்டால் அல்லது இரண்டாவது சர்வதேச சோஷலிஸ்ட் மாநாடு 1916 ஏப்ரில் 24—30 தேதிகளிடையே நடைபெற்றது.

இந்த மாநாடுகள் சோஷலிஸ்ட் இயக்கத்தில் ஏகாதிபத்தியவாதிகளையும் ஏகாதிபத்திய யுத்தத்தையும் எதிர்க்கிற இடதுசாரிச் சர்வதேசியவாத நபர்களை ஒன்றுபடுத்த உதவின.—45.

25 ''புரட்சிகரமான கம்யூனிஸ்டுகள்'' எனப்பட்டவர்கள்—1918 ஜூலையில் நடந்த இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கலகத்துக்குப்பின் அந்தக் கட்சியிலிருந்து விலகிய குழு. 1918 செப்டம்பரில் இந்தக் குழு ''புரட்சிகரமான கம்யூனிஸ்ட் கட்சியை'' நிறுவியது; கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பதையும் சோவியத் ஆட்சி முறைக்கு ஆதரவளிப்பதையும் ஆதரித்தது.—45.

26 இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் (சர்வதேசியவாதிகளின்) கட்சி 1917 நவம்பர் 19-28 (டிசம்பர் 2-11)ல் நடந்த அதன் முதலாவது அகில ருஷ்ய காங்கிரஸில் உருப் பெற்றது. விவசாயிகள் மீது கொண்டிருந்த தம் செல்வாக்கை வைத்துக் கொண்டிருக்க முயன்ற இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் நீண்டகால ஊசலாட்டத்திற்குப் பிறகு போல்ஷெவிக்குகளுடன் ஒத்துழைக்கத் தீர்மானித்தனர். 1917 நவம்பரிலும் டிசம்பர் தொடக்கத்திலும் போல்ஷெவிக்குகளுக்கும் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளில் பின்குறிப்பிட்டவர்கள் அரசாங்கத்தில் பங்குகொள்வது பற்றி உடன்பாடு ஏற்பட்டது. இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் சோவியத் ஆட்சியின் பொதுக் கொள்கையைப் பின் பற்றி நடக்க வர்க்களித்தபின் அவர்களின் பிரதிநிதிகளுக்கு மக்கள் கமிஸார்களின் சபையிலும் மக்கள் கமிஸார் அலுவலகங்களின் கலீஜியம்கள் பலவற்றிலும் பதவிகள் கொடுக்கப்பட்டன.

போல்ஷெவிக்குகளுடன் ஒத்துழைத்து வருகிறபோதே இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் சோஷலிஸத்தை நிர்மாணிப்பதுபற்றிய அடிப்படையான பிரச்சினைகளில் அவர்களிடமிருந்து வேறுபட்டிருந்தார்கள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு எதிர்ப்பாக இருந்தனர். 1918 ஜனவரி-பிப்ரவரியில், இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளினது கட்சியின் மத்தியக் கமிட்டி பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு எதிராகப் போராட்டம் தொடங்கியது. 1918 மார்ச்சில் சோவியத்துக்களின் நான்காவது காங்கிரஸ் அந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்த பிறகு இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் மக்கள் கமிஸார்களின் சபையிலிருந்து விலகினர். 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளினது கட்சியின் மத்தியக் கமிட்டி மாஸ்கோ நகரில் ஜெர்மன் ஸ்தானிகர் வில்ஹெல்ம் மிர்பாஹ் என்பவரை ஆத்திரமூட்டும் முறையில் கொலை செய்வதையும் சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுதமேந்திய கலகத்தையும் உருவாக்கியது. மக்களிடையே செல்வாக்கு அனைத்தையும் இழந்து, அந்தக் கட்சி சோவியத் ஆட்சியை எதிர்த்து ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கியது.

நிகழ்ச்சிகளின் ஒவ்வொரு திருப்பத்திலும் ஊசலாடிய குட்டிபூர்ஷ்வாப் புரட்சிக்காரர்கள் என்று இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளை லெனின் இனங்குறித்தார். அந்தக் கட்சி ''தொழிலாளி வர்க்கத்திடையே

இருந்த மாதிரியே விவசாயி மக்களிடையேயும் தான் ஒரு நுரைக் குமிழிதான் என்று நிரூபித்துக் கொண்டது'' என்றும் சுட்டிக்காட்டினர்.—45.

27 மூன்ருவது இன்டர்நேஷனல், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல், என்பது பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒன்றுபடுத்திய ஒரு சர்வதேச, புரட்சிகரமான, பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகும். அது 1919லிருந்து 1943 வரை இருந்தது.

முதலாவது உலக யுத்தம் வந்தபோது இரண்டாவது இன்டர்நேஷனலின் தலைவர்கள் சோஷலிஸத்துக்குச் செய்த துரோகத்தினுலும் இரண்டாவது இன்டர்நேஷனலின் வீழ்ச்சியாலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு காரணமாக, மூன்ருவது இன்டர்நேஷனலை நிறுவுவது வரலாற்றுரீதியாக இன்றியமையாதது ஆயிற்று. கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலை நிறுவுவதில் லெனின் ஒரு முக்கியமான பாத்திரம் வகித்தார்.

1919 மார்ச்சு 2—6 தேதிகளில் மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் முதலாவது காங்கிரஸ் உலகப் பாட்டாளிகளுக்கு விடுப்பதற்கான ஒரு பிரகடனத்தை நிறைவேற்றியது. அதில் மார்க்ஸூம் எங்கெல்ஸூம் ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில்'' வெளியிட்ட கருத்துக்களுக்கு வாரிசு கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் என்று கூறப்பட்டது.

கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் எல்லா நாடுகளின் உழைப்பாளி மக்களிடையேயும் உறவுகளை மீண்டும் நிலை நாட்டிப் பலப்படுத்தியது, உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலேயுள்ள சந்தர்ப்பவாதத்தை அம்பலப் படுத்தவும் இளமைப் பிராயத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பலப்படுத்தவும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் போர்த்தந்திரங்களையும் செயல்தந்திரங்களையும் வகுத்து அமைக்கவும் அது உதவியது.

1943 மே மாதத்தில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் நிர்வாகக் குழு, ஒரு குறிப்பிட்ட சரித்திர வளர்ச்சிக் கட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து, தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்குரிய ஸ்தாபன வடிவம் காலத்தால் பயனற்று விட்டது என்கிற உண்மையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலைக் கலைத்து விடுவது என்று தீர்மானம் நிறைவேற்றியது.—47.

28 *1914—1918*ல் நடந்த ஏகாதிபத்திய உலக யுத்தத்தை முடித்துவிட்ட **வெர்ஸேய் சமாதான ஒப்பந்தத்தை இது**

குறிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அவற்றின் நேசநாடுகள் என்று ஒரு தரப்பாகவும் ஜெர்மனி மற்றொரு தரப் பாகவும் இருந்து *1919* ஜூன் *28*ல் அது கையெழுத்திடப் பட்டது. வெற்றிபெற்ற வல்லரசுகளுக்குச் சாதகமாக முதலாளித்துவ உலகத்தை மறுபங்கீடு செய்து கொண் டதைச் சட்டபூர்வமாக்குவது; மேலும் சோவியத் ருஷ் யாவை மூச்சடைத்துக் கொல்வதையும் உலக மெங்கும் புரட்சி இயக்கத்தை நசுக்குவதையும் குறிக்கோளாகக் கொண்ட ஒரு சர்வதேச உறவுகளின் அமைப்பை ஏற் படுத்துவது, இவையே அதன் நோக்கமாகும்.—*50*.

29 ஆந்தாந்த [Entente] என்பது ஒரு ஏகாதிபத்தியக் கூட் டணி; *1904*ல் பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்ட "Entente cordiale" (''நேச உடன்பாடு'') என்பதிலிருந்து அந்தப் பெயர் அதற்குக் கிடைத்தது. அக்டோபர் புரட்சிக்கு முன் ருஷ்யா அந்த ஆந்தாந்தில் ஒரு உறுப்பின ராக இருந்தது. முதலாவது உலக யுத்தத்தின் போது ந்த ஆந்தாந்தில் அமெரிக்காவும் ஜப்பானும் பிறநாடு ம் சேர்ந்தன. அக்டோபர் புரட்சிக்குப்பின் இந்தக் ணியின் பிரதான உறுப்பினர்களாகிய பிரிட்டன், ர்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவை யத் ருஷ்யாவை எதிர்த்து இராணுவத் தலை டை ஒழுங்கமைத்தன; பிற நாடுகளில் புரட்சி இயக் தைத் தோற்கடிப்பதையும் ஊக்குவித்தன.—*50*.

ஹங்கேரியில் சோவியத் ஆட்சி—*1919* மார்ச் *21*ல் நிலை நாட்டப்பெற்றது. ஹங்கேரிய சோவியத் குடியரசு மீது ஆந்தாந்த் ஏகாதிபத்தியவாதிகள் ஒரு பொருளாதார முற்றுகையைச் சுமத்தி, இராணுவத் தலையீடு செய் தனர். இந்தத் தலையீடு ஹங்கேரியப் புரட்சி எதிர்ப்புக்கு மறு உயிர்ப்பு தந்தது. சர்வதேச ஏகாதிபத்தியத்துடன் கூட்டொருமை ஏற்படுத்திக் கொண்ட வலதுசாரி சோஷல்-டெமாக்ராட்டுகளின் துரோகமும் ஹங்கேரிய சோவியத் குடியரசின் வீழ்ச்சிக்கு மற்றொரு காரணியாக இருந் தது. *1919* கோடைகாலத்தில் சோவியத் ருஷ்யா எல்லாப் பக்கங்களிலும் முற்றுகையிடப்பெற்றிருந்தது, எனவே அது ஹங்கேரிய சோவியத் குடியரசின் உதவிக்கு வர முடியாமற்போயிற்று. *1919* ஆகஸ்ட் *1*ம் தேதியில் ஹங்கேரியில் சோவியத் ஆட்சி ஒழிக்கப்பட்டது.—*50*.

31 *1918* இலையுதிர் காலத்தில் ஆஸ்திரியாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது. *650* ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆண்டு

வந்த ஹாப்ஸ்பர்க் அரசவம்சத்தைத் தொழிலாளிகளும் பட்டாளத்தினரும் தூக்கியெறிந்துவிட்டார்கள். ஆஸ்திரியா குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. வியென்னுவிலும், பிற நகரங்களிலும் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் தோன்றின. புரட்சியின்போது ஆஸ்திரியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பெற்றது. ஆனல் ஆஸ்திரியத் தொழிலாளர்களின் பெரும் பகுதியிடையே சோஷல்-டெமாக்ரஸியின் செல்வாக்கு பலமாக இருந்தது. அது புரட்சி மேலும் வளர்வதைத் தடுக்கவும் அதிகாரத்திற்காகத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்துக்கு முட்டுக்கட்டை போடவும் தன்னுலானதையெல்லாம் செய்தது. சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி பின்பற்றிய தொழிலாளர்களை வஞ்சிக்கும் சொள்கையின் விளைவாக சோவியத்துக்கள் தமது முக்கியத்துவத்தை இழந்தன. பாட்டாளி வர்க்கத்தின் தாக்குதல் இவ்வாறு தடுக்கப்பட்டது.—50.

32 ''பொருளாதாரவாதம்'' என்பது பத்தொன்பதாவது நூற்ருண்டின் முடிவிலும் இருபதாவது நூற்ருண்டின் தொடக்கத்திலும் ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் நிலவிய ஒரு சந்தர்ப்பவாதப் போக்காகும்; அது சர்வதேசச் சந்தர்ப்பவாதத்தின் ஒரு வகை. அரசியல் போராட்டம் மிதவாத பூர்ஷ்வாக்களிடம் விடப்படவேண்டும் என்று சாதித்து, தொழிலாளி வர்க்கம் அதிக சம்பளத்துக்காகவும் மேலான வேலை நிலைமைகளுக்காகவும் மற்றவற்றிற்காகவும் நடக்கும் பொருளாதாரப் போராட்டத்தோடு தனது கடமைக்கு வரம்புகட்டி நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ''பொருளாதாரவாதிகள்'' வலியுறுத்தினர். தொழிலாளி வர்க்க இயக்கம் தன்னியல்பாக இயங்கும் தன்மைகொண்டது என்று சொல்லி ''பொருளாதாரவாதிகள்'' புரட்சிகரமான தத்துவத்தின் முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்தினுர்கள்; தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சோஷலிஸ்ட் உணர்வு இருக்க வேண்டியதின் அவசியத்தை நிராகரித்தார்கள்; ஒரு சுதந்திரமான, மையக்கட்டுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சியைப் படைப்பதை எதிர்த்தார்கள்.—64.

33 இந்தக் கட்டுரை ''பூந்த்'' எனும் ஸ்தாபனத்தின் தேசியவாத, பிரிவினைவாதக் கருத்துக்களை அம்பலப்படுத்துகிறது.

''பூந்த்'' (''லித்துவேனியா, போலந்து, ருஷ்யா ஆகியவற்றைச் சேர்ந்த யூதத் தொழிலாளர்களின்

பொதுச் சங்கம்'') 1897ல் அமைக்கப்பெற்றது; அது யூதக் கைவினைஞர்களிடையேயுள்ள அரைப் பாட்டாளி வர்க்கத்தன்மை வாய்ந்த நபர்களேயே பிரதானமாக ஒன்று படுத்தியிருந்தது. தொழிலாளி வர்க்க இயக்கத்திலே தேசியவாதத்தைத் தூக்கிப்பிடித்துச் சென்ற இந்த ''பூந்த்'' ஒரு சுயேச்சையான ஸ்தாபனம் என்கிற வகையில் ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியிலே உறுப்பினஞயிருந்தது; அது யூதப் பாட்டாளி வர்க்கத்தினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் சுதந்திரமாகச் செயலாற்றி வந்தது. யூதப் பாட்டாளி வர்க்கத்தினரின் பிரதிநிதியாகத் தான் ஒன்றே அங்கீகரிக்கப்பட வேண்டும் என்கிற அதன் கோரிக்கையை இரண்டாவது ரு. சோ. டெ. தொ. கட்சியின் மாநாடு நிராகரித்தபோது அது கட்சியிலிருந்து விலகியது, ஆனல் 1906ல் மீண்டும் கட்சியில் சேர்ந்தது. அடிப்படையான அரசியல் பிரச்சினைகளில் ''பூந்த்'' உறுப்பினர்கள் கட்சியின் சந்தர்ப்பவாத, மென்ஷெவிக் பிரிவினரை ஆதரித்தனர்.—71.

34 பிரிட்டிஷ் சோஷல்-டெமாக்ராட்டிக் பெடரேஷன் 1884ல் நிறுவப் பெற்றது. சீர்திருத்த வாதிகளோடும் (ஹைண்ட்மன், மற்றவர்கள்) அராஜகவாதிகளோடும் கூடுதலாக பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் இயக்கத்தின் இடது சாரிப் பிரிவாக அமைந்திருந்த, மார்க்ஸீயத்தைப் பற்றி நிற்கிற, புரட்சிகரமான சோஷல்-டெமாக்ராட்டுகளின் ஒரு குழுவும் (ஹாரி குவெல்ச், தாமஸ் மான், எட்வர்ட் ஏவ்லிங், எலியனேர் மார்க்ஸ் மற்றவர்கள்) அதில் அடங்கியிருந்தது பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் பிரிட்டிஷ் சோஷல்-டெமாக்ராட்டிக் பெடரேஷனை அதன் வறட்டுச் சூத்திரவாதத்துக்காகவும் செக்டேரியன் போக்குக்காகவும் வெகுஜன பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதற்காகவும் அதன் தனிக்குணம்சங்களைப் புறக்கணிப்பதற்காகவும் சுடச்சுட விமர்சித்தார். 1907ல் பெடரேஷன் தன் பெயரை சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சி என்று மாற்றிக் கொண்டது. 1911ல் பின்சொன்ன அந்தக் கட்சி, சுயேச்சையான தொழிற் கட்சியின் இடதுசாரி நபர்களோடு சேர்ந்து, பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் கட்சியை அமைத்தது. 1920ல் அந்தக் கட்சியின் பெரும் பகுதி உறுப்பினர்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டார்கள்.—77.

35 பி. எங்கெல்ஸ் பி. அ. ஸோர்கே என்பவருக்கு 1886 நவம்

பர் 29ல் எழுதிய கடிதத்தை லெனின் மேற்கோள் காட்டுகிருர்.—77.

36 ''தொழிலாளர் வீரக்காவலர்கள்'' ["Knights of Labour"] அல்லது ''வீரக்காவலர் மாண்புசால் வரிசை'' ["Noble Order of the Knights of Labour"] என்பது ஒரு அமெரிக்கத் தொழிலாளர்களின் ஸ்தாபனம்; அது 1869ல் பிலடெல்பியா நகரில் தையற்காரராகிய யூ. ஸ்டீபென்ஸ் என்பவரால் நிறுவப்பெற்றது. 1881 வரை ''தொழிலாளர் வீரக்காவலர்கள்'' என்பது ஷாப் யூனியன்களையும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் தொழில் தேர்ச்சியற்ற தொழிலாளர்களையும் கொண்ட கலவையான ஸ்தாபனங்களையும் ஒன்றுபடுத்திய ஒரு ரகசிய ஸ்தாபனமாக இருந்தது. 1884 வாக்கில் அதன் உறுப்பினர் தொகை 70 ஆயிரத்தை எட்டியது. 1886ல் அது கிட்டத்தட்ட 7 லட்சத்தை எட்டியது. தொழிலாளர்களுக்கு அறிவூட்டுவது, அவர்களின் கூட்டொருமையை வளர்த்து அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பது என்பதையே அந்த ஸ்தாபனம் தன் பிரதானக் குறிக்கோளாகக் கருதியது. அரசியல் போராட்டத்தில் இறங்க வேண்டாம் என்று அதன் தலைமை சாதாரண உறுப்பினர்களுக்குக் கட்டளையிட்டது, ஒரு தொழிலாளர் கட்சியை ஏற்படுத்துவதை எதிர்த்தது.

1886ல் அந்த ஸ்தாபனத்தின் தலைமை எட்டுமணி நேர வேலை நாளுக்குக்காக நடந்த தேசரீதியான வேலை நிறுத்தத்தை எதிர்த்து, அதில் கலந்துகொள்ளக்கூடாது என்று தன் உறுப்பினர்களுக்குத் தடை போட்டு அதுமுறிய உதவியது. இந்தக் கட்டளைகள் இருந்த போதிலும், சாதாரண உறுப்பினர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். சாதாரண உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பவாதத் தலைமைக்கும் இடையேயுள்ள முரண்பாடுகள் அதிகரித்தன. 1886க்குப் பிறகு அந்த ஸ்தாபனம் மக்களிடையே தன் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. 1890களின் முடிவுக் காலத்தில் அது சிதறிப் போயிற்று.

தலைமையின் துரோகம் ஒருபுறமிருந்தபோதிலும் அந்த ஸ்தாபனம், குறிப்பாக அதன் ஆரம்பகாலத்தில், அமெரிக்கத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு உருப்படியான பாத்திரம் வகித்தது.—79.

37 ''பகிஷ்காரத்தை எதிர்த்து'' என்பது 1907ல் மூன்ரும் டூமாவுக்கு நடக்கவிருந்த தேர்தல்களை எதிர்பார்த்து எழுதப்பட்டது. ருஷ்யாவில் பிற்போக்குச் சக்திகள் தொடங்

கிய தாக்குதலினல் அரசியல் நிலைமை மாறிப் போயிருந்த போதிலும் மூன்ரும் டூமாவைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று வற்புறுத்திய சோஷல்-டெமாக்ராட்டுகளை லெனின் அதில் விமர்சிக்கிருர்.—80.

38 மொல்ச்சாலின் போக்கு என்பது அடிமைப்புத்தியையும் அடிவருடித் தனத்தையும் குறிக்கும் சொல்லாகும் (அ. ஸெ. க்ரிபயேதோவ் எழுதிய ''அறிவால் விளைந்த அல்லல்'' என்னும் நகைச்சுவை நாடகத்தில் வருகிற மொல்ச்சாலின் என்கிற பாத்திரத்தையொட்டி வந்தது). —80.

39 டிசம்பர் புரட்சியெழுச்சி என்பது 1905 டிசம்பரில் மாஸ்கோவில் ஜாராட்சியை எதிர்த்து ஏற்பட்ட ஆயுதமேந்திய புரட்சியெழுச்சியாகும். ஆயுதமேந்திய புரட்சியெழுச்சியாக வளர்ந்த ஒரு அரசியல் பொது வேலை நிறுத்தம் மாஸ்கோவில் 1905 டிசம்பர் 7(20)ல் தொடங்கியது. தெருக்களில் தடுப்பு அரண்களை எழுப்பிய தொழிலாளிகள் இரத்தக்களரியான போராட்டத்தில் கஸாக்குகளையும் போலீசையும் ஜாராட்சியின் துருப்புக்களையும் எதிர்த்துச் சண்டையிட்டனர்.

மாஸ்கோவில் புரட்சியெழுச்சி ஒன்பது நாட்களுக்குள் நசுக்கப்பட்டது. 1905 டிசம்பர், 1906 ஜனவரியில் பிற நகரங்களில் தோன்றிய இதே மாதிரியான புரட்சியெழுச்சிகள் அதேபோல் நசுக்கப்பட்டன. டிசம்பர் புரட்சியெழுச்சி 1905 ருஷ்யப் புரட்சியின் உச்சமுடிவுப் புள்ளியாயிருந்தது. லெனின் சுட்டிக்காட்டியது போல், 1917ல் யதேச்சாதிகார ஆட்சிக்கு எதிரான தாக்குதலுக்கு ருஷ்ய மக்களுக்கு அது ஒரு ''தீக்குளிச்சோதனையாக'' விளங்கியது.—80.

40 மிதவாத வீண்பேச்சு, அடிமைப்புத்தி, அடிவருடித்தனம். பாலலாய்கின் என்பது மி. யெ. ஸால்த்தீக்கோவ்-ஷெத்ரீன் எழுதிய ''நவீன கிராமவர்ணனை'' என்கிற நையாண்டி நாடகத்தில் வரும் ஒரு பாத்திரம்.—80.

41 பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவில் ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியில் துவக்கி வைக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பவாத, மார்க்ஸீயத்துக்கு விரோதமான போக்கை இது குறிக்கிறது. திரிபுவாதத்தின் மிகத் தீட்சண்யமான ஆதரவாளராயிருந்த ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டாகிய எடுவார்ட் பேர்ன்ஷ்டைன் என்பவரின் பெயரையொட்டி இது இவ்வாறு அழைக்கப்பட்டது. சோஷல்-டெமாக்ரஸியை சமுதாயப் புரட்சிக்

காகப் பாடுபடுகிற ஒரு கட்சியாக இருக்கும் நிலையிலிருந்து சமுதாயச் சீர்திருத்தங்களைத் தேடிக்கொள்கிற ஒரு கட்சியின் நிலைக்கு மாற்றி விடுவதையே பேர்ன்ஷ்டைன் வாதிகளின் மார்க்ஸீயத்தைத் திரித்தும் போக்கு குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த பிறகட்சிகளிலுள்ள சந்தர்ப்பவாதப் பேர்வழிகள் பேர்ன்ஷ்டைன் வாதத்தை ஆதரித்தனர்.

**மரபுவிரும்பிகள்** எனப்பட்டவர்கள் மார்க்ஸீயத்தைத் திரிப்பதை எதிர்த்த ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டுகள்.—*83.*

42 **கேட் வகையறுக்கள்** [Guesdists] என்பவர்கள் ழூல் கேட் [Jules Guesde] என்பவரின் ஆதரவாளர்கள்; பத்தொன்பதாவது நூற்றுண்டின் முடிவிலும் இருபதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் ஒரு புரட்சிகரமான மார்க்ஸீயப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். *1901*ல் அவர்கள் பிரான்ஸ் நாட்டு சோஷலிஸ்ட் கட்சியை அமைத்தார்கள். *1905*ல் ழொரேஸ் வகையறுக்கள் [Jaurèsists] நிறுவிய பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியுடன் அவர்கள் இணைந்தார்கள். *1914-18* ஏகாதிபத்திய யுத்த காலத்தின் போது கேடும், ஸாம்பாவும், இந்தக் கட்சியின் பிற தலைவர்களும் சோஷல்-இனவெறிக் கருத்துக்களை மேற்கொண்டு தொழிலாளி வர்க்கத்தின் லட்சியத்துக்குத் துரோகம் செய்தார்கள்.

**ழொரேஸ் வகையறுக்கள்** என்பவர்கள் ழான் ழொரேஸ் [Jean Jaurès] என்கிற பிரெஞ்சு சோஷலிஸ்டின் ஆதரவாளர்கள். *1902*ல் அவர்கள் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியை நிறுவினர்கள். அது ஒரு சீர்திருத்தவாத நிலையை மேற்கொண்டது.

**புரூஸ் வகையறுக்கள்** [Broussists] (*பால் புரூஸ்* [Paul Brousse] *என்பவரின் பெயரையொட்டி வந்தது*) அல்லது சாத்தியப்பாடுவாதிகள் [Possibilists] என்பவர்கள் *1880*களில் பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் எழுந்த ஒரு குட்டிபூர்ஷ்வா, சீர்திருத்தவாதப் போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான செயல்திட்டங்களையும் சொல்தந்திரங்களையும் நிராகரித்தார்கள், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சோஷலிஸ்ட் குறிக் கோள்களைத் திரையிட்டு மறைத்தார்கள், ''கிடைக்கச் சாத்தியப்பாடுள்ளவற்றிற்காக'' [possible] மட்டும் போராடுவதோடு தொழிலாளர்களின் போராட்டத்துக்கு வரம்புகட்டி நிறுத்திக் கொள்ள வேண்டும்

என்று யோசனையளித்தார்கள்; அதிலிருந்துதான் அந்தக் கட்சியின் பெயர் வந்தது.

பிற்காலத்தில் சாத்தியப்பாடு வாதிகளில் மிகப் பெரும் பகுதியினர் சீர்திருத்தவாதப் போக்குள்ள பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்கள்.—*83*.

43 **இன்டெக்ரலிஸ்டுகள்** [Integralists] என்பவர்கள் இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியில் குட்டிபூர்ஷ்வா சோஷலிஸத்தின் பிரதிநிதியாயிருந்த ஒரு போக்கு. *1900*களில் அவர்கள் சீர்திருத்தவாதிகளோடு—அந்தச் சீர்திருத்தவாதிகள் அதீதமான சந்தர்ப்பவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள், பிற்போக்கான பூர்ஷ்வாக்களுடன் ஒத்துழைத்தார்கள்—சில பிரச்சினைகளைப் பற்றி மோதிக் கொண்டார்கள்.—*83*.

44 **புரட்சிகரமான சிண்டிகலிஸம்** [revolutionary syndicalism] என்பது ஒரு குட்டிபூர்ஷ்வா அரை அராஜகவாதப் போக்காகும்; இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுக்காலத்தில் அநேக மேலைய ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தோன்றியது. பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டமும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் தேவையில்லை என்று சிண்டிகலிஸ்டுகள் சாதித்தார்கள்; அவர்கள், கட்சியே பிரதான பாத்திரம் வகிக்கிறது என்கிற கருத்தை நிராகரித்தார்கள், பொது வேலைநிறுத்தங்களைத் திரட்டுவதின் வழியாகத் தொழிற்சங்கங்கள் (சிண்டிகேட்டுகள்) புரட்சி இன்றியே முதலாளித்துவத்தை ஒழிக்க முடியும், உற்பத்தியின் நிர்வாகத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்ள முடியும் என்று கருதினார்கள்.—*83*.

45 **''புரொலித்தாரிய்''** (''பாட்டாளி'')—சட்டவிரோதமான போல்ஷெவிக் பத்திரிகை; *1906*, ஆகஸ்ட் *21* (செப்டம்பர் *3*)லிருந்து *1909* நவம்பர் *28* (டிசம்பர் *11*) வரை, தொடக்கத்தில் வீபர்கிலும் பிறகு ஜெனீவாவிலும் பாரிஸிலும் வெளிவந்தது. இதன் ஆசிரியர் லெனின்தான். ''புரொலித்தாரிய்'' உண்மையில் பிரதான போல்ஷெவிக் பத்திரிகையாக இருந்தது.

''புரொலித்தாரியின்'' விரிவான ஆசிரியர் குழுவினது மாநாடு வி. இ. லெனினது முன்முயற்சியால் கூட்டப்பட்டது; இது *1909*, ஜூன் *8-17* (*21-30*)ல் பாரிஸ் நகரில் நடைபெற்றது. ஒட்ஸொவிஸம், இறுதி எச்சரிக்கை வாதம், சோஷல்-டெமாக்ராட்டிக் பிரதிநிதிகளின் டூமா நடவடிக்கைகள் ஆகியன இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன,

மாநாட்டின் முடிவுகள் கட்சி முழுவதற்கும் முக்கியத்துவம் கொண்டிருந்தன; இவை கட்சியின் ஸ்தல ஸ்தாபனங்களால் அங்கீகரிக்கப்பட்டன.—85.

46 ''இளைஞர்கள்'' என்பது 1890ல் ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியில் நிலவிய குட்டிபூர்ஷ்வா, அரை அராஜகவாத எதிர்த்தரப்பாகும். இதன் மூலக்கருவாக, கட்சியின் தத்துவாசிரியர்களாகவும் தலைவர்களாகவும் இருக்கும் பாத்திரம் தமக்கேதான் உரியது என்று உரிமை கொண்டாடிய இளம் எழுத்தாளர்களும் மாணவர்களும் (எனவேதான் அந்தப் பெயர் வந்தது) இருந்தனர். சோஷலிஸ்ட் எதிர்ப்புச் சட்டம் (1878-90) ரத்துசெய்யப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் நடவடிக்கைகளுக்குரிய நிலைமைகள் மாறிவிட்டிருப்பதைப் புர்ந்து கொள்ளாமையால் அவர்கள் சட்டபூர்வமான போராட்ட வடிவங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் தேவையைப் பார்க்கவில்லை, பாராளுமன்றத்தில் சோஷல்-டெமாக்ராட்டுகள் பங்கெடுப்பதை எதிர்த்தார்கள், கட்சி சந்தர்ப்பவாதத்திலே போகிறது என்று குற்றஞ்சாட்டினர். ''இளைஞர்களின்'' எதிர்த்தரப்பை பி. எங்கெல்ஸ் கண்டித்தார்.—98.

47 ''பி. கியெவ்ஸ்கிய்க்கு (யூ. பியாத்தக்கோவுக்கு) பதில்'' என்பது முதல் உலக யுத்தத்தின்போது சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் தோன்றிய ஒரு இடதுசாரிச் சந்தர்ப்பவாதப் போக்கான ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம்'' என்கிற இடதுசாரிச் சந்தர்ப்பவாத, மார்க்ஸியத்துக்குப் புறம்பான, செக்டேரியன் கருத்துக்களை அம்பலப்படுத்துகிறது. ருஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ந்து திடம் பெற்றதைத் தொடர்ந்து, ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் இருந்த ''பொருளாதாரவாதிகள்'' 1894-1902 காலப்பகுதியில், ஜனநாயகத்தைச் சாதிப்பதற்குத் தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு அரசியல் போராட்டம் தேவையில்லை என்கிற தவறான முடிவு எடுத்தது போலவே, இந்த ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளும்'' ஏகாதிபத்தியத்தைப் பற்றிய மார்க்ஸீய ஞானத்தைத் திரித்தனர், ஏகபோக முதலாளித்துவ நிலைமைகளில் ஜனநாயகத்துக்குப் போராட்டத்தேவையேயில்லை என்று சொன்னார்கள், தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்கிற கோஷமும் குறைந்தபட்ச வேலைத்திட்டம் முழுவதுமே நிராகரிக்கப்படவேண்டும் என்று கோரினார்கள். அரசு பற்றிய கண்ணோட்டம் எனும் பிரச்சினைபற்றி அரை அராஜக

வாதக் கருத்துக்களை அவர்கள் பிரசாரம் செய்தார்கள். இந்தக் கருத்துக்களை நி. புகாரின், யூ. பியாத்தக்கோவ், யெ. போஷ் ஆகியோர் ஆதரித்து நின்றனர். தாங்கள் ஒரு ''புதிய போல்ஷெவிஸத்தைப்'' படைப்பதாகக் கூறினார்கள். ஹாலந்து, போலந்து, ஜெர்மனி, அமெரிக்கா, ஸ்காந்திநேவிய நாடுகள், ஆகியவற்றிலிருந்த அநேக இடதுசாரி சோஷல்-டெமாக்ராட்டுகள் இந்தக் கருத்துக்களை ஆதரித்து நின்றார்கள்.

மார்க்ஸீயத்தைப்பற்றிய ஒரு அசிங்கமான கேலிச் சித்திரமே ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம்'' என்று லெனின் அதை அழைத்தார். உலக சோஷலிஸ்ட் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதத்தின், செக்டேரியன் போக்கின் ஒரு தெளிவான வெளிப்பாடு அது என்று குணங்குறித்தார். ''மார்க்ஸீயத்துடனோ புரட்சிகரமான சோஷல்-டெமாக்ரஸியுடனோ ஒரு சம்பந்தமுமில்லாத'' ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தின்'' கருத்துக்களை மார்க்ஸீயவாதிகளிடையே பரப்புவது, ''நமது லட்சியத்துக்குக் கொடிய அடி கொடுப்பதாகும்'' என்று சுட்டிக்காட்டி இந்தப் போக்கை எதிர்த்துப் பகிரங்கமான, பலமான போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று லெனின் அறைகூவினார்.—*103*.

48 முதலாவது உலக யுத்தத்தின்போது காவுத்ஸ்கி வாதிகள் ஆயுதக்களைப்பைப் பிரசாரம் செய்தார்கள். சோஷலிஸ்ட் கட்சிகளின் வேலைத்திட்டங்களிலே வைத்துள்ள, மக்களை ஆயுதபாணியாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக மக்களை நிராயுதபாணியாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைக்க வேண்டும் என்று ஸ்விட்ஸர்லாந்து, ஹாலந்து, ஸ்காந்திநேவிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த சில இடதுசாரி சோஷலிஸ்டுகள் யோசனையளித்தார்கள். ஏன் இது தவறு என்று லெனின் விளக்கினார். யுத்தம் செய்துகொண்டிருக்கும் முதலாளித்துவ நாடுகளிலே ஒரு புரட்சிகரமான நெருக்கடி வளர்ந்து வருகையில், ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றும்படியும் போர் வீரர்கள் என்கிற வகையில் மக்கள் பெறும் ஆயுதங்களைச் சுரண்டுபவர்களுக்கு எதிராகத் திருப்பும் படியும் புரட்சிகரமான மார்க்ஸீயவாதிகள் தொழிலாளர்களையும் எல்லா உழைப்பாளி மக்களையும் அறைகூவியழைத்து வருகையில், ஆயுதக்களைப்பு என்கிறகோஷத்தை முன்வைப்பது தவறு என்று அவர் கருதினார்.

எனினும், ஆயுதக்களைப்பைக் கோட்பாடு ரீதியிலே லெனின் எதிர்க்கவில்லை. ஆயுதக்களைப்பு என்பது சோஷ

லிஸத்தின் ஆதர்சம் என்று அவர் கருதினர். ஒரு ஸ்தூல மான, வரலாற்று ரீதியான பார்வை நிலையிலே இருந்து கொண்டு ஆயுதக்கலைப்புப் பிரச்சினையை அவர் அணுகி, அரசுகளிடையே சமாதானத்தைக் காப்பதையும் யுத்த அபாயத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு ஜனநாயக நடவடிக்கையாக ஆயுதக்கலைப்பைக் கோருவது சில குறிப்பிட்ட நிலைமைகளில் அவசிய மானதே என்று ஒப்புக்கொண்டார். முதலாவது உலக யுத்தத்திற்கு முன், லெனின் பங்கெடுத்துக் கொண்ட, ஷ்டுட்கார்டிலும் கோப்பன்ஹாகெனிலும் நடந்த சர்வ தேச சோஷலிஸ்ட் மாநாடுகள், எல்லா நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளும் இராணுவ வெறியை எதிர்க்கச் செயல்பூர்வமாக முன்வரும்படியும் ஆயுதங்களைக் குறைக்க வேண்டுமென்றும் அரசுகளிடையேயுள்ள பிரச்சினைகளைச் சமாதான பூர்வமாகத் தீர்க்க வேண்டுமென்று கோரும் படியும் கடமையாக்கிய தீர்மானங்களைத் தயாரித்து நிறைவேற்றின. ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின், லெனினுடைய முன்முயற்சியின்படி நடந்து கொண்ட வகையிலே, ஜினேவாவில் நடந்த உலக மாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் பிரதிநிதிக் குழு ஒரு உலகரீதியான ஆயுதக்கலைப்பையும் வெகுஜன நாச ஆயுதங்கள் மீது முற்றுன தடையையும் கோரி பிரே ரேபித்தது.—*106*.

49 இவைதான் ''நிகழ்ந்து வரும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்'' என்கிற ஆய்வுரைகள் எனப் படுபவை; 1917 ஏப்ரில் 4ந் தேதியன்று இவற்றை லெனின் ஒரு பிரசங்கத்தில் முன்வைத்தார். சோஷலிஸ்ட் புரட்சியை நடத்தி முடிப்பதற்குரிய போராட்டத்தில் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப் பாளி மக்களினதும் கடமைகளை அது வரையறுத்துக் காட்டி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் ஒரு அரசு வடிவமாக சோவியத் குடியரசைச் சிருஷ்டிக்கும் கருத்தை முன்வைத்தது.—*114*.

50 கேதே எழுதிய ''பாவுஸ்ட்'' ["Faust"] என்ற நூலி லிருந்து தந்த மேற்கோள்.—*117*.

51 1917, ஏப்ரில் 21 (மே 4) தேதியன்று, போல்ஷெவிக் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க, பெத்ரோகிராத் தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்து, பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தின் ஏகாதிபத்தியக் கொள்கை யைக் கண்டனம் செய்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி

ணுர்கள். அவர்கள் சமாதானத்தைக் கோரினுர்கள். அரசாங்க நெருக்கடியைத் தோற்றுவித்த இந்த ஏப்ரில் ஆர்ப்பாட்டத்தில் ஒரு லட்சத்துக்கு மேலான தொழிலாளர்களும் போர்வீரர்களும் கலந்து கொண்டார்கள். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளேயும் மென்ஷெவிக்குகளேயும் உள்ளடக்கிய ஒரு கூட்டு அரசாங்கம் அமைக்கப் பெற்றது.

1917, ஜூன் 9(22) தேதியன்று, சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸ்—இதில் மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் பெரும்பான்மை பெற்றிருந்தனர்—போல்ஷெவிக்குகளுக்கும் தொழிலாளர்கள், போர்வீரர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த மாநாட்டில் முடிவு செய்த ஜூன் *10(23)* தேதிய ஆர்ப்பாட்டத்தைத் தடைசெய்து தீர்மானம் நிறைவேற்றியது. ஜூன் *9-10 (22-23)* இரவில் நேரங்கழித்து, காங்கிரஸின் முடிவோடு மோதிக் கொள்வதைத் தவிர்க்கும்பொருட்டு, லெனினுடைய யோசனேப்படி, போல்ஷெவிக் கட்சியின் மத்தியக்கமிட்டி ஆர்ப்பாட்டத்தை ரத்து செய்தது.

1917, ஜூன் 18 (ஜூலே 1) தேதியன்று, மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் திரட்டிய ஒரு ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பெத்ரோகிராத் தொழிலாளர்களும் போர்வீரர்களும் கலந்துகொண்டார்கள். ஆனுல் அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் போல்ஷெவிக் கட்சியின் புரட்சிகரமான கோஷங்களே எடுத்துச் சென்ருர்கள். தாற்காலிக அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் சமரசக் கட்சிகளின் கோஷங்களே ஒரு சிலர்மட்டுமே எடுத்துச் சென்ருர்கள். மக்கள் திரளின் புரட்சிகரமான முன்முயற்சி வளர்ந்துவிட்டது என்றும் போல்ஷெவிக் கட்சியின் செல்வாக்கு பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டது என்றும் அந்த ஆர்ப்பாட்டம் புலப்படுத்தியது.

1917, ஜூலே 4(17) தேதியன்று, பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தின் துருப்புக்கள், மென்ஷெவிக்குகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் ஒப்புதலோடு, புரட்சிகரமான போல்ஷெவிக் கோஷங்களே எடுத்துச்சென்ற, சோவியத்துக்களுக்கு அதிகாரத்தை மாற்றித்தரக் கோரிய ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தின. இந்த நடவடிக்கையைப் பின் தொடர்ந்து தொழிலாளர்களேயும் போர்வீரர்களேயும் நிராயுதபாணியாக்கியும் போல்ஷெவிக் கட்சியை மிருகத்தனமாக அடக்கியும் தாற்காலிக அரசாங்கம் செயலாற்றியது. லெனினேக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது,

இதன் விளைவாக லெனின் தலைமறைவாக இருக்க வேண்டியதாயிற்று. புரட்சியின் சமாதான பூர்வமான வளர்ச்சி முற்றுப்பெற்றது. ஆயுதமேந்திய புரட்சியெழுச்சிக்கு பலம் சேர்க்குமாறு கோஷங்களை லெனின் முன்வைத்தார்.

1917, ஆகஸ்ட் 25 தேதியன்று, பிப்ரவரியில் மக்கள் தூக்கியெறிந்த முடியாட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கி ஜெனரல் கர்னீலோவ் புரட்சி எதிர்ப்பான ஒரு இராணுவக் கலகத்தைத் தூண்டிவிட்டுப் புரட்சிகரமான பெத்ரோகிராதுக்கு எதிராகத் துருப்புக்களை நடத்திச் சென்றார். போல்ஷெவிக்குகளின் தலைமையில் தொழிலாளர்களும் விவசாயிகளும் அந்த இராணுவக் கலகத்தை நசுக்கினர். மக்களின் நிர்ப்பந்தத்தின்கீழ் தாற்காலிக அரசாங்கம் கர்னீலோவைக் கைது செய்யும்படியும் நீதிமன்றத்தின்முன் விசாரணைக்குக் கொண்டுவரும்படியும் உத்தரவு பிறப்பித்தது.—*121.*

52 பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை எதிர்த்த ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுக்கு'' எதிராக எழுதப்பட்ட கட்டுரை இது.—*129.*

53 அகில ருஷ்ய ஜனநாயக மாநாடு அதிகாரம் பற்றிய பிரச்சினையை விவாதிப்பதற்காகத் தொழிலாளர், போர் வீரர் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் மென்ஷெவிக்—சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள்மயமான மத்திய நிர்வாகக் குழுவால் 1917 செப்டம்பரில் பெத்ரோகிராதில் கூட்டப்பட்டது. இந்த மாநாட்டைத் திரட்டிய அமைப்பாளர்களின் உண்மையான நோக்கம் மக்கள் திரளை வளர்ந்துவரும் சோஷலிஸ்ட் புரட்சியிலிருந்து திருப்பி விடுவதேயாகும்.—*138.*

54 கி. யெ. ஸினோவியேவும் லெ. பொ. காமெனேவும் மேற்கொண்ட நிலையை இது குறிக்கிறது; அவர்கள் 1917 அக்டோபரில் ஆயுதமேந்திய புரட்சியெழுச்சியை எதிர்த்துப் பேசினார்கள்.—*139.*

55 முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்தில் ஜெர்மன் துருப்புக்கள் பெல்ஜியத்தை வசமாக்கிக் கொண்டன. 1918ல் ஜெர்மனி தோல்வியடையும் வரை, சுமார் நான்கு ஆண்டுகளாக பெல்ஜியம் பகைவர் கைகளில் தொடர்ந்து இருந்தது.—*141.*

56 ''நோவிய் லூச்காரர்கள்''—பெத்ரோகிராதில் மென்ஷெவிக்

மத்தியக் கமிட்டி வெளியிட்ட ''நோவிய் லூச்'' [''புதிய கிரணம்''] செய்தித்தாளைச் சூழ்ந்து குழுவாயிருந்த மென்ஷெவிக்குகள்; அந்தப் பத்திரிகை 1917 டிசம்பர் 1(14)லிருந்தது 1918 ஜூன்வரை வெளிவந்தது; 1918 ஜூனில் அது புரட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காக மூடப்பட்டுவிட்டது.

''தேலோ நரோதாக்காரர்கள்''—சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் வாய்ப்பறையான ''தேலோ நரோதா'' [''மக்கள் லட்சியம்''] செய்தித்தாளைச் சூழ்ந்து குழுவாயிருந்த வலதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள். இந்தப் பத்திரிகை பெத்ரோகிராதில் 1917 மார்ச்சிலிருந்து 1918 ஜூலைவரை வெளியிடப்பெற்றது. புரட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காக இது மூடப்பட்டுவிட்டது.

''நோவயா ஷிஸ்ன்காரர்கள்''—பெத்ரோகிராதில் 1917 ஏப்ரில் 18 (மே 1)லிருந்து 1918 ஜூலைவரை வெளியிடப்பெற்ற ''நோவயா ஷிஸ்ன்'' [''புதிய வாழ்வு''] என்ற செய்தித்தாளைச் சூழ்ந்து குழுவாயிருந்த மென்ஷெவிக்-சர்வதேசீயவாதிகள்.—142.

57 நார்ஸிஸஸ்—கிரேக்கப் புராணத்தில் ஒரு நதி தேவதையின் குமாரன்; அவன் ஒரு அசாதாரணமான அழகுள்ள வாலிபன். நீரில் தன் பிரதிபிம்பத்தைக் கண்டு தானே மோகித்துப் போனவன்.—163.

58 நோஸ்த்ரியோவியம்—தன்னம்பிக்கை, தடித்தனம், புளுகுணித்தனம். நிக்கொலாய் கோகல் எழுதிய ''இறந்த ஆன்மாக்கள்'' என்ற நூலில் வரும் நோஸ்த்ரியோவ் என்கிற பாத்திரத்தையொட்டி வந்த சொல்.—166.

59 ''வ்பெர்யோத்'' [''முன்னேக்கி'']—ஒரு மென்ஷெவிக் தினச் செய்தித்தாள்; மாஸ்கோவில் 1917 மார்ச்சில் அது பிரசுரமாகத் தொடங்கியது. புரட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காக அது 1919 பிப்ரவரியில் மூடப்பட்டுவிட்டது.—183.

60 கார்ல் மார்க்ஸ் எழுதியதிலிருந்து மேற்கோள்; இதை பி. எங்கெல்ஸ். ''பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயிப் பிரச்சினே'' என்ற நூலில் பயன்படுத்தினர்.—186.

61 உரிய தருணம் வருமுன்பே போல்ஷெவிக்குகள் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டார்கள், சோஷலிஸத்தை நிர்மாணிக்க அனுமதிக்கும் அளவுக்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சித் தரத்தை ருஷ்யா எட்டவில்லை என்கிற

மென்ஷெவிக்குகளின் வலிந்துரையைப் பற்றி லெனின் பேசுகிருர்.—190.

62 உருமாலே முக்காடிட்ட மனிதன் — வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிப் போய், புதியது எதைக் கண்டாலும் பயப்படுகிறவன்; ருஷ்ய எழுத்தாளர் சேகவின் அதே பெயர் கொண்ட கதை ஒன்றில் வருகிற ஒரு பாத்திரம்.—190.

63 அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்பே தயாரிக்கப்பட்ட பட்டியல்கள்படி அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்கள் 1917 நவம்பர் மத்தியில் நடந்தன. அதில் மிகப் பெரும்பாலான ஸ்தானங்கள் வலதுசாரி சோஷலிஸ்ட்—புரட்சிவாதிகளும் பிற புரட்சி எதிர்ப்பாளர்களும் பெற்ருர்கள். புரட்சியின் விளேவாக நாட்டில் உருவ கொண்ட அரசியல் சக்திகளின் புதிய ஒப்புவலிமையை அந்தச் சபை பிரதிபலிக்கவில்லே என்றபோதிலும், கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் இந்தச் சபையைக் கூட்டுவது அவசியம் எனக் கருதின. காரணம், உழைப்பாளி மக்களில் பிற்பட்ட பகுதியினரிடையே இன்னமும் பூர்ஷ்வா சட்ட சபை முறையின்மீது நம்பிக்கை இருந்ததே. அந்த அரசியல் நிர்ணய சபை 1918 ஜனவரி 5ல் தொடங்கியது.மறுநாளே அதிலுள்ள புரட்சி எதிர்ப்பாளிப் பெரும்பான்மையினர், ருஷ்யாவை ஒரு சோவியத் குடியரசாகப் பிரகடனம் செய்யும் சோவியத் அரசாங்கம் பிரேரித்த ''உழைக்கும்,சுரண்டப்பட்டுவரும் மக்களின் உரிமைகள்பற்றிய அறிக்கையை'' அங்கீகரிக்கவும், சோவியத் ஆட்சியின் அரசாணேகளே ஊர்ஜிதப்படுத்தவும் மறுத்தபோது, சோவியத்துக்களின் அகில ருஷ்யாவின் மத்திய நிர்வாகக் குழுவின் அரசாணேப்படி அரசியல் நிர்ணய சபை கலேக்கப்பட்டது. அந்தச் சபையைக் கலேத்துவிடும் முடிவைத் தொழிலாளர்கள், போர்வீரர்கள், விவசாயிகள், ஆகியோரின் பெரும்பகுதியினர் உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டார்கள்.—191.

64 *1917 ஜூன் 11(24)ல்*, போல்ஷெவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி பெத்ரோகிராதில் ஏற்பாடு செய்திருந்த சமாதான பூர்வமான தொழிலாளர், போர்வீரர் ஆர்ப்பாட்டத்தைப்பற்றிய பிரச்சினேயை பெத்ரோகிராத் தொழிலாளர், போர்வீரர் பிரதிநிதிகளின் சோவியத்தின் நிர்வாகக் குழு விவாதித்தபோது, மென்ஷெவிக்காகிய இ. கி. த்ஸெரெத்தேலி என்பவர் போல்ஷெவிக்குகளே ஆதரிக்கிற தொழிலாளர்களே நிராயுதபாணியாக்க உறுதி

யான நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பயமு திஞர்.—*193*.

65 லிபெர்டான்கள்—மி. இ. லீபெர், பி. இ. டான் என் மென்ஷெவிக் தலைவர்களுக்கும், அவர்களின் ஆதரவா களுக்கும் கொடுக்கப்பட்ட நையாண்டிப் பெயர்.—*193*.

66 ருஷ்ய மகாகவி பூஷ்கினின் ஒரு அங்கதச் செய்யுளிலிருந் எடுத்தாளப்பட்ட வரி.—*197*.

67 **கிழக்கத்திய மக்களினங்களினது கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களி இரண்டாம் அகில ருஷ்ய காங்கிரஸ்** என்பது ருஷ்யாவி கம்யூனிஸ்ட் கட்சியினது மத்தியக் கமிட்டியின் கீழ் கிழக்கத்திய மக்களினங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட ஸ்தாபனங்களின் பியூரோவால் கூட்டப்பட்டு, *1919* நவம்பர் *22* முதல் டிசம்பர் *3* முடிய மாஸ்கோவில் நடந் தது.—*204*.

**கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது காங்கிரஸ்** *1920* ஜூலை *19*லிருந்து ஆகஸ்ட் *7* வரை நடந்தது.

காங்கிரஸின் முதல் கூட்டத்தில் சர்வதேச நிலைமை யும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் அடிப்படைக் கடமை களும்பற்றிய உரையை வி.இ.லெனின் ஆற்றிஞர். முதலா வது உலக யுத்தத்துக்கும் மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கும் பிறகுள்ள சர்வதேசப் பொரு ளாதார—அரசியல் நிலைமைபற்றிய அவருடைய பகுப் பாய்வை அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸில் நிறை வேற்றப்பட்ட முடிவுகள் அமைந்தன. பாட்டாளி வர்க்கச் சக்திகளை ஒன்றுபடுத்துவதையும் கம்யூனிஸ்ட் கட்சி களைப் பலப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து சந்தர்ப்பவாதப் பேர் வழிகளை விலக்கி சுத்தப்படுத்தும் பணியை லெனின் முன்வைத்தார்; மேலும், அதே சிமயத்தில், அநேக கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் ஸ்தாபனங்களிலும் உள்ள செக்டேரியன் தவறுகளையும் அராஜகவாத—சண்டிகலிஸ்ட் போக்குகளையும் அவர் விமர்சித்தார். லெனினுடைய ''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலினது இரண்டாம் காங் கிரஸின் அடிப்படைக் கடமைகள் பற்றிய ஆய்வுரை களை'' ஒரு தீர்மானமாகக் காங்கிரஸ் நிறைவேற்றியது.

இந்தக் காங்கிரஸில் தேசிய, காலனிப் பிரச்சினை கள் பற்றிய குழுவின் அறிக்கையையும் லெனின் முன்வைத் தார். நிகழ்ச்சி நிரலின் இந்த விஷயத்தின் மீது காங்கிரஸ்

இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது; அதாவது, லெனின் வரைந்த ''தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுரைகள்'' ஒன்று; ''தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய கூடுதலான ஆய்வுரைகள்'' என்கிற மற்றொன்று.

லெனின் எழுதிய ஆய்வுரைகளின் அடிப்படையில் விவசாயப் பிரச்சினை மீது காங்கிரஸ் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் விவசாயிகளுக்குமிடையே ஒரு கூட்டணி இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியது, பாட்டாளி வர்க்கத் தலைமை என்கிற கருத்தை முன்வைத்தது, சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கான போராட்டக் காலத்திலும் சரி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநிறுத்தப்பெற்ற பிறகுள்ள காலத்திலும் சரி, விவசாயி மக்களின் பல்வேறு பகுதிகள் சம்பந்தமாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடமைகளை வரையறுத்தது.

காங்கிரஸின் முன்நின்ற மையப் பிரச்சினைகளில் ஒன்று, கம்யூனிஸ்ட் கட்சி வகிக்கும் பாத்திரமும் கட்சிக்கும் வர்க்கத்துக்கும் இடையேயுள்ள உறவுகளும் பற்றியதாகும். ''பாட்டாளி வர்க்கப் புரட்சியில் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம் குறித்து'' ஒரு தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றியது; இதை வரைவதில் லெனின் பங்குகொண்டார். சோஷலிஸ்ட் புரட்சியின், சோஷலிஸத்தின் வெற்றிக்கு அடிப்படை நிபந்தனை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை என்று தீர்மானம் வலியுறுத்தியது.

இந்தக் காங்கிரஸ் நிறைவேற்றிய ''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலில் அனுமதிப்பதற்குரிய நிபந்தனைகள்'' கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பலப்படுத்துவதிலும் ஒன்றுபடுத்துவதிலும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலுக்குள் சந்தர்ப்பவாதக் கட்சிகளும் குழுக்களும் ஊடுருவுவதைத் தடுப்பதிலும் பெரும் பாத்திரம் வகித்தது.

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சியிலே கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாம் காங்கிரஸ் முக்கியமான பங்காற்றியது. அது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் வேலைத்திட்ட, செயல்தந்திர, ஸ்தாபன அமைப்பு அடிப்படைகளையும் வகுத்து வைத்தது. காங்கிரசுக்குப் பிறகு, ''தொழிலாளி வர்க்க இயக்கம் முழுவதற்கும் கம்யூனிஸம் ஒரு மையப் பிரச்சினையாகி விட்டது'' என்று லெனின் சொன்னார்.—*211.*

பின்லாந்தில் *1918* ஜனவரி *27*ம் தேதியன்று தொடங்கிய புரட்சியின்விளைவாக, ஸ்வின்ஹுஃவுட் பூர்ஷ்வா அரசாங்

கம் வீழ்த்தப்பட்டு அதிகாரத்தைத் தொழிலாளர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஜனவரி 29ம் தேதியில் ஒரு புரட்சிகரமான அரசாங்கம், மக்கள் பிரதிநிதிகளின் கவுன்சில் எனப்பட்டது, நிறுவப்பெற்றது.

பின்லாந்து சோஷலிஸ்ட் தொழிலாளர் குடியரசுக்கும் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசுக்கும் இடையே 1918 மார்ச் 1ம் தேதி பெத்ரோகிராத் நகரில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது. முழுமையான சமத்துவம், பரஸ்பர அரசுரிமைகளில் மதிப்பு பற்றிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, வரலாற்றிலேயே இரண்டு சோஷலிஸ்ட் அரசுகளிடையே ஏற்பட்ட முதல் ஒப்பந்தம் அதுதான்.

ஜெர்மானியத் துருப்புக்களின் உதவியைக் கொண்டு பிற்போக்குச் சக்திகள் பின்லாந்தில் புரட்சியை 1918மே மாதத்தில் நசுக்கின.

ஜெர்மன் படையெடுப்பாளர்களையும் புரட்சி எதிர்ப்பு ஊல்மானிஸ் அரசாங்கத்தையும் எதிர்த்து லாத்வியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நடத்திய வெகுஜன நடவடிக்கைகள் 1918 டிசம்பர் 18ல் ஒரு தாற்காலிக சோவியத் அரசாங்கம் நிறுவப்பெறுவதில் கொண்டு ...ாய் விட்டன; அது சோவியத்துக்களின் கைக்கு அரசு ...காரம் மாற்றப்பட்டதைப்பற்றி ஒரு பிரகடனத்தைப் ...பித்தது. சோவியத் லாத்வியாவில் செஞ்சேனை ...டிக்கப்பட்டது, நிலப்பிரபுக்களின் நிலம் பறிமுதல் ...யப்பட்டது, பாங்குகளும் பெரிய வியாபார நிறு...ங்களும் தொழிற்சாலைகளும் தேசியச்சொத்தாக்கப் ...ட்டன, சமுதாய இன்ஷூரன்ஸ் புகுத்தப்பட்டது, வேலைநாள் எட்டு மணிநேரம் என்று குறுக்கப்பட்டது, மக்களுக்குப் பொது உணவு விநியோக ஏற்பாடு அமைக்கப்பட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் ஆங்கிலோ ஏகாதிபத்தியவாதிகளும் ஆயுதமும் தளவாடமும் கொடுத்து உதவிய நிலையில் ஜெர்மன் ராணுவமும் ருஷ்யவெள்ளைப் படையினரும் 1919 மார்ச் மாதத்தில் சோவியத் லாத்வியாவை எதிர்த்து ஒரு வீச்சுள்ள தாக்குதலைத் தொடங்கினார்கள். 1920 ஆரம்பத்தில் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, சோவியத் லாத்வியா முழுவதையும் தலையீட்டாளர்கள் கைப்பற்றினார்கள். பூர்ஷ்வாப் புரட்சி எதிர்ப்பு நாடெங்கும் பயங்கர ஆட்சியை நிலை நாட்டியது.—215.

70 "கில்டு சோஷலிஸம்" என்பது பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தில் சீர்திருத்தவாதப் போக்கு; இது முதலாவது

உலக யுத்தத்திற்குமுன் தோன்றியது. ''கில்டு சோஷலிஸ்டுகள்'' அரசு என்பது வர்க்கத் தன்மை அற்றது என்று வாதித்தார்கள், நடப்பிலுள்ள தொழிற்சங்கங்களின் அடிப்படையில் உற்பத்தியாளர்களின் விசேஷ சங்கங்களை (கில்டுகளை) நிறுவி, ஒரு கூட்டமைப்பில் ஒன்றுபடுத்தப்பட்ட இந்த ஸ்தாபனங்களுக்குத் தொழில் நிர்வாகம் மாற்றிக் கொடுத்து விட வேண்டும் என்று வற்புறுத்திக் கோரினார்கள்.

1920களில் ''கில்டு சோஷலிஸம்'' பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செல்வாக்கு அனைத்தையும் இழந்துவிட்டது.—224.

71 ஜிங்கோயிஸம் [Jingoism] என்பது போர்த் தன்மை கொண்ட இனவெறி, அது ஒரு ஆக்கிரமிப்புப்பான்மையுள்ள ஏகாதிபத்தியக் கொள்கையைப் பிரசாரம் செய்தது. 1870களில் பிரிட்டனில் இசையரங்குகளில் உலாவிய ஒரு இனவெறி கொண்ட பாட்டின் அடிகளிலிருந்து இந்தச் சொல் எடுத்தாளப்பட்டது.—233.

72 யுத்தத்தைப் பற்றிய 1912 ஆண்டைய பாஸெல் கொள்கையறிக்கை 1912 நவம்பர் 24-25 தேதிகளில் பாஸெல் நகரில் நடந்த உலக சோஷலிஸ்ட் காங்கிரஸ் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அது மக்கள் சமூகங்களை ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் அபாயத்தைக் குறித்து எச்சரித்தது, இந்த யுத்தத்தின் சூறையாடும் குறிக்கோள்களை எடுத்துக் காட்டியது, மேலும் சமாதானத்துக்காக உறுதியுடன் போராடும்படி எல்லா நாட்டுத் தொழிலாளர்களையும் அறைகூவியழைத்தது. ஷ்டுட்கார்ட் காங்கிரஸில் (1907) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து, லெனின் வரையறுத்த ஒரு விஷயாம்சத்தை—ஏகாதிபத்திய யுத்தம் வெடித்தால் அதன் விளைவாக ஏற்படும் பொருளாதார-அரசியல் நெருக்கடியை முதலாளி வர்க்க ஆட்சியின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தவும் சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய போராட்டத்தை வளர்க்கவும் சோஷலிஸ்டுகள் பயன்படுத்தித் தீரவேண்டும் என்று சொன்ன விஷயாம்சத்தை—இது சேர்த்துக் கொண்டது.—233.

73 ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் பத்தாவது காங்கிரஸ் மாஸ்கோவில் 1921, மார்ச் 8-16 தேதிகளிடையே நடந்தது.

மத்தியக் கமிட்டியின் அரசியல் நடவடிக்கை பற்றிய ரிப்போர்ட்டையும் கட்டாயப் பண்ட வசூலுக்குப் பதிலாக வருமானத்துக்கு ஏற்ற பண்டரூப வரி விதித்

தல், கட்சியின் ஒற்றுமை, அராஜகவாத-சிண்டிகலிஸ்ட் திரிபு, ஆகியவற்றைப் பற்றிய ரிப்போர்ட்டுகளையும் கேட்டு, அவற்றையும் பிற பிரச்சினைகளையும் அது விவாதித்தது.

‘‘கட்சி ஒற்றுமை பற்றி’’, ‘‘நம் கட்சியிலுள்ள சிண்டிகலிஸ்ட், அராஜகவாதத் திரிபைப் பற்றி’’ என்கிற தீர்மானங்களை அது நிறைவேற்றியது. இவற்றை லெனின் பிரேரேபித்தார். புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மாறிச்செல்வது பற்றிய ஒரு முடிவையும் தேசியப் பிரச்சினையில் கட்சியின் உடனடியான கடமைகளைப் பற்றிய ஒரு தீர்மானத்தையும் பிற முடிவுகளையும் அது நிறைவேற்றியது.—240.

74 ‘‘தொழிலாளர் எதிர்த்தரப்பு’’ என்பது கட்சிக்கு விரோதமான ஒரு பிளவுபடுத்தும் குழு; இது ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியில் 1920ல் தோன்றியது. 1920-21ல் தொழிற்சங்கங்களின் பாத்திரம் பற்றி நடந்த பொது விவாதத்தின்போது இந்த எதிர்த்தரப்பு இறுதி வடிவம் பெற்றது. இந்த எதிர்த்தரப்புக்கும் தொழிலாளி வர்க்கப் ண்புக்கும் ஒரு தொடர்பும் கிடையாது; அது குட்டி ர்ஷ்வா உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் வெளியிட் து. அது தொழிற்சங்கங்களை சோவியத் அரசுக்கும் ம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிர்நிலையில் நிறுத்திக்காட்டி பது, தொழிலாளி வர்க்கத்தின் உச்ச ஸ்தாபன வடிவம் கட்சியல்ல, தொழிற்சங்கங்களே என்றும் அது கருதியது.

‘‘தொழிலாளர் எதிர்த்தரப்பின்’’ கருத்துக்களை ஆதரித்து நிற்பது கட்சி உறுப்பினர் தன்மைக்குப் பொருந்தாது என்று ஏற்றுக்கொண்ட பத்தாவது கட்சிக் காங்கிரஸுக்குப்பிறகு இந்த எதிர்த்தரப்பு தன் ஆதரவாளர்களில் பெரும்பகுதியினரை இழந்தது.—240.

75 ‘‘ஜனநாயக மத்தியத்துவவாதக்’’ குழு என்பது ஒரு சந்தர்ப்பவாதப் பிளவுக் குழு; அது 1919ல் நடந்த ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் எட்டாவது காங்கிரஸில் கட்சியின் வளர்ச்சி சோவியத் வளர்ச்சி பற்றிய லெனினின் கோட்பாடுகளை எதிர்த்தது. அந்தக் குழு சோவியத்துக்களிலும் தொழிற்சங்கங்களிலும் கட்சியே தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டும் என்கிற கருத்தை நிராகரித்தது, தொழிலில் இயக்குநர்கள் சொந்தப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்கிற கோட்பாட்டை எதிர்த்தது, பிளவுபடுத்தும் பிரிவுகளுக்கும் குழுக்களுக்கும் செயல் சுதந்திரம் இருக்கவேண்டும் என்று கோரியது. அதற்குக் கட்சி உறுப்பினர்களிடையே செல்

வாக்கு இருக்கவில்லை. பத்தாவது கட்சிக் காங்கிரஸில் ''ஜனநாயக மத்தியத்துவவாதிகள்'' தம்முடைய நிலையைத் தாங்கிக் காக்க மறுத்துவிட்டார்கள் காங்கிரஸுக்குப் பிறகு, அந்தக் குழுவின் தலைவர்கள் மட்டுமே கட்சிக்கு விரோதமான செய்கைகளைத் தொடர்ந்து செய்தனர். அவர்கள் த்ரோத்ஸ்கியவாதிகளுடன் ஒரு கூட்டணி அமைத்தார்கள், *1927ல்*, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.—*240*.

76 க்ரோன்ஷ்டாட்டில் ஏற்பட்ட புரட்சி எதிர்ப்புக் கலக எழுச்சியை இது குறிக்கிறது. இது *1921* பிப்ரவரி *28ல்* கிளம்பியது. ருஷ்யப் புரட்சி எதிர்ப்பாளர்களும் வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளும் இதை உருவாக்கினர், இதற்கு மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் அராஜகவாதிகளும் உடந்தையாயிருந்தனர். ''ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களுக்கே யன்றிக் கட்சிகளுக்கல்ல'' என்கிற கோஷத்தை அதன் தலைவர்கள் முன்வைத்தனர். அதைக் கொண்டு மக்களை ஏமாற்றிப் புரட்சிக்கு எதிராக எழச்செய்து சோவியத் அமைப்பை அழிக்கச் செய்யலாம் என்று நம்பினார்கள். சோவியத்துக்களின் தலைமையிலிருந்து கம்யூனிஸ்டுகளை அகற்றி, அதன் வழியாக இந்த அதிகாரம் வகிக்கும் உறுப்புக்களை ஒன்றுமில்லாதவையாக்கி, ருஷ்யாவில் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தையும் முதலாளித்துவ அமைப்பையும் மீண்டும் ஏற்படுத்த இந்தப் புரட்சி எதிர்ப்பாளர்கள் முயன்றனர்.

*1921* மார்ச் *18ல்* இந்தக் கலக எழுச்சி நசுக்கப்பட்டது.—*241*.

77 ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் பத்தாம் அகில ருஷ்ய மாநாடு மாஸ்கோவில் *1921* மே *26-28* தேதிகளிடையே நடந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயலாக்குவதற்குரிய வழிவகைகளிலே தான் பிரதானமாகக் கவனம் செலுத்தப்பட்டது. பண்டரூப வரி பற்றி லெனின் ஒரு விரிவுரை ஆற்றினார், அதன் மீதுஇறுதியுரையும் ஆற்றினார். தொழிற்சங்கங்களின் நான்காம் அகில ருஷ்யக் காங்கிரஸில் கம்யூனிஸ்ட் குழு செய்தவேலை பற்றியும் அவர் ஒரு விரிவுரை ஆற்றினார்.—*252*.

78 கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றும் காங்கிரஸ் மாஸ்கோவில் *1921* ஜூன் *22* ஜூலை *12* தேதிகளிடையே நடந்தது. ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் செயல்தந்திரங்கள்பற்றி லெனின் ஒரு விரிவுரை

ஆற்றினர், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் செயல்தந்திரங்களை ஆதரித்தும் இத்தாலிய பிரச்சினை பற்றியும் உரைகள் நிகழ்த்தினர். காங்கிரஸின் கமிஷன்களிலும் காங்கிரஸ் பிரதிநிதிகளின் மாநாட்டிலும் அவர் பேசினர். அவரும் பங்கு கொண்ட நிலையிலேயே காங்கிரஸ் நிறைவேற்றிய எல்லாப் பிரதானமான முடிவுகளும் தயாரிக்கப்பட்டிருந்தன.

இளம் கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைப்பதிலும் வளர்ப்பதிலும் இந்தக் காங்கிரஸ் ஒரு முக்கியமான பாத்திரம் வகித்தது. செயல்தந்திரங்கள்பற்றிய பிரச்சினையே காங்கிரஸ் முன் முக்கிய விஷயமாயிருந்தது. தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து முதலாளித்துவம் தொடுத்த தாக்குதலும், 1920-21ல் அநேக நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான நடவடிக்கைகளின் தோல்வியும், உலகில் மாற்றங்களை உண்டாக்கி அவற்றால் உலகப் புரட்சியின் வளர்ச்சி வேகம் குறைக்கப்பட்டது. இது கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயல்தந்திரங்களைத் திவிரமாக மாற்றிக் கொள்வதை அவசியமாக்கியது. எனவே, கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் செயல்தந்திரங்களையும் அதன் ஸ்தாபன அமைப்புக் கோட்பாடுகளையும் வரையறுப்பதிலே காங்கிரஸ் பிரதானமாகக் கவனம் செலுத்தியது. காங்கிரஸில் லெனின் ''இடதுசாரி'' வறட்டுச் சூத்திரவாதத்தையும் போலிப் புரட்சி வாய்வீச்சையும் செக்டேரியனிஸத்தையும் எதிர்க்கும் போராட்டத்தில் நிறையக் கவனம் செலுத்தினர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைக் கம்யூனிஸத்துக்குக் கொண்டுவருவதையும், தொழிலாளி வர்க்கத்திடையே ஒற்றுமையைச் சாதிப்பதையும், ஐக்கிய முன்னணிச் செயல்தந்திரங்களைச் செயல்படுத்துவதையும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடமையாக வைத்தன.—255.

79 ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சி—21ம் குறிப்பைப் பார்க்கவும்.—256.

80 ஜெர்மன் சோஷலிஸ்ட் கட்சிக்கும் ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிக்கும் எல்லாத் தொழிற்சங்க ஸ்தாபனங்களுக்கும் ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி எழுதி, 1921 ஜனவரி 8ல் பிரசுரித்த ''பகிரங்கக் கடிதம்''. அதில் ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சி, திவிரப்பட்டு வரும் பிற்போக்கை எதிர்த்தும், உழைப்பாளி மக்களின் ஜீவாதார உரிமைகளுக்கு எதிராக முதலாளித்துவத்தின் தாக்குதலை எதிர்த்தும்

ஒரு கூட்டுப் போராட்டம் நடத்தும்படி [illegible] தொழிலாளிகளையும் சோஷலிஸ்ட் ஸ்தாபனங்களையும் [illegible] சங்க ஸ்தாபனங்களையும் அறைகூவியழைத்தது.— [illegible]

81 ''தாக்குதல் போராட்டம் பற்றிய தத்துவம்'' அல்லது ''தாக்குதல் பற்றிய தத்துவம்'' ஜெர்மனியில் 1920ல் தோன்றியது. அதன் ஆதரவாளர்கள் கட்சி எப்பொழுதும் தாக்கும் செயல்தந்திரங்களையே கைக்கொண்டு தீர வேண்டும், புரட்சிகரமான செயலுக்குரிய எதார்த்தமான முதனிலைமைகள் இருக்கின்றனவா இல்லையா என்பதையோ, கட்சிக்கு மக்களின் விரிவான பகுதிகளிடையே ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று நம்பினார்கள். ''தாக்குதல் பற்றிய தத்துவத்துக்கு'' ஹங்கேரியிலும் செகோஸ்லோவாக்கியாவிலும் இத்தாலியிலும் ஆஸ்திரியாவிலும் பிரான்சிலும் இருந்த ''இடதுசாரிகளிடையேயும்'' ஆதரவாளர்கள் இருந்தனர்.

1921 மார்ச் மாதத்தில் மத்திய ஜெர்மனியில் தொழிலாளர்களின் புரட்சியெழுச்சிக்கு ஆயத்தஞ் செய்கையிலும் அந்தப் புரட்சியெழுச்சியின் போதும், ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி செய்த தவறுகளை நியாயப்படுத்துவதற்கான முயற்சியில் ஜெர்மன் ''இடதுசாரிகள்'' இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்தினார்கள் (ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் அரசாங்கத்தின் ஆத்திரமூட்டலுக்கு இரையானார்கள்; அந்த அரசாங்கம், தேவையான தயாரிப்புகள் செய்து முடிப்பதற்கு முன்பே புரட்சி யெழுச்சி ஏற்படச்செய்து அதன் வழியே கம்யூனிஸ்டுகளை முறியடிக்க விரும்பியது).

கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாம் காங்கிரஸில் ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்ட் கட்சி, இத்தாலிய, ஹங்கேரிய, ஆஸ்திரியக் கம்யூனிஸ்ட் கட்சிகள், வேறு சில கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவற்றின் [illegible] குழுக்களில் சில உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் செயல்தந்திரங்கள் பற்றிய [illegible] அடிப்படையாக இந்தத் ''தாக்குதல் பற்றிய தத்துவத்தைப்'' பயன்படுத்த விரும்பினார்கள். [illegible] புறம்பான இந்த [illegible] காங்கிரஸ் கண்டித்துத் [illegible] அதற்குப் பதிலாகப் புரட்சிக்குப் [illegible] ரிப்பு செய்கிற, கம்யூனிஸ்ட் இயக்கத்தில் [illegible] லாளி வர்க்கத்தின் பெரும் [illegible]

வருகிற லெனினது செயல்தந்திரங்களைத் தேர்ந்து கொண்டது.—261.

82 இரண்டரையாவது இன்டர்நேஷனல் அல்லது ''வியென்னு இன்டர்நேஷனல்'' (''சோஷலிஸ்ட் கட்சிகளின் சர்வ தேசச் சங்கம்'' என்று அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டது) என்பது சோஷலிஸ்ட் கட்சிகளையும் குழுக்களையும் கொண்ட ஒரு சர்வதேச ஸ்தாபனம்; புரட்சிகரமான மக்கள் திரளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக அது இரண்டாவது இன்டர்நேஷனலிலிருந்து வெளியேறித் திரவேண்டியிருந்தது. 1921 பிப்ரவரியில் வியென்னுவில் நடந்த மாநாட்டில் அது அமைக்கப்பெற்றது. அதன் தலைவர்கள், இரண்டாவது இன்டர்நேஷனலைச் சொல்லளவிலே விமர்சித்துக்கொண்டே தங்கள் செய்கைகள் மூலமாகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் எல்லா முக்கியமான பிரச்சினைகளிலும் ஒரு சந்தர்ப்பவாத, பிளவுபடுத்தும் கொள்கையைப் பின்பற்றி வருவதைக் காட்டிக் கொண்டார்கள், தொழிலாளி வர்க்க மக்கள் பகுதிகளிடையே கம்யூனிஸ்டுகளின் வளர்ந்துவரும் செல்வாக்கை எதிர்ப்பதற்காகப் புதிதாகப் படைக்கப்பெற்ற சங்கத்தைப் பயன்படுத்த முயன்றார்கள்.

1923 மே மாதத்தில் இரண்டாவது இன்டர்நேஷனலும் இரண்டரையாவது இன்டர்நேஷனலும் சோஷலிஸ்ட் தொழிலாளர் இன்டர்நேஷனல் எனப்படுவதில் இணைந்து கொண்டன.—264.

83 பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தின் வெளிநாட்டு மந்திரி பா. நி. மில்யூக்கோவ் ஆந்தாந்த் நாடுகளிலுள்ள ருஷ்ய ராஜதந்திரப் பிரதிநிதிகளுக்கு 1917 ஏப்ரில் 18 (மே 1) அனுப்பிய அறிக்கை; அதில், கடைசிவரை யுத்தத்தை நடத்தித்திர மக்கள் அனைவரும் உறுதிகொண்டிருப்பதாகவும் நேசநாட்டினருடன் தொடர்பில் தனது பொறுப்புக்களை நிறைவேற்றத் தாற்காலிக அரசாங்கம் நோக்கம் கொண்டிருப்பதாகவும் பிரகடனப்படுத்தினர். இந்த அறிக்கை மக்களின் விரிந்த பகுதியினரிடையே ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது, அவர்கள் ஏப்ரில் 20-21 (மே 3-4) தேதிகளில் ஒரு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.—273.

84 இரண்டாவது இன்டர்நேஷனல், இரண்டரையாவது இன்டர்நேஷனல், மூன்ருவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் ஆகியவற்றின் மாநாடு; இது பெர்லினில் 1922 ஏப்ரில் 2-5 தேதிகளிடையே நடந்தது.—285.

85 இரண்டாவது இன்டர்நேஷனலின் சந்தர்ப்பவாதிகள். —285.

86 சோவியத் ஆட்சிக்கு எதிரான புரட்சி எதிர்ப்பு, பயங்கர வாதச் செயல்களுக்காக சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், மற்ற முக்கிய மான உறுப்பினர்கள் மீது உச்ச புரட்சி நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்குத் தொடர்ந்ததைப் பற்றிய அரசு அரசியல் நிர்வாகத்தின் ஆணை சோவியத் பத்திரிகை களில் 1922 பிப்ரவரி 28ல் வெளியாயிற்று. இரண்டா வது, இரண்டரையாவது இன்டர்நேஷனல்களின் தலை வர்கள்—அந்நிய நாடுகளில் அடைக்கலம் புகுந்த சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகள் இவர்களுக்கு வேண்டுகோள் செய்து கொண்டார்கள்—மூன்று இன்டர்நேஷனல்களின் பெர்லின் மாநாடு நடக்கும்வரை வழக்கு விசாரணையைத் தள்ளிப் போடுமாறு சோவியத் அரசாங்கத்திடம் கோரினார்கள்.

1922 ஜூன் 8லிருந்து ஆகஸ்ட் 7 வரை மாஸ்கோ வில் வழக்கு விசாரணை நடந்தது. அது சோஷலிஸ்ட் புரட்சிவாதக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகள்—சோவியத் ஆட்சிக்கு எதி ராகச் சதிகளும் கலக எழுச்சிகளும் உருவாக்குவது, தொழிலாளி வர்க்கத் தலைவர்களைப் படுகொலை செய் வது, அந்நியத் தலையீட்டுக்கு ஆதரவளிப்பது—பற்றிய ஒரு சித்திரத்தை வெளிப்படுத்தியது. குற்றம் சாட்டப் பட்டவர்களில் பன்னிருவருக்கு உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது (அகில ருஷ்யாவின் மத்திய நிர்வாகக் குழுவின் தலைமைக்குழு இந்தத் தண்டனையை ஊர்ஜிதம் செய்து, சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சி சோவியத் ஆட்சிக்கு எதிரான தனது ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமேயானால் அந்தத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஆணையிட் டது). குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இரண்டிலிருந்து பத்தாண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப் பெற்றார்கள். சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் குற்ற நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, வருத்தந்தெரிவித்துக் கொண்ட மற்ற வர்கள் காவலிலிருந்து விடுதலையளிக்கப்பட்டனர்.—288.

87 தொழிலாளர்கள், போர் வீரர்கள் பிரதிநிதிகளினது சோவியத் துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் பெத்ரோ கிராத் நகரில் 1917 அக்டோபர் 25-26 (நவம்பர் 7-8) தேதிகளில் அக்டோபர் ஆயுதப் புரட்சியெழுச்சியின்

போது நடந்தது. தொழிலாளர்கள், போர்வீரர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகளினது சோவியத்துக்களின் கைக்கு ஆட்சி அதிகாரம் மாறி விட்டதை அது பிரகடனப்படுத்தியது; லெனின் வரைந்த சோவியத் ஆட்சியின் முதல் ஆணைகளை அங்கீகரித்தது. பின்சொன்னவை சமாதானத்தைப்பற்றிய ஆணையும் நிலம்பற்றிய ஆணையுமாகும். முதன்முதலான தொழிலாளர் விவசாயி அரசாங்கத்தை லெனின் தலைமையில் அந்தக் காங்கிரஸ் அமைத்தது.—*299*.

88 சார்ட்டிஸம் [Chartism] என்பது *1830-40*களில் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் ஒரு வெகுஜனப் புரட்சிகர இயக்கமாகும். சார்ட்டிஸ்டுகள் சார்ட்டரை (விண்ணப்பப் பத்திரத்தை) தயாரித்தார்கள், அதில் அவர்கள் பாராளுமன்றத்தின் முன் கோரிக்கைகள் வைத்தார்கள். இந்தப் பத்திரத்தில் அவர்கள் *21* வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் வோட்டுரிமை வேண்டும், இரகசிய வாக்களிப்பு உரிமை வேண்டும், பாராளுமன்றத்தில் ஸ்தாபனம் வகிப்பதற்குத் தேவைப்படும் சொத்துத் தகுதியை ஒழிக்க வேண்டும், இன்னும் இவைபோன்றவற்றிற்காக மனுச்செய்து கொண்டார்கள். *1840*ல் ''தேசியச் சார்ட்டர் சங்கம்'' அமைக்கப்பெற்றது; இது தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன்முதலான வெகுஜனத் தொழிலாளர் கட்சியாகும். *1848*க்குப் பிறகு சார்ட்டிஸ்ட் இயக்கம் குன்றி விட்டது. ஆனால் ஆங்கில அரசியல் வரலாற்றின் மீதும் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிமீதும் பலத்த செல்வாக்கு செலுத்தியது. அதை ''முதன்முதலான, விரிவான, உண்மையிலேயே வெகுஜன அரசியல் முதிர்ச்சியுள்ள தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கம்'' என்று லெனின் குணங்குறித்தார்.—*300*.

*1856* ஏப்ரில் *16*ல் கார்ல் மார்க்ஸ் பி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்கவும் —*303*.

அக்ஸெல்ரோத், பா. பொ. [Axelrod, P. B.] *(1850—1928)*—ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்; *1903*ல் நடந்த ரு. சோ. டெ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு மென்ஷெவிக்குகளின் ஒரு தலைவர் ஆனார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிபால் பகைமை பாராட்டினார். நாடுகடந்து சென்று சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்கு ஆதரவாகப் பேசினார்.—*44, 307.*

ஆஸ்டெர்லிட்ஸ், பிரீட்ரிஹ் [Austerlitz, Friedrich] *(1862-1931)*—ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் ஒரு தலைவர்; முதலாவது உலக யுத்தத்தின்போது சோஷல்-இனவெறியாளர் ஆகிவிட்டார்.—*21.*

ஆட்லெர், பிரீட்ரிஹ் [Adler, Friedrich] *(1879—1960)*—ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ராட்; மத்தியவாதி; மார்க்ஸீயச் சொற்களைக் கொண்டே புரட்சிகரமான மார்க்ஸீயத்தை நிராகரித்த ''ஆஸ்திரோ-மார்க்ஸீயத்தைப்'' பிரசாரம் செய்தார். *1916*ல் ஆஸ்திரியப் பிரதம மந்திரி கார்ல் வான் ஷ்டுர்கைப் படுகொலை செய்தார்.—*8, 21, 30, 233.*

ஈஸுவ், இ. அ. [Isuv, I. A.] *(1878—1920)*—ஒரு மென்ஷெவிக்.—*193, 194.*

எங்கெல்ஸ், பிரீட்ரிஹ் [Engels, Friedrich] *(1820—1895)*—விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர், ஆசான்; கார்ல் மார்க்ஸின் நண்பரும் போராட்டத் துணைவருமாவார்.—*28, 35, 36, 37, 42, 113, 119, 282.*

ஒஸின்ஸ்கிய், வ.வ. [Osinsky, V. V.] *(1887—1938)*—*1907*ல் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்தார்; அக்டோபர் சோஷ

லிஸ்ட் புரட்சிக்குப்பின் தலைமையான பதவிகளை வகித்தவர். 1918ல் ஒரு ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' ஆனார். 1923ல் த்ரோத்ஸ்கியவாத எதிர்த்தரப்பில் சேர்ந்தார். —*198, 199, 252.*

கரேலின், வி. அ. [Karelin, V. A.] *(1891—1938)*—இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் அமைப்பாளர்களில் ஒருவர்; அதன் மத்தியக் கமிட்டியின் ஒரு உறுப்பினர்; 1917 டிசம்பரில் சோவியத் அரசாங்கத்தில் ஒரு உறுப்பினரானார். 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கலக எழுச்சியை ஒழுங்கமைத்தவர்களில் ஒருவர். அந்தக் கலக எழுச்சி நசுக்கப்பட்டபோது, வெளிநாட்டில் குடியேறினார். —*183, 192.*

கர்னிலோவ், லா. கி. [Kornilov, L. G.] *(1870—1918)*—ஜார் ராணுவத்தின் தளபதி; 1917 ஆகஸ்டில் ஒரு புரட்சி எதிர்ப்புக் கலக எழுச்சிக்குத் தலைமை தாங்கினார்—அதன் குறிக்கோள் ருஷ்யாவில் முடியாட்சியை மீண்டும் நிலைநாட்டுவதாயிருந்தது.—*126, 127.*

கவென்யாக், லூயி எமேன் [Cavaignac, Louis Eugène] *(1802—1857)*—பிரெஞ்சுத் தளபதி, ஒரு பிற்போக்கான அரசியல் தலைவர். 1848 ஜூன் மாதத்தில் பாரிஸ் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சியெழுச்சியை மிருகத்தனமாக நசுக்கினார்.—*178.*

காவுத்ஸ்கி, கார்ல் [Kautsky, Karl] *(1854—1938)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின், இரண்டாவது இன்டர்நேஷனலின் ஒரு தலைவர்; தன்னுடைய அரசியல் வாழ்க்கையின் தொடக்கப் பகுதியில் ஒரு மார்க்ஸீய நிலையை வகித்து வந்தவர், பிறகு மார்க்ஸீயத்தைக் காட்டிக்கொடுத்தவர்.—*8, 9, 10, 20.*

கிரிஸ்பின், அர்த்தூர் [Crispien, Arthur] *(1875—1946)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியின் ஒரு தலைவர், கட்டுரையாளர்.—*27, 47.*

கிரெய்பிஹ், காரெல் [Kreibich, Karel] *(பிறப்பு 1883)*—செகோஸ்லோவாக்கியா, சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முக்கியமான பிரமுகர். செகோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதில் தீவிரப்பங்கு ஆற்றியவர். கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாவது காங்

கிரஸின் பிரதிநிதியாக இருந்தவர்; அந்தக் காலத்தில் ''இடதுசாரிக்'' கருத்துக்களை ஆதரித்தவர். *1922, 1924, 1925* ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தார்; பிற்காலத்தில் ''கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்'' என்கிற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார்.—*276.*

**கிளாவுஸெவிட்ஸ், கார்ல் வான்** [Clausewitz, Karl von] *(1780—1831)*—பிரஷ்ய தளபதி, பிரசித்திபெற்ற ராணுவக் கலைத் தத்துவாசிரியர், நெப்போலியன் யுத்தங்கள், பிற யுத்தங்கள் பற்றிய வரலாறு குறித்து நூல்கள் எழுதிய ஆசிரியர்.—*170, 275.*

**கியெவ்ஸ்கிய், பி. (பியாத்தக்கோவ், கி. லெ.)** [Kievsky, P. (Pyatakov, G. L.)]*(1890—1937)*—*1910*ல் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்தார். ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் பல பொறுப்பான பதவிகளை வகித்தார். உக்ரேய்னுவில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' குழுவுக்குத் தலைமை வகித்தார்; செயலூக்கத்துடன் த்ரோத்ஸ்கியை ஆதரித்தார். *1936*ல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*103, 105, 106, 108, 109.*

**குச்கோவ், அ. இ.** [Guchkov, A. I.] *(1862—1936)*—பெரிய முதலாளி, அக்டோபரிஸ்டுகளின்—இது ருஷ்யாவில் முதலாளி வர்க்கத்தினதும், நிலப்பிரபுகளினதும் ஒரு கட்சி—தலைவர். *1917*ல் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் மந்திரியாயிருந்தவர். ருஷ்யாவில் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து செயலூக்கமுள்ள புரட்சி எதிர்ப்பாளராயிருந்தவர்; புரட்சி எதிர்ப்பு நசுக்கப்பட்டபோது நாடுகடந்து ஓடிவிட்டார்.—*117.*

**குவெல்ச், தாமஸ்** [Quelch, Thomas]*(1886—1954)* ஆங்கிலேய சோஷலிஸ்ட், பிறகு கம்யூனிஸ்டானவர்; தொழிற் சங்கத் தலைவர், கட்டுரையாளர். கடைசிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினுர்.—*233.*

**கெல்லி-விஷ்னெவேட்ஸ்கா, பிளாரென்ஸ்** [Kelley-Wischnewetzka, Florence] *(1859—1932)*—அமெரிக்க சோஷலிஸ்ட் மாது, ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்கிற பி. எங்கெல்ஸின் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார், பிற்காலத்தில் சீர்திருத்தவாதக் கருத்துக்களை ஆதரித்தார்.—*78.*

கே, அ.யூ.[Ghe, A. Y.] *(1879—1919)*—ருஷ்ய அராஜகவாதி. அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியை ஆதரித்தார்.—*183, 192.*

கேட், ஜூல் [Guesde, Jules] *(1845—1922)*—பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கம், இரண்டாம் இன்டர்நேஷனல் ஆகியவற்றின் ஒரு அமைப்பாளர், தலைவர். பிரான்சில் மார்க்ஸீயத்தின் கருத்துக்களைப் பரவச் செய்வதில் மிகு தியாகப் பாடுபட்டவர். வலதுசாரி சோஷலிஸ்டுகளின் கொள்கையை எதிர்த்தார்; தத்துவார்த்தப் பிரச்சினைகளில், செயல்தந்திரப் பிரச்சினைகளில் செக்டேரியன் தன்மைவாய்ந்த தவறுகளைச் செய்தார். 1914ல் உலக ஏகாதிபத்திய யுத்தம் தொடங்கிய போது சோஷலிஸத்துக்குத் துரோகம் செய்து பிரான்சில் பூர்ஷ்வா அரசாங்கத்தில் ஒரு உறுப்பினரானார்.—*36, 83.*

கேரென்ஸ்கிய், அ.பி. [Kerensky, A. F.] *(பிறப்பு 1881)*—ருஷ்யாவில் சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் பிரமுகர். 1917ல் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்துக்குத் தலைமை வகித்தார். 1918ல் நாடுகடந்து ஓடிப் போனார்.—*35, 46, 127.*

கோம்பர்ஸ், ஸாமுவேல் [Gompers, Samuel] *(1850—1924)*—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒரு தலைவர். ''அமெரிக்க லேபர் பெடரேஷனின்'' ஸ்தாபகர்களில், தலைவர்களில் ஒருவர்; முதலாளிகளோடு வர்க்க ஒத்துழைப்பை ஆதரிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தவர்.—*235.*

கோல்ச்சாக், அ.வ. [Kolchak, A. V.]*(1873—1920)*—ஜார் கடற்படைத் தளபதி, முடியரசுவாதி. 1918-20ல் ருஷ்யப் புரட்சி எதிர்ப்பின் முக்கியத் தலைவர்களில் ஒருவர்.—*35.*

செராட்டி, ஜியாச்சின்டோ மெனோட்டி [Serrati, Giacinto Menotti] *(1872—1926)*—இத்தாலியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர்; இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1924ல் இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்.—*290.*

செர்னிஷேவ்ஸ்கிய், நி.க.[Chernyshevsky, N. G.]*(1828—1889)*—மாபெரும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, கற்பனாவாத சோஷலிஸ்ட், விஞ்ஞானி, நூலாசிரியர், இலக்கிய

விமர்சகர். 1860களில் ருஷ்யாவின் புரட்சிகர-ஜனநாயக இயக்கத்திற்குக் கொள்கைவாத உத்வேகம் ஊட்டியவர், அதன் தலைவர்.—*44.*

செர்னேவ்,வி.மி.[Chernov,V.M.] *(1876—1952)*—சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் ஒரு தலைவர், தத்துவாசிரியர். 1917 மே—ஆகஸ்ட் மாதங்களில் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தில் விவசாய மந்திரியாக இருந்தார், நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக் கொண்ட விவசாயிகளைக் கொடுமையாக அடக்கும் கொள்கையைப் பின்பற்றினர். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான புரட்சி எதிர்ப்பு ஆயுதப் போராட்டத்தை உருவாக்க உதவினர். 1920ல் நாடுகடந்து சென்று அங்கே சோவியத் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.—*45, 191.*

ச்ஹெயித்ஸே, நி. ஸெ.[Chkheidze, N. S.]*(1864—1926)*—மென்ஷெவிக்குகளின் ஒரு தலைவர். மூன்ருவது, நான்காவது அரசு டூமாக்களில் ஒரு பிரதிநிதி, நான்காவது அரசு டூமாவில் மென்ஷெவிக் குழுவின் தலைவராயிருந்தார். முதல் உலக யுத்தத்தின் போது மத்தியத்துவவாதியாகவும் சோஷல்-சமாதானவாதியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் ஜார்ஜியாவில் புரட்சி எதிர்ப்பு டிரான்ஸ்காகேஸிய ''செயிம்'' சபையின் தலைவராக இருந்தார், பிறகு நாடுகடந்து வாழ்ந்தார்.—*118.*

ஜார்ஜ், ஹென்றி [George, Henry]*(1839—1897)*—அமெரிக்கக் குட்டிபூர்ஷ்வாப் பொருளாதாரவாதி, கட்டுரையாளர். —*76, 77, 78.*

ஷிடெமன், பிலிப் [Scheidemann,Philipp] *(1865—1939)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியின் அதித வலதுசாரிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் ஒரு தலைவர். 1918-21ல் ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஈவிரக்கமின்றி நசுக்குவதற்கு ஏற்பாடு செய்தவர்.—*20, 31, 46, 47, 48, 50, 51, 235, 300.*

ஷ்பெங்ளர், ஓஸ்வால்ட் [Spengler, Oswald] *(1880—1936)*—ஜெர்மன் ஆன்மீகவாதத் தத்துவஞானி, ஜெர்மன் பாஸிஸத்தின் தத்துவார்த்த முன்சந்ததியினர். உழைப்பாளி மக்களின் ஜனநாயக உரிமைகளையும் மார்க்ஸீயத்தை

யும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் கடுமையாக எதிர்த்தவர்—297.

ஷ்மேரால், போஹுமிர் [Šmeral, Bohumir] *(1880—1941)*—செகோஸ்லோவாக்கிய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு முக்கியமான பிரமுகர், செகோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—277.

ஸஸூலிச், வே. இ. [Zasulich, V. I.]*(1849—1919)*—ருஷ்யாவில் சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் முக்கியமான பங்கு கொண்ட மாது. 1903ல் ரு.ஸோ.டெ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு மென்ஷெவிக் ஆகிவிட்டார்.—44, 307.

ஸிப்யாகின், தி. ஸெ. [Sipyagin, D. S.]*(1853—1902)*—1899ல் ருஷ்யாவில் உள்நாட்டு மந்திரியானுர்; புரட்சிக்காரர்களை ஈவிரக்கமின்றி வேட்டையாடினுர்.—58, 68.

ஸினேவியேவ், கி. யெ.[Zinoviev, G. J.]*(1883—1936)*—1901ல் ரு. சோ. டெ. தொ. கட்சியில் சேர்ந்தார்; போல்ஷெவிக்காக இருந்தார். அக்டோபர் புரட்சிக்குப் பின் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டித் தலைமைக் குழுவின் உறுப்பினர், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் நிர்வாகக் குழுவின் தலைவர். திரும்பத் திரும்பக் கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். 1934ல் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டார்.—285, 295.

ஸுகானவ், நி. (கிம்மெர் நி.நி.) [Sukhanov, N. (Gimmer, N. N.)] *(பிறப்பு 1882)*—பொருளாதாரவாதி, குட்டிபூர்ஷ்வாக் கட்டுரையாளர், மென்ஷெவிக்.—302, 304, 306.

ஸுடெக்கும், அல்பெர்ட் [Südekum, Albert] *(1871—1944)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியின் சந்தர்ப்பவாதத் தலைவர், திரிபுவாதி. காலனிப் பிரச்சினையில் ஏகாதிபத்தியக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தார். தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தை எதிர்த்தார். 1918-20ல் பிரஷ்யாவின் நிதி மந்திரி. கடைக்கோடிச் சந்தர்ப்பவாதத்துக்கு அவர் பெயர் இடுகுறியாயிருந்தது.—298.

ஸோர்கே, பிரீட்ரிஹ் அடோல்ப் [Sorge, Friedrich Adolf] (1828—1906)—ஜெர்மன் சோஷலிஸ்ட், சர்வதேசத் தொழிலாளி வர்க்க, சோஷலிஸ்ட் இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஹ் எங்கெல்ஸின் நண்பர், போராட்டத் துணைவர்.—76, 79.

ஸ்துரூவே, பி. பொ. [Struve, P. B.] (1870—1944)—பூர்ஷ்வாப் பொருளாதாரவாதி, கட்டுரையாளர், மிதவாதி, ருஷ்யாவில் காடெட்டுகளினது கட்சியின் ஒரு தலைவர். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியின் ஒரு கொடிய விரோதி. —45, 55, 59.

ஸ்தோலிப்பின், பி.அ. [Stolypin, P.A.] (1862—1911)—ஜாராட்சி அரசுக்கலைஞர், பெரிய நிலப்பிரபு; 1906-11ல் ருஷ்ய மந்திரி சபையின் தலைவராகவும் உள்நாட்டு மந்திரியாகவும் இருந்தார். புரட்சிக்காரர்களைக் கொடுமையாக அடக்கி ஒடுக்கினார். 1911ல் கொலை செய்யப்பட்டார். —82.

ஸ்பிரிதோனவா, மா. அ. [Spiridonova, M. A.] (1884—1941)—சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியின் ஒரு தலைவி, பிரேஸ்த் ஒப்பந்தம் செய்து கொள்வதை எதிர்த்தார். பின்னால் அரசியல் வேலையிலிருந்து விலகிவிட்டார்.—127.

ஸ்தெக்லோவ், யூ.மி. [Steklov, Y. M.] (1873—1941)—ருஷ்ய சோஷல்-டெமாக்ராட், ரு. சோ. டெ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் (1903) பிறகு போல்ஷெவிக்குகளுடன் நெருங்கிவந்தார். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து புரட்சிகரப் பாதுகாப்புவாத நிலையைப் பற்றி நின்றார், பிறகு போல்ஷெவிக்குகளின் பக்கம் சேர்ந்தார்.—113.

ஹில்பெர்டிங், ருடோல்ப் [Nilferding, Rudolf] (1877—1941)—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியின், இரண்டாவது இன்டர்நேஷனலின் ஒரு சந்தர்ப்பவாதத் தலைவர். ''ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவம்'' பற்றிய தத்துவத்தின் சிருஷ்டிகர்த்தா, அரசு ஏகபோக முதலாளித்துவத்தை நியாயப்படுத்தியவர்.—20, 27, 48, 53.

ஹேன்டெர்ஸன், ஆர்தர் [Henderson, Arthur] (1863—1935)—லேபர் கட்சி, பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கம், இவற்றின் ஒரு தலைவர். 1919ல் பெர்ன் இன்டர்நேஷனலின்

அமைப்பாளர்களில் ஒருவர். *1923ல்* சோஷலிஸ்ட் தொழிலாளர் இன்டர்நேஷனல் எனப்பட்டதின் நிர்வாகக் குழுவின் தலைவர். பிரிட்டனில் பூர்ஷ்வா அரசாங்கங்களில் மந்திரிப் பதவிகளை வகித்தார்.—*297*.

**ஹெம்பெல்** [Hempel] — கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாவது காங்கிரசில், இடதுசாரிச் சந்தர்ப்பவாத ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியின் ஒரு பிரதிநிதியாயிருந்தவர்.—*258*.

**ஹொர்னர், கார்ல்.—பேனகாக், ஆன்டன்** என்ற குறிப்பில் பார்க்கவும்.

**ஹோல்ட்ஸ், மாக்ஸ்** [Hölz, Max] *(1889—1933)*—ஜெர்மன் இடதுசாரிக் கம்யூனிஸ்ட்.—*252*.

**டித்ஸ்கேன், யோஸிப்** [Dietzgen, Josef] *(1828—1888)*—ஜெர்மன் தோல்பதனிடும் தொழிலாளி, சோஷல்-டெமாக்ராட்டு, தத்துவஞானி, சுயேச்சையாக இயக்க இயல் பொருள் முதல் வாதத்துக்கு வந்து சேர்ந்தவர்.—*76*.

**டுராட்டி, பிலிப்போ** ]Turati, Filippo] *(1857—1932)*—இத்தாலியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சி ஸ்தாபகர்களில் ஒருவர், அதன் சீர்திருத்தவாத வலது சாரிப் பகுதியின் தலைவர்.—*20, 21*.

**டெய்லர், பிரெடெரிக் வின்ஸ்லோ** [Taylor, Frederick Winslow] *(1856—1915)*—அமெரிக்க எஞ்சினீயர், *1905-06ல்* அமெரிக்க எஞ்சினீயர்கள் யூனியனின் தலைவர்; வேலை நாளை அதிகபட்ச உற்பத்திச் செறிவுள்ளது ஆக்கவும், உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புக் கருவிகளையும் அறிவார்ந்த வகையில் பயன்படுத்தவும் ஏற்ற உழைப்பு முறைக்கு அடிகோலியவர். முதலாளித்துவத்தின் கீழ் இந்த முறை தொழிலாளர்களைச் சுரண்டுவதைத் தீவிரப் படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.—*193, 194*.

**டெராச்சினி, உம்பேர்டோ** [Terracini, Umberto] *(பிறப்பு 1895)*—இத்தாலியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமானவர், இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். இடதுசாரி செக்டேரியன் தவறுகள் செய்தார், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாவது

காங்கிரஸில் லெனின் அவற்றைக் கண்டித்தார். விமர்சனத்தின் பாதிப்பால் இந்தத் தவறுகளை வெற்றிகொண்டார்.—*256, 259, 260, 261, 263, 264, 269, 270, 273, 281, 282.*

டோமா, அல்பேர் [Thomas, Albert] *(1878—1932)*—பிரெஞ்சு அரசியல்வாதி, வலதுசாரி சோஷலிஸ்ட். முதல் உலக யுத்தத்தின் போது சோஷல்-இனவெறியராக இருந்தார். 1919ல் பெர்ன் இன்டர்நேஷனலை அமைத்தவர்களில் ஒருவர்.—*235.*

தெனிக்கின், அ. இ. [Denikin, A. I.] *(1872—1947)*—ஜார் ராணுவத்தின் தளபதி; ருஷ்யாவில் அன்னிய ராணுவத் தலையீடும் உள்நாட்டு யுத்தமும் நடந்த காலத்தில் (1918-20) பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பாவையாக இருந்தவர்; ருஷ்யாவின் தெற்கில் புரட்சி எதிர்ப்பு இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்தார். இந்த ராணுவச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டபின் நாடு கடந்து வாழ்ந்தார். —*35.*

த்ஸெரெத்தேலி, இ. கி. [Tsereteli, I. G.] *(1882—1959)*—ஒரு மென்ஷெவிக் தலைவர். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பின் நாடுகடந்து சென்றார்.—*116, 193, 194.*

நத்தன்ஸோன், மா. அ. [Natanson, M.A.] *(1850—1919)*—ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட பிரமுகர்; சோஷலிஸ்ட்-புரட்சிவாதக் கட்சியினது மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்.—*45.*

நெப்போலியன், முதலாவது (போனபார்த்) [Napoleon I (Bonaparte)] *(1769—1821)*—*1804-14*லும், *1815*லும் பிரான்சின் சக்ரவர்த்தி.—*156, 157, 158, 159, 178, 306.*

நோஸ்கே, குஸ்தாவ் [Noske, Gustav] *(1868—1946)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் ஒரு சந்தர்ப்பவாதத் தலைவர்; பெர்லின் தொழிலாளர்கள் மீது பழிவாங்கும் எதிர் நடவடிக்கைகளை உருவாக்கியவர், கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்ஸம்பர்க் படுகொலையை உருவாக்கியவர்.—*21, 235, 300.*

பத்ரேஸாவ், அ. நி. [Potresov, A. N.] *(1869—1934)*—ருஷ்ய சோஷல்-டெமாக்ராட். ரு. சோ. டெ. தொ. கட்சியின்

இரண்டாவது காங்கிரஸிற்குப் *(1903)* பிறகு ஒரு மென்ஷெவிக் தலைவர் ஆனார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு நாடுகடந்து சென்றார்.—*44, 308.*

**பால்மாஷோவ், ஸ்தே. வ.** [Balmashev, S. V.] *(1882—1902)*—ருஷ்யாவில் புரட்சிகரமான மாணவர் இயக்கத்தில் பங்கு கொண்டார். *1902*ல் ஏப்ரிலில், ஜாராட்சியின் அடக்கு முறைகளைக் கண்டிக்கும் முறையில் உள்நாட்டு மந்திரி ஸிப்யாகின் என்பவரைக் கொலை செய்தார். ஜார் நீதி மன்றத் தீர்ப்பின்படி மரண தண்டனை விதிக்கப்பட்டார்.—*55, 58, 65.*

**பியாத்தக்கோவ், யூ.** — **கியெவ்ஸ்கிய், பி.** என்கிற குறிப்பில் பார்க்கவும்.

**பிளெகானவ், கி.வ.** [Plekhanov, G.V.] *(1856—1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தலைசிறந்த பிரமுகர். அவருடைய தத்துவார்த்த நூல்களையும், ருஷ்யாவில் மார்க்ஸீயத்தைப் பரப்புவதில் அவருடைய பாத்திரத்தையும் லெனின் உயர்வாக மதிப்பிட்டார்; அதே காலத்தில் மார்க்ஸீயத்திலிருந்து அவர் விலகிக் கொண்டதற்காகவும் அரசியல் நடவடிக்கைகளில் மோசமான தவறுகளுக்காகவும் லெனின் அவரைக் கூர்மையாக விமர்சித்தார்.—*25, 26, 44, 308.*

**பிளேவே, வி. கோ.** [Plehve, V.K.] *(1846—1904)*—ஜார் ருஷ்யாவின் பிற்போக்கான அரசுக்கலைஞர். அவருடைய கொடிய அடக்குமுறைக் கொள்கை ருஷ்ய சமுதாயத்தின் விரிந்த ஜனப்பகுதிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொடுத்தது. ஸஸோனேவ் என்கிற சோஷலிஸ்ட்-புரட்சிவாதியால் கொலை செய்யப்பட்டார்.—*67.*

**பிட்டர், முதலாவது மகா** [Peter the Great] *(1672—1725)*—*1682* முதல் *1725* வரை ருஷ்ய ஜார், ருஷ்யாவின் முதல் சக்கரவர்த்தி.—*183.*

**புகாரின், நி.இ.** [Bukharin, N.I.] *(1888—1938)*—*1906*ல் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்தார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்; கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் நிர்வாகக் குழு உறுப்பினர். கட்சியின் லெனினீயக் கொள்கையைத் திரும்பத்திரும்ப எதிர்த்து வந்தவர். *1918*ல் ‘‘இடதுசாரிக் கம்யூனிஸ்டு

களின்'' குழுவுக்குத் தலைமை வகித்தார். பிற்காலத்தில் கட்சியில் எதிர்த்தரப்பின் ஒரு தலைவரானார்; 1937ல் கட்சி விரோதமான செயல்களுக்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*30, 186, 187, 190, 193, 202, 204, 290, 291.*

**புரியான், எட்முண்ட்** [Burian, Edmund] *(1878—1935)*—செக் நாட்டு சோஷல்-டெமாக்ராட். 1920ல் செகோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்; அதன் நிர்வாகக் குழுவில் உறுப்பினரானார்; 1922ல் அதன் பிரதிநிதியாகக் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலில் இருந்தார். 1929ல் வலதுசாரித் திரிபுக்காகவும் கட்சிக் கலைப்புவாதத்துக்காகவும் செகோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். சோஷல்-டெமாக்ராட்டுகளுடன் மீண்டும் சேர்ந்து கொண்டு தொழிற்சங்கங்களில் பணியாற்றினர்.—*280.*

**புரூஸ், போல்** [Brousse, Paul] *(1844—1912)*—பிரெஞ்சு குட்டிபூர்ஷ்வா சோஷலிஸ்ட், பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கான சாத்தியப்பாடுவாதத்தின் ஒரு தலைவர், கொள்கைவாதி.—*83.*

**பெக்கர், யோஹன் பிலிப்** [Becker, Johann Philipp] *(1809—1886)*—ஜெர்மன் நாட்டு, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு பிரமுகர், கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஷ் எங்கெல்ஸின் நண்பரும், போராட்டத் துணைவருமாவார்.—*76.*

**பெபெல், ஔகுஸ்ட்** [Bebel, August] *(1840—1913)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸி, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு முக்கியமான பிரமுகர்.—*27, 300.*

**பேர்ன்ஷ்டைன், எடுவார்ட்** [Bernstein, Eduard] *(1850—1932)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸி, இரண்டாவது இன்டர்நேஷனலின் கடைக்கோடிச் சந்தர்ப்பவாதப் பகுதியின் தலைவர்; திரிபுவாதத்தினதும் சீர்திருத்தவாதத்தினதும் தத்துவாசிரியர்; அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின் சோவியத் அரசை எதிர்த்தார்.—*26, 83.*

**பேனகாக், ஆன்டன் (ஹோர்னர், கார்ல்)** [Pannekoek, Anton (Horner, Karl)] *(1873—1960)*—டச்சு சோஷல்-டெமாக்ராட்; 1918-21ல் நெதர்லாந்து கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராயிருந்தார்; கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் வேலை

யில் பங்கு கொண்டார். அதீத இடதுசாரி, செக்டேரியன் நிலையை மேற்கொண்டார். *1924*ல் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினார், பிறகு சீக்கிரத்திலேயே தீவிர அரசியலிலிருந்து விலகிவிட்டார்.—*48, 92, 95, 98.*

பொகயேவ்ஸ்கிய், மி. பெ. [Bogayevsky, M. P.] *(1881—1918)*—ருஷ்யாவில் புரட்சி எதிர்ப்புக் கஸாக்குகளின் ஒரு தலைவர்; தீவிரப் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகச் சிறைபிடிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார். —*192.*

பொக்ரோவ்ஸ்கிய், மி. நி. [Pokrovsky, M. N.] *(1868—1932)*—*1905*ல் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்தார். ஒரு முக்கியமான சோவியத் அரசுக்கலைஞர், வரலாற்றாசிரியர். *1918*ல் கொஞ்சகாலம் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டாக'' இருந்தவர். பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை எதிர்த்தார்.—*193.*

பொம்யாலோவ்ஸ்கிய், நி. கெ. [Pomyalovsky, N. G.] *(1835—1863)*—பெயர்பெற்ற ருஷ்ய எழுத்தாளர், ஜனநாயகவாதி. —*203.*

பௌவர், ஆட்டோ [Bauer, Otto] *(1882—1938)*—ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ரஸியினதும் இரண்டாவது இன்டர்நேஷனலினதும் ஒரு தலைவர். ''ஆஸ்திரோ-மார்க்ஸீயத்தின்'' கொள்கைவாதி. *1919, 1927, 1934* ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான செய்கைகளை நசுக்குவதில் செயலூக்கங்காட்டியவர்.—*8, 21, 31, 42, 52, 241.*

ப்ருக்கேர், லுயி டெ [Brouckère, Louis de] *(பிறப்பு 1870)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் ஒரு தலைவர், தத்துவாசிரியர்; முதலாவது உலக யுத்தத்துக்கு முன் அதன் இடதுசாரிப் பகுதிக்குத் தலைமை வகித்தார்.—*83.*

மாக்மஹோன், பாட்ரீஸ் [MacMahon, Patrice] *(1808—1893)*—பிரெஞ்சு அரசுக்கலைஞர், ராணுவத் தலைவர், முடியரசுவாதி. *1871* மே மாதத்தில் பாரிஸ் கம்யூனை நசுக்குவதில் பங்குகொண்டார். *1873*லிருந்து *1879* வரை பிரான்சின் ஜனாதிபதியாக இருந்தார்.—*126.*

மாரிங், ஹைன்ரிஹ் [Maring, Heinrich] *(1883—1942)*—டச்சு சோஷல்-டெமாக்ராட்; *1913-19*ல் ஜாவாவில் வசித்

தார், அங்கே இடதுசாரி சோஷல்-டெமாக்ராட்டுகளோடு சேர்ந்தார், பிறகு ஜாவா, டச்சு கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர் ஆனார். கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது காங்கிரஸில் ஒரு பிரதிநிதியாக இருந்தார். *1927*ல் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி, த்ரோத்ஸ்கியவாதக் கருத்துக்களை ஆதரிக்கத் தொடங்கினார்.—*228.*

மார்க்ஸ், கார்ல் [Marx, Karl] *(1818—1883)*—விஞ்ஞானக் கம்யூனிஸத்திற்கு அடிகோலியவர், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் தலைவர், ஆசான்.—*28,35,43,44, 82,84,110,228,302,305.*

மார்த்தவ், லெவ் [Martov, L.] *(1873—1923)*—ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ராட். ரு. சோ. டெ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் *(1903)* பின் ருஷ்யாவில் மென்ஷெவிஸத்தின் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியை எதிர்த்தார். *1920*ல் நாடுகடந்து சென்றார்.—*44,45. 46,128,308.*

மில்யூக்கோவ், பா.நி. [Milyukov, P. N.] *(1859—1943)*—ருஷ்ய ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தப் பிரசாரகர், ருஷ்யாவில் காடெட்டுக் கட்சியின் தலைவர். அக்டோபர் புரட்சிக்குப் பின் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக அந்நிய ராணுவத் தலையீட்டை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார். பிறகு நாடு கடந்து சென்றார்.—*307.*

மொஸ்ட், யோஹன் யோஸிப் [Most, Johann Joseph] *(1846—1906)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட், பிறகு ஒரு அராஜகவாதியானவர். லண்டனில் ஒரு அராஜகவாதச் செய்தித்தாளை நடத்தினார்; அதில் தொழிலாளர்களைத் தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபடுமாறு அறைகூவி அழைத்தார். புரட்சிகரமான போராட்டத்துக்கு மிக்க பயனுள்ள சாதனம் அது என்று கருதினார். மார்க்ஸ் மொஸ்டினது புரட்சிகரமான சொல்வீச்சைத் தீவிரமாகக் கண்டித்தார்.—*98.*

ராதேக், கா.பெ. [Radek, K. B.] *(1885—1939)*—இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கலீஷியா, போலந்து. ஜெர்மனியின் சோஷல்-டெமாக்ராட்டிக் இயக்கத்தில் ஈடுபட்டார். *1917*ல் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்தார்.

போல்ஷெவிக் கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார்; *1918*ல் ஒரு ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' ஆனார்; *1923*ல் தீவிரமான த்ரோத்ஸ்கியவாதியானார். *1936*ல், கட்சி விரோதச் செய்கைகளுக்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*30, 261, 262, 263, 268, 290, 291.*

ராய், மானவேந்திரநாத் *(1892—1948)*—இந்திய அரசியல்வாதி; கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது, மூன்ருவது, நான்காவது, ஐந்தாவது காங்கிரஸ்களில் பிரதிநிதி; பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகினர்.—*228, 229, 234.*

ரெனெடேல், பியேர் [Renaudel, Pierre] *(1871—1935)*—பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியின் ஒரு சீர்திருத்தவாதத் தலைவர். *1924*ல் சோஷலிஸ்ட் கட்சித் தலைமையிலிருந்து விலகினர், *1933*ல் அந்தக் கட்சியிலிருந்து வெளியே தள்ளப்பட்டார்.—*31, 299.*

ரென்னர், கார்ல் [Renner, Karl] *(1870—1950)*—ஆஸ்திரிய அரசியல்வாதி, ஆஸ்திரிய வலதுசாரி சோஷல்-டெமாக்ராட்டுகளின் தலைவர், தத்துவாசிரியர். *1919-20*ல் ஆஸ்திரியாவின் சான்ஸலர்; *1945-50*ல் ஆஸ்திரியாவின் ஜனதிபதி.—*20, 31, 238, 240, 241.*

ரொமானவ், நிக்கொலாய் [Romanov, Nickolas]*(1868—1918)*—ருஷ்யாவின் கடைசிச் சக்கரவர்த்தி; *1894*லிருந்து *1917* வரை ஆண்டார்.—*111.*

ரோலண்ட்-ஹோல்ஸ்ட், ஹென்ரியேட்டா [Roland-Holst, Henriette] *(1869—1952)*—டச்சு சோஷலிஸ்ட் மாது, நூலாசிரியர். *1918-27*ல் டச்சு கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் வேலையில் பங்குகொண்டார். *1927*ல் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினர். பிற்காலத்தில் கிறிஸ்துவ சோஷலிஸத்தை ஆதரித்துப் பரப்பினர்.—*104.*

லட்ஸாரி, கோன்ஸ்டான்டீனே [Lazzari, Constantino] *(1857—1927)*—இத்தாலிய சோஷலிஸ்ட் இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில், தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் சோவியத் அரசுக்கு

ஆதரவளிக்க வலியுறுத்தினர். கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இரண்டாவது, மூன்ருவது காங்கிரஸ்களுக்கு வந்திருந்தார்.—*275.*

லப்ரியோலா, அர்டுரோ [Labriola, Arturo] *(1873—1959)*—இத்தாலிய அரசியல்வாதி, இத்தாலியில் சிண்டிகலிஸ்ட் இயக்கத்தின் ஒரு தலைவர்.—*84.*

லாகர்டேல், யூபேர் [Lagardelle, Hubert] *(பிறப்பு 1874)*—பிரெஞ்சுக் குட்டிபூர்ஷ்வா அரசியல்வாதி, அராஜகவாத-சிண்டிகலிஸ்ட். *1942—43*ல் விஷி சர்க்காரில் தொழில் மந்திரியாக இருந்தார்; அந்த சர்க்காரில் பங்கு கொண்டதற்காக *1946*ல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.—*84.*

லான்ஸ்பரி, ஜார்ஜ் [Lansbury, George] *(1859—1940)*—பிரிட்டிஷ் லேபர் கட்சியின் ஒரு தலைவர்.—*31, 37.*

லிந்தே, பி.பி.[Linde,F.F.] *(1881—1917)*—தொழிலாளர்கள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தில் ஒரு உறுப்பினர்; *1917* ஏப்ரில் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டார். பிற்காலத்தில் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தில் ஒரு கமிசாராக இருந்தார்—*31, 202.*

லிவோவ், கி. யெ. [Lvov, G. Y.] *(1861—1925)*—இளவரசர் பெரிய நிலப்பிரபு. ருஷ்யாவில் *1917* பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பின் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தில் மந்திரி சபையின் தலைவராகவும் உள்நாட்டு மந்திரியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு நாடுகடந்து வாழ்ந்தார். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான அன்னிய ராணுவத் தலையீட்டின் அமைப்பாளர்களில் ஒருவர்.—*114.*

லிப்க்னெஹ்ட், கார்ல் [Liebknecht, Karl]*(1871—1919)*—ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தலைசிறந்த பிரமுகர், ஜெர்மன் சோஷல்-டெமாக்ரஸியின் இடதுசாரிப் பகுதியின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபகர்களில் ஒருவர்; *1919* ஜனவரியில் பெர்லின் தொழிலாளர்களின் புரட்சியெழுச்சிக்குத் தலைமை தாங்கினர். புரட்சியெழுச்சி நசுக்கப்பட்டபின், எதிர்ப்புரட்சிக்காரர்களால் கொலை செய்யப்பட்டார்.—*136, 313.*

லீப்க்னெஹ்ட், வில்ஹெல்ம் [Liebknecht, Wilhelm] *(1826—1900)* —ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியத் தலைவர், ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் ஸ்தாபகர்களில், தலைவர்களில் ஒருவர். 1848-49ல் ஜெர்மன் புரட்சியில் தீவிரமாக ஈடுபட்டார். கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஹ் எங்கெல்ஸின் நேரடியான செல்வாக்கின்கீழ்தான் ஒரு சோஷலிஸ்டானவர். முதலாவது இன்டர்நேஷனலின் புரட்சிகரமான கருத்துக்களைப் பிரசாரம் செய்வதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டவர்களில் ஒருவர், அந்த இன்டர்நேஷனலின் ஜெர்மன் பகுதிகளின் அமைப்பாளர். 1875லிருந்து தன் ஆயுட்காலம் முடிய ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராகவும் "*Vorwärts*" என்கிற அதன் மத்தியப் பத்திரிகைக்குத் தலைமையாசிரியராகவும் இருந்தார். புரட்சி வேலைக்காக அடிக்கடி சிறையில் தள்ளப்பட்டார்.—*285, 299.*

லுக்ஸம்பர்க், ரோஸா [Luxemburg, Rosa] *(1871—1919)*—ஜெர்மன், போலந்து தொழிலாளி வர்க்க இயக்கத்தின், இரண்டாவது இன்டர்நேஷனலின் தலைசிறந்த பிரமுகர்; ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபகர்களில் ஒருவர். 1919 ஜனவரியில் கைது செய்யப்பட்டு புரட்சி எதிர்ப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.—*285, 314.*

லெகீன், கார்ல் [Legien, Karl] *(1861—1920)*—ஜெர்மன் வலதுசாரி சோஷல்-டெமாக்ராட், தொழிற்சங்கத் தலைவர், திரிபுவாதி. புரட்சிகரமான தொழிலாளி வர்க்க இயக்கத்தை எதிர்த்தார்.—*26.*

லெடிபூர், கியோர்க் [Ledebour, Georg] *(1850—1947)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட், ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட்டிக் கட்சியின் சார்பாக ஜெர்மன் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்.—*26, 46.*

லெவீ, பாவுல் [Levi, Paul] *(1883—1930)*—ஜெர்மன் சோஷல்-டெமாக்ராட், ஸ்பார்ட்டகஸ் யூனியனைச் சேர்ந்தவர், ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1921ல் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் வலதுசாரி எதிர்த்தரப்புக்குத் தலைமை தாங்கினார், கட்சிக் கட்டுப்பாட்டை முரட்டுத்தனமாக மீறியதற்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*263, 292.*

லொங்கே, மூான் [Longuet, Jean] *(1876—1938)*—பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி, இரண்டாவது இன்டர்நேஷனலின் ஒரு தலைவர்; 1923ல் சோஷலிஸ்ட் தொழிலாளர் இன்டர்நேஷனல் எனப்பட்டதின் தலைவர்களில் ஒருவர் ஆனார். 1930களில் பாஸிஸத்தை எதிர்த்து சோஷலிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே செயல் ஒற்றுமை வேண்டுமென்று வலியுறுத்தினார்.—*20, 32.*

லௌபென்பர்க், ஹென்ரிஹ் [Laufenberg, Heinrich] *(1872—1932)*—ஜெர்மன் இடதுசாரி சோஷல்-டெமாக்ராட், கட்டுரையாளர்; ஜெர்மனியில் 1918 புரட்சிக்குப்பின் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்; அந்தக் கட்சியில் ''இடதுசாரி'' எதிர்த்தரப்புக்குத் தலைமை தாங்கினார், அது அராஜகவாத-சிண்டிகலிஸ்ட் கருத்துக்களையும் ''தேசிய போல்ஷெவிஸம்'' பற்றிய ஒரு குட்டிபூர்ஷ்வா-தேசீயவாதக் கொள்கையையும் ஆதரித்தது. 1919ல் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*49.*

வன்டெர்வேல்டே, எமீல் [Vandervelde, Emile] *(1866—1938)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் ஒரு தலைவர். இரண்டாம் இன்டர்நேஷனலின் சர்வதேச சோஷலிஸ்ட் பியூரோவின் தலைவர், அதீதமான சர்தார்ப்பவாத நிலையை மேற்கொண்டார். ருஷ்யாவின் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பகையாயிருந்தார்; சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்குச் செயலூக்கத்தோடு உதவினார். 1925-27ல் பெல்ஜியத்தின் வெளிநாட்டு மந்திரியாயிருந்தார்.—*83.*

வார்லேன், லூயி எழேன் [Varlin, Louis Eugène] *(1839—1871)*—பிரெஞ்சுப் புரட்சிக்காரர், 1871 பாரிஸ் கம்யூனின் பிரமுகர். 1865ல் முதலாவது இன்டர்நேஷனலில் சேர்ந்தார்; அதன் பாரிஸ் பிரிவின் அமைப்பாளர்களில், தலைவர்களில் ஒருவர். பாரிஸ் கம்யூன் நடந்தபோது அதன் கவுன்சில் (அரசாங்கம்) உறுப்பினராயிருந்தார்; தெரு அடைப்பு அரண்களில் வீரத்துடன் போரிட்டார். சிறை பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, விசாரணையின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.—*299, 300.*

விஷ்னெவேட்ஸ்கா—கெல்லி-விஷ்னெவேட்ஸ்கா என்ற குறிப்பில் பார்க்கவும்.

வில்ஹெல்ம், இரண்டாவது (ஹோஹென்த்ஸோலெர்ன்) [Wilhelm II

(Hohenzollern)] *(1859—1941)* ஜெர்மனியின் சக்ரவர்த்தி, பிரஷ்யாவின் மன்னர் *(1888—1918).—137.*

வேயான், எடுவார்ட் மரி [Vaillant, Edouard Marie] *(1840—1915)*—பிரெஞ்சு சோஷலிஸ்ட், இரண்டாம் இன்டர்நேஷனலின் ஒரு தலைவர்.—*37.*

ஜொரேஸ், மான்-லியோன் [Jaurès, Jean-Lèon] *(1859—1914)*—பிரெஞ்சு, சர்வதேச சோஷலிஸ்ட் இயக்கத்தின் ஒரு முக்கியத் தலைவர், "*L'Humanite*" செய்தித்தாளின் ஸ்தாபகரும் ஆசிரியருமாவார். பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியின் வலதுசாரிச் சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர். இராணுவ வெறியை எதிர்க்கும் போராட்டத்தில் செயலூக்கங்காட்டியவர். இராணுவ வெறியர்கள் கூலிக்கு அமர்த்திய ஒரு கொலைகாரனால் முதல் உலக யுத்தம் வெடிக்கும் தறுவாயில் படுகொலை செய்யப்பட்டார்.—*83.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வர வேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

[illegible]

[illegible] Progress Publishers [illegible] 17, Zubovsky Boulevard, Moscow, USSR [illegible]

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

C 204

பட்டினி
269

ஒரு நாட்டில்
புரட்சி
161

பட்டினி
269

222
தொழிலாளர்

பசுங்காலையில்
62, 58

ஜாதி ஒழிப்புகள்
279, 173

கிராமம்
162

ஜனநாயகம்
109

நாகரீகம்
236 216, 109

புரட்சி
282

தொழிலாளர்
74

113

[illegible]
88

101 267, 72
102, 82, 88

ஜாதி ஒழிப்புகள்
173

பட்டினி
பாதையில் [illegible]

மொழிப்போர்
18-75, 158-159

[illegible]
93

114

116

109 107-108

279